# மூவேந்தர் குல தேவர் சமூக வரலாறு



பாஸ்கர சேதுபதி

# மூவேந்தர் குல தேவர் சமூக வரலாறு

(ஆராய்ச்சி நூல்)


ஆசிரியர்

## பி. முத்துத்தேவர்

ரிட்டையர்டு கோவாபரேடிவ் சீனியர் இன்ஸ்பெக்டர்

கருமாத்தூர் (P.O) மதுரை மாவட்டம்



## காக்கவீரன் வெளியீட்டகம்

ஒத்தக்கடை கருமாத்தூர் உசிலம்பட்டி



RangaRakes tamilnavarasam.com

இந்நூலை இரண்டாவது வெளியீடு செய்யும்படியாக என்னை ஊக்குவித்தும் உதவிகள் செய்தவருமான திரு. பொன். அருணசல நாட்டார் அவர்கள் B.A; தமிழக முக்குலத்தோர் சங்கத்தலைவர் கோயமுத்தூர்:



"ஆங்கிலமும் செந்தமிழின் கலைபலவும் நன்குணர்ந்தோ
னறிவின் மிக்கோன்,
நீங்கலிலா நிறைகுணத்தோ னுபகாரி சைவநலம்
நிலவும் நல்லோன்.
ஓங்கும் அருணசலமென் றியம்பு திருப்
பேர்படைத்த உரவோன்"
எனப் பெரும் புலவராற் பாடப்பட்டவர்.

—பண்டித. அ. கந்தசாமிபிள்ளை, பேரூர்.

# பொருளடக்கம்


| எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மக்களின் மிகப் பழைய காலத்து நிலை | 19 |
| 2. | செந்தமிழ் நாட்டு மும்மண்டலாதிபதிகள் | 24 |
| 3. | மூவேந்தர்கள்: முக்கியசேர அரசர்கள் | 28 |
| 4. | சோழர்கள் | 39 |
| 5. | ஆதித்தொண்டைமான்கள் | 53 |
| 6, | பாண்டியர்கள் | 63 |
| 7. | புதுக்கோட்டை அரசர் | 74 |
| 8. | இராமநாதபுரம் சேதுபதிகள் | 79 |
| 9. | சிவகங்கை ராஜாக்கள் | 86 |
| 10. | கொள்வினை கொடுப்பனை மூவேந்தர்களின் திருமண உறவு | 93 |
| 11. | மூவேந்தர் பட்டங்கள் முக்குலப்பட்டங்கள்: தொடர்பு விளக்கம் | 95 |
| 12. | சாதிகள் தோன்றிய தெப்படி: கள்ளர் மறவர் அகமுடையர் இலக்கியச் சான்றுகள் | 117 |
| 13. | தஞ்சை நாட்டுக் கள்ளர்கள் பாண்டிய நாட்டு மதுரை தேசத்தில் குடியேறியதெப்படி? | 129 |
| 14. | மதுரைக் கள்ளர் நாடுகள் | 140 |
| 15. | மூவேந்தர்களின் கொங்கு மண்டல ஆதிக்கம் | 153 |
| 16. | தமிழ்நாட்டில் பட்டாணியர்கள் கொடுங்கோல் ஆட்சி | 174 |
| 17. | மதுரைக்கு விஜயநகர ராஜப்பிரதிநிதி: தமிழர் ஆட்சி மறைவு | 186 |
| 18. | நாயக்கர் ஆட்சியில் சேதுபதிகள் ஈடுபாடு | 194 |
| 19. | மதுரை நாயக்கருக்காக மன்னன் சேதுபதி வீரப்போர் | 199 |
| 20. | நாயக்கர் மதுரையில் தன்னரசு ஆட்சி முறை: பத்துநாட்டுக்கள்ளர்கள் | 202 |
| 21. | திருமலைநாயக்கர் ஆட்சியில் பிரமலை நாட்டார் சாதிக்கட்டுப்பாடு: சுதந்திர ஆட்சி: கள்ளன் பெரிதா? காப்பாளன் பெரிதா? | 210 |
| 22. | மதுரை நகர் ஆயிரம் வீட்டிடையர்களின் காப்பாளன் திருமலை பின்னத்தேவன் | 215 |


RangaRakes tamilnavarasam.com

23. திருமலைநாயக்கருக்கு திடியன் நாட்டுத் தலைவர் தூங்கதேவரின் படைத்துணை: பாடிக்காப்பான் பட்டம் ஆட்சிமுறை 219
24. வெள்ளையரோடு தன்னரசு நாட்டுக்கள்ளர்கள் 227
25. பிரான்சுக்காரன் கண்ட தன்னரசு நிலை 238
26. பாளையப்பட்டு யுத்தங்கள்: மதுரையில் நாயக்க மன்னர்கள் ஆட்சி மறைவு 243
27. பூலித்தேவர் கோட்டையைப் பிடிக்க மகமது யூசுப்கான் முயற்சி 250
28. பாளையப்பட்டுகள் யுத்தம் இரண்டாம் கட்டம் 256
29. வெள்ளையத்தேவனின் வீரப்போர் 267
30. மாவீரன் மருது பாண்டியன் 271
31. ஆயுதப்பரிகரண 21—10—1799 சட்டம் அமுல் 275
32. திருநெல்வேலியில் பாளையப்பட்டு யுத்தம் நடந்தபோது தஞ்சை நாட்டின் நிலை 276
33. இந்திய தேசிய இயக்கம் 284
34. தமிழகக் காவல் முறை 285
35. பண்டுக் கலகம் 290
36. பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்கத்தில் தேவமார் சமூக நிலை 302
37. ந.மு. வேங்கடசாமி நாட்டார் பற்றி பி.பொன் அருணசலம் நாட்டார் அவர்கள் எழுதிய கட்டுரை 304
38. பாப்பாநாடு ஜமீன்தார் திரு. ராஜப்பா அவர்கள் செய்தித்தாள்களில் செய்துள்ள சமூக வரலாற்றின்பிரசித்தம் 311
39. சாதிப் பெயர் மாற்றம் 313
40. ஜனத்தொகை நிலை 316
41. குறுநில மன்னர்களுக்கு ஒப்பான வள்ளல்கள்: உக்கடைப் பண்ணை 321
42. பூண்டி வாண்டையார்கள் 322
43. முக்குல சமூக சங்கங்கள் 324
44. இராஜபாளையம் மறவர் சங்கம் 325
45. கோவை மாவட்ட முக்குலத்தோர் சங்கம் 329
46. செவ்வாப்பேட்டை சேலம் மறவர் மகாசபை 330
47. அகமுடையார் கல்வி வளர்ச்சி சங்கம், சென்னை 331
48. மக்கள் தொண்டர் மாணிக்கம் 332
49. சமுதாய விடிவெள்ளி ஆண்டியப்பத்தேவர் 334
50. சிந்தனைச் செல்வன் செல்வநாயகம் 335
51. கலை உலகில் தேவமார் சமூக அறிஞர்கள் 337





52. பிரசித்தமான கலைஞர்கள் 337
53. தமிழ்நாடு அரசியலில் முக்கிய தேவர் சமூகத்தினர்கள்: திரு, முத்துராமலிங்கத்தேவர் வரலாறு 345
54 திரு மூக்கையாத்தேவர் திரு முத்துராமலிங்கத் தேவரின் வாரிசானர் 351
55 திரு செல்லப்பாண்டியன் முன்னள் சபாநாயகர் 362
56. திரு முத்துசாமி வல்லத்தரசு 364
57. திரு R V சுவாமிநாதன் 366
58, பாராளுமன்ற அங்கத்தினர்கள் 368
59. மந்திரிசபையில் பதவி வகித்தவர்களும் பதவி வகித்து வருபவர்களும் 369
60. 1980ல் தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் 369
61. 1911ம் ஆண்டு குற்றபரம்பரைச் சட்டம் மாகாணங்களுக்குப் பிரயோகித்தல் 371
62. குற்றபரம்பரைச் சட்டம் அமுல்முறை 378
63. குற்றபரம்பரைச் சட்டம் பிரமலை நாட்டில் 392
64. கள்ளர் சமூக சீர்த்திருத்தத் திட்டம் 413
65. குற்றபரம்பரைச்சட்டம் ரத்தானது 440
66. கள்ளர் காமன் பண்டு 446
67. பிரமலை நாட்டில் ரேகைச் சட்ட அமுல் காலத்து காங்கிரஸ் இயக்கம் 455
68. பட்டங்கள் பதவிகள் பெற்ற முக்கிய சமூகப் பெருமக்கள் 459
69. மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் உதயம் 467
70. அரசியல் வாழ்வில் பிரமலை நாட்டவர்கள் 469
71. பசும்பொன் பைன் ஆர்ட்ஸ் 473
72. தேவர்குல மக்கள் சிந்தனைக்கும் செயலுக்கும் 474
73. துணைகொண்ட நூல்கள் 479


RangaRakes tamilnavarasam.com

தாயின் பிள்ளைகளாய் நாட்டின் நலன் காக்க, மக்கள் சமுதாயம் முன்னேற்றப் பாடுபட வேண்டும் என்ற உன்னதக் கருத்தின் திருக்கோயிலாக விளங்கப்போவதுதான் நம் குலம்.

வீரத்தின் எடுத்துக்காட்டாய், விவேகத்தின் பிறப்பிடமாய்த்திகழ்ந்து வகையாய் வாழ்ந்து காட்டிய நம் முன்னோர்களுக்கு இன்று வரலாறு படைக்கின்றோம். இது போல் நமக்கு வரலாறு படைத்திட வருகின்ற தலைமுறையினருக்கு நாம் செய்யப்போவதுதான் என்ன?

(ஒப்பம்) பரம. முருகேசன்.

# தமிழ் மக்களின் மிகப் பழைய காலத்து நிலை

இப்பொழுது இந்தியாவிற்குத் தெற்கிலுள்ள இந்து மகாசமுத்திரமானது ஒரு காலத்தில் பெரிய நிலப் பரப்பாகவிருந்தது. பின் அது சமுத்திரத்தில், மூழ்கி விட்டது. இப்படியிருந்து அழிவுற்ற நாடு குமரிக்கண்டம் என்றும் இலமூரியா என்றும் இக்காலத்தில் சொல்லப்படுகிறது.

''பஃறுளி யாற்றுடன் பன் மலை யடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'' (சிலப்பதிகாரம், xi. ic-- 19 & 20) இதன் வடக்கில் விந்தியமும், தெற்கில் தென் கடலும், கிழக்கில் சாவகத்தீவும், மேற்கில் மடகாசிகர்த் தீவும் எல்லையாக அமைந்திருந்தன. இங்குதான் முதன் முதலில் மனிதர் உற்பத்தியாயினர் என்றும் அதன்பின் உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர் என்றும் ஜெர்மானிய தேசத்து ஆசிரியராகிய 'எக்கல், HEGEL என்பவர் தமது ஆராய்ச்சியில் கண்டு கூறுகிறார். இதை அறிஞர்கள் பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். இலமூரியாவின் ஒருபாகமாக அமைந்தது இந்தியா. மிகப் பழைய நாளில் இங்கு வசித்து வந்தவர்கள் நாகர் எனப்படுவர். நாளடைவில் இங்கிருந்து வெளிப் போந்த மக்கள் பல்வேறு தேசங்களிலும் குடியேறி வாழ்ந்தார்கள். கால வேறுபாட்டிற்கிணங்க இவர்களுடைய மொழி, நாகரிகம் முதலியவைகள் பல மாறுபாட்டிற்கிணங்கலாயிற்று. இவ்வுண்மைகள் அறிஞர் பா. வே.

RangaRakes tamilnavarasam.com

மாணிக்க நாயகர் அவர்களின் சீரிய ஆராய்ச்சியின் முடிவிலிருந்தும் தெரிய வருகின்றது.

'ஆயிரத் தொள்ளாறு ஆண்டுகளின் முந்திய தமிழர் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய அறிஞர் வி. கனகசபைப்பிள்ளையவர்கள் ''மிகப் பழைய நாளிலே நாகர் என்ற வகுப்பினர் இந்திய நாடு முழுவதும் பரவினர் என்றும், பின்பு இந்தியாவிற்குப் புறம்பே வடக்கிலுள்ள தேயங்களிலிருந்து திராவிடர் என்பார் இந்தியாவினுள் புகுந்து சிறிது சிறிதாக இந்நாடு முழுவதும் பரவினர் என்றும், அதன் பின்னர் தான் ஆரியர் என்ற கூட்டத்தார் அங்ஙனமே இந்நாட்டிற் புகுந்து பரவினர் என்றும் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் நாகர், திராவிடர், ஆரியர் ஆகிய முத்திறத்தாருக்கும் ஊடே தமிழர் என்ற வகுப்பினரைப் புகுத்துரைக்கிறார்கள். ஆகவே அவர்கள் கொள்கைப்படி, நாகர் திராவிடர், ஆரியர், தமிழர் என்ற நான்கு மக்கட் பிரிவுகள் ஏற்படுகின்றன.

இந்நான்கு திறப்பட்டார்களும் எடுத்துக் காட்டப்பட்டாலும்கூட நாகர், திராவிடர், தமிழர் ஆகிய முத்திறத்தார் பாலும் அதிகவேற்றுமை இருந்ததாகப்புலப்படவில்லை. மிகவும் அகன்ற இலமூரியா கண்டம் அழிந்து போனபிறகு தென்னிந்தியாவின் தென் கோடியிலும் கிழக்குக் கரையிலும் நாகர் வாழ்ந்தனர். கங்கைக் கரையிலுள்ள 'திமிலித்தி' என்னும் இடத்திலிருந்து தெற்கு நோக்கி வந்து வேங்கடத்தின் தென்பாகத்தில் வசித்தவர்கள் தமிழர். திருநாட்டிற்கும் மத்தியில் தேங்கியவர்கள் திராவிடர்கள்.

'திராவிடம் என்ற சொல்லானது தமிழ் எனத் திரிந்தது என்று ஒரு சாராரும், தமிழ் எனும் சொல்லே திராவிடம் ஆயிற்று என்று மற்றொரு சாராரும், திராவிடம் என்பது நாட்டின் பெயர் தமிழ் என்பது மொழியின் பெயர் எனப் பிறிதொரு சாராரும் இங்ஙனம் பலபடக் கூறுவர். தமிழ் என்னும் சொல் தொன்று தொட்டு மொழியின்



பெயராகவும், நாட்டின் பெயராகவும் வழங்கி வருகின்றது. திராவிடம் என்னும் சொல் பழைய தமிழ் வழக்கில் காணப்படுவதன்று. தமிழர் வடக்கிலிருந்து வந்தவர் என்று கூறப்படுவதும் உண்மையாகலாம். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் உறைவிடம் தமிழகமாகிய தென்னாடே என்பதும் அவர்கள் ஒரோருக்கால் வடக்கிலும் சென்று ஆண்மை காட்டியிருக்கின்றனர் என்பதுமே நாம் காணக் கூடிய உண்மைகள். தமிழகத்தைச் சூழவிருந்த பல திறத்தாரும் நாகர் என வழங்கப்படுவாராயினர். தமிழரும், நாகரும் இடத்தால் வேறுபட்டவரேயன்றி மற்றபடி எல்லா வகையிலும் ஒன்று பட்டவரேயாவர். தமிழரது மொழியும் நாகரது மொழியும் இடம் பற்றிச் சிறிது வேற்றுமையடைந்திருந்த தமிழேயன்றிப் பிறிதன்று, காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நாகர் மலையை அடைந்த 'சாதுவான்' வணிகன் அங்கிருந்த நாகர்களோடு அவர்கள் மொழியில் பேசினான் என்று மணிமேகலை கூறுவதும் இக்கருத்திற்குச் சான்றாதல் காண்க. தெலுங்கு, கன்னடம் என்னும் மொழிகள் தமிழினின்று உண்டானவை என்னும் கொள்கை அங்கெல்லாம் முதலில் வழங்கிய மொழி தமிழ் என்பதனைப் புலப்படுத்தா நிற்கும்.

''கன்னடமும் களி தெலுங்கும் கவின்மலை யாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித் தெழுந்தே யொன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக் கழிந்(து) ஒழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே''

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

தம் மனோன்மணிய நூலில் பாடிப் போந்தார்.

தமிழானது இங்ஙனம் வெவ்வேறு மொழியைப் பிறப்பித்து விட்டுத் தான் ஓர் எல்லையுட் பொதிந்து நிற்க, பின்பு அதன் கண்ணும், வேற்றுமையுண்டாகிச் செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் பாகுபாடுகள் உண்டாயின. நெடுங்

RangaRakes
tamilnavarasam.com

காலஞ் சென்ற பிறகு, ஒரு புறத்திருந்த கொடுந்தமிழ் வேறு மொழியாக மாறி மலையாளம் எனப்பெயர் பெற்றது.

ஆகவே இந்நிலையில் காணப்படும் மக்களில் இன்னவரே நாகர், இன்னவரே திராவிடர் என்று வகுத்துரைத்தல் கூடாததாயிருக்கிறது. பழைய தமிழ் இலக்கண இலக்கியங்களையும், புராண இதிகாசங்களையும் பற்றுகக் கொண்டு இக்காலத்து மக்களியல் புகளிற் பொருந்துவனவற்றை அவற்றுடன், ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை நோக்கினால் நாகர் திராவிடர் என்னும் பிரிவினர் தனித்தமிழ்க் குழுவில் ஐக்கியப்பட்டு வாழ்ந்தனர் என்றும் இவர்கள் தம் உறைவிட வேற்றுமையில் ஐந்திணை மக்களாகப் பிரிந்தனர் என்றும் தெரிய வருகின்றது.

புவியானது மலையும், காடும், பள்ளத்தாக்கும் கடற்கரையும் ஆக பகுக்கப் படுதலின், நானிலம் என்று வழங்கப்படுவதாயிற்று. மலையும் காடும் சார்ந்தவிடம் கால வேற்றுமையால் திரிந்து சுரமாதலுண்டு. அதுவே பாலையாயிற்று. ஆகையால் நிலம் ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

குறிஞ்சி நில மக்கள் குன்றவர், வேட்டுவர் முதலிய பெயர்கள் பெறுவர். முல்லை நில மக்கள் ஆயர், இடையர் முதலிய பெயர்கள் பெறுவர். பாலை நிலத்தார் எயினர், மறவர் முதலிய பெயர்களால் வழங்கப்படுவர். மருதநிலத்தினர்க்குக் களமர் உழவர் முதலிய பெயர்களாம். நெய்தல் நிலமக்கட்குத் துணையர் பரதவர் முதலிய பெயர்கள் உள்ளன. மிகப் பழைய நாளில் தமிழகத்தில் இருந்த மக்கள் இவர்களே. இவர்களில் குறிஞ்சி நில மக்கள் வலியும், வீரமும் இயல்பிலேயே மிக்குடையவராதலின் ஏனையரை அடக்கி ஆளும் பெற்றியும் உடையராயினர். இன்னவரே ''கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளொடு-முற்றோன்றி மூத்தகுடி'' என்று கூறப்படுதலும் காண்க. எனினும் நாகரிகமான மருத



நிலத்தே தான்முற்பட வளர்ச்சியடைந்திருத்தல் வேண்டும் ஐந்திணை மக்கள்; அறிவும், நாகரிகமும் உடையரான காலத்தே; அறிஞரும், அரசரும், வணிகரும், பாணர் துடியர் முதலிய ஏனையக்குடி மக்களும் அவர்களுள்ளே தோன்றுவராயினர்.

இவ்வாறுகப் பழங்குடி மக்கள் தமிழகத்தில் நாகர், திராவிடர் என்ற பிரிவு நீங்கித் தமிழர் என ஒன்றுபட்டு விளங்கித் தனித்தமிழ் பேசி சீர்பெற விளங்கினர். தமிழகம் என்பது எது? எங்கிருக்கிறது? சிறப்புற்ற மன்னவர்கள் யார்? எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்கள் எவ்வளவு காலம் ஆண்டார்கள்? இவர்கள் ஆட்சியின் பெருமை என்ன? இவர்களின் வழிவந்தவர்கள் இப்போது எந்நிலையில் இருக்கிறார்கள்? எப்படி அழைக்கப்படுகிறார்கள் என்பன போன்ற வரலாறுகளை அடுத்தபடியாகக் கவனிப்போம்.

RangaRakes tamilnavarasam.com

# செந்தமிழ் நாட்டு மும்மண்டலாதிபதிகள்

வடக்கில் இமயம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலுள்ள அகன்ற நிலப்பரப்பு பாரத கண்டம் எனப்படும். மிகப்பழைய காலத்தில் மனு குல மன்னனாகிய ரிஷபதேவன் மகன் பரதனால் இத்தேசம் ஆளப்பட்டதால் இதற்குப் பரத கண்டம் எனப் பெயர் வந்தது. இதன் மத்தியில் கிடக்கும் விந்தியத் தொடரால் இக்கண்டம் இரு பாகமாகப் பிரிக்கப்பட்டு அத்தொடரில் வடபாலுள்ளது; ஆரிய வர்த்தம் என்ற பெயரையும் தென் பாலுள்ளது திராவிட தேசம் என்ற பெயரையும் பெற்றன. இத்தென்னாட்டில் வடவேங்கடம் முதல் தென் குமரி வரைக்கும் பரவிய நாட்டைத் ''தமிழகம்'' என்று தொல்காப்பியம்.

''வடவேங்கடம் தென்குமரி

ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம் என விளக்கிக் காட்டுகிறது.

வடக்கில் வேங்கடமலையையும் தெற்கில் குமரியாற்றையும் எல்லையாகக் கொண்ட தமிழகம் இதன் மேற்கிலுள்ள மலைத்தொடர்களில் உற்பத்தியாகி கிழக்குத் திசை நோக்கியோடி வரும் வடபெண்ணை முதல் தெற்கில் செம்பில் வரைக்கும் உள்ள பல நதிகளால் செழிப்பாகி வந்தது.



''காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி — என
மேவிய யாறு பல வோட — திரு
மேனி செழித்த தமிழ்நாடு

— கவி. சுப்பிரமணிய பாரதியார்

நீர் வளத்தாலும் நில வளத்தாலும் நிகரற்ற நிலையை உடைய இவ்வள நாடு சற்றேறக்குறைய 2 ஆயிரம் ஆண்டுகளாகச் சிறப்புற்று நாகரிகம் பெற்று மதி மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததாகத் தமிழ்ச் சங்க நூல்கள் விளக்குகின்றன. உலக நாகரிகத்திற்கே வழிகாட்டியாக விளங்கிய வரலாற்றுக் காலத்துத் தமிழரசர்களின் கீர்த்தியும் ஆண்மையும் அரசியல் உண்மையும் போரின் திண்மையும், நட்பின் உண்மையும், கல்வித் திறனும், கற்பின் உரனும், ஆன்ம உணர்ச்சியாகிய பலவும், மேல்நாட்டு அறிஞர்களாலும் ஆசிரியர்களாலும் போற்றப்பட்டும், புகழப்பட்டும் வந்திருக்கின்றன. இவ்வுண்மை கி. மு. 30,000 ஆவது ஆண்டு முதல் கி.பி. 14 ஆவது நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தில் அரசாண்ட தமிழ் மன்னர்களின் வரலாறுகளில் காணக் கிடக்கின்றது. வெகு சுருக்கமாக இவ்வுண்மைகளைக் கவனிப்போம்.

தொன்று தொட்டுத் தமிழ்நாடு மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுத் தமிழ் வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களால் ஆட்சி புரியப்பட்டது. பனம்பூ மாலை அணிந்து விற்கொடி தூக்கி வாளுங்கையுமாய் சமரிற் செல்லும் மலைநாட்டரசன் சேரன் எனப்படுவான். இவனது ஆட்சிக்கு உட்பட்ட சேர மண்டலமானது வடக்கில் பழனிமலை, கிழக்கில் தென்காசி, மேற்கில் கோழிக்கோடு, தெற்கில் கடற்கரை இந்த எல்லைக் கிடையில் பதின்காதவழி கண்ட பகுதியாகும். ஆர்த்தி மாலை சூடி, புலிக்கொடியேந்திப் புகழ் பெற்ற போரிற் பொரும் வேந்தன் சோழன் புனனாடு அனைத்தையும், தன் தனிக் குடைக்கீழ் ஆக்கி ஆற்றலோடு அரசு

RangaRakes
tamilnavarasam.com

செலுத்தும் கோமகன் ஆனான். இவனுடைய மண்டலம் கிழக்கில் கடலும் தெற்கில் வெள்ளாறும், மேற்கில் கோட்டைக் கரையும், வடக்கில் ஏணாட்டுப் பண்ணையும் ஆக இதற்குள் குறிப்பிட்ட இருபத்து நான்கு காதம் உள்ள பகுதியாகும். வேம்பின் மாலை மார்பிற்புரழ வீரகண்டாமணி அணிந்து பகைவரை வெல்லும் பார்த்திபன் மீனக் கொடியோனாகிய பாண்டியன், இவன் வடக்கில் வெள்ளாறு மேற்கில் திருவாங்கூர், தெற்கில் கன்னியாகுமரி கிழக்கில் இந்து மகாசமுத்திரமும் ஆக இருந்தது. இதற்குள்ளீட்ட ஐம்பத்தாறுகாதம்பரப்புள்ள பாண்டியமண்டலத்தை ஆண்டான்.

சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் என மூன்று பிரிவுகளாக ஆட்சி புரிவதற்கான வசதி பற்றி நிலத்தின் இயற்கைக்கு ஏற்றவாறு வகுத்துச் சேர, சோழ, பாண்டியர் என்னும் பட்டங்களுடன் தமிழ் மன்னர்கள் விளங்கினார்கள், இவர்கள் பிறவியாலும் கொள்கையாலும் ஒன்றுபட்டு ஒரே குலத்தினராகிய தமிழர். இவர்கள் ஒருவர்க்கொருவர் சம்பந்த உறவால் கொள்வினை, கொடுப்பினைகள் செய்து வந்தார்கள். இம்மூவர்களும், தங்களுக்குப் பொதுவான பட்டம் வைத்திருந்தார்கள். ஒவ்வொரு பிரிவினர்களும் தனியாக ஏற்பட்ட பட்டங்களையும் பெயர்களையும் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்திருக்கிறார்கள். தங்களுக்குள் பகைமை மூண்ட காலத்தில் பெரும் போர் தொடுத்து வெற்றி மேற்கொண்டு சிற்சில சமயங்களில் தமிழ்நாட்டின் ஏக சக்கிராதிபதி என ஒவ்வொரு பிரிவினர்களும் ஒவ்வொரு காலத்தில் விளங்கி இருந்திருக்கின்றனர். அதுவும் தவிர வடக்கிலிருந்து தமிழ் நாட்டில் நாட்டங் காட்டிய பகைவர்களை மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்து தாக்கி, மடக்கி அடித்திருக்கின்றனர். மூவேந்தர்கள் பாரியுடன் போராடி வென்றது குறிப்பிடத்தக்கது சேரன் செங்குட்டுவன் கீர்த்தி இந்தியா பூராவுமாகப் பரவியதைக் கண்டு கொங்குநாட்டு மன்னனுடன் மூவேந்தர்களும் சேர்ந்து பெரும்போர் தொடுத்துத் தோல்வியடைந்தனர்.



இத்தியாதி காரணங்களால் மூவேந்தர்கள் பிறவியில் ஒரே குலம் என்பதும் தெரிய வருகின்றது.

இவர்களுடைய மொழி தெய்வ மொழியாகும். முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழ் மொழியைக் கற்பித்ததாக வரலாறு கூறுகிறது. அவர் மூலம் தமிழ் மக்கள் தெய்வத் தமிழ் மொழியை இலக்கண வளத்தோடு பெற்றனர். அதன்படி தமிழர் வானவர்; தேவர் என்னும் சிறப்புப்பட்டங்களை அடைந்தனர். அதன் காரணமாகவே தமிழ் அரசர்கள் தேவர்குல இந்திரர்களென்று அழைக்கப்பட்டனர். (மூவரசர் குலவிளக்கம் page. 3 இவர்கள் முக்குலத்து அரசர்கள் முறையே சூரிய சந்திர, அக்கினி குலமாகும் சத்திரியர்கள் எனக் கண்டிருக்கிறது )

(ஆதியில் யயாதி புருருவுக்கு முடி சூட்டினான். நகுஷன் புத்திரன், யயாதி சுக்கிரன் புதல்விதெய்வயானை. ருஷ்பர்வதா புதல்வி, சர்மிஸ்டை தெய்வயானை பிள்ளைகள்; யது, துர்வசனன் சர்மிஸ்டை பிள்ளைகள் துருகியன், கனு. காந்தாரவம் ஸம்புரு துருகியனால் சேர, சோழ பாண்டியர், வந்ததாகவும்; அகஸ்தியரோடு வந்து துவாரகாபதி அரசிளங்குமார்கள்; சேர, சோழ, பாண்டியரெனவும்; காவேரிப்புனல் கொண்டு வந்தவரெனவும் கலிங்கத்துப் பரணி கூறுகிறது.)

தெய்வத்தமிழ் நாட்டில் தேவர் வழிவந்த தெய்வத் தமிழ் மொழியின் பாதுகாவலர்களாக தேவரரசர்களாகிய சேரசோழ பாண்டியர்கள் ஆட்சிக் காலங்களில் அப்பர், சுந்தர், மாணிக்கவாசகர் முதலான சமயக்குரவர்களும்; கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, அவ்வை முதலான இருடிகளும் தோன்றினர்.

தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்து, ஐம்பெருங்காப்பியங்களையும் கட்டிக் காத்து நாடெங்கிலும் தேவாலயங்களைக் கட்டித் தெய்வத்தின் பிரதிநிதியாகவிருந்து நாடு காத்து வந்தவர்கள் இவர்களே.

RangaRakes
tamilnavarasam.com

## மூவேந்தர்கள்

# முக்கிய சேரர் அரசர்கள்

சேரர் வரலாறு — திருமந்திரமணி துடிசைகிழார் அ. சிதம்பரனார் நாலில் கண்டவாறு

கி. மு. 30090: இமயவரம்பன் — வானவரம்பன்

கி. மு. 30000 கி. மு. 9000-6000 சேவன் சேரலன்

,, 6040-6000 சேரலன்—வானவன்

,, 3145-3105 பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்ற வானவரம்பன், பாரத காலத்தவன்.

கி. மு. 4-ஆம் நூற்றாண்டு - கி. மு. 3-ஆம் நூற்றாண்டு கோட்டம் பலத்துத்துஞ்சிய சேரமான் மாக்கோதை

கி. மு. 3-ஆம் நூற்றாண்டு பின் பகுதி-பல்லான் குன்றான் குழுமூர் உதியன் கேரள புத்திரன் செல்லூர் ஆதன் எழினி

கி. மு. 2-ஆம் நூற்றாண்டு முடங்கிக்கிடந்த சேரலாதன் சேரமான் பெருஞ்சேரலாதன்

கி. மு. 100-80 சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்

கி. மு. 80-30 சேரமான் இளங்குட்டுவன்

கி. மு. 30 - கி. பி. 12 சேரமான் இளங்குட்டுவன் சேரலாதன்.



சேரர் வரலாறு:— அ. சிதம்பரனார் அவர்கள்; பக்கம் 45 : சரித்திரகாலச் சேரர்களில் முதன் முதலாகத் தென்படலானவன் உதியன் சேரலாதன் : கி. பி. 12-ல் இரண்டாம் வெண்ணிப் போரில் சேரலாதன் என்னும் சேரநாட்டு அரசன்; இரண்டாம் கரிகாலனால் கொல்லப்பட்டவுடனே, உதியன் சேரலாதன் என்பவன், சோழவரசன் இரண்டாம் கரிகாலனோடு சமாதானம் செய்து கொண்டு சேர நாட்டில் வஞ்சியில் முடிசூட்டிக் கொண்டு அரசனானான். இவன் அரசாண்ட காலம் கி. பி. 12 கி. பி. 42 வரை. இவன் கொலை செய்யப்பட்ட சேரலாதன் மகனாவான்: வெளியன் வேண்மான் என்னும் குறுநில மன்னனுடைய மகள் நல்லினியை மணந்து கொண்டான்.

சேர, சோழ பாண்டியர்கள் தங்கள், தங்கள் நாட்டில் உள்ள மகட்கொடைக்குரிய குறுநில மன்னர்களான வேளிர்களிடத்தில் இருந்து பெண் கொள்வது வழக்கம் அல்லது சேர, சோழ, பாண்டியர்களே, தங்களுக்குள் ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்துமிருத்தும் வந்தார்கள் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் நிறையவுள்ளன. எனவே இம்மூன்று குலத்தவரும் படைப்புக் காலத்தொட்டு ஒருங்கிணைந்து வரும் 'தமிழ்'' இனத்தவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.''

உதியன் சேரலாதனுக்கு நல்லினியிடத்தில் பிறந்த ஆண் மக்கள் இரண்டு பேர் :— (1) இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் (2) பல்யானைச் செல் கெழுகுட்டுவன் பதிற்றுப் பத்து 2-ஆம்பத்தி 3-ஆம் பத்தி காண்க :''

இவ்வுதியஞ்சேரல் சோழர்களிடத்தில் நட்புரிமையுடன் பழகி வந்தவனாகையால், தன்னுடைய மூத்த மகன் இமயவரம்பனுக்கு இரண்டாம் கரிகாலனின் பேத்தியும், கரிகாலன் மகன் மனக்கிள்ளியின் மகளும் ஆன நற்சோணையை மணமுடித்து வைத்தான். அதனால் இருகுலத்தாருக்கும்

நட்பு வலிமைப்பட்டு ஒற்றுமையுடன் வாழ வழியேற் பட்டது. கி. பி. 42—கி. பி. 100 உதியன் சொலின் மூத்த மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பட்டம் ஆண் டான்.

வீரத்திலும் தீரத்திலும் சூழ்ச்சியிலும், அரசியல் ஆற்ற லிலும் இரண்டாம் கரிகாற் சோழனை நிகர்த்தவன் இவன் காலத்தில் இவனுடைய ஆட்சியானது வடக்கே இமயமலை யையும் மற்ற மூன்று பக்கங்களிலும் கடல்களையும் எல்லை யாகவுடைய தமிழக முழுவதும் பரவி இருந்தது. தற்போது பாகிஸ்தான் சேர்ந்த இந்தியாவின் பரப்பு எவ்வளவோ அவ்வளவையும் வென்று அரசாண்டான். தமிழ் மொழியே இந்தியா முழுவதும் அப்போது அரசியல் மொழியாக இருந்து வந்தது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றி பதிற்றுப் பத்து 2-ஆம் பத்துப் பதிகத்தில் :-

''மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு,
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்
அமைவரல் அருவிஇமயம் விற்பொறித்து,
இமிழ்கடல் வேலித்தமிழகம் விளங்கத்
தன் கோல் நிறீஇ த்தகை சால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
நெய்தலைப் பெய்து கையிற் கொளீ இ,
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு,
பெருவிறல் மூதூர்த்தந்து, பிறர்க்குதவி,
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமயவ்ரம்பன் நெடுஞ்சேரலாதனைக்
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு''

இமயவரம்பன் என்பவன் உதியஞ்சேரலாதனுக்கும், வேண் மாள் நல்லினிக்கும் பிறந்தவன் என்றும், இமயம் வரை படை எடுத்துச் சென்று ஆரிய அரசர்களையும் ஏனைய அரசர் களையும் வென்று தன்னரசுக்குக் கீழ்க்கொணர்ந்து, கப்பங் கட்டச்செய்து, இமயத்தில் தன்னுடைய விற்கொடியைப் பொறித்து வைத்து, வடக்கே இமயமும் ஏனைய மூன்று திக்குகளில் கடலை வேலியாகவுள்ள தமிழகம் முழுவதையும் ஒரு மொழி (தமிழ் மொழி) வைத்து உலகாண்டு, இமய வரம்பன் என்ற பட்டம் பெற்று; வெல்லப்பட்ட அரசர்கள் கொடுத்த பொருள்கள், அணிகலன்கள், பொற்குவியல்கள், வயிரமொடு ஒன்பது விதமான இரத்தினக் கற்கள் முதலிய திரைப் பொருள்களை எடுத்துக்கொண்டு வஞ்சிமூதூர் வந்து. கூத்தர். பாணர், புலவர் முதலிய எல்லோருக்கும் ஈந்து: பெரும்புகழ் எய்தியவன் என்பது வரலாற்று உண்மை.

இப்பாடலைப்பாடிய புலவர் கண்ணனார். ஓய்மான் நாட் டைச் (திண்டிவனம்) சேர்ந்த குமட்டூர் என்னும் ஊரில் பிறந்தவர். ஒரு பார்ப்பனர். இப்பாடலுக்குப்பரிசாக இமய வரம்பன், கண்ணனார்க்கு: ஆனைமலைத் தொடரில் உள்ள ஐந்நூறு ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் சிறிது பாகமும் கொடுத்தான்.

இமயவரம்பன் தனதுகடல் ஆதிக்க எல்லைக்குள் ஓயாது தொல்லை கொடுத்து வந்த கடற்கொள்ளைக் கூட்டத்தார் களாகிய 'கடம்பர்'களை அடியோடு ஒடுக்கித் தொலைத்தான். ஒரு பெரும் கடற்படையினைத் தனது தலைமையிலேயே நடத்திக்கொண்டுபோய்; கடம்பர்களை நடுக்கடலில் மடக்கி யடித்துப் போர்புரிந்து அவர்களை அடியோடு ஒழித்து விட்டு அவர்கள் தாங்கள் பலராய்க் கூடி நின்று காத்த ''கடம்ப மரத்தினை'' அடியோடு வெட்டி அம்மரத்தின் அடிமரத் தினால் வெற்றி முரசு செய்து உவகை பூண்டான்.

பதிற்றுப்பத்து : 14-ஆம் பாட்டு
''எழுமுடி செழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை

என்று கூறப்பட்டுள்ளது. தமது முன்னோர்களைப் போலவே தானும் பகைவரை வெல்வதில் ஈடுபட்டுத் தன்னை எதிர்த்த

RangaRakes tamilnavarasam.com

ஏழு பகை வேந்தர்களை வென்று அவர்களை அடிபணிய வைத்து அவர்கள் ஏழு பேர்கள் முடிகளில் இருந்த பொன்னுல் செய்த ஆரத்தை மார்பில் அணிந்தவன் என்று கூறுகிறது.

16-ஆம் பாட்டில் இமயவரம்பனுடைய அரசமாதேவி நற்சோணையைக் குறித்து

''ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை,
அமிர்து பொதி துவர்வாய் அமர்ந்த நோக்கிற்
சுடர்நுதல் அசை நடை''

உடையவளாகப் புலவர் கண்ணனுர் வருணித்துள்ளார்

சோணை (River Sone) என்பது வடதேசத்திலுள்ள ஒரு ஆற்றின் பெயர். இரண்டாம் கரிகாலன் அச்சோணையாற்றங்கரையில் படை வீட்டில் இருக்கும்போது, தன் மகன் சோழன் மணக்கிள்ளிக்கு இவள் பிறந்தாள். ஆகலால் வடநாட்டுப் போர் நினைவாக அந்நதியின் பெயரைப் பேத்திக்கு இட்டு மகிழ்ந்தான். தமிழ்நாட்டில் இந்த மாதிரி நதியின் பெயரைக் குழந்தைகளுக்கு இடுவது வழக்கம்.

கி. பி. 10ல் இமயவரம்பனுக்கும் சோழன் இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் யாதுகாரணத்தாலோ போர் ஏற்பட்டு, இருவரும் காயப்பட்டு போர்க்களத்தில் மடித்தார்கள்.

இமயவரம்பன் இறந்துபட்டதும் பட்டத்துக்கு உரியவனுன செங்குட்டுவன் சேரர் பக்கட்டாய முறைப்படி பட்டம் எய்தினுன். எய்தியபின் தன் தாய் நற்சோணையைக் கங்கை நீரில் முழுக் காட்ட வடநாட்டுக்குப் படையோடு சென்று, அங்கே அவனை எதிர்த்த ஆரிய அரசர் நூற்றுவரையும்வென்று அடக்கிக் கப்பங் கட்டச் செய்து, தாயைக் கங்கையில் முழுகச் செய்து காசியில் தந்தைக்குரிய இறுதிக் கடனைச் செய்து விட்டுச் சேரநாடு வந்ததை;



''கங்கைப் பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ்ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண் விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்''

சிலப்: 25—190—4

என்று இளங்கோ பாடியுள்ளார். அவர் எங்கோ மகளை என்றது செங்குட்டுவன்—இளங்கோ இவருடைய தாயை--அதாவது செங்குட்டுவனின் உடன்பிறந்த தம்பிதான் இளங்கோ சிலப்பதிகார ஆசிரியர் என அறிக.

கி.பி. 100—155 செங்குட்டுவன்: இவன் தனது இளம் பிராயம் வயது 20ல்; தன் தாயாருக்குத் தீர்த்த யாத்திரை செய்விக்க வேண்டிய நிலையில் தனது எதிரிகளான ஆரியர் நாட்டிற்குப் போக வேண்டிய தேற்பட, அதுகாலை மாபெரும் படையுடன் வடநாடு சென்று ஆரிய அரசர்கள் 100 பேர்களையும் அடிபணிய வைத்துக் கப்பமும் வாங்கிக் கொண்டு தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியதும் கண்டும், கேட்டும், அறிந்த, கொங்குமன்னர்கள், சோழர், பாண்டியர்கள் உதவி பெற்றுச் செங்குட்டுவனேடு போர் தொடுக்க அந்தப் போரில் செங்குட்டுவன் மூவேந்தர்களையும் வென்றுன். இப்படியாக வாழ்ந்துவரும் நாளில், வடநாட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைத் தன் நாட்டு யாத்திரிகர் ஒருவர் மூலம் அறிகிறுன்.

அதாவது ஆரிய மன்னர்கள் கூடியிருந்த சுயவரம் மண்டபத்தில் வடநாட்டு மன்னர்கள் தலைவன் கனகவிசயன் ''தென்தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டு, புகன்றெழுந்து மின்தவழும் இமய நெற்றியில் விளங்கும் வில்—புலி—கயல்—பொறித்த நாளில் எம்போலும் முடிமன்னர் ஈங்கு இல்லைபோலும்'' என்று இடிமுழங்கக் கூறி நகைத்



RangaRakes
tamilnavarasam.com

தானும்: அதுபோழ்து உடனிருந்த உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் முதலியோர்களும் உடனிருந்து ஆரவாரித்தார்களாம்.

இதைக் கேட்டறிந்த சேரன் செங்குட்டுவன், தமக்கு அடிபணிந்து தன்முன் வணங்கி நின்ற வடமன்னர்கள் செருக்குற்றிருப்பதைக் கேட்டுச் சினங்கொண்டான். அஃது தனக்கு மட்டுமின்றித் தன் போன்ற சோழ-பாண்டியராகிய தமிழ் வேந்தர்கட்கும் இகழ்ச்சியன்றோவென்று எண்ணிப் பெரும்படையுடன் வடநாடு நோக்கிப் பாய்ந்தான். அங்கு ஆரிய அரசர்களை வென்று அடக்கி, கனகவிசயர்களைச் சிறை செய்து, இமயத்தில் கல் எடுத்து கண்ணகி உரு அமைத்துக் கங்கையில் நீராட்டி, கனக-விசயர்களுடைய தலையில் ஏற்றிக் கொணர்ந்து, கி. பி. 149ல் வஞ்சிக்கு அடுத்துள்ள கொடுங்கோளூரில் கண்ணகிக்கு கோயில் எடுத்து, கண்ணகியின் உருவை மங்கலப் படைப்புச் செய்து எல்லா அரசர்களையும் வரவழைத்து வழிபட்டான். இவன் காலத்திற்கு முன்பே சேரநாடு (1) தென்பாண்டி, (2) குட்டம், (3) குடம் கற்கா, (4) வேண் (5) ஆழி (6) பன்றி (7) அருவா (8) அதன் வடக்கு (9) நன்றுய (10) சீத (11) மலாடு (12) புனாடு எனப் பன்னிரெண்டு நாடுகளாகவிருந்தன. இந்நாட்டில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை தமிழ்தான் நாட்டு மொழியாகவும் அரசியல் மொழியாகவுமிருந்து வந்ததெனத் தெரிகின்றது.

அதற்குப் பிறகு சேர நாட்டை ஆண்ட அரசர்களில் மார்த்தாண்டவர்மன், மூன்றாம் சேரமான் பெருமான், ஆகியவர்கள் முக்கியமானவர்கள். சேரமான் பெருமான் கி.பி. 834ல் பாண்டிய மன்னனால் தோற்கடிக்கப்பட்டு நாடு சீர்குலைந்த போது துருக்கியர்கள் வந்து சேரர் நாட்டைக் கைப்பற்றியபோது துருக்கியர்களுக்குச் சேரமான்பெருமான் பணிந்ததோடு அல்லாமல் மகமதியர் மதமாகிய இஸ்லாத்தைத் தழுவும்படி ஏற்பட்டது. நாட்டில் குழப்பம் ஏற்பட்



டது. அது சமயம் தனது சந்ததியில் வந்த மார்த்தாண்டவர்மனுக்கு வேணாடு-ஒட்ட நாடுகளையும் தன் தம்பிமார்களுக்கு கோழிக்கோடு என்னும் ஏரநாட்டையும்; குட்ட நாட்டை (Cochin) தன் சகோதரிகள் ஐவருக்கும், ஏனைய ஒன்பது பகுதிகளைத் தன் சுற்றத்தார்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, மகமதியர்கள் யாத்திரை ஸ்தலமாகிய மக்காபுரிக்குப் போய் விட்டான். அது முதல் சேரப்பேரரசு சிதைந்ததென்றே சொல்ல வேண்டும்.

அதற்குப் பின் நிலைத்து நின்றது தமிழ்நாடு கலந்த அதாவது தமிழ் மண்டலத் தொடர்பு கொண்ட கொடுந்தமிழ் பாகமாக அப்போது விளங்கிய, இன்றைய திருவிதாங்கூராகும். திருவிதாங்கூர் அரசினர் மரபினர் மருமக்கள் தாயமாகச் சேரமான் பெருமானின் வாரிசாக நாட்டை ஆண்டு வருகிறார்கள் என்பது, அன்று முதல் தொன்று தொட்டுத் திருவிதாங்கூர் 'மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும்போது 'இப்பட்டம் சேரமான் பெருமான் திரும்பி வருமளவும்' என்று சொல்லித் தான் மணிமுடியை மன்னருக்கு தூக்கி வைக்கும் சம்பிரதாயம் இருந்து வந்ததிலிருந்து தெரிய வருகிறது.

சேரநாடு பிரிவினைக்குள்ளாகி ஆளப்பட்டு வரும் நாளில் உள்நாட்டுக் குழப்பமேற்பட்டது. எனவே சேர ஆட்சித் தலைவர்கள் வடகிழக்கு நோக்கி கொங்கு நாட்டில் புகுந்ததையும் அங்கு அரசுரிமை செய்து ராஜ்யம் அமைத்து வாழ்ந்ததையும்: அதன் மேல் அங்கு அதுகால ஆட்சியிலிருந்த கொங்கு சோழ, பாண்டிய அரசுகளோடு மோதுதல் செய்து வந்ததையும் அப்படியாக கூறினேர், கோயம்புத்தூர் ஆமூர், பழநி, சேலம், தென்னூற்காடு சென்னை வரை பரவினர் என்பதும் தெரிய வருகிறது.

அதற்கான சில விருத்தாந்தக் கலைகள் கொங்குநாடு வரலாறு என்னும் நூலில் புலவர் குழந்தையவர்கள் ஆராய்ச்சியை வைத்துக் காண்போம்.

RangaRakes tamilnavarasam.com

—கொங்குநாடு—புலவர் குழந்தை

இவர்களில் அஸ்திரபாண்டரா சேரன் முதல் கயிலாச கடங்க சேரன் வரை 20 பேர்கள் Welson I.M. Kenxel Catalogue Vol. II P. 128. இவர்கள் மைசூருக்கு மேல்பாகம் ஆண்டவர்கள். பூனிற்றிருயகடம்பசேரர் முதல் மயீயூர வர்மா வரை 20 பேர்கள் (Vol. 1.195 Nelson Manuval) Hand book of the Madras Presidency with a note of the over land route of India, London John Marry Albem Strat 1871 Year.

முட்டம் கல்வெட்டொன்றில், அதிராச ராசன், இராச ராசன் என்னும் சேர மன்னர்கள் இருவர், முட்டம் நாகேசுவரர் கோயிலுக்கு நில தானம் செய்தது குறிக்கப் பட்டுள்ளது. அந்நிலங்கள் முட்டம் என்ற ஊரில் இருந்தன. முட்டம் என்னும் ஊர் கோவைக்கு மேற்கில், வெள்ளிமலை அடிவாரத்தில் காஞ்சியாற்றின் (நொய்யல்) கரையிலுள்ள ஒரு பழைய ஊர். அக்காலத்தில் அதற்கு 'இரவிவர்மசதுர் வேதி மங்கலம்,' 'அமரபுசங்கநல்லூர்' என்ற சேரநாட்டுப் பெயர்கள் வழங்கி வந்தன. இக் கல்வெட்டில் கண்டதான நிலங்களை வீர ராசேந்திரச்சோழன் (1206—1255) புதுப் பித்ததாக, அவனது 27வதாண்டு முட்டம் கல்வெட்டால் தெரிகிறது. பழநியில் சேர மன்னர்கள் கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவற்றில் காணும் சேர மன்னர்கள் பெயர் களாவன.

1. வீர நாராயண வீர கேரளன்
2. வீர கேரள வீர நாராயணன்
3. வீர கேரள அமரபுசங்கன்
4. வீர கேரள அதி ராசராசதேவன்
5. கேரள அதி ராசராசஸ்ரீஇராசராசதேவன்:என்பன்

அமராவதி ஆற்றோரமாக உள்ள கோயில்களிலும் சேர



மன்னர்கள் கல்வெட்டுக்கள் பல உள்ளன. ஊர் கோயில் மூர்த்திகளின் பெயர்களுங்கூட சேரர் பெயர்களாக உள்ளன.

வீர நாராயண வீர கேரள மன்னனின் 11-வதாண்டுப் பழநிக் கல்வெட்டில், இரவிமங்கலம் என்ற ஊர்ப் பெயரும் 8வதாண்டுக் கல்வெட்டில் கோதைமங்கலம், அமரபுசங்கம் என்ற ஊர்ப் பெயர்களும் காணப்படுகின்றன. மேலும் வீர நாராயணன் அதிசயச் சோழன் என்ற பெயரில் நான்கு கல்வெட்டுக்களும், அதிராசராசதேவன் 40வதாண்டுக் கல் வெட்டொன்றும் உள்ளது. அதிராசராசனுக்கு அதிசயச் சோழன் என்ற பெயரும் உண்டு!

இதுகாறும் கண்டவற்றில், கிழக்கே வெள்ளலூரையும் மேற்கே முட்டத்தையும் உள்ளடக்கிய பேரூர் நாட்டிலும், பழநிப் பகுதியான வைகாவூர் நாட்டிலும் அன்று சேரர்கள் ஆதிக்கம் இருந்துவந்த தென்பதை அறியலாம். கோவைக்கு 25 கல் தென்மேற்கில் சித்தூர் என்ற ஊர் இருக்கிறது. அது சேரநாட்டைச் சேர்ந்தது. அவ்வூர் அம்மன் பெயர் சித்தூரம்மன் என்பது. ஆண்டுக்கொரு முறை நடக்கும் அவ்வம்மன் திருவிழாவில் கொங்குப்படை' என்ற நிகழ்ச்சியொன்று நடந்து வருகிறது.

கொங்கு நாட்டரசன் சேரநாட்டின் மீது படையெடுத் தான். சித்தூர் என்னும் இடத்தில் சேரர்க்கும் கொங்கர்க் கும் போர் நடந்தது. கொங்கரை எதிர்த்து நிற்க முடியா மல் சேரர் சித்தூரம்மனை வேண்ட அவ்வம்மன் தோன்றிக் கொங்கு நாட்டரசனை வெட்டி அவ்வாளை ஆற்றில் கழுவி னாள். அதனால் அவ்வாற்றிற்கு வாளையாறு (வாள்+ஆறு) என்று பெயர் ஏற்பட்டது எனக் கொங்கப்படைக் கதை வழங்குகிறது. 'கொங்கப்படை மூல முறி என்ற கலைச் சுவடி' இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இன்றும் சித் தூர்ப் பள்ளிச் சிறுமியர், இக்கதையைக் கூறும் பாடலைக் கைக்கொட்டிக் களிப்பாகப் பாடுகின்றனர்.

"முத்தொடு தாமர குணமுள்ள கொங்கு
இராசாதி ராசனே கேள்
(ந்) முந்தின நாடுவா ழாதேமந் தன்னு
சங்கீத காப்பா சன்னுய்
எத்தி தரநான் கொச்சங் கிருந்து
தங்களை வன்னு கான்பான்
ஏகேள் உதவி குடியே நாளில்
இங்ஙனே வன்னு கண்டு"

என்று தொடங்குகிறது.

இதன்படி சேரநாட்டின் மேற்படை எடுத்த கொங்கு மன்னன், இராசாதிராசன் என்று தெரிகிறது. கொங்குச் சோழர்களில் கி.பி. 1080—1135 வரை மூன்று இராசாதி ராசர்கள் ஆண்டிருக்கிருர்கள். இவர்களில் ஒருவன் படை எடுத்திருக்கலாம்.

வீரராசேந்திரனுக்குப்பின் கொங்குச் சோழர்கள் வலி குன்றிவிட்டனர். இந்நிலையில் வீரகேரளன் என்னும் சேரன் பெரும்படையுடன் சேரநாட்டின் எல்லையாகிய வாளையாற்றைத் தாண்டிப் பேரூர் நாடு புகுந்தான். அப்போது எதிர்ப்பில்லாமையால் பேரூர் நாடு முழுவதையும் பிடித்துக் கொண்டான். கோயம்புத்தூர் பேரூர் நாட்டின் ஓர் ஊர். அப்போது அதற்கு 'கோவன்புத்தூர்' என்று பெயர். வீரகேரளன், கோயம்புத்தூருக்கு-'வீரகேரளநல்லூர்' என்று புதுப் பெயரிட்டான். அப்பெயரையே கல்வெட்டுக்களிலும் 'பேரூரிலும்' குமாரமங்கலத்திலும் காணலாம்.

# சோழர்கள்

சூரியச் சோழன் கி.மு. 30,000 முன்னுல் ஆண்ட முதல் மன்னனுகத் தெரிகிறது அவனுக்குப்பின் சனி (முடவன்] இமயன் சண்டன் I அருமன் மனு I சிலம்பன் மனு II பிரமன் மனு III நந்தன் அழகு நந்தன் மனு IV மனுச்சோழன் V, இமயன் II குமரி இழை, முசுகுந்தன் அக்கினி வருணன், அசதன், சகரன், அமசஞ்சன், அம்சுமான், திலீபன், பகிரதன், ககுந்தன், இக்குவாகு, மகாபீடன், சிபி என்கிற செம்பியன் ஆகியவர்கள் கி.மு. 7700 வரை ஆண்டிருக்கிருர்கள்.

அதற்குப் பிறகு ஆண்ட 20 சோழ மன்னர்களில் மனுநீதி கண்ட சோழன் VI, வீதி விடங்கன், மனுச்சோழன், கரிகாலன் I சுபதேவன், இரண்டாம் கரிகாலன் ஆகியவர்கள் முக்கியமானவர்கள்.

நல்லிடிக்கோன் I நல்லாடிக்கோன் கி.பி. 2ல் கருரைத் தலைநகராகக்கொண்டு கி.பி.30வரை ஆண்டிருக்கிருன். முதலாம் கிள்ளிவளவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அதன் பிறகு ஆண்டிருக்கிருன், கி.பி. 25—கி.பி. 100 முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளியும் ஆதி மந்தியார் (பெண்) அரசியும் ஆண்டிருக்கிருர்கள் அதற்குப்பிறகு ஆண்ட 15 மன்னர்களில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி நற்சோணை (பெண் கிள்ளிவளவன் II பீலிவளை, உதயகுமாரன், தொண்டைமான் இளந்திரையன், ஐயை (பெண்), கோப்பெருஞ்சோழன், ஆகியவர்கள் முக்கியமானவர்கள்.

RangaRakes tamilnavarasam.com

சோழர் மரபில் 3வது கிளையாக ஒரு வம்சத்தைத் தோற்றுவித்தவன் நல்லாதிக்கோன் II ஆகும். இவவம்சத்தவர்கள் 9 பேர்கள் ஆண்டனர். இவர்களில் கடைசியாக கி.பி.750—கி பி. 800 வரை ஆண்டவன் விக்கிரம சோழன் என்ற வீர சோழனாகும். கி.பி. 850—880வரை தஞ்சையை தலைநகராகக் கொண்டு ஆண்டவன் விஜயாலயன் விஜயாதித்தராயன். இவனுடைய கிளை சோழ வம்சத்தில் நான்காவது வம்சத்தைத் தோற்றுவித்தது. அதன்படி ஆண்ட 30 மன்னர்களில் ஆதித்தன் I, பராந்த கண்ட கன்னரதேவன் இராஜ ஆதித்தன், சுந்தரச் ரோழன், கரிகாலன் III, குந்தவ்வை I, இராஜராஜன் I, இராசேந்திரன் I, பராக்கிரமன், வீர ராசேந்திரன், மும்முடிச் சோழன், குலோத்துங்கன் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

மனுநீதிச் சோழன்: இவன் திருவாரூரிலிருந்து ஆண்டவன். இவனது புத்திரன் வீதிவிடங்கன். இந்த மனுநீதி சோழன் ஆட்சியில் நடந்த சம்பவம் இன்றைக்கும் இக்குல மரபுக்குக் கீர்த்தியாக விளங்குகிறது. சோழன் மனு நீதியை தன்னிடமாகவே நீதி நடத்திக் காட்டிய வீர சிகாமணி ஆனதினால் மனுநீதிச் சோழனெனப் புகழ் பெற்றான்—அவ் வரலாறு ஈண்டுக் காணலாம்.

மனுநீதி சோழன் தன் இராஜ்யத்தில் அசையா மணி கட்டி, ஆறிலொரு கடமைவாங்கித் தன்னுயிர் போல மன்னுயிரைக் காத்து இராஜரிகம் நடத்தி வந்தான். இவனுடைய இராஜ்யம் காவேரி நதியினால் எக்காலத்திலும் குறைவுபடாத நீர்வளம் நிலவளமுள்ள தாய் பல சோலைகள் சூழ்ந்தோங்கப் பெற்றதாய்; சிதம்பரம், பஞ்சநதம் மந்தியார்சுனம், சம்புகேசுரம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களையுடையதான சோழ தேசமான திருவாரூரில், சூரியகுல க்ஷத்திரிய மரபில் உற்பவித்த மனுநீதிச் சோழன் யாவருக்கும்; இதம் செய்விக்கின்றவனாய், மூவுலகும் போற்றும்படி ஆறு தொழிலான வேதமோதல், யாகம் செய்தல்; இரப்பவர்க்கீதல் மக்களைக் காத்தல், ஆயுதவித்தை பழகுதல்



பகைவரை அறுத்தல், இத்தியாதி குணங்களுடன் விளங்கிய சக்கரவர்த்தி. நாட்டில், பெருங்காற்று, பெருவெள்ளம், பெருமழை, தீப்பற்றல், இடி மின்னல் முதலிய தீமைகள் சிறிதுமில்லாமலும், பருவகாலம் தவறாமையும் மேன்மையே விளங்கியதென்றால், அந்நாட்டின் இராஜதர்மம் எப்படி இருந்ததென்பதை உணரவேண்டும். இவ்வாறிருக்க இவ்வரசனுக்கு வீதிவிடங்கன் என்றொரு குமாரனுண்டு. இவ்விளவரசன் பிதாவினிலும் எண்மடங்கதிகமான உத்தமப் பெருந்தன்மைக் குணத்துடனும், இளவரசுக்குத் தகுந்த பருவத்துடனும் வளர்ந்து வந்தான் ஒரு நாள் இவ்வரச புத்திரன், இரதத்தின் மீது ஆரோகணித்து கமலாலயத்தெழுந்தருளிய தியாகராஜப் பெருமானைத் தரிசிக்கச் செல்லும் போது வீதியில் தேர்க்குதிரைகள் எதிர்பாராது பிரட்சி கொண்டு அதிவேகமாகத் தேரையிழுத்துக் கொண்டு சென்றது. அத்தருணம் தாய்ப் பசுவுடன் வந்த இளங்கன்று துள்ளிக் குதித்து வெகு வேகமாய்ச் செல்லுகின்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டுச் சிதைந்து மாண்டது. இராஜகுமாரன் உற்று நோக்கித் திடுக்கிட்டு மெய் நடுநடுங்கி, தன் தேரிலிருந்து கீழே விழுந்து மிகுந்த துயரத்தோடு அப்பசுங்கன்று சிதைந்து கிடப்பதைக் கண்டு மதிமயங்கிக் கோபம் அடைந்து பின் சிறிது தேறி கண்ணீர் விட்டு தூய்மையுள்ள சூரிய குலத்துக்கு முதலாகிய மனுவென்பவர்; அவர் பின் வழி திருநீற்றுச் சோழன், காவேரிக்கரை கண்ட சோழன், மனுநீதி சோழன்இராஜேந்திர சோழன், இராஜசூடாமணி சோழன், இராஜராஜசோழன் உறையூர்ச் சோழன், மண்ணளந்தசோழன், கங்கைகொண்டசோழன் பிதுர்சக்கரவர்த்தி, சிபிச்சக்கரவர்த்தி, தேவர் சிறைமீட்டசோழன், மரபுநிலைகண்டசோழன், குலோத்துங்கசோழன், மெய்ந்நெறிச்சோழன் முதலான மூதாதைகள் தீமை சேராது செங்கோல் செலுத்தி அடைந்த கீர்த்தி எக்காலத்தும் எடுக்க முடியாத பழி என்னொருவனால் நேரிட்டதே ஐயோ! குலத்தைக் கெடுக்க வந்தேனே எனப் புலம்பி அங்கலாய்த்தான் இவ்வாறிருக்கத் தாய்ப் பசுவானது கன்றைத் தேடிக்கண்டு குலை நடுங்கி அழுது கீழே விழுந்து புரண்டு மெய்ம்மறந்து

RangaRakes
tamilnavarasam.com

கிடந்து பின்பு எழுந்து தனக்கு நேரிட்ட துயரத்தை இறைவனாகிய மனுநீதிச் சோழனிடம் தெரிவிப்போமென ஓடி, அரண்மனை வாயிலில் கட்டியிருக்கும் அசையா மணியைத் தன் கொம்பினால் அடித்தது. இந்நிகழ்ச்சியினால் சபாமண்டபத்தில் கொலு வீற்றிருந்த மனுச்சக்ரவர்த்தியானவர் அவ்வோசை கேட்டுத் திடுக்கிட்டு, திகைத்து அவ் விடம் விட்டு அதிவேகமாக வருமுன், மந்திரி தூதுவர்களுடன் ஓடி வந்து அரசனை வணங்கி இராஜ ரேஸ்வர புத்திரனுமாகிய இளவரசன் வந்த ரதச் சக்கரத்தில் இளங்கன்று அகப்பட்டு மாண்டது. அதன் தாய்ப் பசுவினால் ஆராய்ச்சிமணி அடிக்கப்பட்டது என்று சொன்னான். அச்சொல் அரசனது செவியில் அம்பொன்று ஊடுருவிச் சென்றதற்கு சமானமாக விருந்ததாம். அரசன் தன் அறிவு மயங்கிக் கீழே விழுந்து அமைச்சரால்களைதெளிந்து புலம்பி என் செய்வேன் என் அரசாட்சியில் நல்லோர் மனம் நடுங்கச் செய்தேனே, வழக்கைக் கெடுத்தேனே, மானம் கெடுத்தேனே, தானம் கொடுப்போரைத் தடுத்தேனா, அமைச்சர் கலகமம் செய்ய ஆதரவழித்தேனே, குடிவரி உயர்த்திக் கொள்ளையாடச் செய்தேனே, ஏழைகள் வயிற்றுக்கில்லாமல் இறக்க வழி பார்த்திருந்தேனே, என் அரசாட்சியில் அழும்பல் ஏற்பட்டு அலங்கோலம் செய்ய ஆதாரமாயிருந்தேனே வழக்கில் பாரபட்சமாயிருந்துதானாபிறர் பொருளை இச்சித்தேனே, ஆசைகாட்டி மோசம் செய்தேனே, நிராயுத பாணிகளையும் பிள்ளைகளையும் புறமுது காட்டி ஓடுபவர்களையும் பெண்களையும் ஆயுதத்தால் அழிக்க ஆதரவாயிருந்தேனே, பொதுச் சொத்து தேவாலயம் மடாலயம் சத்திரம் இவை போல பல தருமங்களைச் சிதரடித்து அபகரித்தேனே குடிகளை இராஜங்க ஊழியர் இம்சிப்பதைக்கண்டு கவனியாதிருந்தேனே இனத்துரோகம், ஜனத்துரோகம் தேசத் துரோகம் செய்தேனே, இவ்வரசாட்சியில் குறையுண்டென்று சொல்லியும் மனங் கலங்காதிருந்தேனே இனி என் அரசு நிலைக்குமோ, இப் பெயர் போமோவெனப் பரிதவித்து மனம் வருந்துகின்ற சோழ சக்கரவர்த்தியை மந்திரிகள் நோக்கி நீதி தவறாத



இறைவனே! ஏதோ விதிவசம் வினை வசத்தால் நேரிட்டது. இனி நினைப்பது யாது பயன். இதைவிடுத்து இதற்குத் தக்க பிராயச்சித்தம் செய்வதே முறை என உரை செய்தார்கள்—சக்கரவர்த்தி — அமைச்சர்களே! இதுதானா நீதி முறை, இந்நீதி எந்த நீதிக் கொப்பாகும்.

நாம் பொறுத்தாலும் தெய்வம் பொறுக்குமோ? இவ் வார்த்தை அடுக்குமோ இது நம் இராஜ நீதியோ, என் அரசு நிலைக்கவோ, தாட்சண்ணியமோ இப்படித்தானா நீதி பரிபாலனம். மதிமந்திர் என்ற பேர் இப்படிப்பட்ட யோசனைக்குத்தானா.

நீதி நியாயம் பாராதபடி நயமான வார்த்தை சொல்லுகிறீர்கள்; என்னையும் என் இராஜ்யத்தையும் கெடுக்கக் கங்கணம் கட்டியிருப்பதாய்த் தோன்றுகிறது. மனுநீதி வழுவாது நடக்கும் என்னை இனி மனுநீதிச் சோழன் என்று அழைப்பது தகுமோ, முறையாகுமோ? இவ்விதப் பெயர் இனித்தகாது ''ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையொக்கும்'' என்றபடி நான் அரசனானாலும் பழி வீண் போகாது என்பனபோல் நீதி உரைத்து மந்திரியை நோக்கி நம் இளவரசனை உன் தேர்க்காலில் இடரவைத்து வருவாய் என்று கட்டளையிட்டான். மந்திரி அப்படியே என்று பின் சென்று தன் உடைவாளை உருவித் தன்னுயிர் போக்கினான். இதைக் கண்ட குடிகள் 'கொண்ட மனையாளிருக்க கூலிக்கு வந்தவளைத் தாலி வாங்கினான் என்பது போல் இவன் தப்பிக்கதாகிய நீதி செலுத்தினான். இவனது கொடுங்கோன்மை அழிவுறு நாள் வருமோவெனப் புலம்பினதைக் கேட்ட அரசன் தன் தேரைக் கொண்டு வரும்படி ஆணையிட்டு அத்தேரின் மீதேறி நடத்தி வந்து கொலைஞரால் தன் புத்திரனாகிய விதிவிடங்களைப் பிடித்துத் தரைமீது கிடத்தும்படி உத்திரவு செய்தான். அது கண்டு அஞ்சிய கொலையாளிகளை இளவரசனாகிய விதிவிடங்கன் நோக்கி நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் என்று தானாகவே வடக்கே தலையும், தெற்கே காலுமாக வைத்துக்கொண்டு கண்களை மூடிப் பரம்பொருளைத் தியானித்துக் கொண்டிருந்தான். மனு

RangaRakes tamilnavarasam.com

நீதிச் சோழன் கண்டு தன் தேரை புத்திரனாகிய வீதிவிடங்கன் சிதைய ஓட்டி, மந்திரி பழி நீங்க தேரிலிருந்து கீழே விழுந்தான். உடனே இறைவன் நேரில் தோன்றி சோழனை நோக்கிப் பக்தனே மனுநீதி தவறாதவனே உன் பெருமையை உலகத்தவர் கொண்டாடும்படி நாம் இங்ஙனம் நிகழச் செய்தோம். இனி உன் நீதியிலொரு குறைவும் நேராது என்று திருவாக்குக் கொடுத்து யாவரையும் உயிர் பெற்று வரும்படி அருள் செய்து மறைந்தார். யாவரும் அன்புடைய இறைவனைப் பணிந்து மனுநீதி சோழனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

சோழன் குமணன்—இவன் குமணச் சக்கரவர்த்தியென பெயர் பெற்றவன். இவன் ஆண்ட இடம் முதிரமலைச் சூழல். காலத்தில் 1700 ஆண்டுகளுக்கு முன் எனலாம். இவன் காலத்தில் நடந்த விபரம் காண்க.

இவன் மனுநீதி வழுவாது குடிகளிடம் ஆறிலொரு கடமை வாங்கி அன்புடன் நடந்து மாறுவேடங் கொண்டு நகர்ச் சோதனை செய்து குடிகளாவது இராஜாங்க அதிகாரிகள் யாவராவது நீதி தப்பி நடக்கிறார்களாவென்றும் யாராவது அதிகார தோரணையில் ஆக்கினை மீறுகிறார்களாவென்றும் பல காரியங்களைத்தான், நேரிலேயே போய்க் கவனித்து அக்குறைகளை நீக்கிக் குடிகளை அன்புடன் ஆதரித்துவந்தான். மேலும் இராஜாங்கத்திலிருந்த கலாசாலை, கைத்தொழில் இலாகா, சாஸ்திர ஆராய்ச்சி, சுகாதார இலாகா, வைத்திய சாலை, யுத்தப் பயிற்சிசாலை, இவை பல அத்தியாவசியமான ஏதுக்களையும் ஏற்படுத்தி; ஆலயம், மடாலயம், சத்திரம், குளம் இவை பல உலோகோபகார்த்தமாகவும் பல இன்றியமையாதவைகளை இராஜாங்கத்திலிருந்தே நடத்தி வந்தான். இவனது ராஜ்யத்தில் யாதோர் குறைவில்லாமல் இவனது உத்தம குணத்தினால் இலக்குமி அருள் பெற்று கற்பகச் சோலை முதலிய செல்வத்துடன் குபேரனுடைய பட்டினத்திற்கொப்பாயிருந்தது. இவனது கீர்த்தி எங்கும் பரவியிருந்த படியினால், சகலதேயத்திலிருந்தும் இங்கே வந்து



குடியேறினர். இவனுடைய மனிதரிடம் கீர்த்தியினாலே பல சிற்றரசர்கள் தம் தம் குடிகளை நீக்குவதனாலுண்டாகும் பகையுண்டாயிற்று. ஆயினும் குடிகளுக்கு அஞ்சி கூவர்களால் யாதொன்றும் செய்ய இயலாதவர்களானார்கள். குமணனுக்கு ஒரு சகோதரனுண்டு. அவன் இவனது நற்குண நற்செய்கைகளுக்கு எதிரிடையாயுள்ளவன். அதனால் குடிகள் அவனிடம் வெறுப்புக் கொண்டு குமணன் பேரில் உள்ள பேரன்பினால் அவனை யாதொன்றும் செய்யாமல் குமணனிடம் முறையிடுவதானார்கள் குமணன் தன் சகோதரனை அழைத்து; நாம் பகவானால் நியமிக்கப்பட்ட ஒரு காரியஸ்தர் என்றும் நமக்கும் அவர்களுக்கும் இன்னிலைமை தவிர வேறே விதத்தில் வித்தியாசமில்லை என்றும் நாம் நமது கடமை இன்னதென உணர்ந்து நடவாவிடில் நமது நிலைமை கெட்டு மிகக் கேவலமாகுமென்றும், பின்னால் இவ்விதச்சின்னம் பெருமை நிலைபுரளுமென்றும், நீர் மேல் குமிழி நிலையில்லா வாழ்க்கையென்றும், இத்தேயங்களையாண்ட மன்னர் மண்டலீகர் கோடானு கோடி என்றும், இவ்வுலக வாழ்க்கை சகடக்கால் போல் உள்ளனவென்றும், தான் வாழப் பிறர் துன்பம் அடையப் பார்த்தும் பாராதது போலிருக்கும் உலோபிக் குணம் மனித சென்மமல்லவென்றும், அவனுக்குப் பின்னால் அவ்விதமே நடைபெறுமென்றும் இவ்வித சம்பவம் நிகழாதபடி நடப்பவன்தான் மனிதனென்றும் மனிதநிலை முதல், மமதை இத்தகைய காரியங்கள் ''கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே'' என்றபடி இது தான் முதற்படியாகுமென்றும், இன்று அரசன் நாளை பிச்சைக்காரன் என்று பல நீதி உரைத்துப் புத்தி சொன்னான்: யதார்த்தவாதி வெகுசன விரோதி என்னும் கொள்கைப்படி இவன் கோபம் கொண்டு வேற்றரசர்கள் உதவி வேண்டி குமணன் மேல் படை எடுத்து வருவதாயினன். இதனைத் தூதுவரால் உணர்ந்த குமணன்; பிறர் வதை என்பதைக் கனவிலும் கருதாதவன். ஆனதால் இப்படை எடுப்பு எதற்காக உண்டாயிற்று. பேராசையினாலும், தான் என்கிற மமதையினாலுமேதான்.

RangaRakes
tamilnavarasam.com

இப்படை எடுப்பினால் எத்தனை பேர் மோதுவார்களோ, எத்தனை நாள் ஆகுமோ, வெற்றி தோல்வி ஒருவர் பக்கமில்லை. இவ்வித நிகழ்ச்சி நம் ஒருவனால் தானே. நாம் நகர் நீங்குதல் இருவிதத்தில் மேலாகுமென நினைத்து யாவருமறியா வண்ணம் நகர் நீங்கிக் காடேகினான். குமணர் சக்கரவர்த்தி சகோதரன் படை வந்து சில நாளாகியும் தன்னை யாரும் எதிர்க்காததனால் ஒரு படைத் தலைவனையும் சில சேனைகளையும் நகரத்துக்குள் அனுப்பினான் அப்படிப் போய் வந்த தூதுவர்களால் அரசன் இல்லாததால் எதிர்ப்பவர் யாருமில்லை என்பதைத் தெரிந்து கொண்டு கோலாகலத்துடன் நகரத்திற்குள்ளே புகுந்து ஆண்டு வந்தான். இதனால் குடிகள் முன்னை விட அதிகமாக வெறுத்தார்கள். அரசன் குமணன் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு வேண்டிய சன்மானம் செய்யப் படுமென்பதாகத் தண்டோராப் போடுவித்தான்.

குமணனிருப்பது தெரிந்தும் யாருமப்படிச் செய்யவில்லை ஒரு நாள் ஒருபுலவர் குமணனிடம் வந்து கவி பாட குமணன் வித்துவானை நோக்கி முன்னம் வந்ததில்லை. ஆயினும் என்சகோதரன் என்தலை கொணர்பவர்களுக்கு வேண்டிய பரிசுகொடுப்பதாகப் பறையறைவித்திருக்கிறான். இச்சரீரம் நிலையில்லாதது; ஆகவே நிலையுள்ள காரியத்தைத் தேடுவது உசிதமாகும். என் தலையினால் உமது கஷ்டமும் நீங்கும். என் சகோதரன் விருப்பமும் நிறைவேறும். ஆகையால் என் தலையைக் கொய்து அரசனிடம் சேர்க்கவேண்டுமெனச் சொல்லக்கேட்ட வித்துவான் இருகாதினிடமாகக் கைவைத்தது இப்படி நான் எண்ணிவரவில்லை. அப்படி நான் வந்தால் அநியாயம் செய்பவர், சிசுவைக் கொன்றவர், பட்டினத்தையழிப்பவர், மதுபானம் செய்பவர், மனைவியை வைத்துப் பிழைக்கிறவன், பிரம்மச்சாரிகளாய் பகலிலும் இரவிலும் வந்துவிடச் செய்பவர்கள், சத்புருஷரைக் காவல் செய்பவர்கள், தன்னிடத்தில் அன்போடு காத்திருப்பவனையும், அடைக்கலம் புகுந்



தோரையும், அநீதம் செய்பவர், சுத்திகளையும், பசித்திருப்போரையும், பார்த்து பார்த்து பாலுண்ணும் பாபிகள், உலோபிகள், சிநேகிதரைக் கெடுப்பவர்கள், மறைவில் புறம் கூறுபவர்கள், மருத்துவனை செய்பவர்கள், பேடிகள் பேச்சைக் கேட்டவர்கள், கபடமாய் மனதிலொன்றும் வாக்கிலொன்றும் பேசுபவர், அரசன், மாதா, பிதா, குரு, தங்கள், தேசத்தவர் இவர்களுக்குத் துரோகம் செய்பவர், இப்படி அனேகவிதமான பாவஞ்செய்தவர்கள் அடைபவர் அடையும் கெதி அடையவேண்டுமென்று இப்படியிருக்குமாகவோ இங்கு வந்தேன் என நடந்ததைச் சொல்ல அவனை அப்படி பிடித்து இழுத்துப்போய் அரச சபையிடம் தெரிவித்து இவன் என்னைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தான் என்று தெரிவித்தான். அரசன் முதல் சபையோர் வரை ஆச்சரியப்பட்டு புலவரை விசாரித்து உண்மை தெரிந்து இப்படியல்லவோ, அரசனிருக்க வேண்டுமென புகழ்ந்து கொண்டாடினார்கள். அரசன் குமணன் காலில் விழுந்து தன் பிழையைப் பொறுத்து ஆதரித்து இராஜரீகம் நடத்த வேண்டுமென வேண்டினான். குமணன் யாவர் விருப்பப்படியும் தன் சகோதரனை ஆதரித்து வித்துவானுக்கு வேண்டிய சன்மானம் கொடுத்து அரசு செலுத்தினன் இதுவன்றோ நல்லாட்சி!

சோழர்கள்:—

கடற்படை கொண்(டு) இலங்கைவென்று தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர் கோசலரை வென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை இமயமேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப்படையால் பொன்னி
யணைகட்டி மன்னர் பணிகொண்ட மன்னன்
சுடர் மணிப்பூம் புகார் ஆண்ட கரிகாற் சோழன்
றுலங்கிய நன்னடுநிலைத்த நூரச் செய்கான்.

—சுவாமி சுத்தானந்தபாரதி

என்றவாறு நவயுகக் கவிஞரால் புகழ்ந்து பாடப் பெற்றவாறு பல்லவராட்சி ஒழிந்து பாண்டியர்களும் உள்நாட்டுக் கழகத்தினுள் சீர்குலைந்து கிடந்த நாட்களில் சோழர்களின்

RangaRakes
tamilnavarasam.com

ஆட்சி முன்னேற்றம் அடையத்தக்க சந்தர்ப்பம் வாய்த்தது. கி.பி. 894ல் கொங்கு நாட்டையும் தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றிக் கொண்ட ஆதித்தன் (சோழன்) தஞ்சையை தலைநகராக்கி சோழராட்சியைப் பரவச் செய்தான் அவனுடைய மகன் முதல் பராந்தகன். இவன் மதுரையையும் இலங்கையையும் வென்றவன் என்று பட்டம் பெற்றான். இவன் வான கோவரையரையர்களின் மகத நாட்டையும் கங்கவரசனின் நாட்டையும் ஈழம் என்ற இலங்கைத் தீவையும் வென்று அரசு புரியும் காலையும் இராஷ்டிரகூட மன்னன் முதல் கிருஷ்ணன் சோழ மண்டலத்தில் படையெடுத்து வர, பராந்தகனின் மகன் ராஜாதித்தன். அவனுடன் செய்த போரில் உயிரிழந்தான். கி.பி. 688ல் பராந்தகன் வம்சத்திலுதித்த ராஜராஜசோழதேவன் சோழ மன்னரில் சிறந்தவன். சாளுக்கிய மன்னரின் இருகிளைகளையும் வென்று காஞ்சியில் கோட்டை கட்டி வேங்கிநாடன் விமலாதித்தனை தனக்கு மருமகனாகச் செய்து கொண்டான். இவ்வேந்தன் சேரபாண்டிய நாடுகளை ஜெயித்து அவற்றிற்கு ராஜராஜன் தென்னாடு என்ற ஒரு பெயரையிட்டு அதனை தன் சேனைத் தலைவன் வசம் ஒப்புவித்தான். ஈழமும் அவனுடைய குடைக்கீழ் அமைந்தது. தஞ்சையிலுள்ள அழகிய. சிவாலயத்தைக் கட்டியவனும் இவனே. இராஜ இராஜனின் மகன் இராஜேந்திரதேவன் கி.பி. 1021ல் பட்டத்திற்கு வந்தான். இவன் தன் வெற்றிக்கு அறிகுறியாகக் கங்கை கொண்ட சோழபுரத்தைக் கட்டினான். இவ்விடத்தில், அழகிய சிவாலயம் ஒன்று அமைத்தான். இவன் கப்பற் படையிலும் உயர்ந்தவன், கடாரம், சீயம் முதலியநாடுகளையும் வென்று மேல் சமுத்திரத்தில் உள்ள லட்சத்தீவுகளையும் தன் வசமாக்கினான். ராஜேந்திர சோழ தேவனுக்குப் பிறகு ஆட்சி புரிந்த சோழ மன்னரில் முதல் ராஜாதிராஜன், ராஜேந்திர தேவன் I, வீரராஜேந்திரன், முதல் குலோத்துங்கன். விக்கிரமன் இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் என்போர் சிறந்தவர்கள். முதல் இராஜ இராஜனுக்கு ஜயங்கொண்டான் என்றொரு பெயர்



இருந்தது. ஆகையால் ஜயங்கொண்ட சோழபுரம் இவனமைத்தநகராகும். மன்னார்குடி, ஜயங்கொண்ட நாதராலயமும் ராஜாதி ராஜேஸ்வரஆலயமும் இவன்கட்டிய சிவாலயங்கள். இவனுடைய தம்பி ராஜேந்திரதேவனும் இவனும் சாளுக்கியரோடு செய்த 'கொப்பத்துப் போரில்' வெற்றி பெற்றார்கள். தமையன் மரிக்கவே தம்பி 8 வருஷ காலம் தனியே அரசு செலுத்தி மேலைச் சாளுக்கியரோடு போர் புரிந்து அவர்களுடைய தலைநகராகிய 'கலியாணபுரத்தில்' ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினான். கோவிலுக்குச் சமீபத்தில் காவேரியில் அணைகட்டியவன் இவனுடைய தம்பி. வீரசோழன் ஆற்றை வெட்டியவன் இவன்தான். இவனுக்குப் பிறகு வேங்கி நாடனும், ராஜேந்திர சோழனின் பேரனுமான முதல் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான்.

சுங்கம் தவிர்த்த சோழன் இவனே. பெரிய புராணம் பாடிய சேக்கிழார் இவனுடைய அமைச்சர். ஸ்ரீரங்கத்தில் திரிவிக்ரமன் திருவீதி கட்டிய விக்ரமசோழன் குலோத்துங்கனுடைய மகன் விக்கிரமனாறு வெட்டியவனும் இவனே. ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய தமிழ்ப் புலவர்கள் இருந்தது இவன் காலத்தில் தான். இரண்டாம் ராஜாதிராஜன் காலத்திய பாண்டிய அரசர்கள் பட்டம் பெறுவதைப் பற்றி நடந்த போரில் இவ்வரசன் குலசேகரனுக்கு உதவி புரிந்து, வீரபாண்டியனுக்கு உதவி செய்த ஈழத் தலைவர் இருவரையும் தன் கத்தியால் குத்திக் கொன்றான். மூன்றாம் குலோத்துங்கன் சைவமதப் பற்றுள்ளவன். அவன் கட்டிய ஆலயங்களில் 'திரிடிவனம்' கோயிலும் தாராசுரமென்னும் ராஜராஜபுரம் கோயிலுமே சிறந்தன. வாகும்.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் தொண்டைமான் ராஜ்யமாகிய தொண்டைமண்டல ராஜ்ஜியம் ஏற்பட்டதின்பின், சோழ ராஜ்யத்துக்குத் தஞ்சாவூர், உறையூர் இராஜதானியாக இருந்தன. கி. பி. 10ஆம் நூற்றாண்டிலும் ஆண்ட



RangaRakes
tamilnavarasam.com

சோழ அரசன் குலோத்துங்கசோழனென்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி The Indian antiquorm page 296-299 October 1894. இந்திய புராதன கலைஞன் என்னும் ஆங்கில சஞ்சிகையின் ஒரு பாகத்தில் குலோத்துங்கசோழன் கி. பி. 1062—1127-ம் ஆண்டுகளுக்கிடையில் ஆண்டவனென்றும் இவன் காலத்தில்தான் காஞ்சிபுரம் சோழராஜியத்திற்குத் தலைநகராய் விளங்கியது எனவும் இச்சஞ்சிகையின் மற்ருேர் பக்கத்தில் இராஜேந்திர சோழன் இரண்டாம்வர்மனுக்கே குலோத்துங்கசோழனென்று பெயரிருந்ததாகவும், இவன் காலம் கி. பி. 1127 என்று கூறுகிறது.

கி. பி. 960—1010 ஆண்டுகளில் இராஜகேசரிவர்மன் ஆண்டதாகவும் இவனுக்கு குலோத்துங்கசோழனென்று பெயர் வழங்கப்பட்டதாகவும் காணப்படுகிறது. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி இவர்கள் காலம், பட்டத்துக்கு வரும் அரசர்களுக்கெல்லாம் குலோத்துங்க சோழனென்றே அழைக்கப் பட்டதாகக் காணப்படுவதைப் புராணங்களில் காணலாம். விஜயதர சோழன் ஜெயங்கொண்ட சோழன் காலம் 12-ஆம் நூற்ருண்டு. சரித்திர ஆராய்ச்சிப்படி கலிங்கத்தை வென்றவன் விஜயதரன். கலிங்கத்தை வென்ற காலம் கம்பர் காலம். சாலிவாகன சகாப்தம் 807 என்பதாகக் கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் காணப்படுகிறது.

இராசகேசரி வர்மனுடைய மருமகனே குலோத்துங்க சோழனென்றும், இவன் பர்மா தேசத்தை செயித்தானென்றும் காணப்படுகிறது. இக்காலத்தில்தான் சோழர் குலம் பர்மாவில் தங்கியது. பர்மாதேசத்தின் தலைநகராகிய ரங்கோனிலிருந்து ரயில் மார்க்கமாய் 46-வது மைலில் (Pegu) பிகு என்னுமூருண்டு, இங்கு 1908-ஆம் ஆண்டில் பூமிக்கடியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரண்டு கற்சிலைகள் நடப்பட்டிருக்கின்றன.

அச்சிலைகளின் விவரமாவது. "கி.பி. 1025—1027 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஆண்ட இராஜேந்திர சோழன்



தென் இந்தியாவிலிருந்து கேதாரண்ணியமென்னும் இப்பிகுவைக் கைப்பற்றினன். இவன் அன்னிய நாட்டைக் கைப்பற்றியதின் ஞாபகார்த்தமாக இந்தச் சிலைகள் இங்கு நாட்டப்பட்டன.

இதிலிருந்து பர்மாவை 1010—1044-ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஆண்டவன் இராஜேந்திரசோழனென்றும் இந்தச் சோழனுக்குப்பின் நால்வர் இதே பெயருள்ளவர்கள் இருந்ததாகவும் தெரிகிறது. இக்காலத்தில்தான் கம்பராமாயணம் அரங்கேற்றியதாகவும் தெரிகிறது. கி. பி. 1135 பட்டமாண்ட விக்கிரம சோழன். இவன் பேரன் பர்மா தேசத்தைச் செயித்தான். அங்கு தன் வம்சத்தவர்களைக் குடியேற்றினன். அப்படியாகக் குடியேறிய முக்குல மக்கள் இன்றும் ரங்கூனில், மேல் மேனிலும், ரங்கூனுக்கு அடுத்த கம்பையிலும், ஆற்றருகேயுள்ள தொண்டியிலும் காணப்படுகிறார்கள்.

இச்சோழனுக்கு உதவியாக ரங்கூனுக்கு வந்த பாண்டியன், தென் காஞ்சியை ஆண்ட பராக்கிரம பாண்டியனுகும். பாண்டியன் ரங்கூன் வந்த ஞாபகார்த்தமாக அங்கு தென் காஞ்சி என்று ஒரு ஊருக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு ஸ்தாபிதம் செய்து வைக்கப்பட்ட ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயம் முக்குல மக்களால் நாளது நாள் வரை விமரிசையாக வழிபாடுகள் செய்து வரப்பட்டு வருகிறது.

பாண்டிஅயரசன் ஜாடவர்மன் சுந்தரபாண்டியன்சோழ மண்டலத்தின் மீது படையெடுத்து வடநாடனைத்தையும் கைவசமாக்கிக் கங்கை கொண்ட சோழபுரத்தை அடியோடு அழித்தான். இவன் பாண்டிய நாட்டிற்கும் சோழநாட்டிற்கும் ஏகச் சக்ராதிபதியாக விளங்கினன். அதுமுதல் சோழப் பேரரசு பாண்டியப் பேரரசில் கலந்து சோழ பாண்டிய பேரரசில் கலந்து சோழ பாண்டிய ஐக்கிய அரசாய் விளங்கி

RangaRakes tamilnavarasam.com

யது. ஜாடவர்மன் சுந்தரபாண்டியன் இந்த ஆதிபத்திய ஆட்சியில் நிலைத்து நின்று நீண்டகாலம் ஆளவில்லை. என்றாலும் இவன் காலத்தில் சோழப்பேரரசு சிதைவுற்றதென்றே சொல்ல வேண்டும். எனவே கடைசியாகச் சோழமண்டல ஆட்சியில் இருந்து ராஜ்ஜியத்தைப் பாண்டியனுக்கு ஒப்படைத்தவன் மூன்றாம் இராஜேந்திர சோழனாகும். ஆகவே மூன்றாம் இராஜேந்திர சோழனையே கடைசியாகச் சோழ நாட்டை ஆண்ட சோழப் பேரரசன் என்று கருதவேண்டியிருக்கிறது.

# ஆதித்தொண்டைமான்கள்

சோழர் அரசர் பரம்பரையில் இருந்து தொண்டைமான் இளந்திரையன் தோன்றித் தொண்டைமான் சக்கரவர்த்திகளின் வம்சத்தையும் அவர்கள் ஆண்ட தொண்டைமண்டலத்தையும் உண்டுபண்ணிய விவரம் கவனிப்போம்.

## 1492க்கு முன் அமெரிக்காவில் (கள்ளன்) காதல் திருமணம்

குலம்பஸ் 1492ல் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னதாகவே மூவேந்தகுமாரன் தஞ்சைக் கள்ளன் அமெரிக்காவில் நாககன்னிகையைக் காதலித்துத் திருமணஞ் செய்து கொண்டு தன் வம்சத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்ற கோத்திரத்தை உண்டு பண்ணிய விவரம் தெரிய வருகிறது.

ஆயுள்வேதமணி சங்கர் கோவிந்தராஜு எழுதிய இந்தியாவின் மகிமை என்பதில் அமெரிக்கா, பாதாள தேசம், நாகலோகம், பாதாளலோகமான கீழ்பூமி, என்பதாகவும் 1481ல் வடஅமெரிக்கா சின்சினட்டி நகரத்தில் கிடைத்த சிலாசாசனத்தில் இந்துக்கள் அங்கேயிருந்ததாகவும் காணப்படுகிறது.

இந்துப் பத்திரிகை 9—10—1912ன் 11ஆம் பக்கம் சோழன் நாகலோகம் போய் வந்தது பற்றியே வந்த பெயர் நாகபட்டினம் என்று காணப்படுகிறது. காவேரிப்பூம்

RangaRakes tamilnavarasam.com

பட்டினத்துப் பெருவணிகன் 'பந்தன்' நாகலோகம் சென்று, நாககன்னிகையை மணந்து பொற்படாமும், கருநெல்லிக் கனியும் பெற்று வந்ததாகப் பந்தநந்தாதியில் காணப்படுகிறது. பொற்படாம் போர்த்துக் கொண்டோர்க்கு இளமை மாறுமையும் கருநெல்லிக்கனி யுண்டார்க்கு நீண்ட ஆயுள் பெருகுமாம்.

பரிமேலழகர், ஔவை இவர்கள் இக்கனியுண்டு நெடுங் காலம் வாழ்ந்ததாகவும், கரிகால்பெருவளவன் காலத்தில் சாரமாமுனிவர் நாகலோகஞ் சென்று செவ்வந்தி கொண்டு வந்ததாகவும்: ஆர்வாதித்தன் நாகலோகம் சென்று வெற்றிலைக்கொடி கொண்டு வந்து துருவநாட்டில் பரவச்செய்தானென்றும் நாகலோகம் ஒரு போகபூமியென்றும் இறையனுரகப் பொருளுரையில் கூறுகின்றது. நாகலோகம், உத்திர குரு, ஆக வ—இதற்குப் போக அனேகர் பிராயதனத்தில் போயிருக்கிறுர்கள். ஆகாய வழியாகவும், கடல் வழியாகவும், பாதாள வழியாகவுமே. போயிருக்கின்றனர். அமெரிக்கா, மெக்சிகோ நகரத்தில், பாண்டிகோ அரசன் காலத்தில் நாகராஜனுக்கு ரதோற்சவம் முதலியவை நடந்ததாகச் சரித்திராசிரியர்கள் எழுதுகிறுர்கள்.

ஒஸ்ஸியன் காலேஜ் தமிழ் பண்டிதர் கூறுவதாவது:- இலக்கண மையத்திலும் யவகோடி கீழ்புரத்திலும் உரோமகம் மேற்புரத்திலும் அடியில் சித்தபுரியும் அக்கோணத்தில் அமைந்திருக்கின்றனவென்று வெளியிட்டார்:- கூறுமிடத்து: இலங்கையின் நேர் கீழ்ப்பாகத்திலிருக்கும் நாடு சித்தபுரி. இக்காலம் வழங்கும் அமெரிக்கா இதுதான். பாதாள லோகமாகிய நாகலோகம். பழைய பூகோளப் படத்தில் குணகோளார்த்தத்தின் மையத்தின் சித்தபுரியும் குறித்ததை நோக்கும்போது இலங்கையின் நேர்கீழ் சித்தபுரி இருக்கிறது. இலங்கை, சித்தபுரி, இரண்டும் முறையே குணகோளார்த்தத்திலும் குடகோளார்த்தத்திலும் 180 பாகையில் இருக்கிறது. உத்தரகுரு, சித்தபுரி, நாகபுரி நாகலோகம்,



அமெரிக்காவென்பதே இதுதான். கீழ்பூமி பாதாளலோகமாகிய அமெரிக்காவென்பதும் ஆகும்.

"நாகமென்பது" என்ன-பூர்வீக ஐதிகத்தைக் காட்டக் கூடியதாகவிருக்கிறது. கிறிஸ்துமத பைபிளில் காணப்படும் நாகமானது; ஆதி, ஆதாம் ஏவாளிடத்தில் பேசி நடந்ததும் யூதகுலத் தலைவர் மோசே முனிவர் யூதகுலத்திற்கு நேரிட்ட விபத்தைப் போக்கும்படி நாகத்தைப் பார்த்துப் பிரார்த்திக்கவும் அவ்விபத்து நீங்கினதாகவும் பின்னும் சில குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. நாகமானது சிவபெருமானுடைய ஆபரணமும் மகாவிஷ்ணுவினுடைய சயனமும் நாகர் தேவரம் சித்திலே ஒருவர் நாகபூர்வ குடிகளென்றும் காணப்படுகிறது. இவ்விஷயமாகப் பல குறிப்புகள் கிடைக்கின்றன.

அமெரிக்காவில் கன்னிகைகள் ஓர் விளையாட்டில் நாகவுடையுடுத்தி அவ்விளையாட்டில் தாங்கள் கோரியபடி திருமணம் நடைபெறுவதுமுண்டு. பர்மா தேசத்தவராகிய பர்மியர்கள் கந்தர்வ விவாகம் நாளது வரையும் நடத்தி வருவதை யாவருமறிந்ததே. முன் தோரணையை அனுசரித்து இவ்விதம் நடந்து வருகின்றது.

ஆகவே இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் தொன்மை நாள் தொட்டும் போக்குவரத்துக்கள் இருந்தமைக்குஆதார பூர்வங்கள் கண்டறிந்தோமல்லவா? இனி நம் கள்ளர் இளைஞன் எப்படித் தொடர்பு கொண்டானெனக் கவனிப்போம்.

இராஜராஜ குலோத்துங்க சோழன் என்னும் இளம் சக்கரவர்த்தி கானகத்தில் வேட்டையாடச் சென்றமையின் போது ஓர் அழகிய நாக கன்னிகையைச் சந்தித்துக் காதலித்துக் கந்தர்வ விவாகம் செய்து கொள்கிறுன். நாககன்னிகையின் பெயர் பீளிவளை. ஒரு ரிஷிகுமாரி நாகலோகத்தை (பாதாளத்தை) அதாவது இப்போதைய அமெரிக்காவைச் சேர்ந்தவள். அரசன் பீலிவளையிலின் மகவிற்கு அரசுப்பட்டம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து;

RangaRakes
tamilnavarasam.com

ஆதொண்டைக் கொடிமாலையணிந்து இருவரும் சேர்கிறார்கள். ரிஷி தனது ஞானதிருஷ்டியால் நடந்தவைகள் எல்லாம் உணர்ந்து இருவரையும் ஆசீர்வதிக்கிறார். சிறிது காலம் கழித்து நாககன்னிகை நாகலோகம் போகிறாள். அங்கு அவளுக்கு ஓர் ஆண்மகவு பிறக்கிறது. ரிஷி மகள் அவனை அரசனுக்குரிய வித்தைகள் யாவற்றையும் தோற்றும்படி செய்து மந்திர, தந்திர ஞான உபாசனைகள் யாவும் கற்றறியச்செய்தாள்.

நாககன்னிகையின் மகன் தக்க வயது வந்தவுடன் தன் தாயாரிடமும் ரிஷிபுங்கவரிடமும் ஆசி பெற்றுச் சோழநாடு வந்து இறங்கினான். சக்கரவர்த்தி தனது மைந்தனை ஆலிங்கனம் செய்து ஏற்று உபசரித்தான். தனது குமாரன் ஆதொண்டை அடையாளத்தால்தான் வந்தமைக்குத் தொண்டைமான் எனவும் திரைகடல் மூலம் வந்தமையினால் இளந்திரையனெனவும் நாமகரணமிட்டுத் தன் இராஜ்ஜியத்தை தன் புத்திரனாகிய ஆதொண்டைமானுக்கு முடிசூட்டினான். இவ்விவரம் ''பத்துப் பாட்டில்'' கூறப்பட்டது காண்க.

ஆதொண்டைமான் தன் ராஜ்ஜியத்தை இரு கூறாக்கித் தன் சகோதரனாகிய சோழனுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்துத்தனக்குச் சேனாதிபதியாக நியமித்து ஆண்டு வந்தான். ஆதொண்டைமான் தனது பாக ராஜ்ஜியத்தை 24 கோட்டங்களாகப் பிரித்து, ஒவ்வோர் கோட்டத்தையும் அரசர்கள் பலரை ஏற்படுத்தி ஆண்டுவரச் செய்து, அரசர்கள்களுக்குத் தலைவர் ஒருவரை நியமித்து அவருக்கு 'முதலியார்' என்ற பட்டம் கொடுத்து, யாவராலும் திரை கொடுக்கப் பெற்று, மூவர் முதல் யாவராலும் அன்புடன் வாழ்ந்த தொண்டைமான் சக்கரவர்த்தி என முடி புனைந்து ஆண்டான்.

சக்கரவர்த்தி என்ற பட்டமானது யாவராலும் அன்புடன் அழைக்கப்பட்டது. கொடுங்கோன்மையாலும், வற்புறுத்தியும், துராக்கிறதமாயும், தானாகவாவது வைத்துக்



கொண்டதல்ல. பரம்பரையாக வந்ததுதான் சக்கரவர்த்தி என்பது. ஆதொண்டைமான் ஆண்ட நாடு தொண்டைமண்டல இராஜ்ஜியமென்று அழைக்கப்பட்டது. தொண்டை மண்டல இராஜ்ஜியத்திற்குத் தலைநகர் காஞ்சீபுரம். முதல் மாபல்லவபுரமென்று மாவலிவிரமிருந்தது. பின் காஞ்சீபுரம் வரலாயிற்று. அப்போதுதான் ''பல்லவ'' என்ற பெயர் உண்டாயிற்று. தொண்டைமான் வம்சத்திற்கு ஆதிமூலபுருஷன் ஆதொண்டைமான். இவன் இராஜராஜ குலோத்துங்கச் சோழச் சக்கரவர்த்தியின் குமாரன் அவனது காலம் சாலிவாகனம் 807 கி. பி. 2ஆம் நூற்றாண்டு என்பதாகக் கலிங்கத்துப் பரணி, புறநானூறு இவைகளால் வெளியாகிறது.

தொண்டைமண்டல ராஜ்ஜியம் ஆரம்பம், இதன்படி 1800 ஆண்டுகளுக்கு முன் எனலாம். தொண்டைமான் சக்கரவர்த்தியைப் பாணர், புலவர், நாவலர் யாவரும் கொண்டாடியுள்ளனர். இவ்விவரம் திருவிளையாடல் வருண பேத விளக்கம் கூர்மபுராணம் தர்மமுரைத்த அத்தியாயம் கவி 12ல் காண்க.

தொண்டைமான் சக்கரவர்த்தியாகிய தொண்டைமான் இளந்திரையன் ஆட்சிக்குப் பிறகு தொண்டைமண்டலத்தையாண்ட கீர்த்தி பெற்ற அரசர்கள் சோழச்சக்கரவர்த்தியின் வழியில் மூவேந்தர்களுக்கும் ஒப்பாக இலக்கண இலக்கியங்களில் இடம் பெற்று விளங்கியவர்களில் முக்கியமானவர்கள்:

1. இராஜ ராஜத் தொண்டைமான்
2. வீர மார்த்தாண்ட தொண்டைமான்
3. கருணாகரத் தொண்டைமான்
4. சாமந்த நாராயணத் தொண்டைமான்
5. திருவேங்கடத் தொண்டைமான்
6. பல்லவராயத் தொண்டைமான்

RangaRakes
tamilnavarasam.com

7. இராஜ மார்த்தாண்ட தொண்டைமான்
8. போஜ ராஜத் தொண்டைமான்
9. விஜயன் தொண்டைமான்
10. முரீது விஜய தொண்டைமான்
11. இராமச்சந்திர தொண்டைமான்
12. பெரிய திருவேங்கிடத் தொண்டைமான்
13. நாராயணத் தொண்டைமான்
14. சங்கர நாராயணத் தொண்டைமான்
15. ஜெயவீரத் தொண்டைமான்
16. நமண பூபாலத் தொண்டைமான்
17. பயங்கர தொண்டைமான்
18. அழகம் பெருமாள் தொண்டைமான்
19. வீரிய மகாராஜ் தொண்டைமான்
20. விஜய மார்த்தாண்ட பூபதி
21. வேலாயுதப் பெருமாள் தொண்டைமான்

இவர்களின் ஆட்சிக் காலத்தில் தன் நாட்டிலும் தனது இனத்தவர்களாகிய மூவேந்தர்களின் நாட்டிலும் இவர்கள் செய்துள்ள தான தர்மங்கள், கட்டிய கோவில்கள், மடாலயங்கள், திருப்பணிகள் முதலியன இன்றும் நிலைத்து விளங்கி வருவதைக் காணலாம்.

Ref மூவர் வரலாறு பக்கம் 50

1) திருக்கோகரணம், நமன சமுத்திரம், ஸ்ரீ குரு சுவாமிகளின் கீழ் மேல் பார்வை.

2) பேரையூர் (மடப்புரமாளிபம் சூரிய, சந்திர பிறையுடன் சுகந்தளந்த பல்லவராயத் தொண்டைமானால் கல் நாட்டியது) மேல் பார்வை (பண்டாரம் or குருக்



கள்) முத்துசாமி தேசிகர் தருமம் பார்க்கும் போது நடக்கும்.

3) மதுரை ஜில்லா மதுரை மீனாட்சி சன்னதி தென்புரம் சத்தாபரண மண்டபம் கோச்சடை ஸ்ரீ குருசுவாமிக்காக சுப்ரமணிய குருக்கள் மேல்பார்வை.

4) கோச்சடை கோவில் நடை கோவில் மடம் வகையரு மேல்படியாருக்காக மேல்பார்வை கோச்சடை க. மு. முதலியார்.

5) திருப்பரங்குன்றம் சன்னதி முன் தேவர் மேல்பார்வை.

6) சோழவந்தான் சரகம் கொண்டயம்பட்டி பெருமாள் பட்டி, சடையாண்டி கோவில் தெப்பக்குளம் 21 வீடுகள் உள்பட விசேஷ காலங்களில் தருமம் நடக்கும். மேல்பார்வை கி. மு. குழந்தை வேலுக்கோன், முப்பிடாதி சேர்வை.

7) மேலூர், துரோபதையம்மன் கோவில், கடை வீடுகள், நஞ்சை, புஞ்சை வகையரு உள்பட. பட்டாக்குளத் தருகேயுள்ள பிள்ளையார் கோவில், தெப்பக்குளம் மேல்பார்வை பண்டாரம் கந்தசாமி பிள்ளை தருமம் கோவில் விசேஷம் நடக்கும். 2 நரம் பிரசாதம் உண்டு இங்கே (50) ஆயிரமாகும்.

8) பழனி, பண்டாரம் மேல்பார்வை தர்மபிரசாதம் இங்கேயுண்டு.

9) இராமநாதபுரம், மண்டபம், கவனிப்பு இல்லை.

10) ஸ்ரீவில்லிபுத்தூர் பெலிங்டன் ரோட்டுக்கு தெற்கு ஓடைக்கு கிழக்கு பள்ளி வாசல் நிலச்சுவருக்கு மேற்கு கோவில் வீடுகள் உள்பட மேற்படி பள்ளி வாசல் சாய்பு மேல்பார்வை.

RangaRakes tamilnavarasam.com

11) சொக்கநாதம் புத்தூர் மலையில் மடம், மீனாட்சியம்மன் கோவில் தெப்பக்குளம் உள்பட அமானமாயிருக்கிறது.

12) திருநெல்வேலி ஜில்லா திருநெல்வேலி கண்டியப்பேரி சரகம் மானூருக்குப் போகும் சாலிய ரோடு, வாய்க்காலுக்கு வடக்கு, ரோட்டுக்கு கிழக்கு மடம், பிள்ளையார் கோவில், நஞ்சை உள்பட மேல்பார்வை வண்ணமுத்து தொண்டைமான் யாவரும் கவனிக்கலாம்.

13) திருச்செந்தூர் சன்னதியில் மறவர் சந்து கீழ்புரம் மேல் பார்வை பண்டாரம்.

14) பாவநாசம் பாரஸ்டு பங்களாவுக்குக் கீழ்புரம் ரோட்டுக்கு தெற்கு மேல்பார்வை மீனாட்சிபிள்ளை வகை (சீரணம்)

15) சங்கரநயினார்கோவில் மேலவாசல் ரோட்டுக்குத் தெற்கு, கட்டுச் சோந்து மடம், மேல் பார்வை ஆவுடையாபுரம் கி.மு. தேவர் வகை.

16) சேந்த மரம் கடம்பங்குளம் நாட்டாண்மைத் தேவர் மேல் பார்வை.

17) தென்காசி மலையான் தெரு சுப்பிரமணிய சுவாமி கோவில் நிலம், தோப்பு வகையறு உள்பட மேல் பார்வை சுதந்திரம் தொண்டைமான்.

18) தென்காசிசன்னதி அனுப்ப மண்டபத்துக்கு வடபுரம், ரோட்டுக்கும் கிழக்கு. ரோட்டுக்கும் மேற்கு, மடம், பேட்டைக்கடை வீடு, 35 உள்பட வரும்படி மாதம் 150 நஞ்சை, புஞ்சை, மற்றவை வேறே. பிரதி தினம் பகல் 12 மணிக்கு 50 பேருக்கு கஞ்சி மற்றது வேறே. மேல் பார்வை (பண்டாரம் அல்லது குருக்கள்) தஷிணாமூர்த்தி தேசிகர் சுந்திரம் தொண்டைமான் வகையறு (கவனிக்கவும்)



19) குற்றாலம் சம்பந்த பிள்ளையார் கோவிலுக்கும் ரோட்டுக்கும் வடக்கு, திருவிதாங்கூர் ரெஜிடென்ட் கம்பவுண்டுக்கும் தெற்கு ஓடைக்குப் போகும் நடைபாதைக்கும் கிழக்கு மேல் பார்வை பல்லவராயர் கிருஷ்ணமூர்த்தி விசேஷ காலங்களில் நீர்மோர், தண்ணீர், ஏழைகளுக்கு சில வேளை கஞ்சியுமுண்டு (நடக்கும்)

20) திருவிலஞ்சி மடம் இல்லை. அரண்மனையிலிருந்தது. இடிந்து கிடக்கிறது. காலியிடம் இலஞ்சி ஊருக்குத் தெற்கு, செங்கோட்டை போகிற குற்றாலத்திலிருந்து ரோட்டுக்கு, கிழக்கு, தொண்டைமான்குளம் நஞ்சை வகையறுவுக்கும் வடக்கு, பூர்வீக சின்னமானது இந்நாள் வரை வழங்குகிறது. யாவரும் கவனிக்கலாம்.

20) திருவிதாங்கூர் பத்மநாதபுரம் சரகம் குளச்சல் மடம், நிலம், உப்பளம், பிள்ளையார்கோவில், அம்மன் கோவில், ஆழம் 600 பாத்தி நிலம் ஆழத்திற்கும் மேற்கு, கடலுக்கு வடக்கு, செங்கிலிப் பாறைக்கும் கிழக்கு, தர்மம் நடக்கும் ஏழை பரதேசிகளுக்கு சாப்பாடு போடுவதுண்டு, கவனிப்பில்லை. மேல் பார்வை வைத்தியம் இராமலிங்கத்தேவர், துரைச்சாமித் தொண்டைமான்.

22) பர்மா இரங்கூனைச் சேர்ந்த கம்பை இராஜேந்திர சோழன் வகையறுவால் நியமிக்கப்பட்ட ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயமுண்டு. மேல் பார்வை தனுக்கோடியா பிள்ளை மடம் சின்னையா கண்டியர் வீட்டுக்கு கிழக்கு கட்ட இக்குலத்தார் உதவி வேண்டி இருப்பதும் அவசியமாகும்.

.3) கம்பை அருகே (Pumping Station) யேகோ இன்சின் போகிற ரோட்டுக்கு கிழக்கு பர்மியத் தெருவுக்கு போகிற சந்து லயனுக்கு தெற்கு மடம் தோட்டம் ஓலையினால் இருக்கிறது. ஏழை பரதேசிகளுக்கு கஞ்சியுண்டு. மேல் பார்வை ''தேவர்'' கோவிந்தராய். இதை

RangaRakes
tamilnavarasam.com

விருத்தி பண்ணவும் நல்ல கட்டடமாக கட்டவும் பிரி யம். இக்குலத்தார் உதவி செய்வது அவசியமாகும். மேலும் இம்மடத்துக்கு கம்பை கி.மு. அல்லது ஹாக்கிசு வேப்பாக் கண்டியர் I ஏக்கர் நிலம் கொடுப்பதாய் பிர மாணமாகச் சொல்லியிருக்கிறார்.

24) மேல் மேனியிலும் பீகு (வேதாரண்யத்திலும்) மடம் கட்ட வேண்டியது முக்கியம் (உத்தேசிக்கிறார்கள்) மேலும் கவனியாதபடியிருந்தால் வேலி பயிரை அழிக் கும் (கோடி ரூபாயாகும்) ரிக்காடுடன் சமஸ்தானம் மேல் காருவாரில் இருக்க வேண்டியது.

# பாண்டியர்கள்

அ. சி. சிதம்பரனார் சேரர் வரலாறு பக்கம் 213

## மதியன் என்ற சந்திரபாண்டியன்:

கி. மு. 30,000க்கு முந்திய காலத்தில் முதல் முதலில் அரசு தோற்றுவித்துப் பட்டமாண்ட ஆதிப்பாண்டிய மன்ன னாகும். இவனே குல முதல்வன். இவன் கடல் கடந்து சென்று; மலாயா, கடாரம், சாவகத் தீவுகளை வென்று, சாவகத் தீவுகளில் ஒரு தீவுக்கு 'மதியன்' என்ற தன் பெய ரைச் சூட்டி, வெற்றித் தூண் நாட்டி, நாடு திரும்பினான். இவன் பெருவள நாட்டில் பஃறுளியாறு என்னும் ஆற்றை மேருமலைத் தொடரினின்றும் வெட்டி, நாட்டை வளம் படுத்தி அதன் கரையில் தென்மதுரை என்ற நகரை ஏற்படுத்த, தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவி; புலவர் பாணர், கூத்தர்களையும் ஆதரித்தவன். இவனுடைய வம்சத்தினர் கி.மு. 16500 வரை தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்தினர்.

கி. மு. 16500—16000 வரை தமிழ் நாடானது நிருதர்கள் (African Negroes) உடைய ஆட்சியிலிருந்தது. பிறகு கி. மு. 16000 14490 வரை தமிழ் நாடானது ஒளியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கி. மு. 14490—14058 வரை தமிழ் நாட்டில் மங்கோலியர் (Mangolians) ஆட்சி புரிந் தனர். மங்கோலிய அரசர்களில் முக்கியமானவர்கள் :— சூரபதுமன்—தாருகன்—சிங்கமுகன் ஆகியோராவார். மறு படியும் தமிழ் நாடானது கி. மு. 14058 – 14004 வரை ஒளியர் ஆட்சிக்கு உட்பட்டது.

RangaRakes
tamilnavarasam.com

கி. மு. 14004—9564 — காய்சின வழுதி என்ற இரண்டாம் நிலத்திரு திருவிற் பாண்டியன் பாண்டி நாட்டின் ஆட்சியைத் திரும்பவும் பெற்று தனது வம்ச வரலாற்றையும் நிலை நாட்டினுன் : இவனுடைய வம்சத்தவர்கள் 4440 ஆண்டுகள் தலைச் சங்கத்தை நடத்தினர்கள். இக்காலத்தில் 89 பாண்டிய மன்னர்கள் ஆண்டிருக்கின்றனர். கி. மு. 9560ல் அமெரிக்காவிலிருந்து சிவப்பு இந்தியர்கள் இந்தியாவின் மேல் படை எடுத்து வந்து பல பகுதிகளைக் கைப்பற்றினுர்கள். அடுத்தபடியாக கி. மு. 9000ல் காக்கேசியா மலைப்பக்கம் இருந்து ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். ஆரியர்களுக்கும் சிவப்பு இந்தியர்களுக்கும் போர்கள் பல நடந்தன,

கி.மு. 750முதல் 69—000 வரை ஆண்ட பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்ற பரமேசுவர பாண்டிய வம்சமாகும். இவன் காலத்தில் அரசு இருக்கை கொற்கைக்கு மாற்றலாகியது. அங்குத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. அச்சங்கம் 600 ஆண்டுகள் நடைபெற்றது. அக்காலத்தில் ஆண்ட பாண்டியர்கள் 20 பேர்கள் அதற்குப் பிறகு கி.மு. 6805—.105 வரை வெண்டேர்ச் செழியன் தேர்மாறன் வம்சம் ஆட்சிக்கு வந்தது. இவர்கள் காலத்தில் இடைச் சங்கம் நிறுவப்பட்டு, முத்தமிழும் வளர்க்கப்பட்டன.

குறிப்பு:—தமிழ் வரலாறு—பக்கம் 224 நவ R.R. அய்யங்கார் ''பாரத காலத்தில் பாண்டவர்களுக்குப் பெண் கொடுத்தல், போரில் உதவுதல் பெருஞ்சோறு அளித்தல் முதலிய பல செய்கைகளால் பாண்டியர்க்கும் ஆரிய அரசர்களுக்கும் தொடர்பு உண்டென்று வியாசபாரதத்தால் அறியலாம். சித்திராங்கதை (அல்லி) என்பவள் பாண்டிய நாட்டு மணலூர் புரத்தில் இருந்த சித்திர வாகனன் என்ற மலையத்துவ பாண்டியன் மகள் என்றும் அவளை அர்ச்சுனன் மணந்தான் என்றும் பாரதம் கூறும் (ஆதி—234—அத்தி: சபா—835—841 அத்).



கி.மு. 1815—1715 வரை:—முடத்திருமாறன் ii முதற்கொண்டு இவனுடைய கிளையினர் ஆண்டிருக்கின்றனர். கி.மு. 1715 ல் திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் இரண்டாம் முடத்திருமாறனுல் நிறுவப்பட்டது. அச்சங்கம் இரு நூறுண்டுகள் நடைபெற்றது. அதே சமயத்தில்தான் தற்காலம் கூடல் என்று அழைக்கப்படுகிற மதுரையானது ஒரு ''சித்த மூர்த்தியின்'' உதவியால் கட்டப்பட்டது. இது சமயம் மூன்றும் முடத்திருமாறன் என்ற பாண்டியன் தென் பரங்குன்றத்துப் பக்கம் தென் மதுரையில் இருந்த சங்கத்தைக் கூடலுக்கு மாற்றிவிட்டான். அதுமுதல் அச்சங்கம் கடைச் சங்கம் என்று அழைக்கப்பட்டது.

கி.மு. 1715—கி.பி. 340 வரை:—முடத்திருமாறன் III முதலாகக் கொண்டு இவனது கிளைகள் 49 பாண்டியர்கள் ஆண்டிருக்கின்றனர் இரண்டாம் உக்கிரப் பெருவழுதியுடன் கடைச் சங்கம் முடிவடைந்து விட்டது. கடைச்சங்கம் 1950 ஆண்டுகள் நடைபெற்றது. களப்பிரர்கள் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வந்ததால் கடைச்சங்கம் நடைபெறுமல் முடிவடைந்துவிட்டது. கி.பி. 340 கி.பி. 520 வரை பாண்டி நாடு களப்பிரர்வசம் இருந்தது. களப்பிர அரசர்களில் பேர்பெற்றவன் அச்சுதவிக்கந்தன் என்பவன்.

கி.பி. 520ல் மூர்த்திநாயனுர் என்பவர் களப்பிரருக்கு விரோதமாகக் கிளம்பி, அவர்களை முறியடித்து, பாண்டிய நாட்டைவிட்டு களப்பிரரைத்துரத்தி, நாட்டை மீட்டு கி.பி. 585ல் பழைய பாண்டிய பரம்பரையினரைத் தேடிப் பிடித்து, அவர்களிடம் நாட்டை ஒப்புவித்தார்.

**வங்கிய சேகர பாண்டியன்:-**

தெய்வப் புலவர்கள் நாற்பத்தெண் புலவர்கள் பல தேயத்துட் சென்று, தம் புலமைத் திறத்தால் வெற்றி புனைந்து மதுரையம்பதியை நோக்கிவருகையில், ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் ஓர் புலவராய் வேடம்பூண்டு புலவனை



RangaRakes
tamilnavarasam.com

நோக்கி நீவிர் யாவர்? எங்கிருந்து வருகிறீர்கள் என வினவவும், அவர்கள் ''யாங்கள் புலவோர் பாண்டி நாட்டுக்கு வருகின்றோம்''மெனக் கூறவும்: அப்படியாயின் நீங்கள் யாவரும் நமது சொக்கலிங்கப் பெருமான் திருவடியினை வணங்க வருதல் வேண்டுமென்று அழைத்துப் போய்; அப்பெருமானைக் கண்டு அவர்களைப் பணிவித்துப் புலவர் பெருமான் மறைந்தார். புலவர் நாற்பத்தெண்மரும் களிப்புற்று, சொக்கலிங்கத்தைப் பணிந்து ஆனந்தக் கடலில் மூழ்கி கோயிலினின்றும் திரும்பிப் போய் பாண்டியனைக் கண்டார்கள்.

பாண்டியன் அவர்களது கல்வி கேள்விகளை நோக்கி வியந்து ஆலயத்து வடமேற்பாரிசத்திலோர் சங்க மண்டபமுண்டாக்கி அன்னவர்களுக்கு வேண்டிய சிறப்புகள் செய்து வைத்தனன். இதனால் பல புலவர்களும், பல தேயத்திலிருந்து வந்து வாதித்துத் தோல்வியுற்றும் அதனால் சங்கப் புலவர்கள் களைப்புற்ற மனத்தையுடையவராய் சர்வேசுவரனாகிய சொக்கலிங்கம், சன்னதி முன்வந்து வணங்கி நாங்கள் புலவர்கள்; விவாதத்தினால் வருந்துகின்றோம். புலமையை அளவிடத்தக்க ஓர் சங்கப் பலகை அளித்தல் வேண்டுமென பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் கருணை கொண்டு ஒரு புலவராகத் தோன்றி சங்கப் பலகையை அன்னவர்க்கீந்து, இப்பலகை ''இரண்டுசாண்'' அளவினையுடையது; மிகப் பரிசுத்தமானதும், தெய்வத் தன்மையுள்ளதும், மந்திர சக்தியுள்ளதுமானது. உண்மைப் புலவர்க்கு முழம் வளர்ந்து இருப்பிடம் தரும். இதுதான் அளவுகோல் எனக்கூறி அளித்தார்.

அதனைப் புலவர்கள் பெற்றுக் கோயில் வலம் வந்து சங்கத்தைச் சேர்ந்து, பலகைக்கு அழகு செய்து பூசித்து முறையே; நக்கீரர், கபிலர், பாணர் முதலிய புலவர் பலர் ஏறி இருக்க அவர்கட்கெல்லாம் இடம் கொடுத்து வளர்ந்தது. அதிலிருந்து நாங்கள் ஆராய்ந்து பற்பல நூல்களியற்றியும், சொக்கலிங்கப் பெருமான் அவ்வவர்களிலோர் புலவ



ராய், நாற்பத்தொன்பதாவது புலவராய் நடு நாயகமாக நின்று விளங்கினார். வங்கிய சேகர பாண்டியன், வங்கிய சூடாமணிப் பாண்டியனுக்கு முடிபுனைந்து தவந்தையடைந்தான். இப்பாண்டியன் முத்தொழிலுக்கும் இறைவனாகிய சிவபெருமானைப் பணிவுடன் வணங்கும் பொருட்டு பூந்தோட்டம் உண்டு பண்ணி அதனிடத்தேயிருந்து புஷ்பிக்கும் செண்பகமலர்களை ஜெகதீசனுக்குச் சமர்ப்பித்து, அவரால் செண்பக மாறன் என்று அழைக்கப்பட்டு வரும் காலையில் அன்னவன் மேற்படி தோட்டத்தில் தேவியுடன் கூட விருக்கும் போது, தென்றற் காற்றைவிடத் திவ்விய பரிமணம் கண்ட பாண்டியன் இஃது எங்கிருந்து உண்டாயிற்று என்று அதனைக் கிரகித்து ஒருவாறு மனைவியின் கூந்தல் மணமாயிருக்கக் கண்டு அதிமகிழ்ச்சி கொண்டு தன் மனத்திடமாகவுள்ளதை தெரிவிப்பவர்களுக்குப் பொன்னும் பொற்கிளியும் கொடுக்கப்படுமென்று பறையறைவித்தான்.

தூதுவர்கள் இதனைப் புலவர்களிடம் கூறியும் யாராலும் வெளியிட முடியவில்லை. அக்காலத்துத் தருமி என்னும் பிரம்மச்சாரி சொக்கலிங்கத்தினிடம் போய் அழுது, பணிந்து, தந்தை தாய், திக்கில்லா எனக்கு நீயே எல்லாம், இப்போது பாண்டியன் மனத்துள் கொண்ட எண்ணம் வெளியாகவும் என் தரித்திரமென்னும் கவலை நீங்கவும், ஒரு கவிபாடித்தரல் வேண்டுமென வேண்டினான்.

பக்தர்களிடம் பக்தி கொண்டவனும், அன்பர்க்கெளியவனுமாகிய பரந்தாமன், அன்னவன் கருத்துப்படி 'கொங்கு தேர் வாழ்க்கை' என்று முதலடி கொண்ட ஓர் திப்பாசுரமெழுதிக் கொடுத்தார். அதனைப் பிரமச்சாரி கொண்டு போய் பாண்டியனிடம் கொடுத்தலும், பாண்டியன் உளமகிழ்ந்து பரிசு கொடுக்கும்படி ஆணையிட்ட தருணத்தில் நக்கீரன் இப்பாட்டில் குற்றமுள்ளதெனக் கூறலும், தருமி மனம் புண்ணாக வருந்தி அப்பாடலைச் சிவபெருமான் சன்னதி முன் வைத்து அழுது சுவாமி திக்கில்லா எனக்கு இப்பாடலை நல்கினை, இது நன்று, நன்று, யாவற்றிற்கும் மேலாகிய நின்

RangaRakes
tamilnavarasam.com

பாடலுக்குப் புலவர் குற்றம் கூறினுல் விளைவது யாது என மனமுடைந்து கூறலும்; தட்சணம் பகவான் புலவராகச் சங்கத்தார் முன் தோன்றி நம் பாடலுக்குக் குற்றம் கூறியவர் யாவர்? எனவினவினுர்.

நக்கீரன் அஞ்சாது முன் வந்து நானே கூறினேன் என்றனன். எம்பெருமான் குற்றம் யாதெனக் கேட்டலும் நக்கீரன் ''சொற்குற்றமின்று'' பொருட் குற்றமுளது. அஃதென்னெனின் மலர்ச் சேர்க்கையாலன்றிக் கூந்தலுக்கு இயற்கையில் வாசனையில்லை என மொழிதலும் பெருமான் பத்தினி மாதர்களிலோவென்ன? அதுவுஞ் செயற்கையே யென்றனன். தெய்வ மங்கையர் கூந்தலோவென்ன? அதுவும் கற்பக மலரின் சேர்க்கையாலென்று கூறலும், எம்பெருமான் நக்கீரனை நோக்கி நீ வழிபட்டேத்துகின்ற காளத்தி நாதர், ஞானப் பூங்கோதையாருடைய கூந்தலோவென்ன? அஞ்சாது அதுவுமத்தகையதே என்று முழுதும் சாதித்தனன்.

பின்னர் சொக்கலிங்கம் நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்டலும் அச்சுவாலையால் வெதுப்பப்பட்டு வருந்துவோன் ''சிறிதும் பயப்படாமல்'' நீ தேவேந்திரனைப் போல உடலெல்லாம் கண்ணுகக் காட்டினுலும் நீ பாடிய பாடலில் குற்றம் குற்றமே எனச் சாதித்து, எம்பெருமான் நெற்றிக் கண்ணுல் நக்கீரன் தாக்கப்பட்டு அவ்வெப்பைத் தாங்க மாட்டாதவனுய்ப் பொற்றுமரைத் தடாகத்தில் வீழ்ந்தான்

நக்கீரன், புலவராய்த் தோன்றிய சொக்கலிங்கமும் மறைந்தனர். சூழ்ந்திருந்த புலவர்கள் மனந்தளர்ந்து கைலாய மலையைப் பெயர்த்தவனுன இராவணனை அவனது வீணையாக்கினத்தால் அருள் சுரந்து தேரும் வாளும்ஆயுளும் கொடுத்தருளிய அருள் நாதரால் நேர்ந்தது. அவனுல் தீர்க்க வேண்டியதேயன்றி மற்ற யாவரால் முடியும் எனத் துணிவு கொண்டு, சன்னதியடைந்து பலவாறுகப் போற்ற மகாதேவர் திருவுளங்கொண்டு பொற்றுமரைத்தீர்த்தத்துக் கருகில், புலவர் கூட்டத்துக்குள் நின்று அருட்கண்ணுல்



நோக்கி நக்கீரன் கையைப் பற்றியருளினுர். கைதந்து கரையேற்றிய சிவபெருமானையும் உமாமகேஸ்வரியையும் நக்கீரன் வணங்கி 'திருக்காளத்திக் கையிலை' என்னும் வெண்பாவந்தாதி பாடினுன். பெருமான் அருள் கூறினுர்.

## பிரமோத்திர காண்டத்தில் வரும் சுராபாண்டியன்

Ref: Page 74. மூவரசர்)

அவனது சகோதரர் 66 பேர்கள். தான் ஜெயித்த ''பிரதாருத்தினை'' (தற்போதைய வடகன்னடம்) தன் தம்பியர் முதல்வனுக்குப் பட்டங்கட்டி அப்போது பறையறை வித்தவாறு:

''சிம்மாலதோடன்னிய வர்த்தினபுரி சுராபண்டீசுரா ராஜமன்னிய ஷத்திரிய சூரிய வம்சம் மதுசேகர் உத்திர நேத்திரத்தில் பிறந்து ரேணுகா பரஞ்சோதி புத்திரனுகிய ஓரிக்கல் நகரமும் பிரதாபருத்திரனுடைய நாடு நகரமும் சமஸ்தமு மளித்திருப்பதால் மதுவீர பாண்டியரே— ''நாடாள்வார்'' பாண்டியனுக்குப் பட்டம் கட்டிப்பின் யாவரையும் ஜெயித்து அழைத்துப் போகும் போது கூறிய கட்டியமாவது.''

''சிம்மாலதோடமன்னிய வர்த்தினபுரிக்கு
அரசனுடைய அமிர்த
பாண்டிய விக்கிராதி பாண்டிய மகாராஜா பராக்கு'
எச்சரிக்கை,
சூரியகுல மன்னிய ஷத்திரிய சவுக்கிய கவுண்டலீக
கோத்திர
அரசம்மார தேவசகாய, ரேணுகா புத்திராபரருக்கு
எச்சரிக்கை''

சோம சூடாமணிப் பாண்டியனுக்குப்பின் குலசேகர பாண்டியன் கடம்ப வனமாயிருந்ததைத் திருத்தியவனுள் ஒருவன், கலியுகம் 4380ல் குலசேகர பாண்டியன் கி.பி.

RangaRakes
tamilnavarasam.com

11, 15, நிர்பதி வருஷம் 1040 சாலிவாகனம் 973 இருந்தப்படி கூர்ம புராணம் கூறுகிறது. தென்காசியில் குலசேகர பாண்டியன் பேரால் கட்டப்பட்ட மிகப் பழைமையான தேவாலயம் இன்னமும் காணலாம்.

கோவலனைக்கொடுங்கொலைக்கு ஆளாக்கியவன் நெடுஞ்செழியன் என்றும் இவன் சங்ககாலப் பாண்டியன் என்று முன்னரே கூறியுள்ளோம். இவன் மரித்தவுடன் கொற்கையில் ஆண்டு வந்த வெற்றிவேற் செழியன் மதுரைக்கரசனாகி நன்மாறன் என்ற பெயருடன் ஆட்சி புரிந்தான். பாண்டிய அரசருள் இரண்டாவது நெடுஞ்செழியன் சிறந்தவன். இவன் சேர சோழரையும் ஐந்து குறுநில மன்னர்களையும் ''தலையாலங்கானப் போரில் வென்று சக்கரவர்த்தியாய் தென்னாடு முழுவதையும் ஆண்டு வந்தான். மாங்குடி மருதனாரென்ற புலவர் மதுரைக்காஞ்சி என்ற நூலில் இவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவனுடைய மகன் உக்கிரப்பெருவழுதி காலத்தில் தான் சங்கம் அழிந்தது. களப்பிரர் என்ற கன்னட தேசவாசிகள் மதுரையைக் கைவசமாக்கி ஆட்சி புரியுங்காலையில் கடுங்கோன் பாண்டியன் என்ற வீரன் அவர்களை வென்று மதுரையில் மீண்டும் பாண்டிய ஆட்சியை நிலை நாட்டினான். ''இவன் மகன்'' மாறவர்மன். மாறவர்மனுடைய பேரன் அழகேசரி நெடுமாறன். இவன்தான் கூன்பாண்டியன் என்பான். திருஞானசம்பந்தர் சமணரை வாதத்தில் வென்று எண்ணாயிரம் சமணரைக் கழுவில் ஏற்றச் செய்தது இவன் காலத்தில்தான். கூன் பாண்டியன் மகன் கோச்சடையன் இவனுடைய மகன். அரிகேசரி பராங்குச மாறவர்மன் ஒரு சிவபக்தன்.

இவனுடைய சந்ததியில் பிறந்த நெடுஞ்சடையன், பராந்தகன், ராஜசிம்மன், முதல் வரகுணன், ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், முதலிய பாண்டிய அரசர்கள் பலகாலம் பல்லவர்களோடு போர் புரிந்தனர். ஸ்ரீமாறன் மகனாகிய இரண்



டாம் வரகுணன், 'அபராஜிதனுடன்' திருப்புறம் பயத்தில் போர் புரிந்தனன்.

ராஜேந்திர சோழன் மதுரையில் சோழபாண்டிய வம்சத்தை நிலைநாட்டிப் பாண்டியரின் ஐந்து கிளைத் தலைவர்களையும் சிற்றரசர்களாகச் செய்தான். சோழ பாண்டியராட்சி 60 ஆண்டுகள் நடைபெற்றது. சோழர் வலிமை குறையவே 100 வருஷ காலம் செயலற்றுக் கிடந்த பாண்டியர்களின் கை ஓங்கியது. கி.பி. 1218 ல் பட்டத்திற்கு வந்த மாறவர்மன் சுந்தரபாண்டிய தேவன், தஞ்சையையும் உறையூரையும் கட்டெரித்து சோழ ராஜ்ஜியத்தை வென்று மீண்டும் அவர்களுக்குத் தானமாகக் கொடுத்தான். இரண்டாம் மாறவர்மன் கி.பி. 1215 வரைக்கும் ஆட்சி புரிந்தான். பிறகு பட்டத்திற்கு வந்த ''ஜாடவர்மன் சுந்தர பாண்டியன்,'' பாண்டிய அரசருள் சிறந்தவன். இவனுடைய புகழைப் பற்றி ''ஸ்ரீரங்கம் கோயிலொழுகு'' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இவன் சேர சோழ வல்லாள நாடுகளை ஜெயித்தான். இவன் சோழநாட்டை கைப்பற்றிய பிறகு சோழராட்சி பாண்டியராட்சிக்கு உட்பட்டது. ஸ்ரீரங்கம் கோயிலில் பொன் ஓடு போட்டு மண்டபம் கட்டினான். கோவில் பொன் வேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். ஈழத்தையும் ஜெயித்து கலியுகராமன் என்ற வீரப் பட்டத்தையும் அடைந்தான்.

Ref: சிதம்பரம் தலவரலாறு Page 35

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் தான் அடைந்த வெற்றிகளின் காரணம் (கி.பி. 1251—1271) திருச்சிற்றம்பலனை வணங்கி, கோயிலில் துலாபாரதானமும் வழங்கினான். இந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் முப்பது இவனைப் பற்றியதாகும். கோயில் நந்தவனத்திற்கும், திருச்சிற்றம்பலமாகாளி கோயிலுக்கு விழாவும், பூசையும் நடைபெறுவதற்கும் திருநாமத்துக்காணி விட்டதாகவும், தில்லை திருக்கோயிற் பொதுவார்கள் கணக்கு வைத்திருந்த முறையில் குறைகள் காணப் பெற்றதால் மேற்பார்வை

RangaRakes
tamilnavarasam.com

செய்து தணிக்கையிட்டதாகவும், மற்றும் பல இறைப் பணிகளைச் செய்ததாகவும் இவன் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இவன் தில்லையில் மேற்கு இராஜகோபுரத்தை அமைத்தனன். அதற்குச் சுந்தரபாண்டியன் கோபுரம் என்பது பழைய பெயராகும்.

இவனாலும், இவன் வழிப் போந்தவர்களாலும், பெருமானுக்குச் செங்கழுநீர்ப்பூ மாலைகள் சாத்த ஓடை நந்தவனங்களும், திருவிழாப் பணிகளும், யாத்திரை வாசிகளுக்கும் வேதப் பிராமணர்களுக்கும் நிலதானங்களும் விடப்பட்டுள்ளன. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் மற்றொரு கல்வெட்டு பெரும் பற்றப்புலியூருக்கு மேற்கேயுள்ள புளியங்குடி என்ற கிராமத்தை விக்கிரம பாண்டிய சதுர்வேத மங்கலம் என்ற பெயரிட்டுக் கிராமத்திலுள்ள நூற்றெட்டு அந்தணர்களுக்காக விட்ட செய்தி கூறுகின்றது.

இன்னுமொன்று ஆடூரில் 116 வேலி நிலங்களை 108 அந்தணர்களின் பராமரிப்புக்காக விட்டதும், அவர்கள் வேலிக்கு நான்கு கலம் நெல்லாகத் தில்லைப் பெருமானுக்குக் கொடுக்க வேண்டுமென்ற செய்தியும் பிறவும் கூறுகின்றன. இன்னுமொன்று அண்ணாமலை நகருக்கு அளித்தான். பவித்திர மாணிக்கநல்லார் என்ற கொற்றவன்குடியில் அழகிய திருச்சிற்றம்பலமுடையாருக்கு கோயில் நிறுவிய செய்தியாகும்.

கி.பி. 1268ல் பட்டத்திற்கு வந்தவன் மாறவர்மன் குலசேகரன். இவன் இறந்தவுடன் இவனது மக்களான சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய இருவருக்குள்ளும் பட்டத்திற்கு யார் வருவது என்பது பற்றி சச்சரவு மூண்டது. இது சமயம் டில்லியில் சக்கரவர்த்தியாகவிருந்த அல்லாவுதீன் ஒரு பெரும் படையைத் தென்னாட்டிற்கு அனுப்பி இந்து ராஜ்ஜியங்களை அழிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தான். சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் சச்சரவு அதிகப்பட, சுந்தரபாண்டியன் டில்லி சுல்



தானை அணுகித் தன் மாற்றாந்தாய் மகனான வீரபாண்டியனுக்கு விரோதமாகத் தனக்கு உதவி செய்து பட்டம் தனக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதன் பேரில் 1810ம் வருஷம் டில்லி சுல்தானின் தளகர்த்தனாகிய மாலிக்காபூர் ஒருபெரும் படையுடன் மதுரையில் நுழைந்து அங்கிருந்த சோழபாண்டிய சைனியங்களை சின்னாபின்னப்படுத்திவிட்டு மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான். பாண்டியர்கள் இருவரையும் புறக்கணித்துவிட்டு அங்கு ஒரு முகமதிய சேனையை வைத்துக் கொண்டான்.

சோழ பாண்டியர் நாடுகளுக்கு ஏகச் சக்கிராதிபதியாகவிருந்த மாறவர்மன் மக்கள் இருவரும் மாலிக்காபூரின் கத்திக்கும், நயவஞ்சகத்திற்கும் ஆளானார்கள். சோழ பாண்டியரின் ஏகாதிபத்தியம் ஒருவாறு முடிவுற்றதென்று சொல்லலாம். பன்னிரண்டாயிர வருஷங்களாக புராண, இதிகாச வேதாந்த சரித்திர வாயிலாக எல்லை காட்டி விளங்கிய தமிழர் ஆதி பத்தியத்திற்கு அழிவு தேடி அதை அன்னியர்களுக்குக் காட்டிக் கொடுத்த அபகீர்த்திப் பட்டத்தைச் சுந்தரபாண்டியன் சூடிக் கொண்டதோடு அல்லாமல் துருக்கரால் ஏமாற்றவும் பட்டான்.

RangaRakes
tamilnavarasam.com

தமிழ்நாட்டில் மூவேந்தர்கள் ஆட்சி ஒய்ந்துவிட்ட பிறகும் அன்னிய ஆட்சியில் தமிழ்வேந்தர்கள் ஆட்சி புரிந்தனர்

# புதுக்கோட்டை அரசர்

இராஜராஜ குலோத்துங்க சோழன் பீலிவலை என்னும் நாக கன்னிகையை மணந்து அவள் வயிற்றுப் பிள்ளை தொண்டைமான் இளந்திரையனுக்கு முடி சூட்டியது சோழர் சரித்திரத்தில் ஒரு முக்கியமாகும். தொண்டைமான் இளந்திரையன் தன் தந்தை இராஜ ராஜ குலோத்துங்கனால் தனக்கு வழங்கப்பட்ட இராஜ்ஜியத்தை இரு கூறுக்கித் தன் சகோதரனாகிய சோழனுக்குப் பாதி ராஜ்ஜியத்தைக் கொடுத்துத் தனக்குச் சேனாதிபதியாக நியமித்துத் தன் ராஜ்ஜியத்தை 24 கோட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு சிற்றரசனை நியமித்து தொண்டைமான் சக்கரவர்த்தி என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டு கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தான். அது முதல் அவன் பரம்பரையினர்கள் சிறப்பாய் ஆண்டதாகவும், சரித்திரம் கூறுகிறது. இவ்வாறு தோன்றிய இராஜ்யத்தைத் தொண்டை மண்டலம் என வரலாறு விளக்குகிறது.

பிற்பட்ட காலங்களில் சோழ ராஜ்ஜியமும் இதர தமிழ் அரசுகளும் வலுவுற்றபோது தொண்டை நாடு ஒரு குறுநில அரசராக மாறி நீண்ட தொடர்புடையதாகவே இருந்து வந்தமை சரித்திர சம்பிரதாயம். இந்த நிலையில் சந்திர



சேகர பாண்டியனால் வீரசேகர சோழன் தோற்கடிக்கப் பட்ட பிறகு சோழர் ஆட்சி ஒருவாறு முடிவடைந்ததும் பலம் குன்றிய சோழர்கள் சிதைந்து போய் பல்வேறு இடங்களில் ஆண்டார்கள். சோழ ராஜ்ஜியத்தில், குறுநில மன்னராய் ஆண்டு வந்த தொண்டைமான் வம்சத்தவர்கள் விளங்கினர்.

அம்புகோவிலில் தங்கி ஆண்டு கொண்டிருந்த தொண்டைமான் வழியினர் 17-ஆம் நூற்றாண்டிலிருந்து; புதிதாகத் தாம் அமைத்த புதுக்கோட்டைக்குத் தமது தலைநகரை மாற்றிய பிறகு அவர்கள் தலைநகரம் புதுக்கோட்டை என்றும் அரசர்களுக்குப் புதுக்கோட்டை அரசர்கள் என்றும் பெயராகிற்று : அதுமுதற் கொண்டு ஆண்ட அரசர்கள் வருமாறு :

1. இரகுநாதராய தொண்டைமான் 1686—1730
2. விஜயரகுநாதராய தொண்டைமான் 1730—1769
3. இளையரகுநாத தொண்டைமான் 1769—1789
4. இராஜா விஜயரகுநாத தொண்டைமான் பகதூர் 1789—1807
5. இராஜா விஜய ரகுநாதராய தொண்டைமான் பகதூர் 1807—1825
6. ஹிஸ் எக்சலென்சி இராஜா ரகுநாத தொண்டைமான் பகதூர் 1825—1839
7. ஹிஸ் எக்சலென்சி ஸ்ரீபிரகதம்பாதாஸ் இராஜ ராமச்சந்திர தொண்டைமான் பகதூர் 1839—1886
8. ஹிஸ்எக்சலென்சிஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் ஜி. சி. ஐ. இ. 1886—1922
9. விஜய ரகுநாத துரைராஜ தொண்டைமான் 1922—

RangaRakes tamilnavarasam.com

சந்திரசேகர பாண்டியனுக்கும் பிடிபடாமல் அவனுக்குப் பிறகு பின்னால் சோழ பாண்டிய ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிய 'டில்லி சுல்தானுக்கும் அடிமையாகாமல் தனியரசாக விளங்கியோரிவர்களே. புதுக்கோட்டை மன்னர்களுக்கு முற்பட்டவர்கள் அம்பு கோவிலில் தங்கி ஆண்டு கொண்டிருந்த தொண்டைமான் வழியினர் 17ஆம் நூற்றூண்டிலிருந்து தங்களுக்குத் தலைமைத் தளமாக ஒரு கோட்டையைப் புதிதாய் அமைத்து அங்கே வாழ்ந்து வந்தார்கள். சிங்கமங்கலம், கலசமங்கலம் என்னும் தங்கள் பூர்வீகக் கோட்டைகள் அழிந்து போனதால் இவர்கள் புதிய கோட்டை ஒன்று கட்ட வேண்டியதாயிற்று. இக்கோட்டைக்கு வந்த பின்னர் இவர்கள் தொண்டைமான் புதுக்கோட்டை அரசர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மதுரை நாயக்கர், திருவிதாங்கூர், மைசூர், தஞ்சாவூர் அரசர்கள் ஆகிய எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தார்கள். தமிழ் வேந்தர்கள் காலத்திற்குப் பிறகு சோழர்கள் பிரதிநிதியாகத் தனியரசு செலுத்திய புதுக்கோட்டை மன்னரில் முதல்வர் ''இரகுநாதராஜ தொண்டைமான்'' கி. பி. 1686—1730 இவருக்குப் பிறகு பல தொண்டைமான்கள் ஆண்டிருக்கிறார்கள். கடைசியாகப் புதுக்கோட்டையில் அரசு செலுத்தி வந்தவர் மாட்சிமை பொருந்திய விஜயரகுநாத துரைராஜா தொண்டைமான் பகதூர் அவர்கள்.

புதுக்கோட்டை அரசரும் குறுநில மன்னரும் என்னும் அத்தியாயத்தில் தாம் எழுதிய கள்ளர் சரித்திரம் என்னும் ஒப்பற்ற ஆராய்ச்சி நூலில்; தமிழன்னையின் தவப் புதல்வனும், தமிழ் அரசர் வழித் தோன்றலுமான கள்ளர் குலத்திலகம் பேரறிஞர் ந. மு. வேங்கிடசாமி நாட்டார் அவர்கள் புதுக்கோட்டை அரசர்கள் தென் நாட்டில் தூண்டாமணி விளக்காய் முடியும், கொடையும் தாங்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பெரும் புகழை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவ்வரலாறு பூராவையும் எடுத்துக் காட்டுதல்



இயலாது. ஆகையால் அன்னார் சரித்திரத்தில் ஒரு முக்கிய குறிப்பை மாத்திரம் எடுத்துக் காட்டுதல் நன்று.

மாண்புமிக்க ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜ மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் 'ஜி.சி.ஐ.இ. 1886-ல் பட்டத்திற்கு வந்தார். 1912-ல் இவர் பட்டத்திற்கு வந்த 25-வது ஆண்டு விழாப் புதுக்கோட்டையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்போது இவருக்கு ஜி. சி. ஐ.இ. (Grand Commander of the Indian Empire) என்றும் பட்டம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் சூட்டப்பட்டது.

இவ்வரசர் மீது 'இயன்மொழி வாழ்த்து' என்னும் ஓர் அழகிய தமிழ்ப்பிரபந்தம் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் என்னும் புலவரால் இயற்றப் பெற்று மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் சாற்றுக்கவியுடன் வெளிவந்துள்ளது. அதிலே இவ்வேந்தர் பெருமைகளை அடியிற்கண்டவாறு எடுத்துரைக்கப்படுகின்றது.

''தானந்தனியருள் ஞான முதலான
    வுரிய நாயக னுத்தம குணநிதி
பெரிய நாயகி பதம்பிரியா வுளத்தனமு
    னவிலும் விசயரகுநாதன் மகன் மக
னிவனெனக் கன்னனிவனென றுவலுங்
    கரமடிந்திடச் சக்காப்படை விடுத்த
இராமச்சந்திர வேந்தல் சேயென
    ஓராயிரந் தண் கதிரொனு யுதித்தென
அரானவனைய மலனரு ளொருங்குதித்தென
    குராவணி குமரவேள் குவலயத் துதித்தென
பராவருந் தருமம்பாரில் மனைத்தெனச்
    சராசன மதனன் றனிவடி வெடுத்தென
இராச மண்டலத்திலி வற்கிணை யிலையெனச்
    சுராதி ராசன்றொல் குலம் விளங்கத்
தராதலம் விளங்கத் தவநெறி விளங்கப்
    புராதன நான்மறை புவிமிசை விளங்க

ஆவிர்ப் பவித வாசா சிகாமணி''
என்று இங்ஙனம் பலவாறு கூறப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை இராஜ்ஜியம் சிறிதாயிருப்பினும் தமிழ் நாட்டு முடிவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் ஆட்சிக்குப் பிறகு இதுவே தமிழ்நாட்டுக் கடைசி அரசாங்கமாக விளங்கி வந்தது. தமிழ் மொழியைப் புரந்த அம்மன்னர்களைப் போலவே இவர்களும் புரந்து வந்தார்கள். சர் வில்லியம் பிளாக் பர்ன் கூறியபடி புதுக்கோட்டை மன்னர் மிகவும் அதிகாரமுள்ளவராவார். தமது நாட்டிற்குள் குற்றவாளிகளுக்கு எவ்வகைத் தண்டனையையும் விதிக்க உரிமையுள்ளவர். ஹைகோர்ட் போலும் உயர்நீதி மன்றங்களைத் தாம் ஏற்படுத்தி நடத்தும் உரிமை வாய்ந்தவர். ஆங்கில அரசாங்கத்திற்கு ஒரு சிறிதும் இறை செலுத்தாத பெருமை பெற்று இந்திய நாட்டு ஏனை மன்னர்களிலும் சிறந்து விளங்கியவர். இந்த இராச்சியத்தின் பரப்பு 1200 சதுர மைல். இதன் வருட வருமானம் 21 இலட்சம் ரூபாய் ஆகும்.

நம்நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 3—3—1948-ல் State abolition சட்டம் அமுலுக்கு வந்தபோது தமது அரசுரிமையைப் பாரதப் பெரும் அரசுக்கு அது காலை இராஜ்ஜியம் ஆண்டு வந்த மாட்சி மிகு புதுக்கோட்டை மன்னர் பிரான் ஆர். இராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள் வழங்கினார்கள்.

# இராமநாதபுரம் சேதுபதிகள்

## ஆதிச் சேதுபதிகள்

இருக்கு வேதம், புராண இதிகாசங்களில் சேதுபதிகளைப் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. சேதுபந்தனம் செய்து முடித்த இராமச் சந்திரமூர்த்தி இராமேஸ்வரத்தில் இராமலிங்க பூசை செய்து அங்கு தன்னால் உண்டு பண்ணப் பட்ட இராமலிங்க ஆலயத்தைக் கட்டிக் காத்துப் பரிபாலித்துவர ஏற்படுத்தப்பட்டவரே ஆதிச் சேதுபதியாகும். ஆதியில் சேதுபதியாக இராமச்சந்திரமூர்த்தியால் நியமிக்கப்பட்டவர் சாதாரணமானவர் அல்ல. கிழவை நாட்டைத் தொன்று தொட்டு ஆண்டு வந்த நிசாதகத் தலைவன் என்று இராமாயணம் கூறுகிறது. ''நிசாதர்'' என்றால் மனித உருவம் படைத்த தேவர்கள்; வானாட்டவராகும். தேவாசுரர்கள் எப்படி வானாட்டவர்களோ அப்படி அரக்கர்கள் நிசாதகர்கள் பூனாட்டவர்களாகும்.

சேதுபந்தனத்தின் போதும் சிவலிங்க பூசையின் போதும் இராமச்சந்திரமூர்த்திக்கு உதவும் அளவுக்கு விளங்கியிருக்கிறான் நிசாதகத்தலைவன். இவனும் இவன் முன்னோர்களும் கிழவை நாட்டை மிகப் பழைய கால முதல் ஆண்டு வந்திருக்க வேண்டும்.

இராகவன் நிசாதகத் தலைவனுக்கு சேதுபதிப் பட்டங் கட்டி முடிசூட்டினான். இராமலிங்க ஸ்வாமியை, சேதுக் கரையையும் கட்டிக் காத்து வருவதற்கான வரம் கொடுத்து ஆசீர்வதித் தருளியதன் ஞாபகார்த்தமாகத் தன்

RangaRakes
tamilnavarasam.com

குலப்பற்றைக் காட்டும் பொருட்டு ரெகுநாதன் என்ற பட்டமும் கொடுத்தான். ஆகவேதான் ஆதிச் சேதுபதியின் பெயர் ஆதி ரெகுநாத சேதுபதி என விளங்கலாயிற்று. (Sewells List of Antiruiqies roi)ல் ஆதிச் சேதுபதிகளைப் பற்றிய விவரங்கள் கண்டிருக்கின்றன.

சேர, சோழ, பாண்டியர்கள் வரலாறு எப்படி பழைமையாவதோ அப்படியே சேதுபதிகளுமாவர். சேதுபதி அரசர்களைப் பற்றிப் பாடிய புலவர்கள் பாடல்கள்தான் இவர்களின் முற்காலச் சான்றுகளாகக் கிடக்கின்றன. சேதுபதிகள், நாகர், சோழர் பல்லவர், பாண்டியர் முதலான தமிழர்கள் பால் தொடர்பு கொண்டே விளங்கி வந்திருக்கிறார்கள்: ஒவ்வொரு காலங்களில் மேலாதிக்கம் பெற்று விளங்கியிருக்க வேண்டும். ''ஸ்வெல்ஸ்'' அவர்கள் புலப்படுத்தியுள்ள அரசர்கள் பட்டங்கள் விரிவான சிந்தனைக்கு இடமளிக்கும் வகையைக் காட்டுகிறது. ஆராய்ச்சியில் அறியப்படாமல் விட்டுப் போன அரசர்களுமிருக்கலாம், அவர்கள் எத்துணை அதிகமோ அவர்கள் விவரம் தெரிந்திருந்தால் இன்னும் எவ்வளவு சிந்தனைக்கு இடமளிக்குமோ? சேதுநாடும் தமிழும் என்னும் விவரமான ஸ்ரீ இராகவய்யங்கார் அவர்கள் நூல் இது வகையில் ஆராய்ச்சியாளர்கள் கண்டாக வேண்டியதொன்றாகும்:

ஸ்வெல்ஸ் அவர்கள் ஜாபிதாப்படி ஆதிச் சேதுபதிகள்:—

1. ஆதி ரெகுநாத சேதுபதி
2. ஜயதுங்க ரகுநாத சேதுபதி
3. ஆதிவீர ரகுநாத சேதுபதி
4. வரகுண ரகுநாத சேதுபதி
5. குலோத்துங்க சேதுபதி
6. மார்த்தாண்ட பைரவ சேதுபதி



7. சுந்தரபாண்டிய சேதுபதி
8. காங்கேய ரகுநாத சேதுபதி
9. விஜய முத்துராமலிங்க சேதுபதி

(அபிதான சிந்தாமணி பக்கம் 1628)

இவர்கள் நெடுநாளாகவே குறுநில மன்னர்களாகவே இருந்து சேதுவை ஆண்டு; பாண்டியனுக்குப் பல தடவைகளில் பேருதவியாக விளங்கி பெறற்கரிய பட்டங்கள் பெற்றும் விளங்கினார்கள். பாண்டியர்கள் நலிவுற்றதால் பாண்டிய வம்சத்துச் சிற்றரசர்களாகியசேதுபதிகளும் நலிவடைந்தார்கள். அதனால் தலைவர்கள் சிதறுண்டு வாழ்ந்தார்கள். சேதுபதி பட்டத்துக்கு வாரீசானவர் திரந்தலைவர் சடையத்தேவர், அப்போது போகலூர் என்னும் ஊரில் சிற்றரசு ஸ்தாபிதம் செய்து கொண்டு கோட்டையும் கட்டி ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

சேதுபதி மறவர் குல வீரர் சடக்கத்தேவரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் சேதுபதியாக நியமித்து நாட்டில் அமைதியை உண்டு பண்ணவும், சடக்கத்தேவர் தங்கள் வம்ச பரம்பரையாக செய்து வந்து சேதுக்கரை சிவலிங்க பரிபாலனக் கர்த்தாவாக விளங்கவும் செய்தார். இதன்படி சடக்கத்தேவர் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கீர்த்தியோடு விளங்கிய தன் முன்னோர்களைப் போல சேதுபதியாகவிருந்து உலகம் புகழ உத்தமராய் நிர்வாகம் செய்து விளங்கினார் சடக்கத்தேவர் காலம் தொடங்கி இன்று வரை 25 சேதுபதிகள் ஆண்டிருக்கிறார்கள். கடைசியாக சேதுபதிக்கு இராஜாவாக விளங்கியவர் நாகநாத சண்முக ராஜேஸ்வர சேதுபதி மகாராஜா.

| | | |
|---|---|---|
| 1. | சடைக்கத்தேவர் ராமய உடையான் சேதுபதி | 1604—1621 |
| 2. | கூத்தன் சேதுபதி | 1621—1635 |
| 3. | தளவாய் சேதுபதி | 1635—1645 |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 4. | ரகுநாத சேதுபதியாகிய திருமலைச் சேதுபதி | 1645—1670 |
| 5. | ராசசூரிய சேதுபதி | 1·70—1673 |
| 6. | கிழவன் சேதுபதி | 1673—1708 |
| 7. | திருவுடையத்தேவர் சேதுபதி | 1"08—1723 |
| 8. | தண்டத்தேவர் | 1724— |
| 9. | பவானி சங்கரத்தேவர் | 1723—1728 |
| 10. | குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி | 1728— 34 |
| 11. | முத்துக்குமார சேதுபதி | 1734— 47 |
| 12. | இராக்கத்தேவர் | 1747— 48 |
| 18. | செல்லத்தேவர் | 1748— 60 |
| 14. | முத்துக்குமார சேதுபதி | 1760— 97 |
| 15. | ராணி மங்களேஸ்வரி நாச்சியார் | 180?— 12 |
| 16. | அண்ணுசாமி சேதுபதி | 1812— 15 |
| 17. | சிவிணி முத்து வீரராகவ நாச்சியார் | 1815— 29 |
| 18. | இராமசுவாமி சேதுபதி | 1829— |
| 19. | இராணி மங்களேஸ்வரி நாச்சியார் | 1829— 38 |
| 20. | இராணி துரைராஜ் நாச்சியார் | 1837— 45 |
| 21. | இராணி பர்வதவர்த்தினி நாச்சியார் | 1845— 68 |
| 22. | முத்துராமலிங்க சேதுபதி | 1868— 73 |
| 28. | பாஸ்கர சேதுபதி | 1873—1903 |
| 24. | முத்துராமலிங்க சேதுபதி | 1903—1931 |
| 25. | நாகநாத சேதுபதி | 1931— |

அபிதான சிந்தாமணி 1628 Vol. No.



தமிழ் வேந்தர்களுக்குரிய ஈகை, நேர்மை, வீரம், அடைக்கலம் காத்தல் முதலிய அருங்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்று நமது நாட்டில் நெறிதவறுது ஆட்சிபுரிந்து வந்தார்கள். வம்ச பரம்பரையாக தங்கள் முன்ஞேர்கள் போலச் சேது காவலனுக இருந்து இராமேஸ்வரத்தில் ஸ்ரீராமபிராஞல் மங்கலப் படைப்புச் செய்து வைக்கப்பட்ட இராமலிங்கத்தை அகில தேசத்தவர்களும் தரிசித்துப் போவதற்கு அனுகூலங்கள் செய்து வைத்து நித்தியம் வடநாட்டிலிருந்து வந்து தரிசனம் செய்யும் பிராமணர்களுக்கு ஆசீர்வாதம் கொடுத்து அனுப்புகிருர். சேதுக்கரையில் குடிகொண்டிருக்கும் ராமலிங்கத்தைத் தரிசிக்க ராமேஸ்வர யாத்திரை செய்கிறவர்கள் சேது மன்னனைக்கண்டு தரிசிக்கா விட்டால் தங்கள் புண்ணிய பலன் அடைய முடியாது என்பது சமயக் கொள்கை. இவ்வுண்மை வலியுறுத்தும் பொருட்டு இதனடியில் கண்டுள்ள விவரம் பார்க்கவும்.

"The Madras Presidency and the adjacent states" என்னும் புத்தகத்தில் 457-ஆம் பக்கத்தில் கூறப்படும் விருத்தாந்தமும், அத்துடன் திருவனந்தபுரம் மகாராஜா அவர்களின் வாசகமும் காண்க:

"As has already been noted tradition avers that Lord Sri, Rama himself appointed the first Sethupathy to guard the 'Sethu'. Even today It is a religious duty of Pilgrim that visits the Rameswaram temple to pay a visit to the Sethupathy also on his return journey. Melcan, Nelson the Government letter above refered to, Ponnuswamy ,Thevars memorandum and oue of Taylors manuscripts all confirm the belief that the first Sethupathy was appointed by Sri. Rama himself. As regards the importances the pilgrims a Hach to seeing the Sethupathy, we can't do better than quote the very words of His Highness the Maharaja of Travancore to the inhabitants of Ramnad. His Highness of Travancore said:


tamilnavarasam.com

"I have long desired this Pilgrimage to "Sethu" the rout, to which has been sanctified by the divine Rama; and the prospect of immediate fulfilment of that desire cheers my heart. No pilgrimage to 'Sethu', ir is said can he complete without getttng a look at this famous Sethupathy".

— The Madras encyclopedia.
Page 457

மேலும் சேதுபதிகளின் பரம்பரையினர், மூன்று யுகங்களாக அரசு புரிந்து வரும்; புகழும், கீர்த்தியும் நிறைந்த வரலாற்றை சேது சமஸ்தான வித்வான், திருவாளர் இரா. இராகவையங்கார் அவர்கள் தாம் எழுதிய மதிப்பு மிக்க ஆராய்ச்சி நூலாகிய, 'சேதுநாடுந்தமிழும்' என்னும் நூலில் விரிவாக எடுத்துரைக்கின்றார்கள். அவைகள் அனைத்தையும் இங்கே எடுத்துக் காட்டுதல் எளிதன்று. ஆகவே இந்நூலின் முகவுரையில் மஹா, மஹா உபாத்தியாயர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் கூறியிருக்கும் சிலவற்றை மாத்திரம் இங்கே கவனிக்கவும்.

''சேதுவென்பது மிக்கப் புண்ணியஸ்தலமென்று வேத முதலியவெற்றுல் மிகப் பாராட்டப் பெற்று ஒப்புயர்வற்ற சிறப்பு வாய்ந்தது. சேது நாடோ சேதுவைத் தன்பால் உடையதாய் இராமன் முதலிய அவதார புருஷர்களும் பிற பெரியோர்களும் தங்கப் பெற்ற பெருமையிலுள்ளது. அந்நாட்டின் தலைவர்களாகிய சேதுபதிகளோ பண்டைக் காலந்தொட்டு மூன்று காலும் பலவகைத் தருமங்களையியற்றித் தென்மொழி வடமொழிகளையும் ஆதரித்து வருபவர்கள். தமிழ் மொழியோ ஆதிகாலந்தொட்டு தெய்வத் தன்மை வாய்ந்தது, ஒருவகையாலும் தளர்ச்சியடையாத ஏற்றமுடையது. இந்த அரிய கருத்துக்களை நன்கு விளக்கி எழுதுவதற்கு முன்வந்த நூலாசிரியரின் அறப்பயனைப் பாராட்டுகிறேன்.



சேதுவின் எல்லையும், சேதுநாடு முதன்மை வாய்ந்ததென்பதும்; சேது வேந்தர்கள் பழந்தமிழ்க் குடிகளென்பதும்; அவர்கள் சேதுவின் பாதுகாப்பிற்காக இராமனால் நியமிக்கப் பெற்ற ஒரு தலைவருடைய வழித்தோன்றல்கள் என்பதும்; அவர்களுடைய தெய்வ பக்தியும், அவர்கள் செய்து வந்த ஆலய பரிபாலனம், சைவாதீன பரிபாலனம் முதலிய தருமங்களும்; சேது நாடே செம்பி நாடாயிற்றென்பது அந்நாட்டின் தமிழ் மொழி வளர்ச்சியுறுதற்குக் காரணமும்; நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பாலார் கல்விப் பயிற்சியுடையார் என்பதும்; திருவாசகத்தில் தசாங்கத்தில் இறைவனுடைய ஊர் என்று பாராட்டப்பட்ட திருவுத்திரகோசமங்கைக்கு அத்திருநாமம் வந்ததற்கு காரணம் அம்பிகையின் வினாக்களின் விடையாகிய ஞான நூல்களை உடைமையால் என்பது ''அருக்கிய புல்லிற் கருணையங் கடனுயின்றனன்'' என்று கம்பரால் பாராட்டப் பெற்ற திருப்புல்லாணி பெருமானுடைய திருவுருவம் தென்மொழி வடமொழிகளின் வடிவமென்பதும்; சங்கப் புலவர்களிற் சிலர், பிற்காலத்து நூலாசிரியர்களிற் சிலர், உரையாசிரியர்களிற் சிலர், ஸ்ரீ கவிராஜ பண்டிதர் முதலிய சைவப் பெரியாரிற் சிலர், ஸ்ரீ மணவாளமாமுனிவர் முதலிய வைஷ்ணவ ஆசாரியார்களிற் சிலர் அவதரித்த இடங்கள் அந்நாட்டுள் இன்னதென்பதும்; சேது வேந்தர்பால் தங்கள் புலமையைப் புலப்படுத்தி ஊர்கள் முதலிய பரிசுப் பொருட்கள் பெற்றுப் பரம்பரையாக அனுபவித்துக் கொண்டு இன்புற்றிருக்கும் புலவர்களின் பரம்பரைகள் இன்னவென்பதும்; அவர்களிற் பட்டம் பெற்றவரின்னாரென்பதும், மகமதியர், முதலியோர்களுள் சிறந்த தமிழ்க் கவிகள் இன்னார்; தமிழை ஆதரித்துப் புகழ்பெற்ற பிரபுக்கள் இன்னாரென்பதும் இவை போன்ற பிற அரிய செய்திகளும் இந்நூலில் தக்க ஆதாரத்துடன் முறையே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

எ-ஆம் பக்கத்தில் சேதுபதிகளை ஸ்ரீ ராமநாதமூர்த்தியாகவும், திருமாலாகவும் உபசரித்தல் மரபென்பதைக் கார

RangaRakes
tamilnavarasam.com

ணங் காட்டி விளக்கியிருத்தலும் பிறவும் ஐயங்காரவர்களுடைய நுண்ணிய தேர்ச்சி வன்மையை விளக்குகின்றன.

தமிழ் நூல்கள் பல வெளி வருவதற்குக் காரணம் சேது வேந்தர்களின் பொருளே என்று ஐயங்காரவர்கள் இந் நூலில் ஓர் இடத்தில் எழுதியிருக்கிறார்கள். அதற்கு உதாரணம் பல இருத்தல் கூடும்; ஆனாலும் யான் வெளியிட்டு வரும் தமிழ் நூல்கள் பல வருஷங்களாக இந்த மகாராஜா அவர்களின் பொருளுதவியைப் பெற்றிருத்தல் அவ்வந் நூலின் முகவுரையில் நன்கு விளங்குமென்று அன்பர்களுக்கு தெரிவிக்கின்றேன். சேது வேந்தர்களின் கல்வி முதலிய சிறந்த குணங்களைப் பற்றியும், அவர்கள் தமிழ் மொழியினிடத்து சிறந்த அபிமானம் வைத்து ஆதரித்து வருதலைப் பற்றியும் ஐயங்காரவர்கள் நன்றியறிவுடன் எழுதியிருக்கும் ஒவ்வொன்றும் உண்மையானதே; பலவற்றை நான் நேரில் கண்டு இன்புற்றதுண்டு.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இதுபோன்ற பல ஆராய்ச்சி நூல்களை ஐயங்காரவர்களைக் கொண்டும் பிற பண்டிதர்களைக் கொண்டும் எழுதுவித்து வெளியிடுவார்களாயின் தமிழ் நாட்டிற்குப் பேருபகாரமாக இருக்கும் என்பது அறிஞர்கள் கருத்து.

இங்ஙனம்,

—உ. வே. சாமிநாதய்யர்
மகா மகா உபாத்தியாயர்.

இவ்வாறு சேதுபதிகளுக்கும் பாண்டியர்களுக்கும் தொடர்பு காண்கிறதையும், பாண்டியர்களின் பிரதிநிதியாக சேதுபதிகள் சமீப காலம் வரை நாடாண்டு வந்தார்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

## சிவகங்கை ராஜாக்கள்

கி.பி. 1710ல் இரகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி காலமானார். பிறகு அவருடைய மருமகன் விஜய ரெகு



நாத சேதுபதி கி பி. 1711 முதல் 1725 இராமநாதரபும் மன்னரானார். இம்மன்னர் தங்கை இளவரசி அகிலாண்டேஸ்வரி நாச்சியாரை, நாலு கோட்டைப் பாளையக்காரர் சசிவர்ணத்தேவர் மணந்திருந்தார். தொண்டித் துறைமுக காவல் சசிவர்ணத் தேவருக்கு ஒப்படைக்கப்பட்டது. பாண்டி மண்டலம் முழுதும் சசிவர்ணத் தேவர் புகழ் பரவுமளவுக்கு சசிவர்ணத்தேவர் நடந்து கொண்டார். கி.பி. 1725ல் விஜய ரெகுநாத சேதுபதி காலமானார். அவருக்குப் பின் அவரது மருமகன் சுந்தரேஸ்வர சேதுபதி பட்டமாண்டார். அப்போது கிழவன் சேதுபதியின் காமக்கிழத்தி வழி வந்த மகன் பவானி சங்கரத்தேவன் சுந்தரேஸ்வர சேதுபதியுடன் போரிட்டுக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். ராஜா பவானி சங்கர சேதுபதி என்ற பட்டத்துடன் நாடாளத் தொடங்கினான். இவ்வரசன் ஆண்ட காலம் கி.பி. 1726—1729 வரை ஆகும்.

பவானி சங்கரனுக்கும், நாலு கோட்டைப் பாளையக்காரர் ஆகிய இல்வரசியின் மாப்பிள்ளை சசிவர்ணத் தேவருக்கும் பகைமை மூண்டது. சசிவர்ணத் தேவருக்கு நாட்டில் வளர்ந்து வரும் செல்வாக்கைக் கண்டு, ராஜாவுக்குப் பொறுமை ஏற்பட்டதே காரணமாகும். சசிவர்ணத் தேவருக்கு எவ்வளவோ தொல்லைகள் கொடுத்துக் கடைசியாக நாட்டை விட்டு வெளியேறும்படியாகச் செய்யப்பட்டது.

நாடு, நகர், இழந்து படாத பாடெல்லாம் பட்டு சசிவர்ணத்தேவர் தஞ்சை வந்தடைந்தார். "குடை நிழலிலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்" அல்லவா. அப்படி வாழ்ந்து வரும் நாளில் தஞ்சை மன்னன் மராட்டியச் சந்திரபதியின் முன்னிலையில் வேங்கைப் புலியுடன் சமர் செய்ய வேண்டியதேற்பட்டது. வெறும் கையுடன் வேங்கை மேல் பாய்ந்து அடங்கொண்டு தாக்கித் துடுக்காக வேங்கையைப் புரட்டியடித்து வெற்றி கொண்டு ராஜசபையோர் மகிழ்ச்சி ஆரவாரம்

RangaRakes

tamilnavarasam.com

செய்யும்படி செய்தார். சத்திரபதி மூக்கில் விரல் வைக்கும்படியாகியது. சசிவர்ணத் தேவரின் கட்டழகும், சாமுத்திரிகா லக்ஷணமும், துடுக்கான நடையும் நிதானப் பார்வையும் கண்ட மன்னன் சசிவர்ணத்தைத் தன் மெய்காப்பாளராக நியமித்துக் கொண்டான்,

தஞ்சையில் சசிவர்ணத் தேவருக்கு கட்டயத்தேவர் என்பவரோடு நட்புக் கொள்ள நேர்ந்தது. கட்டயத்தேவர் என்பவர் சேதுநாட்டைச் சேர்ந்தவர் சேதுபதிக்கு உறவினர். பவானி சங்கரனால் நாடு கடத்தப்பட்டுத் தஞ்சையில் தஞ்சம் புகுந்தவர் என்பவை தெரியவந்தது. எனவே இருவரும் ஒன்று சேர்ந்தவர்.

தஞ்சை மன்னரின் உறவினர் ஒருவரும்; மராட்டியத் தளபதி ஒருவனுமாகச் சேர்ந்து மன்னனைக் கொலை செய்யச் சதி செய்தார்கள். அது காலை தேவர் சதியை முறியடித்து மன்னனைக் காப்பாற்றினார். தன்னுயிர் காத்த சசிவர்ணரிடத்தில் அளவிலா அன்பு கொண்ட தஞ்சையரசர் ''தேவரே! தஞ்சைக்குத் தாங்கள் வரக் காரணம் யாது?'' என்று வினவினார். இதுதான் தனக்கேற்ற சந்தர்ப்பம் என்று கருதிய சசிவர்ணத்தேவர் தன் சோக வரலாற்றை எடுத்துச் சொன்னார். பவானி சங்கரனால் சேது நாட்டில் தான் இழந்த செல்வங்களையும் உரிமைகளையும் மீட்கத் தஞ்சை மன்னரின் படைபலத்தைக் கோரினார். அதன்படி மன்னருடன் சசிவர்ணத்தேவரும் கட்டயத்தேவரும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். வெற்றிக்குப் பிறகு நாட்டின் வடபகுதியை மராட்டியருக்கு விட்டுக் கொடுப்பதே உடன்பாட்டின் முக்கியம்.

உடன்பாட்டை மன்னர் ஏற்றார். சசிவர்ணர் தலைமையில் மராட்டியப் பெரும்படை சேதுநாட்டின் மீது போர் தொடுத்தது. இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள ஓரியூரில் சசிவாணர் படையும், பவானிசங்கர் படையும் மோதின. இப்போரில் சசிவர்ணர் வாகை சூடினார். பவானி சங்கர் கைதியாகிக் கொல்லப்பட்டார்.



உடன்பாட்டின்படி சேது நாட்டின் செழிப்பான பகுதியாகிய பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள நாட்டைத் தஞ்சை மன்னர் தன்னுரிமையாக்கிக் கொண்டார். எஞ்சிய சேது நாட்டை ஐந்து பாகங்களாகப் பிரித்தார். இவற்றுள் கட்டயத்தேவருக்கு மூன்று பாகங்கள் வழங்கப்பட்டன. அவர் இராமநாதபுரத்தில் புதிய மன்னராக்கப்பட்டார். மீதமுள்ள இரண்டு பாகங்கள் சசிவர்ணருக்கு வழங்கப்பட்டன. ''முத்து விஜயரகுநாத கவுரிவல்லப சசிவர்ணராஜா'' என்னும் பரம்பரை பட்டத்தையும் சசிவர்ணருக்குத் தஞ்சையரசர் வழங்கிச் சிறப்பித்தார். இவர் பட்டத்திற்கு வந்தவுடன் கட்டியதுதான் இப்போது விளங்கும் சிவகங்கை நகரம். சிவகங்கை ராஜ்யத்தைத் தோற்றுவித்தவரும் இவரே.

சீரும் சிறப்புமுடைய சேதுநாடு சிதைவுண்டு மிகவும் செழிப்பான பூமியை தஞ்சைக்கு விட்டுக் கொடுத்ததோடல்லாமல் எஞ்சியதையும் இருகூறாக்கித் தன்னினுள் தனியாட்சியாகச் சிவகங்கைச் சீமையையும் உண்டு பண்ணிய நிலையை இது காலம் கண்டது.

| | | |
|---|---|---|
| 1. | பெருவீரர் சசிவர்ண ராஜா | 7160 வரை |
| 2. | கவுரி வல்லபமுத்து வடுகநாத ராஜா | 1750 முதல் 1777 வரை |
| 3. | கவுரி வல்லப ராணி வேலு நாச்சியார் | 1777 முதல் 1760 ,, |
| 4. | கவுரி வல்லப ராணி வேலு நாச்சியார் | 1790 — 1793 ,, |
| 5. | கவுரி வல்லப வேங்கை பெரியன உடையண ராஜா | 1793 — 1801 ,, |
| 6. | கவுரி வல்லப உடையண ராஜா | 1801 — 1829 ,, |
| 7. | கவுரி வல்லப முத்து வடுகநாத ராஜா | 1829 — 1831 ,, |
| 8. | கவுரி வல்லப போத குருசாமி ராஜா | 1831 — 1841 ,, |

RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 9. | கவுரி வல்லப உடையண ராஜா | 1841 — 1848 ,, |
| 10. | கவுரி வல்லப போத குருசாமி ராஜா | 1848 — 1863 ,, |
| 11. | கவுரி வல்லப ராணி காதம நாச்சியார் | 1863 — 1877 ,, |
| 12. | கவுரி வல்லப முத்து வடுக நாத ராஜா | 1877 — (7 மாதங்கள் |
| 13. | கவுரி வல்லப துரைசிங்க ராஜா | 1878 — 1883 ,, |
| 14. | கவுரி வல்லப உடையண ராஜா | 1883 — 1898 ,, |
| 15. | கவுரி வல்லப துரைசிங்க ராஜா | 1898 — 1941 ,, |
| 16. | கவுரி வல்லப சண்முக ராஜா | 1941 — 1963 ,, |

## கேரள அரசர்

சேரர்கள் மிகவும் போற்றத்தக்க முறையில் அரசு செலுத்தி நாடெங்கும் நலம்பெற ஆண்டுவந்தார்கள். இவர்கள் வம்சத்தில் கி.பி. 9-ஆவது நூற்றுண்டில் ஆட்சி செலுத்திய சேரன் பெருமான் முடி துறந்து தன் ராஜ்ஜியத்தைத் தன் மகள் வாரிசில் மருமகனுகிய திருவிதாங்கூர் குறுநில மன்னனுக்கு கொடுத்துவிட்டு மகமதியர் யாத்திரை ஸ்தலமாகிய மக்காவில் போய் தங்கியிருந்து அங்கே உயிர் துறந்தார். அத்துடன் சேரர் அரசு மருமக்கள் தாயமாக மாறியது. அத்துடன் சேரமான் பெருமானின் மருமகனும், திருவிதாங்கூர் குறுநில மன்னனுமாகிய ஒருவன் சேர நாட்டுக்கு வேந்தன் ஆனான். அன்று முதல் இன்று வரை திருவிதாங்கூர் மன்னர்களே சேர நாட்டை ஆண்டு வருகிறார்கள். கடைசியாக சேர நாட்டை ஆண்டு வந்த மகாராஜாவின் பெயர் மேன்மை தாங்கிய சித்திரைத் திருநாள் மகாராஜா. இவர் மகாத்மா காந்தியடிகளின்



கோட்பாட்டிற்கிணங்க தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்குத் தமது ராஜ்ஜியத்திலுள்ள ஆலயங்களைத் திறந்து யாவரும் சமமாக இறைவனை வழிபடும் படி சட்டம் பிறப்பித்தார். இச்செயல் பழமையான இந்து சமுதாயத்தின் சம்பிரதாயங்களில் இப்போதைய காலப்போக்கிற்குத் தகுந்தாற்போல் அத்தியாவசியமாக திருத்தி அமைக்கப்பட வேண்டியவற்றுள் ஒன்றாகும். இவ்வரிய சீர்திருத்தத்தைச் செய்த மாட்சிமை தாங்கிய இம் மகாராஜாவை உலகமெல்லாம் பாராட்டுகிறது.

## மூவேந்தர்களும் தேவர்கள்

மூவேந்தர்களும் ஒரே இனம் ஒரே ரத்தக் கலப்புடையவர்கள் கொள்கைகள் குணதோசங்களில் கூட எப்படி ஒன்று பட்டிருந்தனர் என்பனவற்றைக் கவனிக்கலாம்.

வேதம், புராணம், இதிகாசம், சரித்திரம் ஆகியவைகளின் ஆதாரங்களை வைத்து ஆராயுமிடத்து; சேரர்கள் அக்கினி குலமென்றும் சோழர்கள் சூரிய குலமென்றும், பாண்டியர்கள் சந்திர குலமென்றும் விளங்குகின்றது. அக்கினி, சூரியன், சந்திரன் ஆகியவர் — தேவர்கள் முழு முதற் கடவுளின் அம்சங்கள், அக்கினி பகவான். சூரிய பகவான், சந்திர பகவான் என்பதிலிருந்து தெய்வ அம்சம் என்பது தெளிவு எனவே மூவேந்தர்களும் தங்கள் குலத்தால் தெய்வக் குலம் அதாவது தேவர் குலம் இனத்தில் ஒன்று பட்டுள்ளார்கள். தேவர்களுக்கு அதிபன் தெய்வேந்திரன், எனவே மூவேந்தர்கள் ''தேவர் குலமென்று'' தொன்று தொட்டு விளங்கி வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாகத் தமிழ் வேந்தர்கள் இந்திர விழாக் கொண்டாடி வந்திருக்கின்றனர் என்பதை சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

தெய்வத் தொண்டையே திருநாட்டுத் தொண்டாகக் கொண்டு அரசு புரிந்திருக்கிறார்கள் என்பது சொல்லத் தேவையில்லை. தமிழ் மன்னர்கள் கட்டிக் காத்த ஆலயங்களும் தர்ம பரிபாலனச் சமய வழி பாடுகளும் தேவாலயங்

RangaRakes
tamilnavarasam.com

களும் சுடரொளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற தென்றால் அதற்கு மூல காரணம் தமிழ் மன்னர்கள் காவலர் களாக இருந்தமையேயாகும். ஆகவே தான் தமிழ் மன்னர் கள் மக்களால் தெய்வமாகப் பாவிக்கப்பட்டனர். மன்னர் கள் ''மால்'' என அழைக்கப்பட்டனர். தாங்கள் வழிபடு தெய்வங்களின் காரணமாகவே தமிழ் மன்னர்கள் தேவர் எனப் பட்டம் தாங்கினர் என்றும் தெரிய வருகிறது.

தமிழ் மன்னர்கள் மூவரும் இனத்தால் ஒன்றேயானு லும், இட வேறுபாட்டின் காரணமாக; சேர, சோழ, பாண்டியர் எனவும் தெய்வ வழிபாட்டின் காரண மாக அக்கினி குலம், சூரிய குலம், சந்திர குலம் எனவும் விளங்கலாயிற்று. இவர்கள் நாடு தெய்வத் திருநாடு; இவர்கள் மொழி தெய்வத் தமிழ் இவர்கள் ஆட்சி தெய்வப் பிரதிநிதி யாட்சி. எனவே தமிழ் மன்னர் கள் யாவர்க்கும் ஒருவனே தேவன் ஒன்றே குலம் :— தமிழ்க் குலம் தேவர் இனம். இனி இவர்கள் தனி வாழ்க்கையில் எப்படி கூடி வாழ்ந்தார்கள் என்பதைக் கவனிப்போம்.

எதிரிகளை மடக்கியடிப்பதில் ஒன்று பட்டு நின்றனர்:—

1. வடவர்களோடு நடந்த சண்டைகள்
2. கொங்குராஜாக்களோடு நடந்த சண்டை
3. பாரியுடன் செய்த சண்டை
4. களப்பிரர்களை எதிரியாகப் பாவித்து தனித்தனி யாக எதிர்த்துத் தோற்றனர். பின் ஒன்று சேர்ந்து களப் பிரர்களைச் சண்டை செய்து வென்றனர்.

பத்தினித் தெய்வம் கண்ணகிக்குக் கோவில் கட்டி குட முழுக்குச் செய்து விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

சடையப்பவள்ளலுடன் மூவரும் சேர்ந்து விருந் துண்டனர்.

# கோள்வினை கொடுப்பனை மூவேந்தர்களின் திருமண உறவு

Ref: சேர நாடுந்தமிழும்—

சேர குலமாகிய வானத்தில் செங்கதிரோன் என விளங் கிய செங்குட்டுவன் வேந்தனது தாயார் ஒரு சோழ மன்னன் மகள். அவள் பெயர் 'நற்சோணை' இவள் வரலாற்றுச் சிறப் புடையவள்.

கி.பி. 892-ல் பட்டம் பெற்ற 2-ம் வரகுண பாண்டிய னுடைய தாயார் ஒரு சோழன் மகள். இவ்வுண்மை திருச்சி ராப்பள்ளிச் சாசனத்தில் வரும் 'சோம சூரியாந்வய துவய குல திலகாலங் காரரான பாண்டிய ராஜர்! வரகுணத் தேவர்' என்னும் தொடரால் காண்க. ஆதித்த சோழனு டைய மகனாகிய பராந்தகசோழன் என்பவன் கி.பி. 907 முதல் 946 வரை ஆண்டான். இவனுடைய பட்டத்தரசி ஒரு கேரள வேந்தன் மகள்.

கி.பி. 971-ல் இரண்டாம்பராந்தகன் சோழச் சக்கர வர்த்தியானான். இவனுக்குச் சந்திர சோழன் என்ற பெயரு முண்டு. இவன் மனைவி ஒரு கேரள ராஜன் மகள். அவள் பெயர் ''வானவன் மாதேவி''

கி. பி. 1164—1167 வரை வேணாட்டை ஆண்டு வந்த வன் ஸ்ரீ கேரளவர்மன் II. இவன் காலத்தில் பாண்டிய

RangaRakes tamilnavarasam.com

மன்னனாக விளங்கியவன் மாறவர்மன் ஸ்ரீ வல்லபன் ஆவான். இவன் வள்ளியூரைத் தலைநகராகக் கொண்டு கீழ் வேம்பனாடு மேல் வேம்பநாடு என்பவைகளை ஆண்டான். இம்மாறன் ஸ்ரீ வீரகேரளவர்மன் தம்பியும், 1173-ல் அரசு கட்டிலேறியவனுமான ஸ்ரீ வீர உதயமார்த்தாண்டன் என்னும் சேரவேந்தனது மகளை மணஞ்செய்தான். கி.பி. 1266-ல் இரவிவர்மன் கொல்லத்திலிருந்து ஆண்டு வந்தான். இவன் தந்தையின் பெயர் 'ஜயஸிம்ஹன்' இரவிவர்மனது மனைவி ஒரு பாண்டிய வேந்தன் மகள்.

திருஞானசம்பந்தர் முயற்சியால், சைவமதத்தைத் தழுவிய கூன்பாண்டியன் மனைவி, மங்கையற்கரசி ஒரு சோழ அரசன் மகள்.

Ref-மூவரசர் குல விளக்கம் Page. 83 : சேரன் ஆதன் II இவன் மனைவி கரிகால் சோழன் மகள். அவள் வயிற்றுப் பிள்ளைகள் தான் செங்குட்டுவன், இளங்கோவடிகள்.

# மூவேந்தர் பட்டங்கள் முக்குலப்பட்டங்கள் தொடர்பு விளக்கம்

## சோழ பாண்டிய சேர வழித் தோன்றிய கள்ளர் மறவர் அகமுடையர்

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் தமிழ் அரசர்கள் வீழ்ச்சியுற்றார்கள். தமிழ்நாடு அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டது, ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி புரிந்து உலகுள்ள மட்டும் மங்காத கீர்த்தியோடு அழியாப் புகழுடம்பு பெற்று விளங்கும் நூற்றுக்கணக்கான பண்டைத் தமிழ் மன்னர்களைத் தம்மில் கொண்ட தமிழர் சமூகத்தார் இப்போது எந்நிலையில் இருக்கின்றார்கள்? இவர்களுக்கும் இன்னோர் வம்சத்துத் தமிழ் வேந்தர்களுக்கும் உள்ள தொடர்பு யாது? என்பவைகளை ஆராய்வோம்.

'தமிழ் வேந்தர்கள் தமிழகத்தை மும்மண்டலங்களாகப் பிரித்து ஆண்டு வந்திருக்கிறார்கள் என்று முன்னமே கூறப்பட்டுள்ளது. பின்பு தொண்டை மண்டலமும் கொங்கு மண்டலமும் உண்டாயின. ஒவ்வொரு மண்டலாதிபதியும் தத்தம் மண்டலங்களை வளநாடு; கோட்டம், கூற்றம் என்னும் பெயர்களான உட்பிரிவுகள் செய்து அரசு செய்து வந்தார்கள் இதன்படி பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு கூற்றம், பல கூற்றங்கள் சேர்ந்தது ஒரு கோட்டம்; பல கோட்டங்கள் சேர்ந்தது ஒரு நாடு; பல நாடுகளின் தலைமை

RangaRakes
tamilnavarasam.com

ஸ்தானம் வளநாடு ஆகும். ஆகவே ஒவ்வொரு பிரிவிற்கும் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் முறையே குறுநில மன்னர்களாகவும், வள்ளல்களாகவும் தலைவர்களாகவும், பாது காவலர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் அரச வம்சத்திற்குரிய பெயர்களையும், பட்டங்களையும் பூண்டிருக்கின்றனர்.

நாடுகளாகப் பிரிக்கப்பட்டு இன்னோர்கள் ஆண்டமைக்கு ஆதாரமாக; இடைக்கழி நாடு, ஏறுமா நாடு, கோனாடு, பறம்பு நாடு, மலையமானாடு, மழவர் நாடு, மாறோக்க நாடு, முக்காவ நாடு பல்குன்றக் கோட்டம், குண்டூர்க் கூற்றம், மிழலைக்கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் என்னும் பெயர்கள் சங்கநூல் செய்யுட்களில் காணப்படுகின்றன.

பிற்பட்ட தமிழ் நூல்களிலும் நாட்டு வழக்குகள் பயின்றுள்ளன. சைவ சமயக்குரவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தேவர் திருநாட்டுத் தொகையில் (1) மருகல் நாடு (2) கொண்டல்நாடு (3) குறுக்கைநாடு (4) நாங்கூர் நாடு (5) நறையூர் நாடு (6) மிழலைநாடு (7) வெண்ணிநாடு (8) பொன்னூர்நாடு (6) புரிசைநாடு (10) வேணூர்நாடு (11) விளத்தூர்நாடு (12) வெண்ணிக்கூற்றம் என்னும் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றிலுள்ள ஊர்களில் ஒரே ஒன்றின் பெயரை கூறியுள்ளார்.

தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகவும் 79 நாடுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தது. 'நாலாறு கோட்டத்துப் புலியூர்க்கோட்டம்'' கோட்ட மோரிருமானென்கு கூறு நாடேழு பத்தொன்பான்'' என்பன காண்க. 24 கோட்டங்களாவன:— (1) ஆமூல் (2) இளங்காடு (3) காடு (4) ஈத்தூர் (5) ஊற்றுக்காடு (6) எயில் (7) கடிகை (8) காவியூர் (9) களத்தூர் (10) குன்றபத்திரம் (11) சிறுகரை (12)செங்காடு (13) செந்திருக்கை (14) செம்பூர் (15) தாமல் [16] படுவூர் (17) பல்குன்றம் (18) பழல் (19) புலியூர் (20) பேயூர் (21) மணையில் (22) வெண்குன்றம் (23) வேங்கடம் (24) வேணூர் என்பன ஒவ்வொன்றன் பின்னும் கோட்டம் என்பதை சேர்த்துக் கொள்க.



இவ்வாறாகப்பிரிக்கப்பட்ட நாட்டின் பல பாகங்களுக்கும் குறுநில மன்னர்களையும், வள்ளல்களையும், தலைவர்களையும், பாது காவலர்களையும், ராஜப் பிரதிநிதிகளாகத் தகுந்தவாறு அமைத்துத் தமது நிர்வாகத்தில் (1) மந்திரி (2) பிரதானி (3) தளகர்த்தன் அல்லது சேனாதிபதி (4) இராயசக்காரன் அல்லது அந்தரங்க காரியதரிசி (5) கணக்கன் (6) ஸ்தானாபதி என்ற இவர்கள் போன்ற ஆயிரக்கணக்கான நியமன உத்தியோகஸ்தர்களையும் நியமித்து இருந்ததாகத் தெரிகிறது. இவ்வபிப்பிராயத்தை வலியுறுத்தும் ''மிஸ்டர் வின்செண்ட் ஸ்மித்'' அவர்களின் ஆராய்ச்சி கவனிக்கத்தக்கது.

'மிஸ்டர் வின்செண்ட்ஸ்மித்' தாம் எழுதிய இந்து தேச சரிதையில் சேர சோழ பாண்டியர் அரசாட்சி இருந்து வருங் காலத்தில் (120) நூற்றிருபத்துக்கு மேற்பட்ட தலைவர்கள் தேசத்தின் பல்வேறு பகுதிகளைத் தங்களின் சுவாதீன அரசாங்க உரிமையுடன் (குறுநில மன்னராய்) ஆண்டதாயும் அவர்கட்குள்ளே நிகழுஞ் சண்டைகளில், தைரியம், அடங்காமை, சூரத்தன்மை, சூறையாடுதல், போரை விரும்பும் பழக்கங்கள் முதலியகுணங்கள் காணப்படுகின்றனவென்றும் இவர்களே பூர்வீகக் குடிகளான கள்ளர், மறவர், அகமுடையர்களெனவும் இவர்களே பல்லவ ஜாதியின் ஒரு பிரிவினரென்றும் கூறுகிறார்.

மகா வம்சம் என்னும் சிங்களச் சரிதையில் ஏழு தலைவர்கள் (தமிழர்கள்) இலங்கைக்கு எதிர் கரையிலிருந்து கொண்டு 11-ஆவது நூற்றாண்டில் மூன்று தடவைகளில் இலங்கைமேல்படையெடுத்தனரென்றும் இவர்கள் கீர்த்தி மிக்க பாண்டிய நாட்டுக் குறுநில மன்னர்களாகிய மறவர்கள் என்றும் புலப்படுகிறது. இவ்வுண்மையை இராஜராஜ சோழ தேவரின் கி.பி. 1059-ம் வருஷத்திய இலங்கைப்



RangaRakes
tamilnavarasam.com

படையெடுப்பைப்பற்றிக் கூறும் இந்து தேச சரித்திரம் வலியுறுத்துகிறது.

நூற்றுக் கணக்கான குறுநில மன்னர்களையும் ஆயிரக் கணக்கான வள்ளல்களையும், லட்சக்கணக்கான தலைவர்களையும் இதர எண்ணிறந்த மந்திரி பிரதானி முதலிய தளகர்த்தர்களையும் தமிழ் வேந்தர்கள் தமது சமூகத்திலிருந்தே அமைத்திருந்தார்கள் அல்லது அப்படி அமைக்கப்பட்ட வர்க்கத்தினரே பிற்காலத்தில் அரசர் மரபினராக ஆயினர் என்பது உண்மை. இது தற்கால அரசியல் நிலைகொண்டு முற்காலத்தைச் சிறிது சரித்திர ஞானமுடையவர் ஆராய்ந்து பார்த்தால் வெள்ளிடை மலை என விளங்கும். எது எப்படியிருப்பினும் இத்தகையோர் அரசருடைய குடும்பத்தினர்களும் வம்சத்தார்களும் ஆக அமைந்து இருப்பது இயற்கையே. உலக சரித்திரம் இவ்வுண்மைக்கு மாறாமல் இருப்பதுவே நமக்கு ஒரு சாட்சியமாகும்.

மேலும் இதைக் குறித்துத் தென்னிந்தியச் சாதி வரலாறு என்னும் ஆங்கில நூலில் தர்ஸ்டன் என்பார் அடியில் கண்டவாறு கூறியதிலிருந்து தன்னரசுத் தலைவர்களிருந்தமையும் புலனாகிறது.

Ref. Thurstan Page. 57

“இவர்கள் தஞ்சையில் இருந்து மதுரைப் பிராந்தியத்தில் குடியேறிய பிறகு ஊர்களையும் நாடுகளையும் அமைத்து கள்ளர்கள் தங்களுக்கே சுவாதீனமாகத் தங்களுடைய நாட்டு அமைப்பை வகுத்துத் தன்னரசு நாடுகள் ஸ்தாபிதம் செய்து கொண்டு தங்கள் தலைவர்களைக் கொண்டே நாடுகளை ஆட்சி புரிந்து வந்தமை புலனாகிறது.”

இம் மரபினரின் தேக திடவீர வைராக்கியத்தைப் பற்றி பழைய நூலோர் சித்தரித்திருப்பது அடியில் கண்டவாறு:—

“முறுக்கமைந்த மீசைகள் மானின் திருக்கமைந்த கொம்பை ஒத்திருக்கும் தோற்றத்தினராய்; வலிமை



பொருந்திய வில் நாணிலிருந்து எழும்பும் டங்கார ஓசையினராய் கம்பீரத்தை உண்டாக்கும் இரட்டை முரசுகளின் பேரொலியை முழக்குபவராய், கச்சையும், வாளும், கட்டிச் செருகிய இடுப்பினராய்; கூர்மை பொருந்திய அம்பைக் கோர்த்து, ஏறிடுங் குறியிலே கருத்து வைத்துத் திரியுங்கை வில்லினராய், புலி போலும் பார்வையையுடையவராய்; அஞ்சாத தறுகண்மை அமையப் பெற்றவராய்; பகைவர் மார்பில் தங்கள் அம்பு பட்டுப் பதைபதைப்பதைக் காணுதலில் மிக்க வேட்கையுடையவராய்; தமிழ் நாடெங்கும் பரந்துறைந்தனர்.

பிறவியில் தமிழர் என்னும் ஒரே வர்க்கத்தினர் ஆகிய இம்மக்கள் மூன்று பிரிவாக தமிழகத்தில் பூகோள சாஸ்திர மர்மங்களின் இயல்புக்கிணங்கப் பிரிந்து ஆண்டு வந்தமையின்; சேர, சோழ, பாண்டியர் என்ற தாம் ஆண்ட மண்டலங்களின் பெயராகவும், அரசர்களின் பெயராகவும், மூன்று பிரிவாய்ப் பண்டை நாள் தொட்டு விளங்கியிருக்கின்றனர். சேர, சோழ பாண்டியர்களாகிய இம்மூன்று பிரிவினர்களும், தத்தம் வம்சத்தவர்களும், நாளடைவில் பெருகி வாழ்ந்து தாம் அடைந்த பட்டங்கள் நூற்றுக்கணக்கானவைகளால் அழைக்கப்பட்டனர். அவைகளில் முக்கியமாக முத்திரத் தாரும் தத்தமக்குக் கொண்டவைகள் ‘கள்ளர், மறவர், அகமுடையர்’ ஆகும்.

இதன் பிரகாரம் சோழ மண்டலமாகிய தஞ்சாவூர் ஜில்லா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, புதுக்கோட்டை இராஜ்ஜியம் ஆகிய இடங்களிலும், தென்னாற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா ஆகியவைகளின் பகுதியிலும் உள்ள மக்கள் சோழன் வழித்தோன்றிய கள்ளர்கள் ஆவார்கள். பாண்டிய மண்டலமாகிய மதுரை ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா, ஆகிய ஜில்லாக்களில் உள்ள மக்கள் பாண்டியன் வழித்தோன்றிய மறவர்கள் ஆவார்கள். ஆனால் சேரன் வழித்தோன்றிய அகமுடையர் மக்களைப் பற்றிச் சிறிது ஆழ்ந்து கவனிக்க வேண்டியதிருக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

சேரமண்டலம் மேற்குத் தொடர்ச்சி மலையால் தமிழ் நாட்டினின்றும் பிரிந்ததின் நிமித்தம் போக்குவரத்துக் குறைவால் அம்மக்களின் மொழி தமிழினின்றும் மாறுபட்டு கொடுந்தமிழ் என ஆகி அது நாளாவட்டத்தில் தனி மொழியாக மாறி மலையாளம் எனப்பட்டது. கி. பி. 9-வது நூற்றாண்டிலேயே சேரன் பெருமான் முடி துறந்து நாடு விட்டு ஓடிய விவரம் முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது அது சமயம் அரசன் மீது பற்றுக்கொண்ட இவன் வம்சத்தவர்கள் அரசனைப் பின் தொடர்ந்து வெளியிடங்களுக்கு வெளியேறினார்கள். முக்குல மக்கள் தங்கள் வம்ச அரசர்கள் ஆண்ட பிராந்தியங்களில் அன்னவர்கள் தரித்திருந்த பட்டங்களைத் தாமும் தரித்து இன்று வரை சரித்திரத் தொடர்பு விடாது.

வாழ்ந்து வரும் விவரத்தை கவனிப்போம். (மகமதியர் வருகை, மாப்பிள்ளாஸ் ஸ்தாபிதம்) அதுவும் தவிர உள் நாட்டுக் குழப்பத்தில் அரசர் பரம்பரையினர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய காரணங்களைக் கொண்டு சேர நாடுவிட்டு வெளியேறிய மக்கள் கோயம்புத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லா' ஆற்காடு சென்னை நகர் ஆகியவிடங்களில் குடியேறினார்கள். இவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் பெரும்பகுதிகளில் வாழ்ந்தார்கள். பிற்பாடு இவர்கள் தமிழ்நாடு அனைத்திலும் பரவினர் என்பதும் தெரிகிறது. மலையாளத்திலேயே தங்கி நின்றவர்கள் திருவிதாங்கூர் வாசிகளாய் மலையாளிகள் எனப்பட்டு நமக்கும் அவர்களுக்கும் ஒருவிதச் சம்பந்தமும் இல்லாமல் தனித்து இருந்து வருகிறார்கள். இது கால பேத வர்த்தமானங்களால் ஆயின.

**சோழ மன்னர்களுக்குரிய நூற்றுக்கணக்கான பட்டங்களில்** சிலவற்றை மாத்திரம் உதாரணத்திற்காக இங்கே எடுத்துக் கூறி இவைகளின் தொடர்பு தற்காலத்து கள்ளர் குல மககள்பால் பிணைக்கப்பட்டிருப்பதை ஆராய்வோம்.



| | | |
|---|---|---|
| சோழன் | நாட்டார் | தலைவர் |
| நாகன் | நாடாள்வார் | தளவாய் |
| பல்லவராயன் | தேவர் | பாண்டியன் |
| தொண்டைமான் | வர்மர் | வன்னியனார் |
| கள்வன் | முத்தரையர் | இராஜாளியர் |
| மால் | அம்பலம் | வல்லத்தரசர் |
| வாண்டையார் | சேர்வை | கோனேரிமேல் கொண்டான் |

— என்பனவாம்.

இப்பட்டங்களைக் கொண்டு அழைக்கப்பட்டு வரும் கள்ளர் ஜாதி மக்கள்; தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு, சேலம் முதலிய இடங்களில் மிகையாக வாழ்ந்து வருகிறார்கள். இவற்றை விளக்கும் சில பிரத்தியேகமான ஆதாரங்களைக் கவனிப்போம். வல்லத்தரசர், தஞ்சைராயர், செம்பிய முத்தரையர் என்னும் பட்டங்களுள்ள கள்ளர் குலத்தவர், தஞ்சையிலும், தஞ்சையைச் சூழ்ந்த இடங்களிலும் நிரம்பியிருக்கிறார்கள். தொண்டைமான் என்னும் கள்ளர் குல அரசன் அன்று நீதி மன்றங்கள் பலவும் அமைத்து புதுக்கோட்டையை ஆண்டுவந்த காரியம் யாவரும் தெரிந்ததே.

இவ்வரசனின் சரித்திரத் தொடர்பு விளக்கியுள்ளோம்.

குலோத்துங்க சோழன், ராஜராஜ சோழன், சுந்தர பாண்டியன், வீர பாண்டியன், குலசேகர தேவன் ஆகியவர்கள் தங்களுக்கு 'கோனேரி' எனவும், கோனேரிமேல் கொண்டான் எனவும் பட்டம் வகித்து இருக்கிறார்கள். " த்தகைய பட்டமுடைய கள்ளர் வகுப்பினர் பரம்பரையாக மிக்க மேன்மையுடையவராய் இருந்து வருகிறார்கள். 'செங்கிபட்டி'யிலும் அதன் புறங்களில் உள்ள ஊர்களிலும் மேல்கொண்டார் என்னும் பட்டமுடைய கள்ளர்கள் இருந்து வருகிறார்கள். மதுக்கூர் ஜமீன்தாரின் மாப்பிள்ளையும், கூனம் பட்டியிலுள்ள பிரபல கள்ளர்கள் தலைவருமான

RangaRakes
tamilnavarasam.com

ஒரு பிரமுகருடைய பெயர் 'குமாரசாமி மேல்கொண்டார் என்பதாகும். இன்னும் அவர்களின் வம்சத்தவர்களுக்கும் இதர உறவினர்களுக்கும் கோனேறி என்ற பெயர் இருந்து வருகிறது.

பொதுவாக கள்ளர்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சோழர், சோழங்கர், சோழங்க தேவர் என்னும் பட்டங்கள் கள்ளர்களுக்கு வழங்கி வருகின்றன. தென்னிந்திய சாசனப் புத்தகம் மூன்றுவது தொகுதி, முற்பகுதி 59-ஆம் சாசனத்தில், வந்துள்ள பட்டங்களில் சோழங்கன்' என்பதும் ஒன்று. 'தன்னிருத்தம்பியர்' தம்முள்— மதுராந்தகச் சோழங்கன்' எனவும் 'மணிமுடி சூட்டி' எனவும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒரு சோழ மன்னனின் தம்பியின் பெயர் சோழங்கன் எனத் தெரிகிறது. இப்பட்டமுடைய கள்ளர் மக்கள் 'துண்டுராயன்பாடி' 'அந்தலை' முதலிய இடங்களில் இருக்கின்றனர். இவர்களெல்லாம் தொன்று தொட்டுப் பெருமை வாய்ந்துள்ள சரித்திர சம்பந்தமுடைய குடும்பத்தினர்களாவர். இன்னோர் கோட்டையும் கட்டி ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

மதுரைக்கு மேற்கே பதினைந்து மைல் தூரத்தில் கருமாத்தூர் என்னும் கிராமம் இருக்கிறது. அங்கே பிரமலைக் கள்ளர்கள் கலியுக சிதம்பரேஸ்வரர் எழுந்தருளியுள்ள புண்ணிய ஸ்தலத்தில் மும்மூர்த்திகள் திவ்விய சேத்திரத்தை உண்டு பண்ணித் தங்கள் குல தெய்வங்களாக இன்றுவரை சிறப்புடன் கொண்டாடி வருகிறார்கள். இக்கோயிலைச் சித்திரப் பாடல்களுடன் அதிக உன்னதமாய் அமைத்து 14வது நூற்றாண்டில் கடவுள் மங்கலப் படைப்புச் செய்து தானே முதல் கர்த்தாவாக விளங்கியவர் வீரசிகாமணியான 'ராணி சோழத் தேவர்' ஆவார். இவ்வரலாறு இக் கோயில் கல்வெட்டிலும் செப்புப்பட்டயத்திலும் கண்டிருக்கிறது. இன்னோர் வம்சத்தவர்கள் பிரமலை நாடெங்கும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள் இந்நூலாசிரியர் இராணி சோழத் தேவரின் வம்சத்தினராகும்.



நாட்டாள்வார், அல்லது நாடாள்வார் என்னும் பட்டம் தரித்தோர் பல இடங்களில் பெருந் தொகையினராக இருக்கின்றனர். வெள்ளாற்றின் வடக்கிலுள்ள பகுதியை அரையர் என்னும் பட்டமுடையாரும் தெற்கிலுள்ள பகுதியை நாடாள்வார் என்னும் பட்டமுடையாரும் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். நாட்டாள்வார் என்னும் இப்பெயர் முதற்குலோத்துங்கன் மகனாகிய விக்கிரம சோழனுக்கு வழங்கப் பெற்றுள்ளது. குரு பரம்பரை பிரபந்தம் என்னும் தமிழ்ச் செயுள் நூலில் இராமானுசர் கவிதையில்,

> ''சீராரு மரங்கத்துச் சில பகல் கண் மன்னவந் நாட்
> பாராளு மன்னனவன் பாகவதரிடத்தி லென்றும்
> ஆராத காதலனும் அரளங்க நாடாள்வான்
> ஏராரும் வைகுந்த நாடாள வேகினன்'' (794)

## இனிப்பாண்டியர் வழித்தோன்றிய மறவர்களைப் பற்றிக் கவனிப்போம் :

பாண்டிய மன்னர்களுக்கு வழங்கிய எண்ணற்ற பட்டங்களில் இன்னோர் வழித்தோன்றிய மறவர் சமூகத்தினரின் சரித்திரத் தொடர்பு காட்டி விளக்கும் பொருட்டுச் சில வற்றை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

| | | |
|---|---|---|
| பாண்டியன் | தமிழ் நாடன் | வேம்பின் தாரன் |
| உசிதன் | தென்னவன் | வையைத் துறைவன் |
| கவுரியன் | பஞ்சவன் | வேங்கைமார்பன் |
| | பொதியன் | நம்பி |
| குமரிச் சேர்ப்ப | வேற்பன் | |
| கூடற்கோமான் | மாறன் | கோன் |
| கைதவன் | மீனவன் | தேவர் |
| செழியன் | வழுதி | களமர் |
| வன்னியன் | செம்பியன் | மறவன் |

என்பன போன்ற பட்டங்கள் பலவாகும். இப்பட்டங்களை மறவர் மக்கள் வழக்கத்தில் கொண்டிருக்கும் விருத்தாந்தம் பார்ப்போம்.

RangaRakes
tamilnavarasam.com

செம்பியன் என்பது ஆதியிற் சோழர்களுக்கு உடைய பட்டம், பிற்காலத்தில் பாண்டியர் வம்சத்து குறுநில மன்னர்களாகிய சேதுக்களும் செம்பியன் என்ற பட்டம் பூண்டிருக்கின்றனர். இதன் உண்மை தென்னிந்திய சரித்திரத்தில் கண்டவாறு கி. பி. 059-ல் இராஜராஜசோழ தேவர் இலங்கையைப் படையெடுத்த பொழுது பாண்டிய மன்னர்கள் பால் தமக்குத் தொந்தரவுகள் இல்லாமல் இருக்கும் பொருட்டுத்தான் இலங்கை புகுமுன்னர்; சேதுக் கரையில் தனக்கு நம்பிக்கை வாய்ந்த தளகர்த்தர்களின் பொறுப்பில் ஒரு பெரும் சைனியத்தை ஸ்தாபித்து வைத்து விட்டு இலங்கை மேல் பாய்ந்து வெற்றி பெற்றுத் திரும்பினான். இவ்வாறாக இராஜராஜ சோழனுக்குப் பெரிதும் உதவிய மறவர்கள் பால் நன்றி காட்டுவான் வேண்டி சோழர்க்குரிய செம்பியன் என்ற பட்டத்தை இம்மறவர்களுக்கும் இவர்கள் வசித்த நாட்டிற்கும் சூட்டினான். அன்று முதல் மறவர் தலைவராகிய சேதுபதிக்குச் செம்பியன் என்றும் அவர் நாட்டிற்குச் செம்பி நாடு என்றும் பெயர் வழங்கலாயிற்று. இப்பட்டமுடைய மறவர் மக்கள் செம்பி நாட்டு மறவர் என்னும் பெயரால் இராமநாதபுரம் ஜில்லாவில் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அன்றுசேதுபதியாக இருந்து இராஜரீகம் செய்து வந்த, குறுநில மன்னன் செம்பி நாட்டு மறவர் குலத்தவராகும். இவ்வரசனுடைய வர்க்கத்தினர்களுக்குச் சேதுபதியென்றும், சேது காவலன் என்றும், தென்னவன் என்றும், செம்பியன் என்றும், தேவர் என்றும் **பட்டங்கள் உண்டு**.

தமிழ்நாடெங்கணுமுள்ள மறவர் மக்கள் பெரும்பாலும் பாண்டியன் என்று பட்டம் தரித்து வருகிறார்கள். முக்கியமாக மறவர் பாளையப்பட்டுகள் யாவர்க்கும் பாண்டியன் என்பது தற்காலத்துப் பொதுப் பட்டமாக இருந்து வருகிறது. பாளையப் பட்டுகளை பெயர் சொல்லி அழைப்பதன்றி பொதுப்படையாக 'பாண்டியர்' என்று சொல்லுவது வழக்கத்தில் இருக்கிறது. இன்னவர்கள் சாமி என்றும், துரை



என்றும், இராஜா என்றும் பட்டமிட்டு அழைக்கப்பட்டு வருகிறார்கள். இப்பட்டங்கள் அனைத்திலும் 'தேவர்' என்னும் பட்டத்தைத்தான் மறவர் பாளையக்காரர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். உதாரணமாகப் பார்த்தால் சேத்தூர் ஜமீன்தார் அவர்கள் இதற்குப் பொருத்தமாகப் புலப்படுகிறார்கள். இவர்களின் பெயர் 'வடமலைதிருவொணாத சேவுக பாண்டியத்தேவர்' என்பது. பாண்டியன், தேவர் என்னும் பட்டங்கள் ஒன்றாய் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் வம்சத்தவர்கள் மூவேந்தரின் ஆட்சிக் காலத்தில், தமிழ் வேந்தர் வம்ச பரம்பரையாகத் தோன்றிய குறுநில மன்னர்கள். இதன் விவரம் மிகவும் விரிவாக, A. வடிவேல் அவர்கள் நன்கு ஆராய்ந்து வெளியிட்டுள்ள ''தென்னிந்திய அரசர் பரம்பரை'' என்னும் புத்தகத்தில் காணப்படுகிறது. காஞ்சிபுரத்தையாண்ட வீரசோழனிடம் பொக்கிஷதாரராக இருந்த வீரமணியத் தேவரின் காலந்தொடங்கி நாளது வரை இவர்களின் சரித்திரம் காணக் கிடைக்கிறது. பொக்கிஷம் என்பதற்கு பண்டாரம் என்பது பொருள். ஆகவே இவர்களுக்கு ''மேனாட்டு மன்னிய குறுகுல வணங்காமுடிப் பண்டாரத்தார்'' எனப் பட்டம் வந்தது. பிறகு அரசியல் மாறுபாடுகளின் காரணமாகக் காஞ்சியை விட்டு இன்னோர்களின் முன்னோர்கள் தஞ்சைக்கு வந்து குலோத்துங்க சோழனிடம் பட்டாளத்தில் அமரும்படியாக ஏற்பட்டது. அப்போது இவர்களுள் தலைவர்களாக விளங்கியவர்கள், 'கலிங்கராயத் தேவரும், வாண்டையார்த் தேவரும் ஆவார்கள். இவ்விருவரும் ராணுவத்தில் சேனாதிபதிகளாக குலோத்துங்கனால் நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் அரசியல் துறையில் வெறுப்புக் கொண்டதன் காரணமாகப் பக்தி மேலீட்டால் பரிவாரங்களுடன் தென்திசை நோக்கித் தீர்த்த யாத்திரை செய்ததாகவும் பின்னர் மதுரையை அடைந்து அதுகாலை பாண்டியராஜாவாக விருந்த பராக்கிரம பாண்டியனால் ஆதரிக்கப்பட்டு மதுரையில் தங்கியிருந்ததாகவும் புலனாகின்றது. அதுகாலை மது

RangaRakes
tamilnavarasam.com

யில் எவராலும் அடக்க முடியாமலிருந்த யானை ஒன்றை இவர்களின் தலைவன் அடக்கியதன் மேல், அரசர் இவர்களை யாவர் எனத் தெரிந்து கொண்டு இவர்களை மிக மரியாதை யுடன் நடத்தியதோடல்லாமல் இவர்களுக்கு மதுரைக்கு மேற்கே 19 மைல் தூரத்தில் உள்ள வாலாந்தூர் என்னும் கிராமத்தைச் சொந்தமாகவும் கொடுத்தான். அதன் பேரில் இவர்கள் வடக்கில் விட்டு வந்த தங்கள் உறவினர்கள் யாவரையும் வாலாந்தூருக்கு அழைத்து வந்து அவர்களுடன் பாண்டிய நாட்டில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் அப் போதைய தலைவர் சின்னையாத் தேவராகும்.

பாண்டியனுக்கு விரோதமாகக் கிளம்பிய பந்தாள மன்னனின் படைத்தலைவனை அடக்கும்படி கி.பி. 158[illegible]ல் பாண்டியன் சின்னையாத் தேவரின் தலைமையில் ஒரு படையை அனுப்ப, சின்னையாத் தேவன், திருவொணத நாயக்கராகிய எதிரியைத் தோற்கடித்து தெற்கே விரட்டிக் கொண்டு போய் இப்போது சேத்தூர் இருக்கும் இடம் வரை வந்து அவ்விடத்தில் மீன் கொடியை நாட்டினான். மறுபடியும் பந்தாள மன்னன் படைகள் திரும்பாவண்ணம், சின்னையாத் தேவன் அங்கேயே தங்கிக் கொண்டு பாண்டியனுக்குத் தகவல் கொடுத்தான். அதன் பேரில் எல்லைப் பாதுகாப்பிற்காகச் சேத்தூரில் கோட்டை ஒன்று கட்டப் பட்டது. உதவிக்குகலிங்கராயத் தேவனையும் நியமித்துச் சின்னையாத்தேவனை பாண்டியன் கி.பி. 1582ல் சேத்தூருக்கு பாளையக்காரராக நியமித்தான். அது முதல் 48 பாளையக் காரர்கள் சேத்தூரை ஆடிருக்கிறார்கள்.

இவர்கள் வழிபடும் தெய்வம் நச்சாடையப்பன். இது சேரநாட்டுத் தெய்வம். இக்கோயிலைக் கட்டியது சேர மன்னன் விருத்தாந்தங்கல் கோயில் கல்வெட்டில் விளங்குகின்றன. இத்தெய்வத்திற்குத் திருப்பணி செய்து திருவிழாக் கொண்டாடி வரும்படியாகச் சேர மன்னனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறுநில மன்னர்கள் இன்னோரின் முன்னோர்கள். ·இது பற்றியே தெய்வீகத் திருப்பணியின் நிமித்தம் இன்ன



வர்கள் சேவுக பாண்டியன் என்பதை குலப் பெயராக கொண்டிருக்கிறார்கள். இத்தெய்வாலயம் சேர, பாண்டிய நாட்டு எல்லையில் மேற்குத் தொடர்ச்சி மலையின் சாரலில் இருப்பதும், இக்கோயில் கர்த்தா பாண்டியராஜாவாகவிருப் பதும், கோயிலின் ஒரு பகுதி சேரனால் கட்டப்பட்டிருப்பதும் கவனிக்குங்கால் ஒரு மாபெருஞ் சரித்திரத் தொடர்பு வெளிப்படும். வருஷந்தோறும் வைகாசி மாதத்தில் 'நச் சாடையப்பன் திருவிழா' கொண்டாடப்பட்டு வருகிறது. சேத்தூருக்குத் தென்மேற்கே இரண்டரை மைல் தூரத்தில் உள்ள தேவதானம் என்னும் புண்ணிய சேத்திரத்தில் திருவிழா நடைபெறும். வருஷந்தோறும் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் இத்திருவிழாவிற்கு செலவிடப்பட்டு வருகிறது.

வன்னியர் என்ற பாண்டியர் பட்டத்திற்கு ஏற்ப அன்று ராஜ்ஜியம் ஆண்டு வந்த சிவகிரி ஜமீன்தார் வன்னியர் பட்டம் உடையவர். இவருக்குத் தமிழ்நாடெங்கனும் நிலங்கள் உண்டு. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பெரும்பான்மையான மறவர்களுக்கு வன்னியர்ப் பட்டம் இருந்து வருகிறது.

பாண்டிய மன்னர்களில் பிரசித்தி பெற்ற குலசேகர பாண்டியத் தேவர், சந்திரசேகர பாண்டியத் தேவர் ஆகியவர்களுக்குத் தேவர் பட்டம் வழங்கியிருக்கிறது. இன்று மறவர் குல மக்கள் யாவரும் தேவர் பட்டம் தரித்துப் பூர்வீகத் தொடர்புடன் பட்டமிட்டு இன்னும் கூறிக் கொண்டு வருகிறார்கள் அப் பட்டங்களில் சிலவற்றை அடியில் காண்க:

| | | |
|---|---|---|
| நாட்டார் | செம்பிநாட்டார் | கரந்தை |
| மணியக்காரர் | குன்றமாணாட்டார் | வஞ்சி |
| காரணர் | இராமநாட்டார் | உழிஞை |
| கொத்தளம் | ஆப்பநாட்டார் | தும்பை |
| சீத்தல் | கொங்கணர் | உப்புக்கட்டு |
| சேர்வைக்காரன் | அப்பனேரி | அஞ்சுகொத்து |
| தோலர் | வல்லம்பர் | கொண்டையங் |

RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| | | கோட்டை |
| பண்டாரர் | இவளி | தொண்டை |
| | | நாட்டு |
| வேடங்கொண்டார் | வன்னியர் | சிறுதாலிகட்டி |
| செட்டி | கிள்ளை | பெருதாலிகட்டி |
| குறிச்சி | ஓரியூர் | பாசிகட்டி |
| வேம்பன்கோட்டை | வெட்சி | கன்னிகட்டி, |
| | | கயிறுகட்டி |

இப்படியாக எண்ணிறந்த பட்டப் பெயர்கள் மறவர் மக்கள் பால் காணப்படுகின்றன. இவர்கள் வாழும் பிரதேசம் செம்பி நாடு, ஆப்ப நாடு, கிளுவைநாடு, அகப்பாநாடு, ஆன்மநாடு எனப்பெயர் படும். இவர்களின் சரித்திரப் பிரசித்தம் பெற்ற கோட்டைகள் செம்பி நாட்டுக்கோட்டை, கொண்டயங்கோட்டை, கருத்தக்கோட்டை, ஜெக கோட்டை அனிலிக்கோட்டை முதலியனவாகும்.

ஆகவே இவர்களின் சமூக உட்பிரிவில் காணப்படும் பட்டப்பெயர் வகைகளாலும் நாட்டுப் பெயர்களாலும் இன்னோர்கள் கட்டிய கோட்டையின் பெயர்களாலும் தொனிக்கும் பொருளைக் கருத்தூன்றிப் பார்த்தால், சிறிது சரித்திர ஆய்வுடைய எவர்க்கும் மறவர் மக்கள் கீர்த்தி பெற்ற பாண்டியா மரபினர் என்பது புலனாகும்.

**இனிச் சேரர் வழித்தோன்றிய அகமுடையர் சமூகத்தை பற்றி ஆராய்வோம்:-**

சேரமன்னர்களுக்குரிய பட்டங்களில் தற்காலத்தில் அகமுடையர் சமூகத்தினர் கொண்டுள்ள பட்டங்களுக்குத் தொடர்பு கொண்டு சரித்திர பூர்வமாய் சேரர்களையும் அகமுடையர்களையும் ஒன்றாகக் காட்டும் இயல்புடைய சிலவற்றை உதாரணமாக எடுத்துக் கொண்டு விளக்குவோம்.

| | | |
|---|---|---|
| சேரன் | பூமியன் | வர்மன் |
| ஊழியன் | பொருணர்த்துறைவன் | சேர்வை |
| குடகன் | பொறையன் | தலைவன் |



| | | |
|---|---|---|
| குடக்கோன் | பொன்தின்னோன் | வன்னியன் |
| குட்டுவன் | மலையமான் | படையாட்சி |
| கோளன் | வஞ்சிவேந்தன் | நாயகன் |
| கொங்கன் | வானவரம்பன் | அகமுடையான் |
| கொல்லிவெற்பன் | வானவன் | கோன் |
| கோதை | வில்லவன் | புலவன் |
| சேரலன் | தேவர் | தொண்டைமான் |
| பனந்தாரான் | கொற்றவர் | பாண்டியன் |

என்பன போன்ற பட்டங்கள் பலவாம். முடிமன்னனாக விளங்கும் திருவாங்கூர் அரசர் இவ்வம்சம்தான். முன்னாலேயே எடுத்துக்காட்டியது போல் கால பேத வேறுபாட்டில் பிரிந்து விளங்குகிறார்கள். ஆனால் இதைச் சரித்திரத் தொடர்பு காட்டுகிறது. இவ்வரசரும் இன்னவர் வகையினர்க்கும் சேரர்க்குரிய பட்டங்களையும், சோழ பாண்டியர்க்குரிய பட்டங்களையும், தரித்து வருகிறார்கள்.

இராமநாதபுரம் திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களில் அகமுடையர்கள் மிகுதியாக வாழ்ந்து வருகிறார்கள். சரித்திரத் தொடர்பு கொண்ட சேரர் வகையினர் சேர்வை என்னும் பட்டத்துடன் இராமநாதபுரத்திலும் அதைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். உதாரணமாக: சேதுபதியில், சேனாதிபதியாக இருந்து பெருங்கீர்த்தி பெற்று விளங்கிய, சேனாதிபதி 'வெள்ளையன் சேர்வை' அவர்கள் பிரபல சேரர் வம்சத்தவர். சேது மன்னனிடம் அளவு கடந்த அன்பு பெற்றவர். இன்னோர் உருவச்சிலை சேதுபதியில் இன்றும் காணப்படும். சேதுபதிகள் வரலாற்றில் சேனாதிபதி வெள்ளையன் சேர்வையவர்களின் கீர்த்தி முக்கிய இடம் பெற்றிருக்கிறது.

ஆதியில் மதுரையில் சித்திரைத் திருநாள் உற்சவத்திற்குச் சேர்வைக்கார மண்டபப்படி கட்டியவர் சேரர் குல திலகரான சேனாதிபதி மருதப்பன் சேர்வையவர்களாவார். பாண்டிய மன்னனிடம் பெரும் புகழோடு விளங்கிய 'கலியுக

RangaRakes tamilnavarasam.com

அர்ச்சுணன்' இவருடைய வம்சத்தவர்தான்; **சின்னமருது பெரியமருது**, என்னும் பெயருடன் விளங்கி, சசிவர்ணத் தேவரின் வாரிசுகள் என்று கிளம்பி சிவகங்கையை கி. பி. 1780-ல் பிரிட்டிஷ்காரர்களுடன் கடும் போர் செய்திருக்கிருர்கள். இவ்வரலாறு ''கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் கண்டிருக்கிறது''. மருதுகள் அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண்டகைகள். உயிரைத் துரும்பாக மதித்துப் போரில் சிங்கம் போலப் பாயும் வீரமுடைய தாட்டியர்கள் என்று கண்டிருக்கிறது. மருதுகளின் வீரதீரச் செயல்களை நமது நாட்டார் இன்னமும் புகழ்ந்து பேசி வருகிருர்கள் என்பது யாவரும் அறிந்ததே. நமது நாட்டு குழந்தைகள் கூட, ''தென்னை மரத்தின் தூரை மிதித்துக் குலுக்கி மரத்தின் உச்சியிலிருக்கும் தேங்காய்களை உதிரச் செய்வான் மருது பாண்டியன் என்று சொல்வது வழக்கம்

''சின்னமருது வெள்ளி ரூபாயை விரலால் வளைப்பான்'' என்றெல்லாம் பேசி வருகிருர்கள் என்ருல் இவர்களின் தேகபலத்தைப்பற்றி வேறென்ன சொல்ல வேண்டும். இம்மருதுகளின் வம்சத்தவர்கள் காளையார் கோயில், நான்குனேரி முதலிய இடங்களில் சேர்வைக்காரர் என்றும், அகமுடையர் என்றும், பட்டம் தரித்து வசித்து வருகிருர்கள். மருதுகள் கட்டிய சத்திரம், சாவடி, கோயில் முதலியவைகள் சிவகங்கை, காளையார் கோயில் நான்குனேரி, முத்தனேந்தல், மதுரை, பிரான்மலை முதலிய இடங்களில் இன்றைக்கும் காணப்படுகின்றன.

பூலோக குபேரன் என்று புகழப்பட்ட பச்சையப்பன் முதலியார் அவர்கள் அகமுடைய வம்சத்தவர் ஆவார். இன்னேர் சரித்திரத்தில் இவ்விவரம் கண்டிருக்கிறது. இவருடைய தாயார் பேச்சியம்மாள், சேரமன்னனின் அன்பிற்குரிய பட்டாளத்து உத்தியோகஸ்தரின் மனைவி. அவர் அரசர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்.

தன் புகழுடம்பு எந்நாளும் அழியா வண்ணம் பச்சையப்பன் சென்னையில் உயர்தரக் கல்லூரி ஒன்று அமைத்து



அது என்ஞான்றும் தாழாமல் வாழப் ''பெருந்தனமும், சாஸ்வத நிதியாக அமைத்திருக்கிருர். தமது பெருந்தன்மையும் விசால நோக்கமும் உலகுள்ள மட்டும் பிரகாசிக்கும் வண்ணம், தமது வித்யாதர்மம், ஜாதிமத பேதமின்றி யாவர்க்கும் உரியதாகச் செய்திருக்கிருர். தமிழ் நாடெங்கும் நிறைந்து வாழும் சேரர்குல அகமுடையர் குலமக்கள் தம் அரசர்கள் வகித்து வந்தது போலவே தாமும் அனேக பட்டங்களைத் தொன்று தொட்டு மேற் கொண்டு வந்திருக்கிருர். அகமுடையர்குல மக்கள் தரித்து வரும்

| | | | |
|---|---|---|---|
| சேரன் | முதலி | வானவன் | சேர்வை |
| உதியன் | மணியக்காரன் | வர்மா | பாண்டியன் |
| குடகன் | பூமியன் | அம்பலகாரன் | உடையார் |
| பனந்தாரன் | கோளன் | வன்னியன் | |
| பொறையன் | நாகன் | தொண்டைமான் | |
| மலையமான் | கொங்கன் | நாட்டாண்மை | |
| தலைவன் | மலையான் | அகமுடையான் | |
| படையாட்சி | வஞ்சிவேந்தன் | தேவர் | |

என்ற பட்டங்கள் தரித்திருக்கிருர்கள். மேலும் சேர்வைராயன் மலை என்னும் பெயருடன் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு மலை இருக்கிறது. அந்தப் பிராந்தியத்தில் சேர்வைராயன்பாடி என்று ஒரூருண்டு. இங்கெல்லாம் சேர்வைப் பட்டமுடன் அகமுடைய சமூக மக்கள் வாழ்ந்து வருகிருர்கள்.

## பச்சையப்ப முதலியார் திருப்பணி:

பதினெட்டாவது நூற்ருண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் நடந்த போர்களில், பல தடவைகள் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், முகமதியர்களும் தில்லைக் கோயிலைத் தம் அரணுகக் கைவசப்படுத்தி வைத்திருந்தனர். அக்காலங்களில் தில்லை பெருமானுக்கு வழிபாடுகள் இல்லாமலும் கழிந்தன. இரண்டாம் மைசூர் யுத்தத்தில் 1781ல் தில்லை கூத்தப்பெருமான் தஞ்சை அரசனின் உதவியால் திரு

RangaRakes

tamilnavarasam.com

வாருருக்குக் கொண்டு போகப்பட்டு மறுபடியும் தில்லைக்கு எழுந்தருளினுர். இது நிகழ்ந்தது கலியாண்டு 4874-சக 1695ல் (கி.பி. 1773) என ஆயிரக்கால் மண்டபம் கல்வெட்டொன்று குறிக்கிறது. மற்றொரு முறை தீக்ஷிதர்களால் புளியங்குடி என்ற ஊரின் கண், ஒரு புளியமரத்தின் பொந்தில் அடற்பெருமாள் பல ஆண்டுகள் மறைக்கப் பெற்றிருந்து, பின்னர் கொணர்விக்கப் பெற்றுன் என்ற செய்தியை சோழமண்டல சதகச்செய்யுள் ஒன்று கூறுகிறது.

இவ்வாறு கோயிலில் அசுத்த அழிம்புகள் ஏற்பட்டமை கண்ட வள்ளல் பச்சையப்ப முதலியார் (கி. பி. 17 4—1794) தமது பெரும் பொருளைக் கொண்டு திருப்பணி ஆரம்பித்தார். பின்னர் அவருடைய தமக்கையார் சுப்பம்மாள் என்பவர் அதனைத் தொடர்ந்து அரிய பல பணிகள் செய்து முடித்தார்கள்R ef சிதம்பரம்—தலவரலாறு Page 36&37

இதேபோன்று பச்சையப்ப முதலியார் தமிழகத்தின் பல பாகங்களில் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்துள்ளமை தெரிய வருகிறது. முக்கியமாக தஞ்சை பெரிய கோயில், மதுரை மீனுட்சியம்மன் கோயில், ஸ்ரீரங்கம், ராமேஸ்வர ஆலயம் முதலியவைகள் குறிப்பிடத் தக்கவைகள்.

மலையாளத்தில் உள்ள பனந்தாரன் என்னும் குறுநில மன்னன் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை மதுரை ஜில்லாவில் சின்னமனூர் என்னும் பாண்டியன் பதியாகிய ஊரிலுள்ள அகமுடையர் குலக் குடும்பத்தார்களுடன் கொள்வினை கொடுப்பனை செய்து வந்ததாகத் தெரிகிறது. அவ்வாறுள்ள மக்கள் அகமுடையர் பட்டத்துடன் இன்னும் சின்னமனூரில் வசிக்கிருர்கள். நீலகிரி மலையில் சேரன்பாடி என்ற ஊர் ஒன்றுண்டு. அவ்வூரின் பழங்குடி மக்கள் யாவரும் சேர்வைக்காரர்கள், அகமுடைய குலத்தவர்கள். பெரியகுளம் தாலுகாவில் தேவாரத்திற்குப் பக்கத்தில் சேர்வைராயன்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அதை அடுத்தாற்போல் பல்லவராயன்பட்டி என்று ஓர் ஊரும் இருக்



கிறது. மதுரை ஜில்லாவில் எரசக்கநாயக்கனூர்ப் பக்கத்தில் சேர்வைராயன்பட்டி ஒன்றுள்ளது. இவ்வாறாக இந்தத் தென்னகத்தின் பல இடங்களில் சேர்வைக்காரர் பட்டத்தைத் துலக்கக் கூடியதான ஊர்கள் பலவுள. அங்கெல்லாம் மிகையாக வாழ்ந்து வருவது கள்ளர், அகமுடையர், மறவர் குல மக்களாகும். அவ்வூர்களுக்கும் தேவமார் குலமக்களுக்கும் பண்டைத் தொடர்பு காண்கிறது. இவ்வூர்களின் பேராலாகிய ஏரிகள், கண்மாய்கள், மலைகள் ஆங்காங்கே காணப்படுவதானது குறிப்பாகக் கவனிக்கத் தக்கதாகும்.

ஆகவே தமிழ் உலகம் தோன்றிய காலம் முதல் தமிழ் மக்களுடைய வாழையடி வாழை போல் சேர, சோழ, பாண்டியர் என்னும் பெயரால் அரசாண்டு வந்த இம்மரபினர் வீரத்தால் போர் செய்வதை மட்டும் தம் தொழிலாகக் கொண்டு, மதி மன்னர்களைச் சூழ்ந்து நின்று அறப்புறக்காவல்கள் செய்து நாடாண்டு, நாடு காத்து, நின்றமையாலும், கள்ளர், மறவர், அகமுடையர் எனப் பெயர் பெற்றமை தெரிகிறது.

சேர, சோழ, பாண்டியர்களாகிய கள்ளர், மறவர், அகமுடையர் என்னும் இம்மூவரும் இன்றைக்குச் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் வரையில், நாகர், சோழர், பல்லவர் என்னும் பரம்பரையினராய் சக்கரவர்த்தியாகவும், அரசராகவும், படைத்தலைவராகவும், படை வீரராக யுமிருந்து எண்ணிறந்த நாடுகளையும், நகரங்களையும், ஊர்களையும், கோயில்களையும், ஆறுகளையும் உண்டு பண்ணியும் வந்திருக்கிருர்கள். கடலைப்பருப்பு பருமன் உள்ள பொன் நாணயம், கோழியின் உருவம் அமைக்கப்பட்ட செப்புக்காசு. வீரராசேந்திரப் பெருவிலையாகிய பெரும் பணம் முதலிய பல வகை நாணயங்கள் அமைத்துச் செலாவணிக்கும் உபயோகித்திருக்கிருர்கள். இவ்வரச மரபினர் வேற்றரசர்களைப் போரில் வென்று தம்மடிப் படுத்தியும், ஆண்டு வந்தனர் என்பது தமிழ்ச்சங்க நூல்களாலும், சிலாசெப்பு, சாசனங்



RangaRakes
tamilnavarasam.com

களாலும் பின்வரும் கள்ளர்களுக்குரிய தேவன், நாகன், செம்பியன், சோழன், தொண்டைமான், வன்னியன், பாண்டியன், ராயன், அரையன், ஆண்டான், ஆளன், ஆளி, ஆட்சி, உடையான், ஊரான், தலைவன், நாடன், கொண்டான், பிரியன், புத்திகழித்தான், மண்வெட்டி, கூழ்வாங்கி, ஆக்கி, போரிற் கொளுத்தி, போரிற் பொறுக்கி, போரிற் சுற்றி, சேனாதிபதி, கருடி என ''ஆயிரக்கணக்கான பட்டப் பெயர்களாலும்'' மறவர்க்குரிய ''உசிதன், கவுரியன், குமரிச்சேர்ப்பன், கூடற்கோமான், கைதவன், கொற்கை வேந்தன், செழியன், தமிழ்நாடன், தென்னவன், மாறன் (மறவன்) மீனவன், வழுதி, நம்பி, தேவன், தலைவன்'' முதலிய பட்டப் பெயர்களாலும் அகமுடியர்களுக்குரிய, கோடப்பற்று, இராசகுலம், இரும்புத்தலை, ஐவூர் அகப் படையான் கிளைப்பட்டப்பெயர்களாலும் தெளிவாய் விளங்குவதாகும். இவற்றிற்கு ஆதாரமாக இவர்களின் நில ஆட்சியைக் குறிக்கும் உலகம் காத்தார், உறந்தைராயர், ஈழத்தரையர், கலிங்கராயன், காடவராயன், கொச்சிராயர், கொங்கத்தரையர், சீனத்தரையர், நாடாள்வார், நாட்டரையர், பல்லவராயர், பாண்டியர், மழவராயர், முனையதரையர், மூவரையர், விஞ்சைராயர், வில்லவராயர், ஓமந்தரையர் முதலிய பட்டப்பெயர்களும் இவர்கள் பிற நாடுகளை வென்று கைக்கொண்டமை குறிக்கும்படியான; ஈழங்கொண்டான், கடாரங் கொண்டான், மல்லி கொண்டார், முனை கொண்டார் முதலிய பட்டப் பெயர்களாலும், இவர்கள் படை வீரராய் இருந்ததை தெரிவிக்கும்; களத்து வென்றார், களமுடையர், கொற்றப்பிரியர், கோதண்டபுலியர், யுத்தப்பிரியர், வாள் செட்டியார் முதலிய பட்டப் பெயர்களும் நன்கு தெரிவிக்



கின்றன. தஞ்சை ஜில்லாவில் அத்திப்பட்டி என்னும் ஜமீன் கிராமத்தில் கோயில் காடு சிவாலயத்தில் சுமார் 1500 வருஷங்களுக்கு முன்னால் உண்டாக்கிய கல்வெட்டில்; சோழனின் பெரும்படையான 'களப்படை, மறப்படை, அகப் படையின் வீரப்பெருமை' கூறப்பெற்றிருப்பதும் மேற்கூறப் பட்ட விருத்தாந்தங்களை வலியுறுத்தும் சான்றாகும்.

''நோட்டி முதல் தொண்டைமான் வரையில்'' என்னும் பழமொழி நம் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது. இதில் இருந்து கள்ளர் குல முதல்வராகிய தொண்டைமானே மூவேந்தர்க்குப் பிறகு தமிழ்நாட்டின் தலைவனாய் விளங்கியது தெரிய வருகிறது. புதுக்கோட்டை ராஜ்ஜியத்தை ஆண்டவர்கள் தொண்டைமான் வழியினரே ஆவார். இதுவும் தவிர 1) கண்டர் கோட்டை, 2) சில்லத்தூர் 3) சேந்தங்குடி 4) கோனூர் 5) பாதரங்கோட்டை 6) சிங்கவனம் 7) மதுக்கூர் 8) நெடுவாசல் 9) அத்திவெட்டி 10) புனல்வாசல் 11) பாலையவனம் 12) பாப்பாநாடு 13) கல்லாக்கோட்டை ஆகிய 13 ஜமீன்தார்களும் கள்ளர் குலத்தினர்களே. மற்றும் 1000 வேலிக்கு மேற்பட்ட நிலமுடைய குபேர சம்பத்துடைய பெருநிலச் சுவான்தார்களும், கல்விமான்களும் இக்குலத்திலுண்டு. இதே போல மறவர் குலத்திலகரான சேதுபதி மன்னர்கள் ராஜராஜன், ராசேந்திரன், ராஜஈஸ்வரன் என்பன போன்ற பெரும் பட்டங்களுடன் கீர்த்தி பெற்று விளங்கித் தமிழையும், தமிழ்ப் புலவர்களையும், ஆதரித்து வந்திருக்கிறார்கள். இதன் விவரம் ரா. ராகவையங்கார் அவர்கள் எழுதிய சேது நாடும் தமிழும் என்னும் நூலில் விரிவாகக் காணலாம். சேது சமஸ்தானத்தைச் சேர்ந்த மறவர் ஜமீன்கள் 18 உள்ளன. அவைகளாவன:— (1) சேதுபதி (2) சிவகங்கை (3) சிவகிரி (4) சேத்தூர் (5) கொல்லங்கொண்டான் (6) நெற்கட்டும் செவல் (7) தலைவன்கோட்டை (8) நடுவக்குறிச்சி (9) சுரண்டை (10) ஊர்க்காடு (11) சிங்கம்பட்டி (12) ஊற்றுமலை (13) மணியாச்சி (14) கடம்பூர் (15) ஏழாயிரம் பண்ணை (16) சொக்

கன்பட்டி (17) குருக்கள்பட்டி (18) அழகாபுரி என்பன வாம்.

சேரர் தொடர்புடன் குறுநில மன்னனாய் விளங்கினாலும் முக்குல மக்கள் பால் தொடர்பு நீங்கித் தனிப் புது மொழியில் பிரிவுண்டு. மலையாளத்தில் திருவனந்தபுரத்து அரசன் ஆண்டு வந்தது யாவரும் அறிந்ததே. அதுவும் தவிர அகமுடையப் பெருமக்களிடையேயும், பெருநிலமும், பெருஞ்செல்வமும் படைத்த பெரு நிலக்கிழார்களும் பேரறிஞர்களும் அனேகர் இருந்து வருகிறார்கள்.

# சாதிகள் தோன்றியதெப்படி

## கள்ளர் மறவர் அகமுடையர் இலக்கியச்சான்றுகள்

மனிதவர்க்கம் காலச்சுழல் பாதையில் நாகரிக அறிவு வளர்ச்சியின் கட்டத்துக்கு வந்தபோது கூடி வாழவேண்டும் என்ற அவசியம் தோன்றவே கூட்டம் அமைத்து கூட்டத்தை நடத்தவும், பாதுகாக்கவும் நிர்வாகம் தேவைப் பட்டது. கூட்டத்தில் விவரம் தெரியலானவன் அறிவனானான். ஆகவே நாகரிகம் செய்த படைப்புகளில் முதல் இடம் பெற்றது அறிஞன். இரண்டாவதாக ஏற்படுத்தப்பட்டது அரசன். அவனே சனசங்கத்திற்குத் தலைவன்: அதன் மேல் பாதுகாப்புத் தேவையை உணர்ந்தபோது படை வலிமை யுள்ள மறவன் அமைந்தான். தனித்தனியாக உணர்ந்த அனுபவத்தை ஒன்று சேர்த்துக் கருத்துத் திரட்டவும் திரட்டிய அறிவை, மற்றவர்க்கு எடுத்து ஓதவும் குரவன் அமைந்தான். எனவே ஆரம்பத்தில் நாகரிக உலகை உருப்படுத்திய தத்துவமே; அறிஞர், அரசர், மறவர் குரவர் ஆகிய சனக் கூட்டக் கண்டெடுப்பு.

அத்தியாவசியத் தேவைகளை உணர்ந்து தங்கள் தேவையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட, விவரம் தெரிந்த அதாவது அறிவால் உயர்வு பட்டவன் அறிஞன், அறிவாளி என்று ஏனையோர்களுக்கு அறிவுரை சொல்லக் கூடிய மட்டத்தில் சமுதாய அமைப்பில் விளங்கினான். கூட்டத்தில் சகலவிதமான மனிதத் தன்மையில் எல்லோரையும் அடக்கி யாளக் கூடிய உடல் மனவலிமையுட்பட நல்லதோற்றமும் கவர்ச்சியுமுடையவன் சமுதாய அமைப்பில் எல்லோருக்கும்

தலைவன் ஆன இடத்தை அடைய முடிந்தது. அவனே அரசன், சமுதாய நலன்களைப் பாதுகாக்க சமுதாயத் தேவையைத் தேட ஆள் பலம் ஆயுத பலம் முதலான வசதிகளுடன் வாழவும் வாழ்விக்கவும் ஆக சமுதாயத்தைக் காக்கத்தக்கதாய் அமையப்பட்டது வீரம் படைத்த மறக் கூட்டம். அதாவது மறவர் கூட்டத்தில் அனுபவரீதியாகத் தாங்கள் தனியாகக் கண்டறிந்த அனுபவங்களை ஒன்று திரட்டி மற்றவர்க்கு ஓதி அறிவை அணுகிப் பெறவும், அணுகி ஓதவுமான தொழிலில் ஈடுபட்ட அறிவுக் கூட்டம் ஓதும் தொழில் மிகக் கொண்டதால் அமைப்பில் போதகத் தன்மையில் குரவர் என்று விளங்கியது.

அறிவால் வளர்ச்சியடைந்த மக்கள் சமுதாய அமைப்பில் தங்கள் இனத்தில் தங்கள் கண்ணெதிரில் கண்டறிந்தவாறு இனவேறுபாடு தங்களுக்குள் அறிந்து விளங்கினர். இந்தப்படி அவர்கள் சொல்வழக்கில் இனம் பிரித்துப்பேசும் போது தங்களில் இன்னான் இன்னார் என்று அதாவது அறிஞன், அரசன், மறவன், குரவனெனச் சொல்லலாயினான். இது முதன் முதல் இனவேறுபாடு தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றியுள்ளது என்று பழம் நூல்களில் காண்கின்றோம். தமிழர்கள் ஆதியில் சாதி என்று ஒன்றைக் கற்பிக்கவில்லை. தங்களுக்குள் இனவேறுபாடு இல்லாத நான்கு தொழில்களைக் குறித்து அமைத்து வந்த பிறகு இவர்கள் வாழ்ந்த இடம் பற்றியும் வெவ்வேறு தத்துவங்களைக் கண்டனர். ஐந்நில மக்கள்:— வேட்டுவர், ஆயர், மறவர், களமர், பரவர்.

வாழ்ந்துவரும் இடங்களின் இயல்புகளை வெவ்வேறாகக் கண்டனர். அதைப் பாகுபாடுபடுத்தி நாளடைவில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல், பாலை என வகுத்து ஐந்து வகையான அமைப்புகளில் தாங்கள் வாழ்ந்து வருவதைக் கண்டு அதன் அடிப்படையில் தாங்கள் வாழும் பிரதேசங்களின் இயல்புக்குத் தக்கபடி தொழிலும், நடையுடை பாவனையும் கலாசாரமும் வெவ்வேறு தன்மையுடையதாக விளங்கிய



தற்கு ஏற்ப அதன் அடிப்படையில் அவர்கள் வாழ்ந்த ஐந்து வகை நிலத்திற்கும் ஐந்து விதப் பெயர்கள் கொண்டனர். ஆகவே ஐந்நில மக்களாகிய, வேட்டுவர், ஆயர், மறவர் களமர், பரவர்! என விளங்கினர் ஐந்துவிதப் பெயர்களும் குணம், தொழில், நிலம்ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

ஆகவே இந்த நிலையிலும் சாதி உருவாகவில்லை. உருவாகிய தொழில் தோற்றம் குணம் முதலான தன்மைகளை அடிப்படையாகக் கொண்ட பெயர்களைத் தங்களுக்குள் அறிந்து கொள்ளும் வித்தியாசத்திற்கான அடிப்படையினது எவர்க்கும் யாதும் உயர்வு தாழ்வுமில்லை. யாவரும் பேசியது தமிழ். ஓர் இனம் அதுதான் முதலில் தோன்றிய மூத்த குடியினர். ஆதித் தோற்றத் தத்துவம். இதற்கு ஆதாரம், 'திருவள்ளுவ தேவர்' ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ்சிறப்பொவ்வா—செய்தொழில் வேற்றுமையான்'' என்று கூறியிருப்பது ஒன்றேபோதும்.

அதன் அடிப்படையில் தான் வேந்தர்கள் தோன்றியதும் மென்மேலும் வளர்ச்சியடைந்து நாகரிகத்திற்குத் தக்கவாறும், காலச்சுழல் வேகத்திற்கு ஏற்ப குறிஞ்சியும், முல்லையும் பூகோள சாஸ்திரப்படி ஒருங்கிணையுமல்லவா? இந்த மலைநாடு ஒரு அரசன் ஆளுகையில் வந்தது. இந்த நாட்டரசன் சேரன், இவன் வர்க்கத்தினர்களின் ஒரு பகுதியினர்க்கு மலை ஆளிகள் என்று கூடப்பெயர் வழங்குவது நல்ல சான்றாகும். மற்றப்பகுதியினர் தான் மலை நாட்டவர் பட்டங்கள் பொருள் படும் அளவில் விளங்கும் அகமுடையார்கள். மருதந்தை (நீர் நிலவள) ஆண்டவன் சோழன். இம்மருதத்குரிய மக்கள் களமர், ஆகவேசோழன் வழித் தோன்றியவர்கள் களமராகிய கள்ளர்கள், நெய்தலை ஆண்டவன் பாண்டியன். இவன் நெய்தலுக்குரிய மக்கள் மறவர் ஆகவே பாண்டியன் வழித்தோன்றியவர்கள் மறவர்கள் ஆவர். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகவிருக்கும் புராதனத் தமிழ் நூல்களின் ஆதரவுகளை முறையே கவனிப்போம்.

RangaRakes

tamilnavarasam.com

**களமராகிய மன்னர்களைப்** பற்றிய புராதன விளக்கம் **ஆயிரத்தெண்ணூறு** ஆண்டுகளுக்கு முன்புவேங்கடத்தை ஆண்ட 'புல்லி' என்னும் அரசன் கள்வர் கோமான் என்று கூறப்படுகிறான். 'கல்லாடனாரும்' 'மாமூலனாரும்' பல பாட்டுக்களால் அவனைப் பற்றி பாடியிருக்கிறார்கள்.

அகநானூற்றில்—கழல்புனை திருந்தடிக்
கள்வர் கோமான்

மழபுலம் வணங்கிய மாவண் புல்லி
விழவுடைவிழுச் சீர்வேங்கடம் 61

புடையலங் கழற் காற் புல்லி குன்றத்து 295

புல்லி நன்னாட்டும்பர் 311

பொய்யா நல்லிசை மாவண் புல்லி 356

நெடு மொழிப் புல்லி 393

என மாமூலனாரும்

''புல்லி—வயன்றலை நன்னாட்டு வேங்கடம்
மா அல்யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம்'' 208

எனக் கல்லாடனாரும் பாடியிருக்கின்றனர்.

நற்றிணையில்,
''கடுமான் புல்லிய காடிறந் தாரே 14

புறநானூற்றிலே, கல்லாடனார் அம்பர் கிழான் அருவந்
தைய வாழ்த்து மிடத்தும்
காவிரி கணையுந் தாழ்நிர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர் புல்லி
வேங்கடவிறல் வரைப் பட்ட
வோங் கல் வானத்துரையினும் பலவே'' 385

அகநானூற்றிலே
''கள்வர் பெருமகன் தென்னன்''



என மதுரைக் கணக்காயனார் ஒருபாண்டியனைக் குறித்துள்ளார். இவற்றால் மிகப் பழைய காலத்தும் கூட கள்வர் என்ற பெயர் சிறப்பான பொருளுடன் இருந்தது என்பதும் கள்வர் குலத்தவர் அரசராயிருந்தனரென்பதும் வெளியாகின்றன.

பல்லவரது தென்னாட்டு ஆதிக்கத்திற்குச் சிறந்த காரணபூதராய் நின்று உதவியவர் முத்தரையர் என்ற வகுப்பினராவர். 'பல்லவமன்னனது' இளமைக் காலத்தில் அவனாட்சியை நிலை நிறுத்தியவர்களுள்ளே பெரும்பிடுகு முகுத்தரையன்' என்பான் ஒருவன் (Ref Ep Ind x v No. 5 Page 49 Ft) இவனைக் கள்வர் கள்வன் என்று சாசனம் சிறப்பித்துக் கூறுகிறது. இம்முத்தரையர் கள்வர் குலத்தவராகவும், பெரும் வீரர்களாகவும் புலவர் புகழ்ச்சிக்கு உரியராகவும் பழங் காலத்தே விளங்கினர்.

ஓர் காலத்தில் இவ்வகுப்பினர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோணாட்டை அவர் குடைக்கீழ் ஆட்சி புரிந்தனர், இவ்வகையினர் ஆகிய முத்தரையர் வம்சத்தில் தான் திருமாலின் பக்தராகிய திருமங்கை ஆழ்வார் தோன்றியதும், கள்வர்கள் செம்பியர், முத்தரையர் என்ற பட்டப் பெயருடன் சோணாட்டில் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். இதன் விவரம் திருவாளர் ந. மு. வேங்கிடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய கள்ளர் சரித்திரம் பக்கம் 23, 24-ல் காண்க.

மேலும் கள்ளராகிய முத்தரையரைப் பற்றி, நாலடியாரில் (200, 286) சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. செந்தலைச் சாஸனத்தில் பாச்சில்வேல் நம்பன், குவாவன், காஞ்சன், கேட்டாற்று இளம்பெருமானார், ஆசாரியர், அநிருந்தர் என்ற புலவர்களாற் பாடப் பெற்றிருந்தலாலும் (செந்தமிழ் தொ--9 பக்கம் 10 முதல் 15 வரை தமிழ் முத்தரையர் கோவை (யாப்பருங்கல விருத்தி பக்கம் 486) என இவர் சம்பந்தமாக வழங்கும் நூலும் இன்னோரது புகழும் வீரமும் பூர்வீகமும் நன்கு புலப்படுகிறது.

RangaRakes tamilnavarasam.com

திருவாளர் மு .இகராவயங்கார் அவர்கள் முத்தரையரைப் பற்றிக் கூறியிருப்பதும் இங்கு அறியற்பாலது. அது நாலடியாரில் முத்தரையரைப்பற்றி இரண்டிடங்களில் 7, 8-ஆம் நூற்ருண்டுகளில் பிரபலம் பெற்ற கள்வர் மரபினராவர். இவ்வம்சத்தவர் — சங்க காலத்திலேயே சிற்றரசராக விளங்கியவர் என்பது, கள்வர் கோமான் புல்லி, கள்வர் கோமான் தென்னவன் என்னும் பெயர்கள் அக்நானூறுப் பயில்வதனுல் அறியப்படும் செந்தமிழ் தொகுதி 13 பக்கம் 273.

## மறவர் குலத்தொன்மை வரலாறு :

புறம்—நெடுமொழி வஞ்சி.

''ஒன்ருதார் படைகெழுமித்
தன்ருண்மை எடுத்துரைத் தன்று''

''களங்கெழுமிய படையிரிய - உளங்கழிந்த
வேல்பதித்தோச் சின்று''  — புறம் நூழிலாட்டு

''விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந் தன்னுளை யெடுத்து''

''என்னை முன்னில்லன் மின்தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்''

''இட்டுத்தலை யெண்ணும் எயின ரல்லது
சுட்டுத்தலை போகாந்தொல் குடிமறவர்''
—சிலப்பதிகாரம்

என்பன போன்ற மேற்கோள்கள் நமது சங்க இலக்கியங்களில் காணப்படுவன, மறவர் மக்கள் பண்டைத் தமிழ் நாட்டில் வாழையடி வாழையாய் வந்த பெருங்கூட்டத்தினர் என உணர்த்துகின்றன. இம் மறவர் குலமக்கள் பேரரசராய்ப் பண்டைக் காலத்திலும் விளங்கினர் என்பதைச் 'சங்கரசோழனுலா' வென்னும் பழைய தமிழ் நூல் விளககுகிறகு.



''மாது மணக்கு மணவாளன் சேதுக்குந்
தஞ்சைக்குங் கோழிக்குந் தரமப்புகாருக்கு
முஞ்சைக்கு மேனையு தகைக்கும் — வஞ்சிக்குங்
கொள்கைக்கு கூடற்குங் கோசலைக்குங் காஞ்சிக்கும்
விற்கைக்கு நில்லா மதிலைக்கு — நிற்கு
மரசனரசர் குலாந்த கஞரப்
பிரசன பயர் பெருமாள''

எனப்பல நாடுகட்கும் முற்பட வைத்துச் சேரரதுநாட்டை வழங்குதலாற் தெரிந்து கொள்ளலாம். இதற்கேற்ப, 'ஆக்நேய புராணந்தர்க்கதமான புல்லாரணிய க்ஷேத்ர மஹாத்மியத்திற்' ஸ்ரீராமமூர்த்தி, ஆங்குத்தன் பாதங்களைத் தொழுதுநின்ற 'நிஷாதகத் தலைவன் ஒருவனைத்தான் கட்டிய சேதுவைப் பரிபாலித்து வருமாறு நியமித்தருளினன் எனக் கூறப்பட்டிருக்கிறதும் இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. இந்நிஷாதகத் தலைவனும் இவன் வழியினரும் குறுநில மன்னராய் நின்று செந்தமிழ் வளர்த்த செல்வப் பாண்டியரென்னும் முடியுடைப் பேரரசர் கடும்போர்ப் படைத் தலைவரிடம் முற்காலத்திலிருந்தனராவர். இவ் வேற்றுமையாற் பாண்டிநாட்டிலுள்ள சேதுவுக்கும் பாண்டியரே பேரரசாரதல் பற்றி, 'மதுரைத் தமிழ்க் கூத்தனூர் கடுவன் மன்னனுர் என்னும் பழைய சங்கப் புலவர் எழுபதாம் அகப்பாட்டில்'

''......................... ...... பதுவது
பொன்னீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
காணலாம் பெருந்துறைக் கவினிமா நீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வெனவேற் கவுரியர் தொன்முது கொடி
முழங்கிரும் பௌவமிரங்கு முன்றுறை
வெல்போரிராமனரு மறைக் கவித்த
பல் வீழாலம் போல
வொலிய வித்தன்றிவ் வழுங்க லூரே''

RangaRakes tamilnavarasam.com

என்பதனுல் திருவணையாகிய சேது' பாண்டியனதும் சேதுவை ஆண்டவர்கள் பாண்டியர்கள் என்றும் புலப்படுகின்றது. ஆகவே சேதுபதிகள், தொன்மைக் காலந்தொட்டு இற்றை நாள் வரை தொடர்பு நீங்காது பாண்டியன் வழியினராக வந்து கொண்டிருக்கின்றனர் என்பதற்குச் சந்தேகமில்லை.

சரித்திர காலத்திற்கு முந்திய :— புராண, இதிகாச காலத்தில், மூவேந்தர்களுடன் தொடர்பு கொண்டு தனியரசராய் சேதுக்கரையைக் கட்டிக்காத்து வந்தது சேதுபதிகள் ஆவர்.

## அகமுடையர் குலந்தொன்மை வரலாறு சடையப்பவள்ளல்

இதே மாதிரியாக அகமுடையர் மக்களது தொன்மையைக் கவனித்தால் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்போதய தஞ்சை ஜில்லாவிலே கும்பகோணம் தாலுகாவில், கதிர்வேள் மங்கலம், அல்லது கதிராமங்கலம் என்னும் கிராமத்தின் பக்கத்திலே புதுவை என்னும் ஒரு சிறு கிராமம் உண்டு. அவ்வூரில் சங்கர முதலியார் என்னும் செல்வச் சீமான் புதல்வராய்த் தோன்றிச் சடையப்ப வள்ளல் குபேர சம்பத்துடன் வாழ்ந்தார் என்பது நமது தமிழ் நூல்கள் வாயிலாகவும், இதிகாசங்கள் வழியாகவும் தெரிய வருகிறது. தமிழ் மூவேந்தர்களின் ராஜப் பிரதிநிதியாகச் சோழ மண்டலத்தில் சோழராஜாவின் அமைச்சராயிருந்து அகம்படித் தொண்டு புரிந்து வளநாடு காத்து வந்தமையின் வள்ளல் எனவும், விளங்கினர். அந்நாளில் 'பரராஜசிங்கம்' என்னும் அரசன் சிங்களத்தீவையாண்டு வந்தான். அத்தீவில் கொடிய பஞ்சம், ஏற்பட்டது. பஞ்சத்தின் கொடுமையைப் போக்கி, மக்களுக்கு நிவாரணம் செய்ய முடியாமல் பரராஜசிங்கன் சடையப்ப வள்ளலிடம் உதவி கோரி ஓலை விடுத்தான். அவ்வோலையில் 'சடையன் என்னும் வடிவந்தாங்கி வந்துள்ள தர்ம தேவதையே எழு



கடலும் கரைபுரண்டு பொங்கினாலும் அல்லது வற்றி வரண்டு போனாலும் அரசன் முறை தவறி விட்டாலும்: குபேரனை நிகர்த்த சடையப்பன் வாழும் சோழ மண்டலம் செழித்தே இருக்கும். ஈழ மண்டலமோ மழையின்மையால் பசிப்பிணி மக்களையும், கால்நடைகளையும், வாட்டலால் வருந்துகின்றன. என்ன செய்வேன் ஓ! தரும தேவதையே இத்தென்திசை நோக்கலாகாதா" எனக் கண்டிருக்கிறது அது கண்ட சடையப்பன், ஆயிரம் கலம் கதிர் நெல் கொண்டு சென்று பசிப்பிணி விலக்கி ஜீவர்களை மீட்டுமன்றி வருணனும் அருள் சுரந்தான், நாடு செழித்தது.

பின் ஒருக்கால், சேர சோழ பாண்டியர் மூவரையும் தன் வீட்டிற்கு விருந்தினராக வரும்படி அழைத்தனன். மூவேந்தரும் அவன் வேண்டுகோளுக்கிணங்கித் தத்தம் பரிவாரங்களுடன் சென்று மகிழ்ந்தனர். அதனுல் தான் சடையப்ப வள்ளலிற்குத் 'திரிகர்த்த ராயன்' என்ற பட்டம் வழலங்கலாயிற்று. 'அளிக்கும் படை மூவேந்தர் கொண்டாடும் விருந்தால் அதிசயமாய்த் தினைக்கு திரிகர்த்தராயனெனச் செய்யும் வரிசைத்திறன் சேர்ந்தோன் விளக்கும் அரிசி மாற்றிய நீர்வெள்ளம் கிழக்கு விளயுமென விளக்கும்' பெருமைப் புதுவையர்கோன் வளஞ் சேரசோழ மண்டலமே எனப் பாடப்பட்டிருப்பதில் அவர் அகம்படியத் தொண்டு புரிந்து அமைச்சரானதனுல் அகமுடியர் என்னும், திரிகர்த்த ராயன் என்றதில் ராயன் என்னும் பட்டம் பெற்றதனுல் இப்பட்டங்கள் கள்ளர்களுக்குரிய பட்டங்கள் ஆனபடியால் அகமுடையர்களும் கள்ளர்களுக்கு பொதுவான பட்டங்களுடனும் விளங்கினமை தெரியவருகிறது.

ஆதியில் தோன்றிய சாதிகள் :

அ. சிதம்பரனூர் அவர்கள் சேரர் வரலாறு :- பக்கம். 2

இடத்தின் பெயரால் ஏற்பட்ட 18 வகுப்புகள்: தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, பக்கம், 97—99

RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 1. | சேரர் | சேரநாட்டு வேளாளர் |
| 2. | சோழர் | சோழநாட்டு வேளாளர் |
| 3. | பாண்டியர் | பாண்டிய நாட்டு வேளாளர் |
| 4. | ஒளியர் | ஒளி நாட்டு வேளாளர் |
| 5. | நாகர் | நாகநாட்டு (ஈழம்) வேளாளர் |
| 6. | பல்லவர் | பல்லவ நாட்டு வேளாளர் |
| 7. | கொங்கர் | கொங்குநாட்டு வேளாளர் |
| 8. | துளுவர் | துளுவ நாட்டு வேளாளர் |
| 9. | கார்காத்தார் | கார் மண்டல வேளாளர் |
| 10. | தொண்டை நாட்டார் | தொண்டை மண்டல வேளாளர் |
| 11. | குறவர் | குறிஞ்சிநில மக்கள் |
| 12. | ஆயர் | முல்லை நில மக்கள் |
| 18. | வேடர் | பாலை நில மக்கள் |
| 14. | பரதவர் | நெய்தல் நில மக்கள் |
| 15. | பள்ளர்-மள்ளர் | மருதநில மக்கள் |
| 16. | கள்ளர் | |
| 17. | மறவர் | |
| 18. | அகமுடையர் | சேனைக்குரியவர் |

1. நாவிதன் 2. குயவன் 3. வண்ணான்
4. ஒச்சான் 5. தச்சன் 6. தட்டான்
7. கொல்லன் 8. கன்னான் 9. கம்மியன்



10. அறுவை வாணிகன் 11. இலைவாணிகன் 12. எண்ணெய் வாணிகன்
13. மாலைக்காரன் 14. பாணன் 15. பள்ளன்
16. வலையன் 17. இடையன் 17. வீரமுடையான்

மேற்கண்ட அடிப்படையில் 18 பிரிவுகளும் அவைகளின் பட்டப்பெயர்களும் துவங்கி நாளடைவில் பெருகியமையும் 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழர் என்னும் நூலில் வி. கனகசபைப்பிள்ளையவர்களும் வலியுறுத்துகிறார்கள்.

கி. மு. 900 வாக்கில் வடநாட்டிலிருந்து ஆரியர்கள் கூட்டம் தென்னாட்டிற்குள் நுழையவாரம்பித்தன. அவர்கள் தமிழரசர்களின் செல்வாக்கைப் பெற்று நாட்டில் ஆதிக்கப் செலுத்தலாயினர். மன்னர்கள் ஆரிய நாகரிக மோகத்திற்கு அடிமைப்பட்டனர். ஆரியர்கள் பிரம, சத்திரி, யவைசியர், சூத்திரர் என்னும் நான்குவித வருண பாகுபாடுகளையுடையவராதலின்; அம்முறையானது தமிழ் மன்னர்களிடம் அமைச்சர்களாகவிருந்த ஆரியர்கள் மூலம் தமிழர் அரசியலிலும் புகுந்தது. அறிஞர், அரசர் மறவர் பரவர், குறவர் என்றிருந்த வகுப்பினராகிய ஐந்து வகை தமிழ் மக்கள் நான்கு வித வருண பாகுபாடுகளுடன் கூடிய ஆரியர்களுடன் ஈரறக் கலந்து இந்நாட்டு மக்களுள் இன்னவரே ஆரியர் இன்னவரே தமிழர் என்று பிரித்தறிய இயலா வண்ணம் தமிழ்க் கடலில் ஆரியச் சிற்றாறு புகுந்து ஒன்றாய் கலந்தது என்பர் வரலாற்று வல்லுநர்கள். அது முதற்கொண்டு தமிழ்நாடு மண்டலங்கள் பலவாகவும், மொழிகள் பலவாகவும் பிரிந்து விளங்கலாயிற்று.

தமிழ் மன்னர்கள் காலத்தில் சாதிகள் தோன்றின. சமயங்களும் வளர்ந்தன. ஒவ்வொரு சாதிக்குள்ளும் பற்பல பட்டப் பெயர்கள் துலங்கின என்றாலும் ஆட்சி பீடத்திலிருந்த தமிழ் மன்னர்கள் பரம்பரையினர், சாதி முறையிலிருந்து தப்பவில்லை. தொன்மையில் நிலத்தால் பிரிக்கப்பட்ட போதும், தொழிலாம் பிரிக்கப்பட்டப் போதும் சேரர்

RangaRakes tamilnavarasam.com

சோழர், பாண்டியர் என்றும், கள்ளர் மறவர், அகமுடையர் என்றும் விளங்கலாயினர்.

பதினெட்டுப் பிரிவுகளாக நில அடிப்படையில் தோன்றிய கூட்டத்தாரில் சேர சோழர் பாண்டியர்களே; கொடியும், முடியு முடையோராய்த் தோன்றி ஆட்சி பீடத்தில் அமர்ந்து வரலாற்றில் நிலைத்தனர் அல்லவா? அன்று தொட்டு, இன்று வரை சேரசோழ பாண்டியர்களில் வமிசத்தில் அரசுரிமைப் பொறுப்போடு பெருகி விரிந்திருக் கூட்டமே ''தேவர் கூட்டம்'' கள்ளர் மறவர் அகமுடையர் ஆவர்—தமிழ் மொழியில் இலக்கியச் சான்றுடன் நிலைத்து நிற்கும் பழமொழி — ''தோட்டி முதல் தொண்டைமான் வரை'' என்பதிலிருந்து விளங்குவதென்ன? சமுதாயத்தில் கீழ்நிலை அந்தஸ்துடையவன் தோட்டி உயர்நிலை அந்தஸ்துடையவன் தொண்டைமான் : இவ்வாறாகத் தோட்டி முதல் தொண்டைமான் வரையிலான உட்பிரிவுகள் நம் மன்னர்கள் ஆட்சி காலங்களில் (96) தொண்ணூற்று ஆறு ஆகவிளங்கினமை புலனாகிறது. உயர்நிலையில் விளங்கியவன் தொண்டைமான் தமிழ் அரசன். அவன் இனம் சோழர் வம்சம் (இராஜ இராஜ சோழத்தேவன்) கள்ளர் சமுகம் : முக்குலத்தில் ஒன்று.

குலங்கள் எத்தனை தோன்றினும் மூவேந்தர் (சேரர், சோழர், பாண்டியர்) வம்சம் தேவர் சமுகமே (கள்ளர் மறவர் அகமுடையர்) ஆவர். முக்குல மக்கள் ஒவ்வொருவர் பிரிவின்பாலும் பற்பல பட்டங்கள் விளங்கி வருகின்றன. அவைகள் யாவும் அவர்களின் தனித்தனிக் குடும்பப் பட்டங்களாகும். மூவருக்கும் பொதுவான பட்டம் ''தேவர்'' ஆகும். நடைமுறையில் மூவேந்தர் பாலும் இப்பட்டம் (தேவர்) தோன்றுகிறது. முக்குல மக்கள் பாலும் தேவர் பட்டம் துலங்குகிறது. எனவே மூவேந்தருக்கும் முக்குல மக்கட்கும் பொதுப்பட்டம் தேவர். இம் மூன்று பிரிவினர்களும் — இலக்கியங்களிலும் சரித்திரச் சான்றுகளிலும் எவ்வாறு விளங்கி வந்திருக்கின்றனர். என்பனவற்றை முன்பே முன்பே விளக்கியுள்ளோம்.

# தஞ்சை நாட்டுக் கள்ளர்கள் பாண்டிநாட்டு மதுரை தேசத்தில் குடியேறியதெப்படி?

நாகர், பல்லவர், சோழர், பாண்டியர், சேரர்; என விளங்கிய வீரத் தமிழ் மன்னர்களின் வழித்தோன்றல்கள் தான், இன்று தமிழ்நாட்டில் பெருந்தொகையினராய் வாழ்ந்து வரும் தேவமார் சமூகத்தினராவர். இவர்கள்; கள்ளர், மறவர், அகமுடையர், அம்பலக்காரர், வல்லம்பர், வன்னியர், முத்தரையர், படையாச்சி, முதலியார், வெள்ளாளர், போன்ற அநேக வகுப்பினர்களாக விளங்கி வருகின்றனர். இவ்வுண்மைகளின் அடிப்படையான தத்துவங்கள் முன்னதாக விளக்கப்பட்டிருக்கின்றன. சோழ மன்னர்களின் வழித்தோன்றல்கள்; கள்ளர்களெனவும், சோழ நாடாகிய தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும், புதுக்கோட்டை ராஜ்யமுமே கள்ளர்கள் பெரும்பாலாகவதியும் பிராந்தியங்கள் எனவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் மதுரைச் சீமைக் கள்ளர்களின் வரலாறு சிந்தனைக்குரியதாகிறது. ஆழ்ந்து கவனிக்க வேண்டிய அவசியமுமேற்படுகிறது. சம்பிரதாயப்படி மதுரை பாண்டிய நாட்டின் தலைநகர். பாண்டியன் வழித் தோன்றல்கள் மறவர்களாகும். ஆகவே மதுரைப் பிராந்தியங்களில் மறவர் மக்கள் அமிதமாக வாழ வேண்டியது இயற்கை. அப்படியிருக்க நடைமுறை வேறாகக் காணப்படுகிறது. 1921-ஆம் வருஷத்து ஜனசங்கியைப்படி பார்க்கப் போனால் மதுரை



RangaRakes
tamilnavarasam.com

ஜில்லாவின் ஜனத்தொகை மொத்தம் 2007082. இதில் கள்ளர்கள் 190919; மறவர்கள் 55691; அகமுடையர்கள் 62409 போக மீதமிருப்போர்கள் இதர வகுப்பினர்கள். இதிலிருந்து கள்ளர்கள் தொகை மதுரை ஜில்லாவில் கூடியிருப்பது புலனாகின்றது. இதற்கு மூலாதாரமான காரணங்கள் இல்லாமலிருக்கிறதற்கு நியாயமில்லையாகையால் அவற்றை, ஆதாரத்துடன் ஆராய்வோம்:—

பழைமையான பாண்டிய ராஜ்யத்திற்குத் தலைநகரான மதுரைக்கு மேற்கேயுள்ள திருமங்கலம், பெரியகுளம், தாலுகாக்கள் அடங்கியத் திருவாங்கூர் எல்லையாகிய மேற்குத் தொடர்ச்சிமலை வரையும் ஆகும். அத்துடன் மதுரைக்குக் கிழக்கே, மேலூர் தாலுக்காவைத்தொடர்ந்து, தொண்டைமான் புதுக்கோட்டை ராஜ்யத்தின் கிழக்கெல்லையை இறுதியாகக் கொண்டுள்ள, இந்தக் கிழக்கு மேற்காகப் பரந்து கிடக்கும் பாண்டிய ராஜ்யத்தின் வடக்கு எல்லை மதிலைப்போல் வியாபித்திருக்கும் நிலப்பரப்பானது கள்ளர்கள் அமிதமாக வாழ்ந்து வரும் பகுதி. இதற்குக் காரணம் காண்போமாகில் பல உண்மைகள் பரிசீலிப்பதற்குச் சுவையான ஆதாரங்களாகின்றன.

1. கள்ளர்கள் காஞ்சிபுரத்திலிருந்து தென்திசை நோக்கிப் புதுக்கோட்டை வழியாக மேலூர் பிராந்தியத்தில் குடியேறி மேற்கு நோக்கி ஆனையூர் மட்டும் பரவி காராள வேளாளரை வென்று தன்னரசு ஏற்படுத்திய கூட்டத்தார் (மதுரை ஜில்லாக்கெசட்) விளக்குகிறது

2. திருவேங்கடமலையில் வசித்தோரும், அஞ்சா நெஞ்சம் படைத்தோருமாகிய கள்ளர் குலத்தவரை மதுரையை ஆண்ட 'கள்வர் பெருமகன் தென்னன்' என்ற பாண்டியன், தென்னாட்டில் கொண்டு வந்து குடியேற்றினான் என 'அகநானூற்றில்' பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டைக்கு வடகீழ்பாலுள்ள வீசங்கி நாட்டில் இவர்கள் தலைமை வகித்திருந்தனர். இவர்களில் பலர் அரசர்களோடும் சம்பந்தப் பட்டிருக்கின்றனர். நாராயணப்



பேரரசு மக்கள் என்றும் படைத்தலைவர்கள் என்றும், தந்திரிமார்கள் என்றும், சர்த்தர்கள் என்றும், கள்ளர்கள் அழைக்கப்பட்டனர்.

அகநானூறு ந.மு.வே. அவர்கள் (கள்ளர் சரித்திரம்)

. கி பி. 99 -ஆம் வருஷம் முதல் கி. பி. 1216 வரை பாண்டிய தேசம் சோழர்களுக்குச் சேர்ந்த ஒரு ராஜதானியாகவிருந்தது. அது காலை சோழ தேச மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பாண்டிய நாட்டில் வலுப்படுத்துவதன் பொருட்டுத் தம் சமூகக் கள்ளர்களை (படையாளர்களை) மதுரைப் பிராந்தியத்தில், படைதளங்களாக விளங்கிய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நாகமலை, அழகர் மலை, மேற்குத் தொடர்ச்சிமலைப் பிராந்தியங்களில் கோட்டை கட்டிக் குடியமைத்தனர். இனி இவைகளைக் காணலாம்:—

## காஞ்சியிலிருந்து வந்த கள்ளர் கூட்டம்

கள்ளர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்து மேலூர் நாட்டில் குடியேறி, மேற்கே திருமங்கலம் தாலுகா ஆனையூர் வரை பரவியமைந்தனர் என்ற விவரம் தர்ஸ்டன் அவர்கள் தென் இந்தியச் சாதி வரலாற்றில் காண்க. இப்படியாகக் குடியேறிய கள்ளர்கள் வேளாளருடன் அமர் செய்து அவர்களை தெற்கு நோக்கி வெருட்டி விட்டனர். வேளாளரிடம் போரிட்டு வெருட்டுவதற்கு முன் கள்ளர்கள் வேளாளரிடம் விவசாய வேலையில் அமர்ந்து வேலை செய்து அவரிடம் தொழில் கற்றும் கொண்டனர். கள்ளர் நாட்டில் வேளாளர்கள், தங்கள் முன்னோர் வாழ்ந்த காலத்தில் கட்டிய வேளாளர்கள், கோவில்கள் பிற்காலத்தில் கள்ளர்களால் பராமரித்து வருவதும் தெரியவருகிறது. கள்ளர் பெயர்கள், அவர்கள் வாழ்ந்த இடங்களின் பெயர்கள் இவைகளைப் பார்த்தால் கொடூரம் உக்கிரம் ஆகிய பயங்கரத் தன்மையைக் காட்டக் கூடியதாகத் தெரிகிறது. இதிலிருந்து அவர்கள் சிந்தனை மனோபாவம் எப்படி எனத் தெரிய முடியுமல்லவா? மனப்போக்கு செய்தொழில், சேர்ந்து உறையுல்

RangaRakes tamilnavarasam.com

இடம், இவைகள் பொருத்தம் கொள்ளாத காரணத்தால் இவர்கள் குடியேறிய பிறகு காராளர் தென்திசை நோக்கிக் குடி பெயர்ந்திருக்க வேண்டும்.

அக்காலை கள்ளர்கள் கொண்டிருந்த பெயர்கள்: - வேங்கைப்புலி, வெக்காப்புலி, சாமிப்புலி, செம்புலி, சம்மட்டிப்புலி, திருமான், சாயும் படை தாங்கி, என்பன. உயர்ந்த மிருகங்களின் சிறந்த குணங்களைக் கொண்டுள்ளன என்று தர்ஸ்டன் நூலில் 72-ம் பக்கத்தில் விளக்கம் காண்கிறது. இதே போன்று காஞ்சியிலும், தஞ்சையிலும் உள்ள இன்னோர்களின் நாட்டின் பெயர்கள், 1. இராஜேந்திர சிங்கவளநாடு 2. அரிசில் வடகடுவாய். 3. அருண்மொழித் தேவன் வளநாடு 4. வடகடுவாய் தென்கடுவாய் 5. ஜெய சிங்க குல கால வளநாடு 6. ஆனைமலை நாடு 7. புலியூர்க் கோட்டம் என்றும்; தெரிய வருகிறது. தங்கள் நாட்டை எப்படிச் சோழ மண்டலத்தில் ஆட்சிமுறைக்கேற்றவாறு பிரித்திருக்கிறார்களோ அதே மாதிரியாக இவர்கள் வந்து வாழும் மதுரைப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் பிரிவினை செய்து; சாதிக் கட்டுப்பாட்டை அமுல் செலுத்தி நீதி நிர்வாகம் அமைப்புடன் தன்னரசு செலுத்தி வரலாயினர். இவர்கள் பெயரும் பட்டமும், இப்போதும் முன்போலவே வைத்திருப்பதும் தெரிய வருகிறது. இவர்களின் ஆதித்தெய்வம் சிவன் — மேலூரில் வந்து குடியேறிய போதும் பாரிவள நாட்டில் உள்ள பிரான் மலையின் சிவஸ்தலத்தில் பெரும் பங்கும் ஆதிபத்திய உரிமையும் பெற்றனர். பிரான்மலையிலிருந்து தாங்கள் மேற்கு நோக்கி ஆனையூர் வந்து நிலையங்கொண்ட காலை அங்கும் சிவன் கோயிலை (அயராவதீஸ்வரர்) ஆலயம் ஸ்தாபிதம் செய்து வாழ்ந்தனர்.

இரண்டாவதாக திருவேங்கடத்திலிருந்து தென்னனால் கொண்டுவரப்பெற்றவர்கள் என்பதைப்பார்க்குமளவில், உண்மைகள் மலிந்து கிடக்கின்றன. தென்னன் காலம் இதிகாசத்திற்கு முந்தியது என்பது வெளிப்படை. மதுரைச் சீமையில் பிரசித்தம் வாய்ந்த சிவமதத்தை



(சைவம்) சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளி அவர் 64 திருவிளையாடல்கள் செய்து பிரசித்தமடையச் செய்தது யார்தான் அறியார். அப்படிக் கொற்ற தெய்வத்தமிழ் அரங்கில் தேன்சுவைச் சைவமும் கொழுந்து விட்டு ஒளிவீசும் வைகை திடலுக்கு வைணவர் கூட்டம் (அக்காலத்து வைணவக் கள்ளர்) வடக்கிலிருந்து வந்ததெப்படி? ஆராய்வோம்: சோழர்களில் பெரும்பான்மையினர் வைணவர்கள்: நீண்ட காலமாகத் திருமாலின் திருவடிப் பிரதேசமாக விளங்கி வரும் வடவேங்கடப் பிரதேசத்தில் வாழ்ந்து வைணவத் தொண்டு செய்த திருக்கூட்டம். எனவே மதுரையில் வந்து வாழ்ந்தவர்கள் வேங்கடத்தில் இருந்துதான் வந்திருக்க வேண்டும். அவர்கள் மதுரைப் பிரதேசத்தில் வந்து சைவ சம்பிரதாயக் கொள்கைகளையுடைய மக்களோடு கூடி வாழ்ந்தாலும்; தங்களின் வைணவ சமயநெறிகளை வளர்ந்தோங்கச் செய்து, சைவக்குழுவினருடன் சேர்ந்து வாழ்ந்து வரலுற்றார்கள். இக்கூட்டம் மதுரைக் கள்ளர்நாடு பூராவிலுமிருந்தாலும் நத்தத்துச் சீமையிலும், மேலூர் நாட்டின் அகன்ற பகுதியிலும் வெள்ளியங்குன்றம் சீமையிலும் மிகையாக வாழ்ந்து வருகின்றார்கள்: இவர்கள் வாழும் இடங்களிலெல்லாம் ஒருங்கிணைந்து வைணவர்களாகிய ஆயர்களும் குழுமியிருந்து வருகிறார்கள்.

தென்வேங்கடமென்று விளங்கும் திருமாலிருஞ்சோலையாகிய அழகர்மலை இன்னாட்டிலிருப்பதும், அவ்வழகிய சோலைமலையில் சுந்தராசமூர்த்தி எழுந்தருளி இருப்பதும், அம்மூர்த்திக்குக் கள்ளழகர் என்று காரணப்பெயர் வழங்கி வருவதும் சரித்திர ஆராய்ச்சிக்குத் தக்க சான்றுகள்:

தொன்றுதொட்டு கள்ளர்கள் திருமாலிருஞ்சோலையைத் தங்கள் புண்ணிய பூமியாகவும், சுந்தராசமூர்த்தியைத் தங்கள் குல தெய்வமாகவும் கொண்டிருக்கிறார்கள். கோட்டையும் கட்டி ஆட்சியும் புரிந்து தன்னரசு செலுத்தியும் வந்திருக்கிறார்கள். கள்ளர்களின் திரண்ட செல்வம் திருமாலிருஞ்சோலைப்பெருமாள் தேவஸ்தானத்தை வளப்படுத்தி

RangaRakes tamilnavarasam.com

யிருக்கிறது. நவாப்பின் ஆட்சியிலும், நாயக்கர்கள் ஆட்சியிலும் தங்கள் நாட்டாட்சிக்கு அழிவுகள் ஏற்பட்டாலும் கோயில் ஆட்சிக்கு வந்த இடர்களைப் பல்லாயிரக்கணக்கான உயிர்த் தியாகங்கள் பல செய்தும் விடாப்பிடியாகக் கட்டிக் காத்து வந்துள்ளார்கள். மகமதியர்களும் வடுகர்களும் ஒவ்வொரு காலங்களில் ஆதிக்கம் செலுத்திய போதும் மேல்பார்வை உரிமை, திருவிழா ஆதிபத்திய மரியாதைகளும் மான்யங்களும் தந்து நயந்திருக்கிறார்கள். மகமதியர்கள் செய்த கொள்ளையும், கோயில் அழிவும் சொல்லிமுடியாது. அத்தனைக்கும் சேர்த்து வடுகர்கள்; சிறப்பான சீர்திருத்தங்கள் செய்து கோயிலை விருத்தி செய்தார்கள் என்று சொல்லாமலிருக்க முடியாது. காலவெள்ளத்தினாலோ அரசாங்க மாறுதலினாலோ தங்கள் தவமும், செபமும், திருத்தொண்டும், தெய்வச் சரித்திரமாகத் தங்கள் சமூக அடிப்படையில் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டித் தங்கள் கோவிலுக்குக் கள்ள அழகர் தேவஸ்தானம் என்று பெயர் கொடுத்து அமைக்கப்பட்டிருக்கிறது. உலகளந்த மாயன் இன்னோர்களின் மூதாதையர்கள் தன்பால் காட்டிய பக்திக்கு அறிகுறியாய் அவர்களின் மனமகிழ்வுக்காகத் தன்னை "ஒரு கள்ளன்" என்று உலகுணரும்படியாக வேடந்தாங்கி, யாவருக்கும் காட்சிதந்து மகிழ்கிறான் என்பதை உணரலாம்.

ஆதியில் துருக்கர்கள் கோயிலை இடித்துத் தள்ளுவதற்கு முன் கள்ளர்களால் அமைக்கப்பட்ட "அழகாபுரி" என்னும் தளத்தின் இடிந்துபோன இடங்களையும் இன்று காணலாம். கோட்டை கொத்தளங்கள், மாட மாளிகைகள் எல்லாமே அமைந்திருந்ததாகத் தல புராணம் கூறுகிறது. கள்ளர்கள் உயர்ந்த தெய்வ பக்தியோடு சிறந்த வீரர்களாய் வாழ்ந்து நாட்டின் விவசாயத்தைப் பெருக்கி மதுரைச் சீமையின் மாண்பினை உயர்த்தினர். இவர்கள் நல்வாழ்விலும் நாட்டின் சிறப்பிலும் மகிழ்வு கொண்ட "தென்னன்" தன்னைக் கள்வர் தலைவன் என்றும் கள்வர் "பெருமகன் தென்னன்" என்றும் அழைத்துக்கொண்டான்.



இன்றைக்கும் கள்ளர்கள் ஸ்வாமியாகிய கள்ளழகரைப் பாடித் துதிக்கும்போது;

"பிறந்தார் வடக்கே—சுந்தராசமூர்த்தி
பெயர்கொண்டார் — தென்மதுரை

என்று தங்கள் ஸ்வாமியின் முந்தியக் கோயில் கொண்ட ஸ்தலமாகிய வேங்கடம் இங்கிருந்து வடதிசையில் இருக்கிறது என பிரஸ்தாபித்து வடக்கு நோக்கிக் கை கூப்புகிறார்கள். அத்துடன்

பாசி படர்ந்த மலை — பங்குனித் தேர் ஓடு மலை
சுந்தராசமூர்த்தியின் திருத்தேர் ஓடும்
ஊசி படர்ந்த மலை — அப்பன் திருப்பதியில்
சுந்தராசமூர்த்திக்கு — உத்தராட்சம் காய்க்குமலை

என வேங்கடத்தை நினைத்து அருள்பொருந்தி ஆடல்பாடல்கள் செய்து அருள் கொள்கிறார்கள். இம்மாதிரியான பாடல்கள் முன்னோர்கள் மதுரை நாடடைந்த போது தொடங்கி இன்று வரை கர்ண பரம்பரையாக அவன்மகனை வனைகப் பாடி வருவதால் தொடர்பான சரித்திரம் நிலைத்து நிற்கிறது. இப்படி நாட்டுப்பாடல்கள் கள்ளர்கள் பிறந்த விடம் தஞ்சை (வேங்கடம்) வாழ்ந்துவருவது மதுரைச் சீமை என்பதற்குத் தக்க ஆதாரம் : அதுவும் தவிர இவர்கள் தெய்வ வணக்கம் செய்யும்போது போர் செய்யும் முன்னும் ஏர்த்தொழில் துவக்கும் முன்னும், ஆயுதங்களுக்குப் பூஜை செய்யும் போதும் சுப காரியங்கள் செய்யும்போதும் வட வேங்கடத்தை நோக்கிக் கை கூப்புவது வழக்கமாக இருந்து வருகிறது. இத்தகைய காரணங்களால் கள்ளர்கள் பாண்டியனால் தன் நாட்டில் கொண்டு வந்து குடியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

RangaRakes tamilnavarasam.com

## சோழர்கள் தங்கள் ஆதிக்கத்தில் பாண்டிய நாட்டில் பாசறைகளமைத்து கள்ளர்களை குடியமைத்தது

சோழர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பாண்டி நாட்டில் பரப்பி ஆதிபத்திய உரிமையோடு ஏகமாக சோழ பாண்டிய நாட்டை ஆண்டு வந்த காலத்தில், தங்கள் ஆதிக்கம் எப்போதும் பாண்டி நாட்டில் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்காக மதுரைச் சீமையில் பாசறைகளைக் கட்டி அங்கு தங்களுடைய படைகளைப் பாளையங்கொள்ளச் செய்தார்கள் (Ref Thurston) பாண்டி நாட்டில் தென்மேற்கு மூலையில் இருந்து வடகிழக்கு மூலை, தொண்டைமான் புதுக்கோட்டை வரைக்கும் ஆன ராணுவ அரங்கு சோழனுக்கு ஒரு பாதுகாப்புச் சுவராயிற்று. இம்மாதிரிக் கோட்டைகள் நெடுகிலும் அமைந்திருக்க வேண்டுமென்பதற்கு ஆதாரம் இந்தப் பிரதேசத்தில் இன்றும் கோட்டைகள் இருந்ததை உதாரணத்துடன் விளங்குகிறது. தென்மேற்கு மூலையில், முதல் கோட்டை ''கம்பம்'' கம்பம் கோட்டை அடையாளங்களும் கோட்டைத் தெய்வம் பெருமாள் கோயிலும் இன்றும் இருந்து வருகிறது. இக்கோட்டையின் தளபதி சரித்திரப் பிரசித்தம் பெற்ற கம்பராயன். கம்பராயன் என்பது பரம்பரை பெயர். கம்பராயன் நாயக்கர் காலத்திற்கும் முந்திய சிற்றரசுத் தலைவன். விஸ்வநாதன் காலத்தில் 72 பாளையங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டாலும் பாளையப்பட்டு முறையை எதிர்த்து மாண்டவன் என்பது சரித்திரம்:— அப்படியாக அக்காலத்தில் அமைக்கப்பட்ட கோட்டை கம்பம், உப்புக்கோட்டை, (சின்னமன்னன் ஊர்) சின்னமனூர், வீரபாண்டி, அல்லிநகரம், வாடிவாசல் (அதாவது இப்போதைய தொட்டப்ப நாயக்கனூர்) கரிக்கோட்டை (கரிக்கட்டாம்பட்டி) கருமாத்தூர் கோட்டை, நாகமலை புதுக்கோட்டை' மதுரை மேலூர் வழியாகப் புதுக்கோட்டை வரையிலும் கோட்டைகள் இருந்திருக்கின்றன இக்கோட்டைகளில் எல்லாம் தன் நாட்டு ராணுவத்தினர் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் யுத்தமில்லாத காலத்தில்



பாதுகாப்பு நிமித்தம் பாளையங்கொள்ளச் செய்யப்பட்டபடியால் எல்லோரும் குடும்பத்துடன் குடியமர்ந்தனர். படையினர் பூராவாகக் கள்ளர்களாகவே வந்திராவிட்டாலும் தளபதிகள் சேனாதிபதிகள் முதலிய முக்கியஸ்தர்கள் சிவில் நிர்வாகஸ்தர்கள் அரச பரம்பரையினர் கள்ளர்களாகவே அமைந்திருக்க வேண்டும்.

1216இல் சோழர் அரசு வீழ்ச்சி அடைந்து பாண்டியர் சோழ நாட்டை ஆண்டார்கள். அதுகாலை பாண்டிய நாட்டிற்குள் அகப்பட்ட சோழர்படை பாண்டியன் வசமாகப் பிடிபட்ட சேனை பாண்டிய நாட்டில் தங்கியது. அதன்மேல் பாண்டியர் அரசு சிதறுண்டு மகமதியர் கைப்பற்றிய பின்னர் நாடு பல இடருக்குள்ளாகியது. அதுகாலை பாசறைப் படையினர் தன்னரசு நாட்டு கள்ளர்களுடன் ஒருங்கிணைந்து வாழ்ந்தனர்.

எப்படியும் மூன்று தடவைகளில் மூன்று கூட்டத்தினர் ஒவ்வொரு கூட்டமும் தனித்தனிக் காரணங்கொண்டு மதுரை நோக்கியுள்ளதும் எப்படியோ அவர்கள் எல்லோருமே ஒரே பிரதேசத்திலேயே மையங்கொண்டு அமைய வேண்டியதேற்பட்டிருக்கிறது. முதலாவது வந்த கூட்டம் தன்னிச்சையாக வாழ்வின் வளங்கருதி வந்து நாடு தேடிப் பிடித்து வந்திருக்கிறதாகவும், அவர்கள் வந்த இடங்களில் தங்கள் தெய்வீக வாழ்வின் அடையாளமாகத் தங்கள் தெய்வத் தொண்டு செய்ததிலிருந்து தெரிய வருகிறது. அந்தக் கூட்டம் சுத்தச் சைவத் திருமக்களாகும். இரண்டாவதுவந்த கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நாட்டு மன்னன் தஞ்சையிலிருந்து அழைத்து வந்து குடியேற்றியது ஒரு குறிப்பிட்ட இடத்தில் (அதாவது மதுரையைச் சுற்றிலும்) குடி ஏற்றப்பட்டது. இக்கூட்டம் ஒரு சமயப்பற்று அடிப்படை கொண்டது. தெய்வத் தொண்டாற்றிய வைணவக் கூட்டம். மூன்றாவது அரசியல் அடிப்படை ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது நிர்ப்பந்தத்தில் குடி

RangaRakes tamilnavarasam.com

யேறியது. எப்படியும் மூன்று திறத்தினரும் வந்து இப்போது கள்ளர் அதிகமாக வாழும் இடங்களில் தங்கினார்கள் என்பது விளங்குகிறது. வெளியிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வரு விக்கப்பட்டவர்களும் வத்தவர்களும் இங்கு மிகையாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது உண்மையாகத் தோன்று கிறது. இங்கு இருந்திருக்க வேண்டிய பாண்டிய வம்சம் மறவர் தொகை என்னவாயிற்று என்பது ஒரு கேள்வி. அதைக் கவனிப்போம்.

கி.பி. 15வது நூற்றாண்டில் பாண்டிய நாடு சிதறுண் டது. பட்டத்திலிருந்த பாண்டியர்கள் துருக்கியர்களின் நய வஞ்சகத்திற்கும் வாளுக்கும் இரையாகி ஆட்சிபீடம் அன்னி யர்களால் கைப்பற்றப்படவே நாடெங்கிலும் கொந்தளிப்பு ஏற்பட்டது. பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்த அரச வம்ச வழியினர் தென்திசை நோக்கிப் பின்வாங்கிப் படை பலம் பெருக்கிப் பற்பல கோணங்களிலுமிருந்து கல்தானியர் களையும், வடுகர்களையும், நவாபையும் தாக்கிப் பலமிழந்த னர். மேற்கொண்டு நாயக்கர்கள் ஆட்சியின்போதும் பஞ்ச பாண்டியர்கள் பலம் தேடிய பிறகும் மதுரை அரசைக் கைப் பற்ற முற்பட்டனர். இன்னும் இதுபோன்று இக்கூட்டம் பலமான எதிரியின் தலைநகர்ப்பக்கம் இருக்காமல் எட்டிப் போய் நிற்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்க வேண்டும். அப்படியிருந்தும் பாளையப்பட்டுகள் அமைக்கும்போது பாண்டியர்கள் இல்லாமல் பாளையங்கள் அமைக்க முடிய வில்லை. 72 பாளையப்பட்டுகளில் 30-க்கு மேற்பட்ட பாளை யங்கள் மறவர்களுக்கு (பாண்டியர்களுக்கு) உரித்தாகியது. மறவர் பாளையக்காரர்களில் பெரும்பான்மையினர் பாண்டி யர் அரசின் சிற்றரசர்கள், ஆட்சி மாறிய மறவர் வம்ச பரம் பரையாக களம் பலகண்ட வீரர்களாகிய மறவர்கள் தங்கள் பாளையங்களில் குடிபோய் வாழ்ந்திருக்க வேண்டும். செல் வாக்குள்ள மறவர் அரசுகளும் பாளையக்காரர்களும் இராம நாதபுரம் திருநெல்வேலிச் சீமையில்தான் மிகையாகக் காட்டை கட்டி ஆண்டார்கள். தங்களுடைய அரசும் அர



சனும் போன பிறகு எதிரியாகிய வேற்றரசனிருக்குமிடத் தில் வாழ்வதை வெறுத்திருக்க வேண்டும். மேலும் அது காலை மதுரையைச் சுற்றிலும் விவசாயத்திற்தப் பூமியும் லாயக்கில்லாமல் இருந்தது. இத்தகைய காரணங்கள் பாண்டியர் வம்சத்தார் மதுரையில் குறைவதற்குக் காரண மாக இருக்கலாம். பாண்டி மண்டலத்தில் குடி புகுந்தவர் களும் குடியேற்றப்பட்டவர்களுமான கள்ளர்கள் வந்து நின்ற இடத்தில் தைரியத்துடன் நின்று எதிரியை எதிர்த்துப் போர்கள் பலசெய்து கஷ்டநஷ்டத்திற்குள்ளாகித் தன்னரசு ஸ்தாபிதம் செய்தமை புலப்படுகிறது. இப்படியாக மதுரை யாகிய பாண்டிய மண்டலத்தில் குழுமிய கள்ளர் தன்னரசு முறையில் எப்படி நாட்டைத் தஞ்சைச் சோழர் மரபு நாட்டு ஆட்சி முறைப்படி வகுத்து நாடு ஆண்டார்கள் என்பது பின் னால் விளக்கப்படும்.

RangaRakes tamilnavarasam.com

# மதுரைக் கள்ளர் நாடுகள்

திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது ஆராய்ச்சி நூல் ஆகிய கள்ளர் சரித்திரத்தில் தந்துள்ள விரைப்பட்டி; மதுரைப் பிரமலை நாடு சம்பந்தப் பட்ட மட்டில் சில மாறுதல்களுடன், நாடுகளின் விவரம் தரப்பட்டுள்ளது. (நாட்டார் கள்ளர் சரித்திரம் பக்கம் 107 – 112)

தஞ்சைக் கள்ளர்கள் எப்படித் தங்கள் சீமையில் நாட்டமைப்புச் செய்து தங்கள் ஆட்சிப் பகுதியில் நீதி நிர்வாகங்கள் செய்து நாடாண்டார்களோ, அது மாதிரியே, அவர்கள் குடியேறிய மதுரைச் சீமையிலும் நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தி, ஆட்சி செய்து வந்தார்கள். நாடுகளாகவும், கரைகளாகவும், சிறு கிராமங்களாகவும் வகுத்துத் தங்கள் நாட்டுத் தலைவர்களின் சமூக நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். அம்முறை மதுரைச் சீமைக்கள்ளர் நாடுகளில் இருந்து வந்தமை தெரிய வருகிறது. மதுரை சீமையில் சில முக்கியமான நாடுகளைப் பற்றித் தெரிவோம்.

## 1. கீழ்நாடு

இது மதுரைக்குக் கிழக்கேயுள்ள பாகம் (மதுரைத் தாலூகாவும் மேலூர்த் தாலூகாவும் முக்கியமாய் அடங்கும்.) இப்பிரதேசத்துக் கள்ளர்களுக்கு நாட்டாக் கள்ளர்கள் என்பது துலக்கமான பட்டம். அம்பலக்காரர்கள் என்றும் சொல்வதுண்டு. இவர்கள் ஆண்ட நாடுகள் எட்டுப் பிரிவினைகள் உடையது. அவை யாவன :—



## வெள்ளூர் நாடு

இது வடக்கு வேள்வி நாடு, வீரபாண்டிய நல்லூர். ஆகிய வெள்ளலூர் நாடு என்றும் கூறப்படும். இந்நாடு வெள்ளலூர் மாகாணம் 9 ஊர்களையும், அம்பலகாரன்பட்டி மாகாணம் 9 ஊர்களையும், உறங்கான்பட்டி மாகாணம் 11 ஊர்களையும் உடையது. மற்றும் இந்நாடு முண்டவாசிக் கரை, வேங்கைப் புலிக்கரை, சம்மட்டிக்கரை, நைக்கான் கரை, சாயும் படைதாங்கிக்கரை, வெக்காப்புலிக்கரை. சாமிப் புலிக்கரை, திருமான்கரை, செம்புலிக்கரை, கோப்பன் கரை, மழவராயன் கரை என்னும் 11 கரைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கரை ஒன்றுக்கும் இரண்டு கரையம்பலம் உண்டு. நாடு முழுமைக்கும் ஒரு தலைவர் உண்டு இந்நாட்டில் ஏழைக்காத்தம்மன் கோயில், வல்லடியான் கோயில் என இரண்டு கோயில்கள் உண்டு. இவர்கள் வெள்ளலூர்க் கள்ளர்கள் அல்லது வெள்ளூர் கள்ளர்கள் எனப்படுவர். இவர்கள், மாகாணக் கூட்டம், நாட்டுக் கூட்டம் என இரண்டு கூட்டங்கள் நடத்துவதுண்டு. மாகாணக் கூட்டம் என்பது ஒரு அம்பலமும் குடிகளும் கூடுவது. எல்லா நாடுகளிலும் சிவில் கிரிமினல் வழக்குகள் தங்களுக்குள் தீர்க்கப்படும். அபராத வரும்படி அந்தந்தக் கோயில்களுக்குச் சேர்க்கப்படும்.

## மேலநாடு

இந்நாடு ஐந்து தெருவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் 1. வடக்குத்தெரு 2. மேலைத்தெரு 3. தெற்குத்தெரு முதலியனவும் 4. பத்துக்காட்டுத் தெருவானது: திருமூகூர் முதலிய 10 ஊர்களையும் 5. பரப்பு நாட்டுத் தெருவானது முக்கம்பட்டி முதலிய 8 ஊர்களையும் முறையே உடையன. இவர்கள் கள்ளழகரை வழிபடுகின்றனர். கள்ளழகர் கோயில் தேர்த்திருவிழாக்களில் பட்டுப் பரிவட்டம் முதலிய மரியாதைகள் இவர்களுக்குண்டு பத்துக்கட்டு

RangaRakes

tamilnavarasam.com

அம்பலக்காரர்களுக்கு திருவாதயூர் கோவிலிலும் மரியாதையுண்டு, பாத்தியமும் உண்டு. மேலத்தெரு அம்பலக்காரர்கள் பரம்பரையாகக் கள்ளழகர் கோயில் தேவஸ்தானத்திற்குப் பாத்தியஸ்த்தர்களாய்த் தர்மக்கர்த்தாக்களாக இருந்து வந்ததுண்டு. சித்ரா பௌர்ணமி உற்சவத்தின் போது 'தல்லாகுளத்தில்' வெகு சிறப்பாக வாணவேடிக்கையுடன் கள்ளழகரை எழுந்தருளச் செய்யும் முதல் பாத்தியதை இவர்களே தங்கள் அம்பலச்காரர் மண்டகப்படியில் வருஷம் தோறும் நடத்தி வருகிறார்கள் : இவர்களுக்கு நவாப் காலத்தில் மரியாதைக்காகப் பாராட்டியதுடன் மதுரை ஜில்லா 72-நிர் நரசிங்கம் பட்டிக்கிராமம் 221-நிர் இனாம் பட்டா வழங்கப்பட்டது. இதை இவர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

## சிறுகுடி நாடு

இந்நாட்டிற்கு சேறுங்குடி நாடு என்றும் பெயர் உண்டு. தும்பப்பட்டி, கீழவளவு, மேலவளவு முதலிய ஊர்களையும் அதன் பிரிவுகளையும் உடையது. முன்பு வெள்ளூரும் இவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. வெள்ளூர் மன்னவன் (மன்னன் சின்னாண்டி) சின்னாண்டி என்பவனால் சிறுகுடியர் துரத்தப் பட்டனர். இது வெள்ளூர்க்குப் மேற்கே இருக்கிறது. கீழவளவுக்கு நாட்டாக் கள்ளர்களின் காளியம்மன் கோயில் பாத்தியதை உடையவர்கள்.

## நடுவி நாடு:

மேலூர் நாவினிப்பட்டி முதலிய இருபது ஊர்களையுடையது. கையனூர் கோயில், காந்சிவனம் கோயில், முதலியவைகளை ஆராதித்து வருகிறார்கள்:

1. மல்லாக்கோட்டை நாடு—சிவகங்கையின் வடக்கே எட்டு மைலில் உள்ளது. ஐந்து ஊர்களையுடையது. திருக்



கோஷ்டியூர் பாத்தியஸ்தர் முதல் மரியாதை மேல்நாட்டார். 2வது மரியாதை நடுவி நாட்டார் 3வது சிறுகுடி நாட்டார் 4வது வெள்ளளூர் நாட்டார் 5வது மல்லாக் கோட்டை நாட்டார்.

2வது: ஆறூர் நாடு: சிவகங்கையின் மேற்கே ஐந்து மைலில் உள்ளது. இடைய மேலூர், மேலப்பூங்குடி, கீழப் பூங்குடி, நாலு கோட்டை, ஈசானி முதலியவற்றையுடையது.

3வது: அஞ்சூர் நாடு: மதுரையின் கிழக்கே 12 மைலில் உள்ளது. குண்ணனூர், இராசாக்கூர் முதலியவைகளையுடையது.

4வது: திருவாதவூர் நாடு, மேலூர் தாலுகாவில் தென் கிழக்கிலுள்ளது. இடையப்பட்டி அவரைப்பட்டி முதலியன இந்நாட்டிலுள்ளன.

## பிரான்மலை நாடு:

இது மதுரை நகருக்கும் திருப்பரங்குன்றம் மலைக்கும் மேற்கு, நாகமலைக்கும் தெற்கு, மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் கிழக்கு, குண்டாற்றிற்கும் வடக்கு. இதற்குள்ளிட்ட பிரதேசத்தில் அமைந்திருக்கிறது பிரான்மலை நாடு என்று விளங்குகிறது.

இந்த நாட்டில் வாழ்ந்து வரும் பிரான்மலைக் கள்ளர்களுக்குத் தேவர் பட்டம் பொதுவானது. தேவர் என்று பொதுவாகக் குறிப்பிடுவது, இந்நாட்டின் சாதிப் பெரியதனம் பட்டக்காரப்பிள்ளைத் தேவரைக் குறிக்கும். நீதி நிர்வாக பரிபாலன வகைக்கு எட்டு நாடுகளாகவும் உட்பிரிவுகள் இருபத்தி நான்கு உபக்கிராமங்களாகவும் வகுத்து ஆட்சி புரிந்திருக்கிறார்கள் முன்னாளில்; எட்டு நாடுகளுக்கும் 24 உபக்கிராமங்களுக்கும் இன்னும் உள்ளிட்ட சிற்றூர்களுக்கும் தலைமை ஸ்தானமான மகாணம் உரப்பனூர். (ஓர் அப்பன் ஊர்) நாட்டின் உட்பிரிவுகள்:--


tamilnavarasam.com

## திடியன்:

நாட்டின் தலைவர் தூங்கதேவர்: பாகஸ்தர்கள் 9 பேர்கள். 1. பெரிய பிச்சைத்தேவர் 2. பேயாண்டித்தேவர் 3. வாரமுளகித்தேவர் 4. ஏராத்தேவர் 5. நல்லாத்தேவர் 6. காமாளித்தேவர் இவர்கள் 6 பேர்களும் தாயாதிகள். இவர்களின் சகோதரி வாரிசுகள் 3 பேர்கள். 1. மெய்யத்தேவர் 2. பூண்டித்தேவர் 3. குறும்பத்தேவர் ஆக மொத்தம் 9 பாகம். இவர்களுடைய சம்மந்திகள் கருமாத்தூர் மதவானை ஆண்டரசன் வகையார் 5 பேர்கள் ஆதித் தெய்வம் திடியன் சோணக்கருப்பு: உரப்பனூர் இராசதாளி நாட்டு ஆட்சியில் தூங்கத்தேவர் திருமலை பின்னத்தேவருக்கு மந்திரி (தேவர்) ஆவார்.

## வாலாந்தூர்:

நாட்டுத் தலைவர்கள் 4 பேர்கள்: 1. ஜரிபட்டடிச் சின்னிவீரத்தேவர் 2. வாலாந்தூர் கட்டக்கிடாய் முத்துத் தேவர் 3. சக்கிலியன் குளம் வெள்ளையாண்டித்தேவர் 4. கன்னியம்பட்டிச் சின்னக் காமத்தேவர். இவர்களின் உடன் பங்காளி 2 பாகஸ்தர்கள் (1. பேயபிள்ளை 2. பிச்சை பிள்ளை) நாலு தேவர்களின் சகோதரிகள் வாரிசு: 1. லாலாக் கரையான் 2. வாலாந்தூர் அக்காள் மகன் சக்கர பட்டியான் காடிபட்டி இருளாண்டித் தேவர். இந்நாட்டுத் தலைவர் சின்னிவீரத்தேவர் உரப்பனூர் மாகாண ஆட்சியில் திருமலை புன்னைத் தேவருக்கு மந்திரி "தேவர்" ஆவார். ஆதித்தெய்வம் கலியாணக் கருப்பு ஸ்வாமி, ஆண் காளையம்மன் கோவிலில் பாகமுண்டு.

## புத்தூர்:

நாட்டுத் தலைவர்கள் 4 பேர்கள். 1. பெரும்புலித் தேவர். உட்பிரிவு: (1. கல்லுக்குட்டி 2. சாத்தக்காளி) 2. படிவித்தேவர் (உட்பிரிவு கூழை கூட்டம்) 3. பின்னைத்



தேவர் 4. சின்னுத்தேவர். இவர்களுக்கு ஆதித்தெய்வம் நல்லுத்தேவன்பட்டிப் பின்னூர் ஐயர் குமரகோயில் குருநாத ஸ்வாமி, மேற்குத் தொடர்ச்சி மலையில் மீனாட்சி புரத்திலிருக்கும் துர்க்கைஅம்மன் புத்தூர் மலைச்சாமி பெருமாள் மீனாட்சி கோம்பை மீனாக்ஷியம்மன் இவர்களுக்குச் சம்மந்தம் கருமாத்தூர் 6 தேவர்களும்.

## கருமாத்தூர் :

நாட்டுத் தலைவர்கள் 13 பேர்கள். 5 தகப்பன் பிள்ளைகள் 5 பேர் நான்கு தகப்பன் பிள்ளைகள் எட்டுப் பேர் ஆக 13 பேர்கள். 5 தகப்பன் பிள்ளைகள் 1. கொல்லுத்தேவர் 2. புளுந்தான்தேவர் 3. மதவானைத்தேவர், 4. ஆண்டரசன் தேவர், 5. சின்னஓடையாத் தேவர், நான்கு தகப்பன் பிள்ளைகள்: 1. கேசத்தேவர் 2. பரிசப்புலித்தேவர் 3. சின்ன தடியதேவர் 4. பெரியதடியத்தேவர் 5. புணப்புரைத்தேவர் 6. பெரியாண்டித்தேவர் 7. காக்கவீரத்தேவர் 8. குறும்பத் தேவர் இவர்களின் சம்பந்திகள் பாப்பாபட்டி பத்துத் தேவர்கள், வாலாந்தூர், கொக்குளம் முதலக்குளம், புத்தூர் 4 தேவர்கள். ஆதித் தெய்வம் கலியுகநாத சிதம்பரேஸ்வரர், மும்மூர்த்திகள் முன்னோடித் தெய்வங்கள்: கோட்டை மந்தைக் கொந்தாளத்துப் பெரிய கருப்ப ஸ்வாமியும் விருமப்ப ஸ்வாமியும்,

## பாப்பாப்பட்டி:-

நாட்டுத் தலைவர் பகாத் தேவர் இவர்களின் பாகஸ்தர்கள் 10பேர்கள்! மூத்ததாரத்து மக்கள் 8பேர்கள் 1. பெரிய ஓச்சாத்தேவர் 2. மோளையத்தேவர் 3. சுளிஓச்சாத் தேவர் 4. ஆங்கித்தேவர் 5 பொட்டுலுப்பந்தித் தேவர் 6. கட்டக்காளைத்தேவர் 7. உடையாத்தேவர். 8. மதியத்தேவர். இளையதாரத்து மக்கள் 2. பேர்கள் : 1. கீரித்தேவர் 2. கூளையத் தேவர்ஆக பத்துப் பேர்கள்.



RangaRakes
tamilnavarasam.com

## கொக்குளம்

ஆதித் தலைவர் நாட்டுத் தேவரின் மூன்று தாரத்து மக்கள் ஆறு பாகஸ்தர்கள் : 1. கன்னித்தேவர் 2. கருப்பத் தேவர் 3. வெரியத்தேவர் 4. கட்டப்புண்ணைத்தேவர் 5. சேத்தூர் தேவர் 6. தலையன் தேவர் இந்த ஆறு பேர்களும் தங்கள் நாட்டை ஆறு பாகங்களாக்கி ஆண்டார்கள். இவர்களின் ஆதித் தெய்வம் விநாயகர் கோயில் பேக்காமன், அம்மாச்சியம்மன் சிவன் கோயில், இவர்களுக்குச் சம்பந்தம் கருமாத்தூர், அய்யனார்குளம்.

## வேப்பனூத்தூர்

நாட்டுத் தலைவர்கள் பின்னுடையாத் தேவர், வாரிசுகள் 3 பேர்கள். 1. பின்னைத்தேவர் 2. நல்லாத்தேவர் 3. மாங்கட்டத் தேவர். இவர்கள் சம்மந்தம் நாட்டாமங்கலம், ஆரியபட்டி பூர்வீகத் தெய்வம் பின்னூர் ஐயர், புத்தூர் மலைப்பெருமாள் ஸ்வாமி.

## தும்மக்குண்டு:-

நாட்டுத் தலைவர்கள்—சின்னாங்கி உடையாத் தேவர் உள்ளிட்ட 5 பாகஸ்தர்கள் : அருதவீரந் தேவர். 2. முத்தாண்டித் தேவர் 3. சின்ன ஒடையத்தேவர் 4. கூழக்குன்னுன்தேவர் 5 பணிக்கத் தேவர், இவர்கள் சம்மந்தம் கருமாத்தூர், வாழவந்தநெல்லூர். ஆதித்தெய்வம் ஒச்சாண்டம்மன்.

## 24. உபகிராமங்கள்:-

1 விக்கிரமங்கலம் பெரியாண்டித்தேவர் வகை
5 தேவர்கள்.

2 நாட்டார்மங்கலம் கணக்கத்தேவர் வகை
3 தேவர்கள்.



3 ஐயனார்குளம் குள்ளத்தேவர் வகை 2 தேவர்கள்.

4 பன்னியான் கொங்காபுலியத்தேவர் வகை
2 தேவர்கள்.

5 தாராப்பட்டி மெய்யத்தேவர் வகையரா.

6 மேலக்கால் கச்சிராப்பு பெரிய விருமத்தேவர் என்ற கருப்பத்தேவர் வகையரா.

7 காடுபட்டி அருதவீரன் இருளாண்டிதேவர்.

8 கொடிக்குளம் படிவித்தேவர் ஒச்சாத்தேவர்
வகையரா

9 வகுருரணி ஒச்சாத்தேவர்

10 அல்லிகுண்டம் விருப்பபிள்ளை, ஏராப்பிள்ளை,
பூலாமடையான்.

11 மானூத்து வெள்ளையத்தேவர்

12 பெருங்காமநல்லூர் கணக்கு மூக்கத்தேவர், ஒச்சாத்தேவர்

13 காளப்பன் பட்டி பணிக்கத்தேவர்

14 பூசநாதிபுரம் என்ற பூசலப்புரம் கட்டராண்டி, கட்டஉலகன் சின்னப்பளிஞ்சி பெரியபளிஞ்சி ஒச்சான்

15 மதிப்பனூர் நரியத்தேவர் மாடக்காசத்தேவர், ஆங்கத்தேவர் அனஞ்சாத்தேவர் ஒச்சாத்தேவர் முடுக்கு நாட்டான் தேவர்.

16 சாத்தங்குடி கலியத்தேவர், மாடக்காசத்தேவர், புளிச்சகஞ்சி, சுந்தரம்பிள்ளை, குப்பான்தேவர்.

17 புங்கங்குளம் அரைச்சாலை வயிரத்தேவர் பத்திரகாளித்தேவர்

18 சாக்கிலியபட்டி சுந்தத்தேவர்

19 தோப்பூர் பெரியமாயத்தேவர்

RangaRakes
tamilnavarasam.com

20 மேநாடு செட்டிகுளம் ஒச்சாத்தேவர்

21 கப்பலூர் கன்னிராமுத்தேவர்

22 விளாச்சேரி குப்பையாண்டித்தேவர்

23 வடிவேல்கரை பேக்காத்தி பொட்டுக்கலுவத்தேவர்

24 சூடா புளியங்குளம் சூடாமணித்தேவர்

மறவருக்குவிட்டது;—

(1) பொன்னமங்கலம்

(2) காண்டை

(3) கல்லூர்

(4) ஏரமலம்பட்டி

(5) காங்கேயநத்தம்

(6) நக்கலக்கோட்டை

(7) பன்னிக்குண்டு

## ராஜன் நாலு, மந்திரிகள் எட்டு, பிரதானிகள் 24:

பிரமலைநாடு மாகாணம், நிர்வாக அமைப்பு: சாதிப் பெரியதனம் பட்டக்காரத் திருமலைபின்னத்தேவர் அவருக்கு உதவிப் பெரியதன பட்டக்காரர் வடமலை சுந்தத்தேவர்.

தேவத்தனம் — அதாவது சாதிக் கட்டுப்பாடு அமுல் நிர்வாக சபையார்கள்

1. பட்டக்காரத்திருமலை பின்னைத்தேவர் தலைவர்

2. பட்டக்காரவடமலை சுந்ததேவர் உபதலைவர்
வாவாந்தூர் சின்னிவீரத்தேவர்
முதலைக்குளம் பல்லாக்கு ஒச்சாத்தேவர்
திடியன் தூங்கதேவர்



ஆகியவர்கள் ஆலோசகர்கள், எட்டு நாட்டுத்தேவர்களும், இருபத்தி நான்கு உபக்கிராமத்துத்தேவர் வகையராக்களும் மகாசபை அங்கத்தினர்கள். மாகாணப் பொதுச்சபை கூடும் பெரிய மந்தை, திடியன் தாமரைகுளம் நாட்டு விவகாரம் உறவின்முறை பரிபாலனங்கள் நிர்வாகம் செய்வதற்கு இங்குதான் கூட்டம் கூடும்.

பொதுத்தெய்வம் கருமாத்தூர் மூணப்பொரை, பெரிய வாசல் பெரியகருப்பசாமி ஆலயத்தில், தேவர்கள் வருஷம் தோறும் மாசி மகா சிவராத்திரிக்குக் காணிக்கை செலுத்தி கிரமப்படி அவர்களுக்கு ஏற்பட்ட மாலை மரியாதைகள் பட்டுப் பரிவட்டம் பெற்றுக் கொள்வதுண்டு. மூணுசாமி கோவில் எல்லா வாசல்களிலும் தக்க வரவேற்பும்மரியாதையுமுண்டு.

தேவத்தனம்: தேவர்சபை சமூக விவகாரங்கள் எல்லாம் கவனிக்கும். அதேபோல ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு உபக்கிராமத்திலும் தேவர்கள் பஞ்சாயத்துக் கூட்டிக் கிராம மட்டத்தில் உண்டாகும் சமூகவிவகாரங்களை விசாரித்துத் தீர்ப்புக்கூறும். நாட்டில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு மேல் நியாயம் கிடைக்கவேண்டுமானால், பிற நாடுகளுக்கு, மேல்பஞ்சாயம் கேட்டு முறையிடலாம்.

மேல் பஞ்சாயம் ஏற்கும் முக்கிய கிராமம்; கருமாத்தூர் கோட்டைமந்தை. சமூகத்தில் ஒழுக்கம் தவறி நடந்தவர்களையும் முறை கேடான நடவடிக்கைகள் செய்தவர்களையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறும் அதிகாரம் பட்டக்காரத் திருமலைபின்னைத்தேவர் ஒருவருக்கே உண்டு. இந்த வகையில் கூறும் தீர்ப்புக்கு மேல் பஞ்சாயம் கிடையாது. தேவர்கூறும் முடிவு இறுதியானது ஒருவரைச் சாதியில் இருந்து நீக்கவும் அதே போல் சாதியில் சேர்க்கவும் தேவருக்கு அதிகாரமுண்டு.

இந்த மாதிரியான தீர்ப்பைத்தேவர் தெய்வச் சாக்ஷியாகத் தெய்வ அம்சத்தில் இருந்து வழங்குவார். சாதியில்

RangaRakes tamilnavarasam.com

இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு சமூகத்தில் கொள்வினை கொடுப்பினை தடை செய்யப்படுவது முக்கியமானதாகும்.

சாதி நீக்கம் செய்வதற்கு முன் சரியானபடி விசாரணை செய்து சாக்ஷியங்கள், வாக்கு மூலம் தெரிந்த பிறகு சடங்கு முறையோடு ஊர் மந்தையில் வைத்து அதிகார பூர்வமாக அருளோடு வாக்குக்கொடுப்பார். ஆதியில் மதுரை மன்னன் திருமலை நாயக்கன் கொடுத்த ரத்தினக் கம்பளியில் உட்கார்ந்து புடி செம்பு, காசிப் பிரம்பு காளாஞ்சித் திமிழ் தெய்வ உருவங்கள் எல்லாம் எடுத்து வைத்து தீபாராதனையுடன் தீர்ப்புக் கூறுவார்.

இந்தச் சாதிப் பெரியதனம் சர்வாதிகார நாட்டு ஆட்சி முறை வழங்கிச் சட்டம் பிறப்பித்தது மதுரை நாயக்கர் மன்னன் திருமலை நாயக்கராகும். தாமிர சாசனச் செம்பு பட்டயம் கொடுத்துப் பட்டங்கட்டிய விவரம் விரிவாகப் பின்வரும்: நாயக்கர் ஆட்சியில் தன்னரசு நாட்டுக் கள்ளர்கள் அரசியல் என்னும் அத்தியாயத்தில் காண்க.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வரும் நாடுகளில் இன்று வரை வழக்கத்தில் இருந்து வரும் நாட்டு நிர்வாகம், கோயில் நிர்வாகம் ஆகியவற்றில் நாடு வகுத்துக் கட்டிக் காத்த நாட்டார்கள் கொண்டுள்ள உரிமைகளை பார்ப்போம்:—

## 7- பாகனேரி நாடு:

இது பாகனேரி, காடனேரி, நகரம்பட்டி முதலிய பல ஊர்களையுடையது. இந்நாட்டிற்குப் பாகனேரியிலுள்ள சிவன் கோயில் அம்பாள் கோயில்களில் எல்லா உரிமைகளும் மரியாதையும் உண்டு.

## கண்டர் மணிக்கநாடு

இது கண்டர் மாணிக்கமும் பதின்மூன்று ஊர்களையும் உடையது. இந்நாட்டிற்குக் கண்டர்மாணிக்கம் அம்மன்



கோயிலிலும், குன்றக்குடி முருகப் பெருமான் கோயிலிலும் தேர்திருவிழாக்களில் பட்டுப் பரிவட்ட முதலிய மரியாதைகளும் எல்லா உரிமைகளும் உண்டு.

## குன்னங்கோட்டை நாடு:-

இது கல்லல் குன்ன மாகாளியம்மன் பெயரைக் கொண்டது. இந்நாட்டிற்குத் தலைவர் மேலப் பூங்குடியில் உள்ளவர்கள். இவர்களுக்குப் பாண்டி நாடு மதித்தான், திரை கொண்ட பெரியான், சிறுக்கொந்தி முதலிய பட்டங்கள் உண்டு. இவர்கள் திருவேங்கடத்தானைக் குலதெய்வமாக உடையவர்கள், கண்ணிழந்தவர்க்குக் கண் கொடுத்த ஒரு பக்தருடைய வழியினர். இவர்கள் பாண்டி வேந்தரிடத்தில் மேலே குறித்த பட்டங்களும், நாயக்க அரசரிடத்தில் அவர் கட்குரிய பாசுபந்து வாசமாலையும், சிவகங்கை இராமநாதபுரம் அரசர்களிடத்தில் இரட்டைத் தீவட்டி, இரட்டைச் சாமரை, தண்டிகை, சுருட்டி, இடைக்கம், பீலிக்குஞ்சம், காவிச் செண்டா வெள்ளைக் குடை, சிங்கக்கொடி, அனுமக் கொடி, கருடக்கொடி, புலிக்கொடி, இடபக்கொடி, மீனக் கொடி, பஞ்சவர்ணக் கொடி என்னும் பதினெட்டு விருதுகளும்; காண்டீபன் என்ற விருதாவளியும் பெற்றவர்கள், காளை யார் கோயில் கல்லல் திருச்சோமேசுரர் கோயில், சிறுவயல், மும்முடி நாதர் கோயில் என்னும் சிவாலங்களின் தேர்த்திருவிழாக்களில் இவர்கள் மேற்கண்ட விருதுகளுடன் வந்து பட்டுப் பரிவட்டம் முதலிய மரியாதையுரிமைகள் பெறும் வழக்கமுடையர். இந்நாடு தெற்கே காளையார் கோயிலும் வடக்கே ஆலங்குடியும் மேற்கே கல்லலும் கிழக்கே கோயிலாம்பட்டியும் எல்லையாகவுள்ள பல ஊர்களையுடையது. இந்நாட்டுத் தலைவர் தமது இறுதிக்காலத்தில் தமக்குப்பின் தலைவராக இருக்கத் தமது குடும்பத்தில் தக்காரொருவர்க்குப் பட்டம் கட்டுவது வழக்கம் இவர்களைப் பட்டத்துச்சாமி, பட்டத்து ஐயா, என வழங்கி வருகிறார்கள்.

RangaRakes
tamilnavarasam.com

### பதினொலு நாடு

குன்னங்கோட்டை நாட்டிலிருந்து கிழக்கு கடல் வரையில் பதினொன்கு நாடுகள் உள்ளன. அவை ஏழு கிளை பதினொலு நாடு என்னும் பெயரால் வழங்குகின்றன. அவை குன்னங் கோட்டை நாடு, தென்னிலை நாடு, இரவு சேரி நாடு, உஞ்சனை நாடு, செம்பொன் மாரி நாடு, கப்பலூர் நாடு, சிலாம்பா நாடு, தேர்போகி நாடு, வடபோகி நாடு, கோபால நாடு, ஆற்றங்கரை நாடு, ஏழுகோட்டை நாடு, மூத்து நாடு என்பன. இந்தப் பதினொன்கு நாட்டாரும் கண்டதேவியில் மகாநாடு கூடுவது வழக்கம். இவற்றில் தென்னிலை நாடு, இரவு சேரி நாடு, உஞ்சனை நாடு, செம்பொன் மாரி நாடு என்னும் நான்கு நாட்டிற்கும் கண்டதேவி சிவன் கோயில் தேர்த்திருவிழாக்களில் பட்டுப்பரிவட்டம் முதலிய மரியாதைகள் உண்டு. எழுவங்கோட்டைச் சிவன் கோயில் தேர் திருவிழாக்களில், தென்னிலை நாட்டுக்குப் பட்டுப் பரிவட்டம் முதலிய மரியாதைகள் உண்டு.

### பட்டமங்கல நாடு :

இது பட்டமங்கலம் முதலிய பல ஊர்களையுடையது. திருவிளையாடற் புராணத்திலே கூறப்பட்ட அட்டமாசித்தி யருளிய பட்டமங்கை என்னும் தலம் இதுவே. மல்லாக் கோட்டை நாட்டுக்கும் பட்டமங்கல நாட்டுக்கும் திருக் கோட்டியூர் பெருமாள்கோயில் தேர்த் திருவிழாக்களில் பட்டுப்பரி வட்டம் மரியாதைகள் உண்டு.

# மூவேந்தர்களின் கோங்கு மண்டல ஆதிக்கம்

### கொங்குச் சோழர்கள்

கி.பி. 894ல் பட்டத்திற்கு வந்த ஆதித்த சோழன் காலத்தில் தஞ்சாவூர் தலைநகராகியது. படை பலம் மிகவும் வலிமை பெற்றது. அது சமயம் ஆதித்தன், சேரர் வசமிருந்த கொங்கு நாட்டைக் கைப்பற்றி, அங்கு ராஜப் பிரதிநிதிகளை வைத்து ஆட்சி செலுத்தி வந்தான். 1004ம் ஆண்டு முதல் சேரப்பகுதியும் சேர்ந்த கொங்கு மண்டலம் பூராவாகவும் சோழன் வசமாகியது. சோழர்கள் நேரடியாக அரசு யட்டம் ஆளத் தொடங்கினர். அது முதல் கொங்குச் சோழர் பரம்பரை உதயமாகியது. முதன் முதல் ராஜ கட்டேமேறிய கொங்குச் சோழன்:—

| | | |
|---|---|---|
| 1. | விக்கிரம சோழன் | 1004—1055 |
| 2. | அபிமான சோழ ராஜாதி ராஜன் | 1055—1110 |
| 3. | ராஜாதி ராஜ உத்தமன்......... | 1110—1117 |
| 4. | ராஜாதி ராஜ வீரசோழன் | 1117—1135 |
| 5. | உத்தம சோழ வீரநாராயணன் (ராஜகேசரி) | 1135—1144 |
| 6. | குலோத்துங்கன் (ராஜகேசரி) | 1144—1183 |
| 7. | வீரசோழன் பரகேசரி | 1183—1206 |

RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 8. | வீர ராஜேந்திரன் ராஜகேசரி | 1206 -1255 |
| 9. | விக்கிரமன் பரகேசரி | 1255—1263 |
| 10. | ராஜகேசரி (பெயரில்லை) | 1263—1273 |
| 11. | விக்கிரம சோழன் பரகேசரி | 1273—1303 |

## தமிழ்வேந்தர்களின் பிற்கால ஆட்சி

கொங்கு நாட்டில், 1273—130 அரசாண்ட கடைசி அரசன் விக்கிரம சோழனோடு முடிவடைந்தது. இப்படியாகக் கொங்கு நாட்டை ஆண்டவர்கள் கொங்குச் சோழர்கள் என அழைக்கப்பட்டனர். இது வரை கொங்கு நாட்டில் கண்டகல்வெட்டுக்களில் கண்டவைகள் மேலே காட்டியவைகளாகும் கொங்கர் vol iv p.67. N. B. பக்கம் 240 சோழர் வரலாறு:-- அ. சிதம்பரனூர்.

சோழர்கள் தங்களின் கொங்கு நாட்டு ஆட்சியின்போது சோழ நாட்டினர்களை கொங்கு நாட்டிற்கு வரவழைக்க வேண்டிய தேர்பட்டது நாட்டு நிர்வாகிகள், உயர் தர அதிகாரிகள் படைத் தளபதிகள், படை வீரர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களாகும். இப்படிப்பட்டவர்கள், மன்னர்களின் வம்சத்தவர்களாகிய கள்ளர் மறவர்களே. அதிகமானவர்களாக யிருந்திருப்பதினாலேயே இவர்கள் இந் நாட்டில் நிலைத்து நின்று, இன்நாட்டுக் குடிகளாகினர்:

தஞ்சையை ஆண்ட சோழர்கள் தங்களின் ஆளுகையால் நாடுகள் வகுக்கப்பட்டு அவைகளின் ஆட்சியைத் தங்களின் வாரிசுகளுக்கு ஒப்படைத்து குறுநில நிர்வாகம் செய்யப்பட்டது: அதே போல கொங்குச் சோழர்களும் தங்கள் ஆட்சியில் கொங்கு மண்டலத்தை 24 நாடுகளாகப் பிரித்திருக்கிறார்கள். என்பது தெரிய வருகிறது. 300 வருஷங்களாக இவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் இவர்களின் நாட்டாட்சியில்; வேளிர்கள், குறுநில மன்னர்கள், மண்டலாதிபதிகள், தளபதிகள் அங்கம் வகித்திருப்பார்கள். அதே போல; மந்திரிமார்கள், தேசாதிபதிகள், தூதுவர்கள்



போன்ற முக்கிய பதவிகளுக்குத் தங்கள் உறவினர்கள் அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையே தான் நியமித்திருக்கவேண்டும்.

## கொங்கு நாட்டில் பழைய கோட்டைப் பட்டக்காரர்

மாமன்னர்கள் ஆட்சிக் காலத்திற்குப் பின்னரும் கூட இன்றும் பூர்விகப்பட்டமுடைய குடும்பங்கள் நிலைத்திருப்பதை கொங்கு நாட்டில் காணலாம். இவர்களின் பட்டங்கள், பழக்க வழக்கங்கள், சரித்திரச் சான்றுகள் கொண்டு ஆராயுமிடத்து தமிழ் மன்னர் வழி வந்த; அதிலும் சோழர் வழித் தோன்றல்கள் என்பது தெரிகிறது. தங்கள் வம்சபரம்பரைக் கேற்ப இக்குலப் பெருமக்கள் தம் முன்னோர்களைப் போலவே இன்றும் தான தர்மங்கள் செய்து மேலான நிலையில் விளங்குவது தெரிய வருகிறது. மன்னர்கள் காலத்திற்குப் பிறகு தங்கள் சாதி மக்களுக்குத் தலைமை தாங்கிப் பட்டம் சூட்டப் பெற்று இனக்கட்டுப்பாடுடன் ஆட்சி புரிந்து பட்டக்காரர்கள் என்று பரம்பரையாக நிர்வாகம் செய்து பெரும் புகழுடன் விளங்கி வருகிறார்கள். இவர்களுக்குப் ''பழைய கோட்டைப் பட்டக்காரர்கள்'' என்று பெயர் விளங்கி வருகிறது. இவர்களின் பெயர்களிலிருந்து: கோட்டையும் கட்டி ஆட்சியும் புரிந்தவர்கள்என்று தெரிகிறது. இன்னவர்களின் வழித்தோன்றல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | அழகன் சர்க்கரை | 1330—!350 |
| 2. | பெரியன் சர்க்கரை | 1431—1459 |
| 3. | சேனாதிபதிச் சர்க்கரை | 1488—1591 |
| 4. | சம்பந்தச் சக்கரை | |
| 5. | நல்லதம்பிச் சக்கரை | 1647—1662 |

இவர்களைப் போல இன்னும் எண்ணிறந்த பெருமக்கள் தங்கள் நாட்டில் ஏற்பட்ட பெரும் போர்களில் இவர்கள்

RangaRakes
tamilnavarasam.com

தங்கள் அரசர்களுக்காகவும் நாட்டுக்காகவும் போர் புரிந்து ஆண்மை காட்டிய வகையில் அடைந்தப்பட்டங்கள் 1 சோட்டைப்படை சக்கரை 2. மும்முடிப்பல்லவராயன் 3. பல்லவராயன் சிறுவன் 4. காடையூர்க் காங்கேயர் 5. கொற்றை வேணுடுடையார் 6. மோரூக் காங்கேயர் 7. சூரியக்காங்கேயன்:

கொங்கு மண்டலம் ஆதியில் கொங்கு ராஜாக்களால் ஆளப்பட்டு வந்தது. சாதிகள் தோன்றுவதற்கு முன் ஆதியில் அங்கு வாழ்ந்த மக்கள் கொங்கு வேளாளர்கள் என்று அழைக்கப்பட்டனர். மலை வளம், நீர்வளம், நிலவளம் ஒருங்கே அமையப்பட்டுச் சிறப்புற்றிருந்தது. தற்போதைய சேலம், கோயமுத்தூர் ஆர்க்காடு மாவட்டங்களாகும். கொங்கு ராஜாக்கள் வல்லவர்களாகவும் விளங்கினர். கொங்கு நாட்டரசன் இராசாதிராசன் என்பவன் சேர நாட்டின் மீது படை எடுத்துச் சித்தூர் என்னுமிடத்தில் வைத்து சேரப் படையுடன் கடும்போர் புரிந்தது தெரிய வருகிறது. கொங்கு ராஜாக்களில் சிறந்தவன் இராசாதிராசனே.

கொங்குநாடு மூவேந்தர்களின் நாடுகளுக்கு மத்தியில் இருந்தது. ஆனபடியால் மூவேந்தர்கள் தங்களுக்குச் சமயம் வாய்க்கும் போது தங்கள் ஆதிக்கத்தை கொங்கு நாட்டின் மீது செலுத்த முயல்வது இயல்பே.

முதன் முதலில் கொங்கு மண்டலத்தின் மீது படை எடுத்தவன் வீரகேரளன். இவன் பேரூர் நாட்டை எதிர்ப்பின்றிக் கைப்பற்றினான். அதுகாலை கொங்கு நாட்டை ஆண்டு வந்தவன் வீரராஜேந்திரன்.

கி.பி. 834ல் சேரர் அரசு சீர் குலைந்தது. ஆட்சித் தலைவர்கள்; அரசு பரம்பரையினர்களுடனும் படை பலத்துடனும் கொங்குப் பிரதேசத்தில் நுழையும் நிர்ப்பந்த மேற்பட்டது. எதிர்ப்பை சந்தித்து ஆண்மைகாட்டி ஆட்சியை வலுப்படுத்திக் கொண்டு; ஆமூர், பழனி, சேலம், ஆர்க்காடு, சென்னை வரை பரவினர். லக்ஷோபலக்ஷம் சேரர் மக்கள் குடியேறினர். அது காலை அவர்கள் அகமுடையவர்கள் (மலை



நாட்டினர்) என அழைக்கப்பட்டனர். மலைநாட்டுக்கான மக்கள் (மலையாளிகள்) ஆனாலும் இவர்கள் அது காலை பேசியது தமிழேயாகும்.

பேரூர் கல்வெட்டு, முட்டம் கல்வெட்டு, பழனிக் கல்வெட்டு ஆகியவைகளில் இருந்து: சேரர் அரசர்கள் கொங்கு நாட்டில் அரசாண்டவர்களின் பெயர்கள் தெரிய வருகிறது. அதன்படி:—அவர்கள் ஐந்து பேர்களின் பெயர்களை இந்நூலின் 36-ம் பக்கத்தில் காண்க.

மாபெருங்கீர்த்தி பெற்ற சேர மன்னன் சேரன் செங்குட்டுவனை எதிர்த்து மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்து பெரும் போர் தொடுத்த காலை கொங்கு நாட்டின் தென் பகுதிகளில் ராணுவ கேந்திரங்களையும் தங்கள் தங்கள் கொத்தளங்களையும் அமைத்தனர். கொத்தளங்கள் நீடித்தபோது அந்நாட்டு குடி சனங்களும் தொழிலாளர்களும் கொங்கு நாட்டிற்கு வருவிக்கப் படலானார்கள்.

சோழ பாண்டியர் மண்டலங்களை வடுகர்கள் கைப்பற்றியதற்கு தமிழ்நாட்டை ஆண்ட விசுவநாத நாயக்கன் ஆட்சியில் ஏற்பட்ட பாளையப்பட்டுக் கலகம் கொங்கு நாட்டையும் விட்ட பாடில்லை. கொங்குத் தலைவர்கள் பொங்கி எழுந்து நாயக்கர் ஆட்சியில் கடும் எதிர்ப்புக் காட்டினர். அது காலை மதுரையில் பிரதம தளவாயாகவிருந்த அரியநாத முதலி பெரும் சையினியத்துடன் கோயமுத்தூர் வந்து முகாமிட்டுக் கொண்டு கலகத்தை அடக்கினான். அதன் மேல் சமாதானம் நிலைத்து நிற்கக் கோட்டைகளை மண்டலமெங்கும் கட்டினான்.

அப்படியாகக் கட்டப்பட்ட கோட்டைகள் யனிரெண்டு ஆகும்.

## பிற்கால முக்குலமக்களின் கொங்கு நாட்டுக்குடி

**யேற்றம்:-** செம்புநாட்டு மறவர் கிளைகள்; 1. மரிக்கா கிளை 2. பிச்சைகிளை 3. தொண்மான் கிளை, 4. சித்தர்மாக்கிளை, 5. தனிச்சகுளை 6. கதரா கிளை ஆகும் இக்கிளையினர் சேதுபதி மன்னரைச் சேர்ந்தவர்கள்: 1780 ஆம் ஆண்டு போல்

RangaRakes
tamilnavarasam.com

அரசியல் கருத்து வேறுபாட்டின் காரணமாக ஏழாவது கிளையினராகிய கூதராகிளையினர்; மன்னர் பகைமையுடன் நாட்டில் வாழ விரும்பாமல், தாங்கள் வாழ்ந்த பூமியிலிருந்து நாட்டை விட்டு அகலவேண்டியதேற்பட்டது. அப்போது நாட்டில் பிரபுக்கள் ஆட்சி முறையிருந்த காலம். ஒரு நள்ளிரவில், தங்களைச் சேர்ந்த தானைத் தலைவர்கள்' பிரபுக்கள் குடிசனங்கள் யாவரும் நாட்டைவிட்டு வெளியேறி பல்வேறுகஷ்ட நஷ்டங்கள் பட்டு மேற்கு நோக்கி நகர்ந்து இறுதியாகக் கொங்கு நாட்டை அடைந்து கோயமுத்தூர் பிரதேசங்களில் குடியேறியமை தெரிய வருகிறது. அவர்கள் வரும்போது தங்களின் குலதேவதைகளின் விக்கிரகங்களுடன் வந்தனர்: **பிரவிருத்தியின் காரணம்** இராநாதபுரத்தில் இருந்து: மக்கள் வெளியேறியதும் தெரிய வருகிறது. மிஸ்டர் டர்ன்புல் என்பவர் 1814ல் அரசுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் கிழக்கு இராமநாதபுரத்தில் அதாவது சிவகங்கைச் சீமையில் இருந்து சனத்தொகை 150,000 பேர்கள் குறைந்து விட்டது என்று குறிப்பிடுகிறார். 1800ல் இருந்து பத்துவருடகாலம் தொடர்ந்து ஏற்பட்டபஞ்சம்காரணமாக மக்கள் மாண்டிருக்க வேண்டும் அல்லது வேற்றிடங்களுக்கு வெளியேறிச் சென்றிருக்க வேண்டும் என்று கருதுகிறார். அவரின் ஆதாரம் 1811ஆம் ஆண்டின் சனன மரணக் கணக்காகும்.

வாளெழுபது என்னும் நூலிலும், கிழுவை நாட்டில் குடி ஜனங்கள் பெருவாரியாகப் புகலிடம் தேடிக் கிழுவை நாடு விட்டு வெளியேறினர் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பாளையப்பட்டுக் கலகமும் பஞ்சமும் காரணமாகுமென விளக்குகிறது. கிழுவை நாடு என்பது, கீழக்கரை நாடுவாகும் அதாவது, சேது நாட்டின் முக்கிய வீரகேந்திரப் பூமி: இராநாதபுரம் சீமை, சிவகங்கைச்சீமை என அழைக்கப்படலானது. சிங்க மறவர் வாழும் சிவகங்கைச் சீமை என்று அன்றும் இன்றும் கட்டியம் கூறி நிற்கும் பூமி. அப்படியான சிறப்பு நாட்டில் வாழ்ந்த மறவர் மக்கள்



தான் அல்லதுக்கு ஆளாயினர் எனவரலாற்றில் கண்டோம். இப்படியானோர்களின் நிலை என்ன என்பதனைப் பார்ப்போம்.

சேலம் பெருநகர் செவ்வாய்ப் பேட்டையில் பாண்டித்துரைத்தேவர் வீதி ஒன்று இருக்கிறது. இதற்கு மறவர் தெரு என்றும் பெயர். சுமார் 200 மறவர் குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் பொதுவான மறவர் மடம் இருந்து வருகிறது. நகரைச் சுற்றிலுமுள்ள அரிசிப்பாளையம், ஸ்வாமிநாதபுரம், அம்மாபேட்டை, தாத்தாபேட்டி திருவாக்கவண்டனூர் ஆகிய கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றனர். இந்த மாவட்டத்தில் முக்குலத்தவர்கள்; சேலம், தாதம்பட்டி, ஆத்தூர், குமாரபாளையம், சின்னச்சேலம், நாமகிரிப்பேட்டை, தாண்டவராயபுரம், பவானி முதலிய ஊர்களிலும் தர்மபுரியிலும் இருந்து வருகிறார்கள்.

இம்மாவட்டத் தேவர்குல மக்களின் குலதெய்வங்கள் இராமநாதபுரம் மாவட்டம்; பண்ணைதிருத்தி, கண்டராமாணிக்கம், பட்டமங்கலம் சேத்துப்பட்டுக் கிராமங்களிலும் மதுரை மாவட்டம் கள்ளழகர் கோவில் பதினெட்டாம் படிக்கருப்பும் ஆக இருந்துவருகிறது. அவ்வாலயங்களில் இம்மக்கள் மொட்டை, முடி, காணிக்கை செலுத்தும் வழக்கமிருந்து வருகிறது.

செவ்வாப்பேட்டையில் குடியேறிய மக்கள் முதன் முதலாகத் தங்களுக்குக்கெனக் 1907ல் மண்டபம் ஒன்று கட்டியிருக்கிறார்கள். அதற்கெனப் பொது நிதியும் நிர்வாகமும் இருந்து வருகிறது.

1930-ல் செவ்வாப்பேட்டையில் மறவர் மகாசபை ஆரம்பமானது. இம்மகாசபை சமூகப் பெரியார்கள்; சேதுபதி மன்னர், இராஜகுமாரர் ராஜா ராமபாண்டியன், முத்துராமலிங்கத் தேவர் முத்துசாமி வல்லத்தரசு, சிவஞண்டி சேர்வைக்காரர் ஆகியவர்களைப் பல்வேறு சமயங்களில் கௌரவித்திருக்கிறது இப்போது சமூக

RangaRakes tamilnavarasam.com

ஸ்தாடனமாக இருந்து வருவது: செவ்வாப்பேட்டைத் ''தேவர் இளைஞர் சங்கமாகும்''.

இந்த விருத்தாந்தங்களைக் கவனிக்கும்போது கிழவை நாடாகிய கிழக்குக் கரையில் வாழ்ந்த சிவகங்கை இராம நாதபுரம் சீமைவாசிகளாகிய ; அரசு அறிக்கையில் கண்ட 150000 பேர்களில் ஒரு பகுதியினர்களை இனம் கண்டு பிடிக்க முடிந்தது.

கொங்கு மண்டலத்தில் பாய்ந்து செல்லும் நொய்யல், அமராவதி, காவிரி முதலிய நதிகளின் கரையோரங்களில்; அகமுடையர், மறவர், கள்ளர் மற்றும் பழங்குடி வேளாளர்கள் வாழ்ந்து வருவதைக் காணலாம். இவர்களின் முக்கிய தொழில் விவசாயம் வாணிபம், கைத்தொழில் ஆகும்.

இது சமயம் இவர்கள் மிகையாக வாழுமிடம் நொய்யல் நதிக்கரையில் பேரூர், போருவம்பட்டி, குறிச்சி, மருதூர், ராமநாதபுரம், சவுரிபாளையம், உடையாம் பாளையம், வெள்ளலூர், இருகூர், பட்டணம்புதூர், பள்ளபாளையம், சூளூர், அரிசிப்பாளையம், சோமனூர், மங்கலம் திருப்பூர், ஆகிய ஊர்களும் மற்றும் பல கிராமங்களும்.

அமராவதி நதிக்கரையில்; குமாரலிங்கம், மடத்துக்குளம், கண்ணாடிப்புத்தூர், கடத்தூர், தளவாய் பாளையம் தாராபுரம் ஆகிய ஊர்களும் மற்றும் உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி, கிணத்துக்கடவி, செட்டியக்காபாளையமும் காவிரி பவானி நதிகளின் கரைகளில்: பவானி, ஈரோடு ஆகிய இடங்களிலும் முக்குல மக்கள் முக்கியமாக அகமுடையர்களும் மற்றும் கள்ளர் மறவர் வெள்ளாளர்களும் வாழ்ந்து வருகிறார்கள். கள்ளர் மறவர் அகமுடையர்கள் மட்டும் 100000க்கு மேலிருக்குமென தெரிய வருகிறது.

கொங்கு மண்டலத்தில் வாழ்ந்து வரும் மக்கள், தங்கள் குல மாமன்னர்களைப் போல ஆலயங்களைப் படைப்பதும் அவைகளை முறையாகப் பரிபாலிப்பதும் தங்களின் தலையாய கடமைகளாக ஆதி முதல் இன்று வரை கடைப்பிடித்திருப்



பது வரலாறு கண்ட சம்பிரதாயமாகும்! இப்படியாக படைக்கப்பட்ட கோவில்கள் பல உள்ளன.

சேலம் பெருநகர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலின் வருஷாந்திரப் பெருவிழா ''வசந்த உற்சவம்'' பிரதி ஆடி மாதம் தோறும், 30 தினங்களுக்கு எல்லாச் சாதியார்களாலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சேலம் செவ்வாப்பேட்டையில் அருள்மிகு மாரியம்மன் ஆலயம் ஸ்தாபிதம் செய்து அங்கு இரண்டுநாள் மண்டகப்படி, பெருவிழாவின் 30—ம் நாள் உற்சவத்தின் போது அம்பிகை செவ்வாப்பேட்டைக்கு எழுந்தருளுதல் முறையாக நடந்து வருகிறது அம்பிகை செவ்வாப் பேட்டைக்குத் தனது தாய்வீடாகப் பாவித்து வருகை தருவதும் வரவேற்பதும் அய்தீகமாக இருந்து வருகிறது. இந்த மாபெரும் வைபவத்தை முன்னின்று ஏற்று நடத்தி வைக்கும்பொறுப்பு செவ்வாப்பேட்டை பாண்டித்துரைத்தேவர் வீதிமறவர்குல மக்களைச் சார்ந்ததாகயிருந்து வருகிறது. விழா நிர்வாகம் டிரஸ்டு போர்டு பொறுப்புடையவர்களாகவுமிருந்து வருகிறார்கள். வருடம் தோறும் பல்லாயிரக் கணக்கில் செலவு செய்து வருகிறார்கள். சமூக அடிப்படையில் பொது மக்களின் பாராட்டுதலையும் தேவர் இன மக்கள் அடைந்து வருகிறார்கள்.

செவ்வாப்பேட்டையின் உறவின் முறை நிர்வாகத்தையும் மக்கள் திருக்கோயில் எடுத்து அம்பிகையின் விழாவை நிரந்தரமாக நடத்தி வருவதற்கும் ஆரம்பத்தில் அதிகமான முயற்சிகள் செய்து நல்வழிகாட்டிய பெருமை அது காலை பொறுப்பில் இருந்து வந்தவை. சிவபெருமான் பிள்ளை [மறவர் இனம் பிள்ளைப்பட்டம்] அவர்களைச்சேர்ந்ததாகும்என்று சொன்னால் மிகையாகாது. சிவபெருமான்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த பக்தியுள்ளம் கொண்ட பெரியார்.

கோவை பள்ள பாளையத்தில் கோவில் ஒன்று உள்ளது. இக்கோவில் சற்றேறக்குறைய 120 ஆண்டுகளுக்கு முன்னால்



RangaRakes
tamilnavarasam.com

திரு ஆங்கத்தேவர் அவர்களின் தாயார் சிமாட்டி அரசக் காள் அவர்களால் நிர்மாணித்து கும்பாபிசேகம் செய்வித்து பராமரிப்புக்கான வசதியையும் உண்டுபண்ணியதை வைத் துள்ள படியால் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. கொங்கு மண்டலத்தில் வாழ்ந்துவரும் மூவேந்தர் குலசமூக வரலாறு ஆராய்ச்சியிலும் சிந்தனைக் குரியதும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதொன்றாகும். கொங்குராஜாக்கள், கொங்குச் சோழர்கள், கொங்குச் சேரர்கள் ஆகியவர்கள் பல்வேறு காலங்களில் ஆட்சி புரிந் திருக்கின்றனர்.

யாரும் நிலையாக நீண்ட காலம் நிலைத்து நிற்கவில்லை. மூவேந்தர்களும் கூட ஒரே சமயத்தில் அங்கு கொத்தளங்கள் அமைத்து நின்ற காலமும் உண்டு. சேது நாட்டில் இருந்தது இரண்டு காலங்களில்; அரசியல் காரணமாகவும், பஞ்சம் காரணமாகவும், பெரும் தொகையினர் குடியேறியதாகவும் தெரிய வருகிறது. கொங்குச் சோழர் ஆட்சியின் போது; கள்ளர், மறவர் ஆகியோர் தஞ்சைப் புனல் நாட்டிலிருந்தும் அகமுடையர்கள், சேரர்மலை நாட்டிலிருந்தும்; மறவர், சேர்வைகாரர், ஆகியோர்; சேதுபதியின் கிழுவை நாட்டி லிருந்தும். கொங்கு நாட்டில் குடியேறிய விவரம் தெரிந் தோம். கள்ளர், மறவர், அகமுடையர் ஆகிய முத்திரத் தார்களும் கொங்கத்தின் பூர்விகக் குடிகளாகிய கொங்கு வேளாளருடன் கலந்தனர்.

சோழர் மரபினர் அரசாண்ட காலத்தில் கோட்டைகள் கட்டி மண்டலத்தை, 24 நாடுகளாகப் பிரிவினை செய்து நாட்டாச்சி நடத்தினர். அதற்கு ஆதாரமாக இன்று கொங்கு நாட்டு மக்களுக்கு இருந்து வரும் பட்டங்கள் முக்கியமாகக் கவுண்டர் மரபினரிடையே தெரிய வருகிறது. என்றாலும் கொங்கு வெள்ளாளர் என்னும் பட்டம் எல்லோ ருக்கும் மண்டலத்தில் பொதுப்பட்டமாகவுமிருக்கிறது:

தனிப்பட்டங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளாளர் | 3. | கொங்கக் கவுண்டர் |
| 2. | படையாச்சி | 4. | வெள்ளாளக்கவுண்டர் |



| | | | |
|---|---|---|---|
| 5. | வன்னியர் | 10. | 9வேட்டுவர் |
| 6. | மன்றாடியார் | 11. | படைத்தலைக்கவுண்டர் |
| 7. | சோழர்வியர் | 12. | நாட்டாரக்கவுண்டர் |
| 8. | ஊராளி | 13. | வன்னியக்கவுண்ணர் |
| 9. | சேனதிபதி | 14. | ராயன் |

கொங்குச் சேரர்கள் அரசு ஆண்ட பிரதேசம் பேருரைத் தலைமையாகக் கொண்ட கோயமுத்தூர், பழனி, திண்டுக் கல்லும்; அமராவதி நதிதீரமுமாகும்: இப்பிராந்தியத்தில் வாழும் அகமுடையர்களுக்குத் தேவர் பட்டம் வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்நாட்டை ஆண்ட கேரள அரசர்கள் தேவர் பட்டம் உடையவர்களே. உதாரணமாகப் பார்ப் போமேயானால் வீரகேரள அதிராசராச தேவன் (2) கேரள அதிராச ஸ்ரீ இராசராச தேவன். இவர்களுக்குத் தேவர் பட் டம். இன்று தமிழகத்தில் வேரிடங்களில்வாழும் அகமுடைய மக்கள் சேர்வைக்காரர் என்னும் பட்டம் தரித்திருக்கிறார். கள்.

சேரன், குட்டுவன், அகமுடையன் தேவர் இராஜ குலத்தார்.

அதே போல சேது மன்னர் ஆட்சிக் காலத்தில் கிழக் கரைப் பிரதேசத்திலிருந்து வந்து சேலம் மாவட்டத்திலும் கோயமுத்தூர் மாவட்டத்திலும் குடியேறியவர்கள் மிகை யாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் நடைமுறையில் வைத்துக் கொண்டிருக்கும் பெயர்கள்; 1. சேதுபதி 2. ராம நாதன் சோம சுந்திரன், 3 ராஜசேகரன் 4 ராஜ குமாரன் 5 மீனாட்சி 6 அரசக்காள் 7 ராக்கம்மாள் 8 கருப்பண்ணன், 9 சின்னச்சாமி

என்பன போன்ற பெயர்கள் ராஜ்ய அடிப்படையிலும் குலதெய்வங்களின் அடிப்படையிலும்; இவர்கள் மதுரை மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய இடங்களில்;

RangaRakes
tamilnavarasam.com

இன்று கொள்வினை கொடுப்பினை செய்து வருவதிலிருந்தும் 'பூர்வம்' சேது நாட்டவர்கள் என்பது தெளிவு- முன்னதாக எடுத்துக் காட்டியுள்ள வரலாற்றுச் சான்றுகளுடன் நிதர்சனமாக விளங்குகிறது.

**கள்ளர் மறவர் கனத்தோர் அகமுடையர்:** மெள்ள, மெள்ள வந்து வெள்ளாளர் ஆனார்கள்; என்றும் சொல் வழக்கு நம் நாட்டில் எங்கும் பேச்சுப் பழக்கத்திலிருந்து வருவது காண்கின்றோம். இந்தச் சொல்வழக்கம் கொங்கு நாட்டிற்கே பொருந்தும் அங்குதான் மிகையாக வெள்ளாளர் என்று அழைக்கப்படுகின்றனர். கொங்குச் சோழ ஆட்சியின்போது; சோழ பாண்டிய நாட்டிலிருந்து கள்ளர் மறவர் இனத்தவர்கள் கொங்கு நாட்டிற்குள் குடியேற்றப் பட்டனர். கொங்குச்சேரர்கள் ஆட்சியின்போது சேர நாட்டிலிருந்து காவல் வாழ் மக்களாகிய அகமுடையார்கள் கொங்கு நாட்டிற்குள் குடியேற்றப்பட்டனர். சேது நாட்டிலிருந்து; சேர்வைக்காரர்கள் (அகமுடையர்கள்) மறவர்கள் கொங்கு நாட்டில் குடியேறினர். இப்படியாகக் கொங்கு நாட்டிற்குள் பிரவேசித்த மக்கள் நாளடைவில் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க நாட்டின் அமைப்பாலும் அவர்களுக்குள்ளான கலாச்சாரங்களின் இணைப்பாலும் ஓர் அளவு ஒன்றுபட்டு வாழ்ந்து வரவே, நாளடைவில் வெள்ளாளர்கள் எனப் பொதுப்பட்டங்களுடன் விளங்குகின்றனர்.

நாளடைவில் சாதி அமைப்புகள் உண்டாயின. அது காலை நாட்டு அமைப்புகளுடன் கோட்டை கொத்தள நிர்வாகங்களில் இருந்து படை தலைவர்களைச் சூழ்ந்து வாழ்ந்த மக்கள் கவுண்டர்கள் எனவும் இன்னும் இது போன்ற தமிழ் மக்களின் பட்டங்களிலும தோன்றலானார்கள். தமிழ் மன்னர் [மூவேந்தர்] வம்ச வழியினர் குலத்தில் அதிகமான மக்கள் கூட்டத்தினர் கொங்கு மண்டலத்தில் கவுண்டர்களாகும். கள்ளர் மறவர் அகமுடையர் பட்டத்துடன் வாழ்ந்து வரும் மக்களிலும் கூட கவுண்டர்கள் எனப் பட்டமுடையோர்களைக் காண முடிகிறது. உதாரணமாகப்



பார்ப்போமேயானால் 1. கொமார லிங்கத்தில் முன்னாள் ஜில்லாப்போர்டு அங்கத்தினர் திரு. இராமலிங்கக்கவுண்டர் செல்வாக்குள்ளவர். மற்றும் திரு. ஆறுமுக கவுண்டர்போன்றவர்கள் கள்ளர் இனத்தவர்கள். ஆனால் அவர்களுக்குக் கவுண்டர்பட்டம் 2. வெள்ளலூர் மணியகாரர் திரு. கந்தசாமிக் கவுண்டர் இவர் பந்துக்கள் பெரும்பாலோர் மடத்துக் குளம் வாசிகள்: இவர்கள் கள்ளர் சாதி. ஆனால் கவுண்டர் பட்டம் வகித்து வாழ்ந்து வருகின்றனர்,

(3) பி. மாரியப்பக் கவுண்டர் (கள்ளர் இனம்: கவுண்டர் பட்டம்) தெக்கை தேசம் கிராமம், பன்னிப் பெருந்தலை நல்ல பள்ளி, சித்தூர் தாலுகா கேரள மாநிலம். கொங்கு நாட்டில் இருந்து கேரளத்தில் குடி ஏறி விவசாயம், தொழில் துறைகளில் சிறந்து விளங்குகிறார். இவரைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் கவுண்டர் பட்டம் இருந்து வருகிறது.

மேலே கண்ட உதாரணங்களைப் போல் வெகுவாக மக்கள் கவுண்டர் பட்டமிட்டிருப்பது தெரிய வருகிறது.

அதே போல் வெள்ளாளர் பட்டத்துடன் இருப்பவர்களில்; கள்ளர், மறவர், அகமுடையர் ஆகியவர்கள் இருப்பது வியப்பில்லை கொங்கு நாட்டு முக்குல மக்களுக்குச் சொந்தமான கலியாண மண்டபங்கள்; 1 பேரூர் 2 அவினாசி 3 காரமடை 4 செஞ்சேரிமலை 5 வெள்ளிகிரிமலை 6 வெள்ளலூர் ஆகிய இடங்களில் இருக்கின்றன.

கொங்கு நாடெங்கிலும் மிகையாக முக்குலமக்கள் சீறும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். மக்கள் தொகையை சன கணித விவரப்படி தெரிவிக்கும் அரசு சென்சஸ் கணக்கில் சரியான விவரம் தெரிவிக்கவில்லை. மிகவும் குறைவான எண்ணிக்கையே கண்டிருக்கிறது. இந்நூலில் பிரித்தோரிடத்தில் சன கணித விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது பார்த்து அறிந்து கொள்ளவும்.

RangaRakes

tamilnavarasam.com

## கொங்கு மண்டலத்தில் முக்குலத்தோர்
### உயர்தர அதிகாரிகள்

1. திரு. வி.எஸ். நடராஜன் ஐ.ஏ.எஸ்.
(உடையார் பாளையம்) சென்னை
2. ,, மலைச்சாமி ஐ.ஏ.எஸ். கலெக்டர் கோவை
3. ,, எஸ்.ஆர். கருப்பணன் ஐ.ஏ.எஸ். [சூலூர்]
கலெக்டர் சேலம்
4. ,, தயனேஸ்வரன் ஐ.ஏ.எஸ். கலெக்டர்
பெரியார் மாவட்டம்
4. ,, அப்பாத்துரை ஐ.பி.எஸ். சூப்பிரன்டெண்ட்
ஆப் போலீஸ் கோவை
6. ,, ஜெகநாதன் ஐ.பி.எஸ் ரூரல் போலீஸ்
சூப்பிரின்டெண்ட் கோவை
7. ,, பாஸ்கரதாஸ் ஐ.எப்.எஸ். முதல்வர்
வனத்துறை கல்லூரி கோவை
8. ,, எஸ்.வி. நாச்சிமுத்து ஐ.எப்.எஸ். [சூலூர்,[
வனத்துறை அதிகாரி கோவை
9. ,, கே. இராமமூர்த்தி ஏ.ஆர்.எஸ். விஞ்ஞானி
இந்தியப்பருத்தி ஆராய்ச்சி துறை கோவை.
10. ,, எஸ்.ப. ஆறுமுகம் பி.எஸ்.ஸி. [அக்ரி] ]சூலூர்[
விவசாயத்துறை அதிகாரி சேலம்
11. ,, ஏ. தண்டபாணி பி.எஸ்.ஸி. [அக்ரி] டிவிஷனல்
என்ஜினியர் விவசாயத்துறை சென்னை
12. ,, ஏ. இராசமாணிக்கம் [செட்டிகா பாளையம்
பொள்ளாச்சி] தலைமை செயலகம் சென்னை.
13. ,, ஏ. சேவுகபாண்டியன் பி.ஏ; கூடுதல் இயக்குனர்
முனிசிபல் துறை [நகராட்சி] பேட்டுப்பாளையம்



14. திரு திருநாவுக்கரசு பி.ஏ; கமர்சியல் டைரக்டர்
டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் கோவை
15. திரு மாயாண்டி பி.ஏ; தனித்துணை உதவியாளர்.
மாவட்ட கலெக்டர் கோவை.
16. திரு டாக்டர் இராமமூர்த்தி எம்.பி.பி.எஸ்.
உடல் நல அதிகாரி கோவை மாவட்டம்.
17. திரு டாக்டர் டி. நாச்சியப்பன் எம்.வி.எஸ்.இ;
கால்நடை உதவி மருத்துவ டைரக்டர் கோவை
18. திரு எம். பால சஞ்சீவி எம்.ஏ. அகில இந்திய
வானொலி நிலைய அதிகாரி கோவை.
19. திரு பாலசுப்பிரமணியம் எம்.ஏ: எம்.எல்.எச்.
தனி அதிகாரி விவசாயப் பல்கலைக்கழகம் கோவை
20. திரு முத்துச்சாமி எம்.ஏ; பி.லிப். சைன்ஸ் சென்னை
பல்கலைக்கழகம் நூலகத்துறை
21. திரு எஸ்.ஏ. சுப்பிரமணியம் எம்.ஏ; எல்.டி.
இணை இயக்குனர், கல்வித்துறை சென்னை
22. திரு எம். சண்முகத்தேவர், அதிகாரி
அரிசன நலத்துறை கோவை.
23. திரு கே. முத்துசாமி, கோவை எம்.இ.
உதவி என்ஜினியர், குடிநீர் வாரியம்
பொள்ளாச்சி
24. திரு எஸ். பழனியப்பன். பி.இ.
உதவி என்ஜினியர் பி.டபிள்யூ.டி. கோவை
24. தித ஆர்.ஏ. தங்கவேலு, பி.இ. எம்.பி.ஏ.
முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,
கோவை.
26. திரு ஏ. சோமசுந்தரம், எம்.ஏ.பி.டி. குறிச்சி
மாவட்டக் கல்வி அதிகாரி, கோபி.
27. திரு ஆர். அப்பாவு, பி.காம். எப்.சி.ஏ.
ஆடிட்டர் கோவை

RangaRakes
tamilnavarasam.com

28. திரு ஞானகிராமன், உடுமலைப் பேட்டை
டெவலப்மெண்ட் ஆபீசர், எல்.ஐ.சி.

29. திரு கண்ணப்பன் பி.இ வெள்ளலூர்.

30. திரு வி.கே. பாலகிருஷ்ணன், வெள்ளலூர்,
எலக்ட்ரிகல் உதவி என்ஜினீயர்
கோவை மாநகராட்சி

31. திரு ஆர்.ஆர். சுப்பிரமணியம்,
ஒத்தைக்கால் மண்டபம் உதவிமின் பொறியாளர்
கோவை மாநகராட்சி

32. திரு வி.ஜி. மனோகரன், பி.இ. ஏ.எம்.ஐ.ஈ.
உதவி பொறியாளர், தெர்மல் பவர் ப்ராஜெக்ட்
தூத்துக்குடி

63. திரு அப்பாச்சி, மருத்துவர், இருகூர்.

34. திரு ஆர்.வீராசாமி, பி.டி.ஓ. மதுக்கரை

35. திரு அருணாசலம், தஞ்சை, உடற்பயிற்சி இயக்குனர்,
மருத்துவக் கல்லூரி, கோவை

36. திரு ஐ.எஸ். இராமசுப்பிரமணியம்
எம்.பி.பி.எஸ். மருத்துவ அதிகாரி இ.எஸ்.ஐ.
ஒண்டிப்புதூர்

37. திரு இராமசாமி, எம்.பி.பி.எஸ்
உதவி மருத்துவர், இ.எஸ்.ஐ வெள்ளலூர்

38. ,, பி. வெங்கிடாசலம் எம்.டி.கோவை

39. ,, சி. சரவணன், எம்.பி.பி.எஸ்.
கோவை

40. ,, அசோகன், எம்.பி.பி.எஸ். கோவை

41. ,, எஸ்.வி. பாலசுப்பிரமணியன் எம்.பி.பி.எஸ்
சூலூர்

42. ,, சின்னகருப்புசாமி எம்.பி.பி.எஸ்.
சூலூர்.



43. ,, எஸ்.வி. கல்யாணசுந்தரம் பி.ஈ. சூலூர்
லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ், கோவை

44. ,, சண்முகம், ஒர்க்ஸ் மேனேஜர்,
லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ், கோவை

45. திரு ஆர். மனோகரன், பி.ஏ.பி.எல். கோவை

46. திரு ஏ. இராமமூர்த்தி பி.ஏ பி.எல்.
இராமனுதபுரம், சப் மாஜிஸ்ட்ரேட்

47. திரு ஏ. குப்புசாமி, பிஏ பிஎல். இராமனுதபுரம்
உதவி பப்ளிக் ப்ராசிக்யூட்டர்

48. திரு எஸ். தங்கவேல், பிஏ பி எல். பொள்ளாச்சி

49. திரு பி.கே. ஆனந்தகுமார், பிஏ பிஎல்.
காந்திபுரம் கோவை.

50. திரு பொன்மணி, கமர்சியல் டாக்ஸ் ஆபீசர், ஈரோடு.

51. திரு எம். சுவாமிதாஸ் பி.ஏ. காந்திபுரம், கோவை.

52. திரு நல்லசாமி, கோவை கூட்டுறவு
துணைப்பதிவாளர், புதுக்கோட்டை

53. திரு வி. சொக்கலிங்கம் பி.ஏ ரிடைர்டு டி.ஆர்.ஓ,
கோவை

54. திரு சண்முகநாதன், டி.எஸ்.பி. (இரயில்வே) கோவை

55. திரு இரமணிகாந்தன். எம்.ஏ. கலாவிளம்பரத்துறை
கோவை

கல்வித்துறை

56. திரு டாக்டர். வி. இராசகோபாலன். டைரக்டர்
ஆப் ரிசர்ச் தமிழ்நாடு வேளாண்மை
பல்கலைக் கழகம் கோவை.

57. திரு டாக்டர். வி. சுப்ரமணியம். பேராசிரியர்,
த.வே.ப. கழகம் கோவை.

58. திரு எஸ். சுந்தரராசன், பேராசிரியர்
த.வே.ப. கழகம், கோவை.

RangaRakes tamilnavarasam.com

திருமதி

59. டாக்டர் எஸ். சிவகாமசுந்தரி, பேராசிரியர்,
தமிழ்த்துறை அவிநாசிலிங்கம்
மனையியல் கல்லூரி, கோவை

திருமதி

60. திரு சிவானந்தவல்லி, பேராசிரியர், தமிழ்த்துறை
நிர்மலா கல்லூரி, கோவை.

திருமதி

61. நியூமென், முதல்வர்
பி.எஸ்.வி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
கோவை.

62. ,, டாக்டர் கே. வெள்ளிமலை, உதவிப் பேராசிரியர்
பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி, கோவை.

63. திரு மைக்கேல் பொன்னுசாமி, எம்.ஏ.பி.டி
ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்

64. திரு நியூமென், எம்.ஏ.எல்.டி
ரிடைர்டு தலைமையாசிரியர்

65. திருமதி பங்கஜம் வில்லியம்ஸ், எம்.ஏ.எல்.டி.
தலைமையாசிரியர், கோவை.

66. திருமதி சரோஜினி பாண்டியன் எம்.ஏ.எல்.டி.
தலைமையாசிரியை கோவை.

67. திரு ஆர்கோட் தெய்வநாயகம் எம்.ஏ.எல்.டி.
ரிடைர்டு தலைமையாசிரியர்

68. திரு கே.வி. இராமசாமி, எம்.ஏ.பி.இ.டி.
தலைமையாசிரியர்

## கொங்கு மண்டலத்தில் முக்குல பிரமுகர்களும் மற்றும் தொழில் அதிபர்கள்:-

1. திரு எஸ்.எஸ். வெங்கிட்ராமத்தேவர், சூலூர்
பஸ் மற்றும் நிலக்கிழார்
2. திரு எஸ்.எஸ். பொன்முடி, சூலூர்.
3. திரு யூ.கே.என். இராசுத்தேவர், சூலூர்
பஸ் முதலாளி மற்றும் பெட்ரோல் பங்க்.
4. திரு எஸ்.ஏ. பழனியப்பத்தேவர், சூலூர்
பஸ் & ரைஸ் மில்ஸ்
5. திரு எஸ்.ஆர். ஆறுமுகத்தேவர், சூலூர்
பஸ் & பாங்க் அதிபர்
6. திரு எஸ்.ஆர். நாச்சிமுத்து, சூலூர்
ஜவுளிக்கடை மற்றும் நிலக்கிழார்
7. திரு ஏ.எஸ்.ஏ, தூய மணி, சூலூர்
வேஸ்ட் காட்டன் மில்ஸ் & நிலக்கிழார்
8. திரு கே. இரத்தினவேலு, சிந்தாமணிப் புதூர்
வேஸ்ட்காட்டன் மில்ஸ் & நிலக்கிழார்
9. திரு ஆர்.வி. கருப்பண்ணத்தேவர் & பிரதர்ஸ்
இராமனுதபுரம் நிலக்கிழார்
10. திரு சி. தண்டாயுதபாணி — இராமனுதபுரம்
சினிமா பட அதிபர் [தேவர் பிலிம்ஸ்]
11. திரு வெங்கிடாசலத்தேவர், இராமனுதபுரம்
நிலக்கிழார் & பார்ட்னர். தேவர் பிலிம்ஸ்
12. திரு என். ஞானதேசிகன் பி.ஏ.பி.எல்.
பெட்ரோல் பங்க் & நிலக்கிழார்
13. திரு கிருஷ்ணத்தேவர், இராமனுதபுரம்
ஹோட்டல் அதிபர்
14. திரு கிருஷ்ணத்தேவர், இராமனுதபுரம்
தியேட்டர் அதிபர்

RangaRakes
tamilnavarasam.com

15. திரு வடிவேல், சிங்காநல்லூர் மரக்கடை அதிபர்
16. திரு இ.பி. வெங்கிடாசலத்தேவர் இருகூர்
நிலக்கிழார் & மரக்கடை
17. திரு பழனிச்சாமி, இருகூர் பஸ் & நிலக்கிழார்
18. திரு சரவணபவத்தேவர், வெளியபாளையம்
லேத் ஒர்க்ஷாப்
19. திரு மந்திரி கணபதித்தேவர், உடையாம் பாளையம்
பவுண்ட்ரி அதிபர்
20. திரு எஸ். அர்த்த நாரித்தேவர், கோவை
பஸ் அதிபர்
21. திரு பி. அருணாசலம் நாட்டார் பி.ஏ.
டிரான்ஸ்போட் அதிபர்
22. திரு என். முத்துசாமித்தேவர், கோவை
பஸ் அதிபர்.
23. திரு இலட்சுமணப்பிள்ளை, ஒத்தைக்கால் மண்டபம்
நிலக்கிழார்
24. திரு வெங்கிடாசலத்தேவர், கிணத்துக்கடவு
பெரும் — நிலக்கிழார்
25. திரு இராமசாமி, இராசேந்திரா & கம்பெனி
கோவை மரம், இரும்பு, பெயிண்ட் வியாபாரம்
26. திரு பழனிச்சாமித் தேவர், வெள்ளலூர்
ரைஸ்மில் & நிலக்கிழார்
27. திரு அருணாசலத்தேவர், செட்டிக்கா பாளையம்
பெரும் நிலக்கிழார்
28. திரு அருணானந்தத்தேவர், இராமமுதபுரம்
நிலக்கிழார்
29. திரு முத்துச்சாமித்தேவர், திருப்பூர்
அச்சக உரிமையாளர்
30. திரு கண்ணப்பத்தேவர், திருப்பூர்
பஞ்சு வியாபாரம்



31. திரு சண்முகம், பேரூர்
ஹோட்டல் & சினிமா தியேட்டர் அதிபர்
32. திரு சேதுராமலிங்கம், பொள்ளாச்சி
பஸ் அதிபர்
33. திரு தியாகராசன் பி.எஸ்.ஸி., பொள்ளாச்சி
சினிமா பட அதிபர் (தேவர் பிலிம்ஸ்)
34. திரு பி.பி. குப்புசாமி, பள்ளபாளையம்
பவர்லூம் பேக்டரி, விவசாயம்
35. திரு பி. மாரியப்பக்கவுண்டர், தெக்கே தேசம்
கிராமம் கேரளம் தொழில் அதிபர்
பெருநிலக்கிழார்

## கொங்கு மண்டலத்தில்
## முக்குலத்தோர் அரசியல் பிரமுகர்கள்

மாண்புமிகு
1. கே. ராஜாராம்
சபாநாயகர். தமிழ்நாடு சட்டப்பேரவை.

மாண்புமிகு
5. புலவர் புலமைப்பித்தன் துணைத்தலைவர்
தமிழ்நாடு சட்ட மேலவை.
6. திரு கட்டேரி கருப்பணத்தேவர், சூலூர்
7. திரு எஸ்.வி. இலட்சுமணன் பி.ஏ.
முன்னாள் தலைவர் தமிழ்நாடு ஜனதா கட்சி
8. திரு எஸ்.டி. சண்முகம் சூலூர்
9. திரு ஆர்.பி. சேதுபதித்தேவர், பள்ளபாளையம்
சுதந்திரப் போராட்ட வீரர், ஜனதா கட்சி.
10. திரு இ.கே. குப்புசாமி, இருகூர்
முன்னாள் சேர்மன், இருகூர்
11. திரு முருகேஷ் இருகூர்

12. திரு மு.மா. சண்முக சுந்தரம், இராமனுதபுரம்
முனிசிபல் கவுன்சிலர், கோவை

13. திரு சர போஜி, மடந்துக்குளம்
முன்னாள் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்

14. திரு நாகப்பத்தேவர், இராமனுதபுரம்

15. திரு மீனாட்சி சுந்தரத்தேவர், இராமனுதபுரம்
சுதந்திரப் போராட்ட வீரர்.

17. திரு பி. குப்புசாமி பி.ஏ.பி.எல்.
மாவட்ட செயலாளர், இந்திரா காங்கிரஸ்

## தமிழ் நாட்டில் பட்டாணியர்கள் கொடுங்கோல் ஆட்சி

கி.பி. 1308—ல் பாண்டிய நாட்டை ஆண்ட வீர மன்னன் முதலாம் மாறவர்மனாகும். இவன் தனது மதுரை நகர்க் கருவூலத்தில் 1200 கோடி பொன்னையும், அளவிறந்த நவரத்தினங்களையும், தேடி நிரப்பி வைத்திருந்தான். இவனுக்குச் சுந்தரபாண்டியன், வீர பாண்டியன், என இரண்டு புதல்வர்களிருந்தனர். சுந்தரபாண்டியன் பட்டத்து ராணியின் மகன். வீர பாண்டியன் இஷ்டநாயகியின் மகன். முதலாம் மாறவர்மன் இறந்த பிறகு அரசுரிமை குறித்து மக்கள் இருவருக்கும் போர் மூண்டது. நாட்டில் குழப்பம் மிகுந்தது வீரபாண்டியன் உறையூருக்கருகில் தனது தலைநகரை அமைத்துக் கொண்டு நாட்டின் ஒரு பகுதியை ஆளத் தொடங்கினான். சுந்தரபாண்டியன் மதுரையில் இருந்து கொண்டு மறு பகுதியை ஆண்டான்.

இது சமயம் டில்லியிலிருந்து தென் நாட்டில் கொள்ளையடிக்கப் புறப்பட்டது ஒரு பெரும் துலுக்கர்படை. இந்த மாபெரும் டில்லியின் கொள்ளைப்பட்டாளத்திற்குத் தளபதி 'மாலிக்காபூர்' ஆவான். அவன் ஒவ்வொரு நாடுகளையும், கோயில்களையும் கொள்ளையடித்துக்கொண்டு தெற்குநோக்கி வருகையில் ஹொய்சள நாட்டுத் தலைநகரில் சில நாட்கள்



தங்கினான். மாலிக்காபூருக்கு மதுரையின் அரசியல் நிலையும் அங்கு செல்வம் குவிந்து கிடப்பதும் நன்றாகத் தெரியும்.

சுந்தரபாண்டியனால் அனுப்பப்பட்ட தூதுவன் மூலம் மாலிக்காபூருக்குக் கடிதம் கிடைத்தது. அத்துடன் சுந்தரபாண்டியனுக்குப் படை துணை புரியும்படி டில்லியிலிருந்தும் கட்டளை கிடைத்தது. எனவே சுந்தரபாண்டியன் விருப்பப்படி வீரபாண்டியனுக்கு எதிராகப் படைத்துணை புரிய மாலிக்காபூர் ஒப்புக் கொண்டான். இந்தச் சந்தர்ப்பம் மாலிக்காபூருக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. சுந்தரபாண்டியனுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டான். கி.பி. 1311 — ல் மாலிக்காபூர், சுந்தரபாண்டியனின் விருப்பப்படி வீரபாண்டியனின் சோழநாட்டுத் தலைநகரான உறையூரைத் தாக்கினான். வீரபாண்டியன் துலுக்கர் படையை எதிர்த்து நிற்க முடியவில்லை. எனவே 110 யானைகளின் பேரில் பொன்னையும் பொருளையும் ஏற்றிக் கொண்டு உறையூரை விட்டகன்றான். மாலிக்காபூர் உறையூரைச் சூறையாடிவிட்டு மதுரை மேல் பாய்ந்தான். சுந்தர பாண்டியனுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி உதவி செய்யவில்லை நகரத்தையும் கோயில்களையும் தாக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட சுந்தரபாண்டியன் மனைவி மக்களோடு ஓடி மறைந்தான். இப்படியாக வீரபாண்டியனும் சுந்தரபாண்டியனும் மோசத்திற்கு உள்ளாகவும் நாட்டு வளமெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டதுமே காணலாகிற்று.

இப்படியாகப் பாண்டியன் மதுரை பங்கப்பட்ட விபரம் தெரிந்த, சுந்தரபாண்டியனின் தாய்மாமன் விக்கிரம பாண்டியன், தஞ்சையிலிருந்து படையுடன் விரைந்து வந்து சிதறுண்டு நின்ற மதுரைப் படைகளையும் ஒன்று சேர்த்து, மாலிக்காபூரை மதுரையில் வைத்து வளைத்துக் கொண்டான். சிதறுண்டு கிடந்த தமிழர்படை விக்கிரம பாண்டியனின் ரணபேரிகை முழக்கம் கேட்டு அணி அணியாக விரைந்தோடி வந்து திரளவே; மதுரையைச் சுற்றிலுமுள்ள கொத்

RangaRakes tamilnavarasam.com

தளங்களிலும், காடுகளிலும் படைத் தளங்களை அமைத்து கொண்டு விக்கிரமபாண்டியன் அஞ்சாது வெஞ்சமர் புரிந்து துலுக்கர்களை வெட்டிக் குவித்தான். இந்தக் கடுமையான எதிர்ப்பைக் கண்ட மாலிக்காபூர்: போரை விரும்பாமல் தனது நோக்கமான கொள்ளையடிப்பதையே பிரதானமாகக் கொண்டு, தனது படையை மதுரையிலிருந்து தென்திசை நோக்கிப் பின்வாங்கினான்: விக்கிரம பாண்டியனும், துலுக்கர் படையைப் பின் தொடர்ந்து அடிக்கவில்லை.

மாலிக்காபூர் தனது கொள்ளைப் பயணத்தைத் தெற்கே திருநெல்வேலி வரையிலும் மேற்கொண்டான். தாம்பரபரணி திரத்தில், நுழைந்து எல்லையில்லாச் செல்வங்களோடிருந்த ராஜ்யங்களையும் ஆலயங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு 1311—ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் டில்லி திரும்பினான்.

அவன் பாண்டிய நாட்டிலிருந்து கொள்ளையடித்துக் கொண்டு சென்ற பொருள்கள் விபரமாவது என்னவென்றால்: 912 யானைகள் 96000 மணங்கு தங்கம். ஆயிரக்கணக்கான பெட்டிகள் நிறைய முத்துக்களும், நவரத்தினங்களும் 20,000 குதிரைகள். இவ்வளவு பொருள்கள் ஒரு நாட்டில் கொள்ளையடிக்கப் பட்டிருக்குமானால், அந்த நாட்டின் நிலைமையும், மக்கள் உள்ளமும் எப்படி இருந்திருக்கும். அது காலை நாட்டின் பாதுகாப்பு எவ்வளவு சீர்கேடாய் இருந்ததென்பதும் புலனாகிறது. ஒற்றுமைக் குறைவும் அரசுரிமைப் போட்டியும் எதிரிக்கு எவ்வாறு உதவியிருக்கிறதென்பதைச் சிந்திக்க வேண்டியதல்லவா?

மதுரையில் வைத்து விக்கிரமபாண்டியன் கொடுத்த பலமான அடியை மனதில் வைத்துக் கொண்டு; மாலிக்காபூர் தனது திரும்பு பயணத்தை மதுரை வழியாக வைத்துக் கொள்ளவில்லை. மதுரைக்கு மேற்கேயுள்ள கல்லூத்துக் கணவாய் வழியாக (தற்போதய உத்தப்ப நாயக்கனூர்] திண்டுக்கல்லை நோக்கிப் பயணம் செய்து:



வழியில் நாகமலைக் கணவாயில்; கள்ளர்களால் தொந்தரவுக்குள்ளாகி அதன் மேல் அக்டோபர் மாதம் டில்லி போய் சேர்ந்தான்.

கொள்ளைப் பொருள்கள் டில்லி போய் சேர்ந்தவுடன் சுல்தான் பெருமகிழ்வு கொண்டான். சுல்தான் அரசு தனது ஆதிக்கத்தைப் பாரதம் பூராவுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த காலமானபடியால் மதுரைச் சீமையைப் பற்றிப் பெரிதும் சிந்தனைகள் செய்ய வேண்டியதாயிற்று. தென்திசை நோக்கிக் கொள்ளைக் கூட்டம் பல தடவைகள் அனுப்பலாயிற்று ஒவ்வொரு தடவையும் திரண்ட செல்வக்குவியல்கள் டில்லி வந்து சேர்ந்தன.

எல்லையில்லாக் கொள்ளைப் பொருள்களைக் கொள்ளையடித்துத் தின்று கண்ட துருக்கர்களுக்கு நாடாசை ஏற்பட்டது. இதற்குக் காரணம்; இது காலை நாட்டில் ஒற்றுமையில்லாதிருந்தமையும் பாதுகாப்புக் குறைவையும் டில்லி அரசு சரிவர தெரிந்து கொண்டமையேயாகும். தென் நாட்டில் மதுரையை மையமாக வைத்து ஒரு ராணுவகேந்திரம் அமைக்கவேண்டுமென்று ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. அது சமயம் டில்லியில் சுல்தானாயிருந்தவன் முகமது துக்ளக் கி.பி. 1324 துக்ளக் மதுரைக்குப் பெரும் படையை அனுப்பினான். அது முதல் டில்லிக் கொள்ளைக் கூட்டம் மதுரையில் தங்கியது. தமிழ்நாட்டில் பல பாகங்களையும் சூறையாடுவதே அப்போது அவர்கள் தொழில் பலம் குன்றிய தமிழ் அரசர்களுடன் கூடுவதும், எதிர்ப்பதுமாக இருந்த இவர்கள் நாட்டில் அதிகாரம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டார்கள். கி.பி. 1333ல் டில்லிச் சுல்தானின் மதுரைப் பிரதிநிதியாக இருந்து வந்த 'ஜலாலுதின்' அசன்ஷா மதுரைச் சீமைக்குத் தன்னைச் சுதந்திர அரசனாகவே ஆக்கிக் கொண்டான். அது முதல் மதுரையிலிருந்து வந்த டில்லி ராணுவத்திற்கும்; டில்லி அரசுக்கும் தொடர்பு நீங்கி டில்லி



RangaRakes
tamilnavarasam.com

ராணுவம் ஜலாலுதீன் அசன்ஷாவின் கட்டுப்பாட்டிற்கு வந்து விட்டது.

கி.பி. 1334—1378; மதுரையைச் சுல்தான்கள் என்னும் பெயரால் பட்டாணியர்கள் எட்டுப்பேர்கள் ஆண்டிருக்கின்றனர்; அவர்கள் உடௌஜி, ஜலாலுதீன், குத்புதீன், கியாஸ்-உத்தீன், நாசிர் உத்தீன், அடில்ஷா, பக்ருதீன் முபராக்ஷா, அல்லாவுதீன் சிக்கந்தர். இவர்கள் மதுரையில் ஆதிக்கம் செலுத்திய ஆட்சியைக் கொடுங்கோன் ஆட்சி என்று சரித்திரம் விளக்குகிறது. வரலாற்று ஆசிரியர்கள் இருள் சூழ்ந்த மதுரை என்றும் குறிப்பிடுகிறுர்கள்.

அறுபது [60.000] ஆயிரம் பட்டாணியர்கள் மதுரை நகரத்திற்குள் ஆயுதபாணிகளாய் தங்கியிருந்து கொண்டு; தமிழ்நாட்டில் கொள்ளையடிக்கும் வேலையில் ஈடுபட்டதாக தெரிய வருகிறது. மென்மேலும் டில்லியிலிருந்து மதுரை நோக்கிப் பட்டாளம் வந்த வண்ணமாகவும் தெரிகிறது நாட்டில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டார்கள். ஈவு இரக்கமின்றி மக்களை வெட்டிக் கொலை செய்தனர். ஆடு மாடுகளை மந்தையாகக் கைப்பற்றி அடித்துத் தின்றனர். கோவில்களை இடித்துத் தள்ளிவிட்டு அங்கு ராணுவம் தங்குமிடமாகவும் மாற்றிஞர்கள். ஆலயங்களைப் பள்ளி வாசல்களாக மாற்றினர், இந்துக்கள் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்துக்கள் சமயநெறியில் தடை செய்யப்பட்டனர். பண்டைய நூல்கள் எரிக்கப்பட்டன. மக்கள் கட்டாயப்படுத்தி மகமதியர்களாக மதமாறுதல் செய்யப்பட்டனர்.

மதுரைத் தலவரலாறு என்னும் பழைய நூல் மதுரைத் தலத்தில் துலுக்காணியர்களின் அக்கிரமங்களைப் பற்றிக் கூறுகிறது. ''துலுக்காணியமாக, நாயஞர் மதுரைக்கு வாய்த்த பெருமாளும் நாஞ்சில் போக' பஞ்சாக்ஷரத்திருமதிலும் பதிஞன்கு கோபுரங்களும், தெருவீதிகளும் இடிபட்டன நாயக்கர் கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம்,



மகாமண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது'' என்று கூறுகிறது சாசனம்.

''காலம் துலுக்காணியமாயிருந்தது. கடவுளின் தேவதான நிலங்களுக்கு வரி போடப்பட்டது. அப்படியிருந்தும் கோயில் பூசைகுறைவின்றி நடைபெற வேண்டியிருந்தால் ஊர் மக்கள் கோயில் நிலங்களை முறைபோட்டுக் கொண்டு உழுது பயிரிட்டார்கள் என்று குறிப்பிடுகிறது.

கொடுங்கோல் ஆட்சி கோர தாண்டவமாடியது. கியாஸ் உதீன் காலத்தில்தான் மிகவும் அதிகம். கியாஸ் உதீனின் மனைவியின் உடன் பிறந்தானை மணந்த 'இபின் பதூதா' தான் எழுதிய நூல் ஒன்றில் தனது சொந்தக்காரனை; கியாஸ் உதீன் செய்த அக்கிரமங்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறுன்.

''இந்துக்கள் பலர் கியாஸ்உதீனுல் கழுவேற்றப்பட்டனர். குழந்தைகள் தாய்மார்கள் மார்பில் வைத்து, வெட்டிக் கொல்லப் பட்டனர். உருவ வழிபாடு செய்த ஒருவன், அவனுடைய மனைவியுடனும் குழந்தையுடனும் கொல்லப்பட்டான். இக்கொடிய கியாஸ்உதீன், தன்னிடம் தோற்ற 80 வயதுடைய மூன்ரும் வீர வல்லாளனை — உயிரோடு தோலை உரித்து அத்தோலில் வைக்கோலை அடைத்து, அதனை மதுரை நகர மதிலில் தொங்க விட்டான். இந்தப் பாவச் செயல் 1342-ல் இபுன் பதூதா நேரில் கண்டதாம். மூன்ரும் வீரவல்லாளன் தன் தாய் நாட்டு மக்களை துலுக்கர்களின் பிடிப்பிலிருந்து காப்பாற்றப் பாடுபட்ட தியாக மூர்த்தியாகும். பெருங்கொலைகள் பல புரிந்த கியாஸ்உதீனை மனித வடிவத்தில் இருந்த கொடிய பேய் என்றுதான் சொல்ல வேண்டும்'' இவ்வாறு இபின்பதூதா கூறியுள்ளார்.

RangaRakes

tamilnavarasam.com

இரண்டாவது கம்பண்ணரின் மனைவி கங்காதேவி மகமதியர்கள் அட்டூழியங்களை நேரில் கண்டவர்: அந்த அம்மையார் வடமொழியில் காவியமாக இயற்றிய நூலில் குறிப்பிடும் விபரங்கள்:—

"மதுரைப் பிராந்தியத்தில் கோயில்கள் ஆராதனை புறக்கணிக்கப்பட்டன. நகரத்துள் மதில்களுக்கு உட்புறம் மிருதங்க ஒலிகளுக்குப் பதிலாக நரிகளின் ஊளைகள்தான் கேட்கப்படுகின்றன. யாகங்களின் நறுமணப் புகையும் வேதங்களின் இனிய தொனியும் கிராமங்களை விட்டு விலகவே, மாமிசம் வேவிக்கும் புலைநாற்றமும் துருக்கர்களின் கடுமையான பேச்சொலியும் நிரம்பிக் கிடக்கின்றன. மதுரைப்புற நகர்களில் தென்னந்தோப்புகள் வெட்டப்பட்டு அங்கிருந்தவைகளில் கழுமரங்கள் நடப்பட்டுக் காட்சியளிக்கின்றன. அவற்றில் மானிட மண்டை ஓடுகள் தோரணங்களாகத் தொங்குகின்றன. துலுக்கர்கள் வெட்டிக் குவித்த மக்களின் இரத்தத்தால் தாமிரபரணியாறு சிவந்து ஓடுகிறது. வேதங்களும் நீதிநெறிகளும் மறைந்தன. நாட்டில் அருட்பமும் காருண்யமும் சிறிதுமில்லை. அபாக்கியவான்களான திராவிடர்களின் நெற்றிகளில் ஏக்கமே எழுதப் பட்டுள்ளது"

படைபலமிழந்த மன்னர்களும்; பகையில் வேறுபட்டுக் கிடந்தவர்களும் ஆட்சியிலிருந்து துரத்தப்பட்ட தானைத் தலைவர்களும் படைவீரர்களும் ஓடி மறைந்தார்கள். கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின் கடும் புலிவாழும் காடு நன்றே என்பதற்கு இணங்க பெருவாரியான மக்கள் சிதறுண்டு ஓடினர்.

ஈவு இரக்கமற்ற துருக்கர்கள் மதுரையை இருள் போல் சூழ்ந்து கொண்டு அட்டூழியம் நடத்திய காலத்தில் மக்களும் கர்த்தாக்களும் மன்னர் வழியினரும் தங்கள் உயிரினுமினிய அங்கயற்கண்ணி அன்னை மீனாம்பிகையின் ஆலயத்தைப் பாதுகாக்கத் தவறவில்லை.

## துருக்கர்களோடு தன்னரசு நாட்டுக் கள்ளர்கள்

மதுரை மீனாம்பிகை ஆலயம் மூடப்பட்டு அதன் மேல் பாண்டிய மன்னரும், தேவஸ்தானக் கர்த்தாக்களும் புகலிடம் தேடி ஓடி விட்டனர். மதுரையில் மையங் கொண்டிருந்த துருக்கர்களிடம் தன்னரசுத் தலைவர்கள் தொடர்பு கொண்டனர். ஆலயம் பூட்டப்பட்டிருப்பதைத் தங்கள் பொறுப்பில் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யக் கள்ளர்கள் முன் வந்தனர். துருக்கர்கள் மேலும் ஆலயத்தில் அழிம்பு செய்யக் கூடாது என்று எச்சரித்தனர். மீறினால் தன்னரசுப் படையும் நாட்டு மக்களும் மதுரையில் வந்திருக்கும் துருக்கர்களுக்கு ஒத்துழையாமல் துன்பங்கள் தொடரும் என்று அறிவித்தனர். துலுக்கர்கள் மாலிக்காபூர் மூலம் தன்னரசு தலைவர்களின் வலிமையையுணர்ந்தவர்கள் ஆகையால் கள்ளர்களுக்குக் கட்டுப்பட்டு மதுரையில் வாழ்ந்தனர்.

அம்பிகையின் ஆலயம் பூட்டப்பட்டிருந்தாலும் மேற்கொண்டு அழிம்புகள் ஏற்படாவண்ணம்; சாதிக் கட்டுப்பாடுடன் காவல்முறை ஏற்பட்டது வடக்குவாசல் பெரிய மறவர்கள், தெற்குவாசல் சின்ன மறவர்கள், மேற்குவாசல் மேல்நாடு (பிற்காலத்தில் பிரான்மலை நாடு) கிழக்கு வாசல் கீழ்நாட்டு அம்பலம் அதாவது தற்போதைய மேலூர் என்று ஒப்பந்தம் செய்து பாதுகாவல் தொடங்கியது. மகமதியர்கள் அட்டூழியம் கண்டு கதிகலங்கிப் போயிருந்த மதுரை நகர் மக்கள் குடிக்காவல் முறைப்படி ஒவ்வொரு குடும்பத்தார்களும், தெருக்காரர்களும் உறவுமுறையார்களும் தேவமார்களிடம் தங்கள் சொத்துச் சுதந்திரங்களைப் பாதுகாவலுக்கு ஒப்படை செய்து கொண்டார்கள்.

சுல்தான்கள் என்னும் பெயருடன் மதுரையில் கத்தியை காட்டி ரத்தக்கறை படிந்தே வாழ்நாள் நடத்தி வந்தவர்களுக்கு நித்தியகண்டமாகவேயிருந்தது. மறைந்து வாழ்ந்த பாண்டியர்கள் ஆட்சிக்கு ஏற்பட்ட அவல நிலையையும், ஹிந்து சமயத்திற்கு ஏற்பட்ட கஷ்ட காலத்தையும், சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய, ஆலயங்கள் இடிபடுவதையும்

RangaRakes tamilnavarasam.com

சிற்பங்கள் சீர்குலைவதையும் அது காலை ஹிந்து சமயத்தின் பாதுகாவலனாக விளங்கிய ஹரிகரபுக்கர் மன்னனுக்கு எடுத்துச் சொல்லிப் படைத்துணை கொடுத்துப் பாதுகாக்க வேண்டுமென்று தூது அனுப்பினார்கள்.

## விஜய நகரப் பேரரசின் தமிழ் நாட்டு ஆதிக்கம்

விஜய நகரத்தில் கி.பி. 1335ல் அரசு செலுத்தி வந்த ஹரிகர மன்னன் தெய்வ பக்தியுள்ளவன். ஹிந்து மதத்தைப் பரிபாலனம் செய்வதைத் தனது தலையாய கடமை எனக் கடைப்பிடித்தவன். பாண்டிய நாட்டில் அரசு பலமிழந்து இருப்பதையும், துருக்கர்கள் பெரிய படையுடன் நாட்டில் புகுந்து கொள்ளையடிப்பதையும், கோயில்களை இடித்து விக்கிரகங்களை உடைப்பதையும் கண்டு கலக்க மடைந்தான். மதுரையைப் பாதுகாக்கும் பொருட்டு தனது மகன் இரண்டாம் கம்பண்ணன் தலைமையில் ஒரு பெரும் சைனியத்தை மதுரைக்கு அனுப்பினான், விஜய நகரையாண்ட முதலாம் புக்கராயனின் மகன் குமாரகம்பணன் என்பவன் ஒரு பெரும் படையுடன் மதுரைமேல் பாய்ந்து துருக்கர்களை ஒடுக்கினான் என்பதோடல்லாது துருக்கர் ஆட்சியையும் ராணுவத்தையும் நிர்மூலமாக்கி மதுரையைக் காத்தான்.

வெற்றியடைந்த கம்பணன் தமிழ்நாட்டின் நிர்வாகத்திற்குப் புத்துயிர் கொடுத்த காலத்தில் முதன் முதல் மதுரையில் 48 வருஷங்களுக்கு முன் இடித்துத் தள்ளப்பட்ட ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் மிஞ்சியிருந்த கர்ப்பக்கிரகம் பூட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு திறந்து பார்த்த போது; நாற்பத்தெட்டு வருடங்களுக்கு முன், சன்னதியில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள்யாவும் அப்படியே புத்தம் புதிதாக இருக்கக் கண்டு மகிழ்ந்தான். பெருவியப்படைந்தான்:- முன்பு ஏற்றப்பட்டு வைத்திருந்த திருவிளக்கு கோயில் திறந்தபோது எரிந்து கொண்டிருந்தது. சந்தனம், பூமாலைகள் வணிகலன்கள் அனைத்தும் அன்றைக்கு வைக்கப்



பட்டனபோல் காட்சியளித்தன. கோயில்களின் திருப்பணிகள் துவங்கப்பட்டன. (மாநகர் மதுரை—பண்டித—வித்துவான் ச. சாம்பசிவன்) இது விபரம் தெளிவாக எழுதியுள்ளார்.

மதுரை விடுவிக்கப்பட்டதானது கண்டு அஞ்ஞானவாசம் செய்து வந்த பாண்டியர்களுக்கும் பெருமகிழ்வு ஏற்படுத்தியது. கம்பண உடையார் சைனித்துடன் தன்னரசு நாட்டுப் படை வீரர்கள் சேர்ந்து கொண்டார்கள். துருக்கர்களை வேட்டையாடித் தீர்த்துக்கட்டவும், சுல்தானையும் அவன் வர்க்கத்தினரையும் பிடித்துத் தூக்கிலிடவும் செய்தனர்.

கம்பண உடையார் மதுரையில் சிறிது காலம் ஆட்சியில் இருந்து தங்கியிருந்தார் என்றும் மதுரையில் ஆலய சீர்திருத்தங்கள் செய்தார் என்றும் அவர் சோழ பாண்டிய மன்னர்களின் தொடர்பு கொண்டிருந்தார் எனவும் தக்க ஆதாரங்களுடன் அறிஞர் சிவஞானடி சேர்வை அவர்கள் தாம் எழுதியுள்ள 'மூவேந்தர் சரிதை' என்னும் நூலில் பக்கம் 76-ல் விளக்குகிறார்கள். அதன்படி

"பின்னொரு காலத்திருங்காப்பு நீக்கித்தன் பேரன்பினால்
முன்னுள ஊர்களும், பின்புதிதாய் விட்டுமுக்கணர்க்கு
மன்னியபூசை திருப்பணி கூடல் வளரச்செய்தான்
கன்னியும், பொன்னியும், கங்கையுங்கொண்டருள்
கம்பணனே"

என்ற கவி மதுரைத் தலவரலாறு என்னும் நூலில் இருந்து எடுக்கப் பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் தான் வீரசேகர சோழன் என்பான் காளையார் சோமனார் முதல்வனான சந்திரசேகர பாண்டியனுடன் போர் தொடுத்து வெற்றி பெற்றான்.

16 ஆவது நூற்றாண்டில் பாண்டியர்கள் பெயரளவிங் மன்னர்களாகவிருந்தார்களே தவிர; விஜயநகர சமஸ்தானத்தில் ஓர் சிற்றரசுவாக விளங்கினர். அதன்படி பாண

 tamilnavarasam.com

டியர் சிம்மாசனத்தில் உட்காரவைக்கப் பட்டிருந்தவர் சந்திரசேகர பாண்டியனும். கி. பி. 1557ல் தஞ்சையை ஆண்ட வீரசேகர சோழன் ஒரு பெரும் படையுடன் மதுரை மீது பாய்ந்து மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான். சந்திரசேகரன் விஜயநகரத்திற்கு ஓடிப்போய், கிருஷ்ணதேவரயனிடம் முறையிட்டான். மன்னர் கிருஸ்ண தேவராயன், பெரும் படையுடன் படைத்தலைவர் நாகம நாயக்கனைப் பாண்டி நாட்டிற்கு அனுப்பி வைத்தான். நாகமநாயக்கன் தஞ்சை அரசனை வென்று மதுரையைக் கைப் பற்றி, கொண்டானே தவிர கிருஷ்ணதேவராயர் உத்திரவுப் படி பாண்டியனிடம் ஒப்படைக்கவில்லை. தானே பாண்டிய நாட்டை ஆளத்தொடங்கினான். விஜயநகரத்திற்குக் கட்டுப் படவோ, கப்பம் கட்டவோ மறுத்தான்.

கிருஷ்ணதேவராயன், நாகமநாயக்கனை ஒடுக்கத் திட்ட மிட்டான், இராணுவத் தளபதிகளை அழைத்து, நாகம நாயக்கனை கைப்பிடியாக பிடித்துக் கொண்டு வருவதற்கு மதுரை மீது படை எடுத்துச் செல்ல வல்லமையுள்ளார் யார் எனக் கேட்டான். நாகமநாயக்கன் பல தடவைகளில் விஜயநகரத்திற்காகப் போரிட்டு வெற்றிகள் கண்ட யுத்த தந்திரி, மகாவீரனுமாவான் எனவேயாரும் முன்வரவில்லை. கடைசியாக நாகமநாயக்கனது மகன் விஸ்வநாத நாயக்கன் மதுரை மீது படை எடுக்கவும் நாகமனைக் கைது செய்து வரவும் சம்மதித்து மன்னனிடம் பிரதிக்ஞை செய்தான், அதன்படி விஸ்வநாதனை மதுரைக்கு அனுப்ப; அவன் நாகமனைக் கைது செய்து கொண்டு வந்து ராயனிடம் ஒப்பு விக்க; மனமகிழ்வு கொண்ட ராயன் விஸ்வநாதனையே மதுரைக்கு ராஜப் பிரதிநிதியாகவும் விஸ்வநாதன் வேண்டு கோளின்படி நாகமநாயக்கனை மன்னிக்கவும் செய்தான். மதுரை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற விஸ்வநாத நாயக்கன், தன் தந்தையைப் போலல்லாமல் ராஜ விஸ்வாசத்துடன் மதுரையை ஆளத் தொடங்கி பிரசித்தம் பெற்றான்.

விஜய நகரம் அழிந்து போனபிறகுங்கூட மதுரையில் நாயக்கர் ஆட்சி நிலைத்துப் பெருமையுடன் விளங்கிற்று.



கிருஷ்ண தேவராயன் மறைந்தவுடன் தனிஉரிமை கொண்டு கி.பி. 1736 வரை வீறு கொண்டு விளங்கிற்று.

விசுவநாத நாயக்கன் காலம் முதல் ராணி மீனாட்சி காலம் வரையிலும் [1529-1736) ஆட்சி நடத்திய நாயக்கர்கள் பதின்மூவராவர். இவர்களுள் மதுரையோடு நெருங்கித் தொடர்பு கொண்டதோடு மட்டுமின்றி வரலாற்றுச் சிறப்பும் பெற்றவர்கள் மூவராவர். முதலாமவர் விசுவநாத நாயக்கன் (1516—1564) அடுத்தவர் திருமலை நாயக்கன் 1623—1656 மூன்றுமவர் அரசி மங்கம்மாள் (1689—1706)


tamilnavarasam.com

# மதுரைக்கு விஜயநகர ராஜப்பிரதிநிதி
# தமிழர் ஆட்சி மறைவு

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயன் காலத்தில் கி.பி. 1526—ல் விசுவநாத நாயக்கன், மதுரைக்கு விஜய நகர ராஜப்பிரதிநிதியாக வந்தான். அக்காலம் சந்திரசேகர பாண்டியன் சோழபாண்டிய நாடுகளை ஆண்டு வந்தான்.

எனவே விஸ்வநாத நாயக்கன் சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் மேற்பார்வை செய்து விஜய நகரத்திற்குக் கப்பம் கட்டி வந்தான். இந்த நிலையில் சந்திரசேகர பாண்டியன், சந்ததியின்றி மாண்டான். பட்டத்திற்கு யார் வருவது என்பது பற்றிப் பெரும் குழப்படி ஏற்பட்டது. உள் நாட்டில் கலவரம் உண்டாகியது விஜயநகரத்தாருக்கு இந்த சமயம் ஒரு நல்ல வாய்ப்பாயிற்று. ராணுவ நடவடிக்கை எடுத்து அமைதியை உண்டு பண்ணும் நாடகம் நடத்தினார்கள் நாட்டையும் கைப்பற்றினார்கள். அரச பரம்பரையினர்களும் படை பலத்திற்கு எதிர்த்து நிற்க முடியவில்லை. இவர்களிடம் போதிய படைபலம் இல்லை. இத்தனைக்கும் மேலாக ஒருவர்க்கொருவர் ஒற்றுமையில்லை, அடங்கியிருந்து அன்னிய அரசின்கீழ் வாழவும் முடியவில்லை. ஆகவே தலைநகரை விட்டுத் தென்பாண்டி நாட்டில் குடியேறினார்கள். முக்கிய கேந்திரங்களில் தானைத் தலைவர்கள் அழிக்கப்பட்டும் போனார்கள்.

நாயக்கர்கள் தங்கள் ராஜதந்திர உபாயங்களைக் காட்டி விஜயநகரச் செல்வாக்கை மதுரையில் ஆணித்தரமாக ஊன்றிவிட்டார்கள். விஸ்வநாத நாயக்கனுக்குப் பெரிய



படைத்துணை கொடுக்கப்பட்டது. அரசியல் சாணக்கிய மும்; ராணுவத் தந்திரமும் ஒருங்கே பெற்று, நல்ல அனுபவத்தோடிருந்து வந்த அரியநாத முதலியாரை விஸ்வ நாத நாயக்கனுக்கு மந்திரியாக நியமித்து, விஜயநகரத் தரசன் மதுரைக்கு அனுப்பினான். மதுரை வந்தவுடன் அரியநாதமுதலி ராணுவத்தலைமைப் பதவியையும் ஏற்றுக் கொண்டான். இதுதான் விஜயநகர வடுகர்கள் தமிழ் நாட்டை விழுங்கிவிட வேண்டும் என்று எடுத்த முதலெடுப் பாகும்.

அது முதற்கொண்டு, தமிழ்நாட்டிற்கு, மண்டலேஸ் வரர்கள், உயர்தர ராணுவத் தளபதிகள் இறக்குமதி செய்யப்பட்டார்கள். தமிழ்நாட்டில் கிடைத்த மட்டும் ராணுவத்திற்கும் அரசாங்க நிர்வாகத்திற்கும் ஆள் சேர்த் துக் கொள்ளப்பட்டது.

அரியநாதமுதலி, கேசவப்ப நாயக்கன் ஆகியவர்களின் உதவி கொண்டு விஸ்வநாத நாயக்கன் மதுரை கோட்டை கொத்தளங்களைச் செப்பம் செய்தான், மதுரைக் கோவிலின் பல பகுதிகளையும் கட்டினான். அதே போல திருச்சிக் கோட்டையும் புதுப்பித்தான். திருநெல்வேலிக் கோயிலும் திருவீதிகளும் விரிவுபடுத்தலாயின. ஆட்சியை வலுப்படுத்து வதற்கு நாட்டில் நிர்வாக அமைப்பை சீர்செய்யத் திட்ட மிட்டு **பாளையப்பட்டு முறையை** ஏற்படுத்தித் தக்க கவனம் செலுத்தப்பட்டது. விஸ்வநாதனுக்கு அமைச்ச ராகவும், படைத்தலைவனாகவுமிருந்து வந்த அரியநாத முதலி பாளையப்பட்டு ஆட்சியில் விஜயநகரத்தில் முன் அனுபவமுடையவன். பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் குறுநில மன்னர்கள், தன்னரசுத் தலைவர்கள், பாண்டியர் வாரிசுகள் செல்வாக்குள்ள தளபதிகள் நாடெங்கிலுமிருந்து கொண்டிருந்தார்கள், அவர்களில் சிலர் விஜயநகர ஆட்சி பாண்டி நாட்டில் ஏற்படுவதை அறவே வெறுத்தார்கள். விசுவநாதன் ஆட்சியை ஏற்றுக் கொண்டவர்களுமிருந்தனர் விஜய நகரத்திலிருந்து, மதுரைக்கு வந்த பெரும் படையில் உயரிய உத்தியோகஸ்தர்களும் தியாகம் செய்த வீரர்களு

RangaRakes
tamilnavarasam.com

மிருந்தார்கள். நாட்டின் நிலைமைக்கேற்றவாறு தக்க தலைமையைத்தேடிப் பாளையங்கள் அமைக்கும் பொறுப்பு ஏற்பட்டது. இப்படியாக நாட்டைப் பிரிந்துப் பாளையங்கள் அமைப்பதற்கு முதன் முதலில் ஆங்காங்கே ஆட்சி புரிந்து வந்த குறுநில மன்னர்களை அவர்கள் ஆண்டு வந்த சீமையுடன் ஏற்று மதுரையுடன் இணைக்கப்பட்டது. அத்துடன் வடுகர்களின் சைனியத் தலைவர்களின் பலருக்கும் நாயக்களின் உறவினர்களுக்கும் பாளையங்கள் கொடுக்கப்பட்டன. பாளையங்களின் விஸ்தீரணம் வரையறுக்கப்பட்டு அடிப்படையாக அமைக்கப்பட்ட பாளையத்திற்குத் தலைவன் பாளையக்க ன். தன் பாளையத்திற்குள் நிர்வாக அதிகாரமுடையவன். வரி வசூல் அதிகாரமும் பட்டாளம் வைத்துக் கொள்ளும் உரிமையுமுண்டு. மதுரை ஆட்சிக்குக் கப்பமும் கட்டவேண்டும். கேட்டபோது படையையுமனுப்ப வேண்டும் இதுவே பாளையப்பட்டுவின் முக்கிய அம்சமாகும். இப்படியாக இவர்கள் நிர்வாகமுறை ஏற்படுத்துவதற்கு முன்னதாகக் கொடியுடனும் முடியுடனும் ஆண்டு செங்கோல் செலுத்திய மன்னர்களும் பாண்டி நாட்டிலிருந்து வந்தார்கள்.

## பஞ்ச பாண்டியர் யுத்தம்

இந்த நிலையில் தென்காசிப் பாண்டியன் பூதல வீர ராமவர்மன் விஜயநகர ஆட்சியை எதிர்க்காமலிருந்தமைக்கு மிகவும் கோபங் கொண்ட அவனது வாரிசுகளான பஞ்ச பாண்டியர்கள், கயத்தாற்றையும் தூத்துக்குடியையும் ஆண்டபட்டம் பெருமாள் என்பவனின் தலைமையில் கிளர்ச்சி செய்தார்கள். கி. பி. 1545-ல் அரிய நாதமுதலியின் தலைமையில் பஞ்சபாண்டியர் கயத்தாற்றில் வைத்து அரிய நாதனை முறியடித்தார்கள். முறியடிக்கப்பட்ட அரியநாதன் திரும்பவும் 10000 காலாட் படையும் 2000 குதிரை வீரர் களும், நாட்டுப் பீரங்கிகளும், வெடிகளும், பிற யுத்தத் தளவாடங்களுடனும் வந்து கயத்தாற்றை வளைத்து கொண்டான். இது சமயம் தன்படை பலத்தைக் கண்டு



பாண்டியர்கள் பயந்து கீழ்படிவார்கள் என்று எண்ணிய அரியநாதமுதலி பஞ்சபாண்டியர் தலைவன் குலசேகர பாண்டியத்தேவனுக்கு ஒரு கடிதம் எழுதி அதன் மூலம்: பாண்டியர் மதுரை ஆட்சிக்குப் பணியாவிட்டால் கயத் தாற்றை நிர்மூலமாக்கப்படும் என்றும் உடனே பதில் கொடுக்க வேண்டும் என்றும் திருமுகம் அனுப்பினான். அதற்குப் பதில் எழுதிய குலசேகரத்தேவன்: தமிழ் மன்னர்களின் கீர்த்தியைப் பங்கப்படுத்திக் கொண்டு வடுகர் கள் வாசலில், கட்டியங் கூறி வயிறு வளர்க்கும் அரியநாதா! போர்க்களத்தில் எதிர்த்து நின்று கொண்டு விரோதிகளிடம் அமர் செய்வதை விட்டு விட்டுச் சமரசம் பேசுவது மறவர்க் கழகல்ல. மேற்கொண்டு நாளை போர்க்களத்தில் எம்வீரர் கள் இரட்டை முகப்பட்டாக்கள் சுழல் வேகத்தின் ஓசை மூலம்''...என்று எழுதியனுப்பினான்.

மறு நாள் கடும் போர் மூண்டது. ஒரு மாதம் போர் ஓயவில்லை. பாண்டியர்களுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் உதவிகள் வந்து குவிந்த வண்ணமாயிருந்தது. மிகவும் தந்திரமாகத் தனது படையைப் பின் வாங்கச் செய்து கொண்டு; மதுரையிலிருந்துதான் எதிர்பார்த்த உதவிக்குக் காத்திருந்தான் அரியநாதமுதலி. அந்தருவாயில் விசுவநாத நாயக்கன் மதுரையிலிருந்து பெரும் படையுடன் அரியநாதனுக்கு உதவிக்கு வந்து சேரவே கயத்தாற்றில் உக்கிரமான போர் மூண்டது. இருதரப்பிலும் ஆட்சேதமதிகமாயிற்று. எங்கும் பிணக்காடாயிற்று. இப்படியாக யுத்தம் ஆறு மாத காலம் நீண்டது.

யுத்தத்தில் வெற்றி பெருவது முடியாத காரியம் என்பதைத் தெரிந்த விஸ்வநாதநாயக்கன், அரியநாதனுடைய சூழ்ச்சியால், நயவஞ்சகமாகப் பாண்டியர்களை வெல்லத் தீர்மானித்து பாண்டியர் தலைவனுக்குத் திருமுகமெழுதினான். அக்கடிதத்தின்படி ''நாம் போர் செய்ததினால் நம்மைச் சேர்ந்தவர்கள், இருதரப்பிலும் பல்லாயிரக்கணக்

காக மடிந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் என்ன பயன். நீங்கள் ஐவரும் என்னோடு மல்யுத்தத்திற்கு வாருங்கள்: நான் அதில் ஜெயித்தால் நீங்கள் உங்கள் நாட்டை விட்டு நீங்கிவிட வேண்டும். நான் தோல்வியடைந்தால் என் தேசத்தை நீங்கள் கைப்பற்றிக் கொள்ளலாம்'' என்பதாகும்.

இந்தச் சவாலை பாண்டியர்கள் ஏற்றார்கள் அதன்படி தங்கள் ஐவருள் ஒருவர் மட்டும் யுத்தம் செய்தால் போதுமென ஒப்புக் கொண்டார்கள். எனவே யுத்தம் நடைபெற்றது.

குலசேகர பாண்டியத் தேவனும் அரியநாதமுதலியும் மல்யுத்தம் செய்தனர் ஐவர் தலைவன் மாண்டான். மிஞ்சிய நால்வரும் பரதேசம் சென்று விட்டனர். சண்டை ஓய்ந்தது.

இந்தச் சமயத்தில் அரியநாதமுதலி விஸ்வநாதனுக்குத் தக்கபடி ஆலோசனை செய்தான். மறவர்களுக்கு மக்கள் ஆதரவு எவ்வளவு அதிகமாகவும் ஆக்கிரோசமாகவுமிருக்கிற தென்பதைக் கயத்தாற்றுச் சண்டையில் கண்டோம். இனி மறவர் சனப்பலத்தையும் தலைவர்களின் தயவையும் நாம் அடையத் தவறினால் பாண்டிய நாட்டில் நாயக்கர்கள் ஆட்சி அஸ்தமிக்கும் என்பதை உணர்த்தி உடனே பாளையப்பட்டுகளை உயர்ந்த மரியாதையுடன் அமர்த்தினான்; இந்த வரிசையில்; புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சேத்தூர், சிவகிரி, பாஞ்சாலங்குறிச்சி, வாசுதேவ நல்லூர் ஆகியவைகள் இடம் பெற்றன.

## கம்பராயத் தேவன் கலகம்:

இது சமயம் கம்பம் கூடலூர்ப் பள்ளத்தாக்குச் சோழரால் கைப்பற்றப்பட்டு இருந்தபடியால். அங்கு தன்னரசு ஆட்சி புரிந்து வந்த கம்பராயத்தேவன் சோழர் மரபினன். இவன் மதுரை நாயக்கனுக்குப் பணியவில்லை. விசுவநாத நாயக்கன் தன் படைத்தலைவனை இராமபுத்திர நாயக்கனை



ஒரு பெரும் படையுடன் கம்பம் கோட்டையை முற்றுகையிடச் செய்தான், இராமபுத்திர நாயக்கன் 10000 படைகளுக்கு மேல் பலி கொடுத்துப் பல முறை தோல்வியுற்று கடைசியில் வெற்றி கண்டான். இந்தப் போரில் ஜெயம்பெற்ற இராமபத்திர நாயக்கனைப் பாராட்டி விஸ்வநாதன் அவனை வடகரைப் பாளையக்காரனாக்கினான். இவன் விஸ்வநாத நாயக்கனுக்கு உறவினன், அதன்படியாக வடுகர் தலைவர்களுக்கு ஒதுக்கிய பாளையங்களுக்கு அப்பாளையக்காரர்களின் பெயர்களையிட்டு ஆட்சி புரியச் செய்தான். அதன்படியாக நியமிக்கப்பட்ட பாளையக்காரர்கள், தொட்டப்ப நாயக்கன், எரசக்கநாயக்கன், அம்மையநாயக்கன், தும்பிச்சிநாயக்கன், கூழப்பநாயக்கன், உத்தப்ப நாயக்கன் காமய நாயக்கன், போடி நாயக்கன், கண்டம நாயக்கன் என்பவர் போன்றவையாகும். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாளையங்களுக்கு அவர்கள் பெயர்கள் இடப்பட்டன அதாவது, தொட்டப்ப நாயக்கனூர் அம்மையநாயக்கனூர் கண்டமநாயக்கனூர் என்பன போல.

இப்படியாக அமைக்கப்பட்ட பாளையப்பட்டுகள் 72, இந்த 72பாளையப்பட்டுகளில் தேவர்கள் அடைந்தது 32 ஆகும்.

பாளையப்பட்டு முறைகள் அமுல் நடத்தத் திட்டம் தயாரித்துக் கொண்டிருந்த காலத்தேதென் திசையில் கயத்தாற்றிலும் மேற்றிசையில் கம்பத்திலும் ஏற்பட்ட கலகங்கள் அரியநாத முதலிக்குப் பாளையங்கள் அமைப்பதற்கும் பாளையங்களுக்குப் பாளையக்காரர்கள் தேர்ந்தெடுப்பதற்கும் பேருதவியாக விருந்ததென்று சொல்லலாம்.

பஞ்சபாண்டியர்களிடத்திலும், கம்பராயத்தேவரிடத்திலும் மோதிப்பட்டபாடுகள் அரியநாதமுதலிக்கு ஒரு படிப்பினையாகவே, மேற்கொண்டு பாளையங்களை; செல்வாக்குள்ள அரச பரம்பரையினர் வாழ்ந்தவிடங்களுக்குத் திணிப்பதை வினயமாக நிறுத்திக் கொண்டான். எனவே தான்,

RangaRakes tamilnavarasam.com

மதுரையைச் சுற்றிலுமிருந்த தன்னரசு நாடுகளில் பாளையங்கள் நிறுவப்படவில்லை; உசிலம்பட்டி (மதுரை) ஆனையூர், கரிவலம் வந்த நல்லூர், குற்றாலம், திருநெல்வேலி இன்னும் தஞ்சை திருச்சிப் பகுதிகளில் வாழ்ந்திருந்த; பிற்காலச் சோழ பாண்டியர்களின் சந்ததியார்கள் குறுநில ஆட்சியும் தன்னரசு வாழ்வும் வாழ்ந்து வந்தனர் என்றும் அவர்கள் பிற்காலம் நாளா வட்டத்தில் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. எனினும்; வரலாற்றில் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு அவர்களைப் பற்றிய விபரங்களைத் தெரிகிறோம். அரச பரம்பரையினரும் ஆட்சியிலிருந்தவர்களை தாக்கவும் முற்படவில்லை. இதற்குக் காரணம் வடுகர்கள் வலுப்பட்டு விட்டார்கள். மன்னர் வம்சத்தினர்களும் தங்கள் காலத்தைத் தெய்வ வழிபாட்டிலும் இலக்கியப் பற்றிலும் திருப்பி விட்டதாகப் புலப்படுகிறது. இதைத் தவிர மன்னர் அந்தஸ்தில் இருந்து வந்த சேது மன்னர். புதுகோட்டை அரசர் திருவாங்கூர் மன்னர் போன்றவர்கள் தங்கள் ராஜ்யத்தோடு நின்று கொண்டனர். வடுகர்கள் மன்னர்களை தங்களுக்கு எப்போதும் உதவும் வகையில் சரிக் கட்டிக் கொண்டார்கள்.

## பாளையப்பட்டு முறையின் தீங்குகள் :

தமிழ் அரசர்கள் பரம்பரையினர், தமிழ் வேந்தர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்த தளபதிகள் எனக் கருதப்படுவோர்கள் என்பதை எல்லாம் கவனித்து தமிழர்களுக்கு 32 பாளையங்கள் கொடுக்கப் பட்டன. இது ஒரு சரியான அமைப்பு என்றாலும் ஆட்சி அன்னியர்கள் (வடுகர்கள்) என்பதையும் மக்கள் மறக்க வில்லை. முழுவதும் தமிழர்கள் வாழ்ந்து வந்தவிடங்களில் பாளையக்காரர் மட்டும் வடுகராகவிருந்து வந்தமையுமுண்டு பிற்காலங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகள், கொலை, கொள்ளை கள் எல்லாம் இவைகளை வலியுறுத்துகின்றன. எல்லை மோதல்கள் பாத்தியச் சண்டைகள் பலவும் நடந்துள்ளன.



மிகவும் செல்வாக்குடன் ஆண்ட திருமலைநாயக்கன் தனது பாளையக்காரன் எனக் கருதப்பட்ட சேதுபதிகளின் முன் பணிவுடன் தயவுநாடி நின்று உயரிய பட்டம் பதவிகள் கொடுத்து துணை வேண்டி நாடாளவேண்டிய நிலைக்குக் காரணம் பாளையப்பட்டு முறையால் மத்திய அரசுக்கு ஏற் பட்ட பலவீனம் என்று சொன்னால் மிகையாது.

பாளையப்பட்டு முறையாட்சி ஒரு சரியான நிர்வாக அடிப்படை உடையது என்பது உண்மை. இதைப் பாண்டி நாட்டில் அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் ஓர் அளவு அன்னியராகவே கருதப்பட்டனர். பரம்பரையாகத் தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு வந்த தமிழ்நாட்டில் வடுகர் ஆட்சி ஏற்பட்டது தமிழர்கள் மனதில் மகிழ்வூட்டவில்லை வடுகர்களை ஆரம்பத்தில் தமிழ் மன்னர் வாரிசுகள் எதிரி களாகவே கருதினர். பாளையப்பட்டுகளுக்கு வரி வசூல் அதிகாரமும் படை வைத்துக் கொள்ள அதிகாரமும் உள்ள நிலையில் இவர்களைச் சரியான பிடிப்பில் வைத்துக் கொள்ளா விட்டால்; இவர்கள் மேலதிகாரத்திற்குக் கட்டுப்படாமல் மீறுவது இயல்பே. தனி ஒரு பாளையக்காரர் கை ஓங்கும் போது எல்லை மோதுதல்களும் கொள்ளையும் கொலையும் நடந்தது கண்டறிந்த உண்மை. இந்த முறை தமிழ்நாட்டில் ஒரு பெரும் அபகேடாக முடிந்தது என்பது சரித்திரம் கண்ட றிந்தது. ஒரு சில இடங்களில் வீரம் கொழுந்து விட்டு எரிந்ததும் கால வெள்ளம் அதை அடித்துக் கொண்டோடி யதும் கண்டோம்.

பாளையப்பட்டு முறையில் ஏற்பட்ட அவகேடான கலகங்களில் தமிழ் வீரர்கள் ஒருவரோடொருவர் மோதித் தன்னைத்தானே அழித்துக் கொண்டதும் ஆயிரக்கணக்கான வீரர்களை நாடு தானே அழித்துக் கொண்டதும் நாம றிந்த உண்மை. வடுகர்கள், துருக்கர்கள், கன்னடியர்கள் ஆங்கிலேயர்கள் இன்னும் பல அன்னியர்கள் நம்நாட்டில் நம்முடைய பணத்தைப் பறித்து நமது வீரர்களுக்குக் கூலி



RangaRakes tamilnavarasam.com

யாகக் கொடுத்து நம்மையே அழித்து நாட்டையும் குட்டிச் சுவராக்கியதையும் தெரிந்தோம். இனி நம்நாட்டின் வீரம் தேசியம், அரசியல், செல்வம், கலைகள் எல்லாம் எப்படி அன்னியர் கையில் அவதிப்பட்டன என்பதைக் கவனிப் போம்.

## நாயக்கர் ஆட்சியில் சேதுபதிகள் : ஈடுபாடு

கி. பி. 1623—1635-ல் தளவாய் சேதுபதி என்ற சடைக்கத்தேவன் இராமநாதபுரத்தை ஆண்டு வந்தான். அவனுக்குப்பின் அவன் புதல்வன் கூத்தன் சேதுபதியும், அவனுக்குப்பின் அவன் மகன் தளவாய் சேதுபதி இரண்டாம் சடைக்கத்தேவனும் ஆட்சி செய்தனர். சடைக்கத்தேவனுக் குப் பிறகு அவன் வாரிசு போட்டியில்; 'தம்பி' என்பவனும், தளவாய் சேதுபதி என்பவனும் போட்டியிட்டனர். இந்தப் போட்டியில் திருமலைநாயக்கன் 'தம்பிக்கு' ஆதரவு காட்டிப் பட்டமாளச் செய்தான். இதை நாட்டு மக்கள் விரும்ப வில்லை. அரசுரிமைப் போருடன் இராமநாதபுரம் அமைதி காணவில்லை. தளவாய் சேதுபதியின் மறு புதல்வர்களான ரகுநாதத்தேவன் நாராயணத்தேவன் ஆகியோர் மக்கள் துணைகொண்டு 'தம்பிக்கு' எதிராகக் கிளர்ச்சி செய்தனர். திருமலைநாயக்கன் இப்போது சேதுபதி மரபின் வாழ்வில், தன் தலையீட்டால் வந்த பிழையை உணர்ந்தான். நாட்டில் அமைதி பேண வல்லவன் சேதுபதி, சடைக்கனே என்றுணர்ந்து அவனையே விடுதலை செய்து மன்னனாக்கினான் அவன் கி.பி. 1640—1645 வரையாதொரு வில்லங்கமும் இல்லாமல் நாட்டை ஆண்டான். 1645-ல் 'தம்பி' சேதுபதியைக் கொலை செய்து விட்டான். நாட்டில் அமைதி ஏற்படவில்லை.

திருமலைநாயக்கன் நாட்டு மக்களுக்குச் சமாதானம் ஏற்படுத்த வேண்டி; இராமநாதபுரம் நாட்டை மூன்றாகப் பிரித்து: தம்பி, ஒரு கூறையும், இரகுநாதத்தேவன் ஒரு கூறையும் ஆளும்படி செய்தான்: ஆனால் 'தம்பி யும் தனக்கத்தேவனும் விரைவில் இறந்துவிடவே, சேதுநாடு



மீண்டும் இரகுநாதத்தேவனின் ஆட்சிக்கு வந்தது. பின்னால் இரகுநாதத்தேவன் திருமலைநாயக்கனுக்குப் பேருதவியாக இருந்தான். திருமலைநாயக்கனின் ஆட்சியினிறுதியில் முஸ் லீம் படைகள் மதுரையைத் தாக்கிய போது இராமநாத புரத்து மறவர் படையுடன் இரகுநாதத்தேவர் தானே தலைமை தாங்கி வந்து முஸ்லீம்களை கதிகலங்க அடித்துத் துரத்திய தோடல்லாமல் பெரும் நஷ்டத்திற்கும் உள்ளாக் கினான். தெற்கே எட்டயாபுரத்துக் கோமான் தலைமையில் பாளையக்காரர் கிளர்ச்சி செய்தபோது கிளர்ச்சிக்காரர்களை யும் எட்டயாபுரத்தானையும் முற்றுகைபோட்டு அடக்கி மீண்டும் தலைதூக்கா வண்ணம் அடக்கி நாயக்கரின் அரசைக் காத்தான். முந்திய சேவைக்காக அவன் மதுரைத்தலைநகரில் நவராத்திரி விழாவுடன் சரிசமமான ஆடம்பரத்துடன் தன் தலைநகரான இராமநாதபுரத்திலும் விழாக் கொண்டாடும் உரிமை பெற்றான். பிந்திய சேவைக்காக மன்னார் கோவில் பகுதியில் மானிய நிலமும் முத்துத் துறை வருவாயில் பங்கும் பெற்றான். இராமேஸ்வரத் திருப்பணியில் இரகுநாதன் கொண்ட பெரும் பங்கு 'சேதுகாவலன்' என்ற பட்டத்தை அவன் அடைந்ததாகும்.

## மைசூர் யுத்தம் சேதுபதிகள் படைத்துணை

கி.பி. 1656-ல் மைசூர்ப்படை திருமலைநாயக்கனை வஞ் சம் தீர்க்கும் வகையில் மதுரை நாட்டில் நுழைந்தது. படைக்குத் தலைமை தாங்கி வந்தவன் ஹம்பையா என்பவன் மிகவும் கொடிய மனம் படைத்தவன். மைசூர் மன்னன் கட்டளைப்படி மதுரை நாட்டில் புகுந்து ஆண், பெண், குழந் தைகளை ஆயிரக்கணக்கில் பிடித்து அவர்களின் மூக்கை அறுத்துச் சாக்குகளில் கட்டி மைசூருக்கு அனுப்பினான். கொள்ளையும் கொலைகளும் நடத்தினான். அது சமயம் திருமலை நாயக்கன் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்தான். அப் போது அவனுக்கு வயது எழுபதுக்கு மேல் ஆகிவிட்டது.


tamilnavarasam.com

இது சமயம் நண்பன் இரகுநாத சேதுபதியை உதவிக்கு அழைத்து, அதன்படி தனது பட்டமகிசியின் கையால் நிருபம் ஒன்று எழுதி மைசூர் படை எடுப்பில் இருந்து மதுரையை காக்க ,வேண்டும் எனக்கேட்டுக் கொண்டான். அக்கடிதம் கண்டவுடன் சேதுபதி சிறிதும் தாமதியாமல் 25000 மறவர் படைகளுடன் தானே படைத்தலைமை ஏற்று கொண்டு வந்து மதுரைக் கோட்டையின் மேற்குத் திசையில் அணிமுகாம் அமைத்துக் கொண்டு; அத்துடன் மதுரையிலிருந்த நாயக்கருடைய 35000 வீரர்களையும் பக்கபலமாக ஆக்கிக் கொண்டு கடும்போர் புரிந்து மைசூர் படைக்குப் பெரும் சேதத்தை உண்டு பண்ணி வெருட்டியடித்து மதுரையைக் காத்தான். இந்த யுத்தம் மிகவும் கோரமானது. இருதரப்பிலும் தலைக்கு 12000 பேர் வீதம் மாண்டிருக்கலாமெனத் தெரிகிறது.

வெற்றி கண்ட மதுரைப் படையினர் தளகர்த்தர் குமாரமுத்துவின் தலைமையில் இராமநாதபுரச்சேனையின் உதவியுடனும்; கன்னிவாடி விருப்பாச்சிப் பாளையக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு மைசூர்ப்படையைப் பின் தொடர்ந்து வெருட்டியடித்தனர். மதுரை மன்னன் திருமலை நாயக்கனுக்கு மனமகிழ்வூட்டுவான் வேண்டி மைசூரிலும் மதுரைப் படையினர் மூக்கறுப்பு வேலை செய்திருக்கிறார்கள் என கர்நாடக ராஜாக்கள் வரலாறு கூறுகிறது ★ இந்த மாபெரும் உதவியை தக்க சமயத்தில் செய்து காப்பாற்றிய இரகுநாதத் தேவனுக்கு மனமகிழ்வு கொண்ட திருமலைநாயக்கன் திருமலை சேதுபதி என்ற பட்டமும்; ராணி சொல் காத்தான் என்ற பெயரும் வழங்கினான். தாம் ஏறுகின்ற சிங்கமுகப் பல்லக்கையும் கொடுத்து வழக்கம் போல் கட்டி வந்த தோப்பாரணப் பணம் இனிமேல் கட்ட வேண்டாம் என உத்திரவும் பிறப்பித்து மிகவும் உயர்ந்த மரியாதையுடன் இராமநாதபுரத்திற்கு அனுப்பினான்.

கி.பி. 1662—1682வரை மதுரையை ஆண்டது திருமலை நாயக்கனது பேரன் சொக்கனாத நாயக்கனாகும். இவன்



காலத்தில் பீஜப்பூர் சுல்தான் மதுரை மீது படை எடுத்தான். சொக்கநாதன் திருமலைச் சேதுபதியை உதவிக்கு வருமாறு அழைத்தான். அதற்குசேதுபதி பல்வேறு உள்நாட்டுக் காரணங்களை முன்னிட்டு வரவில்லை. சுல்தான் யுத்தமும் ஒருவாறு முடிவுற்றது. பின் சேதுபதியைத் தண்டிக்க எண்ணங் கொண்ட சொக்கநாத நாயக்கன் சேது நாட்டின் மீது படை எடுத்து சேதுபதியின் கோட்டைகள் பலவற்றை முற்றுகை போட்டான். எல்லா முனைகளிலும் மதுரைப் படைகளுக்கு எல்லையற்ற சேதத்தை உண்டு பண்ணவே, மறவர் சேனையின் வாளுக்கு தன் சேனை இரையாக வேண்டாமென நாயக்கர் படையினர் திரும்பும்படி உத்திரவிடப்பட்டது. இது சமயம் இரகுநாத திருமலைச் சேதுபதித் தேவன் மரணமடைந்தான். அவனது மருமகன் ராஜ சூரியத்தேவன் சேதுபதியானான். இவனுக்குப் பின்னால் வாரிசுகள் இல்லாமல் போகவே இவன் போகஸ்திரியின் மகனான ரெகுநாதத் தேவனை மறவர் குல மக்கள் கி.பி. 1674ல் பட்டத்திற்கு ஏற்றினர். கிழவன் சேதுபதி என்ற பெயரால் இவன் சேது நாட்டையாண்டு பெரும் பேரோடும், புகழோடும் 39 வருஷங்கள் பட்டமாண்டு சேது நாட்டின் கீர்த்தியை உயர்த்திய வீர மன்னனாகும்.

இவனுடைய அரசாங்கத்தின் நிர்வாகவன்மையால் மறவர் நாடு உன்னதச் சிறப்பு வாய்ந்ததாய் விளங்கியது. இவனைப்பற்றி மார்ட்டின் சாமியார் வில்லட்டுச் சாமியாருக்கு எழுதிய கடிதம் விளக்குகிறது.

மறவர் ராஜ்யம் கிழவன் சேதிபதியின் கீழ் ஒரு பெரிய சர்வாதிகாரமுள்ள ராஜ்யமாக தனக்குக் கீழ் பல சிற்றரசர்களை உடைத்தாயிருந்தது. இந்தச் சிற்றரசர்களைத் தன்னிஷ்டம் போல் நீக்கவும் நியமிக்கவும் அதிகாரம் சேதுபதிக்கு இருந்தது. கிராமங்களின் நிலங்கள் பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்தன. சேதுபதிக்குச் சேனைகள் தேவைப்படும் போது பிரபுக்கள் சேனைகள் அனுப்ப வேண்டும் இதன்படி

RangaRakes tamilnavarasam.com

சேதுபதி 8 நாள்களுக்குள் சுமார் 30,000 முதல் 40,000 சேனைகள் திரட்ட முடியும்.

மதுரை. தஞ்சை அரசர்கள் சேதுபதியின் படை பலத்தைக் கண்டு அஞ்சினர். சேதுபதி மதுரைக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தையும் நிறுத்திக் கொண்டு சுயாதீனமாக ஆட்சிபுரிய முடிந்தது.

கிழவன் சேதுபதி தனது நாட்டில் சமூக பற்றையும், உறவின் முறை ஒற்றுமையையும் வளர்ந்தோங்கச் செய்தான். செல்வாக்கும் சனக்கட்டும் உடைய அகமுடையர் குலப்பிரபுக்கள் சேது நாட்டில் நிறைந்திருந்தனர். கிழவன் சேதுபதியின் தாயார் ஒரு அகமுடையர் குலப் பிரபுவின் மகள். அந்தக் காலத்தில் சேது மன்னர்கள் அகமுடையர் குலத்தில் பெண் எடுத்துக் கொள்ளும் வழக்கமிருந்தது. அந்த வழியில் பிறக்கும் மக்களுக்கு அரசுரிமை உண்டு. கிழவன் சேதுபதி அக்காலத்திலேயே, முக்குல ஒருமைப் பாட்டிற்கு அடிகோலியிருந்தமை தெரியவருகிறது.

கி.பி. 1700க்குப் பின் தஞ்சையும் மதுரையும் நேச அரசுகளாகவிருந்தன. அப்போது கி.பி. 1702-ல் தஞ்சைப் படைகளின் உதவி கொண்டு தளவாய் நரசப்பையன் சேது நாட்டின் மீது படை எடுத்தான். ஆனால் தளவாய் நரசப்பையனே இந்தப் போரில் மாண்டான். கிழவன் சேதுபதி மதுரைப் படைகளை வெளியே துரத்தித் தன் ஆட்சியைத் தனியரசாட்சியாக்கினான். அத்துடன் 2709-ல் தன் மீது படை எடுத்து வந்த தஞ்சை ராயன் (Akkosi) ஏக்கோஜியை வென்று அவனிடமிருந்து அறந்தாங்கியைக் கைப்பற்றினான்.

# மதுரை நாயக்கருக்காக மன்னன் சேதுபதி வீரப்போர் !

கி.பி. 1662-ல் மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கனை ரஷ்டம்கான் என்பவன் அரண்மனைக்குள்ளேயே கைதியாக்கி வைத்துக்கொண்டு நாட்டை ஆளத்தொடங்கினான்: சிறை வைக்கப்பட்டிருந்த சொக்கநாத நாயக்கன் இந்த அடாத செயலைக் கண்டு கலங்கித் தன்னைக் காப்பாற்றும்படி ஒரு அந்தரங்க தூதுவன் மூலம் கிழவன் சேதுபதிக்குத் தெரியப்படுத்தினான். இந்த அடாத செயலைக் கேட்ட சேதுபதிக்குக் கடுங்கோபமுண்டாகவே 20000 சேனைகளோடு மதுரையை வந்து சூழ்ந்து கொண்டான். படைத் தலைமையையும் தானே ஏற்றுக் கொண்டான். முற்றுகையை கண்ட ரஷ்டம் கான் மதுரை மன்னனையும் மனைவி குழந்தைகளையும் கொலை செய்து விட எத்தனிக்கிறான் என்ற விஷயம் சேதுபதிக்கு எட்டியது.

உடனே அன்று இரவு படைத்தலைவர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு உருக்கமான சொற்பொழிவாற்றினான். ''வீராதி வீரர்களே தளபதிகளே, உயிரைத் திரணமாக மதிக்கும் மறவர்களே, மதுரை மன்னன் சிறையில் இருக்கும் போது, இராஜத் துரோகி ரஷ்டம்கான் உயிரோடிருப்பதா! உங்கள் வீரத்தை நீங்கள் தாங்கியிருக்கும் வாள் முனையில் எதிரிகள் ரத்தம் சிந்தக் காட்டுங்கள், நாளைக்கு நீங்கள் ரஷ்டம்கான் தலையை துணிக்காவிட்டால் நம்முடைய ஆண்

RangaRakes
tamilnavarasam.com

மையும் போர்த் திறமையும் நகைப்புக்கிடமாகும்'' என்று ஆரவாரித்துப் பேசினான். அதன்பின் இரவோடு இரவாகத் தக்கபடி வட்டவடிவமாகக் கோட்டை வியூகம் வகுக்கப் பட்டது. பொழுது புலர்வதற்கு முன் கோட்டையை வளைத்துக் கொண்ட மறவர் சேனை ஆலகால விஷத்தைப் போல பொங்கி எழுந்து கோட்டை மதில்களின் மேல் ஏறி நின்று தங்களை எதிர்த்து வந்த பகைவர்களைக் கண்ட துண்டங்களாக்கின. வீரக் கர்ச்சனை செய்து கொண்டு கோட்டைக்குள் இறங்கினர். மிகவும் பாதுகாப்பான அரணுக்குள் 3000 வீரர்கள் பாதுகாப்பில் மையம் கொண் டிருந்த ரஷ்டம்கான் அரண்வாயிலில் இடிமுழக்கம் போல் தாக்குதல் நடந்தது. இதற்குள் தென்கிழக்குக் கோட்டை மதில் தகர்ந்தது. கோட்டையைச் சுற்றி வளைத்து நின்ற வீரர்கள் யுகாந்த காலத்து மூர்த்தியைப் போல் விளங்கும் கோபாவேசங் கொண்ட; முறுக்கமைந்த மீசைகளையுடைய மறவர் வீரர்கள் அரணிற்குள்ளிருக்கும் சேனையுடன் தொடர்பு கொண்டனர். கொஞ்ச நேரம் விண்ணும் மண் ணும் ஒன்றாயிருந்தது. ஆயுதங்களின் ஓசைகளுக்கிடையில் ரஷ்டம்கான் தலை துள்ளி விழுந்தது. உடனே சேதுபதி; எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு, வாள் வீசிக் கொண்டே தளபதிகள் சூழ்ந்து வர எதிரிகளின் தலைகளை உருட்டிக் கொண்டே சிறைக் கோட்டையை அடைந்தார். மறவர் சேனா விரர் கர்ச்சனை செய்து எங்கும் வெற்றி முரசை எழுப் பியது. சிறைப்பட்டிருந்த மன்னவன் தன் மனைவி மக்க ளோடு விடுவிக்கப்பட்டான். எதிரிகள் துரோகப் படை யினர்கள் நிர்மூலமாக்கப் பட்டனர். தனது படையினர் காட்டிய தீரவீரச் செயலைப் பாராட்டிச் சேதுபதிக்கு மகிழ் வுண்டாகியது.

சிறை மீட்கப்பட்ட சொக்கநாதநாயக்கன் மட்டில்லா மகிழ்ச்சியடைந்து கிழவன் சேதுபதிக்கு அனேக ஆபரணங் களும் வெகுமதியும் கொடுத்து அவனோடு வந்திருந்த மற்ற சைனியங்களுக்கும் ஆடைகளும் பணமும் கொடுத்து இராம நாதபுரத்திற்கு அனுப்பி வைத்தான். அதன் பிறகு



மட்டில்லா மகிழ்ச்சி கொண்ட சொக்கநாத நாயக்கன் சேது பதியை, தானே நேரில் ராமநாதபுரத்திற்குப் போய் ராஜ விருதுகளுடன் மதுரைக்கு அழைத்து வந்து 'பரராஜகேசரி' (Lion to foreign Kings) என்ற பட்டமும் கொடுத்து அனுப் பினான்.

கி.பி. 1689—ல் பெயர்பெற்ற சொக்கநாதநாயக்கனின் மனைவியாகிய மங்கம்மாள், தன்னுடைய பேரன் சிசுவாக விருந்தபடியால், தான் இராஜ்யத்தை ஏற்று அரசு செலுத்தி னாள். கிழவன் சேதுபதி தஞ்சை மன்னனுடன் சேர்ந்து சதி செய்து மதுரை மேல் படை எடுக்கச் சூழ்ச்சி செய்த குற்றம் சாட்டப்பட்டு, இதைத் தண்டிக்கும் நோக்கத்தோடு கி.பி. 1702—ல் ராணிமங்கம்மாள் 45000 பேர் கொண்ட படை ஒன்றை ஏவி இராமநாதபுரத்தைப் பிடிக்கப் பிரயத்னப் பட்டாள். என்ன பயன்? எண்ணிக்கையிலும், பலத்திலும், சூரையாடுவதிலும், நாயக்கன் சேனையைக் காட்டிலும் ஒப் பற்று விளங்கிய மறவர் சேனை, மதுரைப் படையைப் புறங் காட்டி ஓடும்படிசெய்ததோடல்லாமல், அனேகரை மடித்து விட்டது. பிறகும் மறவர் நாட்டில் சமாதானம் ஏற்பட வில்லை.

பிரிட்டோ சாமியார் என்னும் பாதிரி, கிழவன் சேது பதிக்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டியிருந்த தடியத் தேவனை கிறிஸ்து மதத்தில் சேரும்படி செய்து விட்டான். இதை ஒட்டி நாட்டில் நடந்த சில காரியங்களைக் கொண்டு பெரும் கலவரம் ஏற்பட்டது. அதனிமித்தம் 8-1.1693-ல் பிரிட்டோ சாமியார் சிறையிலடைக்கப்பட்டு பின்னால் தகுந்த விசாரணை செய்ததன் பேரில், சேதுபதியின் குரு நாடாகிய ஓரியூருக்கு அனுப்பப்பட்டார். அங்கே சாமியார் ராஜஆக்கினையை மீறியதற்கும் பலாத்காரச் செயலில் ஈடு பட்டதற்குமாக இரண்டு குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப் பெற்றது.

கி.பி. 1710ல் கிழவன் சேதுபதி இறந்தான். அப்போது அவனுக்கு வயது எண்பது. அவனுடைய மனைவியர் 48 பேர்

RangaRakes tamilnavarasam.com

கள் உடன்கட்டை ஏறினுர்கள். கிழவன் சேதுபதிக்குப்பின் பட்டத்திற்கு வருவதன் பொருட்டு பவானி சங்கரத் தேவருக்கும் விஜயரகுநாதத் தேவருக்கும் போட்டி ஏற்பட்டது. இதநிமித்தம் பல அல்லல்கள் நடந்தன. கடைசியில் பவானியே பட்டத்திற்குவந்தான். கி.பி.1729ல் பவானி சங்கரத் தேவர் சிவகங்கையைக் கைப்பற்றினுர். சிவகங்கைப்பாளைய காரன் சசிவர்ணத்தேவர் தஞ்சாவூரில்சரணடைந்தார். அங் இருந்து கொண்டு சேதுபதியின் பங்காளியான கட்டயத் தேவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தஞ்சை மன்னனிடம் படைபலம் பெற்றுக் கொண்டு இராமநாதபுரத்தின் மேல் பாய்ந்தார். ஓரியூரில் வைத்துக் கடும்போர் மூண்டது. போரில் பவானி கைதியாக்கப்பட்டு கொல்லப் பட்டான்.

## நாயக்கர் மதுரையில் தன்னரசு ஆட்சி முறை

### பத்துநாட்டுக் கள்ளர்கள்

தமிழ் நாட்டில் தன்னரசு ஆட்சி முறைபற்றி வரலாற்று ஆசிரியர்கள் யாவரும் விளக்கமாக எடுத்துக் கூற முயற்சிக்கவில்லை. தமிழ்வேந்தர்கள் அரசியலில் குறுநில மன்னர்கள், வேளிர்கள், வள்ளல்கள், ஆட்சி முறையிருந்து வந்தமை. புலனுகிறது. அரசர்களின் சகோதரசகோதரிகள் சுற்றத்தார்கள் ஆகியவர்களேபொதுவாக இம்முறையில் ஆட்சிப்பொறுப்பு ஏற்றிருந்தனர். இதில் முக்கிய அம்சம்யாதெனில் அரசர்கள் தங்களின் கீழ் அரசுபுரியும் குறுநிலப் பொறுப்பாளர்களிடமிருந்துவரியோ, கப்பமோ, எதிர்பார்ப்பதில்லை. அவர்களும் அரசர்க்கு விசுவாசம் காட்டுவதைத் தவிர மற்ற கப்பம் கட்டும் வழக்கமில்லாதிருந்து வந்தனர். இத்தன்மையதே தன்னரசு ஆட்சி முறையாகும். இந்தவித ஆட்சிமுறையானது மதுரையில் பிரபலமடைந்திருந்தமை புலனுகிறது.

மூவேந்தர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு அன்னேர்களின் வாரிசுகள் பல்வேறிடங்களுக்கும் பின்வாங்கி மறைந்து வாழ்ந்தனர் என்பதை முக்கியமாக மதுரை நாயக்கர் ஆட்சிக்காலச்



சரித்திரம் எடுத்துரைக்கிறது. பாண்டியர்கள் தென்திசை நோக்கிப் படைபலத்துடன் நகர்ந்தமைக்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

சோழவரசன் பாண்டிய நாட்டைக் கடைசி காலத்தில் கைப்பற்றிவலிமையுடன் ஆண்டான். அதுகாலை மதுரை நகரிலும், மதுரை நகர்ப்புறத்தும் வலிமைமிக்க சோழர் சைனியம் நிலையங்கொண்டிருந்தது சிறிது காலம் சோழர் ஆட்சி மதுரையில் மங்கிய போதும் சோழர் சைனியம் ஆணைக் கடங்கியிருந்தது. அப்படியாக விளங்கிய சோழர் ராணுவம் முழுவதுமாகக் கள்ளர் மரபினரே. 11 ஆவது நூற்ருண்டிலும் 14வது நூற்ருண்டிலும் கள்ளர்கள் மதுரைச் சீமைக்கு வந்தனர் என்பது இந்நூலில் விளக்கிக்காட்டப்பட்டுள்ளது.

வடுகர்கள் மதுரையில் ஆட்சியுரிமையைக் கைவசப் படுத்தி ஆண்டனர். இந்த ஆட்சியில் கள்ளர்கள், வடுகர்கள் நிர்வாகத்திற்குப் பணியாமல், தங்கள் சொந்தப் பொறுப்பில் சாதிக் கட்டுப்பாடாக நிலப்பரப்புகளாகத் தாங்கள் வாழ்ந்து வந்த எல்லைக்குள் அரசுரிமையை அமைத்தனர். இப்படியாக அமைக்கப்பட்ட அரசுகள் 10 நாடுகளாக விளங்கின.

இந்த விருத்தாந்தங்கள் தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கண்களில் சிறிதாகத் தென்பட்டாலும்; ''நாட்டனும்'' மதுரை ''கெஜட்டியரும்'' வலுவாகச் சுட்டிக் காட்டுவதினின்றும் தவறவில்லை. முதன் முதலில் தோன்றிய போதே தன்னரசுகள் வலிமை மிக்கதாக விளங்கினமைக்குக் காரணம் அதுகாலை நாட்டு அமைப்பிலிருந்தவர்களில் பெரும்பாலோர்; ராணுவத் தளபதிகள், வீரர்கள், நிர்வாகிகள் ஆவர். நாயக்கர்களின் ஆட்சிக்காலம் தொட்டு 18ஆம் நூற்ருண்டு வரை தன்னரசு நாட்டார்கள், அரசியல் தத்துவங்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

தமிழ்நாட்டில் அரசாண்ட நாயக்கர்களில் மிக முக்கியமான மன்னன் திருமலை நாயக்கன்; ஆட்சி பீடத்தில் 36

RangaRakes

tamilnavarasam.com

வருஷங்கள் அமர்ந்து அவன் பெயர் என்றும் வரலாற்றில் இடம்பெறச் செய்தவன். பல மனைவியர்களை விவாகம் செய்திருக்கிறான்; மதுரையில் ஆலயத் திருப்பணிகளும்; தான் வாழ்வதற்கான மாளிகை ஒன்றும் அமைத்திருப்பது என்று மழியாது: வரலாற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது இவன்கொள்கைகள் இரண்டு ஆகும். ஒன்று தனது சொந்த கொள்கை. இரண்டாவது இவனது அரசியல் நிர்வாகம்: தனது சொந்தப் பொறுப்பில் ஒரு தெய்வபக்தியுள்ள மன்னன்; தனது அரசியல் நிர்வாகத்தில், தனது அமைச்சர்கள் அதிகாரிகளின் கைப்பாவையாக இருந்திருக்கிறான். இந்த அபிப்பிராயங்கள் தன்னரசு நாட்டின் அரசியலைப் பொருத்தவரை சொல்லாமலிருக்க முடியாது.

காடுவெட்டி, கரை அமைத்து, நாடு உண்டாக்கி அதைத் தமக்குச் சொந்தமென நிர்வாகித்துத் தாங்கள் தோற்றுவித்த தலைவனின் ஆணைப்படி சாதிக் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வந்த தன்னரசு நாட்டுக் கள்ளர்களின் முக்கியத்தொழில் வேளாண்மை. தங்களைக் காத்துக் கொள்வதற்குத்தேவையான ஆயுத பலமும், ஆள் பலமும் உண்டு. இவர்கள்கொள்கைப்படி, யாரும் இவர்களிடம் வரிவாங்கும் உரிமை உடையவர்கள் அல்ல இவர்கள் நாட்டில் அதிகாரம் செலுத்தவோ, ஊடுருவிச் செல்லவோ முடியாது. இந்த மனப்பான்மையை இவர்கள் கொண்டிருந்தமைக்கு, இவர்கள் எப்போதுமே அரசாண்டுவந்த மன்னர் பரம்பரையினர்கள், பிரத்தியார்களை அடக்கியாண்டு வாழ்ந்தவர்கள் பிறர் ஆணையை மீறவும் தேவைப்பட்டால் போர் புரிந்தும் வாழ்ந்து பழகியவர்கள் என்பதை வரலாறு விளக்குகிறது. ஆனபடியால்தான், இப்படியாகத் தங்களால் தோற்றுவித்துக்கொண்டு, சுயமாக ஏற்படுத்திய ஆட்சி முறை ''தன்னரசு'' என கள்ளர்நாட்டில் விளங்கியது.



வடுகர் ஆட்சியின் ஆரம்பத்திலேயே மதுரைச் சீமையில் தங்கள் ஆட்சிக்கு முன்னதாகவே தன்னரசு ஆட்சி நடந்து கொண்டிருப்பதை அறிந்தனர் நாயக்க மன்னர்கள். தன்னரசு நாட்டில் வரியேதும் வசூலிக்க முடியவில்லை. அது காலை ஆட்சிப் பொறுப்பை வலுப்படுத்தி மதுரையை ஆண்ட திருமலை மன்னன் தன்னரசு நாட்டுத் தலைவர்களை ஒடுக்கிக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்தபோது கள்ளர்கள் பணிவுக்கு மீறி எதிர் நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினர். நாட்டில் எங்கும் மன்னர்க்கு விரோதமாகச் சண்டை சச்சரவுகள் உண்டாயின. எல்லை மோதுதல்கள், போக்குவரத்துத்தடைகள் ஏற்பட்டன. கள்ளழகர் கோயில் நிர்வாகத்தில் மன்னர் தலையீட்டை எதிர்த்துச் சாதிக்கட்டுப்பாட்டில் தேர்த்திருவிழாக்கள் கொண்டாட முயன்றனர். 10 நாட்டுக்கள்ளர்கள்; இப்போதைய மேலூர் மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்கள் உள்ள பரப்பில் வாழ்ந்தார்கள். அவர்களிடம் போதிய படை பலமும் இருந்தபடியால் இவர்களை சட்ட திட்டங்களுக்குக் கொண்டு வரவும் முடியவில்லை. பாளையப்பட்டு நிர்வாகம் அமைக்க இந்தப் பிராந்தியத்தில் ஆதிமுதலே முடியவில்லை; நாளடைவில் கள்ளர்கள் அத்து மீறி மன்னர் நிர்வாகத்திற்கு எதிர்ப்புக் காட்டி வந்தனர்.

மதுரையில் அரசு புரிந்து வந்த நாயக்கர் ஆட்சியை ஒரு அன்னிய ஆட்சி என்றே கள்ளர்கள் கருதினர். இவர்களைக் கண்டாலே மேன்மேலும் வளர விடாமல் படை, பலப்பிரயோகம் செய்து ஒடுக்க வேண்டுமென்று நாயக்கர் ஆட்சி நிர்வாகம் முடிவு செய்தது.

அநுகாலை திருச்சிராப்பள்ளியில் விஜயரங்க சொக்கலிங்க நாயக்கன் என்பவன் அரசாண்டு வந்தான். அவனுடைய ராணுவ அமைப்பில் ஆணிமுத்து வீரயன் சேர்வை என்னும் பிரக்யாதிபெற்ற தளபதி ஒருவன் இருந்தான். ஆணிமுத்து வீரயன் சேர்வை உள்நாட்டுக் கலகங்களை ஒடுக்குவதிலும் கலகங்கள் செய்து வெற்றி அடைவதிலும்

சைநேர்ந்தவன். இந்த வீரயன் சேர்வைதான் பிற்காலங்களில் மதுரைவீரன் என்று அழைக்கப்பட்டான்.

மதுரை மன்னர் ஆட்சி நிர்வாகம் விஜயரெங்க சொக்கலிங்கநாயக்கருக்குத் திருமுகமெழுதி; ஆணிமுத்து வீரயன் சேர்வை படைத்துணையைப் பெற்றுத் தக்கவாறு உடன்பாடுகள் செய்து கொண்டு அவனுக்கு ஏராளமான படையினர்களும் ஆயுதமும் கொடுத்து கள்ளர்கள் நாட்டின் மீது ஏவிவிட்டுப் பத்து நாட்டுக் கள்ளர்களையும் சர்வநாசம் செய்து கருவறுக்கச் செய்தனர் என்பது இதனடியில் கண்ட நாட்டுப் பாடல்கள் மூலம் தெரிய வருகிறது.

மதுரை வீரசாமி கதை பக்கம் 53

''தன்னரசு நாட்டுத் தனிக்காட்டுக் கள்ளரெலாம்
அழகர்தன் கோவிலுக்கு யாரொருவர் போனாலும்
கண்டவிடமெல்லாம் கள்ள ருவத்திரத்தால்
உழவு நடவுமில்லை உபத்திரவந்தன்னாலே
கொல்லரிட முடிப்புக் கொடுக்கப் பயமாச்சு

இப்படியாக கள்ளர் எடக்குகள் செய்கிறார்கள்''

என்று எடுத்துக்காட்டிக் கள்ளர்களை எதிர்த்துப் போரிட்டு அடக்குவதற்குப் பிரக்யாதி பெற்ற வீரன், வீரையனைப் படையுடன் உதவிக்கு அனுப்புக என்று திருமலை நாயக்கன் எழுதிய ஓலையைப்படித்து விஜயரங்க சொக்கநாத நாயக்கன் தனது மந்திரிகளுடன் ஆலோசனை செய்த போது மந்திரிமார்கள் கொண்ட கருத்து;

''அப்படிக் கொத்த கள்ளர் அஞ்சாத நாட்டாரை
வெட்டி கருவறுத்து விருதுபெற்று வாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடி சொல்லுகிறோம்
ஆயிரம் பொன் சேர்வை யானதொரு வீரையனும்
சேனைதளங் கூட்டி தெற்கேயனுப்பி வைத்தால்
கள்ளர் பற்று நாட்டை எல்லாம் கருவவே தானறுத்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணிவீரையனும்''



என்று முடிவு செய்தார்கள். அதன்மேல் ஆணிமுத்து வீரையன் (மதுரை வீரன்) மாபெரும் சைனியத்தையும், ஒப்பற்ற ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு தன் ஒப்பற்ற மனைவி பொம்மியோடும் மதுரை போய்த் திருமலை நாயக்கரைக் கண்டு, தகுந்த திட்டங்கள் வகுத்துக் கொண்டு கள்ளர்களை இந்த நாட்டிலில்லாமல் கருவறுத்து விடுவதென்று முடிவு கட்டுகிறான். அதன்மேல் திட்டப்படி கள்ளர் நாட்டில் புகுந்து வீரமரபினர்களை ஆண், பெண், வயோதிகர் யாவரையும் வெட்டிக் குவிக்கத் தலைப்பட்டான். பத்து நாட்டுக் கள்ளர்கள் தங்கள் படைபலத்தையெல்லாம் ஒன்று திரட்டி மதுரை வீரனை எதிர்த்தார்கள், அப்போது,

''நலமுடனே வீரனுமே நடந்தான் காணம்மானை
பொல்லாத வீரனுந்தான் போர்செய்யக் கோபித்து
பட்டாயுருவிக் கொண்டு பகட்டமுடைக் கள்ளரின்மேல்
பாய்ந்தான் குதித்தான் பதிவிருந்து தானமைந்து
வீசினான் கள்ளர்குலை வீராதி வீரனுந்தான்
முன்வீச்சுக் காயிரம்பேர் முனைவீச்சுக் காயிரம்பேர்
இந்தப்படிக்கு இறக்கடித்தான் வீரனுந்தான்
தன்னரசு நாட்டுத்தனிக் காட்டுக் கள்ளர்களும்
கொக்கரித்து சேனைதளம் கோடிபடை தான்வந்து
ஈட்டிக்கோலாலே எதிர்த்தார்கள் வீரையன் மேல்
கண்கள் சிவந்து கடுங்கோபம் தான்பூண்டு
வாகுநல்ல சமுதாடு வண்மையுடன் றான்பூண்டு
யானைக்கூட்டத்தில் பானைவந்து பாய்ந்ததுபோல்
பொல்லாதவீரன் பூர்த்தியாய் வீசலுற்றான்
கள்ளர் படைகளெல்லாம் கலங்கியே மெய்மறந்து
இப்படியாக யிருக்குமந்த வேளையிலே''

என்பதாகச் சண்டையைப் பற்றிக் கூறுவதை நோக்குமிடத்து இன்னவர்களின் வீரமும் அரசாங்கத்தார்கள் இவர்களை அடக்குவதற்கு எடுத்துக்கொண்ட பிரயத்தனமும் வெற்றி பெறவில்லை என்பது தெரிய வருகிறது. எவ்வளவு சண்டைகள் செய்தும், கிராமங்களை அழித்தும், மக்களை

RangaRakes
tamilnavarasam.com

வெட்டிக் குவித்தும் வந்த மதுரைவீரனின் அகாலமரணத்தால் மன்னர் முயற்சி தோல்வியடைந்தது. பெருவாரியாகக் கள்ளர்நாடு அழிந்து போனது கள்ளர் ஜனத்தொகையும் குறைந்து போனது.

மதுரைவீரன் அகாலமரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கவும், அவன் கள்ளர்களைக் கருவறுத்த வீரச்செயலைப் பாராட்டவும், மதுரையில் நடந்த நவராத்திரி உற்சவத்தில் ஒரு ''கூத்து'' நாடகம் நடைபெற்றது. அந்த நாடகத்தில் மதுரைவீரனின் வீரச்செயல்களைப் பற்றி பாட்டிசைத்து பாடும் கட்டியங்காரனுக்கு வெகுமதியளிக்கப் போவதாகவும் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இச்செயல் கள்ளர்களுக்கு மனக்கொதிப்பை உண்டு பண்ணியது. அச்சத்தையும் துவேசத்தையும் மூட்டியது.

## கருமாத்தூர் கோட்டை தளபதி சீற்றம்

அந்நாடகம் நடக்கும் போது நாடக மேடையின் அருகில் கள்ளர்கள் எதிர்ப்பு நடவடிக்கை எடுத்தார்கள். கருமாத்தூர் கோட்டைத் தளபதி தன்னுடைய நாட்டுக் கட்டியங்காரனுடன் நாடகத்திற்குப் போய் மேடைக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். கூத்து துவங்கியதும் கருமாத்தூர் கட்டியங்காரன் மேடைமீது ஏறி, தான் கருமாத்தூர் கட்டியங்காரன் என்றும், நாட்டு மக்களின் தொண்டன் என்றும், நாயக்கர் ஆட்சிக்கு ''முண்டன்'' என்றும் சொல்லிக் கொண்டே தன் கையில் இருந்த துப்பட்டியைப் பக்கத்திலிருந்த கோட்டை தளபதியின் தோள்மீது சாத்தி அன்னார் மதுரைவீரன் படையை முறியடித்ததைப் பாராட்டிப் பேசலானார். நாடக மேடையில் பரபரப்பு ஏற்பட்டது. அதிகாரிகளுக்குத் திகைப்பு உண்டாகியது. உடனடியாகக் கோட்டை தளபதியும் அவரது கட்டியங்காரனும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். நாடகமேடை நிகழ்ச்சி மூலம் பொதுமக்கள் அனுதாபம் கள்ளர்பால் இருந்தது என்பது புலனாகியது. மதுரைவீரன்



நாட்டில் செய்த கொடிய செயலை மதுரை நகர் மக்கள் விரும்பவில்லை என்பதும் ஆட்சியாளர்களுக்கும் முக்கியமாக திருமலைமன்னருக்கும் தெரியவந்தது.

தேவர் கைதியாகிக் காவலில் வைக்கப்பட்ட விவரம் கருமாத்தூருக்கு எட்டியது. தேவருக்கு மனைவியர் இருவர். மாயக்காள் அம்மாள், ராகம்மாள் என்பன அவர்கள்பெயர். நன்றாகப் போர்ப்பயிற்சி பெற்றவர்கள். குதிரைச் சவாரி செய்யும் திறன் பெற்றவர்கள். தாங்கள் இருவரும், மெய்க்காப்பாளரும் கொன்றிமாயத்தேவர் தலைமையில் குதிரைப் படையும் தொடர ஒரு நள்ளிரவில் மதுரை சென்று கோட்டைக்கு வெளியில் படையை நிறுத்திவிட்டு மந்திர தந்திர உபாயங்கள் தெரிந்த தீரர்களின் உதவியால் சிறைக்கைதிகளாகவிருந்த தேவரையும், கட்டியங்காரனையும் மீட்டிக் கொண்டு வெளியேறியவுடன், குதிரைப்படையை நகருக்குள் கொத்தளங்கள் அமைந்திருந்த பகுதியையும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையும் தீவட்டியால் கொழுத்தி வரும்படி செய்து கணப்பொழுதில் கருமாத்தூர் நோக்கிப் பாய்ந்தனர். இப்படி எல்லாம் இவர்களுக்குத் தீரமும் வீரமும் செயலாற்றும் வல்லமையுமிருந்த படியால் தான் அரசாட்சியை திரணமாக எண்ணிப் பணியாமல் இருக்க முடிந்தது.

இதுசமயம் மைசூர் படைஎடுப்பு நடந்த காலமாதலால் நாட்டில் அரசியல் நெருக்கடிகள் கவ்விக் கொண்டிருந்த படியால் கைதிகளை மீட்டுக் கொண்டு போனதைப் பெரிதாக்கி அடக்குமுறை செய்வதை கவனிக்கவில்லை. நாளடைவில் கருமாத்தூருக்கும் மதுரை மன்னருக்கும் சமாதான உறவு அதிகரித்தது. தேவரின் படைத்திறனை வளர்க்கத் திருமலைமன்னன் உதவினான். தங்களின் நட்புறவுக்கு அறிகுறியாகப் பிரமலை நாட்டில் நோட்டம் அதிகாரத்தைக் கள்ளர்கள் பரம்பரையாக அனுபவித்து வரும் பாத்தியதை வழங்கப்பட்டது. அதன் அறிகுறியாக இன்றுவரை இந்த நாட்டில்



RangaRakes
tamilnavarasam.com

"நோட்டம்" கிராமமுனிசிப்பு வேலையைப் பார்த்து வருகிறவர்கள் தேவமார்களேயாவர்.

## மதுரை மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சியில் பிரமலை நாட்டார்: சாதிக்கட்டுப்பாடு: சுதந்திர ஆட்சி: கள்ளன் பெரிதா? காப்பாளன் பெரிதா?

மதுரை நகர் நிரந்தரமான பாதுகாப்பிலிருக்க வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு நகரின் வெளிப்பக்க வாட்டில் உயரமான கோட்டைச் சுவரையும் கோட்டைச் சுவரின் உள்பக்கத்திலும் ஆழமான அகழியையும் வெட்டி வைகை நீர், அகழியை நிரப்பும் வகையில் திருமலை மன்னன் செய்து முடித்து மிகவும் பரவசமடைந்தான். நீண்டகாலமாக மதுரை நகர் பாதுகாவல் நாயக்கருக்கு அச்சத்தைக் கொடுத்து வந்தது.

அதைப் போக்குவதற்கே இந்த அரிய வேலையைச் செய்து முடிக்கலாயிற்று. கோட்டையும் அகழியும் கட்டி முடிந்தவுடன் ஒரு விழாக் கொண்டாடப் பட்டது. விழாவுக்குப் பிரமுகர்கள் எல்லோரும் பாளையக்காரர்கள் உட்பட யாவரும் அழைக்கப்பட்டிருந்தனர். விழாவில் பேசிய திருமலை நாயக்கன், உயரமான கோட்டை மதிலும் கட்டி, ஆழமான அகழியும் வெட்டி நீர் நிரப்பியாகியிருக்கிறது. இனிமேல் எனக்கோ அல்லது நகரத்திற்கோ எவராலும் முக்கியமாக தன்னரசு நாட்டுக் கள்ளர்களாலும் அச்சம் விளைவிக்க முடியாது என்றும் கள்ளர்கள் இனி அடங்கி விட்டார்கள் என்றும் பேசினான்.

மதுரைக்குப் பக்கத்தில் 6 மைல் தொலைவில் வடிவேல் கரை என்ற ஊருளது. திருப்பரங்குன்றத்திற்குத் திசைகாவலாகவும் ஸ்ரீ கந்தர் ஸ்வாமி தேவஸ்தானத்திற்குப் பரம்பரைப் பாதுகாவலருமாக இருந்து வந்தவன் காரி பின்னத்தேவன்: ஆள் கட்டும், அதிகாரமும், சொல் திறனும் வாய்ந்தவன். திருமலை நாயக்கன் மதுரையில்



நடந்த அரச விழாவில் கள்ளர்களை அடக்கிவிட்டேன், இனி அவர்கள் பால் அச்சமில்லை என்று பிரஸ்தாபித்தான் என்ற விபரத்தை பின்னத்தேவன் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. மக்கள் மனதிலும் அரசன் பிரசங்கம் உணர்ச்சியை உண்டு பண்ணியது.

மன்னனின் அடக்குமுறைக்குப் பயந்தோமில்லை. அகழியும் கோட்டை மதிலும் ஒரு பெரிய தடுப்பாக மாட்டாது. மக்கள் மனது வைத்து மன்னன் பாதுகாக்கப்பட வேண்டும். அடக்குமுறையும், ஆயுத பலமும் செல்லாது என்பதை நிரூபிக்க வேண்டும் என்று அந்தரங்க யோசனையை மந்திர தந்திரோபாயம் தெரிந்த புரட்சி வீரர்கள் திருமலை நாயக்கருக்குப் புத்தி புகட்டத் திட்டமிட்டு வெற்றி கண்டனர். உடும்புகள் பலவற்றைப் பழக்கி அவற்றை மதில்ச் சுவர், அரண்மனைச் சுவர்களில் ஊர்ந்தேறவிட்டு அவைகளின் கால்களில் நூலும், பின் கயிறும் பிணைத்து இணைக்கப்பட்ட கயிறுகளின் பிடிப்பைக் கொண்டு சுவர்கள், கோட்டைகள், கொத்தளங்கள் மேலெல்லாம் ஏறி. தங்கள் வசமிருந்த அரண்மனைப் பிளானில் மன்னன் சயனகிரகத்திற்கு மேல் உப்பரிகையில் இருந்துகொண்டு மாடியின் மேல்தளத்தில் மனிதன் இறங்கும் அளவுக்குக் கன்னவாசல் செய்து அதன் மூலம் இறங்கி, கள்ளன், மன்னன் நித்திரை கொள்ளும் சப்பிரமஞ்சத்தை அடைந்தான். அங்கு தந்திரோபாயத்தால் மன்னனுக்குக் கூடுதல் நித்திரையை உண்டுபண்ணிவிட்டு, அதன்மேல் ராணி, ராஜா ஆகியவர்கள் அணியும் உயரிய அந்தஸ்துள்ள அணிகலன்களையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்து தனது சகாக்களுடன் சேர்ந்து தங்களது பாசறையை அடைந்தனர்.

விடியற்காலை ராஜமாளிகையில்; மகாலைக் கன்னம் வைத்துத் திருட்டுப் போய்விட்டது என்ற விவரம் தெரிய வந்தது. நாயக்கர், நடந்த காரியம் எல்லாம் தானே மதில் சுவர்கள், கன்னவாசல், அகழி எல்லா இடத்திற்கும் சென்று பார்த்து எப்படித்தான் இந்த அரிய செயலை

RangaRakes tamilnavarasam.com

மனிதன் பிறர் அறியாவண்ணம் செய்துமுடிக்க முடிந்தது. அமானியச் செயல் என்று உணர்ந்து இதைக் கண்டுபிடிக்க வேண்டிய முயற்சி எடுக்கப்பட்டது. நகரில் எங்கும் ஒரே பரபரப்பாகவிருந்தது. தனது ஆலோசகர்களைக் கலந்து மன்னன் ஒரு பிரகடனம் விட்டான்:

"எமது ராஜ சின்னங்கள் பள்ளியறையிலிருந்து நாமறியா வண்ணம் நித்திரை செய்து கொண்டிருந்தபோது பிறரால் கவர்ந்து செல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையில் அரண்மனையில் கன்னம் வைத்துத் திருடப்பட்டதாக இருந்தாலும், ஒரு பெரிய சாமர்த்தியச் செயலாகும். இவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்த மனிதன் என் நாட்டிலிருப்பதைக் காண நாம் விரும்புகிறோம்: செய்தது குற்றமானாலும் செயல்முறை வியக்கத்தக்கது, இச்செயல் எமது அரசு உள்ளவரை சரித்திர சின்னமாக நாட்டு மக்கள் பார்வைக்கு காத்து வைக்கப்படும். திருட்டுச் சொத்தை எடுத்தவர்கள் நேரில் கொண்டு வந்து ஒப்புவித்தால் செய்தவரை மன்னித்து செயல்வகைத் திறத்திற்குப் பரிசாகச் சன்மானங்களும், உயர்தர உத்தியோகமும் கொடுக்கப்படும் என்றும் அறிவித்தான். இதன் வகைக்குத் துப்புத் துலக்கினாலும் இவ்விதப் பலனை அடையலாம்: அப்படியில்லாமல் எமது முயற்சியால் கண்டுபிடித்து நாமே திருட்டைக் கைப்பற்றினால் குற்றவாளியாகப் பாவித்து தண்டனை விதிக்கப்படும்." என்பதாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அதுகாலை எட்டுநாடு, இருபத்திநான்கு உபக்கிராமங்களின் ஆட்சித் தலைவனாக வையாண்ட உரப்பனூரை ராஜதானியாகக் கொண்டு ஆண்டுவந்தவர் பின்னைத்தேவர். திருப்பரங்குன்றம் ஸ்ரீ கந்தர் தேவாலயம் பாதுகாவலராக விருந்த காரிபின்னைத்தேவருக்கு உறவினர். திருமலை நாயக்கரின் சொத்துக்களைக் கவர்ந்த தந்திரிகள் காரிபின்னையுடன் உரப்பனூர் போய் திருமலை நாயக்கர் மஹாலில் திருட்டை நிறைவேற்றிய தந்திரிகள் தேவரிடம் சொத்தை ஒப்படைத்தனர். முன் அறிவிப்பின் பேரில் பின்னைத்தேவர் தந்திரி



மார்களையும், ராஜ சின்னங்களையும் அரசன் முன் ஒப்புவித்தார். அரசன் ஆனந்தமடைந்தான். ஆழ்ந்த சிந்தனைகள் செய்து தந்திரிகளை ஏற இறங்கப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

தந்திரிகளுக்கு விலையுயர்ந்த பொருள்கள் சன்மானமாகக் கொடுத்து, ராணுவத்தில் வேவுபார்க்கும் துறையில் வேலையும் கொடுத்து, மன்னர் தந்திரிமார்களைப் பார்த்து இனிமேல் தங்கள் தந்திரோபாயங்களைப் பிறர் பொருளைக் கவரும் திருட்டுத் தொழிலுக்கு உபயோகிக்கக் கூடாது என்று எச்சரித்தான். எதிரிகளின் நாட்டில் மாறுவேடத்துடன் சென்று உளவு, வேவு, துப்பறிதல், சதி நிறைவேற்றுதல் முதலான காரியங்கள் செய்வதற்கு "களத்தார்கள்' அறப்படை, மறப்படை, களப்படை பிரிவுகளில்: மாயா ஜாலம், மந்திர தந்திர வித்தைகள் கற்று ராணுவ முக்கியத்துவம் பெற்று விளங்குவது இயல்பு அதுபோலவே நமது ராஜ்யத்தில் நீங்கள் தொழில்புரிய ஆவன செல்கிறேன் என்றான். பின்னைத்தேவருக்குத் திருடர்களான தந்திரிமார்களைக் கொணர்ந்து தன்முன் ஒப்புவித்துத் தன் பிரகடனத்திற்குக் கீழ்ப்படிந்து செயலாற்றி திருட்டுப் பொருள் கொணர்ந்து சேர்த்ததமைக்கும் இதுவகையில் உள் அன்போடு அரசுக்கு நன்றி காட்டியமைக்காக மிகவும் பாராட்டி, மன்னர் அரசியல் அரங்கில் உயர்ந்த பட்டமும் அதிகாரமும் வழங்கினான். பின்னத்தேவருக்குத் "திருமலை பின்னத்தேவர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதன் மேல் தேவர் பிரமலை நாட்டிற்கு ஒரு சுயாதீனத் தலைவராக நியமனமானார். நாயக்கரின் நன்மதிப்புடன் தேவர் பிரமலை நாட்டுக்கு அதிபதியானது மதுரை அரசியலில் ஒரு வெற்றியாகக் கருதப்பட வேண்டியதாகும். மதுரை மன்னனிடம் பட்டம் பெற்ற திருமலை பின்னத்தேவருக்கு பிரமலை நாட்டில் தம்குல வரலாற்று விதிப்படி பிரமலை நாட்டை ஆளவும் தம் நாட்டின் பரிபாலன சட்டதிட்டங்களைத் தானே வகுத்துக்கொண்டு சாதிக்கட்டுப் பாட்டின்படி நிர்வாகம் செய்யவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. தேவருக்கு

RangaRakes
tamilnavarasam.com

ஆலோசனை சபையுமுண்டு. மதுரைமீது படை எடுப்பு ஏற்படும் காலங்களில் தேவர் தன் சாதிக்கட்டுப்பாடுடன் மன்னருக்குப் படை துணைசெய்ய வேண்டும் என்பதாக மனமகிழ்வோடு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்மேல் தேவருக்குப் பட்டமளிக்கப்பட்டதையும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதையும் செப்பேட்டில் சாசனப்பத்திரமாக வரைந்து மன்னன் வழங்கினான். அந்தப் பட்டமளிப்புடன், விலையுயர்ந்த சன்மானங்கள், இரத்தினக் கம்பளம், பிடிசெம்புடன் பொற்பிரம்பு, பாதக்குரடுகட்டை, காளாஞ்சிச் செப்பு முதலானவைகளும் கொடுத்தனுப்பினான். திருமலை நாயக்கன் குடும்ப ஞாபகமாகத் திருமலை பின்னத்தேவருக்கு நாயக்கர் குல தேவதைகளாகிய பங்காரு அம்மன், மதுரைக் காளி ஆகிய தெய்வங்களின் உருவச் செப்புச் சிலைகளும் அவற்றை வைத்துத் தேவர் வீட்டில் வழிபாடுகள் செய்து வரும்படியாகவும் ஆசி கூறியனுப்பினான்.

செம்புப் பட்டயத்தின் நகல்:—

No, 1 "ஆதித்திமலை பின்னைத்தேவர் சர்வாதிகாரி: தேவர் ராமஜெயம்; தேவத்தனம்: மதுராபுரி தளத்துக்குக் கர்த்தராகிய திருமலை நாயக்கரவர்களுக்குப் பெந்தபிள்ளை. பின்னத்தேவனுக்கு எழுதிக் கொடுத்த பட்டயம். செய்யாவருஷம் பங்குனி மாதம் 21ந் தேதி சோமவாரத்தில் நாடு எட்டு வர்ணிதத்துக்கும்: கம்பிளி அதிகாரமும் புடிசெம்பும் பட்டயமும் மொதமையும் பாத கொரடும் காளாஞ்சி ஆக இவ்வளவும் திருமலை பின்னத் தேவனுக்குப் பட்டங்கட்டி வைத்து மேற்படியானுக்கு வருமானம் சாதியார் நாட்டில் வந்து கம்பளி போடுகிறபோது பாதகாணிக்கை 5 பொன்வைத்து கண்டு கொள்கிறது. இரண்டாவது சுந்தத்தேவன் 3-வது ஒச்சாத்தேவர் மேற்படி திருமலை பின்னத்தேவனுக்கு அரண்மனையிலிருந்து 60 பொன் முடிப்புக்கொடுத்து அனுப்புகிறது. மேற்படியானுக்கு பெண் குழந்தை பிறந்தால் திருமலை பின்னியக்காள் என்று பெயர் வைத்து தங்கப்பதக்கமும்



போட்டு. வீரமடையான் செயிக்கும் கிழக்கு கனக்கன் மானிபமாகவும் பாக்கு வெத்திலைச் சிலவுக்கு உச்சப்பட்டி, தருமத்துப்பட்டி இரண்டு கிராமங்களும் விட்டுக்கொடுத்து 18 பட்டி கோனர்கள் ஆடி, தீபாவளி சங்கராந்திக்குப் பொங்கலிட நாயக்கமார்கள் பால் கொடம் நெய் கொடம் கொண்டு வந்த கண்டு கொள்ளவும் இந்தப்படிக்கு இராஜ மணி மகாராஜ ஸ்திரி திருமலை நாயக்கர் அவர்கள் கைஒப்பம்.

சாச்சிகள் : 1 சிவகங்கை ராஜா
2 தொண்டைமான் புதுக்கோட்டை
சிவந்தத்தம்பி
3 கருமாத்தூர் கொன்றிமாயத்தேவன்

தாம்பிரப்பட்டயம் செய்தவன் மாணிக்கம் ஆசாரி மகன் சொக்கலிங்கம் ஆசாரி இந்தப் பட்டயத்தைப் பின்னோர்கள் அடி அழிவு செய்தால் பிராமணனைக் கொன்ற தோஷத்திலும் அடைந்து போவார்கள் ஆகவும் வேணும் சொக்கலிங்க மீனாக்ஷி மூனுசாமி துணை.

தென் இந்திய சாதி வரலாறு வால்யூம் K. பக்கம் 90 : திருமலை பின்னத்தேவர் பட்டம் பெற்ற விவரம் காண்க:—

## மதுரை நகர் ஆயிரம் வீட்டிடையர்களின் காப்பாளன் திருமலைபின்னத்தேவன்

திருநெல்வேலி ஜில்லாவில் புதுநாட்டில் வாழ்ந்த இடையர்களுக்கு அங்கிருந்த பாளையக்காரன் தொந்திரவு சகிக்க முடியாமலிருந்தபடியால் அந்நாட்டு இடையர்கள் ஒன்று சேர்ந்து மதுரைக்கு ஓடி வந்து திருமலை நாயக்கரிடம் அடைக்கலம் புகுந்தார்கள்: நாயக்கர்களவர் தலைவன் திருமலை பின்னத்தேவரை புதுநாட்டு இடையர்கள் ஆயிரம் வீட்டுக்காரர்களுக்கு அதிபதியாக நியமித்து அவர்களுக்கு இடையூறு இல்லாமல் பரிபாலித்து வரும்படியாகச் செய்தார். இம்மாதிரியாகத் தங்களைப் பரிபாலித்துவரும்படி

RangaRakes tamilnavarasam.com

யாக மன்னனால் நியமிக்கப்பட்ட திருமலைபின்னைத் தேவர் காலமாகிவிட்டால் அவர் ஸ்தானத்திற்கு வாரிசாக வரும் அடுத்த பட்டக்காரருக்கு முடி சூட்ட வேண்டிய பொறுப்பு இடையர்களுடையது. விபரம் மதுரை ஜில்லா கெஜட்டியர் காண்க. பட்டம் பரம்பரையாக ஆண்டு அனுப விக்கத்தக்கது.

மதுரையில் இராமாயணச்சாவடியிலிருந்து மாரியம்மன் தெப்பக்குளம் வரையிலும் உள்ள இடத்தில் ஆயிரம் வீட்டு இடையர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கத் தேவர் வசம் ஒப்புவிக்கப்பட்டு அதன்படி வீடுகள் அமைக்கப் பட்டன. இவர்களை இடையர்கள் என்றும் கோனார்கள் என்றும் கோங்கிமார்கள் என்று சொல்வதுண்டு. மதுரைக்கு வடக்கிலும் வடமேற்கிலும் உள்ள 18 பட்டி (ஊர்கள்) இவர்கள் கன்று காலி ஆடுமாடு மேய்த்துக் குடி வாழ்வதற்கு நாயக்க மன்னரால் விடப்பட்டது. மதுரை இராமயாணச் சாவடிக்கு மேற்கேயுள்ள கிருஷ்ணன்கோவில் கோங்கிமார் களுக்குச் சொந்தம். இந்தக் கோயிலுக்குத் திருமலைபின்னைத் தேவர் பாதுகாவலனாகும்; விழாக்காலங்களில் தேவருக்கு மாலை மரியாதையும் பட்டம் பரிவட்டம் பாதகாணிக்கை யும், தீர்த்தம் துளசி மரியாதையுமுண்டு. மேலே கண்ட விவரங்கள் நிருபணம் ஆகும்படியாகவுள்ள செப்பேடு கவனிக்கத்தக்கது. இவ்வேடு திருமலை மன்னனால் திருமலை பின்னைத்தேவருக்குக் கொடுக்கப்பட்டது.

குறிப்பு :—1938-ல் சேத்தூர் அரண்மனையில் வைத்து பிரமலைநாட்டு வரலாறு ஜமீன்தார் சேவுகப் பாண்டியத் தேவர் அவர்கள் தலைமையில் வாசிக் கப்பபட்டது, உடனிருந்த பிரமுகர்களில் இராஜ பாளையம் பிரமுகரும் தென் தமிழ் நாட்டு யாதவ பிரமுகருமான திரு சங்கரக் கோனார் அவர்களும் ஒருவர் ஆவர்; நூல் வாசிப்பைக் கேட்டறிந்த திரு சங்கரக்கோனார் அவர்கள்யாத வர்கள் இனத்தவர்களும்தேவர் இனத்தவர்களும் ஆதியோடந்தமாக ஒரேபிறப்பன்கள் என்பதற்கு



புதுநாட்டு இடையர்கள் பிரமலைநாட்டுத்தேவர் களின் உடன்பாடு சான்றாகும்; நூலினைப் பாராட்டுகிறேன் என்றார்கள்.

ஏட்டின் நகல் ||

''ராமஜெயம் பார்த்திவா வருஷம் ஆவணிமாதம் 19ஆம் தேதி மதுராபுரித் தலத்திலிருக்கும் ராஜாமணிச்சாவடி மகாராஜ ஸ்திரி திருமலைநாயக்கரிடத்தில் தெய்வேந்திர கோத்திரமாகிய திருமலை பின்னைத்தேவனைச் சேர்ந்த ஆறு தாய்மகன்களும் ஆட்டுக்கிடாய், அரிசி, பருப்புகள், பால் பசு, பாதகாணிக்கை 15 பொன் சீனிச்சர்க்கரை எரி துரும்பு இவ்வளவு சாமான்கள் வைத்து ராஜாவைச் சந்திப்பு கண் டார்கள். ராஜாவுக்குச் சந்தோசமாகி கோத்திரமாகிய புன்னைத்தேவர் உனக்கு என்னவேணும் என்று கேட்டார். எனக்கு கோங்கிமார்கள் இரண்டு தெருவீதிக் கட்டமும் எனக்கு விட்டுக் கொடுக்கவும் இதைச் சேர்ந்த கிராமம் 18 பட்டிக்கோங்கிமார்கள் இராமாயணச் சாவடியில் கூடியிருக் கும் போது தெய்வேந்திர கோத்திரமாகிய திருமலைபின்னை ; தேவருக்குக் கும்புக்கிடாய் ஒன்று கொடுக்கவும் குத்துக் கிடாய் ஆறு தாயி மக்களுக்குக் கொடுக்கவும், தேவர் கிடைக்குப் போனால் கிடை வருமானத்தில் ஒரு பங்கு கொடுக்கவும், இந்தப் படிக்குத் தாம்பிரசாசனம் பட்டயம் வேண்டுமென்று கேட்க அந்தப்படிக்கு ராஜா உத்திரவு ஆச்சுது. இந்தப்படிக்கு திருமலைநாயக்கர் திருக்கரத்தால் கை ஒப்பம். இந்தப் பட்டயம் செய்தவன் பொன்னம்பலம் மகன் முத்துப்பிள்ளை. இதை யாரொருவன் அடியழிம்பு செய்தால் ராவணச்சாவடியிலுள்ள தேவாதிகளும் மீனாட்சி அம்மனும் கேட்கும்''.

இப்படியாகப்பட்டம் ஆண்டவர்கள் ஜாதிப் பெரிய தனம் ''தேவர்'' என்று இப்போது நாட்டில் சொல்லப்படு கிறது. திருமலைநாயக்கரால் முடி சூட்டப்பட்ட ஆதித்திரு மலை பின்னைத்தேவரிலிருந்து கடைசியாகப்பட்டம் ஆண்ட வர்கள் இதுவரை 10 பேர்கள் பட்டம் ஆண்டிருக்கிறார்கள்.

RangaRakes tamilnavarasam.com

1 ஆதித்திருமலை பின்னத்தேவர்

2 திருமலை பெருமாள்தேவர்

3 திருமலை பின்னைத்தேவர்

4 திருமலை மூக்குப்பரி பெரியாண்டித்தேவர்

5 திருமலை பின்னைத்தேவர்

9 திருமலை மூக்குப்பரி கலியாணித்தேவர்

7 திருமலை அனைஞ்சாத்தேவர்

8 திருமலை மூக்குப்பரி கலியாணித்தேவர்

9 திருமலை அணைஞ்சித்தேவர்

10 திருமலை பின்னைத்தேவர்

ஆதித்திருமலை பின்னத்தேவரின் சந்ததியில் சேஸ்டவாரீ சாகப்பட்டம் ஆண்ட 10வது பட்டக்காரர் ''தேவர்'' ''திருமலைபின்னைத்தேவர் திருமங்கலத்திலிருந்து 3 மைல் தொலைவில் இருக்கும் தருமத்துப் பட்டியில் வாழ்ந்து காலமானார். அவருக்குப் பின் வாரிசுகள் பட்டம் கட்டம் வேண்டியதிருக்கிறது. இது காலை சாதிப் பெரியதனம் நடைமுறையில் அமுலில் இல்லாதபடியாலும் பட்டம் துலக்கமில்லாது போய் விட்டது. கடைசிப் பட்டக்காரர் தன் வாழ் நாள் பூராவிலும் தனது நேசப்பாளையக்காரர் விருப்பாச்சி ஜமீன் தார்கள் பரம்பரையில் தாய் பிள்ளைகள் போல் பழகி வந்தார்கள். இந்த ஜமீன்தாரின் முன்னோர் தலைமையில் தான் மூக்குப்பரிபின்னத்தேவர் குதிரைப் படைத் தலைமைதாங்கி மைசூரின் மேல் மதுரை படை எடுத்தபோது மன்னர் படையை நடத்தியவர் என்று தெரிய வருகிறது.

திருமலைநாயக்கர் தமது தம்பியாகிய முத்தியாலு நாயக்கனென்ற குமாரமுத்து நாயக்கனை மைசூருக்குப்பட்ட எடுத்துச் சென்று: மதுரை நாட்டில் படை எடுத்து வந்து மக்கள் மூக்குகளை அறுத்து நம் நாட்டின் மானத்தைக் கெடுத்த மைசூரான் தேசத்தில் போய் பழிக்குப் பழிவாங்க



வேண்டுமென ரோசத்தோடு உத்தரவுபோட அதைக்குமார மன்னன் பணிவுடனும் வீரத்துடனும் ஏற்றான்.

1659ல் இராமநாதபுரத்தரசர் படையின் உதவியோடு குமாரமுத்து நாயக்கர் படை மைசூரை நோக்கிக் கிளம்பியது. போகும் வழியில் திண்டுக்கல்லில் தங்கி, அங்கு அரங்கண்ணன் நாயக்கருக்கும் பதினென் பாளையக்காரருக்கும் ஆணையிட்டு நேச நாட்டின் உதவிப் படைகளுடன் சென்றான். இந்தப் பாளையக்காரர் சேனையில்தான் விருப்பாச்சி குதிரைப் படையைத் திருமலை பின்னைத்தேவன் நடத்திச் சென்றதாகத்தெரிகிறது. படை எடுப்பு மாபெரும் வெற்றியில் முடிந்தது. பழிக்குப்பழி வாங்கிய மதுரைப் படையினர் அப்பாவிகளான மைசூர் மக்கள் மூக்குகளை அறுக்கவில்லை. கைதியான சேனாதிபதியின் மூக்கையும் அறுத்து கைப்பிடியாகவும் பிடித்து மதுரை கொண்டு வந்தனர்.

இந்த விவரங்கள் கர்நாடகராஜாக்கள் வரலாற்றிலும் தெரிய வருகிறது. மைசூர் படை எடுப்பின் வெற்றிப்படை மதுரை வந்து சேர்ந்து திருமலை மன்னனுக்கு மகிழ்வூட்டியது. இந்தச் சண்டையின் வெற்றி விழாவில் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட விருதுகள் பட்டங்கள் சன்மானங்களில் 'மூக்குப்பரி' என்பது வெற்றி வீரர்களுக்களித்த பட்டங்களில் ஒன்று. இந்தப் பட்டம் திருமலை பின்னத்தேவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது கண்டறிய வேண்டியதும்: அந்நாளையக் கள்ளர் நாட்டுக் குதிரைப்படை வலிமையும் தெரிய வருகிறது.

## மதுரை மன்னர் திருமலை நாயக்கருக்கு திடியன் நாட்டு நல்லவர் தூங்கத்தேவரின் படைத்துணை: பாடிக்காப்பான் பட்டம் ஆட்சிமுறை:-

வலங்கைமான், இடங்கைமான் எனப்பட்ட இனவேறுபாடும்; இவர்களுக்குள் உயர்வு தாழ்வு அடிப்படையில் சண்டை சச்சரவுகள் ஆதிகாலந்தொட்டே இருந்து வந்தி

RangaRakes tamilnavarasam.com

ருக்கின்றன. திருமலைநாயக்கர் ஆட்சி காலத்தில், சோழ வந்தான் ஊரில் நடந்த சம்பவமொன்று கள்ளர் தலைவன் எப்படிப் ''பாடி காப்பான்'' பதவியடைய முடிந்தது என்பதை காட்டுகிறது.

சோழவந்தானில் மாரியம்மன் திருவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடி வரும் உற்சவமாகும். திருவிழாவின் போது ஊர்வலம் பக்தி பரவசத்துடன் கொண்டாடக் கூடிய தொன்றாகும். அம்பிகை எழுந்தருளி, நகர்வலம் வரும் போது அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மனை வைத்துப் பக்தர்கள் முதுகின் சதையில் இரும்பாணியை (தூண்டில் ஊக்கை) கோர்த்து தேர்வடத்தைப் பிணைத்து அருளோடு வீதிவழியாகத் தேர் இழுத்துவரும் வழக்கமிருந்து வந்திருக்கிறது. அம்மாதிரி தேர் இழுந்து வரும் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் வருவதுண்டு. அதில் நேர்த்திக் கடனுக்காக ஆடல் பாடல்கள்; வேடிக்கை விநோதங்கள் நடத்துவதுண்டு.

சமூக அடிப்படையிலும் உறவின் முறை அடிப்படையிலும் கிராமம் வாரியாகவும் தெருவு வாரியாகவும் கூட்டம் அமைத்து அணிஅணியாக அவரவர்களுக்கு அந்தக் காலத்தில் ஏற்பட்ட சாதி வழக்கத்திற்குத் தக்கபடி ஆடம்பரம் செய்து வருவார்கள். இம்மாதிரி நடந்து வரும் ஒரு நாளில் நடந்த நிகழ்ச்சி பயங்கரமாக முடிந்தது.

ஊர்வலத்தில் பட்டணம் செட்டியார்கள் 18 வகுப்பார்கள் வலங்கைமான் தரப்பிலும்: ஆசாரிகள் 5 வகுப்பார்கள் இடங்கைமான் தரப்பிலும் இரண்டு பிரிவுகளாக எதிர்த்து நின்று ஆதிக்கப் போட்டியில் கலகம் உண்டானது. திருவிழா நடைபெறவில்லை. இந்தக் கலவரத்தில் வலங்கைமான்கள் பக்கம் நியாயமிருந்தது. கோயில் கர்த்தாக்கள் சண்டையை ஒடுக்கித் திருவிழாவை நடத்திக் கொடுக்க வேண்டுமாய் மன்னர் திருமலையை வேண்ட; திருமலை மன்னன், திடியன் அதிபர் தூங்க தேவருக்கு ஆணையிட்டுக் கலகத்தை அடக்கி இடங்கைமான்களை ஒடுக்கச் சொல்லவே



தூங்கதேவர் போர் தொடுத்து இடங்கையர்களை ஒடுக்கி விட்டார். இந்தச் சண்டையில் தூங்கத்தேவர் தரப்பில் 16 பேர்கள் மாண்டனர். தூங்கதேவர் செய்த தியாகத்திற்கு வெகுமதியாக; வலங்கைமான்களின் பாடிக் காப்பானகத் தூங்கதேவரை நியமித்துப் பிறப்பிக்கப்பட்ட செம்புப் பட்டயத்திற்கு நகல்:—

## ஸ்ரீராமஜெயம்

## வலங்கைச் செம்புப்பட்டாவுக்கு நகல்

சாலிவாகன சகாப்தம் கலியுக சகாப்த்தம் தமிழ் கார வருஷம் வைகாசி மாதம் 27-ம் தேதி மகாராஜஸ்ரீ மகாகனம் பொருந்திய சமஸ்தான, சர்க்குண பரண பூசித அலங்கிர்த தம் விஜய விஸ்தார, வினித, ரஞ்சிதம்: மதுரவாசிதம், உசிதம், மிருதம் நவின கோலாகலம், உத்தவேகம், விதஷனன், உத்தண்டதோர்க்கண்ட, பிரசண்ட, மண்டலவேலர்கண்ட, உத்தார நிச்சயம் சதிர்த உபாயம், சம்பிரதாயம் வெகு தேய சகாய, நியாக, சையோக, வையோகம் பொருந்திய மதுரை 64 திருவிளையாடலும் பொருந்தும் மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் பாதம் பூஜை செய்யவாகிய சீமை சமஸ்த்தானங்களுக்கு அதிகாரக் கர்த்தாவாயிருக்கிற நாளில், சோழவந்தான் மாரியம்மன் கோவில் திருவிழாவில் செகுல், தர்மக் கர்த்தா (திருமலை நாயக்கர்) வகையரா வலங்கையர்கள்; வெள்ளானையும், வெள்ளைக் குதிரையும், வெள்ளைச்சாமரையும், சேமந்தூர் வெண்டையமும், குதிரைகுடை காளாஞ்சியும், வெண்சாமரையும்; சுருட்டியும் கொண்டு, வலது கால் கெச்சமும் கட்டி நடத்த வேண்டிய திருவிழாவில் பரிசலை இடங்கையர்களாகிய ஆசாரி வகையரா (அஞ்சு) பஞ்ச மடமுள்ளவர்களும், அதிகத் தோரணையாக, வெள்ளானையும் வெள்ளைக் குதிரையும் வெள்ளை வெண் சாமரமும் சேமத்தூர் வெண்டையமும் முப்பாகலும் திவட்டியும், குதிரைகுடை காளாஞ்சியும், சுருட்டியும் கொண்டு திருவிழாப் பரிசலை நடத்தினார்கள் என்று, இடங்கையார்களை, தர்மக்கர்த்தா

RangaRakes
tamilnavarasam.com

வகையரா வலங்கையர்கள் தடுத்து அதனால், சராசல்லிய பாகி, கொலைபலியாகி இருந்தபடியால் வஞ்சம் தீர்த்து அடைக்கலம் காத்த மேல்நாட்டிலிருக்கும் எட்டு நாடு இருபத்திநாலு உபக் கிராமங்களும் நாட்டுத்தலைவன், சேனைத்தலைவன். நரங்கதேவர் வந்து மேற்படி சண்டையில் சேர்ந்து தர்மக்கர்த்தா உத்திரவுப்படி சண்டை நடத்தி உத்திரவாதம் செய்து மேற்படி சண்டையில் பதினாறு ஆளும் செத்துக் கொடுத்து இடங்கையர்களை வலங்கையர்கள் சண்டையில் செயித்து தர்மக்கர்த்தா உத்திரவுப்படி வலங்கையார்களுக்கு நூத்திக்கலநெல்லும் பதினேழு கிடாயும் பாக்கு வெத்திலை செலவு, பொன் நூற்றி ஐம்பதும், பாதகாணிக்கையாக வைத்து வலங்கையர்களுக்கு பெற்ற பிள்ளையாக உத்திரவு செய்திருப்பதால், தர்மக்கர்த்தா முதல் பதினெட்டுப் பட்டரையார்களும் மேல்கண்ட தேசாதிபதிகளும் இந்த வகையரா. வெள்ளைக் குதிரை வெள்ளை வெண்சாமரையும் முப்பகலும் தீ வெட்டியும் சுருட்டியும் கொண்டு வெற்றியுடன் விருதுகள் பெற்று வருகிறபடியால் உபயமார்கள் பாதைகளும் பேட்டை ஸ்தலங்களும் சமுத்திரம் சூழ்ந்த 4 திசைகளிலும் இருந்து வருகிறோம். இதில் கண்டு கொடுக்கப்பட்ட வருமானமாவது:-கட்டின வீடு ஒன்றுக்கு பணம் ஒன்று. பொதிமாட்டுச் சுமைக்கு அரை பணமும் மாராப்புச் சுமைக்கு கால் பணமும், ஆண்பிள்ளை கலியாணத்திற்கு 5 பணமும், அரிசி மரக்கால் முக்குருணியும் பெண்பிள்ளை கலியாணத்திற்கு மூன்று பணமும், அரிசி மரக்கால் மூன்றும் இந்தப்படி படிபாக்கு வெத்திலையும், கொடுத்து அனுப்பி வைக்கிறது மதுரை முதல்; சோலைமலை, வெள்ளியங்குன்றம், திருப்பரங்குன்றம், விக்கிரமங்கலம், சோழவந்தான், மேல்மங்கலம், பூலந்தூர், தாண்டிக்குடி, ஆறு ஊர் வட்டகைமலை நொளாயிரம்பட்டி:- தஞ்சை கும்பகோணம், மஞ்சக்குப்பம், கடலூர், பரங்கிமலை, சென்னை பட்டினம், சிரங்கப்பட்டினம், முத்தியால்பேட்டை. ஆர்க்காடு ராய வேலூர், வாணியம்பாடி, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, அரவக்குறிச்சி, வடமதுரை, மடூர், புள்ளைமுழுங்கி,



எமக்கிழாபுரம், தாடிக்கொம்பு வேடசந்தூர், இடையகோட்டை, தொட்டையங் கோட்டை, உத்தப்ப நாயக்கனூர், தொட்டப்ப நாயக்கனூர், எழுமலை, சாப்டூர், திருமாணிக்கம், வத்திராயிருப்பு, சுந்தரபாண்டியம், ஸ்ரீவில்லிபுத்தூர், கூமாப்பட்டி, கொடிக்குளம், அன்னஞ்சி, அல்லிநகரம், போடி, தேவாரம், கோம்பை, உத்தமபாளையம், தேனி, பெரியகுளம், (இதற்குத் தெற்கு) நெறிஞ்சிப்புத்தூர், நெற்கொண்டசேவல், மணியாச்சி, ஏளாயிரம் சேத்தூர், சிவகிரி, சொக்கன்பட்டி நெல்லிக்குறிச்சி, சாத்தூர், பாஞ்சாலங்குறிச்சி, மதவ நாயக்கனூர், அருப்புக்கோட்டை, பாளையம்பட்டி, விருதுபட்டி, திருமங்கலம், கண்டுகுளம், அரியனூர், துரையூர், பாபனாசம், திருவிடைமருதூர், வலங்கைமான், ஆலங்குடி, திருமெய்யம், பொன் அமராவதி, அன்னவாசல், விராலிமலை இதில் கண்ட தேசாதிபதிகளும், தர்மக்கர்த்தா பட்டணம் செட்டியார் வகையராக்களும், மேற்கண்டபடி வரி கொடுத்து அனுப்பி வைக்கிறதென்று எழுதிக்கொடுத்த செம்பு தாம்பிரகாசனப் பட்டயம்.'' இப்படிக்குத் திருமலை நாயக்கர் திருக்கரத்தால் கையொப்பம்.

1 பட்டணம் செட்டியார் பெருமாள் செட்டியார்.

2 தெலுங்கர் குலத்தில் சங்கரலிங்கஞ்செட்டியார்.

3 ஆத்துமணலைக் கயிராத்திரித்து அருந்தொழில் செய்யக் கூடிய கோடையிடியான் குலாலர் குலத்தில் சோலைமலையான் செட்டியார், சுப்பிரமணியன் செட்டியார்.

4 நெசவுக்குடைய தேவாங்கர் குலத்தில் திருமலைச் செட்டியார், நாராயணஞ் செட்டியார்.

5 மதுரை காளி வரப்பிரசாதம் பெற்று அருளிய சின்ன மலையப்பநாடார், பெரிய மலையப்பநாடார்.

6 மூப்பர்குலத்தில் தீ வேட்டை மூப்பர், கருப்பணமூப்பர், ராமசாமி மூப்பர்.

RangaRakes tamilnavarasam.com

7 நீரில் அணல் கொண்டு அருளிய நீர்சவாளுகியபொத்தை யன் ஏகாளி, சடையன் ஏகாளி, வீரப்பன் ஏகாளி.

8 கத்தி சவளன் பூமாலை பண்டிதன், வெற்றிமாலைப் பண்டிதன்.

9 சாம்பான் குலத்தில் சன்ஞசிச் சாம்பான், குமரன் சாம்பான்.

10 நெசவுக்குடை மூப்பர் குலத்தில் அருணகிரிமூப்பர், செந்தியிண்டி மூப்பர்.

11 வன்னியர் குலத்தில் முத்துச்சாமி சேர்வை, ராமசாமி சேர்வை.

மேற்கண்ட வலங்கை தேசாதிபதிகளும் எழுதிக் கொடுத்த செம்புத்தாம்பிரசாசனப் பட்டயம் :

''மேல் நோக்கிய மரமும் கீழ்நோக்கிய தண்ணீரும் உள்ள மட்டும் சந்திரசூரியன்கள் உள்ளவரைக்கும் கல்லும் காவேரிபுல்லும் பூமியும் உள்ளவரைக்கும் வரிவாங்கி ஆண்டு அனுபவித்துக் கொள்கிறதென்று எழுதிக்கொடுத்த செம்புத் தாம்பிரசாசனப் பட்டயம். இதில் கண்ட யாரொருவர் வரி கொடுக்கிறதில்லை என்று ஆரளிவு செய்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் வாக்கும், கச்சி கம்ப காமாட்சி வாக்கும், திருமலை நாயக்கர் வாக்கும் கேட்கும். காராம் பசுவைக் கழுத்தறுத்த பாவத்தில் அடைவார்கள். இப்படி மதுரைமீனாட்சி சுந்தரேஸ்வரர் துணை, கச்சி கம்ப காமாட்சி அம்மன் துணை.''

நாட்டு வழக்கம், எட்டுநாடும் இருபத்திநான்கு உப கிராமங்களும் கூடி சாதி அளிவு பொதுக்கூட்டம் நடக்கும் காலத்தில் தூங்கதேவர் முதலில் தட்டு வெற்றிலை பாக்கு பகிர்ந்து கொடுக்கிறதென்றும் தூங்கதேவருடைய நாட்டு சேவுகன் மூலமாய் சாதி அமுல் நடத்துகிறதென்றும் தீர் மானிக்கப்பட்டது இந்தத்தாம்பிர சாசனம் மதுரை தெற்கு வாசல் மல்லி தெருவிலிருக்கும் சதாசிவம் ஆசாரி ஊசியால் பதிக்கப்பட்டது.



ஆதி காலம் தொட்டு அதாவது 1651-ஆம் ஆண்டிலிருந்து ஆதித்தூங்கத்தேவரின் வாரிசுகள் இந்தப் பாடிக்காப்பான் பட்டத்தை ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். பாடிக்காப்பான் என்னும் வார்த்தை மெய்க்காப்பாளன் என்பது போன்ற பொருள்படும். இந்த முறையானது தொன்று தொட்டுத் தமிழக மன்னர்கள் அரசின் வழக்கத்தில் இருந்து வந்திருந்தமை தெரிய வருகிறது. பாடிக்காப்பான் முறை—ஒரு தனி நபர், குடும்பம், கோத்திரம், தெருவு, சாதி, ஊர் போன்ற வகைகளுக்கு அமைக்கப்படுவதாகும். அதாவது காவல் முறை போன்றது.

சோழவந்தானில் ஏற்பட்ட பாடிக்காப்பான் முறை அப்போதிருந்த கால நிலை கொண்டு பார்க்கப்போனல், தூங்கத்தேவரும் அவருடைய படையினர்களும், பட்டினம் செட்டியார்கள் பத்துப்பட்டரைக்காரர்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பு ஏற்கவில்லையானல், வலங்கையர்கள் வாழ்க்கை நடத்த முடியாதநிலை ஏற்பட்டிருக்குமென விளங்குகிறது. தேவரின் செல்வாக்கின் பாதுகாவலில் தொழில் நடத்தி; விதித்த வரியும் அன்புடனும் மரியாதையுடனும் செலுத்தி வாழ்ந்து வந்தார்கள்.

வெகு சமீப காலம் வரை பட்டம் அமுல் நடத்தியவர் தூங்கத்தேவர்—வாரிசு—திடியன் அம்பட்டயம் பட்டியிலிருக்கும் எஸ்.பி. பெரிய கருப்பத்தேவராகும். இவர் சர்க்கார் உத்தியோகம் பார்த்து வருவதாலும் கால மாறுபாட்டின் காரணத்தாலும், தனது ஆதிபத்திய உரிமையை அமுல் நடத்தவில்லை எனத் தெரிய வருகிறது.

## பிற்காலச் சாதிகள், தமிழர்கள் இனத்தில் கூடுதல் :

தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு டில்லி சுல்தான்கள் பிரதிநிதிகளும், தெலுங்கர் அரசர்களும் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்தனர். அத்துடன் கர்நாடகத்தார்களும், மராட்டியச் சத்திரபதிகளும் தென்தமிழ் நாட்டி

15

RangaRakes tamilnavarasam.com

நாட்டம் காட்டினர். அதுகால ஆட்சியாளர்களின் நாட்டி
லிருந்து அவர்களைச் சேர்ந்த மக்களும் குடியேறினர்கள்.
அம்மாதிரியாக வந்தவர்கள்; ராணுவத்தினர், அலுவலர்
கள், வணிகர்கள், தொழிலாளர்கள் ஆவர். பொதுவாக
அக்காலங்களில், வந்து தமிழ்நாட்டில் கலந்தவர்கள் இஸ்
லாமியர். தெலுங்கர், கன்னடியர், மராட்டியர் எனத்தெரி
கிறது. இவர்கள் இங்கு வந்து வாழ்ந்தபோது பலதரப்
பட்ட பட்டங்களோடு விளங்கினர் என்றாலும் பிற்காலத்தில்
நடைமுறையில் சில சாதியினராய் வாழ்ந்து வருகிறார்கள்.

1. நாயக்கர் அல்லது நாயுடு, 2. கம்மவார், 3. ரெட்டி
யார், 4. தேவாங்கர், 5. ஒட்டார், 6. சக்கிலியர்,
7. தெலுங்குப் பார்ப்பனர், 8. சௌராஸ்டிரர், 9. மராட்டி
யர், 10. இஸ்லாமவர்கள் என்பன போன்றவர்கள்: இப்படி
யாகப் பிற்காலத்தில் வந்து தமிழ் மக்களுடன் ஈரறக் கலந்து
வாழ்ந்து வரும்போது எத்தவித வேறுபாடுமில்லாது தமிழர்
களாகவே விளங்கி வருகின்றனர். எப்படி ஒரு காலத்தில்
கன்னடமும், களிதெலுங்கும் தமிழ் மொழியிலிருந்து பிரிந்து
போனவைகளோ? அதேபோல இப்போது களிதெலுங்கும்,
கன்னடமும் தமிழ் மொழியில் வந்துசேர்ந்து விளங்குகிறது.
எல்லா மக்களும் இன்புறக் கூடி வாழ்கிறார்கள்.

இவர்களில் பலதிறப்பட்டோர் பற்பல தொழில் முறை
யில் ஈடுபட்டு வாழ்ந்து வருகிறார்கள் நாயக்கமார்களும்,
ரெட்டியார்களும் முக்கியமாக விவசாயத் தொழில் செய்து
வருகிறார்கள். இம்மக்கள் தமிழ்நாட்டில் வந்து குடியேறியது
தமிழ்நாட்டிற்கும், விவசாயத் தொழிலுக்கும் சிறப்பாகியது

பல்வேறு சாதிகள் தமிழ்நாட்டில் இனப் பிரிவால்
விரிந்து பெருகியிருந்து வந்தாலும் ; முக்குல மக்களும் அவர்
களைச் சேர்ந்தோர்களும் ''தேவர்'' என ஒன்றுபட்டு வாழ
அடிகோலப்படுகிறதோ, அதேபோல தமிழகத்தில் 96க்கும்
மேலான எண்ணிக்கையிலிருந்து வரும் சாதியினர்கள்
''தமிழர்'' என ஒன்றாய் வாழும் நன்னாளைக் கண்டு களிப்
போமாக.

## வெள்ளையரோடு தன்னரசு நாட்டுக்கள்ளர்கள்:-

கர்னல் ஹெரன் என்பவன் கும்பினியார்களின் ராணு
வத்தளகர்த்தன் : ஆற்காட்டு நவாபின் கிழக்கிந்தியக்
கூட்டுக் கொள்ளை, தமிழகத்தில் நடந்த போது: மக்களையும்
பாளையக்காரர்களையும் இம்சித்து வரிப்பணம் பிடுங்கவும்,
ராணுவத்தின் ஆயுத பலத்துடன் சுதந்திர உணர்வை ஒடுக்க
வும் நியமிக்கப்பட்டவன். வெள்ளையர் ராணுவ அதிகாரி
களில் முதல் முதலில் தமிழ் நாட்டில் காலடி வைத்த முதல்
வன் இவனே. தென்தமிழ் நாட்டில் பிரவேசித்தவன்.

1754-ல் கர்னல் ஹெரன் கிழக்கிந்தியக் கம்பெனியின்
1500 பேர்கள் அடங்கிய சைனியம் ஒன்றை நடத்திக்
கொண்டு, திருநெல்வேலி போகும் மார்க்கத்தில்; நத்தம்
கணவாயில் தாமதிக்கும் படியேற்பட்டது. அவர்களின்
முகாமின் பக்கத்தில் கோயில்குடி என்னும் கிராமத்தில்
மிகவும் அழகான கோயில் ஒன்றுண்டு. அந்தக் கோயில்
கள்ளர்களுக்குச் சொந்தமானது. அழகிய சித்திரப்பாடல்
களுடன் அமைக்கப்பட்டது. விலையுயர்ந்த ஆடையாபரண
கள், உலோக விக்கிரகங்கள், ஏராளமாக இருந்தன. அவை
களைக் கண்ட பூனைக்கண் வெள்ளையர்கள் கோயில் கதவைத்
தீயிட்டுத் தகர்த்து, உள்புகுந்து எல்லாச் சொத்துக்களையும்
கொள்ளையடித்து விட்டார்கள். இது தகவல் கிடைத்த
வுடன் பக்கத்துக் கிராமங்களிலிருந்து கள்ளர்களின் தன்
னரசுப்படையினர்; தங்கள் உயிரினுமினிய கோவிலில்
அழிம்புகள், வெள்ளையர் படையினரால், செய்யப்பட்டிருந்
தைக் கண்டு அடங்காச்சினங்கொண்டு, ஹெரனின் முகா
மைத் தாக்கினர். முட்புதர் அடர்ந்த காட்டில் பதுங்கி
யிருந்து இரவில் தீவட்டிகளுடன், மூலைக்கு மூலை சூழ்ந்து
நின்று தாக்கிக்கூடாரங்கள் பலவற்றையும் சாம்பலாக்கிக்
குதிரைகளையும் பெரும் சேதப்படுத்தி கோவில் சொத்தை
யும் மீட்டினார்கள். இந்த யுத்தத்தில் கோயில் சொத்து
மீட்கப்பட்ட தொன்றே வெற்றி என்றாலும் கள்ளர் படை

RangaRakes
tamilnavarasam.com

யினர் ஆயிரக்கணக்கில் வெள்ளையர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாயினர். திருநெல்வேலிக்கு அவசரமாகப் போகவேண்டியதிருந்தபடியால் ஹெரன் கள்ளர்களோடு நீடித்துப் போராடாமல் 25—3—1754 -ல்தன் பயணத்தை மேற்கொண்டான்.

வந்த வழியில் மிகமோசமாகக் கோயில் சொத்தையும் கொள்ளையடித்து வம்புச் சண்டையுண்டுபண்ணி ஆயிரக் கணக்கான வீரர்களைச் சுட்டுத்தள்ளி விட்டுப்போகும் கொள்ளைக் கூட்டத்தைத் தன்னரசு நாட்டார் சும்மா விடவில்லை. வெள்ளையர் நடமாட்டத்தை ஒற்றர்கள் கண்காணித்தனர். ஹெரன் சென்றயிடமான வாசுதேவ நல்லூரில் தங்கி; அங்கு வீரத்தளபதி பூலித்தேவருடன் தொடர்பு கொண்டவர். அது சமயம் தான் மதுரைச் சீமை 10 நாட்டுக் கள்ளர்கள் ஆலையூர்க் கோட்டையில் போர்க் கொடி உயர்த்தி வரிகொடா இயக்கம் தோற்றுவிக்கப் பட்ட விவரம் பாண்டியர் வழி மன்னன் பூலித்தேவருக்குத் தெரிவிக்கப்பட்டது வரிகொட இயக்கத்திற்கு வீரமுலாம் பூசப்பட்டது எனலாம்.

3.5.1755ல் ஹெரன் திருநெல்வேலியிருந்து சென்னைக்குத் 'திரும்பினான். இவன் வருகையை ஒற்றர்கள் மூலமாக முன்னதாகத் தெரிந்தனர் கள்ளர் தலைவர்கள். முன் ஏற்பாட்டின்படி தயார் நிலையிலிருந்தது கள்ளர்களின் குதிரைப்படையும், வளைதடி வீச்சு ஆயுதப் படையும்: வெள்ளையர் திருச்சிராப்பள்ளியை, நோக்கிப் போய்க் கொண்டிருந்த சமயம் நத்தம் கணவாயைக் கடந்து செல்லும் சமயத்தில், தண்ணீரில்லாக் காட்டுத் திட்டுக்குள் முன்னே விட்டு முன்னும் பின்னுமாகக் கள்ளர் படையினர் வெள்ளையர் படையை வளைத்துக் கொண்டு கடுமையாகத் தாக்கினர். சூரமுள்ளும் இண்டம்புதரும் அடர்ந்த காட்டிற்குள் வெள்ளையர்படைகள் முக்கியமாகக் குதிரைப்படை; தப்பிப் பின்வாங்கவோ முன்னேறவோ தப்பி ஓடவோ முடியவில்லை. வலைக்குள் அகப்பட்ட பறவைகளைக் கழுத்தைக் திருகிவேடன்தன் பைக்குள் போடுவதே போல



திரண்ட தோள்களையுடைய வளைதடி வீரர்கள், சுழற்றி வீசிய வல்லயங்கள் வெள்ளையர்கள் தலைகளைக் கொய்து பூமியில் சாய்த்தன. பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று வீராவேசத்துடன் கள்ளர் படையினர் தாக்கினபடியாலும், போர் நடந்தவிடம் புதங்காடாகவிருந்தபடியாலும் தாக்குதலை இரவு காலங்களில் மும்மரமாகக் கள்ளர்கள் பயன்படுத்தியதாலும் வெள்ளையர்கள் செத்து மடிந்தார்கள்.

மதுரையிலிருந்து யூசுப்கான் படைவந்து ஹெரனுக்கு உதவி வராமலிருந்திருக்குமானல். வெள்ளையர்படை பூராவும் ஹெரன் உட்பட நிர்முலமாக்கப்படுவர் என்பதில் சந்தேகமில்லை. 1500 பேர்கள் அடங்கிய வெள்ளையர் பெரும்பாகம் நிர்மூலமாக்கப்பட்டு ஒரு சிலரும் ஜெனராலும், யூசுப்கானின் உதவிப்படையின் சரியான நேரத்தில் கிடைத்த உதவியால் உயிர்தப்பி ஓடவேண்டியதேற்பட்டு ஜெனரல் ''British Beaten by Kaller'' என்ற அபகீர்த்தியைத் தாங்கிக் கொண்டு திருச்சி போய்ச் சேர்ந்தான். History of theMilitay transaction of the British Indonatia.

முதன் முதலாக தமிழ்நாட்டில் காலடி எடுத்து வைத்த வெள்ளைக்காரன் பட்டாளம் அதிலும் ஒரு வெள்ளைத் தளபதியின் நேரடியான போர் அணியில் வந்தபோது ''களத்தில் கண்டு'' கடும் போரிட்டுப் பழிக்குப் பழி வாங்கியவர்கள் களமராகிய கள்ளர் படையினர் என்பதும்: வளைதடிக்கும் ஈட்டிக்கும் முன்னல் ஐரோப்பியப்படை எதிர்த்து நிற்கமுடியாமல் உயிர் தப்பி ஓடவேண்டியதேற் பட்டது என்ற விபரத்தையும் கள்ளர் படை வீரர்களின் போர்த் திறனையும் வெள்ளையர் ஏடுகள் எழுதத் தவறவில்லை. Madura country By Nelson Page 274ல்

ஆங்கிலத்தளபதி ஹெரனைப் பற்றிக் குறிப்பிடுகையில்; அவன் நத்தம் கணவாயில், கள்ளர்களிடம் எப்படிச்சிக்குண்டு ஆங்கில ராணுவப் பண்பிற்கு அபகீர்த்தியையுண்டு பண்ணினான் என்பது விளக்கபட்டிருக்கிறது. 1755-ஆம்

RangaRakes tamilnavarasam.com

வருடம் மே மாதம் 28ந் தேதி கர்னல் ஹெரன் தனது படையை நடத்திக் கொண்டு திருச்சிராப்பள்ளி போகும் வழியில் கள்ளர்களால் வளைத்துக் கொள்ளப்பட்டான். கள்ளர்களுடைய கோவிலில் இவன் அபகரித்திருந்த வெண்கலச் சிலைகளை அவர்கள் கேட்டவுடனே திருப்பிக் கொடுக்காததற்குக் கோபங் கொண்ட தேவர்கள் தாக்குதலை ஆரம்பிக்கவே அவனது ராணுவம் நிர்முலமாக்கப்பட்டது தனக்கும் தன்னுடைய படையாளர் பண்பிற்கும் அபகீர்த்தியை உண்டு பண்ணினுன்.

கள்ளர்கள் வெள்ளையர்களின் ராணுவத்தைச் சின்னு பின்னப்படுத்திய முறையை விவரமாக ஓரம் என்பவர் தனது நூலில் எழுதியிருக்கிருர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இவன் இராணுவ தளபதியாகயிருக்கத் தகுதியில்லை என்பதாக குறை கூறப்பட்டு இவனை வேலையிலிருந்து ஆங்கிலச் சர்க்காரும், கும்பெனியும் நீக்கச் செய்து விட்டது. லண்டன் வரையிலுமான வெள்ளையர் உள்ளங்களில் கள்ளர் படையினர் போர்த்திறனும் வளைதடி வீச்சின் வன்மையும் பதியலாயிற்று.

மதுரை ஜில்லாக் கெஜட்டியார் பக்கம் 88, 286ல் கள்ளர்கள் கர்னல் ஹெரானையும் அவன் 1500 பேர் கொண்ட குதிரைப் படையினர்களையும் சின்னுபின்னப் படுத்தினர் என்று எழுதியிருக்கிறது.

அத்துடன் தென்னிந்திய சாதி வரலாறு என்னும் தர்ஸ்டன் நூலில்—

மேற்கொண்டு பின்வரும் பாளையப்பட்டு யுத்தங்கள் என்னும் அத்தியாயத்தில் கர்னல் ஹெரானைப் பற்றித் தெரியலாகும்.

ஆற்காட்டு நவாபும்; கிழக்கிந்தியக் கம்பெனியும் தென்னுட்டின் அரசியலைச் சின்னுபின்னமாக்கிப் பாளையப்பட்டுக் கலகமும் மூண்டுகொண்டிருந்த காலத்தில், கம்மெந்தான் எனவும், கான்சாகிப் எனவும், மகமது யூசுப்கான் எனவும்



பெயர் வழங்கி வந்தவனெருவ சுதேசிச் சிப்பாயாகவிருந்து; மதுரை ஆட்சிபீட அதிபன் வரை விளங்கி இறுதியில் இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கும்பினியார்களால் தூக்கிவிடப்பட்டானல்லவா? இவன் தன்னரசு நாட்டில் செய்த அட்டூழியங்கள் அனந்தம்.

கும்பினி ராணுவத்தில் தளபதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த மகமது யூசுப்கான் அவனது மேலதிகாரியாகிய கம்பெனித் தளபதி கர்னல் ஹெரனுக்குப் படைத்துணை மதுரையிலிருந்து அனுப்பி அவனைக் கள்ளர்களின் அபாயத்திலிருந்து காப்பாற்ற வேண்டியதேற்பட்டது.

கள்ளர்களின் படைபலம் மிகுந்திருப்பதைக் கண்ட நவாபும், கும்பினியார்களும் யூசுப்புக்கு நேரடியாக உத்திரவுகள் பிறப்பித்துப் பத்துநாட்டுக் கள்ளர்கள் ஆதிக்கம் மதுரைச் சீமையில் அழிக்கப்பட வேண்டுமெனவே யூசுப்கான் மதுரையைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த காடுகளில் வசித்து வருபவர்களும், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களுமான தன்னரசு நாட்டுக் கள்ளர்களின் நிர்வாக அமைப்புகளைச் சீர்குலைத்துச் சாதிக் கட்டுப்பாட்டையும் உடைத்து ஊர்களையும் கொளுத்திக் கள்ளர் சமூகத்தையே கருவறுக்க துவங்கினுன். ஆரம்பத்தில், இவன் காலத்தில் உயிருடனிருந்து வாழ்ந்த, இராமசாமிக்கோனுர் என்னும் புலவர், கான்சாகிப் புத்தகம் என்னும் பெயரில் ஒரு நாட்டுப் பாடல் புத்தகம் ''அம்மானை'' பிரசுரிக்கப்பட்டுள்ளது: ''அதில்''

''நத்தத்து லிங்கானை அழைத்து — கானு
நலமாக ஒரு சேதி திடமாகச் சொல்வான்
கள்ளர் பயம் இக்காட்டில் மெத்த — என்று
கனமாம் நவாபுதுரை சொன்னுரடா பாவி
எள்ளளவும் இந்த வழி தனிலே — லிங்கா
இனிமேலும் பாதை தனிலே கள்ளர் பயமானுல்
எட்டு நாளையில் கச்சைகட்டி உன்னை
ஏலேலே தூக்கிலே போட்டிடுவேன், கள்ளா
மட்டுள்ள வழிபாதை பதனம் — லிங்கா

என்று கூறப்பட்டுள்ளது. அக்காலத்தில் கள்ளர் நாட்டில் தலைவர்களின்; நத்தம் சீமை லிங்கான் முதலானவர்கள் எல்லோரையும் கம்மந்தான் எச்சரித்திருப்பதும், நவாபிடம் தான் அதிகாரமும் ஆலோசனையும் பெற்றிருப்பதாய் கூறுவதும் தனக்கு அடங்காத கள்ளர்களை ஒழித்துக் கட்டுவான் என்று எச்சரிக்கை விடப்பட்டிருந்தது தெரிய வருகிறது. மேலும் கான்சாகிப்பின் காலத்திய கள்ளர் அரசியல் நிலை பற்றிய விவரங்களை'' மாதவையர் தம் நூலில்'' ''20.5.1756ல் கான்சாகிப் மதுரையை அடைந்து பதவி ஏற்ருன்''. நாடெங்கிலும் குழப்பமாகவிருந்தது. ஆட்சியை கள்ளர்கள் அறவே வெறுப்பதை கண்டான். வம்பர் குறும்பர்களை ஒடுக்கி அடக்குவதற்கு ராணுவத்தை ஏவி சுதேசி மக்களை ஒடுக்கும்படி செய்தான். பணியாதகள்ளர் நாட்டில் யுத்தம் தொடுத்தான். நிரபராதிகளை வெட்டிக் குவித்தான் ஒரே நாளில் 500 தலைவர்களை தூக்கிலிட்டான். இந்த மாதிரிப் படுகொலை நடந்ததாகச் சென்றகாலச் சரித்திரத்தில் இடமில்லை என்று சுட்டிக்காட்டுகிருர்.

கள்ளர் நாட்டில் 1000 மாடுகளையும் 2000 ஆடுகளையும் அபராதமாகப் பிடுங்கி யூசுப்கான் திருச்சிக்கு நவாபின் தீனிக்காக அனுப்பி வைத்தான். மேலூரிலும் வெள்ளாளபட்டியிலும் கோட்டைகள் கட்டி அங்கு ராணுவத்தை வைத்தான்.

யூசுப்கான் ஒரு முரட்டு வாதம் பிடித்த தடித்தனக் குணம் படைத்தவன் என்பதை யாருமறிவர். ஈவுயிரக்கமில்லாமல் மனித வேட்டையாடிய காலத்திலும் கூட தான் வெட்டிக் கொன்ற அருங்குணம் படைத்த கள்ளர் மக்களின் திறம்பட்ட உடல் வலிமையையும், நுண்ணறிவு படைத்த உள்ளத்தையும் மறந்தானில்லை. சிலகாலம் சென்றபின் அவன் மதுரைக்குத்தானே அதிபதியாக வந்த பிறகு தனது சைனியத்தில் கள்ளர் படைகளைச்சேர்த்தான். அவர்களுக்கு களத்தார்கள் என்று பெயர் சூட்டிக் கொண்டான். தேசத்திற்கு உடையவர்கள் ராஜாங்கப் புத்திரர்கள் என்று



பொருள் கொண்டான். நாட்டிலும் மதுரைநகரில் கள்ளர்களைக் காவலர்களாக நியமித்து குடிக்காவல், தெருக்காவல் ஊர்காவல், திசைகாவல் என பதவிகள் ஏற்படுத்தி கள்ளர்களுக்கு உத்தியோகம் கொடுத்து அதன் நற்பயனையும் கண்டான். தன் ஆட்சியில் கள்ளர்களிடம் வரி வசூலிப்பதில்லை என்ற முடிவைச் செய்து அதைப் பிரகடனப்படுத்தவும் செய்தான். கள்ளர்களுக்கு வரி கேட்கும் எந்த அரசையும் கண்டால் வெறுப்புணர்ச்சியும் அடங்காக் கோபமும் உண்டாகிறது என்பதைக் கண்டவன் கான்சாகிப் ஆகும்.

ஒரு சமயம் யூசுப்கான் சென்னைக் கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் ''கள்ளர்கள் சாதாரண மனிதரல்ல, ராட்சஸ சுபாவமுடையவர்கள். யுத்தத்தில் இவர்கள் தங்கள் உயிரை மதியாது எதிரியின் மேல் பாய்ந்து அவர்களுக்குச் சிங்கச் சொப்பனம் போல் விளங்கும். மனித சக்திக்கு மேல்பட்ட வீரர்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிருன்.

யூசுப்கானுக்கு தூரதிருஷ்டியும், அரசியல் நுண்ணறிவு மிகுந்திருந்தால்; அவன் அடைந்திருந்த அனுபவ ராணுவத் திறனும், தேகதிடமும், மதுரைக்கள்ளர்கள் சேர்க்கையால் இந்திய அரசியல் வரலாற்றையே திசை திருப்பி விட்டிருக்கலாம். துரதிஸ்டவசமாக அவன் கள்ளர்களை ஆரம்பத்தில் கொலை செய்து நாசப்படுத்தி விட்டான்

கள்ளர்களுக்கு வெள்ளையர்களைக் கண்டாலே பிடிக்காது. ஆனும் வர்க்கத்தினர்பால் எப்பொழுதுமேவெறுப்புணர்ச்சியுடையவர்கள். கம்பெனி அதிகாரிகள் கள்ளர் நாட்டில் வரிவசூல் செய்ய முடியவில்லை. மதுரை ஜில்லாக் கலெக்டர் உத்திரவை ஏற்க மறுத்தான். ஒரு சமயம் கள்ளர் நாட்டின் அப்போதைய தலைநகராகிய ஆனையூர். கருமாத்தூர் திடியன் ஆகிய இடங்களில் வசூல் நடவடிக்கை எடுத்தபோது கள்ளர் தலைவர்கள் ஊர் ஒப்பந்தம் செய்து தீர்வை செலுத்தக் கூடாது என்று சாதிக்கட்டுப்பாடு செய்து வரி கொடா இயக்கப் பிரகடனம் செய்தார்கள் 1755-ல் கெசட்டீயர், மானம் பொழியுது நிலத்தை வளப்படுத்துகிறது,

RangaRakes tamilnavarasam.com

எருதுகள் உழுகின்றன. நாங்கள் நிலத்தை உழுது பயிர் செய்கிறவர்கள். எனவே அதன் பலனை அனுபவிக்க உரிமையுடையவர்களாக நாங்களிருக்க உனக்கு ஏன் வரி கட்ட வேண்டும் என்று வரிகேட்ட வெள்ளையனே வெளியே போடா ஊரைவிட்டு என்று முழக்கம் செய்து சுதந்திரக் கொடியுயர்த்தினர். லண்டனிலுள்ள இந்திய வரிப்பட இலாகாவில் உள்ள நூலொன்றில் பி. 27 எப.2 என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எஸ்.கே. சாமி எழுதிய கான்சாகிப் கம்மந்தான் நூலில் கண்டவாறு.

எனவே கள்ளர் நாட்டில் வரிகொடா இயக்கத்தை அடக்கும் வகைக்கு கலெக்டர் நடவடிக்கை துவக்கப் பட்டது. 1755ல் கேப்டன் ரூம்லி பிரமலைக்கள்ளர் நாட்டின் தலைமைப் பிரதேசமான ஆனையூருக்கு இடையே ஒரு பாதையை காடுகளை வெட்டி குதிரைப்படை நடமாடும் வகையில் அமைத்தான். நாட்டுமக்களை பகிரங்கமாக வெட்டி நடைபாதைகளில் பிணங்களையும் வெட்டுண்ட தலைகளை குவித்து பயங்கரமான சூழ்நிலையை உண்டு பண்ணினான். முக்கிய கிராமங்களை எல்லாம் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டு வீடுவாசல் இல்லாமல் நிர்க்கெதியாய் நின்றவர்களை ஆண் பெண் குழந்தைகள் உள்பட 3000 பேர்களை ஒரே நாளில் ரூம்லி கொன்றுகுவித்தான். இந்த விபரம் Madurai country by Nelson பக்கம் 8—10 இத்துடன் மதுரை கெஜட்டியரில் அடங்காத கள்ளர்கள் அழிக்கப்படுவார்கள் என்று மிரட்டினான். அதுகாலை மேலூர் நாட்டில் ஒரு புரட்சி உருவாகியது அதன்படி ரூம்லியை அவன் படையுடன் ஒழித்துக் கட்ட வேண்டுமென்பது தன்னரசு நாட்டார்கள் படை திரட்டினார்கள். இந்தச் சதியை ஒற்றர்கள் மூலம் முன் கூட்டியே தெரிந்து மேலூர் பிராந்தியத்தில் ராணுவத்தைக் கொண்டு போர் தொடங்கினான் இந்தப் போரில் 2000 கள்ளர் இறந்து போனதாகத் தெரிகிறது. தன்னைச் சாமி என்று பணிந்து கும்பிடும் வரைக்கும் சுட்டுத் தள்ளுவேன் என்று கொலை செய்யும் நடவடிக்கை எடுக்க ஒருவாறு எதிர்ப்புத்



தணிந்தது. இவனது இரத்தவெறி ஆட்டத்தையும் அதனால் நாட்டில் ஏற்பட்ட பதட்டநிலையும் கெஜட்டியரில் கண்டுள்ளது.

Madurai of Gazetter; பக்கம் 86:—

1764-ல் மகமது யூசுப்கான் தூக்கிலிடப்பட்டான் என்ற செய்தி கேட்ட பிறகு கள்ளர்கள் கம்பெனியார்களுக்கு அடங்கவில்லை. வசூலும் கொடுக்கவில்லை என கம்பெனி கள்ளர்களை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

மதுரைச் சீமைக் கள்ளர்களை ஒடுக்கி கம்பெனியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு வரி கொடுக்கும்படி பணிய வைப்பதற்கு கும்பினியார் ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். 1500 குதிரைப் படையினர்களும் போதுமான காலாட் படையினரும் கொண்ட ராணுவம், தளபதி ரூம்லியுடன் கள்ளர் நாட்டில் பிரவேசித்து பண்ணாத ஆக்கினை எல்லாம் பண்ணியது:

ரூம்லி கள்ளர் நாட்டில் செய்த கொடுமைகளை; இந்துஸ்தான் வரலாற்று ஆசிரியர் ''Orme'' வர்ணிக்கிறார். ரூமலி மதுரைச் சீமையில் செய்த படுகொலை ராணுவ ரீதியில் எந்தக் கட்டுப்பாட்டிற்கும் அடங்கியதல்ல. ஆசியாக் கண்டத்தில் நடந்த ஒரு விநோதமனித வேட்டை என்றுதான் இந்தக் காட்டுமிராண்டிச் செயலைச் சொல்ல வேண்டும். ஏனெனில் நிரபராதிகளை ஓட, ஓடவிட்டு வெருட்டிச் சுடப்பட்டு 3000 பேர்கள் மாண்டிருக்கின்றனர். மாண்டவர்கள் ஆண், பெண், குழந்தைகள்'' இவர்கள் அன்னியர்களுக்கு வரி கொடுப்பதில்லை என்று மறுத்ததுதான் காரணம்.

இந்த நிலையில் 1927 & 38 ஆம் ஆண்டுகளில் காந்தி மகான் வகுத்துக் கொடுத்த; வல்லபாய்ப்பட்டேல் தலைமை தாங்கி நடத்திய வரிகொடா இயக்கத்தையும் 1755ல் மதுரை நாட்டில் கள்ளர் தலைவர் வரிகொடா இயக்க வீரப் போர் செய்து 6000 பேர்கள் மாண்டும் நாடு பூராவும்

RangaRakes tamilnavarasam.com

அழிக்கப்பட்டிருப்பதையும் தமிழர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

வரிகொடா இயக்கத்தை ஒடுக்க ஒரே நாளில் 500 பேர்களை பனைமரத்தில் கட்டி தூக்கிலிட்டான். இது விஷயம் கான்சாகிப் சரித்திரத்தில் கண்டுள்ளது.

நமது பாரத விடுதலை வீரப்போராட்ட வரிசையில் பாரதத்தின் மாபெரும் தியாகம் 18—3—1919-ல் அமிர்தசரஸில் சாலியன்வாலாப் பாக்கில் நடந்த பஞ்சாப் படுகொலையாகும். அதில் இறந்த பேர்கள் 400 காயமடைந்த பேர்கள் 2000.

இப்படியிருக்க தேசீயம் கட்டுப்பாட்டில் இருந்து வேலை செய்த காலத்திற்கு முந்திச் சுத்தத் தேசீயவாதி சுயமான மன எழுச்சியால் எதிரியைக் கண்டதுமே எதுவும் யோசிக்காமல் எதிர்த்து மாண்டிருக்கின்ற விவரம் தெரியவருகிறது.

மதுரைக் கள்ளர்கள் தேசீயம் வரலாற்று வரிசையில் முக்கியமாக விடுதலை வரலாற்றில் யார் கவனத்திற்கும் வரவில்லை என்பதை எஸ் கே ஸாமி அவர்கள் தாம் வெளியிட்டுள்ள கான்சாகிப் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார்.

Ref : Casts & tribes by Thurston : Page 59:

## இரண்டு கள்ளர் சகோதரர்கள்
## ஈடு இணையற்ற வீரச் சுதந்திர உணர்வு

தமிழ்நாட்டின் அரசு கவிழ்ந்தபின் வேற்றரசு ஆட்சி முறையில் வெறுப்புக் கொண்டு தன்னரசு நாட்டில் தனிக் காட்டு ராஜாவாக வாழ்ந்துவரும் நாளில் நடந்த ஒரு முக்கிய சம்பவம் :—

திருச்சிராப்பள்ளி யுத்தத்தின்போது, ராபர்ட்கிளைவும் லாரன்ஸூம் திண்டுக்கல்லுக்குப் பக்கத்தில் ஓரிடத்தில் முகாமிட்டுக் கொண்டு திருச்சி முற்றுகைக்குப் போதிய ராணுவ கேந்திர அமைப்புகள் செய்து கொண்டிருந்த காலம்.



வெள்ளைக்காரர்கள் கூடாரத்தில் வாழ்ந்து வருவதையும், அவர்களின் வாகனங்களாகிய குதிரைகள் அங்கு இருப்பதையும் தக்க காவல் கட்டுப்பாடுகள் அமைந்திருப்பதையும் கண்டார்கள் இரண்டு கள்ளர் சகோதரர்கள் : அங்கு தங்கியவர்கள் யார் என்ன அதிகாரம் பொருந்தியவர்கள் என்ற விவரம் இவர்களுக்குத் தெரியாது. வெள்ளையன் என்பவன் நம் நாட்டுக்கு விரோதி நம்மை அடிமைப்படுத்த வந்து நாட்டில் அதிகாரம் செய்து வரும் கூட்டம் என்பது மட்டும் இவர்களுக்குத் தெரியும்.

அவ்வளவு தான் அண்ணனும் தம்பியுமாகக் கூடிப் பேசி ஒரு நள்ளிரவில் காவலர்களைக் கொன்று விட்டுக் கூடாரத்திற்குத் திரூட்டிய பின், இரண்டு குதிரைகளைக் கட்டவிழ்ந்து ஆளுக்கொன்றின்மேல் ஏறி மாயமாய் மறைந்தனர். திடீர் எனக் கூடாரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. குதிரைகள் காணப்படவில்லை காவலர்கள் மூவர் பிணமாயினர். கூடாரங்கள் பெரிதும் எரிந்தன.

ராபர்ட்கிளைவ் மூக்கில் விரல் வைக்கத்தான் செய்தான் கலெக்டர்கள் அதிகாரிகள் ராணுவத்தினர் முதல் யாவரும் எவ்வளவு நடவடிக்கை எடுத்தும் துப்புத் துலங்கவில்லை யுத்தகாலமேலீட்டால் அதிகம் கவனம் செலுத்தாமல் விட்டுவிடப்பட்டது. இன்றுவரை இந்த விவரம் நாட்டில் யாவராலும் பேசப்பட்டு வருகிறது. மதுரை ஜில்லா கெசட்டியரில் விவரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்கள் தேசப்பற்று, வெள்ளையர் வெறுப்பு, வஞ்சம் தீர்க்கும் நெஞ்சுறுதி — வாஞ்சி அய்யர் வரிசைக்கு கொண்டு செல்கிறது இரு சகோதரர்களையும் : முன்பின் ஆதரவு இன்றி என்ன நடக்குமென்று எண்ணுமல், யார் உதவியுமின்றி மரணவாய்க்குள் புகுந்து மாற்றானைத் தீர்த்துக் கட்டியது — பார் அய்யா — பார்.

RangaRakes
tamilnavarasam.com

## பிரான்சுக்காரன் கண்ட தன்னரசு நிலை:-

ஆற்காட்டு நவாபின் தமிழ்நாட்டு ஆளுகையின்போது வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயமெனக் கொண்டு, பிரிட்டிஷ்காரர்களும் —பிரான்ஸ்காரர்களும் ஆதிக்கப் போட்டியிலிறங்கி நாட்டைக்குட்டிச் சுவாரக்கிக் கொண்டிருந்த காலத்திலேற்பட்ட ஒரு ருசிகரமான சம்பவத்தை வரலாற்று வரிசையில் கவனிக்க வேண்டிய அவசியமேற்படுகிறது.

தமிழ்நாட்டில் பிரான்சு தேசத்தின் கவர்னராகவிருந்து வருகிறான் டூப்ளே. அவனுக்குத் துபாசியாகவிருந்தவன் ஆனந்த ரெங்கப்பபிள்ளை. துபாசிப்பிள்ளை தான் வேலை பார்த்த காலத்தில் நிகழ்ச்சிகள் யாவையும் டயரியில் எழுதி வைத்திருந்தான். அவைகள் யாவும் பிற்காலத்தில் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது. இப்புத்தகம் மிக முக்கியமாக விவரங்களை எல்லாம்கண்டறியப் பிற்காலத்தவர்களுக்கு வரலாறு கண்டுபிடிப்பதற்குப் பேருதவியாக விளங்கியது.

வால்யூம் 8 மே மாதம் 1736 — 61 பக்கம் 5ல் கண்டுள்ள விவரமாவது: 1651 மே மாதம் 24ந் தேதி ''மைசூர் தஞ்சாவூர் ராஜாக்களுக்கும், 72 பாளையக்காரர்களுக்கும் மதுரை பத்துநாட்டுக் கள்ளர்களின் தலைவர்கள் ஆறுபேர் களுக்கும் உடனே கடிதம் அனுப்பவும். இவர்கள் எல்லோரும் நம்முடைய கட்சியில் இறங்கி வேலை செய்து, பிரிட்டிஷ் காரர்களுக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்கவும், பிரான்ஸ் சைனியம் இப்போது வேலை ஆரம்பமாகப் போகிறது உஷார்'' மீறியவர்கள் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் — இது டூப்ளே ஆனந்த ரெங்கப்ப பிள்ளைக்கு எழுதிய கடிதம் — இதிலிருந்து 1736—61 ஆகிய கால அளவில் மக்கள் அரசியல் நிலை விளங்குகிறது. பிரிட்டிஷாருக்கு விரோதமாக சதிசெய்து நாட்டைக் கைப்பற்ற முயலும் பிரான்ஸ் கவர்னர், சுதேச உறவுக்கு கை நீட்டுகிறான் அதுசமயம் — அப்போது நாட்டு மன்னர்கள், பாளையக்



காரர்கள், தன்னரசின் தலைவர்கள் ஆகிய தேவர்கள் எல்லோரையும் வரிசைப்படுத்திக் காட்டுகிறான்— நட்புறவுகள் கொள்ள முயல்கிறான். எந்த மட்டத்தில் தன்னரசுத்தலைவர்களின் அரசியல் படைபலம் இருந்திருக்கக் கூடும் என்பது விளங்குகிறது.

## கள்ளர்கள் மராட்டியத் தளாதி முராரி ராவை கொலை செய்துவிட்டு மதுரையைக் கைப்பற்றல்

முராரி ராவ் ஒரு மராட்டியத் தளபதி: பெரிய யுத்த தந்திரியுமாவான், மராட்டிய அரசில் கவர்னராகவும் பதவி வகித்தவன். ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர் முகமதலி ஆகியவர்கள் படைத்தளபதியாகயிருந்து அதிக மான ஊதியம் பெற்றுக் கொண்டு யுத்தம் நடத்தும் பொறுப்புகள் ஏற்றவன். 1781-ல் மதுரை மீது ஹைதரலி படை எடுத்த போது, முராரி ராவ் நவாபின் படைத்தளபதியாக இருந்தான். அது சமயம் முராரி ராவ் மதுரைக் கள்ளர்களை ஒடுக்கி விடும் பொறுப்பை ஏற்று நவாபிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தான். இந்த ரகசியத் திட்டம் கள்ளர்களுக்குத் தெரியலானது. ஹைதரலியின் படை எடுப்பைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளர்கள் மதுரைக்குள் பாய்ந்து மராட்டியத் தளபதி முராரி ராவைக் கொலை செய்து விட்டார்கள். என்ற விவரம் Madurai Country என்னும் ஆங்கில நூல் இரண்டாம் பாகம் பக்கம் 46ல் விவரமாகக் கண்டிருக்கிறது. அதுகாலை ஹைதரலியின் படை எடுப்பாலும் கள்ளர்கள் கலகத்தாலும் நவாபின் ஆட்சி மதுரை நகரில் சிதறுண்டு போகவே 1784ஆம் ஆண்டுவரை மதுரை நகர் பரிபாலனம் கள்ளர்கள் ஆதிக்கத்தில் இருந்து வந்ததாக மதுரை வரலாறு விளக்குகிறது.

இந்த விவரம் மதுரை ஜில்லாக் கெஜட்டியர் W Francis இந்துஸ்தான் வரலாறு Robert Orme: ஆகியவைகளும் வலியுறுத்துகின்றன. மதுரை நகர் பரிபாலன

RangaRakes

tamilnavarasam.com

மும் அந்தக் காலங்களில் மன்னர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட ''கர்த்தாக்கள்'' என்பவர்களால் நிர்வாகம் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

கர்த்தாக்களுக்கு உதவியாகவே கள்ளர்கள் நிர்வாகம் காவல் முறைப்படி மக்கள் பாதுகாப்பையும் ஆலயங்களின் பாதுகாப்பையும் கட்டிக்காத்து வந்தமை தெரிகிறது. கர்த்தாக்கள் கள்ளர்களை ஆதரித்து வந்திருக்கிறார்கள். இதுவே பிற்காலத்தில் காவல் முறையில், பேர்கொண்டும் அடிப்படையாக விருத்தியாகி நடந்து வந்திருக்க வேண்டு மென்பதும் தெரிய வருகிறது. மதுரை மாநகர் பரிபாலனம் கிழக்கிந்தியக் கம்பெனியின் அட்டூழியக் காலங்களில், கொந்தளிப்புற்றிருந்தகாலை: கள்ளர்களின் கட்டுக்காவலில் இருந்து வந்த விபரத்தை: ஆர். சத்தியநாத அய்யர் எம்.ஏ.எல்.டி அவர்கள் தான் எழுதியுள்ள நாயக்கர்கள் வரலாறு என்னும் சீரிய நூலில் பக்கம் 304ல் எடுத்துக் காட்டுகிறார். கள்ளர்கள் கட்டுக்காவல் அதுகாலை மதுரையில் இல்லாதிருந்தால் மதுரை மக்களை ஹைதரலி சூறையாடிக் கொண்டு போயிருப்பான் எனத் தெரிய வருகிறது.

அத்துடன் பீட்டர் மார்ட்டின் பாதிரி, வீகோயின் பாதிரிக்கு எழுதிய 12, 11, 1760 தேதியகடிதத்தில் என்ன சொல்லுகிறார் என்றால், 'நான் காமய நாயக்கன் பட்டியிலிருந்து மதுரை நகருக்கு நடந்து பிரயாணம் செய்யும் போது கள்ளர்கள் நாடடின் வழியாகவே செல்ல வேண்டியதாயிற்று. அனேகர் கிறிஸ்துவர்களாயிருந்தமை தெரிய வந்தது; மதுரையில் முதன் முதல் தோன்றிய கிறிஸ்து சபையார்கள் கள்ளமில்லா நல்ல உள்ளம் படைத்த இந்நாட்டுக் கள்ளர் மக்களைத் தம்பால் ஆகக் கொண்டமை கண்டு பெருமிதமடைகிறேன். பின்னால் கள்ளர்கள் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். கள்ளர் சாதியினர் தங்களின் சுய பலத்தால் மதுரை நகரைக் கைப்பற்ற முடிந்தது மாத்திரமல்ல: மதுரை நகர பரிபாலனத்தைத் தங்கள் ஆதிக்கத்திலும் ஆட்சியிலும் கொஞ்ச காலம் வைத்திருந்தார்கள்''.



இந்த அபிப்ராயம் மதுரை ஜில்லாக் கெசட்டியரி பக்கம் 66ல் வலியுறுத்தப்படுகிறது ''கிழக்கிந்திய கம்பெ மதுரையிலிருந்த போது; மைசூர்த் தளபதி ஹைதர மதுரை மீது பாய்ந்தான். அதுகாலை எல்லா மதுரை மாந எல்லை எங்கும் கள்ளர்களின் கட்டுக்காவல் பலம் வாய்ந் விளங்கியபடியால், மதுரை மக்கள் பாதுகாக்க பட்டனர்''

நவாபின் ஆட்சியும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பை வலிமையும் உள்ள காலத்தில் நாட்டு மக்கள் பாதுகாப்பு குப் பங்கம் வந்தது என்று சொல்லாமலிருக்க முடியாது ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர் போன்ற வெ நாட்டவர்களும்; மைசூரார், மராட்டியர், ஆர்க்காட்டா வடநாட்டு முஸ்லீம்கள் எல்லோரும்; தமிழ் நாட்டையும் தமிழ் நாட்டுச் செல்வத்தையும் ஒரு வேட்டைப் பொ ளாகக் கருதிய காலமிது,

எனவே பலதரப்பட்டவர்களும் படை எடுப்பு செய்துகொண்டிருந்தார்கள் என்பது நாமறிந்த விவர மாகும்.

இந்த நிலையில் ஒரு சமயம் மதுரை பிராந்தியம் கள்ள களின் முழுப் பாதுகாப்பைப் பெற்றிருக்கிறது என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய வலிமை கள்ளர்களுக்கு அதுகாலை இருந்தது என்பது நமக்கு நன்கு தெரியும் என்றாலும் அறிஞர் சத்தியநாதன் தனது நூலில் பக்கம் 152-3ல் எடுத்துக் காட்டியதையும் கவனிப்போம் ''கள்ளர் வாலிபர்கள் பலர் ஒன்றாய் நின்றார்களேயானால், பலம் வாய்ந்த ஒரு ராணுவத்திற்கு நிகராய் விளங்குவர் படை எடுப்புக் காலங்களிலும் யுத்தக் காலங்களிலும்'' என்று கூறுகிறார்.

—16.

RangaRakes
tamilnavarasam.com

இத்தகைய மதிமன்னர்களின் வழிவந்த மாவீரர்கள்; தாங்கள் பிதுரார்ஜ்ஜிதமாய்ப் பெற்ற; தேகதிடம், வீர வைராக்கியம் ஆகியவைகளைப் பரந்த நோக்கத்தோடு நம் தந்தையர் வாழ்ந்த தாய்நாட்டுத் தலைநகர் மாமதுரையை; அன்னை மீனாம்பிகையின் ஆலயத்தையும் கட்டிக்காக்க உபயோகித்திருக்கிறார்கள் என்பதைச் சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. இதைக் கண்ட யார்தான் உள்ளம் பூரிப் படையாமலிருப்பர்?

# பாளையப்பட்டு யுத்தங்கள்

## மதுரையில் நாயக்க மன்னர்கள் ஆட்சி மறைவு:

சுந்தரபாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் ஏற் பட்ட அரசுரிமைப்போர், துருக்கர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றுவதற்கு எப்படி உதவியாகவிருந்ததோ; அதே போல, நாயக்கர் ஆட்சியில் கடைசியில் பட்ட மாண்ட ராணி மீனாக்ஷிக்கும், பங்காரு திருமலை நாயக்கனுக்கும் ஏற் பட்ட குடும்பச் சண்டை, மதுரையை ஆற்காட்டு நவாப்பு கைப்பற்றுவதற்குக் காரணமாக ஆயிற்று.

1736-ல் தனது கணவன் விஜயரங்க சொக்கநாதன் வாரிசின்றி மரணமடையவே, பட்டத்தரசிமீனாட்சி, தானே பட்டமேற்று நாட்டை ஆளத் தொடங்கினாள். தனக்கு வாரீசாகப் பங்காரு திருமலை நாயக்கன் மகன் விஜயகுமாரனைத் தத்துப் புத்திரனாகவும் எடுத்துக் கொண்டாள். ராணி மீனாட்சிக்கு நாட்டை ஆளும் திறமையோ அறிவோ, ஆதரவோ கிடையாது. நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இராணி மீனாட்சியின் தத்துப் புத்திரனின் தகப்பனார் பங் காரு திருமலைநாயக்கன் இராணி மீனாட்சியைக் கொலை பண் ணவும் திட்டமிட்டான்.

அது காலை தனது எதிரியை அடக்கித் தரவேண்டு மென்று மீனாடசி ஆற்காட்டு நாவப்பிடம் உடன்பாடுகள் செய்தாள். நவாப்பு சந்தாசாகிப் மீனாட்சிக்கு உதவுவது போல் பாசாங்குகள் செய்து, தந்திரமாக மதுரைக்குள் தனது படையைப் பெருக்கிக் கொண்டு முதலில் பங்காரு

RangaRakes tamilnavarasam.com

திருமலை நாயக்கனைக் கொன்று விட்டான். அதன் பிறகு தந்திரமாக மீனாட்சியையும் சிறையிலடைந்துக்கொண்டு, வஞ்சிக்க ஆரம்பித்தான். தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க மாட்டாமல், தனது அரசையும் இழந்தோமே என்ற ஏக்கத்தால் மீனாட்சி விஷ மருந்தி மாண்டாள். மதுரை ஆட்சி ஆர்க்காட்டு நவாப்பு சந்தாசாகிப்பின் வசமாகிற்று. இதைக் கண்ட மராட்டியர் மதுரை மேல் படை எடுத்து சந்தாசாகிப்பை சிறையிலடைத்தனர்.

நிலைமை இப்படி இருக்க 1748-ல் ஹைதராபாத் நிஜாம் கர்நாடகத்தில் பிரவேசித்து ஆட்சியைக் கைப்பற்றி, ஆன்வரிடினை ஆற்காட்டுக்கு நவாப்பாக ஆக்கினன். அன்வரிடின் இறந்து போகவே முகமதலி ஆர்க்காட்டு நவாப்பாயினன். 1748-ல் சந்தாசாகிப் மராட்டியர் சிறையிலிருந்தும் விடுதலையாகி ஆர்க்காட்டு நவாப்பின் உரிமையைக் கொண்டாடவே அவனைப் பிரஞ்சுக்காரர்கள் ஆதரித்து, அவனுக்கு வேண்டிய உதவிகள் புரிந்தனர். இதனால் யுத்தமுண்டது. யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் முகமதலியையும், பிரஞ்சுக்காரர்கள் சந்தாசாகிபையும் ஆதரித்து நின்றனர் எங்கும் குழப்பம் மூண்டது. தமிழகமெங்கும் கொந்தளிப்பாகியது.

1751-ல் முகமதலி தன் சகோதரன் அப்துல்ரகிமான் தலைமையில் ஒரு சேனையைத் திருநெல்வேலி நாட்டிற்கு அனுப்பித் தனது ராஜ்யப் பொறுப்புகளை ஸ்திரப்படுத்தத் திட்டமிட்டான். சந்தாசாகிப் அந்தச் சைனியத்தைத் தன் வசப்படுத்தப் போட்ட திட்டங்கள் நிறைவேறவில்லை.

சந்தாசாகிபின் தளகர்த்தன் ஆலம்கான், திருச்சிக்குத் தன் வசப்படுத்தப் போட்ட திட்டங்கள் நிறைவேறவில்லை. சந்தாசாகிபின் தளகர்த்தன் ஆலம்கான், திருச்சிக்குத் திரும்பிச் செல்லும் போது, மதுரையில் தம்சைனியங்களை மியாணு, முதைதீன் மியா, நபிக்கான் கட்டாக் ஆகியவர்களிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்றான். இவர்கள் மூவருமே பின்னால் நவாப்புக்கு விரோதமாகப் புலித்தேவரிடம் போய் சேர்ந்து விட்டார்கள்,



இந்த நிலையில் மகமதலி மதுரை நாட்டின் அதிகார வரம்பை ஸ்திரப்படுத்திக் கொள்ள வெள்ளையர்களின் தயவை நாடி ஒரு ஐரோப்பிய சைனியத்தின் உதவியை அடைந்து கொண்டான். மதுரை அரசின் பாளையங்கள் தனக்குக் கட்டுப்படவேண்டும் எனவும் கப்பம் கட்ட வேண்டும் எனவும் நிர்ப்பந்தம் செய்வதான ஒரு பிரகடனம் விட்டான்:

1755-ல் திருநெல்வேலிச் சீமைக்கு ஒரு பட்டாளத்தை அனுப்பி நாட்டை அடக்கிக் கப்பம் வசூலிக்க ஒரு பெருத்த படை எடுப்புக்கு ஏற்பாடாகிற்று. நவாபு தனது சகோதரன் மாபூஸ்கான் வசம் 600 பேர்கள் கொண்ட ஐரோப்பியர் சேனை ஒன்றும் 2000 பேர்கள் கொண்ட சுதேசிகள் சேனை ஒன்றும் அனுப்பினான். ஐரோப்பிய சேனைக்குக் (Cornol Heron) தளகர்த்தனாகவும், சுதேசிச் சேனைக்கு முகமது யூசுப் கான் தளகர்த்தனாகவும் நியமிக்கப் பட்டனர். 1756-ல் யூசுப்கானுக்கும், Captain Calliab க்கும் விசேச அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. அதன்படி முகமது யூசுப்கானின் நிர்வாகக் காரியங்களை ஒழுங்கு செய்யவும் கப்பம் வசூலிக்கவும் செய்வார்கள்

வெள்ளைக்காரர்களின் வழியில் கம்பெனியார்களின் ஊழியன் என்ற முறையில் ஐரோப்பிய சைனியத்தை நடத்திக் கொண்டு தமிழ்நாட்டில் பிரவேசித்த நபர்கள் ஆட்சியின் கடைசிக் காலத்தில் சீர்கெட்டுப்போய் நின்ற நிலையில் இந்த பாளையங்களை ராணுவ நடவடிக்கை எடுத்து ஒடுக்கி நவாப்புக்கு உதவி செய்கிறோம் என்ற காரணம் காட்டிக் கத்திமுனையிலும் துப்பாக்கிமுனையிலும் கப்பம் வசூலிக்க முற்பட்டான் ஹெரான். இவன் தான் தமிழ் நாட்டில் காலடி வைத்த முதல் வெள்ளையர் தளபதி. ஹெரான் எடுத்த எடுப்பிலேயே மதுரையைப் பிடித்துக் கொண்டான். சந்தாசாகிபின் ராஜப்பிரதிநிதிகளில்மியாணு நக்குத்திரும், முதைதீன் மியா, நபிக்கான் கட்டாக், ஆகியவர்கள் புலித்தேவரிடம் சென்று விட்டார்கள்.

RangaRakes
tamilnavarasam.com

அதற்குமேல் ஹெரன்படை இராமநாதபுரத்தை நோக்கிப் புறப்பட்டது. அங்கு சண்டை எதுவும் நடவாமலே உடன்பாடு ஏற்பட்டது அதன்படி கடற்கரையில் நாவபு துறைமுக வசதிகள் செய்து கொள்ளவும் இரண்டாவதாகப் பாளையக்காரர்கள் சண்டையில், சேதுபதி படைத் துணை செய்வதுமாகும். அதன் மேல் தென் கிழக்குப் பாளையங்கள் ஐந்தையும் அடக்கிக் கப்பம் வாங்கிக் கொண்டு, ஆவுடையாபுரம் சென்றபோது அங்கிருந்த பாளையக்காரன் பூலித்தேவன் கம்பெனிப் பட்டாளத்தைக் கண்டு பணியவில்லை. கப்பம் கட்டச் சம்மதிக்கவில்லை. நவாபின்கும்பினிப் படை தோல்வியுடன் மதுரை திரும்ப வேண்டியதாயிற்று.

பூலித்தேவன், தென்நாட்டுப் பாளையக்காரர்களுள் தலைசிறந்தவன், மாவீரன், இவனுக்குப் பனையூர், வாசுதேவநல்லூர், நெற்கட்டாஞ்செவல், ஆவுடையாபுரம் ஆகியவிடங்களில் கோட்டைகளிருந்தன. அத்துடன் (1) நத்தம்பட்டி [2] கொல்லங்கொண்டான் (3) சேத்தூர் (4) சிவகிரி (5) பாஞ்சாலங்குறிச்சி ஆகிய பாளையக்காரர்கள் பூலித்தேவனின் பக்கமிருந்தனர். பிரஞ்சுக்காரர்களின் கூட்டாளியாகிய சந்தாசாகிபும் அவனுடைய தளகர்த்தர்களாகிய; ஆலம்கான், மியாணு, முகையதீன்மியா, நபிக்கான் கட்டாக் ஆகிய எல்லோரும் மாவீரன் பூலித்தேவனின் ஆதரவாளர்களாக விளங்கினர்.

தமிழ் நாட்டில் அரசுரிமைப் பாத்தியம் கோரும் அன்னியர்களை உயிருடன் பாரத மண்ணில் மிதிக்கவிடேன். அன்னியர்க்கு தமிழ் நாட்டில் வரி வசூல் செய்யும் உரிமையை எந்தத் தமிழனும் வழங்கவில்லை என்று நவாபுக்கும் கம்பெனியாருக்கும் தெளிவாய் தெரிவித்தான். அதுகாலை பூலித்தேவனை ஆதரித்து நின்றபாளையங்கள் ஒவ்வொன்றிலும் 10000 முதல் 30000 வரை படைபலம் தக்க ஆயுதங்களுடனிருந்தது. அன்னியர் உதவியுமிருந்தது. நவாபை எதிர்த்து வரிகொடாப் பிரகடனம் செய்த பூலித்தேவனைப் பாளையங்கள் பெரிதும் ஆதரித்தன. மேலும் வரிகொடாயியக்கத்தை



கடைபிடிக்க வேண்டுமென்று, மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டைப் பிரதேசங்களின் மன்னர்கள், தன்னரசுத் தலைவர்கள் பாளையக்காரர்கள் ஆகியவர்களுக்கு ஒற்றர்கள் மூலம் ஓலையனுப்பி நவாப்பையும் கம்பெனிப் படையையும் எதிர்க்கவும் கப்பமோ தீர்வையோ, செலுத்தக் கூடாது என்று தெரிவிக்கலாகியது. தென் தமிழகம் வரிகொடா இயக்கத்தைப் பூலித்தேவன் தலைமையில் நடத்தியது. பாளையக்காரர்கள் படைபலத்தைப் பெருக்கினர். நவாப்பு ஆயுதபலம் பெருக்கவும் சுதேசிப் படையை அதிகரிக்கவுமானுன். வரி கேட்டுப் போன இடங்களில் எல்லாம் கம்பெனிப் படைக்கும் பாளையங்களுக்கும் யுத்தமே மூண்டது.

1756 – 1759-ஆம் ஆண்டு ஆகிய நான்கு ஆண்டுகளை தென் நாட்டு மறவர்களின் சுதந்திரப் போர் என வரலாறு விளக்குகிறது. நவாப்பு கம்பெனிப் படையைக் கட்டவிழ்த்து விட்டுப் பாளையங்களுக்குப் படை எடுத்துப் போனபோது நடந்த யுத்தங்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

1 கம்பெனிப்படை மதுரையில் வைத்து ஆலம்கானைத் தாக்கியது. இதில் ஆலம்கான் ஹெரனிடம் சரணடைந்தான். கம்பெனியார்கள் மதுரையைக் கைவசமாக்கினர்.

2 நெற்கட்டும் செவல்போர். கம்பெனிப்படை கோட்டையை முற்றுகை போட்டுப் பீரங்கித் தாக்குதல் நடத்தியது. பூலித்தேவன் படைகள் கடுமையாகக் கம்பெனிப் படையைத் தாக்கிற்று. பாளையக்காரர் கப்பம் கட்ட மறுத்து விடவே மேற்கொண்டு தாக்குதலை நீடிக்காமல் கம்பெனிப்படை பின்வாங்கியது.

3 களக்காட்டில், பூலித்தேவன் கோட்டையை மாவஸ்கான் 2500 குதிரைப் படையோடும் 1000 காலால் படையோடும் தாக்கித் தோல்வியடைதல்; அத்துடன் மாவஸ்கானுக்கு உதவியாகச் சென்ற கும்பினிப் பட்டாளமும் பெருத்த சேதத்துடன் பின்வாங்கி ஓடுதல்.

4 களக்காட்டுத் தோல்விக்குப் பிறகும் தனது நெற்கட்டும் செவல் முற்றுகையை மாவஸ்கான் கைவிடாமல் தாக்கிக் கொண்டிருந்தான். முற்றுகை தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. சிப்பாய்களுக்குத் தீனியும் சம்பளமும் கொடுக்க முடியாத நிலையில் மாவஸ்கான் தோல்வியுடன் திருநெல்வேலி திரும்பவேண்டியதேற்பட்டது.

5 பூலித்தேவன், நபிக்கான் கட்டாக், முடுமியா என்பவர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு; ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையைத் தாக்கி அங்கிருந்த கம்பெனிப் படையைத் துரத்தியடித்து விட்டு தங்கள் படை பலத்தை ஸ்ரீவில்லிபுத்தூரில் வைத்தார்கள். இந்த வெற்றி பூலித்தேவன் தன்னுடைய மதுரை நாட்டு நேசப் பாளையக்காரர்கள் தன்னுடன் லகுவில் தொடர்பு கொள்ள உதவியது.

6 கங்கை கொண்டான் என்ற இடத்தில் கும்பினியார்களுக்கும் ஐக்கிய பாளையப்பட்டுச் சேனைக்கும் சண்டை நடந்தது பூலித்தேவர்படையில் முடுமியா வெட்டுண்டு மாண்டான். பாளையப்படைகள் முறியடிக்கப்படவே பூலித்தேவன் தோல்வியோடு திருநெல்வேலிக்குத் திரும்பலாயிற்று.

7 திருநெல்வேலியில் படைபலம் குன்றியிருப்பதையும் சைனியங்களின் பராமரிப்புக்குப் பணம் போதாமல் இருப்பதையும் சரிசெய்வதற்குத் தக்க ஏற்பாடுகளையும் வசதியையும் செய்து கொண்டு மதுரையில் இருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டான் யூசுப்கான். வரும் வழியில் ஸ்ரீவில்லிபுத்தூரைத் தாக்கி அங்கிருந்து பாளையக்காரர்களின் ஐக்கிய சைனியத்தைத் துரத்தி விட்டுக் கோட்டையில் கம்பெனிப் படையை வைத்தான்.

8 அடுத்தபடியாக யூசுப்கான் கொல்லங்கொண்டானைத் தாக்கிப் பிடித்துக் கொண்டு கொல்லங்கொண்டான் கோட்டையையும் தனது ஆதிக்கத்திற்குள்ளாக்கினான்.



9 கட்டப்பொம்மன் நாட்டில் காடுகளில் ஒளிந்திருந்து திருநெல்வேலிச் சீமையில் புகுந்து கலகப்படைகள் கொள்ளையடித்து வருகிறதென்ற விபரம் யூசுப்கானுக்குத் தெரிய வந்தது. எனவே தன் படையை நடத்திச் சென்று கெங்காதரம் என்ற ஊரில் கலகப்படையைச் சந்தித்துத் தோற்கடித்து கொள்ளைப் பொருள்களையும் மீட்டினான். நாட்டு மக்களை நேரில் போய் கிராமங்களில் சந்தித்துக் கவலையற்று வாழுங்கள் கொள்ளையர்களை அடக்கியாகி விட்டது எனப் பிரகடனப்படுத்தினான்.

10 மாவஸ்கான் தனது படைபலத்துடன் 1757-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நெற்கட்டும் செவலுக்குப் பூலித்தேவனிடம் வந்து சேர்ந்தான். இரு பெரும் தளபதிகளிடமும் சேர்ந்த படைபலம்; காலாட்படை 10,000 பகர்துல்லாவின் கீழ் 1000 குதிரைப்படையுமிருந்தன. இந்தச் சேனை திருநெல்வேலியைக் கொள்ளையடித்துக் கொண்டு பாஞ்சாலங்குறிச்சி வந்து கட்டப்பொம்மன் தங்களுடன் சேரும்படி கட்டாயப்படுத்தினர். கட்டப்பொம்மன் தங்களுடன் சேர்ந்து கொள்ளவே, எட்டயபுரத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு நெற்கட்டுஞ் செவல் போய்ச் சேர்ந்தனர். இப்படியாக எடுத்த நடவடிக்கைகள் அங்கு நிலையங்கொண்டிருந்த கம்பெனிப் பட்டாளத்தை அடக்குவதற்காகும்.

11 பாளையக்காரர்கள் சைனியம் ஆழ்வார்குறிச்சியை முற்றுகை போட்டுப் பிடித்துக் கொண்டது. அந்த கோட்டையைப் பாதுகாத்து வந்தவன் கும்பினிக் குத்தகைக்காரன் மருமகன் அழகப்பமுதலியார் எனத் தெரிய வந்தது. உடனே பூலித்தேவன் முதலியாரைக் கைது செய்து நெற்கட்டுஞ் செவலுக்குக் கொண்டு போகும்படியாக ஏற்பாடவே அதன்படி சிப்பாய்கள் அவனை சிறையிலடைத்தார்கள்.

12 யூசுப்கான் ஆழ்வார் குறிச்சியைத் திரும்பிப் பிடித்தல்:—

13 1759-ல் பூலித்தேவனும் மாவஸ்கானும் திருநெல்வேலியைப் பிடித்துக் கொள்ளுதல்

RangaRakes tamilnavarasam.com

14 யூசுப்கான் 2-7-1759-ல் கொல்லங்கொண்டானைப் பிடித்துக் கொண்டு எட்டயபுரத்தையும் பாஞ்சாலங்குரிச்சியையும் கைவசப்படுத்துதல்.

15 யூசுப்கானின் ஊத்துமலை சுரண்டை வெற்றிகள்.

16 யூசுப்கான் 30-9-1759-ல் திருவாங்கூர் ராஜாவோடு உடன்படிக்கை செய்து கொள்ளுதல்.

17 யூசுப்கான் 1000 சேனையோடு வடகரையைத் தாக்கிப் பிடித்துக் கொள்ளுதல்.

18 20-11-1759-ல் பாளையக்காரர் சேனை திருவாங்கூர் சேனையோடு யுத்தம் செய்து வெற்றி பெறுதல்.

19 யூசுப்கான் பூலித்தேவனின் வாசுதேவ நல்லூர் கோட்டையைத் தாக்கி ஏமாறுதல்.

20 பாளையக்காரர்களில் சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு யூசுப்கான் மறுபடியும் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கி வெற்றியடைதல்.

இப்படியாகக் கடந்த நான்கு வருடங்களில் முதற்பகுதியில் நடந்த யுத்தங்களில் நாடு அமைதியில்லாது போய் விட்டது. மக்களின் வாழ்க்கைப் போக்கே மாற்றத்திற்குள்ளாகியது இவ்வாறு நிகழ்ந்த யுத்தங்களின் ஒரு பகுதியை மட்டும் விவரமாகக் காண்போம்.

## பூலித்தேவர் கோட்டையைப் பிடிக்க மகமது யூசுப்கான் முயற்சி

வாசுதேவ நல்லூர்க்கோட்டை மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ளது. தென்திசையிலும் வடதிசையிலும் அடர்ந்த வனங்கள் சூழ்ந்திருந்தன கிழக்கும் வடக்கும் சமவெளி. அவ்விடத்தில் பயிர்கள் செழிப்பாக வளரும். மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து வாசுதேவ நல்லூர் மூன்று மைல் தூரம் வரை அடர்ந்த காடுகள். இக்காடுகள் கோட்டையின் மேல் பக்கத்திலும் தென்பக்கத்திலும் 1300 கெஜத் தூரத்திலும் வடபக்கத்தில் இன்னும் அதிகத் தூரத்திலுமிருந்தன. கோட்டையிலிருந்து 40 கஜத் தூரத்தில் ஒரு வளமான பேட்டை இருந்தது. அதில் ஆயிரம் பேர் வசித்தனர். பேட்டையையும் கோட்டையையும் அடர்ந்த முள்வேலி சுற்றியிருந்தது. அக்கோட்டையின் விஸ்தீரணம் 650X300 கஜம் இருக்கும். அது களிமண்ணால் கட்டப்பட்டது. செங்கல்லைப்போல் கடினமாயிருக்கும்.



நான்கு பெரிய சதுர கோபுரங்கள் நான்கு முனைகளிலுமிருந்தன. வேறு சிறு கோபுரங்களும் சுற்றிலுமிருந்தன. ஒவ்வொரு கோபுரமும் கோட்டைச் சுவருக்கு வெளியே தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தன. அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் சின்னச் சின்ன சுவர்களிலிருந்தன. அக்கோபுரங்களின் மேலிருந்து கோட்டையின் உட்பாகத்தையும் காவல் செய்யலாம். கோபுரத்திற்கு வழி சரிவான தாகவும் இரண்டடி அகலமுள்ளதாகவுமிருந்தது. கைபிடி சுவரில் அமைந்திருந்த ஒரு சிறு வாசல் வழியாகத்தான் கோபுரத்தினுள் நுழையலாம். கோட்டைச் சுவரின் உட்பக்கம் சரிவாகவிருந்தது. இது சண்டைக் காலத்தில் கோட்டையிலுள்ளவர்கள், கோட்டைச் சுவரிலேறி எதிரிகளை எதிர்ப்பதற்கு மிகவும் இலகுவாகவிருக்கும்.

கோபுரங்களின் கைப்பிடிச் சுவர்களில் சிறு ஆயுதப் பிரயோகங்கள் செய்ய வட்டத் துவாரங்களிடப்பட்டிருந்தன. வாசுதேவ நல்லூரைப் பிடிக்கும்படி வந்த சேனை மிகவும் பெரியதானதால் கோட்டையைக் காப்பதற்கு ஆயிரக்கணக்கான தேவரின் படைவீரர்கள் உதவிக்கு வந்தார்கள். கோட்டையைப் பாதுகாப்பதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட 800 பேரைத்தவிர மற்றவர்களெல்லோரும் காட்டிற்குள்ளிருந்து புறப்பட்டு வந்து சண்டை செய்வார்கள். இப்படியாக இருபது நாட்களாகச் சண்டை நடந்து கொண்டிருந்தது. முகம்மது யூசுப்கான் கொண்டு வந்த பீரங்கிகளில் ஒன்று தான் 18 பவுண்டர் பிரங்கி. மற்றவை

RangaRakes
tamilnavarasam.com

எல்லாம் 6 பவுண்டர்களும் அதற்குக் கீழ்பட்டவைகளுமா யிருந்தன. 18 பவுண்டர் பீரங்கி சுட ஆரம்பித்து மறு நாளிலே வெடித்து விட்டது எல்லா மருந்துகளும் காலியாகி விட்டன. கோபுரத்தின் கைபிடி சுவரில் ஒரு பக்கம் சுடப் பட்டு இடிந்து விழுந்து விட்டது. மறுநாளில் கோட்டை யைத் தாக்கவேண்டுமென்று யூசுப்கான் தீர்மானித்தான். தெரிந்தெடுக்கப்பட்ட 3000 பேரைப் பூலித்தேவன் நெற் கட்டுஞ் செவலிலிருந்து கொண்டு வந்திருந்தான். காட்டிற் குள்ளிருந்த சேனைகளும் இவர்களோடு சேர்ந்து; யூசுப் கானின் சேனைக்குள் புகுந்து காவல் படைகளை வெட்டி நாசம் செய்தார்கள். யூசுப்கான் ஒரு பெரிய சேனையை மறுபடியுமனுப்பினான். ஆனால் கோட்டைக்குள்ளிருந்தவர் கள் வெளியே சங்குநாதங்களால் பூலித்தேவனின் வெற் றியை அறிந்து அதிக உற்சாகம் கொண்டு தைரியமாகக் கோட்டையைக் காத்தார்கள். முகமது யூசுப்கான் தான் கொண்டு வந்திருந்த மருந்து முதலியவைகளெல்லாம் செல வாகி விட்டமையால் இனித் தாக்குவது தவறு என்று பின் வாங்கினான். அவன் சேனைகளிலும் திருவாங்கூர் சேனை களிலும் 200 பேர்கள் மாண்டனர். பூலித்தேவர் படைகளி லும் அனேகர் மாண்டனர்.

மறுநாள் செங்கோட்டை வழியாய்த் திருவாங்கூர்ச் சேனைகளை அனுப்பிவிட்டு தனது சேனையோடும் தொண்டை மான் பெரியமறவர் சின்னமறவர் சேனைகளோடும் திருநெல் வேலிக்கு யூசுப்கான் திரும்பி விட்டான். வாசுதேவநல்லூரி லிருந்து பின்வாங்கியதன் பிறகு பாளையக்காரரின் பலமான கோட்டைகளைப் பிடிக்க யூசுப்கான் சக்தியற்றிருந்தான். மாவஸ்கான் நெற்கட்டுஞ்செவலை விட்டுப் பிரிந்து ஆற்காடு போய் தன்னுடைய சகோதரனாகிய நவாப் முகமதலியு டன் சமாதானமாகி விட்டான். அதனால் பூலித்தேவன் நவாப்பின் அதிகாரத்தை எதிர்ப்பதை நிறுத்திக் கொண் டான்.

1759-ஆம் ஆண்டு யூசுப்கான் பல தலைவர்களையும் 2000திற்கும் மேற்பட்ட பாளையக்காரர்களின் சேனைகளையும்



தன்னுடைய சைனியங்களோடு சேர்த்துக் கொண்டு எண் ணிக்கையில் அதிகமான பீரங்கிகளையும், முக்கியமான 18 பவுண்டர் பீரங்கிகளையும் தயார்ச் செய்து கொண்டு மும் முரமான தாக்குதலை ஆரம்பித்து வாசுதேவ நல்லூர் கோட் டையைப் பிடிக்கச் செய்த முயற்சியில் தோல்வியடைந்து வெட்கத்தோடு திரும்பினான்.

## நெற்கட்டுஞ்செவல் முற்றுகையைப் பூலித்தேவர் முறியடித்தல்

வாசுதேவ நல்லூரில் தனக்கேற்பட்ட தோல்விக்கு வஞ் சம் தீர்க்க வேண்டி, யூசுப்கான் 1760—ஆம் ஆண்டு டிசம் பர் மாதம், 12—ந்தேதி பூலித்தேவனை அவரது நெற்கட்டுஞ் செவல் கோட்டையில் பெரும்படையுடன் முற்றுகை போட் டான். கோட்டைக்கு அப்பால் மூன்று மைல் தொலைவில் மலையடிவாரத்தில் கான்சாகிப் படை முகாமை அமைத்துக் கொண்டு போர் தொடங்கினான். இந்தச் சம்பவத்தை 'இராபர்ட்டுஓர்ம்'' தனது இந்துஸ்தான் வரலாற்றில் கூறு கிறார். கானின் வசம் ஏராளமான கூலிப் படைகளும், குதிரைப் படையும், பீரங்கிப் படையுமிருந்தன. அச்சங் கோவிலிலிருந்தும், தூத்துக்குடியிலிருந்தும் பேய்வாய்ப் பீரங்கியினையும் கொண்டு வந்திருந்தான்.

இந்த முற்றுகை 20—12—1760 வரை நீடித்தது. கள் ளர், மறவர் அகமுடையார் கூடிய படையின் தலைமையை ஏற்றுக் கொண்டு பூலித்தேவன் குதிரைப்படை எதிரிகளின் முற்றுகையைப் பிளந்து கொண்டு நாலா பக்கங்களிலும் ஊடுருவிப் பாய்ந்ததும் படையினர்களின் நீண்ட ஈட்டிகளும் சுருள் வாள்களும் பகைவர்கள் மேல் பாய்ந்தன. திட்ட மிட்டபடி கானின் பாசறை முகாமுக்கும் ஆயுதக்கிடங்கிற் கும் தீயிடப்பட்டது. ரோசமும் வீராவேசமுங் கொண்ட தேவர் சேனை வைராக்கியத்தோடு தாக்கி; முன்னேறிப் பாயவே கூலிப்படைகள் வெகுண்டோடின.

வெடிமருந்துகள் நாசமாக்கப்பட்டதையும் படைகள் மிரண்டோடுவதையும் கண்ட யூசுப்கான் தோல்விமேல் தோல்வி கண்டு பின் வாங்கினான். தேவர் படையினர் 100 பேர்கள் மாண்டனர். கானின் படையினர் 10 பேர்கள் மாண்டனர். இருதரப்புக் குதிரைகள் அநேகம் குற்றுயிராயின.

Ref page 73: வீரத்தலைவர் பூலித்தேவர் By ந.சஞ்சீவி M.A. இராபர்ட்டுஓர்ம் நூலில்--வரலாறு—பாகம்1. XXXVII Lt Col. Heron தென் பாண்டி நாட்டில் படை எடுத்து வந்து; அநேக எதிர்ப்புக்காட்டி நின்ற பாளையக்காரர்களை அடக்கிய மமதையோடு மாபெரும் படையுடன் நெற்கட்டும் செவலில் வீரத்தலைவர் பூலித்தேவரின் கோட்டையை முற்றுகை போட்டும் படுதோல்வியடைந்து: புறங்காட்டி ஓடினான். இந்த மாவீரன் பூலித்தேவரின் போர்த்திறனைக் கண்டு Heron ஏங்கித் தலைகுனிந்து நிற்க வேண்டியதேற்பட்டது.

பூலித்தேவன் பெயர் சொன்னாலே வெள்ளைக் கும்பினிக்குக் குலை நடுங்கும். அவர்கள் ஆட்சிக் காலத்தில் நெற்கட்டுஞ்செவல் என்ற அவர் ஊர்ப்பெயரைச் சொல்லவும் அஞ்சினர். அதனால் அவருடைய ஊர்ப்பெயரை ‘ஆவுடையாபுரம்’ என்று ரிக்கார்டுகளில் மாற்றி விட்டார்கள்: Ref. திருநெல்வேலி கெசட்டியர் பக்கம் 70, 71, 72 & 412.

17, 18-ஆம் நூற்றாண்டுகளில் வடகரைப் பாளையத்தை ஆண்ட சின்னப்பட்டம் இராஜகோபால்தேவர் (தம்பி) கி.பி. 1660—1721, இவர்கள் திரு உருவச்சிலைகள் ‘ஐந்து தேர் ஓடும் அரியதலம் குற்றாலம்’ என்று உலகு போற்றும் திருக்குற்றாலத்தில், கண்ணுதற் கடவுள் திருமுன்கற்றூணில் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. இச்சிலைகளின் மேலே பொறிக்கப்பட்டுள்ள வாசகம் வருமாறு: ‘துவஜஸ்தம்பத்தைச் சுற்றியுள்ள மண்டபமும் (கட்டி) சித்திரை சபையில் செப்பேடு வேய்ந்தும், முகப்பு மண்டபம் கட்டியும், தெப்பக்குளம் வெட்டியும், ஐந்து தேர்கள் செய்து கொடுத்தும் திருப்பணி ஆற்றிய வடகரை ஆதிக்கம்



(1) இராசகோபாலத்தேவர் (2) பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத்தேவர்.

இத்தகைய பெருமக்களின் கால் வழியில் தோன்றியவரே பூலித்தேவருக்குப் போராட்ட காலத்தில் ஆருயிர்த் தோழராய் விளங்கினார். அதே தோழர் ஒரு சமயம் தேவரிடம் சரணடைய நேர்ந்தபோது, பகைமையை நீக்கி தோழமைக்கு முதலிடங் கொடுத்து அவரைக் கண்ணே போலகாப்பாற்றிய வீரவுணர்வை வியந்து தேவர் வடகரையார் பால் காட்டிய அன்பிற்கும் மதிப்புக்கும் உறவு காட்டிய விதத்தை வியந்துள்ளார் ஓர்ம். என்னே தேவர் பெருந்தகை.

தென் திசைப் பாளையக்காரர்களின் சுதந்திரப் போர்களையும் அதில் முக்கிய பங்கொடுத்து வரிகொடா இயக்கத்தைத் தோற்றுவித்து பெரும் அளவில் வீரத்தியாகங்சள் பல செய்த மாவீர மறவன் பூலித்தேவன் நாவாப்பையும் அவன் கூலிப்படைகளையும் கும்பினிப் படைகளையும் களத்தில் வென்று கதறடித்ததையும் கண்டோம். பூலித்தேவனின் ஆதியைப்பற்றி விபரங்கள் ஏதும் சரியாய்ப் புலப்படவில்லை. அதேபோல அந்த மாவீரன் பற்றிய முடிவு பற்றியும் தெரியவில்லை. வாழ்நாள் பூராவும் தோல்வியே கண்டறியாது: வெள்ளையர்கள் பலராலும்; எல்லையற்ற போர் வன்மைத் திறம் படைத்த தீரத் தளபதி வீரமறவன் என்று புகழ் வாய்ந்த தீரன் தனது ஆட்சிக் காலங்களில்; சங்கரநயினார் கோவிலில் குடி கொண்ட ''கூழைப்பிரானுக்கும், ஆவுடை நாயகிக்கும் கப்பம் கட்டியதைத் தவிர இவரிடம் கப்பம் வாங்கியது யாருமில்லை எனத்தெரிகிறது.

ஆனால் 1761-ஆம் வருஷம் முதல் 1764-ஆம் வருஷம் வரை நடத்தின ஜமாபந்தியானது யூசுப்கான் காலத்தில் அவனது நிர்வாகம் சம்மந்தப்பட்டதாகும். இந்த ஜமாபந்தி அறிக்கையில் பூலித்தேவர் கோட்டைகளாகிய பனையூர் வாசுதேவநல்லூர். நெற்கட்டும்செவல் ஆகிய கோட்டைகள் பிடிபட்டன. பூலித்தேவரும் பணிந்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற விவரம் தெரிய வருகிறது. பூலித்தேவர் என்ன ஆனார் என்பது யாராலும் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

RangaRakes
tamilnavarasam.com

# பாளையப்பட்டுகள் யுத்தம்
# இரண்டாம் கட்டம்

அது காலை நாட்டின் ஆட்சிப் பொறுப்பு நவாப்பினிடத்தும் வரிவசூல் பொறுப்பு கும்பினியார்களிடத்தும் இருந்து வந்தன. நாட்டின் நலன் கருதும் எண்ணம் இரண்டு பேருக்குமில்லை. வரிப்பணம் வாங்க வேண்டும் எவ்வளவு அதிகமாக வாங்க வேண்டும் என்றுதான் எண்ணினர். வெள்ளையர் படையுடன் சுதேசிப் படையும் படைத் தலைவன் யூசுப்கானும் தென்திசை சென்று வந்த அனுபவத்தில் இருந்து யூசுப்கானை வைத்துக் கொண்டு நாட்டை வெல்லவும் நல்ல வசூல் செய்யவும் முடியுமென்று கும்பினியார்கள் இந்தச் சமயத்தில் கண்டு கொண்டார்கள், நவாப் முகமதலியின் சகோதரன் மாபூஸ்கான்; மகமதலியால் வரிப்பணம் வசூலிக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தான்: அதே சமயம் கம்பெனிப் படையின் பெருந் தலைவன் கர்னல் ஹிரேன் என்பவன், கம்பெனிக் குழுவினர் கார்னல் ஹிரேன் செய்த குற்றங்களையும் லஞ்சம் வாங்கியதையும் கண்டறிந்து அவனுக்குத் தண்டனை கொடுத்தார்கள். அதேபோல நவாபும் தன் சகோதரன் வரிவசூலதிகாரியாகத் தனக்கு நன்றியுடன் பணியாற்றவில்லை எனத்தெரிந்தான். கம்பெனியாருக்கும் நவாப்புக்கும் வரிவசூலிலும் வரி வசூல் குத்தகைக்கு விடும்படி ஏற்பட்டு வந்த சங்கடமான காலமிது:

நாட்டின் வரிவசூல் 28-6-1756ல் குத்தகைக்கு விடப்பட்டது : மதுரைச் சீமைக்கு 12 லட்சமும் திருநெல்வேலிச்



சீமைக்கு ரூ. 13 லட்சமுமாகும். இந்தக் குத்தகை காலம் 3 வருஷங்கள் : திருநெல்வேலி குத்தகை : நாட்டுக்குத்தகைக்காரன் தீத்தாரப்ப முதலிக்கு விடப்பட்டது. மதுரைக் குத்தகை கும்பினியாரின் நன்மதிப்புப் பெற்ற சுதேசிப் படைத் தலைவன் யூசுப்கானுக்கு விடப்பட்டது. இந்தக் குத்தகை ஒப்பந்தம் கும்பினிக் கவர்னர் 'பிகாட்' என்பவனால் விடப்பட்டது. குத்தகைக்கு விட்டது நவாப்புக்கும் தெரியாது கவர்னர் பிகாட் என்பவன் கானுக்கு எழுதிய கடிதத்தில் யூசுப்கான் வரிவசூலிக்கும் ஏஜெண்டு மாத்திரமல்லாமல் : படைத் தளபதியாகவும் கும்பினி சம்மந்தமான நிர்வாக விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டிய பிரதேச அதிகாரியாகவுமிருந்து வரவேண்டும் என்று கண்டிருக்கிறது.

பொம்மை ராஜாவாகிய நவாப்பை ஆட்சியில் உட்கார வைத்துக் கும்பினியின் கூலிப்பட்டாளம் ஆங்கிலேய ஆட்சியாளரின் ஆயுதங்கள் வெடி மருந்துகள் வைத்துக்கொண்டு நாட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டு மக்களை வரி கொடுக்கும்படி துன்புறுத்தவும் வசூல் முறைக்குத் துணை புரியவும் செய்தது : நவாபு கும்பினி கூட்டாட்சி இட்டது சட்டமென்று பாளையங்களுக்கு தீர்வை உயர்வாக விதிக்கப்பட்டது: கசக்கிப் பிழிந்து மக்களைச் சித்திரவதை செய்யும் வசூல் முறை தாண்டவமாடியது: என்ன செய்வார்கள் அப்பாவி மக்கள்;—கண்டிருந்தார் எல்லோரும்-ஆனால் (கள்ளர் மறவர், அகமுடையர்) தேவர் மக்கள் கடும் சினம் கொண்டு—நெஞ்சு பொறுக்குதில்லையே இந்தக் கொள்ளையர் கூட்டத்தைக் கண்டு விட்டால் என்று பொங்கி எழுந்தனர்: இறை தர மறுத்தனர்.

கெடுபிடி நடவடிக்கை எடுக்கப்பட்டு புரட்சிகள் ஒடுக்கப்பட்டன துப்பாக்கிமுனையில். யூசுப்கானை குத்தகை தாரனாக கும்பினியார் நியமித்தது நாவாப்புக்குப் பிடிக்கவில்லை. நாளாவட்டத்தில் நாவாபு யூசுப்கானை விரோதியாகக் கருதும்படி



RangaRakes
tamilnavarasam.com

யாக சம்பவங்கள் நடந்தன. யூசுப்கான் பாளையக்காரர்களை அடக்கிவிட்டான். பெரும்படையையும் திரட்டினான். மதுரை கோட்டையையும் செப்பனிட்டு அகழிகளையும் அந்தரங்கச் சுரங்கங்களையும் அமைத்தான். கள்ளர்களை ஒடுக்கி விட்டான். இது விவரம் முன்னதாகவே விவரமாகக் கண்டிருக்கிறது. ஆனால் வரி மாத்திரம் கள்ளர்களிடம் வாங்கினானில்லை. நத்தம் கணவாயிலும் மதுரை மேல் பாகங்களிலும் கோட்டைகள் கட்டிக் கொண்டான்: இந்த நிலையை அறிந்த நாவாப்பு கும்பினிக்கு புகார் செய்தான்.

1764ல் நாளடைவில் யூசுப்கான் வசம் கையிருப்புப் பணம் அதிகரித்தது. கூலிப்பட்டாளங்கள் குவிந்தன. பிரஞ்சுக்காரர்களிடமும் டச்சுக்காரர்களிடமும் ஆயுதங்கள் வெடிமருந்து முதலானவைகள் வாங்கினான். வெள்ளைக் கம்பெனியை வெருட்டியடிக்க வேண்டும் என்று திட்டமிட்டான். வெளிநாட்டு ஆயுதங்கள் 18 பவுண்டர் பீரங்கிகள் எல்லாம் தயார் செய்து மதுரைக் கோட்டையிலிருந்த கும்பினிக் கொடியைக் கிழித்தெறிந்தான். நவாப்புக்கோ கும்பினிக்கோ, குத்தகை செலுத்த மறுத்தான். கும்பினிக்கும் ஆற்காட்டு நாவாப்புக்கும் கைகூலியாக விருந்த யூசுப்கான் ஒரு பெரும் புரட்சிக் காரனாகமாறித் தானே தமிழ்நாட்டை ஆளப்பிறந்தவன்: அன்னியர்கள் எம் நாட்டு மண்ணில் அடி எடுத்து வைக்கக் கூடாது என்று போர்ப் பிரகடனம் செய்து தனது கூட்டாளியாகிய பிரஞ்சுகாரனின் கொடியை மதுரைக் கோட்டையில் ஏற்றினான். போர் மூண்டது.

காளின் படை பலம்: சிப்பாய்கள் 3000: அராபியக் குதிரைகள்: ஐரோப்பிய வீரர்கள் 300: இது தவிர பறக்கும் படையில் 4000 வீரர்கள் களத்தார்கள் (கள்ளர்கள் 2000: குதிரை வீரர்கள் 1000: சிறு பீரங்கிகள் 100; பேய்வாய்ப் பீரங்கிகள் 6.

கும்பினியர் படை பலம்: ஆங்கில அரசர் படை வெள்ளையர்கள் 1100 பேர்கள் கனரகப் பீரங்கிகள் தக்கப்



பாதுகாப்புடன் அமைக்கப்பட்ட பீரங்கிப்பட்டளாம் ஒன்று அத்துடன் காரைக்காலில் இருந்து 200 வெள்ளைச் சிப்பாய்கள் வந்தார்கள். இக்கட்டான முறையில் கோட்டைக்குள் கான் படைகளும்: வெளிப்புறத்தில் வெள்ளையர் படைகளும் எதிரும் புதிருமாக நேருக்கு நேர் நின்று குண்டு மாரி பொழிந்து கோட்டையை இடிக்கவும், சுட்டுத் தள்ளவுமான மரணக்குழியில் மடிந்து வீழ்ந்தனர். 13-ந் தேதியில் இருந்து 21-ந் தேதி வரை வெள்ளையர் படையில்: காப்டன் எலே, காப்டன் அலெக்ஸாண்டர் ஸ்மித், லெப்டினெண்ட் விட்ஹிபர் ஜேம்ஸ். ஹாமில்டன் உயர்தர அதிகாரிகளும் இன்னும் நூற்றுக்கணக்கான படை வீரர்களும் மடிந்தனர்.

கானை நேர் நின்று எதிர்த்துக் கோட்டையைத் தகர்க்க முடியாதென்று கண்டறிந்த வெள்ளைப் படைத்தலைவன் "காம்பெல்" கானின் தளபதிகள் மூலம் கானை வஞ்சகமாக கைது செய்யச் சதிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டான். அதில் வெற்றியும் கண்டான்.

கானின் படைத் தளபதிகளில் முக்கியமானவர்கள்: மார்ச்சண்டு ஸ்ரீனிவாசராவ், பாபா சாஹேப் ஆகியவர்கள். சீனிவாசராவ் கானின் திவானகப் பணியாற்றியவன். ஒரு தஞ்சாவூர் பிராமணன் பாபா சாகிப் என்பவன் ஒரு சமயம் தன்னுடைய கீழான நடத்தைக்காகக் கானால் தண்டிக்கப்பட்டவன். சதிகாரர்களால் பிடித்துக் கொடுக்கப்பட்ட கான் பயங்கரமான நிலையில் தூக்கிலிடப்பட்டுச் சித்திரவதைக்குள்ளானான்.

யூசுப்கானின் மரணத்திற்குப் பிறகு பாளையக்காரர்கள் கும்பினியின் அடக்கு முறைக்கு மீறத் துணிந்து மறுபடியும் வரி கொடாமல் நவாபை மீறினர். கொல்லங்கொண்டான் பாளையக்காரன், தென்னாட்டில், சொல் சக்தி வாய்ந்தவன்: ஊத்துமலை, சிங்கம்பட்டி, ஊர்க்காடு, சேத்தூர் ஆகியவர்களும் அதுபோலவே. மற்றும் கொல்லங்கொண்டான் பாளையத்திற்கு உறவினர்கள். இவர்களிடம் தேர்ச்சி பெற்ற,

RangaRakes
tamilnavarasam.com

ஆயுத சாதனங்களோடு கூடிய சைனியமுமிருந்தன. பிரபல பூலித்தேவன் முன்னாளில் இவர்களின் கூட்டாளி. மேற்கொண்டு சிவகிரி வன்னியனிடம் வெகு பெரிய கோட்டையும் பயிற்சி பெற்ற சைனியமுமிருந்தன. சிவகிரிப் பாளையக்காரன் டச்சுக்காரர்களுடன் ரகசிய உறவு கொண்டு இங்கிலீஸ்காரர்களுக்கு விரோதமாகச் சதிசெய்து கொண்டிருந்ததாகவும் தெரிகிறது. இந்த நிலை கும்பினிக்கு குலை நடுக்கமெடுத்தது.

மதுரை திருநெல்வேலி நாடுகளுக்குத் தளகர்த்தனாக விருந்தColonel Donald Cambell கி.பி. 1766-Major Flintன் தலைமையில் தென் நாட்டை அடக்கும்படி ஒரு படையை அனுப்பினான். முதலில் ஃபிலிண்ட் கொல்லங்கொண்டானை தாக்கினான். நேசப்பாளையக்காரர்கள்உதவியுடன் கொல்லங்கொண்டான் சைனியம் கும்பிவிப் படையைப் புறங்காட்டி ஓடும்படி செய்தது. அதே போல பாஞ்சாலங்குறிச்சியிலும் கும்பினிப் படைக்குப் படுதோல்வி ஏற்பட்டது. இந்தத் தோல்விகள் கும்பினியார்களுக்கு ஒரு படிப்பினையாக விருந்தது. இரட்டை ஆட்சியின் குறைகள் தெரிந்தன. முன் வெற்றிகளுக்கு நாட்டின் இயல்புகள் தெரிந்திருந்த சுதேசிப் படைத் தலைவன் யூசுப் என்பதையும் உணர்ந்தார்கள். சண்டை செய்து தென் நாட்டை ஆள முடியாது, சமாதானம் வளர முயற்சி எடுக்க வேண்டுமென்பதை உணர்ந்து 1767-ல் கர்னல்டோனால்டு காம்பலை, கும்பினிக் குழுவினர் திருநெல்வேலிக்கு அனுப்பினர்.

1767ல் கேம்பல் திடீரென கொல்லங்கொண்டஎன் கோட்டையை முற்றுகை போட்டு மூன்று தினங்கள் குண்டு பொழிந்தான். இறுதியில் கோட்டை பிடிபட்டது. ஆனால் இரவோடு இரவாகக் கோட்டைக்குள்ளிருந்த சைனியம் அடுத்திருந்த புதர் காட்டினுள் நுழைந்தோடி மறைந்து விட்டது கோட்டை பிடிபட்டும் பலனில்லது போகவே; காம்பெல்சைனியம் சேத்தூர், சிவகிரி, ஆகிய பாளையங்களையும் தாக்கிக் கோட்டைச் சுவர்கள் இடிபட்டனவே தவிர



சைனியமோ மக்களோ தென்படவில்லை. செழிப்பான வயல்கள் எல்லாம் விவசாயம் பாழ்பட்டுக் கிடப்பதையும் மக்கள் மலைப்புதர்க்குள் போய் விட்டதையும் கண்டு காம்பல் வருத்தப்படுகிறான். நாட்டை நல்லவிதமாக ஆண்டு மக்கள் மனதில் இருக்கும் பயம் நீங்கச் செய்ய வேண்டுமென்று கும்பினிப் போர்டுக்கு எழுதுகிறான். மே மீ 28ம் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கியபோதும் கோட்டையிலிருந்து சைனியம் தப்பி விட்டது. கொல்லங்கொண்டான் சேத்தூர், சிவகிரி, வாசுதேவநல்லூர் ஆகிய ஊர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் அடுத்த சரிவில் உள்ள இடங்கள் அடர்ந்த காடுகளும் புதர்களுமிருப்பினும் செழிப்பான நீர் நில வளமுடைய இடங்கள். நெல் விளைந்து காய்ந்து கிடப்பதையும், நெற்குவியல்களையும் வைக்கோல் போர்களையும், பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் சுறுசுறுப்பாக அறுவடைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் கண்ட ''கம்பெல்'' இந்தப் பொன்னான நாட்டையும் நன்மக்களையும் மனதாரப் போற்றுகிறான் மகிழ்கிறான்.

இங்கெல்லாம் கோட்டைகள் மலைக் காடுகளின் பாதுகாப்பு முக்கியத்துவம் வைத்து அமைந்திருக்கக் கூடுமாகையால் வெள்ளையர் பீரங்கித் தாக்குதலுக்கு இரையாகாவண்ணம் தமிழ் வீரர் படையினர்பின்வாங்க நேரிட்டிருக்கிறது. வாசுதேவநல்லூர் கோட்டையில் சிப்பாய்களை வைத்துவிட்டு, அங்கிருந்து சங்கரன் கோயிலை ஒரு ராணுவ ஸ்தலமாக்கினான். அதில் Captain Harperரை நிறுத்தி அவனுடன் தக்க பாதுகாப்பும் சைனியமும் கொடுத்து இதுவரை பிடித்த கோட்டைகளைக் காவல் செய்யும்படி ஏற்பாடுகள் செய்து விட்டு திருநெல்வேலியிலிருந்து கம்பெனிக் குழுவினர்களையும் நவாபையும் கூட்டி விவரங்களை எல்லாம் விளக்கி பாளையக்காரர்களை பகைவர்களாக்காமலே நேசக்குடிகளாகச் செய்ய வேண்டுமென்றும் இல்லையேல் நாடுகெட்டுப் போகுமென்றும் எடுத்துக் காட்டினான்.

RangaRakes tamilnavarasam.com

தென்திசைப் பாளையக் காரர்களைப் பற்றி கர்னல் புல்லாட்டன் எழுதும் விவரம் ''இவர்கள் தமிழ்நாட்டின் பூர்வீகக் குடிகள். இந்நாட்டை ஆண்ட மன்னர் பரம்பரையினர். கும்பினி சைனியத்திற்குக் கடும் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். தங்களைச் சேர்ந்த அரசை ஸ்தாபிக்க விரும்பும் மனமுடையவர்கள். இவர்கள் பால் பயிற்சி பெற்ற 10,000 சேனைகளிருந்தன. இவர்களை அடக்குவது எளிதன்று''.

குருடன் கையில் விலாங்கு சிக்கியது போல், தென் பாண்டிச் சீமை நாயக்கர்கள் ஒருவர்க்கொருவர் அடித்துக் கொண்டு, நரி கையில் குடலைக் கழுவக் கொடுத்தது போல ராணிமீனாட்சி ஆற்காட்டுப் படையைக் கோட்டைக்குள் நுழையவிட உயிருக்கும் ராஜ்யத்துக்கும் ஆபத்து வந்ததல்லவா. மதுரையைக் கைப்பற்றிய நவாப்பு ஆட்சித்திறன் அற்றவன். அரசியல் அறிவும், சுதந்திர வேட்கையும், ஆண்மைத் திறமும் அற்றவனுகவிருந்தான் என்பதை அவன் வரலாறே விளக்குகிறது.

மதுரையில் ஆட்சி பீடத்தில் அமர்ந்தானேயல்லாமல்; நிர்வாகக் கடிவாளத்தைச் சுண்டிப் பிடித்தானில்லை. நாட்டில் கொள்ளையடிப்பதையும் அகப்பட்டவர்கள் பாளையங்களைக் கசக்கிப் பிழிந்து கப்பம் வாங்கவும் முற்பட்டான். இவனுடைய பலவீனத்தைக் கண்டு கொண்ட பாளையக் காரர்கள் சரிவர வரி செலுத்தவில்லை. அவர்களை அடக்கியாளவும் இவனுக்கு ராஜ தந்திர அறிவு இல்லை. ராணுவத்திற்குச் சம்பளம் தீனிச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருந்தது. எனவேதான் தனக்கு வரி வசூல் செய்வதற்கு துணை வேண்டினன்.

நாட்டில் வரி வசூல் ஏஜெண்டுகள் நியமித்து கான் சாகிப், தீர்த்தாரப்ப முதலியார் போன்றவர்களுக்கு வரி வசூல் அதிகாரம் கொடுத்தது எவ்வளவு பேடித்தனம் இந்த ஏற்பாட்டிற்குக் கம்பெனியும் உடந்தைதானே: எனவே தான் நாட்டில் சொல் வழக்கு ''தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரன்'' என வழக்கத்தில் வந்தது என தெரிகிறது.



தேவைக்குப் போதிய அளவு வரியோ ,கப்பமோ வசூலிக்க முடியாமலிருந்த நவாப்பு கம்பெனியாரிடம் நிறையப் பணம் கடன் வாங்கியிருந்தான். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலுமிருந்தான்.

கி. பி. 1781-ல் வரி வசூல் செய்வதைக் கம்பெனிக்கு நவாப்பு ஒப்படைத்து விட்டான். நிர்வாக முறை சரிவர நடக்கவேண்டும் மென்பதை முன்னிட்டுக் கம்பெனியாரால் 1786-ல் ரெவின்யூ போர்டு ஸ்தாபிக்கப்பட்டது. கம்பெனியார் நாட்டின் ஆளுகையின் பொறுப்பை எடுத்துக் கொண்டு 1790-ல் பென்சுமென்டோர் என்பவனை திருநெல்வேலிக் கலெக்டராகவும் பாளையக்காரர்களை மேல் விசாரணை செய்பவராகவும் நியமித்தனர். அதன் மேல் 1792-ல் கம்பெனியார்கள் நவாப்புடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி கும்பினியார்களுக்குத் தரவேண்டிய பாக்கிக்காக மதுரை திருநெல்வேலி நாடுகளிலிருந்து ஒன்பது வருஷங்களுக்குத் தீர்வை வசூல் செய்து கொள்ளும்படி ஒப்புக் கொண்டனர். இவ்வுடன்படிக்கையின்படி நடவடிக்கை எடுக்க கர்னல்மாக்ஸ்வெல்லை ஒரு படையுடன் கம்பெனியார் நியமித்தனர்.

இதன் மூலம் நவாப்பு மன்னர்களையும் மக்களையும் கம்பெனியார்களுக்கு அடிபணியும்படி செய்து விட்டான். தமிழக அரசியல் அடிமை அரசியலாகிற்று. ஆற்காட்டு நவாப்பு வெறும் அலங்காரப் பொம்மையானன். வயிறு வளர்க்க வாணிபம் செய்ய வந்த வெள்ளையர்கள் வரி வசூல் செய்யும் உரிமைபெற்ற எஜமானராக மாறினர்.

அதன் பிறகு வெள்ளையர்கள் செய்யாத அநீதி எல்லாம் செய்து மக்களைக் கசக்கிப் பணத்தையும் கண்ணீரையும் கப்பமாகக் கொண்டனர். தமிழகத்தின் செல்வத்தை எல்லாம் கொள்ளை கொண்டனர். தங்கள் அட்டூளியங்களை நிறைவேற்றுவதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பெயரால் ஒரு ராணுவத்தையும் அமைத்துக் கொண்டார்கள்.

RangaRakes

tamilnavarasam.com

ம'வெள்ளையர் படை ஒன்று யுத்த தளவாடங்களுடன் இங்கிலாந்திலிருந்து வந்திறங்கியது.

பண்டங்களை வாங்கி வைக்க வேண்டிய, கம்பெனிக் கிடங்குகளில்: ராணுவம், பீரங்கி, துப்பாக்கி, வெடி மருந்துகள் நிரம்பின.

திருநெல்வேலியின் மேல் பாகத்தில் நெற்கட்டும் செவலை தளமாக வைத்துப் பூலித்தேவனில் தலைமையில் எப்படி எல்லா மறவர் பாளையப்பட்டுகளும் ஒன்று திரண்டு கிளர்ச்சியில் எதிர்ப்புக் காட்டி நின்றனவோ; அதேபோல கிழக்குப் பகுதியில் நாயக்கர்கள் பாளையப்பட்டுகள் எல்லாம் பாஞ்சாலங்குறிச்சியை மையமாக வைத்துக் கட்டப்பொம்மன் தலைமையில் எதிர்த்து வந்தனர்.

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன், கட்டபொம்மன் விஸ்வநாத நாயக்கனைப் பின் தொடர்ந்து வந்து பாண்டி நாட்டில் ஆதிக்கம் பெற்ற கூட்டத்தாரைச் சேர்ந்தவனல்ல; கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பஞ்சத்தின் காரணமாகப் பெல்லாரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலியை அடுத்த சாலிக் குளத்தில், கட்டபொம்மனின் ஆதி மூதாதையரான 'பால் ராஜ்' குடியேறியதாகவும் அவன் மகன் 'பொம்மு' என்பவன் சாலிக் குளத்தை அடுத்துள்ள, அழகிய வீர பாண்டிய புரத்தை ஆண்டு வந்த ஜெகவீரபாண்டியத் தேவனின் படைத் தளபதியானான் என்பதும் சரித்திரம்;

தளபதி பொம்மு மிகவும் குட்டையான உயரமுள்ளவன். ஆகவே அவனை மக்கள் கட்டப்பொம்மன் என்று அழைக்கலாயினர். பின்னால் ஜெகவீர பாண்டியத் தேவனின் தகப்பன் ராமசாமித் தேவன் தனக்குப்பின் ராஜ்யமாளுவதற்கு வாரிசு இல்லாமலிருந்தபடியால்; தனது படையில் திறமையாகப் பணியாற்றியவனும், தனது அபிமானத்திற்கு ஆளானவனுமாகிய கட்டப்பொம்மனைத் தன் நாட்டிற்கு அரசனாக்கினான். அது முதல் கட்டப்பொம்மனுக்குப் பாண்டிய மன்னனால் வழங்கப்பட்ட ஜெகவீரபாண்டியக் கட்டப்பொம்மன் என்று பெயர் வழங்கியது. அந்த வழியில் தோன்



றியவர்கள் பாளையப்பட்டு முறை ஏற்படும்போது '72'-ல் ஒன்றாக இடம் பெற்று வந்தார்கள். ஆதி வாரிசுப்படியாக 47-வது பட்டக்காரராகத் தோன்றியவனே சுதந்திரப் போரிட்ட வீரன் ஜெகவீரபாண்டியக் கட்டப்பொம்மன்: இந்த மாவீரன் 1790ஆம் ஆண்டு பட்டத்திற்கு வந்தான். அப்பொழுது தான் வெள்ளையர் ஆதிக்கம் திருநெல்வேலி மாவட்டத்தில் முளைத்தெழுந்து கொண்டிருந்தது. வரி வசூல் செய்வதற்கென்று வெள்ளையர்கள் ஜாக்சன் என்ற ஒருவனைக் கலெக்டராக நியமித்திருந்தார்கள். வரி கொடுக்காமலிருந்து வந்த கட்டப்பொம்முவின் செயல் கலெக்டர் ஜாக்சனுக்கு வேதனையாக இருந்தது. வீரபாண்டியக் கட்டபொம்மு மீது எடுக்க வேண்டிய நடவடிக்கையை முதன்மையாகக் கருதினான் ஜாக்சன்.

ஆனபடியால் கலெக்டர் ஜாக்சன் ஒரு வாரத்திற்குள் தன்னைத் தன் இருப்பிடத்தில் வந்து பேட்டி காண வேண்டுமென்று ஒரு தூதுவன் மூலம் ஆணை பிறப்பித்தான். வீரபாண்டியனைப் பணிய வைக்க வேண்டும் என்பதே கலெக்டரின் உள்நோக்கமாகும்.

வெள்ளையத்தேவன், ஊமைத்துரை, சுப்பிரமணிய பிள்ளை உட்பட தனது பரிவாரங்கள் புடைசூழ 1798-ஆம் ஆண்டு ஆகஸ்டு 24ஆம் நாள் கட்டப்பொம்மன் ஜாக்சனைப் பேட்டிகாண திருநெல்வேலிக்குச் சென்றான் வீரபாண்டியன் திருநெல்வேலியை அணுகுமுன் அவனை வம்புக்கு இழுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஜாக்சன் குற்றாலத்துக்குச் சென்று விட்டான். வீரபாண்டியனும் தன் பரிவாரங்களுடன் குற்றாலம் சென்றான். குற்றாலம் சென்ற ஜாக்சன் அங்கிருந்து சொக்கம்பட்டிக்குச் சென்றான். எனவே வீரபாண்டியனும் சொக்கம் பட்டிக்குப்பின் தொடர்ந்தான். சொக்கம்பட்டியில் ஜாக்சனின் மொழி பெயர்ப்பாளன் பாண்டியனைச் சந்தித்துத் துரை சிவகிரிக்கு வரச்சொன்னார்கள் என்று தெரிவித்தான். அதைக் கேட்ட கட்டப்பொம்மு இவ்வாறு கலெக்டர் இடமாறிச் செல்வது தம்மை அடிமைப்

RangaRakes tamilnavarasam.com

படுத்து வதற்கே என்று உறுதிப்படுத்திக் கொண்டான்.

இப்படியாக சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி முதலியவிடங்களுக்கெல்லாம் சுற்றிக் கடைசியாக, இராமநாதபுரத்தில் சேதுபதி அரசர் மாளிகையில் அங்கு வீரபாண்டிய கட்டப்பொம்முவை சந்திக்க ஏற்பாடுகள் செய்தான். வீரபாண்டியனை வெல்வதற்கு, இராமநாதபுரமே தகுந்த இடமெனக் கலெக்டர் கருதினான்.

பரிவாரங்களுடன், வீரபாண்டியன் அரண்மனைக்குள் அனுமதிக்கப்படவில்லை. ''இராமலிங்க விலாசம்'' அரண்மனை உள்வாசலில் மெய்க்காப்பாளர்கள் இரண்டு பேர், வெள்ளையத்தேவன், ஊமைத்துரை ஆகியவர்கள் அனுமதிக்கப்பட்டனர். மாளிகையின் மேல் மாடியில் கலெக்டர் இருந்தவிடத்திற்குப் போகவேண்டியதாயிற்று. கலெக்டரை முன்பின் பார்த்தது கிடையாது.

தன்னைப் பார்க்கவந்த கட்டப்பொம்மனுக்கு கலெக்டர் மரியாதை கொடுக்கவில்லை. கட்டப்பொம்மு மீது குற்றச் சாட்டுகள் பல பகர்ந்தான். உடனே கப்பம் கட்டவேண்டும் தவறினால் உன்னைக் கைது செய்யப்படும் என்று ஆணவமாகப் பேசி பொம்முவை ஏற இறங்கப்பார்த்தான். குற்றச் சாட்டுகளையும் வரி கேட்டதையும் கேட்ட கட்டப்பொம்மு கடுங்கோபம் கொண்டு ''வரி கொடுக்கும் வழக்கம் எங்கள் மரபிற்கே இல்லை அந்நியனுக்கு அடங்கி நடக்கவும் மாட்டோம்'' என்று துணிந்து கூறினான். உடனே ஜாக்சன் கட்டப்பொம்முவைக் கைது செய்யும்படி உத்திரவிட்டான்.

ஜாக்சனின் முன்னேற்பாடாகத் தயார் செய்து வைக்கப் பட்டிருந்த படைவீரர்கள் வீரபாண்டியன் மீது பாய்ந்தார்கள். உடனே தன் மீது பாய்ந்த இருவர்களின் தலைகளைப் கட்டபொம்முவின் வாள் உருண்டோடச் செய்தது. இது கண்ட மற்றவர்கள் பின் வாங்க கட்டபொம்மு வெளி



யேறத் திரும்பினான். திடீரென உருவிய வாளுடன் லெப்டினென்ட் கிளார்க் கட்டபொம்முவைத் தாக்கினான். வாள் வீரன், ஜெகவீரபாண்டியன் மண்டித்தாக்கி கிளார்க்கை எதிர்த்தான். சிறிது நேர வாள் போரில் கிளார்க் மாண்டான் மாடியிலிருந்து பாய்ந்து மெய்காப்பாளர்களுடன் சேர்ந்தான் கட்டப்பொம்மு. கம்பெனிப் படை வந்து சூழ்ந்து கொண்டது. கட்டப்பொம்முவின் பரிவாரங்களும் பொம்முவுடன் தொடர்பு கொண்டு சேர்ந்து வெஞ்சமர் மூண்டது. வெள்ளைத் தேவனும் ஊமைத்துரையும் சேர்ந்து நின்று கம்பெனிப் படைகளை தூள் தூளாக்கினர். இடம் வேறானபடியால் சிறிது நேரத்தில் பின் வாங்கிப் பரிவாரங்களுடன் கட்டபொம்முவின் குதிரைகள் பாஞ்சாலங்குரிச்சி நோக்கிப் பாய்ந்தன இந்தத் தாக்குதலில் தானாதிபதி சொக்கலிங்கம்பிள்ளை மாளிகையை விட்டு வெளியேற முடியாமல் கைதாக நேரிட்டது.

இராமநாதபுரம் நிகழ்ச்சிகள் உயர்மட்டக் கம்பெனி அதிகாரிகளால் விசாரணை செய்து தீர்ப்புகள் பல செய்தனர். அதில் தானாதிபதிப் பிள்ளையின் விடுதலையும் ஒன்று.

இரண்டாவதாக, இந்தச் சண்டைக்குக் காரணமாகயிருந்த ஜாக்சனை வெள்ளையர் வேலையிலிருந்து நீக்கினர். ஆனால் அவனுக்குப் பிறகு வந்த லூஜிங்டன்துரை அவனைவிட நல்லவனல்ல. இராமநாதபுரத்தில் வெள்ளையர்களை வெட்டித் தள்ளிக் கொலை செய்ததற்குப் பாஞ்சாலங்குரிச்சியாளரைப் பழி வாங்க வேண்டுமென்று உள்ளூர எண்ணங் கொண்ட லூஜிங்டன்; படை கொண்டு பாஞ்சாலங்குரிச்சியைத் தாக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். பாஞ்சை யுத்தம் மூண்டது;

## வெள்ளையத் தேவனின் வீரப் போர் !

அப்போது பாஞ்சாலங்குரிச்சிக் கோட்டையில் கட்டப்பொம்மு சிவத்தையா நாயக்கன், தானாதிபதி பிள்ளையின் தம்பி வீரபத்திரப் பிள்ளை, சம்பிரதி பொன்னப்ப பிள்ளை, பாதர் வெள்ளை எனப்படும் வெள்ளையத்தேவன், வீராங்கனை

RangaRakes
tamilnavarasam.com

வெள்ளையம்மாள் ஆகியவர்கள் இருந்தனர். ஆங்கிலேயப் படையில் மேஜர் பானர்மென், கேப்டன் ஓரீலி, ப்ரூய், லெப்டினன்ட் டல்லஸ், காலின்ஸ், டக்ளஸ், ப்ளேக்ப்ரௌன் முதலியோர் இருந்தனர். தமிழ் நாட்டிலே முதல் முதல் வெள்ளையருக்கும் தமிழருக்கும் நடந்த உரிமைப் போர் இதுவே.

1799-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ந்தேதி கம்பெனித் தளபதி பனர்மனின் படைகள்; பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை நள்ளிரவில் வந்து சூழ்ந்தன. கொஞ்ச நேரத்திற்கு முன்வரைதான் எதிரிகள் கோட்டையை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றனர் என்ற விவரம் கட்டபொம்முவுக்கு ஒற்றர்கள் மூலம் தெரியுமான படியால், இரவோடு இரவாகத் தனது படைவீரர் எல்லாம் பக்கத்துக் கோட்டை கொத்தளங்களிலிருந்து பாஞ்சைக்கு வரவேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

கோட்டைக்குள்ளிருந்து ரண பேரிகை முழக்கம் ஆரம்பித்து விட்டது. ரணபேரிகை நாட்டின் ஆபத்தையும் உடனடியாகப் படைகளை வரவழைக்கும் ஆணையுமாகும். பல்லாயிரக்கணக்கான வீரமறவர்கள் நாலாபக்கத்திலுமிருந்து ஆயுதபாணிகளாகக் கோட்டையை நோக்கி வந்து திரண்டனர் என்றாலும் வெள்ளையர் படைகள் கோட்டைக்கு வெளியில் எண்ணிக்கையில் அதிகமாக வளைத்து கொண்டிருந்த படியால்; கோட்டைக்குள் தொடர்பு கொள்வது கடினமாக இருந்தது.

நடுநிசியில் கனரகப் பீரங்கிகள் முழங்கின. டல்லஸ் வடக்கு வாசல் தாக்குதலுக்குத் தலைமைதாங்கிக் குதிரை மீதிருந்து ஏவுதல் செய்தான். பானர்மன் தெற்குவாசல் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினான். நள்ளிரவில் திருச்செந்தூரிலிருந்து; ஊமைத்துரையும் உறவினர்களும் மாபெரும் மறவர் படையுடன் பாய்ந்தோடி வந்து வெள்ளையர் படையுடன் மோதி வியூகத்தைப் பிளந்து கோட்டைக்குள் புகுந்த போது யுக அந்த காலம் போல தென் பட்டது



இடிமுழக்கம் போல் குண்டுவீச்சு, துப்பாக்கிச்சூடு, கர்ச்சனையில் வாள் ஈட்டிகள் மோதல் மிகப்பயங்கரத்தையுண்டு பண்ணியது. இரு தரப்பிலும் ஆள் சேதம் சொல்லி முடியாது. இது சமயம் சுந்தரலிங்கக் குடும்பன், வெள்ளையத் தேவனின் உயிர்த்தோழன் ஒரு சூராவளிப் படையின் உதவி கொண்டு; கம்பெனிப் படையின் முற்றுகைக்குள் பாய்ந்து பிரிட்டுச் சென்று வெள்ளையர் ஆயுதச் சாலைக்குத் "தீ" மூட்டினான். மிகப்பெரிய வெடிமருந்துக் கிடங்கு வெடித்து மின்னலையும் புகை மண்டலத்தையும் உண்டு பண்ணிக் கம்பெனிக்குப் பெரும் சேதத்தை உண்டு பண்ணியது. ஆனால் அந்த இடத்திலேயே குடும்பனையும் படை வீரர்களையும் பகைவர்கள் கொன்று விட்டனர்.

7 மணி நேரம் நடந்த தாக்குதலில் கோட்டைக் கதவுகள் சாய்ந்தன. தெற்கு வடக்கு வாசல்கள் வழியில்எதிரிகள் நுழைய முயன்றனர். தெற்கு வாசலில் கம்பெனிப்படையின் வாங்கி; மறவர் சேனையை வெளியே இழுத்தனர். குதிரைப்படையும் காலாட்படையும் மோதி எங்கும் பிணக்காடாகியது. வெள்ளையத் தேவன் மெய்க்காப்பாளர்கள் மாடசாமியும் பொட்டிப் பகடையும் வாசலில் குத்துண்டு சாய்ந்தனர். ஆணவமாகக் காலின்ஸ் குதிரை மீது இருந்து கொண்டு ஈட்டிப்படையும் துப்பாக்கிப்படையும் பக்கவாட்டில் சூழ்ந்து வர, தெற்கு வாசலில் நுழையவே; வாசல் இடது பக்கத்து தூண் புரமிருந்து தனக்கே உரிய வீரக்கர்ச்சனை செய்து; நீண்ட ஈட்டியைக் கொண்டு காலின்ஸின் நேர் எதிர் நின்று வெள்ளையத்தேவன் காலின்ஸின் நெஞ்சில் பாய்ச்சி முதுகில் ஊடுருவச் செய்ய; அதே சமயம் காலின்ஸ் வலது கையிலிருந்தவாளைக் கொண்டு வெள்ளையத்தேவன் கழுத்தில் வீசஆவென்று வாய் பிளந்து அலறியவாறு வெள்ளையத் தேவனும், காலின்சும், ரத்தமும்உடல்களும் ஒன்றாய் கலந்து புரண்டு விழுந்து மாண்டனர். என்னே இவர் தம் வீரம்?

தளகர்த்தர்கள் இரு தரப்பிலும் மாண்டதானது யுத்த நிலைமையையே அதிர்ச்சியடையச் செய்யவே தாக்குதல்

RangaRakes
tamilnavarasam.com

ஓய்வு பெற்றது. அடுத்த படியாக நடக்கப் போகும் கடும் நடவடிக்கையை எதிர் நோக்கியிருந்தனர் பகல் பூராவும்.

பின் நடந்த சண்டையில் இருதரப்பிலும் பெரும்சேதம் விளைந்தது. பாளையக்காரர் வேல், கம்பு, வளரித்தண்டு, குத்தீட்டி, சுருள்வாள், முதலிய பல திறப்பட்ட கருவிகளை யும் கையாண்டனர். ஆயினும் கோட்டையைக் காப்பாற்ற போதிய வலிமையில்லை. ஆகவே அன்றிரவே கட்டப்பொம் முவும், தம்பியாரும் கோட்டையை விட்டு வெளியேறிக் கோலார்பட்டியை அடைந்தனர்.

நாகலபுரம், சிவகிரி, இராமநாதபுரம், முதலிய பாளைய காரர்களை கட்டப்பொம்மு, தட்டி எழுப்பித் தன் பக்கம் சேர்ந்தான். ஆனால் எட்டையாபுரம் பாளையக்காரன் கட்ட பொம்மனுடன் சேர மறுத்துவிட்டான். அங்கு நடந்த போரில் கோலார்பட்டிக் கோட்டை தகர்ந்தது. நாகாலா புரத்து இளவல் சௌந்திரபாண்டியனும் கட்டப்பொம்மு வின் தானாதிபதியாயிருந்த, தானாதிபதிப்பிள்ளையும் பிடி பட்டுத் தூக்கிலிடப் பட்டனர். கட்டப்பொம்மு தப்பி ஓடி போய்ப் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் காடுகளில் ஒளிந்திருந்தான். அதன் பிறகு புதுக்கோட்டைத் தொண்ட மான் கட்டப்பொம்மனைக் கம்பெனியாரிடம் ஒப்படைக்க நேரிட்டது. வெள்ளையர்களுக்கு பெருமிதம் ஏற்பட்டது. 16-10-1799ல் கட்டப்பொம்மன் தூக்கிலிடப்பட்டான். ஆயுதப் பரிகாரணமும் கோட்டைத்தடைச் சட்டமும் அமு லுக்கு வந்தன. ஆனால் சண்டை முடியவில்லை.

பாஞ்சாலங்குறிச்சி மன்னன் தம்பியர் இருவரும் உயிரு டனிருந்தனர். அவர்கள் இருவர்களும் மற்றும் 14 பேர் களும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டிருக்கிற விவரம் தெரியலாயிற்று. இவர்கள் காலத்தில் சண்டை ஒரு பெரும் புரட்சியாக மாறியது. தென்பாண்டி நாட்டின் வீர இளைஞரெல்லாம் ஒருங்கு கூடி நத்தம் என்ற சிற்றூரில் இர வெல்லாம் புரட்சித் திட்டங்கள் வகுத்தனர். அத்திட்டப்



படி எதிரிகளைப் பழிவாங்குவது புரட்சிக்காரர்கள் நோக் கமில்லை. கலகம் செய்வதுமல்ல.

ஆனால் அவர்களின் ஒரே நோக்கம் கோட்டைத்தடைச் சட்டத்தை மீறிப்பாஞ்சாலங்குறிச்சியில் மீண்டும் கோட்டை கட்டியாக வேண்டுமென்பதே. இதை அவர்கள் உலகம் வியக்கும் வண்ணம் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று பல்லா யிரக்கணக்கான தியாக மூர்த்திகளான தமிழ் வீரர்கள் தியாக உணர்வுடன், இரவு பகலாக அரும்பாடுபட்டு, முன்னிலும் பலம்பொருந்திய கோட்டையைக் கட்டி முடித்துக் கண்டு களித்தனர்.

பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை எழுப்பப்பட்டது கண்ட வெள்ளையர்க்கு அச்சமுண்டாகியது. 1801-ம் வருஷம் மார்ச்சு மாதம் பெரும் பீரங்கிகளும் யுத்ததள வாடங்களும் கொண்ட வெள்ளையர் படையும் எட்டயபுரம் சேனை 1000 பேர்களுமாகப் பாஞ்சையைத் தாக்கினர். போரின் முற்பகுதி வெள்ளையருக்குப் படுதோல்வியாக விருப்பினும்; பின்னால் கர்னல் அக்நியூ ஒரு புதுப்படை யோடு வந்து எதிரிகளின் பலத்தை உணர்ந்ததால் பாஞ்சை நிலைமை மோசமடைந்தது ஊமைத்துரை தன் துணைவர் களோடு சிவகங்கைக்குப் போய்விட்டான்.

1801-ல் தம்மிடம் வந்த வீரன் ஊமைத்துரையை ஏற்றுத் தன் துணையையும்; அன்னியர் எதிர்ப்புக் கொள் கையை ஏற்கும் உறுதியையும்; மருதுபாண்டியன், ஊமைத் துரைக்குக் கொடுத்த தோடல்லாமல் வெள்ளையர்க்கெதி ராகப் போர் தொடங்கத் தயாரானான். இப்போது போர் களும் திருநெல்வேலியிலிருந்து சிவகங்கைக்குமாறிற்று.

பாண்டிய அரச பரம்பரையில் வந்த குறுநிலமன்னன் வீராதி வீரன் மருதுபாண்டியன்: தன் நாட்டை ஆண்டு, தானம், தர்மம் சத்திரம் சாவடிகள் கட்டி. கீர்த்தியுடன் ஆண்டு தன் வசம் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போர் வீரர்களையுடையவனாக விளங்கினான். ஆகவே பாஞ்சாலங்


tamilnavarasam.com

குரிச்சிப் போராட்டத்திற்கு, மருதுபாண்டியன் உறவு ஒரு மணிமகுடமாய் அமைந்தது. மண்டியிட்டு மாற்ரூர் உரிமையின் கீழ் நல்வாழ்வே வாழ்வதிலும், பாஞ்சைப் புகழ் பயிரைச் சிவகங்கையிலும் பன்மடங்கு வளம்பெறப் பெருக்குவதே வள்ளுவர் மரபுக்குரிய மாண்பெனக் கொண்டு அவர்கள் களம் பல சூழ்ந்து போராடினர்.

வெள்ளையர்படை சிவகங்கைச் சிமையை ஒடுக்க முற்பட்டது. அவர்களிடமிருந்த பெரும் படையுடன்; தொண்டைமான் படையும், எட்டையாபுரம் படையும் சேர்ந்து சக்திவாய்ந்த ராணுவ முக்கியத்துவத்தை அடைந்தது;

கம்பெனிப்படையை மூன்று பிரிவுகளாக்கி; முதல்பிரிவு அடர்ந்த காடுகளை வெட்டி வழியுண்டு பண்ணியிருந்தபடி காளையார் கோவிலுக்கு அனுப்பப்பட்டது. இப்படை எடுப்பை எதிர்பாராத மறவர் படை திடீரென செய்வதொன்றுமறியாமல் உயிர்ச் சேதமில்லாமல் காட்டிற்குள் ஓடி மறைந்தனர். 180' அக்டோபர் 1ந்தேதி காளையார் கோயிலை கர்னல் அக்னியு பிடித்துக் கொண்டான்.

இரண்டாவது பிரிவு 3—10—1801. மேஜர் ஷெப்பர்டு வசம் அனுப்பப்பட்ட சேனை மங்கலத்துக்குப் போனதில் அங்கு யாருமில்லை, கிராமத்தில் விசாரித்ததில், சிறிது நாட்களுக்கு முன் 2000 வீரர்களும் மருதுபாண்டியனும் அங்கு இருந்ததாகவும் இப்போது அவர்கள் காட்டிற்குள் போய் விட்டார்கள் எனவும் தெரிந்தார்கள். மூன்ருவது கமுதியில் தொடங்கி, திருப்பூவனம், திருப்பாச்சேத்தி ஆகிய இடங்களுக்குப் போய் பல முனைகளிலும் பெரும் போர் நடத்தினர். மறவர் படையினர் பெரும் சேதத்திற்கு உள்ளாயினர். வெள்ளையர் தரப்பில் பெயர் பெற்ற பிளாக்கர், கோல், பர்மின்டர், ஸடூவர்ட் ஆகிய பெரிய படைத்தலைவர்கள் மாண்டனர். சிவகங்கை சீமையில் அடர்ந்த காடுகளுக்குள் ஒளிந்திருந்து மறவர்படை வெள்ளையர்களையும் படைத்



தலைவர்களையும் கொன்ற மனக்கொதிப்பால், பல ஊர்களுக்கு தீவைத்துவிட்டுப் புறங்காட்டி ஓடினர் கும்பினிப் படையினர்.

காடுகளில் மறைந்து வாழ்ந்த பொழுது மருதுபாண்டியனுக்கு கடுமையான சிலந்திக்கட்டி ஏற்பட்டது. அந்த வேதனையோடு ஒருநாள் காட்டில் படுத்திருக்கும்போது உழவன் ஒருவன் ஓடிவந்து பண்டியனை எழுப்பி, அவனைத் தேடி பகைவர் படை வந்துகொண்டிருக்கிற விவரம் தெரிவித்தான். எழுந்து கடும் சினமும் வீராவே சமுங்கொண்டு தனதுபரியின் கயிற்றைப் பற்றியவண்ணம், தொண்டையை ஆட்டிக்கொண்டு ஒரு வீரக்கர்ச்சனை (செருமுதல்) செய்தான். அந்த கர்ச்சனையின் அதிர்ச்சியில் சிலந்தி உடைந்து ரத்தம் பீரிட்டது. அந்தக் கணத்தில் பரி மீதுபாய்ந்து ஏறி பாய்ச்சலில் முடுக்கவே குதிரை மீதொருவர் பாய்ந்து செல்வதைக் கண்ட வெள்ளைப் பட்டாளம் மருதுவைத் தொடர்ந்தது. கணநேரத்தில் மருது குதிரை கால் தடுமாறி விழுந்து மறுபடி கணநேரத்தில் எழுந்தது. இதற்குள் பகைவர்கள் வந்து மருதைச் சூழ்ந்து கொண்டனர். சீமையாளப் பிறந்த சிங்கக்குட்டி சடாரென்று உடை வாளை உருவிய வண்ணம் பின்தொடர்ந்துவரும் பகைவர்களைத் திரும்பி நின்று தோள்களின் இருமருங்கும் குலுங்கவும். அங்குவடியுடன் கூடிய குதிங்கால்கள் குதிரையின் அடிவயிற்றில் அடங்கொடுக்கவும் பம்மிப்பதுங்கி முன்னும் பின்னும் அசைந்து கொடுத்தது. வீரவாளை, ஓசை பரக்கவும் வினயமாகவும் பளார், பளார் என வீச; நெருங்கிவந்த பரங்கிகளின் தலைகள் உருண்டன.

என்ருலும் பகைவரின் எண்ணிக்கை கணத்திற்குக் கணம் மும்முரமாகக் கூடி வந்து மருதுவை சூழ்ந்து பகைவர்கள் ஈட்டி கொண்டும், வேல், வாள் கொண்டும், மண்டியிட்டு வளைத்துக் கொண்டு மருதுபாண்டியனை குதிரைக் கால்களை வெட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். மரண வாச



RangaRakes tamilnavarasam.com

வில் கூட உயிரைத்திரணமாகக் கொண்டு பண்பையும் அஸ்வசாஸ்திரக்கலையையும்; ஈரமற்ற நெஞ்சங்கொண்ட வஞ்சகப் பரங்கிகளுக்குக் காட்டி மகிழ்ந்தான் பாண்டியர் ஜோதி —

வட்ட வளையத்தில் சிறிது கணம் அசுவத்தை ஆட விட்டான். ஆயுதம் கொண்டு தன்னைத்தாக்கும் பகைவர்களை மின்னல் வேகத்தில் குதித்து முன்னங்கால்களால் மிதித்துத் தள்ளியது. உயர எழும்பிச் சிலரை ஏமாற்றியது. பக்கவாட்டில் சாய்ந்து கொடுத்துச் சிலரைச் சிறுமை கண்டது. இவ்வளவும் இமைப்பொழுதில் நடந்தன. இந்த அஸ்வலீலை நடந்து கொண்டிருக்கும் போது கூடவே பாண்டியன் 12 அடி நீளமுள்ள இரட்டை முகச்சுருள் பட்டாவை எடுத்து நெருப்புப் பொறிகள் தள தளவென பறக்கும்படியாக- வீர்—வீர் என்று வீச பகைவர் எல்லாம் பிணமாயினர். மேலும் எதிரிகள் கூட்டம் கூட்டமாகத் தன்னை நோக்கி வருவதைக் கண்ட பாண்டியன் அசுவத்தைத் திருப்பிக் காட்டுத் திசையை நோக்கினான்: குதிரை நாலு கால் பாய்ச்சலில் பறந்து ஓடிக்காட்டிற்குள் மறைந்தது. இந்தச் சண்டையில் கலந்து கொண்டது முற்றிலும் வெள்ளையர் படை என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கமறவர் வாழும் சிவகங்கைச் சீமை ஒரு சிறிய பாளையமாக இருந்தபடியாலும் அவர்களிடமிருந்த படையினர் அவர்கள் அளவில் பலம் பொருந்தியது என்றாலும் தமிழ் நாட்டையெல்லாம் சுற்றி ஏனைய எத்தனையோ பாளையக்காரர்களை அடக்கியும், சிற்றரசர்கள் துணை கொண்டும்' நவீன படையும், வெள்ளையர் பீரங்கிகளும் 2000 குதிரைப் படையும்: சேர்ந்து தன் முழு பலத்தாலும் வெள்ளையர் நாலாபக்கமும் சூழ்ந்து கொண்டு ஆலகால விஷத்தைப் போல், சீமையைச் சூழ்ந்து கொண்டபடியால்; காளையார் கோயில் — சிறுவயல் — ஆகிய வீரக்களங்களில் போரிட்ட வண்ணம் எதிரிகளிடம் கைதாயினர் மருது சகோதரர்கள் தாம் ஆண்ட நிலத்திலேயே திருப்பத்தூர் கோட்டையருகில்



தூக்கிலிடப்பட்டனர் உலகாளப் பிறந்த சுதந்திரச் சின்னகள் பாஞ்சாலங்குறிச்சியின் புதிய கோட்டையைத் தகர்த்த பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்த மேட்டிலேயே தூக்கிலிடப்பட்டனர்.

## அயுதப் பரிகரண 21-10-1799 சட்டம் அமுல் சேனாதிபதி உத்திரவு

பாளையப்பட்டுக் கலகங்களை எல்லாம் அடக்கிப் பாளையக்காரர்களை கொன்றும் அடக்கியும் முடிந்த பிறகு வெள்ளையர் அதிகார வர்க்கம் பிறப்பித்த உத்திரவு:—

பாளையக்காரர்கள் ஒருங்கே கூடிய சபையில் வைத்து சேனாதிபதி, பானர்மென் உத்திரவைப் படிக்கிறான். ''இனிமேல் உங்கள் பாளையங்களில் கோட்டை மதில்கள் கட்டக் கூடாது. முன்னமே கட்டியிருக்குமானால் அவை முழுவதும் தட்டப்பட வேண்டும். ஈட்டி, வல்லயம், வேல், வாள், துப்பாக்கி, முதலிய ஆயுதங்கள் யாதொன்றும் வைத்திருக்கலாகாது. இன்று முதல் வாரத்திற்குள் உங்கள் வசம் உள்ள எல்லா ஆயுதங்களையும், கலெக்டருடைய ஆபீசில் கொண்டு வந்து சேர்த்து அவற்றிற்கு வகைகளும் தொகைகளும் விவரம் குறித்துத் தெளிவாக விளக்கிக் கை எழுத்துச் செய்ய வேண்டும். இந்தக் கட்டளையை மீறினால் தங்கள் ஜமீனை இழந்து போவதோடு தண்டனையும் அடையப் படுவார். இந்த உத்திரவைச் செப்பேட்டில் எழுதி இந்தநாட்டிலுள்ள முகியமான ஊர்கள் தோறும் பொதுவான இடத்தில் எல்லோரும் அறியும்படி ஒட்டிவைக்க வேண்டும். உங்கள் ஜமீன் எல்லையிலுள்ள குடியானவர்கள் யாரேனும் எவ்வகையான கைக்கருவிகள் வைத்திருந்தாலும் அதற்கு நீங்களே பொறுப்புதார். கும்பினி ஆணையை எவராயினும் மீறினதாக அனுமானிக்கப் பட்டாலும் அவர் கொடுமையான மரண தண்டனைக்கு உட்படுவார் என்று கடுமையான உத்திரவு இடப்படுகிறது அறியவும்:

RangaRakes tamilnavarasam.com

## திருநெல்வேலியில் பாளையப்பட்டு யுத்தம் நடந்தபோது தஞ்சை நாட்டின் நிலை

விஜய நகர மன்னன் அச்சுதராயன் காலத்தில் 1530 42—ஆம் ஆண்டுகளுக்கான காலங்களில் தஞ்சையில் நாயக்க அரசு நிறுவப்பெற்றது. முதன் முதல் வந்த ராஜப்பிரதிநிதி செவ்வப்ப நாயக்கன். அதன் பிறகு 1675ஆம் ஆண்டு தஞ்சையில் மகாராட்டிர ஆட்சி ஏற்பட்டது. அவ்வாட்சி ஆங்கிலேயர் காலம் வரை நீடித்தது.

மதுரையைப் போலவே தஞ்சையும் விஜய நகர ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அது காலை தான் பாளையப்பட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. நாயக்கர்களின் தஞ்சை நிர்வாகம் மதுரை அமைப்பைக் காட்டிலும் சிறிது வேறுபட்டதாகும். தஞ்சையில் அமைத்த மொத்தப் பாளையங்கள் பதின்மூன்று அவைகள் தவிர முடியுடைய தொண்டைமான் சக்கிரவர்த்தியும் தஞ்சையில் ஆட்சி புரிந்து வந்தார்.

ஆட்சியுரிமை செய்தவர்களில் நாயக்க இராஜப் பிரதிநிதியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சோழ அரசர்கள் வழி வந்த கள்ளர் இனத்தினராவர். தெய்வச் செயலாக இங்கு பாளையம் அமைக்கும் போது சாதிப்பூசல்கள் இல்லாது போய் விட்டது. தஞ்சையில் வாழ்ந்த குடியினர்களில் பெரும்பான்மையினர் கள்ளர் வகுப்பினர் எனவே அரச பரிபாலன முறையில் வேறுபாடுகள் உண்டாகவில்லை. தொண்டைமான் சக்கிரவர்த்தியின் செல்வாக்குப் பாளையங்களில் ஒற்றுமை ஏற்பட உதவியது.

மதுரை திருநெல்வேலி இராமநாதபுரம் நாடுகளில் பாளையப்பட்டுக் கொந்தளிப்பு ஏற்பட்ட காலங்களில், தஞ்சாவூர் திருச்சிராப் பள்ளி ஜில்லாக்களில் அவ்வளவு அதிகமாக கலவரங்கள் உண்டாகவில்லை. அன்னியர்கள் தமிழ்நாட்டைப் போர் களங்களாக உபயோகித்தபடியால் அவதிகள் இல்லாமலும் தப்பவில்லை.



தமிழ் வேந்தர்கள் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டின் மேல் கண் வைத்தவர்களில்; ஆர்க்காட்டு நிஜாம், விஜய நகரத்தார், மராட்டியர், மைசூரார் ஆகியவர்கள் முக்கியமானவர்! ஆனால் இவர்கள் தேசியப் பற்றுக் குறைவினால்; ஒருங்கிணையத்தவறி விட்டார்கள். வர, வர ஆதிக்கப் போட்டியில்! கண்மூடித்தனமாகயிரங்கி; அது காலை நாட்டில் ஊசல் ஆடிக்கொண்டிருந்த; ஆங்கில, பிரஞ்சு, டச்சுக் காரர்களின்! நயவஞ்சகத்திற்கு ஆளானார்கள்.

தென் தமிழ்நாட்டில் பாளையப்பட்டு யுத்தம் கோர தாண்டவ மாடிக் கொண்டிருந்தகாலை; தஞ்சையில் மிகவும் செல்வாக்குடன் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருந்த தொண்டைமான் சக்கரவர்த்தி விஜய ரெகுநாதத் தொண்டைமான் 1730-69.

ஒரு சமயம் தஞ்சை அரசன், தனது தளபதி ஆனந்தராவை ஏவிப் புதுக்கோட்டை மீது படை எடுப்புச் செய்து தோல்வி ஏற்பட்டதானது தெரிய வருகிறது. இன்னும் இந்நாட்டு மக்கள் நாட்டுப் பாடல்களில், ஆனந்தராயனை அதிரவெட்டுந் தொண்டைமான் என்று பாடுவதும் உண்டு.

ஐதராபாத்து நைசாமின் தளபதி எண்பதினாயிரம் குதிரைப் படையும் இரண்டு லட்சம் காலாட்படையும் கொண்டு தென்னிந்தியாவின்மேற் படையெடுத்து வந்து, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். அதன் மேல் புதுக்கோட்டையையும் தாக்குவது எனத்திட்டமிட்டிருந்தான். இது தகவல் அறிந்த கூனம்பட்டி நாட்டின் கள்ளர் தலைவர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று சேர்ந்து இரவில் முற்றுகையைத் தாக்கப் பொருள்களையும், குதிரைகளையும் பெரும் அளவில் கொள்ளையடித்து நாசப்படுத்திப் பெருஞ்சேதத்தை உண்டு பண்ணினர்.

இவர்களை ஒடுக்குவதற்கு நைசாமால் அனுப்பப்பட்ட படைத்தலைவன் கள்ளர்களிருக்கும் காடுகளில் புகுந்து

RangaRakes
tamilnavarasam.com

சண்டை செய்ய முடியாமல் நீண்ட நாள் முயற்சிகள் செய்தும் கடைசியில் நாட்டுக் கள்ளர்களிடம் சமாதானம் செய்து கொண்டு திரும்பினான்.

கருநாடக இராச்சிய விஷயமாக மகமதலிக்கும் சந்தா சாகிப்புக்கும் நடந்த சண்டையில், இம்மன்னர் ஆங்கிலேயருடன் மகமதலிக்குத் துணையாய் நின்று, சந்தா சாகிபையும் பிரஞ்சுக்காரரையும் எதிர்த்தார். அதன் பயனாய் இவருக்கு நாடு அதிகம் கிடைத்தது. நவாப்புக்குக் கப்பம் கட்ட வேண்டுவதில்லை என ஒப்பந்தம் ஏற்பட்டது. அது காரணமாகவே தான் தனியரசாக விளங்க முடிந்தது.

மன்னர் தனது நுண்ணிய அறிவினாலே ஆங்கிலேயரின் படை பலத்தையும் திறனையும் நன்குணர்ந்து, இவர்கள் பிற்காலத்தில் எதிரிகளை அடக்குவர் எனத் தெரிந்து அவர்களையே எப்பொழுதும் ஆதரித்து அவர்கள் பக்கமிருந்து வந்தார். அது காரணமாகவே புதுக்கோட்டை மேன்மையடைந்தது.

தொண்டைமான் ஆங்கிலேயர்களுக்கு உதவியதைப் பாராட்டி ஆங்கிலப் படைத்தலைவன் ''சர் அயர் கூட்'' மன்னருக்கு எழுதிய கடிதத்தில் —

'நாடு எங்கணும் போர் புரிந்து வந்த என் கட்சியார் எல்லாரிடமுமிருந்து கிடைத்த செய்திகளில் ஒன்றுதான் எனக்கு வெற்றியைத் தெரிவித்தது. அதாவது, தாங்கள் மிக்க ஆண்மையுடன் உங்கள் நாட்டை அழித்துவந்த பகைவரைத் தண்டித்து நூற்றுக்கணக்கான குதிரைப்படை வீரரைச் சிறை கொண்டதேயாகும். தங்கள் ன்னும் சிறந்த வீரச் செயல்களைச் செய்வீர்களென்று எனக்குமிகுந்த உறுதியுண்டு'' என்று குறிப்பிடுகிறான்.

இந்த யுத்தத்தின் வெற்றியைப் பாராட்டிய நவாப்பால் புதுக்கோட்டை ராஜ்யத்திற்குப் பட்டுக்கோட்டைத் தாலுகா சன்மானமாக கொடுக்கப்பட்டது.



இராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் பகதூர் 1790 ஆம் ஆண்டு திருச்சிமேல் படை எடுத்து வந்த ஐதர் மகன் திப்புவுக்குக் கொடுத்த பலமான அடியை பாராட்டி ஆற்காட்டு நவாப்பு மகமதலி தொண்டைமான் மன்னருக்கு ''ராஜா பாதூர்'' என்னும் சிறந்த பட்டத்தை வழங்கினான். அதன் பயனாய் மன்னர் 1500 குதிரைப் படையும் பட்டத்து யானையும் வைத்துக் கொள்ள உரிமையுண்டு.

இராஜா விஜயரகுநாத ராயத் தொண்டைமான் பகதூர் ஆட்சியில் (1807—1825) மேஜர் ப்ளாக்பர்ன் என்னும் ஆங்கிலேயன் புதுக்கோட்டைக்கு ரெசிடெண்டாக இருந்தமையின் ராஜ்யம் மேலும் விருத்தியாயிற்று.

இக்காலத்தில் புதுக்கோட்டை தாலுகாக்களாகப் பகுக்கப்பட்டது: நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. வரி வாங்குவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். புதுக்கோட்டை நகர் மிகவும் அழகிய நகரமாகியது.

ஹிஸ்ஹைனெஸ் ஸ்ரீ பிரகதாம்பதாஸ் இராஜா ராமச்சந்திர தொண்டைமான் பகதூர் (1839 – 86) காலத்தில் நீதிமன்றங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அரசியலமைப்பும் விருத்தியடைந்தது.

நீதிமன்றங்கள்:
1. அப்பீல் கோர்ட்டு.
2. மூன்று ஜட்ஜிகள் உள்ளசெஷன்ஸ் கோர்ட்டு.
3. ஸ்மால் காஸ் கோர்ட்டு.
4. ஐந்து முன்சீபுக் கோர்ட்டுகள்.

இலாகாக்கள் :

| | |
|---|---|
| வரி வசூல் (ரெவின்யூ) | 6. பங்களா |
| 1. கிராமம் | 7. மராமத்து (இஞ்சினியரிங்( |
| 2. தாலுகா | 8, உப்பளம் (ஆப்காரி) |


tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| ˊ. | காவல் (போலீஸ்) | 9, | காடு (வனத்துறை) |
| 4. | சிறைச்சாலை(ஜெயில் | 10, | நீதிமன்றம் கோர்ட்டுகள் |
| 5, | தபால் | 11, | ஸர்கிள் ஆபீஸ் |

உயர்ந்த அரச மரியாதகள் லண்டனிலிருந்து கிடைத்தது. காலேஜ் மருத்துவமனைகள் விரிவாக்கப்பட்டன,

இராஜ மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் ஜி.சி.ஐ.இ 1886 முதல்.

ஜில்லா நிர்வாக மட்டத்திற்கு புதுக்கோட்டை நிர்வாக பரிபாலனம் உயர்ந்தது.

அரசர் ஜனப் பிரதிநிதி சபையை அமைத்து ஆண்டார். லண்டன் அரண்மனைக்கு விருந்தினராய் வரவேற்கப் பட்டார்.

புதுக்கோட்டை நவாபுக்குக் கப்பம் கட்டாத உரிமை பெற்றது போல் பின்னல் ஆங்கில ஆட்சிக்கும் கட்டாத உரிமை பெற்றது என்ற விபரம் குறிப்பிடத் தக்கதாகும். அது காலை இராஜ்ஜியத்தின் பரப்பு 1200 சதுரமைல் வருட வருமானம் 21 லட்சம்.

தஞ்சையைக் கவனிக்கும்போது நவாபும் கம்பெனியாரு மட்டும் அல்ல மராட்டியரும் நாயக்கருங்கூட தமிழ்நாட்டின் வட பகுதியில் தங்கள் ராஜதந்திர முறையை மாற்றியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

கள்ளர்களையும், கள்ளர்பாளையக்காரர்களையும், கள்ளர் மன்னரையும் மிகவும் மரியாதையாகவும் மேன்மையாகவும் நடத்தியிருக்கிறார்கள். கப்பம் வரிப்பணம் கூட நிதானமாக வசூலித்திருக்கிற விபரம் தெரிய வருகிறது புதுக்கோட்டை அரசரிடம் கப்பம் வாங்கவில்லை எனத் தெரிகிறது.

பாளையக்காரர்களைப் படைத்துணைக்கு மட்டும் உபயோகித்தமை தெரிய வருகிறது. மராட்டியர், மைசூரார்,



ஆந்திரர் முதலியோர்களும் ஐரோப்பியர்கள் நாட்டில் ஊடாடும் போது கலவரங்கள் நடந்தமையும் அவைகளில் கள்ளர்கள் ஆண்மை காட்டியதும் தெரிய வருகிறது.

தஞ்சை நாட்டுத் தமிழரசர், வள்ளல்: குறுநில மன்னர்களாகிய தேவமார்கள் மராட்டியச் சத்திரபதியிடம் வெறுப்புக் காட்டவில்லை. நாட்டில் நல்லாட்சிக்கு உதவினர் என்பது மராட்டியர் வரலாற்றில் துலங்குகின்றது.

அது காரணமாகவே மராட்டியர் அரசு ஆங்கில அரசில் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு ஓர் அளவு அமைதியும் அபிவிருத்தியும் உண்டாகியது தெரிய வருகிறது.

விஸ்வநாத நாயக்கனும், அரியநாத முதலியாரும் வகுத்து வைத்திருந்த பாளையப்பட்டு முறையும் அவைகளை அடக்கியாளாக் குறையும், யுத்தகளங்களாகின. ஆர்க்காட்டு நவாப்பின் பேராசை, அநியாய வரி, அக்கிரம வசூல் முறை போன்றவைகள் யுத்தத்தை மூட்டி விட்டன. தென்னாட்டுப் பாளையப்பட்டு யுத்தம் என்னும் பெயரில் தமிழ்நாடு அழிவுற்றது. பல லட்சம் தேவர் சமூக வீரர்கள் மாண்டனர். பூலித்தேவர், வெள்ளையத்தேவர், வெள்ளையம்மாள், பெரியமருது, சின்னமருது ஆகியவர்களின் வீரத் தியாகமும் ஆனையூர், மேலூர், கோயில் குடி, வள்ளாளபட்டி ஆகிய இடங்களில் வெள்ளையரால் படுகொலை செய்யப்பட்ட 10000 பேர்களின் களப்பலியும், ஆனபிறகு தாய்த்திரு நாட்டிற்கு, அன்று நின்ற நிலையில் அமைதி காணப்பட்டது. இறுதியில் எதிர்த்த அரசுகளையும் ஏனைய சக்திகளையும் வென்று ஆங்கிலேயர்கள் நாட்டைக் கைப்பற்றினார்கள் நம் நாட்டில் இனி அவர்கள் ஆட்சியைப் பற்றிப் கவனிப்போம்.

## இந்திய நேசிய இயக்கம்

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நடத்தும் ஆட்சி இந்தியர்களை அடிமைப்படுத்துகிறது எனக்கண்டறிந்த இந்திய மக்கள் தாய் நாட்டின் சுதந்திரம் அடைய இயக்கம் நாடி

RangaRakes tamilnavarasam.com

னர். இவ்வியக்கம் தென்னிந்தியாவில்தான் முதலில் ஆரம்பமானது. சென்னையிலிருந்த கிருட்டிணசாமி அய்யர் ஜஸ்டிஸ்மணி அய்யர் என்ற இவர்களுடைய யோசனையின் பேரில் 1885இல் காங்கிரஸ் என்னும் பெயரால் சென்னையில் முதல் கூட்டம் நடந்தது. அதற்கு மேல் நடந்த காங்கிரஸ் வளர்ச்சியில் இடம் பெற்றவர்கள் பாலகங்காதரதிலகர் (1 86—1919) காங்கிரஸ் அங்கத்தினர்கள் மனதில் முதல் முறையாக சுயாராஜ்யம் அடைய வேண்டியது காங்கிரஸின் நோக்கமாக வேண்டும் என்பதை பதிய வைத்தவர். 1800-1858 வரை காங்கிரஸ் இயக்கம் தொடர்ந்து பணியாற்றிய பின் விடுதலை உணர்ச்சியை உண்டுபண்ணியதுடன் வெற்றியும் கண்டது.

சி. சுப்பிரமணியபாரதியாரும், வ.உ. சிதம்பரம்பிள்ளையவர்களும் சுப்பிரமணிய சிவா என்பவரும் தமிழ்நாட்டில் தோன்றிய சுதந்திர வீரர்கள். பிற்காலத்தில் வாஞ்சி அய்யர், பாலிசண்முகசுந்தரம்பிள்ளை, வ. வே. சு. அய்யர், ஆகியவர்கள் தோன்றினார்கள். வாஞ்சி அய்யர் ஏழு ஆண்டுகள் சிறைவாசம் அடைந்தார். சிதம்பரனார் செக்கிழுக்க அனுப்பப்பட்டார். அப்போது பாலிசண்முகசுந்தரம்பிள்ளை வந்தே மாதரம் என்ற விடுதலை முழக்கத்தைத் தமிழ்நாடெங்கும் பரப்பினார். நாளடைவில் வி. கலியாணசுந்தரனார். எஸ். சத்தியமூர்த்தி, திலகர், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் நாட்டின் விடுதலை வேண்டி நிற்கவும் செயல் படவுமான காலம். இது சமயம் வெள்ளையர்கள் தங்கள் நிலைமையை அரசியல் அமைப்பின்படி சீர்செய்து கொள்ள இராஜ தந்திர உபாயங்கள் செய்த காலம்.

சட்டபூர்வமாகத் தேசீய அடிப்படையில் இயங்கிவரும் இந்திய தேசீயக் காங்கிரஸின் நிலை சுதந்திர தாகத்தோடு விடுதலைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கும் காலத்தில்; தன்னரசு நாட்டுத் தனிப்பெரும் கூட்டம்; எப்படி மதுரையில் மையங்கொண்டு அரசாங்கம் எந்த வடிவுடன் தம் நாட்டை ஆள வந்தாலும் அவர்கள் பால் எதிர்ப்புக் காட்டி



வந்திருக்கிறதோ; அதே போல, மகராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், வங்காளம், இன்னும் பல்வேறு வடக்கு மாகாணங்களில் அங்கங்கே அரசுகளை எதிர்க்கும் குணமுடைய நாடாண்ட பழங்குடியினர்கள், வெள்ளையர்களுக்குத் தொல்லைகள் கொடுக்கத்தவறவில்லை.

குடியமைப்புடன் தொழில் நடத்தி ஒரு இடத்தில் வாழ்ந்து வராதவர்கள் நாடோடிகளாகக் கூடாரங்களில் வாழ்ந்து காடு பரதேசமாய் வாழ்ந்தவர்கள். சில சமயங்களில் இவர்களைக் கட்டுப்படுத்தி ஆளுவதே சிரமமாக இருந்து வந்தது. இந்த சிரமத்தைப் போக்கி ஆட்சிக்குப் பலம் தேடிக் கொள்ளும் பொருட்டும் அரசாண்ட பரம்பரைக் கூட்டத்தை ஒடுக்கும் பொருட்டும் மத்திய சர்க்கார் மட்டத்தில் சட்டபலம் தேவை என அரசு கருதியது.

தேசீய இயக்கத்தை அரசியல் ரீதியில் அடக்கவும்; தேசிய பரம்பரைத் தன்னரசு மனப்பான்மையுடைய மக்களைச் சட்ட பூர்வமாக ஒடுக்கவும் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாய் 1911-ஆம் ஆண்டு மத்திய சர்க்கார் சட்டம் பிரப்பித்தது. அந்தச் சட்டம்தான் 1911ஆம் வருஷத்திய குற்ற பரம்பரைச் சட்டம்.

இந்தச் சட்டம் மக்கள் போக்குவரத்தைத் தடை செய்து நடமாட்டம் போலீஸ் கண்காணிப்பில் வைக்கப்படும். போலீஸ் அனுமதியின்றி இடம் பெயர்ந்தால் சட்டப்படி தண்டனைக்குள்ளாக வேண்டும் என்பதாகும். இந்தச் சட்டம் மனிதன் சுதந்திரமாக வாழமுடியாதபடி ஒடுக்கும் காட்டுமிராண்டிச் சட்டம் என்று சட்டசபையில் வல்லபாய்ப்பட்டேல் எதிர்த்தும் கூட ஏதேச்சாதிகாரமாக அரசு சட்டத்தை நிறைவேற்றியது.

அது காலை இக்கொடிய சட்டத்தைக் கண்டு நெஞ்சம் கலங்கிய பாரதவீரர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள்

''விண் முட்டிச் சென்ற புகழ்போச்சே,
மேதினியில் கெட்ட பெயராச்சே''

எனப் பெருமூச்சு விட்டார்

RangaRakes tamilnavarasam.com

# தமிழகக் காவல் முறை

தமிழகத்தில் காவல்முறை தொன்றுதொட்டு இருந்து வந்த ஒரு பழமையான ஆட்சிமுறை அடிப்படை கொண்டதாகும். சிற்றரசனுக்குத் தகுந்த உயர் மட்டத்திலிருந்து, படிப்படியாகப் பலதிரப்பட்ட காவலர்களிருந்திருக்கிறார்கள் காவல் அந்தஸ்து எத்திரப்பட்டதாயினும்; அரசின் அதிகாரம் பொருந்திய தன்மையுள்ளதாக இருந்திருக்கிறதென தெரியவருகிறது. இதற்கு நாடுகாவல், திசைகாவல் பரவுகாவல். தேவஸ்தானக்காவல்; ஏரி, குளம், கால்வாய்க் காவல், வனக்காவல், கிராமக்காவல், குடிக்காவல் என்பன போன்ற பெயர்களுண்டு காவல் பொறுப்பு ஏற்பவர் அரசு ஆணைப்படியேயாகும்: அக்காலத்தில் முடியுடன் கூடிய சேது மன்னர்க்கும், சேது காவலர் எனப்பட்டமிருந்து வந்தமை தெரியவருகிறதன்றோ: ஒரு பெரிய சக்கிரவர்த்திக்கும் காவலன் என்பது சிறப்புப் பட்டமாகவிருந்தமையும் தெரிகிறது.

அரசாங்கத்தில் காவல் பொறுப்புகள் ஒப்படை செய்யுங் காலங்களில்; மன்னர்களின் நன்மதிப்பிற்குப் பாத்திரப்பட்டவர்கள்; நாட்டுத் தியாகிகள் முதலிடம் பெற்றமையை தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன. இவைகள் யாவும் அக்காலங்களில்; கண்மாய்கள்; கால்வாய்கள், சத்திரங்கள், சாவடிகள், தேவஸ்தானங்கள், கிராமங்கள் ஆகியவைகளுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள், ஏற்படுத்தியிருக்கும் சாசனங்கள், வழங்கியுள்ள மான்யங்கள், முதலானவைகளிலிருந்து புலனாகின்றன.



காவல் முறையை எவ்வாறு பிற்காலங்களில் பயன்படுத்தினார்கள் என்ற விவரம் கர்நாடக நவாப்பு ஆற்காடு நவாப்பு மதுரை நாயக்கர்கள் கும்பினியார்கள், பிரிட்டிஷ் அதிகாரிகள் நிர்வாகமுறை ஆகியவைகள் விளக்குகின்றன. மிகமுக்கியமாக: அரியநாதமுதலி, திருமலைநாயக்கன், கான்சாகிப். சென்னை ரிவின்யூ போர்டார் ஆகியவர்கள் காவல் முறையின் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்திருந்தார்கள் என்பதும் அவர்கள் அதை ஆட்சிமுறை மாற்றத்தில் ஈடுபடுத்தும்போது மேலும் நல்ல பலன் அளிக்கத் தக்கனவாகவிருக்கவேண்டுமென்பதை விரும்பினர் என்பதும் தெரிந்தே.

இந்தக் கட்டத்தில் காவல்முறை வரலாறு மாற்றம் ஆகுங்காலத்து; காவல் முறையோடு; தமிழ் மன்னர்கள் காலத்தில் இணைந்து வளர்ந்து வந்த தன்னரசு ஆட்சிமுறை அதாவது வேளிர்கள், குறுநில மன்னர்கள், ஆட்சியானது ஆரம்பத்திலேயே அழிக்கப்பட்டது. மிக முக்கியமாக மதுரையைச் சுற்றிலுமிருந்து வந்த 10 நாட்டுத் தன்னரசுத் தலைவர்களையும் நாட்டையும் அழித்தது திருமலைநாயக்கன் ஆட்சியே. அப்படி அழிக்கப்படாமல் விட்டு வைத்த அதிபர்கள் பலர் நாட்டிற்கு உதவியாகயிருந்தனர் என்பதற்கு உதாரணம் திருமலை பின்னத்தேவர். ஆட்சிமுறை தூங்க தேவர் பாடிகாப்பான் முறை உதாரணமாகும். இவர்கள் ஒடுக்கப்படாமல் குறுநில மன்னர்களாக நீடித்து இருந்திருப்பார்களேயானால் நாயக்கர் ஆட்சியும் வீழ்ச்சியடைந்திருக்காது, தன்னரசுத் தலைவர்கள் பாளையப்பட்டுகளாக மறுத்தது அவர்களை ஆதரிக்காததற்கு ஒரு காரணமாகாது.

இனி காவல் முறை எப்படி எல்லாம் நிலைத்திருந்து விளங்கிற்று என்பதற்கு ஆன ஆதாரங்களைக் கவனிப்போம். காவல் நிர்வாகத்தின் பொறுப்பிலிருந்து வந்தவர்களை; நாட்டார்கள் நாட்டாண்மைக்காரர்கள் அல்லது அம்பலக்காரர்கள் என்று அழைத்தனர். உதாரணமாக தஞ்சை ஜில்லாவில் மேற்குப்பக்கத்திலுள்ளவர்களில் ''காங்கய அம்பலக்காரரை முதன்மையாகச் சொல்லலாம். அவர்

RangaRakes tamilnavarasam.com

களுக்கு சென்னைபட்டினம் வரையில் காவல் கிராமங்கள் இருந்தன என்பர். அடுத்தபடியாக; இராயமுண்டார், சோழகர், சோழகங்கர், மேல் கொண்டார், நாட்டரையர் செம்பியன்முத்தரசு, வன்னிமுண்டார், கொடும்ராயர், கண்டிராயர் முதலியவர்களைக் கூறலாம். இதிலிருந்து இன்னார் இன்னாருக்கு, இன்னின்ன கிராமங்கள் விளங்கும். காவல் கிராமங்கள் என்பதில் இவர்களுடைய உரிமையும் கடமையும் என்ன என்று பார்ப்போம்.

பழைய நாளில் இவர்கள் அரசு காவல் முறி பெற்றமைக்கு ஆதாரமாக சில சான்றுகள் அடியில் வருமாறு:

No. 1. ''ஈசுவர ௵ ஆவணி ௴ 15௳ வாலி கொண்டாபுரம் சீமை வெண்பாளுட்டில் கூரையூரைச் சேர்ந்த வட வின்னம் பூண்டியிலிருக்கும் இருசப்பநாயினர், முத்துக்கருப்ப உடையார், நாங்களிருவரும் ஏரிமங்கலம் நாட்டில் விண்ணனூர்ப்பட்டியிலிருக்கும் பல பத்திரச் சோழகனர் குமரர்குஞ்சான் சோழகனர்க்கு மேன் காவல் பொறுப்பு முறிகொடுத்தபடி முறியாவது: வட விண்ணம்பூண்டி மாகாணத்தில் ரயத்து உடையார் கிராமம் உட்பட நம்முடைய கிராமம் 12. இந்தப் பன்னிரண்டு கிராமத்துக்கும் வருடம் ஒன்றுக்குப் பொறுப்பு கட்ட 12 பொன் கொடுத்துக் கொண்டுவர வேணுமாகவும். இந்த மேன் காவல் கல்லுங்காவேரி புல்லும் பூமி உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொண்டு சுகத்திலேயிருப்பீராகவும்''.

No. 2. அக்ஷய ௵ தை ௴ 7 ௳ முத்துலிங்க ரெட்டியார் கிராமமான துறைமங்கலம் அகரங் குடியான பொளே துறைமங்கலத்தில் இருக்கும் லெட்சுமண ரெட்டியார் நல்லப்ப ரெட்டியார், காளத்தி ஏறம ரெட்டியார், பூசாரி சின்னத்தம்பி உடையார், கலிதீர்த்த உடையார், ரெட்டைப்பச்சை உடையார், அகரத்திலிருக்கும் மகாசனங்கள்:



கொண்டையா, நரசய்யா, லிங்கையா மன்னக்கோன், மரவைக்கோன், பெருச்சிக்கோன், நாங்கள் அனைவரும்; ஏரிமங்கல நாட்டிலிருக்கும் கருத்தக்காங்கயர், வேலாயுதச் சோழகர் இவர்களுக்கு மேன் காவல் முறியெழுதிக் கொடுத்தோம். இதற்கு வருடம் ஒன்றுக்குப் பொறுப்பு, மதுரை சக்கரம் 10. இந்தப் பத்துப் பொன்னுக்குக் கறுத்தக்காங்கயர் பாதிக்கு ஐந்துபொன்னும் ஆகப்பத்து பொன்னும் வருஷா வருஷம் சம்மதித்து நாங்கள் அனைவரும் காவல் முறி கொடுத்தோம்: சாஷிகள் சிறுவாச்சூர் நல்லப்ப ரெட்டியார், பெருமயிலூர் நல்லப்ப ரெட்டியார், —நாட்டுக் கணக்கு ரெங்கநாதபிள்ளை.

No. 3. தாது ௵ வைகாசி ௴ 17௳ ஏரிமங்கலம் நாட்டிலிருக்கும் கறுத்த காங்கய அம்பலகாரர், கீழ்த்தூவாகுடியைச் சேர்ந்த செங்கிபட்டியிலிருக்கும் ஓத்தய மேல் கொண்டார் அம்பலகாரர் கருவிப்பட்டியிலிருக்கும் இராமையமேல் கொண்டார் அம்பலக்காரர் இவர்களுக்குக் கூகையூர் சீமை நாட்டார் சொக்கநாத உடையார், மற்றமுள்ள உடையார் கிராமத்துக் குடியானவர்கள் ஆகிய நாங்கள் மேன் காவல் பட்டயம் எழுதிக் கொடுத்தோம், மேன் காவலாவது: கூகையூர், மாமாந்தூர், வீரபயங்கரம், கறுத்துளகுறிச்சி இந்தக் கிராமம் நான்கும் பொறுப்பு—மதுரைச் சக்கரம் பொன் 20. செந்துஅளம்பாளம், கிருஷ்ணுபுரம் பெருமாள்பாளையம், சிந்தேரி, நரையூர், வடபாதி அரசாங்குடி சிறுபாக்கம்; உறத்தூர், திருவாலந்துரை, மாவிலிவகை, ஆண்டியாபடம் ஆகிய இருபது கிராமத்துக்கும் பொறுப்பு மதுரைச் சக்கரம் பொன் 10 இந்த இருபது கிராமம் உட்படக்கிராமம் இருபத்திநான்கும் பொறுப்பு மதுரைச் சக்கரம் பொன் 20 இந்தப்படிக்கிச் சம்மதித்து மேன்காவல் பட்டயங்

RangaRakes tamilnavarasam.com

கொடுத்தோம். இதற்குச் சாட்சி சிகம்பூர் பெரிய உடையார், சிறுமதுரை திருமேனிப்படையாச்சி. நாட்டார் கள்ளர் சரித்திரம் பக்கம் 126. இன்னோர்கள் தாரரின் காவல் வழக்கத்தைக் குறித்துமேலும் மதுரை ஜில்லா கெஜட்டியரில் கூறியிருப்பதும் அடியில் காணவும், மேலே கண்டவைகள் தஞ்சையைப் பொருத்ததாகும் இது வெள்ளையர் ஆட்சியில் அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ வெளியூடு.

Important source of income to the Kallan is the Kudi-kaval fees which he levies, on other castes. To almost every village or group of village the Kallan have appointed as kavalgaran, or watchman who is remmunrated by the villages in various ways, such as by fees, on each plough, proportions of the crops harvest and so on In big villages andtowns fees of this kind are paid by each house holders of importance whether he owns land or not. In Madurai town for a example fees are paid to the Kallans of the adjacent village of Kellakudi. In return forthese emolument the Kallans under take to protect thevillage or person from theft by their fellow Castemen andto get backaany pro-perty which may be stolenIn some casesthey have even executed awritten agreement to do this andsuits have actually been filed for non performance of thecontracts.''

இந்தக் குறிப்பிட்ட பிரசுரம் மதுரை ஜில்லாவில் பிரமலைக் கள்ளர்கள் பால் நடைமுறையிலிருந்து வந்தனவற்றை விளக்குகிறது. இது போலவே அதாவது தஞ்சையிலும், மதுரையிலும் இருந்து வந்த முறைகள் இராமநாதபுரம் திருநெல்வேலி ஆகிய ஏனைய மாவட்டங்களிலும் நடைபெற்றமை யாமறிந்ததே : திருநெல்வேலி மானுயலில் மிஸடர் ஸ்டுவர்டு கூறுவதாவது:—



திருநெல்வேலியிலுள்ள மறவர்கள் அல்லது வன்னியர்கள் என்ற வகுப்பினர்கள் பரம்பரையாகக் காவல் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள்: 18-வது 19-வது நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்களுடன் சண்டை போட்டார்கள். இவர்கள் பாளையக்காரர்களாய் இருந்தார்கள். [illegible], உற்சாகம் தந்திரம், வாய்ந்தவர்களாயிருந்தார்கள் [illegible] சண்டை நடந்த காலங்களில் விவசாயிகள் இவர்களைத் தங்கள் சொத்துக்களுக்குக் காவல்காரர்களாக நியமித்தார்கள். இவர்கள் கொள்ளைக்காரர்களையும் திருடர்களையும் அடக்கினார்கள். நல்ல கோட்டைகள் கட்டி வாழ்ந்தார்கள்: அன்னிய படை எடுப்பின் போது அவர்களை அடக்கி ஒழிப்பதற்கு உதவியாக விளங்கினார்கள். இவர்களின் வேலைக்காரர்கள் கிராமங்களில் சென்று காவல் கூலி வசூல் செய்து வந்தார்கள் : அதிகாரம் பெற்றிருந்தார்கள். திசை காவலும் கிராமக் காவலும் இக்காலத்தில் அமுலிலிருந்தன : (Colonel Fullstan) திருநெல்வேலியைப் பற்றி எழுதும் போது:— நாட்டில் மிகுந்த நிலமுடையவர்கள் 32 பேர்கள் இருந்தார்கள் இவர்களுக்குச் சொந்தமான கோட்டையும் படையினருமுண்டு. பாளையக்காரர்களாகவும் விளங்கினார்கள். கொந்தளிப்பான காலங்களில் நீர்வையும் செலுத்த மாட்டாமல் கிராம மக்கள் இவர்களிடம் தங்கள் சொத்துக்களை காத்துக் கொடுக்கும்படியாக ஒப்படைப்பதுண்டு. அதற்கு மக்களிடமிருந்து பணமும் வசூலித்துக் கொள்வார்கள்.

இப்படியாகவிருந்து வரும் நாளில் நவாபின் ஆட்சிப் பொறுப்பு ஓய்ந்து கும்பினியார் ரெவின்யூபோர்டு அமைத்து நாட்டில் அரசியல் ஸ்திரப்பட்டது முதல் பாளையப்பட்டுப் பலம், தன்னரசு நாட்டுச் சுதேசி நிர்வாகம், வரி வசூலிப்பு ஏஜெண்டு முறைகள் எல்லாம் பல்வேறு முனைகளிலும் மாறு தலடைந்து விளங்கின. நாட்டு மக்கள் நிலையும் காவல் தொழிலும் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. விழிப்



RangaRakes
tamilnavarasam.com

புணர்ச்சியுடன் அரசியல் போக்கை அனுசரித்து வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளாமல் நாட்டுப்பற்று, தான் கைக் கொண்ட சுதந்திர வேட்கை, அன்னியர் வெறுப்பு ஆகியவைகளை வைத்துக்கொண்டிருந்தனர் மிகையானோர் அவர்களில் பெரும்பகுதியினர் பிற்காலத்தில் செழிப்பு காண வில்லை. சொல்லொணாத் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளானதாகவே சரித்திரம் காட்டுகிறது,

**பண்டுக்கலகம்**

திண்டுக்கல் தாலூகாவில் 1894-ல் மூண்ட கலகம் கிராமக்காவல் முறையின் அடிப்படையில் ஏற்பட்டதெனச் சொல்லலாம். திண்டுக்கல் தாலூகாவில் பிரமலைத் தேவமார்கள் சிறு பான்மையினர், ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வீடு அல்லது இரண்டு வீடுகள் தானிருக்கும். சில இடங்களில் கூடுதல் வீடுகளுமிருக்கும். கிராமத்தில் பெரும் பான்மையாக இவர்கள் வசிப்பது அபூர்வம். கிராமக்காவல் தொழில் செய்து வந்தவர்கள் என்றாலும் நிலம் வீடுவாசல், ஆடு மாடுகள் மிகையாகவைத்து சிறப்பாக பெருத்த விவசாயம் செய்து வந்தார்கள் திண்டுக்கல் தாலூகாவில் உசிலம்பட்டி என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அந்த ஊருக்குக் கிராம முனிசீப் இடையர் வகுப்பைச் சேர்ந்த அம்மையப்பக் கோனார் என்பவனாகும். பெரிய விவசாயி தன்னுடைய கிராம அளவிலும் சுற்று வட்டாரங்களிலும் செல்வாக்குடையவன். பக்கத்துக் கிராமங்களில் வழக்கு வம்பு முதலிய விவகாரங்களில் ஈடுபடுவது, அண்டை அடுத்தவர்கள் மீது அதிகாரம் செய்வது போன்ற காரியங்களில் ஈடுபடும் காரியக்காரன். இவனுக்கு அடங்கி நடக்காதவர்கள் மீது மக்களை ஏவிவிட்டு சச்சரவை உண்டு பண்ணி எதிரியைப் பலஹீனப்படுத்துவது இவன் தொழில், சில சமயங்களில் காவல் செய்து வரும் கள்ளர்களை அடியாட்களாக உபயோகப்படுத்தி பிறர் மீது பகைகொள்ளச் செய்தும். ஒரு காவல் எல்லைக்கும் மற்றொரு காவல் எல்லைக்கும் தகராறும் சண்டையும் மூட்டி விடலானான். அது காலை உசிலம்பட்டிக்குப் பக்கத்தில் அறுப்பன்



பட்டி என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. அங்கு கருப்பத் தேவன் என்று ஒரு விவசாயி இருந்தான் இனுக்குக் கிராமக் காவல் தொழில், நல்ல விவசாயமும் கூட; சரியான வாலிபன் யாரும் கண்டு கவரும் வண்ணம் சர்வலக்ஷணங்களும் கூடிய ஒரு அழகான தோற்றமும், அதற்கு ஏற்ற உடல் பலமும், சிலம்பும் குஸ்தி ஆட்டபாட்டம் முதலான கலைகளும் வேகமாக ஓடும் சக்தியுமுடையன்: எப்படியோ அம்மையப்பக்கோனுக்கு கருப்பத்தேவனைக் கண்டால் பிடிக்காமல் போய்விட்டது. கருப்பத்தேவனைத் தனக்குப் பணிவாக நடக்கும்படியாக எண்ணங்கொண்டான். துர் அதிர்ஷ்டவசமாகக் கருப்பத்தேவனுக்கு அம்மையப்பக் கோனானைக் கண்டலே வெறுப்புண்டாகியது. நாளடைவில் இருவருக்கும் வெளிப்படையாகப் பகை மூண்டது.

முதன் முதலாக அம்மையப்பக்கோனான் கருப்பத் தேவன் காவல் தொழிலுக்கு இடைஞ்சல் செய்தான். இவன் காவல் பூமியில் திருடுகளை உண்டாக்கினான். இவர்கள் விவகாரம் கிராமப் பஞ்சாயத்துக்கும் கோர்ட்டுக்கும் போனது. நீ பெரியவன் நான் பெரியவன் என்று வாய் பேசிக்கொண்டு இருவரும் ஒருவர்க்கொருவர் சபதங்கள் செய்து கொண்டார்கள்.

கிராமப் பஞ்சாயத்தில் விவகாரங்கள் நடக்கும் காலங்களில் கருப்பத்தேவன் ஒத்த விட்டுக்காரனை விருந்தபடியால் பக்கத்துக்கிராம மக்கள் ஆட்துணை செய்தார்கள். கோனார் அப்படியாக கருப்பத்தேவனுக்கு துணையாளாக வருபவர்கள் மீதும் பகைமை காட்டினான். கோனார் நடவடிக்கைக்குத் தாக்குப் பிடிக்கும் வகைக்கு சுற்றுப்புறக் கள்ளர்கள் சேர்ந்து நிற்க வேண்டியதாயிற்று. அந்த அளவில் கூடியவர்கள் எல்லோரும் காவல் தொழில் செய்து வந்ததால் காவல்காரர்கள் கூட்டம், கோனார் கூட்டம் என்று கோஷ்டி உருவாகியது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனது அரசாங்க அந்தஸ்தையும் உபயோகித்து திண்டுக்கல்

RangaRakes
tamilnavarasam.com

தாலுகா மட்டத்தில் உள்ள எல்லாக் காவல்காரர்களுக்கும் விரோதமாகக் காவல்காரர்கள் (கள்ளர்கள்) அல்லாத ஒரு தனித்த கட்சியை உருவாக்கினான். அறுப்பன்பட்டிக் கருப்பத்தேவன்தான் பகைவன் என்றாலும் அவனைச் சார்ந்த அவன் ஜாதி மக்களையும் அவர்கள் செய்து வந்த தொழிலையும் ஒழிக்கும் நோக்கத்தில் கள்ளர்கள் அல்லாத எல்லாச் சாதியார்களும் ஒருங்கிணைந்த கட்சியை அமைப்பக்கோன் உருவாக்கினான். பல்வேறு இடங்களில் கூட்டம் கூடி வரி வசூல் செய்து அப்படி அமையும் நிதிக்குப் ''பண்டு'' நிதி என்றும் அவர்கள் கூட்டத்திற்குப் ''பண்டு'' கூட்டம் என்றும் பெயரிட்டு கட்சியை வலுவடையச் செய்தபின், கள்ளர்களுக்கு யாவரும் காவல் கூலி கொடுக்கக்கூடாது. இவர்களைக் காவல்காரர்களாக ஏற்றுக் கொள்ளவும் கூடாது. ஊரில் குடியிருக்கவும் அனுமதிக்கப்படாது. இவர்களுக்கு வண்ணான், அம்பட்டன் சேவை செய்வதையும் தடை செய்யவேண்டும், பல வழிகளிலும் துன்புறுத்த வேண்டும் என்று பிரசாரம் செய்து செயல்படுத்தவும் துவங்கி விட்டார்கள்.

கள்ளர்கள் அல்லாதவர்கள் கூடிக் கள்ளர்களை எதிர்ப்பது என்று கட்டுப்பாடான முறையில் ''பண்டு'' சேர்ந்து சண்டை துவங்கியதால் கள்ளர்கள் பால் அன்பும் அனுதாபமும் உடையவர்கள் கூட இவர்களுக்கு உதவ முடியாத நிலை ஏற்பட்டது. சில நாளில் பல இடங்களில் சண்டை மூண்டு போலீசுக்கு ரிப்போர்ட்டுகள் செய்யப்பட்டன. சிறுபான்மையானவர்கள் ஆடுமாடுகளைப் பிடுங்கிக் கொண்டு விரட்டியடிக்கப்பட்டனர். சில இடங்களில் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த நிலையில் அநேகர் தங்கள் சொத்துக்களைக்கூட விட்டுவிட்டுத் தங்கள் பூர்வீக நாடாகிய பிரமலை நாட்டிற்கு திரும்பி விட்டார்கள்.

அறுப்பன்பட்டிக் கருப்பத்தேவன், தாலுகாவில் அதிகமான கள்ளர் மக்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று அங்கங்கே தானும் பண்டு சேர்த்து எதிர்ப்பை தாக்குப்பிடிக்கும்



நிலையை உருவாக்கினான். கள்ளர்கள் சிறுபான்மையினர் என்றாலும் நல்ல வீரமுடையவர்கள் ரோசமாகச் செயல்படக் கூடியவர்கள். சமயோசிதமாகச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நிலைமைக்கு நிகர் உயர்ந்து தாக்குப்பிடிக்கும் தன்மையுள்ளவர்கள். ஒரு வீடு, இரண்டு வீடு உள்ள ஊர்க்காரர்கள் சொந்தம் கூடுதல் வீடுகளுள்ள ஊர்களுக்குப் போய்விடும்படியாகவும் முடியாத நிலையில் உள்ளவர்கள் பிரமலை நாட்டிற்கே போய்விடும் படியாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கள்ளர்கள் பண்டிற்கு, பழனி, நிலக்கோட்டை, திருமங்கலம் தாலுகா எல்லா இடங்களிலிருந்தும் உதவிகள் கோரினர்.

நாளடைவில் நிலைமை மோசமாகி, கிராமங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. கொள்ளையும் கொலையும் நடந்தன. கள்ளர் எதிர்ப்புப்பண்டு மிகவும் விரிவாகப் பெருகி நிறையப்பணமும், அடியாள் படையும் வைத்துக் கொண்டு ஒரே அடியாக வடக்கிலிருந்து நடவடிக்கை எடுத்துத் தெற்குநோக்கி ஊர் ஊராகக் கள்ளர்களைக் கிராமத்தை விட்டுக் காலி செய்து கொண்டே புறப்படலாயினர். எங்கு பார்த்தாலும் மக்கள் தலைவிரிகோலமாக ஓட ஆரம்பித்தனர். கள்ளர்களுக்கு அளவிலா நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டது. சர்க்கார் நடவடிக்கை எடுத்தும் கூட கள்ளர்களைக் காப்பாற்ற முடியவில்லை. காவல் வேலையிலிருந்து நீக்கப்பட்ட கள்ளன் கைப்பொருளையும் இழந்து வீடு வாசல்களை விட்டு உயிர் தப்பினால் போதுமென்று பிள்ளை குட்டிகளோடு வெளியேறி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கள்ளர்கள் பண்டுத் தலைவன் கருப்பத் தேவன் தன் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு பாதிக்கப்பட்ட விடங்களிலிருந்து ரிப்போர்ட்டுகள் நூற்றுக்கணக்கில் போலீசுக்குப் போய்ச் சொல்லும் படியாகச் செய்து வெளியிடங்களுக்கும் தகவல் அனுப்பி விட்டு அறுப்பன்பட்டியை தனது மையகாரியாலயமாக வைத்துக் கொண்டு நாட்டு மக்களைக் காக்

RangaRakes

tamilnavarasam.com

கும் பணியைத் தொடங்கினான்:- 1. அறுப்பன்பட்டி, 2. மேட்டூர், 3. நெல்லூரர் மத்தணம்பட்டி

இது சமயம் சர்க்கார் நடவடிக்கை எடுத்து கள்ளர்களுக்கு ஆதரவான விளம்பரம் செய்தார்கள் கிராமச் சிப்பந்திகள் மூலமும் போலீஸ சவான்கள் மூலம் பிரசித்தம் செய்யலாயிற்று.

“அம்மையப்பக்கோன் பண்டு திரட்டி கள்ளர்களைத் துன்புறுத்தி வருவது சட்ட விரோதம், தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கள்ளர் மக்கள் வீட்டை விட்டு ஓட வேண்டாம். உங்களுக்கொரு துன்பம் செய்கிறவர்களை ரிப்போர்ட் செய்யுங்கள் என்று கள்ளர்கள் அறிவித்தார்கள்”

அறுப்பன்பட்டிக்குப் பக்கத்தில் மத்தணம்பட்டி இருக்கிறது. இந்த ஊர் பூராவுமாகக் கள்ளர்களைக் கொண்டது. பெரிய விவசாயிகள் மகாவீரர்கள் இருந்த ஊராகும். மத்தணம்பட்டி என்றாலே அம்மையப்பனுக்கு நடுக்கம் வரும். இந்த ஊரை தாக்கித் தீக்கிரையாக்கி யாவரையும் கொன்று விட வேண்டுமென்று எதிர்ப்புக் கூட்டத்தார்கள் சதிசெய்து அதே ஊரைச் சுற்றிலுமுள்ள 40 கிராமக் கள்ளர்கள் அல்லாத மக்களை ஒன்று திரட்டினான். வயது வந்த அத்தனை பேர்களும் ஆயுதபாணிகளாக வண்டிகளில் ஆகாரம் ஆயுதம் சகிதம் வரவேண்டும் என்றும் மத்தணம்பட்டியைச் சுற்றி வளைத்து முற்றுகை போட வேண்டும் எல்லோரும் வெள்ளிக்கிழமை இரவு நடுநிசிக்கு மத்தணம்பட்டி வந்து சேரும்படியாகப் புறப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருந்து அதன்படி நடவடிக்கை எடுத்தார்கள். இது ஒரு ரகசியத் திட்டம்.

இந்த ரகசியத் திட்டம் எப்படியோ கொங்கர் குளத்திற்கு எட்டியது. அங்குள்ளவர்கள் மத்தணம்பட்டிக்கு நெருங்கிய தாய் பிள்ளைகள். அங்கு சிலம்பப் பள்ளி ஒன்று உள்ளது. நன்றாகப் பயிற்சி பெற்ற பயில்வான்கள் இருந்தனர். இவர்களில் பனிரெண்டு பேர்கள் தக்கஆயுதங்களுடன் மத்தணம்பட்டிக்கு வெள்ளிக்கிழமை முன் இரவே வந்து



சேர்ந்தார்கள். இவர்கள் மூலமாகத்தான் மத்தணம்பட்டி திடீரெனத் தாக்கப்படபோவது தெரிய வந்தது. வெகு சமீபத்தில் இருந்த கருப்பத்தேவன் வந்துசேர்ந்து இரவோடு இரவாய் இவர்கள் தயாராகும் சமயம் முற்றுகையினரும் ஊரைச் சுற்றி வளைக்க ஆரம்பித்துவிட்டனர்.

எங்கிருந்து வந்தார்கள் இத்தனை பேர்களும் என்று கண்டவர் வியக்கும் வண்ணம் 10000 பேர்கள் அடங்கிய கூட்டம் மத்தணம்பட்டியை இரவோடு இரவாக வந்து சூழ்ந்து கொண்டது. 200 வண்டிகளில் வேலிமுள்களை அங்காங்கே இருந்து கொண்டு வந்திருந்தனர். அவைகளைக் கொண்டு பலமான வேலியை இரவோடு இரவாய் அமைத்து ஊர் மக்கள் ஓடாவண்ணம் தடுத்து நிறுத்தி விட்டனர். நல்லவேளையாக சிற்றூருக்கு 200 கஜம் அப்பால் அவர்கள் வேலி அமைந்திருந்தது. எனவே எதிர்ப்புக் கூட்டம் கண்ட இடங்களில் நுழைவது தடுக்கப்பட்டது.

40 வீடுகளையுடைய சிற்றூரின் ஜனத்தொகையே 200 தானிருக்கும்; ஆனால் கொங்கர் குளத்திலிருந்து வந்திருந்த 12 பயில்வான்களும் பயிற்சி பெற்ற ஒரு பெரும் சைனியத்தை எதிர்த்து நிற்கக் கூடிய வல்லவர்கள். கருப்பத்தேவனின் மெய்க்காப்பாளர்கள் 10பேர்கள் எப்போதும் கூடவேயிருப்பவர்கள். இவர்கள் தற்கொலைப் படைக்கு ஒப்பானவர்கள். பொறுக்கி எடுக்கப்பட்ட பிரம்மச்சாரிகள். இவர்கள் எல்லாம் அன்று இல்லாமலிருந்தால், மத்தணம்பட்டி தரைமட்டமாகியிருக்கும், மக்கள் எல்லோரும் அழிக்கப்பட்டிருப்பர்.

வீட்டை விட்டு வெளியேறிப் பண்டுப்படையைச் சந்திக்கு முன்னர் தாங்கள் உயிர் தப்ப முடியுமாவென்றும் இந்தப்படை போய்க் கூட்டத்தை உயிர் உள்ள மட்டும் கொன்று குவிக்கவேண்டும் என்றும் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். தாக்கும்படியாக சமிக்ஞை கொடுத்தவுடன் நான்குபுறமும் எதிர்த்து நிற்கவேண்டியவர்கள், மையத்தில் மண்டியிட்டு நான்கு திசையும் நோக்கி பதுங்க

RangaRakes tamilnavarasam.com

வேண்டியவர்கள் என்றெல்லாம் திட்டமிட்டுவிட்டு பின் ஆயுதபாணிகள் எதிரிகள் மேல் நெருங்கி நின்று தாக்கும் போது அவர்கள் வீசும் கற்கள் மேல் விழாதபடி 'முறத்தை' கேடயமாக உபயோகித்துத் தடுக்க வேண்டும் என்றும் திட்டமிட்டனர்.

கருப்பத்தேவன் தன்னுடைய மெய்க்காப்பாளர்கள் இருவர்கள் இரண்டு கைகளிலும் கட்டக்கம்பி, கம்பு, கல் தடுப்பு [illegible] தயாராக வைத்துக் கொண்டனர். [illegible] யில் கட்டப்பட்டுமிருக்கச் செய்து கொண்டான். வெளியிலிருந்து ஆரவாரமும் கூச்சலும் வானைப் பிளந்தது. நன்கு வெளிச்சம் தெரிந்தவுடன் சுமார் ஆறரை மணிக்கு தாக்குதல் சமிக்ஞையை கருப்பத்தேவன் கொடுத்துவிட்டு ஊர் மந்தையிலிருந்து கிழக்கு நோக்கிப்பாய எல்லோரும் அப்படியே செய்து அவரவர் நிலைகளில் இடம் பிடித்தனர். இந்த ஊர் சுப்பிரமணிய ஸ்வாமி கோயில் காளை ஒரு கண் குருடு மிகவும் பலமானது அறிவுடையது, கள்ளர்களோடு சேர்ந்து எதிரிகளை தாக்கவும் உதவியது.

முதலில் தென்மேற்கு மூலையில் பண்டுப்படை ஊருக்குள் வர முற்பட்டு கையிலிருந்த தீவட்டியால் தொரட்டிமாயன் வீட்டுக் கூரைக்குத் தீ வைக்கப்பட்டது. கணநேரத்தில் நொண்டித்திருமலை கவுண்டன் தலை துள்ளி விழுந்தது. கோயில்காளை எதிர்த்து வந்த கூட்டத்தில் பாய்ந்து கொம்பால் குத்தியது. வீடு எரிந்து விட்டது. தீயில் குள்ளிக்கருப்பத்தேவன் இறந்து விட்டான். இதே சமயத்தில் நாலாபக்கங்களிலுமிருந்து எறிந்த கற்கள் மலைபோல் குவிந்தது. மக்கள் வீட்டைவிட்டு வெளியில்வந்து தாக்குதலில் ஈடுபட்டமையால் காலி வீடுகளில் கல்குவியல்கள் நிறைந்தன. வடமேற்கில் உயரமாக வளர்ந்த தோப்பும் கோயிலுமிருந்தபடியால் அங்கிருந்து கல்லெறிய முடியவில்லை. கள்ளர்கள் கல்லெறி தூரத்திற்கு அப்பால் போய் நின்று சண்டை செய்ய முடிந்தது. பண்டுப்படை எல்லாப் பக்கங்களையும் வேலியிட்டு அடைத்து விட்ட படியால் இவர்களும் ஊருக்குள் வர முடி



யாமல் இவர்கள் அமைத்த வாசல் வழிதான் வர முடிந்தது.

தென்மேற்கிலிருந்த வீடுகளைத் தீக்கொளுத்திய அதே சமயத்தில்தான் வடமேற்கு மூலையிலும் தாக்குதல் ஆரம்பமாகியது. ஆயிரக்கணக்கில் [illegible] நின்று ஈட்டியுடன் படைகள் கிராமத்தைத் தாக்கினர். வியூகத்தின் மத்தியில் [illegible] நான்கு பேர்கள் சிலம்ப [illegible] முன்னும் பின்னும் கோலைக் கோர்த்து [illegible] இரண்டடிச் சீல் பாய்ந்து வரும் படை மீது மோத, அடுத்தபடி இருவர் பட்டாவை ஓங்கி வீசிய வண்ணம் பின்னாடிச் சீர்செய்து தொடர்ந்தனர். மற்றுமிருவர் வேலுடன் விரைந்தனர். இப்படியாக இவர்கள் பாய்ந்து வரும் படைமீது சீறிமோத, கருப்பத்தேவன் மெய்க்காப்பாளர்கள் நால்வர் கவண் கொண்டு கல்வீச, ஏறிவரும் படைக்கு மூச்சுத் திணறடித்தது.

அது சமயம் மத்தியிலிருந்த மல்லர்களைக் கொண்டு சொட்டவளைக் குட்டிகள் போல் ஆலவட்டம் போட்டுக் கொண்டு வியூகத்தின் எல்லாப் பாகங்களையும் சுற்றி வேலிகளை உடைத்து ஊடே எதிரிகள் நுழையா வண்ணம் பாதுகாத்து வந்தனர். இப்படியாக இருந்தது. இதே நேரத்தில் வடகிழக்கு வாசல் வழியில் பண்டுப்படையும் கள்ளர்படையும் ஆயுத இரைச்சலுடன் மோதிற்று. பளார் பளாரென்ற தொனிக்கு மத்தியில் படையினர் தலைகள் உருண்டன. கண நேரத்தில் பிணக்குவியலின் பின் [illegible] கூட்டம் திரும்பி ஓடியது.

சாதிக்கட்டுப்பாட்டிற்காகச் சல்லிக்கட்டு வேடிக்கை பார்க்க வந்தவர்கள் போல் வந்த கூட்டம் உயிரைவெறுத்து தாக்கத் துணியவில்லை. தலை தப்பினால் போதுமென்று கலைந்தோடி விட்டார்கள். இப்பெரும் கூட்டத்திற்கு சண்டை என்றால் என்ன என்று தெரியாது. கள்ளர்கள் சண்டை அனுபவம் பெற்றவர்கள் என்று சொல்லவுமுடியாது என்றாலும் தங்களைக் கொல்ல ஒரு பெருங்கூட்டம் வந்து தாக்குகிறதே,

RangaRakes
tamilnavarasam.com

கணநேரத்தில் சாகப்போகிறோமே என்று "நரி எதிர்த்தால் சிங்கம்'' என்பார்கள். அது போல் வந்தது வரட்டுமென்று எல்லோரும் ஒன்றுபட்டு தாக்கினார்கள். இப்படிப்பட்ட ஆக்குரோசமும் தைரியமும் பண்டுப்படைக்கு இல்லாத படியால் சிதறுண்டு ஓடிப்போய் விட்டது. இரண்டு முனைகளிலும் தாக்குதலாகி வீடுகள் எரிந்து கொண்டும், மக்கள், மாண்டு மடிந்து கொண்டுமிருந்த வேளையில் தொரட்டிமாயன் ஒரு தொண்டு கிழவன் நடக்கமுடியாமலிருந்தவன். மதுரை வீரசாமி கோயில் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த சாமி அரிவாளை எடுத்துக் கொண்டு அருளாளனாய் ஆட்டம் போட்டுக் கொண்டு கருப்பா கருப்பா என்று கர்சனை செய்து கொண்டு தாக்குதலில் ஈடுபட்டதும் அவனுடன் கோயில் காளையும் எதிரிகள் கூட்டத்தில் பாய்ந்தது ஒரு பக்கத்து எதிர்ப்பை முறியடிப்பதற்குப் பேருதவியாகவிருந்தது என்பது வியப்பை ஊட்டுகிறது: காலையில் மத்தணம்பட்டியில் பெரிய போர் மூளும்படியாகப் படைகள் திரண்டிருக்கிறது என்ற விபரத்தைத் தெரிந்தவுடன் வேகமான குதிரையின் உதவியால் சீக்கிரம் திண்டுக்கல் சேர்ந்து போலீசுக்கும் மேல் அதிகாரிகளுக்கும் தந்தி மூலம் தகவல் கொடுத்தார் வெள்ளையத்தேவர். இவர் அந்த சமயம் மாரப்பன் பட்டிக்குத் தற்காலிகக் கிராம முனிசீப்பு இத்தகவலின் மேல் போலீசும் அதிகாரிகளும் காலை ஒன்பது மணிக்கெல்லாம் மத்தணம்பட்டிக்கு வந்து விட்டார்கள்.

வீடுகள் வெந்து கொண்டிருந்தன. 1000 கணக்கில் வந்திருந்த வண்டிகளை மாடுகளைப் பூட்டிக்கொண்டு திரும்பி ஓட முடியாமல் கிடந்த கூட்டத்தினர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். வெட்டுண்ட பண்டுப் படையினர் பிணங்கள் கை கால் முறிந்து மண்டை உடைந்து குற்றுயிராய்க் கிடந்த கள்ளர்கள் கூட்டம், காலை வெயிலில் புழுவாய்த் துடித்தனர். பயில்வான்களும் மல்லர்களும் கூட அபாயகரமான காயத்திற்கு ஆளாகியிருந்தனர். கருப்பத்தேவனுக்கு மண்டையிலும் முன்னங்கையிலும் தோளிலும் காயம் ஏற்பட்டிருந்தது.



போலீசில் கேஸ் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தக் கலகம் ஜில்லா மட்டத்தில் பிரஸ்தாபமானபடியால் எல்லாக் கள்ளர் சாதிக் காரர்களும் கள்ளர்களுக்கு உதவ முன் வந்தார்கள். பண்டு நடவடிக்கையில் கள்ளரல்லாதவர்கள் பண்டுக் கூட்டம் என்று அமையப்பட்டதே தவிர தாலுகா மக்கள் எல்லோரும் கள்ளர்களை எதிர்க்கவில்லை. என்பது கவனிக்கத் தக்கது. கள்ளர்கள் அல்லாதவர்களில் கள்ளர்களுக்கு உதவியவர்கள் முக்கியமாக எரியோடு முத்தையன் செட்டியார் திண்டுக்கல் சவுரிமுத்து உடையார் ஆகியவர்களாகும்.

போலீஸ் அதிகாரிகளும்; மாஜிஸ்ட்ரேட்டும் வந்து கலகம் நடந்தவிடத்தைப் பார்வையிட்டபோது உள்ளபடி நடந்தன யாவையும் கள்ளர்கள் ஒப்புக் கொண்டு வாக்கு மூலம் கொடுத்தனர். தங்கள் சேதங்களையும் தாங்கள் எதிரிகளை வெட்டிக் கொன்றதையும் ஒப்புக் கொண்டார்கள்; கேஸ் விவரமாக நடைபெற்றது.

வெளித் தாலூகாக்களின் பிரதிநிதிகள் கொண்ட கள்ளர் கமிட்டி ஒன்று அமைக்கலாயின கமிட்டியின் தலைவர் கூடலூர் பேயத்தேவராகும். பெரிய தனவந்தர் சொல் சக்தி வாய்ந்தவர், கலகம் நடந்தயிடம் பார்வையிட்ட கமிட்டியார் திண்டுக்கல் சென்று அதிகாரிகளையும் மதுரையில் கலெக்டரையும் பேட்டி கண்டனர். கேஸ் சென்னை உயர்நீதி மன்றம் வரை சென்றது. முடிவில் தேவமார்கள் சார்பில் அனுகூலமாக முடிவாகியது. அம்மையப்பக்கோன் சமுதாயத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவித்த குற்றவாளி என்றும் அவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுத்திருந்த தண்டனை ஊர்ஜிதம் ஆக்கப்பட்டது.

மத்தணம்பட்டிக்குப் படைகள் அனுப்பப்பட்டது போல்; மேற்கே ஒத்தையூருக்கும், தெற்கே மெட்டூர், நெல்லூருக்கும் பண்டுப் படைகள் போய் தோல்வி கண்டு திரும்பியது கேசும் தோற்றுப் போய் பண்டுத் தலைவர்களும்

RangaRakes tamilnavarasam.com

அம்மையப்பக்கோனும் தண்டிக்கப்பட்டதனால் பண்டுக் கூட்டம் செல்வாக்கிழந்து தோல்வியடைந்தது. கள்ளர் பிரமுகர்கள் கூடலூரார் பெயத்தேவர் தலைமையில் பாதிக்கப் பட்ட இடங்களுக்கு முகாம் செய்து பிரமுகர்களையும் மக்கள் பலரையும் நேரில் சந்தித்துப் பொதுக்கூட்டங்கள் போட்டுச் சமாதானத்தை நிலை நாட்டினார்கள். கலகம் ஓய்ந்தது துரத்தப்பட்ட தேவர் கூட்டம் திரும்பவும் தங்கள் காவல் பூமியில் குடியேறி காவல் தொழிலையும் விவசாயத்தையும் மேற்கொண்டார்கள். பண்டுக்கலகம் அல்லது அம்மையப்பக் கோன் சண்டை என்ற தலைப்பில் மதுரை ஜில்லா கெஜட்டி யரிலும் தர்ஸ்டனின் தென்னிந்தியச்சாதி வரலாறு என்னும் நூலிலும் கண்டிருக்கிறது. நூலாசிரியர் கலகம் நடை பெற்ற இடங்களைப் பார்வையிடவும் கலகத்தில் கலந்து கொண்டு காயம் அடைந்தவர்கள் பலரையும் நேரில் கண்டு விசாரித்தறிய 1940ல் வாய்ப்புக் கிடைத்தது.

N. B. :— பண்டுக் காலம் வரலாறு தமிழ்நாட்டில் வெகு சமீப காலத்தில் நடந்ததாகும். ஒரு சிறிய அற்ப விஷயத்தைக் கொண்டு இரண்டு நபர்களுக்குள் சண்டை ஏற் பட்டதானது, ஒரு சமூகம் பூரா வையும் ஒரு மருங்கி லும், இதர ஏனைய எல்லாச் சமூகங்களில் இருந்தும் ஒன்று சேரும்படியான பெருங் கூட்டத்தை மற்றொரு மருங்கிலு மாக ஈடுபடுத்தி ஒரு காட்டுத் தீயைப்போல் ஜில்லா மட்டத் தில் பரவி சொல்லொணாத் துன்பம் விளைவித்ததமை நன்கு தெரிகிறது இது போன்ற அற்ப விஷயங்களுக்கு மக்கள் வருங்காலத்தில் இடங்கொடுக்காமல் இருக்கவேண்டும் என் பதற்காகவே இந்த வரலாற்று நூலில் குறிப்பிட வேண்டிய தாயிற்று.

அதிலும் சிறுபான்மையினர் அபாண்டமாகக் கஷ்டம் வந்த காலத்தில் வைராக்கியமாகவும் ஒற்றுமையாகவு மிருந்து பொதுமக்கள் ஆதரவை நியாயத்தின் அடிப்படை யில் அடைய முடியும் என்பதையும் விளக்கிக் காட்டப்பட்டி ருக்கிறது. இதன் மூலம் வருங்காலத்திற்கு சமுதாய அடிப்



படையில் தீச்செயல்கள் வரா வண்ணமிருக்க வேண்டும் என்பது தான் விருப்பம்.

ஒரு பெரிய சண்டையை, உயிரை வெறுத்து எதிர்த்து நின்று சமுதாய மக்கள் வெற்றியடைந்தார்கள் என்று பெருமைப்படுவதற்கல்ல; எப்படியோ நாட்டில் விவரம் தெரியாமல் ஒரு பெரிய கூட்டம் தேவமார்களுக்கு விரோத மாகப் பண்டு திரண்ட [illegible] தேவமார் அல்லாத இதர சமூகப் பிரமுகர்களும் சர்க்காரும் தேவமார்களுக்கு உதவி யது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

RangaRakes tamilnavarasam.com

# பிரிட்டிஷ் ஆட்சித் தொடக்கத்தில் தேவமார் சமூக நிலை

1857-ஆம் ஆண்டிலிருந்து, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் ஆளுகையை நேரடியாக எடுத்துக்கொண்டு, இந்திய இராஜப் பிரதிநிதிகளைக் கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கியது. தமிழ்நாட்டில் ராணுவ பலம்கொண்டு அரசு கைப்பற்றப்பட்டது. பாளையக்காரர்கள் பணிந்தனர். சண்டையும்; கொள்ளையும், பஞ்சமும், தலைகாட்டாமல் போகவே, அமைதி ஏற்பட்டது அரசுடன்; சனங்களும், சுதேச மன்னர்களும், நம்பிக்கையுடன் நெருங்கிப்பழகி சுமூகமாக வாழத் தலைப்பட்டார்கள்.

பாண்டித்துரைத்தேவர் 1901-ஆம் வருஷம் மே மாதம் 24ந்தேதி மதுரையில் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்துவைத்து அதற்குத் தாமே பத்து வருஷங்கள் தலைவராகவும் விளங்கினார்கள். சங்கத்திற்கு வேண்டிய பொருளுதவியும் வேண்டிய மட்டும் தேடிவைத்தார்கள்.

தமிழ்ச்சங்கத்தின் மூலம் தமிழ் இலக்கியம், இலக்கணங்கள்யாவும்; ஓலைச்சுவடியில் இருந்து அச்சிடப்பட்டன, தமிழ்க்கல்லூரி தோற்றுவிக்கப்பட்டு அதன் மூலம் தமிழ்ப் புலவர்கள் பெருகினர், தமிழர் கலைகள் வளர்ந்தன. பல்லாயிரக்கணக்கான தமிழ் வித்துவான்கள் தோன்றித் தமிழகத்தில் சுடர் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறார்கள். அவர்களில் அதிக மானவர்கள் தேவமார் சமூகத்தினர் என்று சொன்னால் மிகையாகாது. மகாவித்துவான் ந.மு. வேங்கடசாமி நாட்



டார் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்தான் பயின்றார் என்பது குறித்து பெருமைப்பட வேண்டியது. அவர்கள் சிறப்பாகத் தேறியமை குறித்துத் தங்கமெடலும் பொற் தோடாவும் தமிழ்ச்சங்கம் அன்னாருக்கு வெகுமதியாக வழங்கியது. தமிழ்ச்சங்கத்தில் இத்தகைய உயரிய பரிசு பெற்றது ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களே.

1911-ல் தஞ்சை மாவட்டத்தில் கரந்தையில் வைத்து ஒரு மாபெரும் தமிழ்ச் சங்கத்தை, உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்கள் தோற்றுவித்தார்கள். அச்சங்கம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போன்றதே. தமிழ் வித்துவான்கள் பயில்வதற்கான தமிழ் கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டது. சோழநாடு மாபெரும் தமிழ் வித்துவான்களுக்குப் பிறப்பிடம். கரந்தைத் தமிழ்ச்சங்கம் தஞ்சைத் தமிழ்ப்புலமைக்குப் பொற்கிரீடம் வைத்தாற்போலாகிற்று. பல்லாயிரம் வித்துவான்களுக்குப் பிறப்பிடமாகவிருக்கிறது கரந்தை.

மேன்மக்கள் பலரும் சமூக சீர்திருத்தம் செய்ய முன் வந்தார்கள். ஆங்காங்கே சமூகச் சங்கங்களைத் தோற்றுவித்தனர். தஞ்சை நகரில் 'இந்திரகுலாதிபர்' சங்கம் கள்ளர் வகுப்பினரால் தோற்றுவிக்கப்பட்டது. அபிமானிகள் பலரும் ஆதரவுகாட்டவே இச்சங்கம் வளர்ச்சியடைந்து கள்ளர் கோமான்' என்ற பத்திரிகை ஒன்றையும் நடத்தியது. அதேபோல இராமநாதபுரம் மாவட்டத்தில் 6-6-1929 ஆம் வருஷம் சேதுபதி அரசகுமாரன், ராஜாராம பாண்டியனவர்கள் மறவர் மகாசன சங்கம் ஸ்தாபிதம் செய்தார். இச்சங்கம் இராமநாதபுரத்தில் வைத்து வெகு சிறப்பாகச் சமூக அபிவிருத்திப்பணி புரிந்தது. சென்னை மாகாண அகமுடையர் சங்கத்தை 17-1-1932ல் ஸ்ரீமான் சத்தையா சேர்வை அவர்கள் தோற்றுவித்தார்கள் கள்ளர் சங்கம் திருநெல்வேலியில் வைத்து 9-7-1932ல் வேலைசெய்ய ஆரம்பமாயிற்று. அதற்குமேல் பம்பாயில் வைத்து மாதுங்காவிலும், ஈழம், கடாரம், மலேயா, சிங்கப்பூர் ஆகிய

RangaRakes

tamilnavarasam.com

இடங்களிலும் தேவமார் சமூகப்பணியில் மக்கள் முப்பது ஆண்டுகள் செயலாற்றினார்கள்.

19.. —ம் ஆண்டு [illegible] ந.மு. வெங்கடசாமி நாட்டார் அவர்கள், [illegible] என்னும் சிறிய [illegible]. இதனால் தேவர் சமூ[illegible] தமிழ் இலக்கியத்தி[illegible] ஆராய்ச்சி [illegible] பாடப் புத்தக[illegible] அறிவுடைய [illegible] மாணவர்கள் [illegible], பண்டைய தமிழ் [illegible] தேவர்களின் பண்டைய வரலாறு புரியலாயிற்று.

1970-ஆம் ஆண்டு தஞ்சையில் நடந்த தமிழ்ப்பேரவை வெள்ளி விழா மலரில் நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களை பாராட்டி பி. பொன். அருணாசலம் நாட்டார் பி.ஏ. அவர்கள் எழுதிய கட்டுரை

நான்கு ஆண்டுகள் நம் நாட்டார் ஐயா அவர்களிடம் கல்லூரியில் யான் கல்வி பயின்றேன். கல்லூரியில் சேர்ந்த பொழுதுதான் யான் அவர்களுக்கு அறிமுகமானேன். அது முதல் என்னிடம் மிகவும் பிரியமாகப் பழகி வந்தார்கள். தினந்தோறும் மாலையில் [illegible] மாணவர் விடுதிக்கு என்னைக் காண அவர்கள் வருவார்கள், அப்போது புதிதாகப் போடப்பட்டிருந்த விழுப்புரம் இரயில் பாதையில் இரண்டு மூன்று மைல்கள் தூரம் நடந்து திரும்புவோம். என்னை அறிந்து என்னிடம் நட்புறவு கொண்டனர். அவர்கள் வாழ்நாள் முழுவதும் என்னிடம் மதிப்பு வைத்து அன்பு பாராட்டி வந்தனர்.



"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்னும் வள்ளுவர் வாக்குக் கிணங்க யான் அவர்கள் தோழமையைக் கிடைத்தற்கரியபேறுகக்கருதி அவர்களை வழிபடும் மனத்தேனையினேன்.

கோடை விடுமுறையில் யான் அவர்களைப் பிரிந்திருக்கும் போது அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவேன். அவர்களும் உடனுக்குடன் பதில் எழுதுவார்கள். ஒரு முறை என் கடிதத்தில் ஒரு சொல்லை அடித்துத் திருத்தி எழுதியிருந்தேன். "கடிதம் எழுதும் போது அடித்துத் திருத்தி எழுதுதல் பிசகு," என்பதை யான் அவர்களைச் சந்தித்த போது சுட்டிக்காட்டினார்கள். அஃது எனக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது. அதுமுதல் யான் யாருக்குக் கடிதம் எழுதினும் ஒரு எழுத்தைக்கூட அடித்து எழுதமாட்டேன். அது ஒரு நல்ல பழக்கமாக அமைந்தது. தமிழிலும் ஆங்கிலத்திலும் எனக்கமைந்த கடிதம் எழுதும் ஆற்றலால் எனது தொழில் துறையில் சிறப்பெய்தி, பல அரிய நண்பர்களைப் பெற்று எனது வாழ்க்கையில் முன்னேற்றங் கண்டேன். பெரியோர் கேண்மையால் பெற்ற பயன் அது.

நான் B.A., வகுப்புப் படிக்கும் போது இவர்கள் வகுப்புக்கு வந்தால் ஆசனத்தமர்ந்து ஒரு அரை மணி நேரம் வரையில் அமைதியாக விருந்து மாணவர்களது முகமலர்ச்சியினையும் விளையாட்டுத் தனங்களையும் பார்த்துச் சுவைத்துக் கொண்டே ஆனந்தங் கொள்வர். அதன் பிறகு திருக்குறள் பாடஞ் சொல்வதாக இருந்தால் அரை மணி நேரத்தில் ஐந்து குறள்களுக்குப் பொருள் சொல்லி விளக்குவர். ஒரு முறை சொன்னதை மாணவர்கள் எழுந்து மறுமுறை கேட்டால் சொல்லமாட்டார். ஆனல் அந்த ஒருமுறை கேட்ட பாடங்களை நாங்கள் இன்றளவும் மறந்ததில்லை. திரும்பிப் புத்தகங்களைப் படிக்காமலே எங்களால் ஞாபகப்படுத்திக் கொள்ள முடிந்தது.



RangaRakes tamilnavarasam.com

அவர்களிடம் கல்விபயின்று சிறந்த புலமையோடு விளங்கிய உலகவூழியர் மலைக்கோட்டையில் அவர் தம் வீட்டுக்கு எதிர்ப்புறம் உள்ள சைவசித்தாந்த சபைக் கட்டிடத்தில் தங்கிப் படித்து வந்தார். நூல்களைப் படிக்கும்போது இவருக்குச் சந்தேகம் வரும்போதெல்லாம் தெளிந்து கொள்ளலாமென எண்ணி அவர்களிடம் போவார்களாம், அவர்களைப் போய்ப் பார்த்தவுடனேயே சந்தேகம் தெளிந்து விடுமாம். 'உலகதாஸ் என்ன வேண்டுமென்று' கேட்பார்களாம் இவர் தலையைச் சொரிந்து கொண்டு நிற்பாராம். இதைக் கண்டு நகைத்து ''ஏதோ கேட்க வந்து பைத்தியம் மாதிரி நிற்பதைப்பார்'' என்று ஐயா அவர்கள் தம் மனைவியாரிடம் சொல்வார்களாம். ஆசிரியரது அருள் நோக்கே அறிவு விளக்கத்தைத் தருமாயின், அவர்களது நுண்ணறிவின் சிறப்பையும் மாணவர்களை ஈர்க்கும் சக்தியையும் சொல்லவும் வேண்டுமோ?

''நக்கீரர்'' ''கபிலர்'' என்னும் புலவர் வரலாற்று நூல்களை நூல் ஆராய்ச்சியுடன் நுண்ணிதின் ஆய்ந்து வெளியிட்டனர். இந்நூல்களைக் கற்போர் இந்நூல்கள் எழுதுதற்குரிய இடர்ப்பாடுகளின் வலிமையையும் ஆக்கியோரது நுண்ணறிவின் திறனையும் அறியலாகும். இது போன்றே ''கள்ளர் சரித்திரம்,'' ''சோழர் சரித்திரம்'' போன்ற வரலாற்று நூல்களையும் எழுதி வெளிப்படுத்தினர். மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையர் அவர்கள் 'கள்ளர் சரித்திரத்தை' முழுதும் படித்துப் பார்த்து, கலாசாலை மாணாக்கர்கள் படித்துப் பயனெய்துமாறு இது பாடமாக வைக்கத் தகுந்தது எனத்தாம் கருதுவதாக எழுதிப் பாராட்டியுள்ளனர். நம் நாட்டார் ஐயா அவர்களைத் தவிர வேறு யாரும் 'கள்ளர் சரித்திரம்' எழுதி வெளியிட்டிருக்க முடியாதென்பது அடியேன் கருத்து.

இந்நூலியற்றியது அவர்கள் தமிழகத்திற்குச் செய்த ஒரு ஒப்பற்ற அரியசேவை எனவே யான் கருதவல்லேன். மேனாட்டு அறிஞர்கள் வழியைப் பின்பற்றிப் பல ஆராய்ச்சிக்



கட்டுரைகள் எழுதி ''கட்டுரைத் திரட்டு'' என்று இரு பாகமாக நூல் வெளியிட்டுள்ளனர். இவர்களது தமிழ் நடையே ஒரு தனிச் சிறப்பும் அழகும் வாய்ந்தது ஒருமைப் பன்மை மயக்கமின்றி வினைமுடிபுகள் இலக்கண வழுவின்றி எடுத்துக் கொண்ட பொருளைத் தருக்க முறையில் விளக்கிப் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் அழகிய செந்தமிழ் நடையில் இனிமையாக எழுதும் பேராற்றல பெற்று விளங்கினர். அவர்களது உரை நடைக்கு ஒரு எடுத்துக்காட்டு பின் வருமாறு:

''நக்கீரர் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டுவந்த பழங்குடியினரான முடியுடைத் தமிழ் வேந்தர் மூவருள்ளே ஈண்டிய சிறப்பிற் பாண்டியரானோர் வழிவழியமர்ந்த பழவிறன் மூதூராகிய பீடுமிக்கமாட மதுரையிற் சங்கமிருந்து தமிழராய்ந்த நல்லிசைப் புலவர் குழாத்துட் பல்லிசை நிறுத்த படிமையோராவர். இவர் குடிப்பிறப்பாகிய உடையுடுத்துக் கல்வியாகியமலர்சூடி, ஒழுக்கம் என்னும் விழுக்கலன் பூண்டு, வாய்மையென்னு முணவுண்டு, நடுவுநிலையென்னும் நகரின் கண் தூய்மை யென்னும் ஆதனத்தமர்ந்து, அழுக்காறின்மை, அவாவின்மை யெனப்படும் இரு பெரு நிதியமும் ஒருதாமீட்டுந் தோலா நாவின் மேலோராகித், தமக்கொப்பாரும் மிக்காரும் மில்லையாக விளங்கினரென இவரது வரலாறு கூறுநிற்கும்.'' நக்கீரருக்கு உரிய குணங்கள் பலவும் இவர்களுக்கும் பொருந்தும் என்பதனை எளிதில் நாம் உணர வல்லோம்.

1943-ஆம் ஆண்டு பேரூர் கோவிலில் ஒரு சபை கூட்டினோம், அக்கூட்டத்துக்கு நம் நாட்டார் ஐயா அவர்கள் தலைமை தாங்கினர். அதுபோது சங்க வளர்ச்சி குறித்து யான் பேசினேன். சங்கம் என்பது ஒரு இயக்கம். தக்கவர் ஒருவர் இருந்தாலும் சங்கம் இயங்க வல்லது என்று குறிப்பிட்டேன். அந்தக் கூட்டத்தில் பங்கு கொண்ட பழனி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் என் பேச்சின் உண்மைக் கருத்தினை யுணர்ந்து என்னை வியந்து பாராட்டி அது முகற்

RangaRakes
tamilnavarasam.com

கொண்டு என்னிடம் மிக்க அன்புடையவர்களாக விளங்கித் தாமே வலிய வந்து எனக்குச் சிவ தீட்சை (சமய தீட்சை, விசேட தீட்சை இரண்டும்) செய்து வைத்துச் சிவபூஜை செய்யும் பெரும் புண்ணியத்துக்கு ஆளாக்கும் குரு முகூர்த்தமாக எழுந்தருளினார்கள். ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் ஆகமங்களிலும் தமிழ் மறைகளிலும் நிரம்பிய புலமையுடையவர்கள்.

ஆச்சாரிய மூர்த்தி, அவர்கள் நம் நாட்டாரிடம் பெரு மதிப்பு உடையவர்கள். நாட்டார் சொற்பொழிவுகளைக் கேட்டுத் திளைத்தவர்கள். நாட்டார் ஆற்றிய சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்தெடுத்து எழுதி வெளிட்டிருந்தால் அவ்வளவும் அறிவுக்களஞ்சியமாகத் தமிழகத்துக்குப் பயன் பட்டிருக்கும் என்று சொல்லுவர். "இப்பொழுது பிரசங்கம் செய்பவர்கள் குருவி கத்துவதுபோன்றும் வேறு மிருகங்கள் கத்துவது போன்றும் பேசுகின்றனரே. நாட்டாரையா சொற்பொழிவுகள் செந்தமிழ்த் தேனமுதைப் பருகுவது போன்று ஆற்றொழுக்காகக் கேட்கக் கேட்கத் திகட்டாத இன்பந் தருவதாக இருக்குமென்று" சொல்லுவர்.

திருவையாறு தமிழ்க் கல்லூரி மாணவர் சங்க ஆண்டு விழாவில் ஒருமுறை நம் நாட்டார் ஐயா தலைமை யேற்றருளினார்கள். திரு. ரா. பி. சேதுப்பிள்ளையும், பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளையும் இரு சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் முடிவுரை கூறும் போது "ஒரு பேச்சு சொல்லழகு, மற்றது பொருளழகு" என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தனர்.

திருவையாற்றுக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த சந்தானம் ஐயங்கார் என்பவர் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களில் கடவுள் வாழ்த்துப் பாடுவார். பாடல் கேட்க இன்பமாக இருக்கும். பாடும் போது அவரது முக பாவங்கள் பரம விகாரமாகத் தோன்றும். பாடல் இனிமையைச் சிறப்பித்துப் பேசும் போது ஐயா அவர்கள் 'ஐயங்கார்பாடுவதை திரை போட்டுச் சுவைக்க வேண்டும்', என்பார்கள்.



'குடிசெல்வலென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்பது அவரது அழுத்தமான கொள்கை. தாழ்ந்த நிலையிலுள்ள தம்மையும், தம் குடும்பத்தையும், தம் குலத்தையும் ஒவ்வொருவரும் உயர்த்தப்பாடுபடவேண்டுமென்பது அவர்கள் கருத்து. படித்தவர்கள் தாழ்வுற்ற சமுதாயவளர்ச்சிக்கு சேவை செய்தல் தங்கள் வாழ்நாள் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று எண்ணுவார். தம் குலமக்கள் இழி நிலை குறித்து, கள்ளர் சரித்திரத்தில் இவ்வாறு சித்தரித்துள்ளனர்: "பொருள் இழந்தனர், பொலிவழிந்தனர்; மதியிழந்தனர்; வலியிழந்தனர்; வறுமை யுற்றனர்; பெருமை யற்றனர்" நம் மக்களின் இவ் இழி நிலையைப் போக்க' படித்த இளைஞர்கள் துடிதுடிக்க வேண்டாமா? கள்ளர் சரித்திரம் எழுதியதே தம் குலத்தவர் பெருமையை யுணர்த்தவே. தியாக உணர்வில் சிறந்தவர்கள் தமிழ் மக்கள். தாய் மொழிக்கும் தாய் நாட்டிற்கும் தங்களையே அர்ப்பணிக்கும் சிறப்புடையர் நம் குல மக்கள். நம்நாட்டார்ஐயா போன்ற அறிவாற்றல் பெற்ற திறம்பட ஆட்சி செலுத்தும் தலைவர்கள் நம் சமூக மக்களைக் கட்டுப் படுத்தவும் அவர்களது நலம் நாடவும் இல்லாத குறை நிவர்த்திக்கப் பட வேண்டும்.

"கரும்புத் தோட்டத்தில் யானையும் ஆடும் புகுகின்றன இன்சுவை மிக்க கரும்பினை யானை உண்டு மகிழ்கின்றது. எங்கும் உண்ணும் இலையையே ஆடு மெல்லுகின்றது. அவ்வாறே சிறந்த பொருளைக் கைக்கொண்டும் அதனுயர்வைக் கண்டு அனுபவிக்கும் சிறப்பு சிறந்த அறிஞர்க்கே உண்டு" என்று சிவப்பிரகாசர் விளக்கினர்,

"எறும்பி காண்குறின் இன் கரும்பே கொளும்
செறிந்த ஆடிலை தின்ப என்பவே"

"உணர்ந்தார்க் குணர் வரியோன்;" "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" இறைவன். அறிவுக்கும் எட்டாத அனு

பவப் பொருளாகிய இறைவன் திருவருளைப் பெற நினைவதே சமய ஞானம். மெய்ப்பொருளாகிய இறைஞானத்தை ஓதியுணர, தமிழ் மறை நூல்களாகத் தேவார திருவாசகங்களை நமக்கு அருளிப் போந்தனர் நம் சமயாசாரிய சுவாமிகள். தேவார திருவாசகத்தை ஓதி யுணர்ந்து மெய்யுணர்வில் திளைத்து சைவ சித்தாந்த உண்மைப் பொருளைத் தமிழக மெங்கும் பரப்பிய பேரறிவாளராக நம் நாட்டார் அய்யா விளங்கினர். சிவஞான அனுபவத்தில் திளைத்து நின்ற அவர்களது முதிர்ந்த பருவத்தில் ''இத்தகைய திருமுறைகளில் எனது நல்லறிவைப் பயன் படுத்தாது காலத்தை வீண் போக்கினேன்'' என்று வருந்திக் கூறுவதுண்டு. அப்பர் சுவாமிகளைத் தமது வழிபடு குருவாகப் போற்றி வந்தனர். பிற்காலத்தில் திருஞான சம்பந்தரிடம் மிக ஈடுபாடுடையவர்களாகத் திகழ்ந்தனர். ஞானசம்பந்தர் தேவாரத்திலுள்ள இசை நுணுக்கங்களை யெல்லாம் ஆராய்ந்து கட்டுரையாக வெளியிட்டனர். திருப்பூந்துருத்தியில் ''அப்பர் மாணவர் கழகம்'' ஒன்று அமைத்து அதற்குத் தலைவனாக யானிருந்தேன். அப்போது நம் நாட்டார் அய்யா அவர்களது வழிபடு குருவாகிய அப்பர் சுவாமிகள் திருமடத்திலேயே அவர்களை தலைமை ஏற்றருளச் செய்தும், கோவை சிவக்கவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களைச் சொற்பொழிவாளராகவும் பணி புரியச் செய்தேன். அதற்கு அடுத்த ஆண்டு ''ஞானசம்பந்தர்'' என்னும் பொருள் பற்றி திரு. த. வே. உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையில் திருப்பூந்துருத்தி பெரிய கோவில் சந்நிதியில் பெருந்திரளானக் கூட்டத்தில் பேசி எல்லோரையும் சிவஞானக் கடலில் மூழ்குவித்தனர். அவ் இனிமையான பேச்சு இன்றும் எம் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. எனது ஆசிரியரும் உரிய தோழமையாளருமாக விளங்கிய கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோருக்கு ஆன்ம நிறைவு ஏற்பட யான் உபகாரியாக நின்றது எனக்கே எண்ண முடியாத ஒரு பெரும் பேறெனக் கருதி ஆனந்தம் அடைந்தேன்.

## பாப்பா நாடு ஜமீன்தார் திரு. ராஜப்பா அவர்கள் செய்தித்தாள்களில் செய்துள்ள சமூக வரலாறின் பிரசித்தம்

1926-ல் பாப்பநாடு ஜமீன்தார் திரு. ராஜப்பா, பரம்பரைக் கள்ளர் பூர்வீக வரலாறு என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலில் திரு. சிவக்கொழுந்து முதலியாரால் எழுதப்பட்டது. இதில் ஒரு விசேடம் என்னவென்றால்; இந்நூலில் கூறிய பல விபரங்களின் பகுதியைத் தினப் பத்திரிக்கைகளாகிய 'இந்து' 'மதராஸ் மெயில்' முதலிய பத்திரிக்கைகளில் பிரசுரித்துக் ''கள்ளர்கள் உயரிய சோழ ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் நாட்டை அரசாண்ட இராஜ பரம்பரையினர்தான், முடியிழந்து பெயர் மாறி இருக்கிறார்கள். இவர்களைத்தான் 'கள்ளர்கள்' எனப் பழம் நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவர்கள் பூர்வீகச் சோழ ராஜ பரம்பரையினராகும் : '' இதற்குச் சரித்திர வல்லபமுடையவர்கள் அபிப்பிராயம் கூறலாம் என்பதாகக் கேட்கப்பட்டிருந்தது. அது சமயம் கள்ளர் சரித்திரம் பொது ஜனக் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. ஜனவரி மாதம் 3-ந் தேதி 1924-ல் இந்துப் பத்திரிக்கை கள்ளர்களில் பூர்வீக உயர்வையும் அவர்கள் அரசர் பரம்பரையினர் என்பதையும் எடுத்துத் தகுந்த ஆதாரங்கள் காட்டி ஒரு கட்டுரையைப் பிரசுரித்தது. இம்மாதிரியாகக் கொஞ்சம் பிரசார வேலைகள் சரியான முறையில் மிகவும் யோக்கியம் வாய்ந்த பொறுப்பாளிகளால் செய்யப்பட்டதால் நாட்டிற்கும் தேவர் சமூகத்திற்கும் நன்மதிப்பேற்பட்டது.

மக்கள் மனதில் கசிந்துருகிப் பெருகிய சாதியபிமானம் எல்லோருடைய நன்மதிப்பையும் ஒன்று திரட்டும் பொருட்டு அகில இந்திய முக்குலத்தோர் சங்கம் (கள்ளர், மறவர், அகமுடையர்) தேவமார் சமூக சங்கம் ஒன்றைக் கூட்டவேண்டுமென்ற எண்ணம் சமூகப் பிரமுகர்கள் பலருக்

RangaRakes
tamilnavarasam.com

கும் ஏற்பட்டது. சென்னை தேவர் & கோ அதிபர் திரு. முத்தையாத்தேவர் அவர்கள் முக்குலப் பிரமுகர்கள் கூட்டம் ஒன்றைச் சென்னையில் கூட்டினார். இராமநாதபுரத்தரசர், மதுரை சிவனாண்டி சேர்வையவர்கள், சாத்தையா சேர்வையவர்கள் பூண்டிவாண்டையார், பாரதமுத்துத்தேவர் இன்னும் இருநூருக்கு அதிகமான பிரமுகர்கள் அடக்கிய முதலாவது கூட்டம் 28-1-1934-ல் கூடி அகில இந்திய முக்குலத்தோர் சங்கத்தை அமைத்தார்கள் : அச்சங்கத்திற்கு இராமநாதபுரம் சேதுபதி அரசகுமாரர் திரு. இராஜாராமபாண்டியன் தலைவரானார்.

இரண்டாவது அகில இந்திய முக்குலத்தோர் சங்கம் தனது மகாநாட்டை மதுரையில் வைத்து 25-6-1940-ல் நடத்தியது. அது காலை அரசியல் நிலை மிகவும் தீவிர கட்டத்தில் இருந்த காலம். தேவமார் சமூகத் தலைவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் அமைப்பில் உயர்ந்த செல்வாக்கோடு விளங்கிக் கொண்டிருந்த காலம் மகாநாட்டிற்கு தமிழ்நாடு பூராவிலுமிருந்து 10,000க்கு மேல்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பூண்டி வள்ளல் கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். பட்டுக்கோட்டை நாடிமுத்துப்பிள்ளை. பாகனேரி உடையப்பா R. V. சாமிநாதன், செல்லச்சாமிப் பாண்டியன், கருணாகர பாண்டியன் சேத்தூர் ஜெமீன் திரு. சேவுகபாண்டியத் தேவர் பாரத முத்துத்தேவர் தினகரசாமித்தேவர் சிதம்பர பாரதி ராவ்பகதூர் வேதநாயத்தேவர் கோட்டைச்சாமித் தேவர் ராவ்சாகிப் வையாபுரி அம்பலம் சிவனாண்டி சேர்வை ஆகிய தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டதானது கண் கொள்ளாக் காக்ஷியாக இருந்தது.

திரு. சிவனாண்டி. சேர்வையவர்கள் பிரசுரித்து வந்த 'மூவேந்தர்' பத்திரிகை அது காலை சமூக முன்னேற்றங்களுக்குச் சிறந்த தொண்டாற்றி வந்தது. பத்திரிகை இரண்டாவது மகாநாட்டை உபயோககரமாக நடத்தியதற்குப் பெரிதும் பாடுபட்டது என்று சொன்னால் மிகையாகாது.



1940ல் இப்பத்திரிகையின் முயற்சியால் ஆயிரக்கணக்கான கிளைச்சங்கங்கள் பட்டிதொட்டி எல்லாம் பரவியதற்கு திரு. சிவனாண்டி சேர்வையவர்கள் பத்திரிகையைப் பயன்படுத்தினார்.

நாட்டில் அமைதி ஏற்பட்டு அன்னியர் ஆட்சியில் சமூக மக்கள் பலதுறைகளிலும் எப்படி முன்னேறி வந்தனர் என்பதைக் கண்டோம். இனி இம்மக்களில் ஒரு சில வர்க்கத்தினர் தாங்கள் வாழ்ந்த இடம், செய்த தொழில், அரசு காரியாலயங்களில் உத்தியோகம் அடையும் காரணங்கள் நிமித்தம் தங்கள் சாதிப் பெயரை மாற்றிக் கொண்டு வேறு வகுப்பினர்களின் பெயர்களைத் தங்களுக்குப் பூண்டுகொண்டு வாழ்ந்தமை தெரிய வருகிறது. அது வகைக்கு அன்னிய அரசுதான் காரணம் எனவும் தெரிய வருகிறது. அதன் விபரங்களை ஆராய்வோம்.

## சாதிப் பெயர் மாற்றம்

தேவர் சமூக மக்கள் தங்கள் சாதிப்பெயரை மாற்றிக் கொண்டு வாழ்ந்தார்கள். இதன் காரணம் கண்டறியப்பட வேண்டிய தொன்றல்லவா? ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சி காலத் தொடக்கத்தில் அரசு பரிபாலனம் செய்யும்போது மிகவும் எச்சரிக்கையாய் இருந்தார்கள். மாகாண நிர்வாகம் ஜில்லா நிர்வாகம், பெரிய பொறுப்பான அரசு நிறுவனங்கள் ஆகியவைகளில் பணிபுரியும் உத்தியோகங்களுக்கு வெள்ளைக்காரர்களையே நியமித்தனர். அவர்கள் பொறுப்பில் பணியாற்ற வேண்டிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் போதும் வெள்ளைக்காரர்களுக்கு அறிமுகமானவர்கள், விஸ்வாசமுள்ளவர்கள், பயபக்தியானவர்கள், ஆகிய விபரம் தெரிந்துதான் நியமிப்பது வழக்கமாக இருந்து வந்தது. அது காலை வெள்ளைக்காரர்கள் தமிழ் நாட்டில் மக்கள் இயல்பை அறிந்தமட்டில் தேவர் சமூக மக்களை (கள்ளர் மறவர் அகமுடையர்) ஒரு பயங்கரமான வர்க்கத்தினர் என்று உணர்ந்திருந்தனர். காரணம் என்னவென்றால் கிழக்கிந்தியக் கம்

RangaRakes

tamilnavarasam.com

பெனியார்கள் ராணுவ நடவடிக்கை எடுத்து தமிழ்நாட்டு அரசுரிமையைக் கைப்பற்றிய காலத்தில் வரிகொடாமலும், கப்பம் கட்டாமலும் சாதி அடிப்படையில் ஒன்றுதிரண்டு வெள்ளையர்களுக்கு எதிராய் தேவமார் நின்றனர். பாளையப்பட்டு நிர்வாகம் பலதரப்பட்டதாக இருந்தாலும், பாளையங்களில் படை வீரர்களாய் விளங்கியவர்கள் தேவமார் இனத்தவர்களாகும். வெள்ளையர்கள் எழுதிய வரலாறுகளிலும்காலரீஸ் (Colleries) பாலிக்கார்ஸ் (Polygars) என்று எழுதப்பட்டிருப்பது தேவர் இனத்தவரையே குறிக்கும்.

எனவே இந்த ராணுவ மனப்பான்மை கொண்ட தேசீய இனத்தவரை உன்னிப்பாக கவனித்து வந்தனர் வெள்ளையர் அரசினர். இவர்களுடன் பழகுவதையும் விரும்பவில்லை. பொதுவாக விரோதிகளாகக் கருதினர். எனவே சர்க்கார் வேலைகளுக்குத் தேசீய இனத்தவர்கள் இடம் பெறுவது கடினமாக இருந்தது. வேலை கொடுப்பதில்லை என்று கூட இருந்தது. இந்த நிலவரம் நாடெங்கிலும் இருந்தாலும், சென்னை நகரில் முக்கியமாகக் காணப்பட்டது. சர்க்கார் காரியாலயங்கள், துறைமுகம், ரயில் நிலையம், தபால்தந்தி, பாதுகாப்பு போலீஸ் படைகளில் நியமனம் அடையும் முயற்சியிலும், காரியாலயங்களில் பதவியை மேலோங்கச் செய்யவும் சிறிது விவரம் தெரிந்த படிப்பாளிகள் தங்கள் சாதிப் பெயரை மாற்றிக் கொண்டனர் என்பது தெரிய வருகிறது. அப்படியாக மாற்றிக் கொண்ட சாதியாவது:-முதலியார்; பிள்ளை, நாயக்கர், நாயகர், செட்டியார் போன்றவையாகும்.

தொன்று தொட்டுத் தமிழகத்தில் தோன்றிய தொண்டை மண்டல முதலியார், கார்காத்த வெள்ளாளர் ஆகியவர்கள் சைவ இனத்தவர்கள். மாமிச உணவு கொள்ளாத சுத்தச்சைவ இனம். இவர்களுக்குப் பழக்கத்தில் முதலியார், பிள்ளை, சைவாள் என்று, பெயர்கள் வழக்கத்தில் பட்டமிருந்து வருகிறது, 19ஆம் நூற்றாண்டில் புதிதாக தோன்றிய பிள்ளை, முதலியார் ஆகியவர்கள் மாமிச உணவருந்தும் சமூகத்தவராகும். இவர்கள் தமிழ் நாடெங்கிலும்



இருந்து வருகிறார்கள் என்றாலும், மிகையாக வாழ்ந்து வருவது சென்னையிலேயே.

சென்னையில் தேவர் சமூக முதலியார்களை இனம் பிரித்தறிய; பட்டினம் முதலியார்கள் ஆர்க்காட்டு முதலியார்கள் என்று வழங்கி வருவதிலிருந்து தெரியலாகும். சென்னை சம்பந்தப்பட்ட மட்டில், இவ்வினத்தின் அடிப்படையில் விளங்கிய மங்காத கீர்த்தியுடைய வள்ளல் பச்சையப்ப முதலியார், இராமசாமி முதலியார், லஷ்மணசாமி முதலியார் ஆகியவர்களைச் சொல்லலாம். வெள்ளையர்கள் ஆட்சிக் காலம் பூராவும் உயர்ந்த இராஜதந்திரிகளாய் விளங்கிப் புகழ்பெற்ற ஆர்க்காட்டு முதலியார் சகோதரர்கள் என்று அரசு பரிபாலன அமைப்பில் புகழப்பட்டுள்ள A.L. இராமசாமி முதலியார் A.L. லஷ்மணசாமி முதலியார் ஆகியவர்களுடைய ஸ்தாவர சொத்துச் சாபிதாவில் அவர்கள் பெற்றுள்ள கிரயப்பத்திரத் தஸ்தாவேஜுகளில் இவர்கள் இனம் அகமுடையர் சாதி எனக் கண்டிருக்கிறது. முக்கியமாகச் சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் இச்சமூக மக்கள் மிகையாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஆகவே அரசு வேலையில் இடம் பெறவும் முன்னேற்றமான சமுதாய மக்களிடம் சம இடம் அடையவும் ஆங்காங்கே அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு ஏற்றபடி பட்டங்களை மாற்றி அழைத்துக் கொண்டனர்; இப்படியாக வேறு சாதியினர் என்ற பெயரும் பட்டமும் மாற்றி வாழ்ந்து வந்தவர்கள்: படித்தவர்களிடையேயும், பணம் படைத்தவர்களிடையேயும், உயர் பதவியில் இருந்தோர்களிடையேயும் காணப்படுகிறது. இவை அனைத்திற்கும் காரணம் ஆங்கில அரசு மக்கள்பால் கொண்ட விரோத மனப்பான்மையும், வெறுப்புணர்ச்சியுமே என்று கருத வேண்டும்.

ஆங்கிலேயர்கள் ஆட்சியைக் கைப்பற்றுங் காலங்களில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டு போனார்கள். நாட்டில் தொடர்ந்தாற்போல் ஏற்பட்ட பஞ்சங்களினாலும், கொள்ளை நோயின்

RangaRakes tamilnavarasam.com

காரணமாகவும் பல லட்சம் பேர்கள் மாண்டு போனார்கள். கொடிய பஞ்சத்தின் போது பல தடவைகளில் நாட்டு மக்களை அரசு வெளிநாடுகளில் போய் உயிர் வாழும் வகைக்கு வழி செய்தது. அது காரணமாக, இலங்கை பர்மா சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு பல லட்சம் பேர்கள் அனுப்பப் பட்டனர். இப்படியாக மாண்டு போனவர்களும் வெளி தேசங்களுக்கு அனுப்பப் பட்டவர்களும் தேவர் இனத்தவர்கள் தான் அதிகமாக இருந்திருக்க வேண்டும் இந்த நிலையில் தமிழ்நாட்டின் மக்கள் சனகணித விகிதத்தில் தேவர் இனம் எந்த அளவுக்கு மீதமிருந்தது என்பதைக் கவனிப்போம்.

## ஜனத் தொகை நிலை :

தேவமார்கள்: முக்குலத்தவர்கள்; கள்ளர், மறவர், அகமுடையர் ஆகியவர்கள்தான் என்று சொல்லுவதற்கில்லை. அம்பலக்காரர், வெள்ளாளர், கொங்கு வெள்ளாளர், வன்னியர், வல்லம்பர், பட்டணம் முதலியார், படையாச்சி, முத்தரையர், உடையார், என்பன போன்ற இன்னும் எத்தனையோ சமூகங்கள், தேவமார் சமூகக் கொடி நிழலில் ஒளி வீசவேண்டியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் தங்கள் குலம் தமிழ் வேந்தர் குலம் என்பது தெரியும். ஐக்கியப்படுத்த வேண்டிய காலமிது : இப்போது யாவரும் தங்கள் பூர்வீகப் பிறவியை நன்குணர்கிறார்கள். ஒன்று திரண்டு வாழக் கொஞ்சம் பிரச்சாரம் தேவை. தேவமார்கள் தமிழ்நாட்டில் மட்டிலும் அல்லாமல் சிங்கப்பூர், பினாங், மலேயா, சிலோன் முதலிய தீவுகளிலும் வட இந்தியாவில் பம்பாயிலும், கேரளக் கானகங்களிலும், குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். இன்னவர்களின் சனசங்கியைத் துல்லியமாக சொல்லுவதற்கில்லை : முதலாவது சாதியார்கள் உண்மையான சாதிப்பட்டம் தாங்கவில்லை.

சென்னை அரசு 1931-ஆம் ஆண்டில் ஜனசங்கியை மிகவும் அவசரமாகத்தயாரித்தது. எனவே அதில் சாதிவாரி



யான விவரங்கள் கணக்கெடுக்கவில்லை. 1941-ல் அரசு திட்டம் வகைக்குத் தேவையான அடிப்படைகளில் பிரத்தியேகக்கவனம் செலுத்தியபடியால் சாதிவாரிப்புள்ளி விபரங்களை அறிக்கையில் எடுத்துக் காட்டவில்லை. 1951, 1961, 1971 ஆகிய வருஷங்களில் ஜனசங்கியைக் கணக்கெடுப்பில் சாதி வாரியக்கணக்குத் தேவையில்லை என அரசு கருதியது. எனவே சாதி விபரக்கணக்கு நமக்குத் தெரிய முடியவில்லை. எனவே ஜனத்தொகையின் அடிப்படையில் நம் நாட்டின் சாதியார்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் தெரிய வேண்டுமானால் 1921-ஆம் ஆண்டு அறிக்கையில் ஓரளவு விபரமிருக்கிறது. அதன்படி 1921-ல் சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை. 21628518 அதில் முக்குலத் தேவமார்கள் :-

| | |
|---|---|
| 1921—ம் வருஷம் சன கணிதப்படி சென்னை மாகாணத்தில் மொத்தம் 21628518 பேர் வசிக்கிறார்கள் | |
| முக்குல மக்கள் மட்டும் | 23,37,405 |
| முக்குல மக்களைச் சேர்ந்தவர்கள் எனவரும் வன்னியர் படையாச்சி உடையார் கொங்கு வேளாளர் ஆர்க்காட்டு முதலியார் முத்தரையர் ஆகியவர்கள் | 26,62,592 |
| ஆக | 50,00000 |

ஆக ஐந்தில் ஒரு மடங்கு விகிதத்தில் அமைகிறது:—

அத்துடன் அது காலை ஆட்சிப் பொறுப்பில் தொண்டைமான் புதுக்கோட்டை அரசர் சேதுபதி இராமநாதபுரம் மன்னர், சிவகங்கை ராஜா ஜமீன்தார்கள் 32 பேர்கள் விளங்கினர்.

பெருநிலப் பரப்பும், பெரும் புகழும் படைத்த பலர் இருந்தார்கள் அவர்களில் சிலர்வரலாறு சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

| | அகமுடையர் | அம்பலகாரர் | கள்ளர் | மறவர் | வல்லம்பர் |
|---|---|---|---|---|---|
| சித்தூர் | 2030 | — | — | — | — |
| வடார்க்காடு | 14520 | — | — | — | — |
| சேலம் | 13180 | 9158 | — | — | — |
| கோயம்புத்தூர் | 26408 | 3726 | — | 2148 | — |
| தென்னார்க்காடு | 15720 | — | — | — | — |
| தஞ்சாவூர் | 117686 | 59084 | 207684 | 3758 | -- |
| திருச்சி | 5037 | 78690 | 27426 | 2523 | — |
| மதுரை | 62409 | 4187 | 186732 | 55691 | — |
| ராமநாதபுரம் | 95717 | 6296 | 45407 | 146854 | — |
| திருநெல்வேலி | 1734 | — | 12582 | 231853 | — |
| நீலகிரி | 144 | — | — | — | — |
| புதுக்கோட்டை | 12307 | 1032 | 51111 | 6670 | 27904 |

366891 162173 530943 449497

தேவர்குல மக்கள் வாழும் ஜில்லாக்களின் ஜனத்தொகை

| | | |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | 2326265 |
| 2. | மதுரை | 2007082 |
| 3. | திருச்சிராபள்ளி | 1902838 |
| 4. | திருநெல்வேலி | 1901396 |
| 5. | இராமநாதபுரம் | 1721837 |
| 6. | புதுக்கோட்டை | 453445 |

மதுரை ஜில்லா தாலூகாவாரியாக ஜனத்தொகை: விவரம்

| | | |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் | 403700 |
| 2. | கொடைக்கானல் | 23136 |
| 3. | மதுரை | 275948 |
| 4. | மேலூர் | 172378 |
| 5. | நிலக்கோட்டை | 204666 |
| 6. | பழனி | 224453 |
| 7. | பெரியகுளம் | 383074 |
| 8. | திருமங்கலம் | 309727 |
| | | 2007982 |



தமிழ் நாட்டில் 1971—ல் ஜனத்தொகை நாலரை கோடியாக உயர்ந்திருக்கின்ற படியால் அதற்குத் தகுந்தாற் போல ஏனையோர்களின் எண்ணிக்கையும் உயருமல்லவா? எனவே இப்போதையத் தேவர் குலச் சங்கியை ஒரு கோடியாகும்.

**மேன்மக்கள்:-**

ஆங்கில அரசுக்கு ஒரு சிறிதும் வரியோ கப்பமோ கட்டாத பெருமையுடன்! சொந்த நாணயம் செலவாணி செய்து மந்திரி பிரதானிகளுடன சட்டமன்றம் நீதிமன்றங்கள் அமைத்துக் கொடியும் முடியுமுடன் சேனுபலத்துடன் அரசு செலுத்திய தொண்டைமான் வம்சத்தினர் ராஜ்யத்தின் பரப்பு 1200 சதுர மைல்கள் ஆகும். அதுவுந்தவிர அவருடைய இனத்தவர்களாய் விளங்கிய தேவமார் ஜமீன்தார்கள் பதின் மூவரையும் இதனடியில் கண்ட விபரப்படி காண்க.

| பாளையத்தின் பெயர்களின் | கிராம தொகை | பரப்பளவு விஸ்தீரணம் ஏக்கரில் | 1876-ல் பாளையமுடையார் பெயர் |
|---|---|---|---|
| கண்டர்கோட்டை | 53 | 54984 | அச்சுதப் பண்டாரத்தார் |
| பாலையவனம் | 51 | 13684 | இராமச்சந்திர விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார் |
| பாப்பாநாடு | 39 | 24412 | இராமலிங்கவிஜய தேவர் |
| கல்லாக்கோட்டை | 17 | 16481 | விஜயரகுநாத அரங்க சிங்கப்புலியார் |
| சில்லத்தூர் | 10 | 14345 | விஜயரகுநாத அரங்க பன்றி கொண்டார் |
| சேத்தங்குடி | 9 | 18309 | விஜயரகுநாத அருணாசல வணங்காமுடி வழுவடையார் |

RangaRakes

tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| கோனூர் | 2 | 1612 | சீலிவாசராயர் |
| பாதரங்கோட்டை | 7 | 8896 | விஜயரகுநாத பாலாக்ஷி சிங்கப் புலியார் |
| சிங்கவனம் | 26 | 8631 | சவ்வாஜிவிஜய ரகுநாத மகாராஜா மெய்க்கன்கோபாலர் |
| மதுக்கூர் | 12 | 13546 | சவ்வாஜி விஜய ரகுநாத பாலாஜி கனகசபைகோபாலர் |
| நெடுவாசல் | 15 | 5329 | விஜயரகுநாத முத்தையன் பன்றி கொண்டார் |
| அத்திவெட்டி | 11 | 6287 | துரைசாமி ஆகாசம் சேர்வைகாரர் |
| புனல்வாசல் | 1 | 2527 | அப்புசாமி மழவராய பண்டாரத்தார் |

தமிழ் நாட்டின் தென்பகுதியில் குறிப்பிடத்தக்க மேன் மக்களைப் பற்றிய வரலாறுகள் முன்னதாக விளக்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் சேதுபதி அரசர், சிவகங்கை இராஜா, சேத்தூர் ஜமீன்தார் ஆகியவர்களாகும். அத்துடன் தென்னாட்டுப் பாளையப்பட்டுப் போரில் ஆர்க்காட்டு நவாப்புக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் வரி கொடுக்க மறுத்து வீரப்போரிட்ட மறவர் ஜமீன்தார்கள்:—

1) சிவகிரி ஜமீன்தார் 2) கொல்லங்கொண்டான் ஜமீன்தார் 3) நெற்கட்டும்சேவல் 4) தலைவன்கோட்டை 5) 6) குருக்கள்பட்டி 7) அழகாபுரி 8) நடுவக்குறிச்சி 9) சுரண்டை 10) ஊர்க்காடு 11) சிங்கம்பட்டி 12) ஊத்துமலை 13) மணியாச்சி 14) கடம்பூர் 15) ஏழாயிரம்பண்ணை என்பன போன்ற ஜமீன்கள் முக்கியமானவைகள்.



## குறுநில மன்னர்களுக்கு ஒப்பான வள்ளல்கள்:

### உக்கடைப் பண்ணை

1755-ஆம் ஆண்டில் உக்கடைத் தேவர் பண்ணை பிரசித்தமடைகிறது. சோழர்குலக் கள்ளர் மரபில் உக்கடைத்தேவர் பரம்பரையினர் எக்காலந்தொட்டு. வாழையடி வாழையாய்க் கீர்த்தியோடு விளங்கி வருகின்றனர் என்று பார்த்தால்; தஞ்சை ஜில்லாவின் வரலாற்றிலிருந்து ஆங்கில அரசு கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் தமிழ் நாட்டில் அரசு பரிபாலனம் செய்து நிலத்தீர்வை ஏற்படுத்துவதற்கு முன்னதாகவே, தேவர் பண்ணை சீரும் சிறப்பும் பெற்று விளங்கினமை தெரிய வருகிறது. உக்கடைத்தேவர் பண்ணையை உலகிற்கு முதன் முதல் அறிமுகப்படுத்திய வள்ளல் ''சாலியத்தேவர்'' ''வேலிக்கு ஆயிரம் விளைவு தரும்'' எனப் புலவர் பாடும் புகழுடைய விளைநிலம் 1000 ஏக்கருக்கு மேல் வைத்துச் சொந்தப் பண்ணையைத் தனது நிர்வாகத்தில் ஆண்டு அனுபவித்தது தேவர் குடும்பம்; உக்கடைத்தேவர் குடும்பம் என்றால் தமிழகமெங்கும் யாவருமறிவர். திரு. சாலியத்தேவருக்குப் பிறகு உக்கடைப் பண்ணையை ஆண்டு அனுபவித்து வருகிறவர்கள்.

திரு. வெங்கடாசலத்தேவர்
இராவ்பகதூர் அண்ணாசாமித் தேவர்
திரு. அப்பாவுத்தேவர் மாஜி எம்.எல். ஏ,
திரு. விஸ்வநாதத்தேவர், பி. ஏ.,

இது காலைப் பண்ணையை ஆண்டு வருபவர் திரு. அப்பாசாமித்தேவர் அவர்கள் மாஜி எம். எல். ஏ., அவருக்கு உதவியாக அவரின் குமாரர் திரு. விஸ்வநாதத்தேவர் அவர்கள் பி. ஏ. பண்ணை நிர்வாகத்தில் பொறுப்பு ஏற்று வருகிறார்கள் :

உக்கடைப் பண்ணை என்றாலே; மக்கள் அதை ஒரு தர்மஸ்தாபனம் என்றும்; அப்பண்ணையின் அதிபர்களை வள்ளல்

21

RangaRakes
tamilnavarasam.com

கள் என்றும் கருதுகிறார்கள். ஏனெனில் உக்கடைக் குடும்பத்தினர் தாங்கள் அடைந்துள்ள அகன்ற பூமிச்செல்வத்தின் மூலம் கிடைக்கும் திரண்ட செல்வத்தைத் தானம் தர்மம் செய்வதிலேயே உபயோகித்து வந்திருக்கின்றனர்.

## வள்ளல் பூண்டி வாண்டையார்கள்

சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகத் தொண்டைமான் புதுக்கோட்டை ராஜ்யத்திலிருந்து, பிரவிருத்தியின் காரணமாகத் தஞ்சை ஜில்லாவில் பூண்டி என்னும் சிற்றூரில் வந்து குடியேறி அவ்வூரைச் சிறப்பித்தவர்களே பூண்டி வாண்டையார்கள் என்று அழைக்கப்படும் வள்ளல்கள். இவர்களின் முன்னோர்கள் புதுக்கோட்டை அரசர் படையில் ராணுவ சேவையில் பொறுப்பான பணி புரிந்தமையின் காரணமாகப் பட்டம் பெற்றவர்கள். வாளுடையார் என்பது இவர்களின் குடும்பப்பட்டமாகும். அதன் படி இவர்கள் ராஜ்ய எல்லை எங்கிலும் உடை வாளுடன் விளங்கும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

இந்தப் பரம்பரையில் வந்தவர் வள்ளல் ராவ்பகதூர் அப்பாசாமி வாண்டையார் இவருடைய காலத்தில் பூண்டிவாண்டையார் கீர்த்தி தமிழகமெங்கும் பரவியது 1924ல் ராவ்பகதூர் அப்பாசாமி வாண்டையார் கல்வி ஸ்தாபனங்கள் ஆலய சீரமைப்புகள் செய்து தன் நாடெங்கிலும் யாத்திரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னச் சத்திரங்கள் தந்து மக்கள் பசியின்றி வாழச்செய்தார். அவருடைய மக்கள் வீரய்யா வாண்டையாரும் கிருஷ்ணசாமி வாண்டையாரும் தங்கள் தந்தையாரைப் போலவே தஞ்சையில் தான தர்மம் செய்து தங்கள் பண்ணையை நாட்டு மக்களுக்கு நலன் பெற நடத்தி வந்தனர்.

1956-ஆம் ஆண்டில் வாண்டையார் குடும்ப ஸ்தாபனம் நாட்டிற்கு நல்லதோர் தர்மமாகத் தங்கள் குடும்ப தேவதையின் பெயரில் கல்லூரி ஒன்று ஏற்படுத்தினர் இக்கல்லூரிக்கு



பூண்டி புஸ்பம் கல்லூரி என்று பெயர் இக்கல்லூரியின் பரிபாலன தர்ம வகைக்கு நூறு ஏக்கர் நஞ்சை நிலமும் இன்னும் எவ்வளவோ தனமும் கொடுத்திருக்கிறார்கள். இதில் இதுகாலை 4000 மாணவர்கள் படித்து வருகின்றனர். இக்கல்லூரியின் காவலனாக விளங்கிய இராவ்பகதூர் வீரையா வாண்டையார் அவர்கள் இக்கல்லூரிக்குத் தேவையான சாதனங்கள் எத்தனையுண்டோ அத்தனையும் நல்ல நிலைமையிலும் உயரிய ரகத்திலும் கல்லூரிக்கு கிடைக்கச் செய்திருக்கிறார்.

RangaRakes tamilnavarasam.com

# முக்குல சமூக சங்கங்கள்

15-ஆம் நூற்றுண்டு முதல் 19-ஆம் நூற்றுண்டு வரையி
லான காலம் தமிழ் நாட்டிற்கு மிகவும் பிரதி கூலமான
காலம். அரசு மாற்றங்கள், ஆதிக்கப் போட்டி, அன்னியர்
ஆட்சி ஆகியவைகளால், நாட்டின் நவ்வாழ்வு சீர்குலைந்து
விட்டது. 19-ஆம் நூற்றுண்டில் கொந்தளிப்புகள் ஓய்ந்தன
ஆங்கில அரசின் இராணுவபலம் அமைதியை ஓர் அளவு
நாட்டில் உண்டு பண்ணியது. மக்களுக்கும் அரசுக்கும்,
தேசீய அடிப்படையில் கருத்து வேற்றுமை இருந்து வந்தது.
ஆட்சி முறையை அரசியல்வாதிகள் பூரணமாக ஏற்றுக்
கொள்ளவில்லை. எனினும் அபிவிருத்திப் பணிகள் தொடங்
கின. அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் பலவும் ஏற்பட்டன.

20--ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தமிழ் வேந்தர்
குலத்தேவமார் சமூக மக்கள் தங்கள் முன்னோர்களைப்போல,
நாட்டில் சங்கங்கள் அமைத்துச் சமூகப் பணிபுரிந்தனர்.
தமிழ் மக்கள் யாவருக்கும் நல்ல பலன் கொடுக்கும் சிறந்த
அடிப்படையில் தொண்டு புரியலாயினர். மதுரை தமிழ்ச்
சங்கம் கரந்தைத் தமிழ் சங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க
வைகளாகும். அது போலவே தேவமார் சமூகச் சங்கங்கள்
எங்கும் தோன்றின என்றாலும் சமூகச்சங்கங்கள் எல்லாம்
நீடித்துப் பணிபுரிந்து வருகின்றன என்று சொல்லுவதற்
கில்லை. சங்கங்கள் தோற்றுவித்த சான்றோர்கள் காலங்க
ளுக்குப்பின், உற்சாகமும் சமூக சேவை மனப்பான்மையு
முடைய தலைவர்கள் பின் வாரிசுகளாகி வாய்க்காமையால்



எத்தனையோ சங்கங்கள் செயலற்றுப் போய் விட்டமையும்
தெரியவருகிறது அல்லவா? இவ்விவரங்கள் சமூகச்சங்கங்கள்
தோன்றிய வரலாற்றைப் பற்றிய பந்தியில் சொல்லப் பட்
டிருக்கின்றன.

தொன்றுதொட்டு விடா முயற்சியால் நல்லபடியாகப்
பணியாற்றி வந்து சிறப்பாய் விளங்கும் சங்கங்களுமிருக்கின்
றன. நல்லபடியாக சமூகசங்கம் பணிபுரியுமானல் சமூக மக்
களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும் என்பதில் சந்தேக
மில்லை. தங்கம் தராததைச் சங்கம் தரும்'' என்பர் பெரி
யோர். இதற்கு எடுத்துக்காட்டாக நடை முறையில் நல்ல
படியாகப் பணிபுரிந்து சிறப்பாய் வளர்ந்து வந்திருக்கும் சங்
கங்களில் சிலவற்றினைப்பற்றிய விவரங்களையும் செயல்முறை
யில் ஆற்றிவரும் சேவைகள் பலவற்றைப்பற்றியும் அடைந்
திருக்கும் அபிவிருத்தியைப் பற்றியும் கவனிப்போம்.

இராஜபாளையம் மறவர் சங்கம் தமிழ்நாட்டில் தோன்
றிய ஆதிச்சங்கங்களில் ஒன்று 1932—ஆம் ஆண்டில் சிறந்து
விளங்கியது. அது காலை சங்கத்தின் தலைவர் R.M. இராக்கப்
பத்தேவர் உபதலைவர் முத்திருளப்ப தேவர் காரியதரிசி
ஏ. முத்தையாத்தேவர்.

இச்சங்கத்தை 1962-ல் முற்போக்கான ஆர்வங்
கொண்ட இளைஞர்கள் திருத்தியமைத்து மறவர் மகாசபை
எனப்பெயரிட்டு சமூகப்பணியாற்றிவரும் விபரம் காண்க:—

## இராஜபாளையம் மறவர் சங்கம்

இராஜபாளையம் முனிசிபல் நகரில் மறவர் மக்கள் 4000
தலைக்கட்டுகளாய் 20000 சனத்தொகையோடு பத்தொன்
பது தெருக்களில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு தெரு
வுக்கும் சமூக சபை இருக்கிறது. வயது வந்த ஆண் பெண்
பாலர் யாவரும் சமூக சபையின் அங்கத்தினர்களாகும்.
மாதச் சந்தா செலுத்துபவர்கள் நிர்வாக சபை அங்கத்தின

RangaRakes tamilnavarasam.com

ராகும் ஒவ்வொரு குடும்பமும் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் தலைக்கட்டு வரி செலுத்துகிறது.

பத்தொன்பது தெருச் சபைகளும், ஒரு மகா சபையில் இணைக்கப் பட்டுள்ளது. இச்சபைக்கு இராஜபாளையம் மறவர் மகாசபை என்று பெயர் ஒவ்வொரு தெருவின் சபையும் மகாசபைக்குப் பிரதிநிதிகள் அனுப்புகிறார்கள். இப்படியாக சேர்ந்த பிரதிநிதிகள் மகாசபையில் 50 பேர்கள் நிர்வாக சபையினராகிறார்கள். இந்த மகா சபைக்கு தலைவர், உப தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் ஆகியவர்கள் இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

தெருச் சபையில் மாதச் சந்தா செலுத்தும் அங்கத்தினர்கள் மகாசபைக்குப் பத்துப் பைசா சேர்த்துச் செலுத்துகிறார்கள். பிரதி மாதமும் சபைக்கு மாத சந்தா செலுத்துகையில் பத்துப் பைசாவாகக் கூடும் தொகை மகா சபைக்கு அனுப்பப்படுகிறது. தலைகட்டு வரி வசூலிக்கும் பொறுப்பு தெருச்சபையினரதுவாகும். பிரதி வருஷ ஆண்டு விழாவின் போது தலைக்கட்டு வரி பாக்கியின்றி மகாசபைக்கு வந்து விடுகிறது. சமூகத்தார் விவாக வரியாகச் சபைக்கு ரூ 2 ம் மகா சபைக்கு ரூ 2 செலுத்தி வருகிறார்கள்.

சமூகசபைக்கு, சந்தாவைத் தவிர, விவாக வரியுடன் தெருக் குத்தகை அதாவது மகிமையாக வர்த்தக அடிப்படையில் தங்கள் சமூக மக்கள் பால் வரவாகும் தொகையும் இதர நன்கொடைகளும் சேர்ந்து வரவாகி வருகிறது.

மகாசபைக்குச் சந்தாதாரர்கள் சந்தாத் தொகை, சபைகள் மூலம் வந்து சேருகிறது. தலைக்கட்டு வரியும் சபைகள் வசூலித்து அனுப்புகிறது விவாக வரி நேரடியாக வசூலாகிறது. சமூகப் பிரமுகர்கள் சிறு தொழில் அதிபர்கள் நன்கொடை போல் தங்கள் தொழில் தரத்திற்கு ஏற்ப வருஷம் தோரும் மகாசபைக்கு நன்கொடை கொடுத்து வருகிறார்கள். இதைத்தவிர மகாசபை சந்தர்ப்பங்களில் நன்கொடை மூலமும் நிதி பெற்று வருகிறது.



சபைகளும், மகாசபையும் தங்கள் ஆஸ்தியைக்கொண்டு நற்பணிகள் செய்து வருவதுடன் முதலீடும் செய்து வருகின்றன. சபைகள் தங்களுக்கு என; வீடு, நிலம், தோப்பு, கடைகள், விடுதி முதலான வகையில்; ஸ்தாவர சொத்துகள் வைத்திருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் தக்க வருவாயுள்ளனவாகி விளங்கி வருகின்றன. அதே போல் மகாசபைக்கு மனைக்கட்டும், நிலமும், உண்டு மனைக்கட்டில் நல்ல அமைப்புகளுடன் கூடிய விடுதி (லாட்ஜ் ஒன்று கட்டப்பட்டு முடிவாகுந்தருவாயிலுள்ளது. காவியிடத்தில் (புஞ்சை) கிராமக் கைத்தொழில் அடிப்படையில் செங்கல் உற்பத்தித் தொழில் வகைக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

## வழக்கு விவகாரம் பஞ்சாயத்து முறை :

## உறவின் முறைநற்பணி

தமிழ்மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒவ்வொரு தெருவிலும் சபைகள் கூடித் தங்கள் அலுவல்களையும் காரிய நிர்வாகங்களையும் கவனிக்கின்றன. அத்துடன் தமது சமூக மக்கள் கொண்டுவரும் விவகாரங்கள்; பஞ்சாயத்துக் குழுவினரால் பைசல் செய்யப்படுகின்றன. பஞ்சாயத்துமுறை சமூக உறவின் முறைப்படி, ஆதியில் அம்பலகாரர் சட்டம் தமிழ்மன்னர்கள் ஆட்சியில் எப்படிச் செயல்பட்டனவோ அதே போல தெய்வச்சாட்சியாக நடத்தப்படுகிறது. சபையாரால் விசாரணை செய்து கூறப்படும் தீர்ப்புக்குமேல் பஞ்சாயமாக (அப்பீல்) வேண்டினால் விவகாரத்தை மகாசபைப் பஞ்சாயத்து முடிவிற்குக் கொண்டு செல்லலாம்.

பஞ்சாயத்துமுறை மிகவும் நல்ல முறையில் செயலாற்றி வருகிற படியால் சமூக மக்கள் கோர்ட்டிற்குப் போகும் பழக்கம் குறைந்து வருகிறது. நல்ல நியாயமும் செலவின்றிக் கிடைக்கிறது. பஞ்சாயத்துக் குழுவின் நடைமுறை சிறப்பாக இருக்கிறதென்பதற்கு எடுத்துக் காட்டாக, விளங்குவதென்னவென்றால், மகாசபையின் விவகார எல்

RangaRakes tamilnavarasam.com

லைக்கு வெளியிலுள்ள கிராமங்களில் இருந்தும் முக்கியமாகப் பெரிய தனவந்தர்கள் குடும்ப விவகாரங்களும் மறவர் மகா சபைப் பஞ்சாயத்து குழுவினிடம் வந்து நியாயம் வேண்டுகின்ற நிலைக்கு வந்துள்ளமை தெரியவருகிறது. பிறசமூக மக்களும்கூட மகாசபைப் பஞ்சாயத்தை நாடுகின்றனர்.

பஞ்சாயத்துக் குழுவினர் காட்டும் ஆர்வமும் பின்பற்றப்பட்டு வரும் தெய்வசாட்சியப் பஞ்சாயத்துத் திர்ப்பும் மக்களால் பெரிதும் நன்மதிப்படைந்து வருகிறது.

சங்கம் தோன்றிய கால முதல் நாளது மகாசபையினர் ஆட்சிக் காலம் வரை மக்கள் பொதுவாகக் காட்டிய அபிவிருத்திப் பணிகள் பலவெனினும் முக்கியமானவை கல்வி அபிவிருத்தியும் பொருளாதார முன்னேற்றமுமாகும். மகா சபை எல்லையில் பொதுவாகப் படிக்காதவர்கள் மிகவும் குறைவென்றே சொல்ல வேண்டும். உயரிய கல்விப்பயன் அடைந்திருக்கிற விவரம் 1975-ஆம் ஆண்டு கணக்கின் படி

இந்த ஒரு ஊரில் மட்டும் :—

| | |
|---|---|
| B. A; B. Sc; M. A; M. Sc; பட்டதாரிகள் | 80 |
| B. T. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் | 35 |
| B. E; M. E; பட்டதாரிகள் பொறியாளர்கள் | 20 |
| M. B, B. S; M. B. M. S. பட்டதாரிகள் மருத்துவர்கள் | 15 |
| B. Sc; Agri. M. Sc; Agri. பட்டதாரிகள் | 10 |
| B. A. B. L. வழக்கறிஞர்கள் | 5 |
| பொறியாளராக அமெரிக்காவில் | 2 |
| கல்லூரிப் பேராசிரியர் | 1 |

அத்துடன் பொருளாதார அபிவிருத்திப்பணியில் விவசாயத்தை மாத்திரம் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்த



மக்கள் கைத்தொழில் வர்த்தகத் துறையில் நாட்டங்காட்டி வருகின்றனர். மகாசபை கைத்தொழில் வர்த்தகத் துறையில் சமூகத்தார்களுக்குத் தொழில் வாய்ப்பளிக்கும் பொருட்டு செங்கல் தொழில் வழங்கியுள்ளது.

மகாசபை சென்ற வருஷங்களாகச் சமூக மக்களை உறவின் முறையால் ஒன்று சேர்த்து, முன்னேற்றப் பாதையில் வழி நடத்தி, நீதி நிர்வாக அமைப்பில் நம்பிக்கை உண்டு பண்ணிப் பணியாற்றி வரும் சபையில் இது காலை நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருபவர்கள் 1. தலைவர், 2. உபதலைவர், 3. செயலாளர், 4. உபசெயலாளர் 5. பொருளாளர்

## கோவை மாவட்ட முக்குலத்தோர் சங்கம்

இச்சங்கம் மிகப் பழமையான சங்கங்களில் ஒன்று. முக்குல உறவின் முறையார்கள், தங்களின்சங்கத்திற்கு, இராமநாதபுரத்தரசர், ராஜா சாகிப் ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி அவர்களை 1945ல் மகாநாட்டுத் தலைமைக்கு அழைத்தனர். அழைப்பை ஏற்று சேதுபதி அவர்கள் கோவைக்கு அரசு பந்தாவுடன் வந்திருந்து இரண்டு நாட்கள் தனது உறவின் முறையார்களுடன் தங்கியிருந்து மகாநாட்டைச் சிறப்பித்தார்கள். மகாநாட்டில் குற்றப்பரம்பரைச் சட்டத்தை அடியோடு ரத்துச் செய்யக் கோரிய தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பலானது. அது காலை சங்கத்தின் தலைவராக இருந்தவர் ஸ்ரீ Dr. S.V. அப்பாஜீத்தேவர் அவர்களாகும்.

சமூக அபிவிருத்திப் பணிகளை நடத்தி வந்த சங்கம் பொறுப்பை 1969ல் ஏழு பேர்கள் கொண்ட நிர்வாகக் குழு திரு. இ.கே. குப்புசாமித்தேவர் அவர்கள் தலைமை ஏற்றது. மாவட்டத்தின் பல பாகங்களில் கிளைச்சங்கங்கள் தோற்றுவிக்கலாயின. 1976ல் திருமுக்கந்தர் அருணாசலத்தேவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஐந்து பேர்கள் அடங்கிய குழு பொறுப்பேற்றது. சங்கத்தின் காரியதரிசி உயர்தரக் கல்வியுடைய திரு ஏ. ஷண்முகம் ஆர்வமுள்ள இளைஞன்.

RangaRakes
tamilnavarasam.com

திரு ஷண்முகம் அவர்கள் ஒரு முழுநேர ஊழியனாகக் கௌரவப் பணிகளை மேற்கொண்டார். மக்களின் சக்தியையும் ஒரு அளவு பொருள்களையும் ஒன்று சேர்த்து ஆக்கல் வேலை துவங்கவே நன்மக்கள் சங்கத்தின் அபிவிருத்திக்கு மனமுவந்து ஒத்துழைத்தனர்.

பேரூரில் தங்கள் சமூகப் பொது மண்டபமாக இருந்த இடத்தில் ஒரு மாபெரும் அழகிய திருமண மண்டபம் அமைக்கப்பட்டது. நவீன வசதிகள் யாவும் ஒருங்கே அமையப்பட்ட இம்மண்டபத்தில் காரியாலய வசதியுமுண்டு. இந்தச் சிறந்த வேலையை மக்கள் செய்து முடித்தமைக்குக் காரணமாக இருந்து தொண்டாற்றியவர் காரியதரிசி திரு ஷண்முகமாகும் எனக் குழு கருதுகிறது. மிகவும் வசதியாகவும் விசாலமாகவுமாக அமைக்கப்பட்டுள்ள இக்கல்யாண மண்டபத்தை மக்கள் பலனுள்ள வகையில் உபயோகித்து வருகிறார்கள்.

1978ல் பத்துப் பேர்கள் கொண்ட நிர்வாகக் குழு பொறுப்பேற்றது. தலைவர் திரு அருணாசலம் நாட்டார் அவர்கள் பி.ஏ. செயலாளர் திரு ஷண்முகம் அவர்கள் மேலும் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். பொருளாளர் திரு முக்கந்தர் முத்துச்சாமித்தேவர் மற்றும் எழுவர்கள் நிர்வாக சபையினர்.

சமூகத்தொண்டு செய்து வரும் இச்சங்கம் நாட்டு மக்களின் நல்வாழ்விற்குத் தொழில் துறையில் மக்களின் சக்தியை ஈடுபடுத்திச் செயலாற்றத் திட்டமிட்டு வருகிறது. நிர்வாக குழுவில் நன்கு படித்தவர்களும் சமூகமுன்னேற்ற வேலைகளில் அனுபவம் உடையவர்களும் தொழில் அதிபர்களும் இருப்பதால் சங்கத்தின் நன் நோக்கம் சிறப்படையும்'

## செவ்வாப்பேட்டை சேலம் பெருநகர் மறவர் மகாசபை :

1935-ல் சேலம் மறவர் மகாசபை தொடங்கியது : அது காலை நிர்வாகக் குழுவில் இருந்தவர்கள் 1 மாரிமுத்துப்



பிள்ளை 2. அமிர்தலிங்கத்தேவர் 3. வை. சோ. வையாபுரிப் பிள்ளை ஆகியவர்கள்; மகாசபையின் முதல் மகாநாடு சேதுபதி அரசர் தலைமையில் சிறப்பாக நடந்தது.

மகாசபை சமூகப் பொது சொத்துக்களைப் பராமரித்து வந்தது. கெட்டிவீடுகள், நடுக்தரப்பள்ளி, நந்தவனம் பஜனைமடம் ஆகியவைகள் முக்கிய சொத்துகள். தங்கள் சமூகச் சார்புள்ள ஆலயங்களைப் பராமரித்தும் நித்திய பூஜைகள் நடத்தியும் வருவது சிறப்புப் பணிகள்.

முற்போக்கு இளைஞர்கள் 1979ல் தேவர் இளைஞர் சங்கம் தோற்றுவித்துள்ளனர் இச்சங்கம் முக்குலத்தோர் முன்னேற்றத்தின் அடிப்படையுடையது.

இச்சங்கத்திற்கு செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது' சங்கத்தின் சிறப்பு நோக்கம் அண்மையில் சேலம் பெருநகரில் தேவர் குலக் கல்யாண மண்டபம் கட்டி உறவின் முறையார்களின் வசதிக்குத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுத்து விட்டனர்.

## அகமுடையார் கல்வி வளர்ச்சி சங்கம்
## எழும்பூர் சென்னை- பதிவு எண்-75

1959 இருந்து நடைபெற்று வருகிறது. மொத்த 850 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். நிர்வாகக் குழு ஒன்றுள்ளது. 24A. மாண்டியத் சாலை எழும்பூரில் சங்கத்தின் காரியாலயம் உள்ளது. ரூ50,000 பெருமானமுடைய வசதியான கட்டிடத்தில் ஆபீஸ் உள்ளது. தற்கால சொசைட்டியின் ஆஸ்தி மதிப்பு ரூ. 1,50,000/=

பணியின் விவரம்

1. உயர்தரக் கல்வியில் மாணவர்களுக்குப் பண உதவி செய்து ஊக்குவித்தல்
2. கற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிச் செலவு செய்து உதவுதல்

RangaRakes tamilnavarasam.com

3. சமூக மக்களின் திருமண வாய்ப்புக்கு உதவுதல்.

பிரதி வருஷமும் சங்கத்தின் ஆண்டு விழாவில் மகாசபை அங்கத்தினர்கள் எல்லோரும் கலந்து கொண்டு சமூக முன்னேற்றம் கருதி வருகின்றனர். இது சங்கத்தின் மிகச் சிறந்த அம்சமாகும்.

## மக்களுக்காக தொண்டாற்றி வரும் மணிவிழா கண்ட மாணிக்கம்

செழிப்பான சிற்றூரில் வசதியான குடும்பத்தில் மாணிக்கம் பிறந்தும் 10 ஆம் வகுப்பு வரை படிப்பது கஷ்டமாக இருந்தது. காரணம் பள்ளிக்கூடம் போக்குவரத்து வசதியில்லை. தன் கிராமத்தில் ஏழைப்பிள்ளைகள் மிகையாக இருந்தார்கள். 1937ல் லால்குடியில் கள்ளர் மாணவர் இலவச உணவு விடுதியும் அதன் பின்னர் அன்பிலில் ஒரு மாணவர் உணவு விடுதியும் அமைந்து நடத்தி அவைகள் உபயோகரமாகக் கண்டு மகிழ்ந்தார். மக்கள் நன்கொடை கொடுத்து ஆதரித்தனர். அது காலை மாணிக்கத்திற்கு, திரு. கோதண்டபாணி மூவரையர், திரு அன்பில் தர்மலிங்கம், திரு. சந்திரகாசன், திரு அருணாசலம் நாட்டார் ஆகியவர்களின் நட்பு ஏற்பட்டது. அதுவே பிற்காலங்களில் நன்மையாக இருந்தது. உணவு விடுதிகளில் படித்தவர்கள் மேன்மை அடைந்து வருவதைக் கண்ட மாணிக்கம், தன்னை கல்வி அபிவிருத்திப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டார்.

தஞ்சை திருச்சி மாவட்டங்களின் இணைப்பும் போக்குவரத்து வசதியுமுடைய திருவெறும் பூரை கேந்திரமாக்கி அங்கு ஒரு கூரைகட்டு வாடகை வீட்டில் ஆரம்பப் பள்ளியை தொடங்கினார். நல்ல நோக்கத்தோடு தொடங்கிய திட்டம் நேர்மையாக நடைபெற்று வருவதைக் கண்ட நாட்டு மக்களிடமிருந்து ஆதரவுகள் கிடைத்தன. தனது நுண்ணறிவால் மாணிக்கம் கல்விச்சாலைகளின் வருங்காலத் தேவைகளை மனதில் கொண்டு அரசிடமிருந்து 14 ஏக்கர் நிலத்தை தர்காஸ்தாகப் பெற்று வைத்தார்.



மாணிக்கத்தின் செல்வாக்கும் சொல் சக்தியும் நாட்டில் பிரசித்தமடைந்தது. திருச்சி திரு. பி.ஆர். தேவர் திரு. ஆர். எஸ். மலையப்பன் தஞ்சை சுயம்பிரகாசம், அன்பில் தர்மலிங்கம் ஆகியவர்களின் நல்லாதரவு கிட்டியது.

தான் 1940-ல் ஆரம்பித்த ஆரம்பப்பள்ளி படிப்படியாக வளர்ந்து 1953ல் முக்குலத்தோர் உயர்நிலைப்பள்ளியாக அங்கீகாரம் பெற்று விளங்கியது. அப்பள்ளியின் தேவைக்கேற்ப 1958 ல் முக்குலத்தோர் மாணவர் இலவச உணவு விடுதி துவங்கலாகியது. அதன் நிர்வாக சவுகரியத்தின் பேரில் தமிழ்நாடு மாணவர் இல்லம் என விலாசமிடப்பட்டது. இங்கு தங்கும் மாணவர்களுக்கு எவ்விதக் கட்டணமும் வசூலிப்பதில்லை. ஆரம்பத்தில் பொதுமக்கள் ஆதரவில் நடந்து வந்த இவ்வில்லம் இப்போது அரசு மான்யம் பெற்று அதிவேகமாக வளர்ந்து வருகிறது.

தமிழ் நாடு மாணவர் இல்லத்தில்: இதன் அடியில் கண்ட பிரிவுகள் இருந்துவருகின்றன. 1. தமிழ்நாடு அனாதை இல்லம் 2. தமிழ்நாடு இக்கற்றோர் மாணவர் இல்லம் 3. அண்ணா பாலர் பள்ளி. 4. ராஜாமணி பெண்கள் தையல் பயிற்சி பள்ளி 5. பெண்கள் தங்கும் விடுதி 6. பரிமளம் துவக்க பள்ளி. இங்கு மொத்தம் 500க்கு மேல்பட்டவர்கள் இலவச வசதி பெற்று அபிவிருத்தியடைந்து வருகிறார்கள்.

ஏழைகளின் சரண் ஆலயமாக விளங்கும் இவ்வில்லத்தில் தான் ஒரு முழுநேரப் பொறுப்புடைய மானேஜராக இருந்து பணியாற்றி மக்களின் மன மகிழ்ச்சியைக் கண்டும், தனது திட்டப்படி காரியங்கள் கைகூடி, திருவெறும்பூர் சாந்தினி கேதனத்தை நோக்கி நடைபோடுவதை கண்டும்தொண்டை தொடர்ந்து வருகின்றார்.

25-1-78ல் மாணிக்கம் அவர்களின் மணிவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தமிழகப் பெருமக்களும் முக்குலப் பிரமுகர்களுமிருந்து எடுத்த விழாவில் அவரின் அரிய சேவைகளைப் பாராட்டி ''மக்கள் தொண்டர் மாணிக்

RangaRakes tamilnavarasam.com

கம்'' என்றும் ''செயல்வீரர் மாணிக்கம்'' என்றும் பட்டங்கள் வழங்கிப் பொன்னுடை போர்த்தி மகிழ்வித்தனர்.

## மதுரை தமிழ்ச்சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் சமுதாய விடிவெள்ளி ஆண்டியப்பதேவர்

ஆண்டியப்பத்தேவர் ஒரு பெரும் சமூக அபிமானி தன் வாழ்நாளில் பெரும் பகுதியை தன் சமூக நலன்களுக்குப் பயன்படுத்திய மேதை. இவரின் பிறப்பிடம் விருதுநகர். மதுரையிலேயே தங்கிவிட்டார். இளமையிலிருந்தே சமூகப் பற்றும் சமூகமேன் மக்கள் பால் அபிமானமும் கொண்டவர்

முக்குலத்தவர்கள் சமூக அமைப்புகள், அவர்களின் மேம்பாட்டு இயக்கங்கள் எங்கு அமைந்தாலும் அதில் பங்கு கொள்ளத் தவரமாட்டார். அதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட சமூக அபிமானம், அவரைத்தேவர் இனமக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் படியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் படியாக ஆக்கியது.

முக்குல மக்கள் முன்னேற்றத்திற்கென அவரால் ஸ்தாபிதம் செய்ய உதவிய அமைப்புகள் 1. அலங்கா நல்லூரில் பாண்டி நாடு மாணவர் இல்லம், 2. திருநகரில் சேதுபதி மாணவர் இல்லம், 3. மாமன்னர் மருது பாண்டியர் மதுரை இல்லத்தில் உறுப்பினர்.

முக்குலத்தேவர் சிறப்பு மலர் வெளியீடு :

மதுரை தமிழ் சங்கத்தில் ஒரு அங்கமாக ''பாண்டித்துரை தேவர் பைந்தமிழ்ப் பேரவை'' என்ற ஸ்தாபனத்தை அமைத்து அதற்குத் தானே பொதுச் செயலாளராக இருந்து வருகிறார். இச்சங்கம் தமிழ் அறிஞர்களைப் பாராட்டியும் தமிழ் மொழியை மேலும் வளர்த்து வரும் செயலை மேற் கொண்டுள்ளது. ஆண்டியப்பனாின் தனித்த முயற்சியால் பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நூற்றுண்டு விழா கொண்டாடி அவரது மலரையும் வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



5-7-71ல் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்ச்சங்கத்திற்கே நிர்வாக முறை சீர்கேடு ஏற்பட அது காலை ஆண்டியப்பத்தேவர் சங்கத்தில் பிரவேசித்து அமைப்பிற்குப் புத்துயிர் கொடுத்தது மட்டுமல்லாமல் தான் தமிழ் சங்கத்தின் நிர்வாக சபை உபதலைவராகவுமிருந்து வருகிறார்கள்.

மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் ஆரம்ப காலம் முதல் பொறுப்பு ஏற்று வருகிறார்கள் சமூகப் பெரியோர்களின் வரலாறுகளைத் துண்டுப் பிரசுரங்களாகப் பிரசுரித்து வெளியிட்டுப் பிரசித்தம் செய்து வந்தமையில் நல்ல ஆக்கமும் ஊக்கமும் ஏற்பட்டதின் பயனாய் ''தேவர் முரசு'' என்னும் சமூக பத்திரிகை ஆரம்பித்துநடத்திவருகிறார் அப்பத்திரிகை சிறப்படைந்து வருகிறது.

16-7-78-ல் அன்னாின் மணிவிழாவை தமிழக மக்கள் கொண்டாடி மலரும் வெளியிட்டனர். சிவகங்கை மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் ஆண்டியப்பத்தேவருக்கு சமுதாய விடிவெள்ளி என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

## மதுரை தமிழ்ச் சங்கம் பாண்டித்துரை தேவர் பைந்தமிழ் கழகத்தின் பட்டமும் பாராட்டும் பெற்ற செல்வநாயகம்

திரு. செல்வநாயகம் சொந்த ஊர் ராஜபாளையம் 1930ல் ஆரம்பபள்ளி ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியரானார். அது காலை ராஜபாளையத்தில் ஹைஸ்கூல் வரை படித்தவர்கள் மிகவும் குறைவு. அவ்வூர் மறவர் சங்கம் சமூகத்தில் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் முயற்சித்து வந்த நேரம் சங்கத்தின் தொண்டர்களில் ஒருவராக பணியாற்றி வந்தார்.

1933ல் சென்னையில் நடந்த முக்குலத்தோர் மகாநாட்டில் கலந்து சமூகப் பெரியோர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சமூக மகாநாடுகளில் கலந்து கொண்டதின்

RangaRakes tamilnavarasam.com

பயனாய் தன்னைத் தனது சமூகக் கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

ரஜா காலங்களிலும் ஓய்வு நேரங்களிலும் ஹைஸ்கூலில் படிக்கும் மாணவர்களையும் பெற்றோர்களையும் நேரில் கண்டு படிப்பில் ஆர்வமூட்டினார் : ஏழைப்பிள்ளைகளுக்குத் தேவையான உதவிகளை தன் பொறுப்பிலும் வசதி படைத்தவர்களைக் கொண்டும் செய்து வைத்தார்.

மக்களின் நல்வாழ்வுக்கான சங்கங்களில் பங்கு கொண்டு தொண்டாற்றியதில் திருவள்ளுவர் கழகமும் ஒன்று. அக்கழகத்தார் இவரின் சேவையைப் பாராட்டி பணமுடிப்புக் கொடுத்தபோது, அந்தப் பணத்தைத் தன் பெயரால் டிரஸ்ட் ஒன்று ஏற்படுத்தி அதிலிருந்து அரசு இறுதியாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண் வாங்கும் ஆண் பெண் மாணவர் இருவர்களுக்கு சன்மானமாகக் கொடுத்து வரச் செய்துள்ளார்கள்.

தமிழ் மொழிப் பற்றுடையவர் கவிகள் இயற்றுவதில் திறமையுண்டு. மதுரை பாண்டித்துரைத்தேவர் பைந்தமிழ் கழகம் இவரது சமூக சேவையையும் கவித்திறத்தையும் பாராட்டி "சிந்தனைச் செல்வன்" எனும் பட்டம் வழங்கியுள்ளது. வாழ்நாள் பூராவும் தன் இன மக்களின் கல்வி விருத்திக்காகத் தொண்டாற்றி வருகிறார்.

அமெரிக்காவில் சான்பிரான்ஸிஸ்கோவில் நடந்த உலக கவிஞர்கள் கருத்தரங்கிற்கு தமிழகத்திலிருந்து செல்வ நாயகம் அவர்கள் இயற்றிய கவியொன்று அனுப்பப்பட்டுப் பாராட்டுதலுக்குரியதாகியுள்ளது.

சமூக மக்கள் கல்வியை பெருக்கியது மட்டும் அல்லாது தானும் ஒரு கவிஞனாக வளர்ந்து பாராட்டுதலும் பட்டமும் பெற்றதானது இன்னாரின் கடின உழைப்பாலும் உற்சாகத்தாலுமாகும்.



# பிரசித்தமான கவிஞர்கள்

(1) பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள். தெய்வீகக் கவிஞர் பிறவியிலேயே கவியியற்றும் ஞானம் பெற்றனர். சுவாமிகள் முருகனை மட்டுமே பாடும் நியமம் கொண்டு மொத்தம் 6666 திருப்பாடல்களால் முருகன் புகழைப் பாடினர். 32 வியாசங்கள் எழுதியுள்ளனர். இவர்களின் காலம் கி.பி. 1850—1629.

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் தேசீய கவிஞர் சுதந்திர இந்திய விடுதலைப் போராட்டவீரர். இவர் பாடிய தேசீயப் பாடல்கள் 600க்கும் மேலாகும் இவரின் பாடல்கள் தேசிய விடுதலை வெறியையும் போரட்ட வீரத்தையும் ஊட்டி விடுதலைப்போர் முனையில் ஒளி வீசியது இவரின் காலம் 1892—1952.

மாநகர் மதுரை கார்ப்ரேஷன் நிர்வாகம் மதுரை திடீர் நகரில் ஒரு வீதிக்கு இன்னாரின் பெயரை வைத்துக் கௌரவித்திருக்கிறது.

## கலை உலகில் தேவமார் சமூக அறிஞர்கள்:

வேதம், புராணம், இதிகாசங்கள்; உபநிடதங்கள் முதலியவைகளிலிருந்து கதை அமைத்து மக்கள் மனதில் மகிழ்வூட்டும் பொருட்டு, கூத்தாகவும் பாவைக் கூத்தாகவும், காலச்சேபமாகவும் நடித்துக் காலங்கழித்து வந்தவர்கள்; நம்நாட்டில்; கூத்தர், பாணர், விறலியர் புலவர் எனப்படுவர்.

தமிழ்ச்சங்கங்கள் தோன்றி இயல் இசை நாடகம் என முத்தமிழ் உருவாகிய பிறகு நாடகத் தமிழ் தனிப்பட விளங்கி வளர்ந்து இலக்கியம் கண்டது. நாடகம் ஒரு சர்வ தேசக்கலை எனினும் தமிழ் நாட்டில் 18-ஆம் நூற்றாண்டில் சிறப்படைந்தது. முதன் முதலில் அருணாசலக் கவிராயர்,



RangaRakes
tamilnavarasam.com

கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியவர்கள் எழுதிய நாடக நூல்களில், நந்தன் சரித்திரம், குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் போன்றவைகள் உண்டாயின அதன் பின் 1891ல் சுந்தரம் பிள்ளையவர்கள் மனோன்மணியம் என்னும் சிறந்த நாடக நூலை வெளியிட்டார். சம்பந்த முதலியார் அவர்கள் சிறுத்தொண்டர், யயாதி நாடகங்களை வெளியிட்ட பிறகு தமிழ்நாட்டில் நாடகக் கலை வளரத் தொடங்கிற்று.

நாடகம் நடைமுறையில் கூத்தாகத் தெருக்களில், தீவட்டி வெளிச்சத்தில் திரைச் சீலையை வைத்து மறைப்புக் கட்டிக் கொண்டு ஆடப்பட்டு வந்தது.

1875ல் பாரசீக நாட்டார் சென்னையில் வைத்து கொட்டகையில் மாளிகை, காடுவனம், முதலிய காட்சிகள் அமைத்து திரை தாழ விட்டுச் சீன்கள் அமைத்து நாடகம் நடத்தியபோது, தஞ்சாவூர் கோவிந்தசாமி ராவ் என்ற மகாராஷ்டிர நாடகக் கலைஞர் சீன் முறை அமைப்பைத் தஞ்சையில் தோற்றுவித்தார்.

புதுக்கோட்டை சமஸ்தான மகாவித்துவான் ''கஞ்சிரா மான்பூண்டியாபிள்ளை'' அவர்கள் புதுக்கோட்டையில் வைத்து கஞ்சிரா வாத்தியம் என்னும் சிறந்த கருவியைக் கண்டுபிடித்து அரங்கேற்றினார். அது காரணமாகவே அவருக்கு கஞ்சிரா மான்பூண்டியாபிள்ளை எனப் பெயர் வழங்கலாயிற்று. மாமுண்டியாபிள்ளை என்றும் சொல்லுவதுண்டு. இவர் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்.

கஞ்சிரா வாத்தியம் ஒரே பக்கத்தில் ஒற்றைக்கை விரல், தட்டு வாத்தியவட்டத்தின் முக்கூட்டு அமைப்பில் உலோகத்தகட்டின் கோவையுடன் கூடிய அசைவிலும் இசை கூட்டி, எல்லாத்தாளங்களும் நாத, கீத, ஓசை, ஒலியுடன் சங்கீதம் பேசவல்லதாகும். இவ்வாத்தியம் பயில்வது மிகவும் கடினம். பற்பல ஆண்டுகள் குருவினிடமிருந்து செவி வழியாய் கேட்டு கைவிரல்கள் அறிவித்துப் பயில வேண்டியது. எனவே இவ்வாத்தியம் பலராலும் படித்தறிய முடியவில்லை.



தச்சணாமூர்த்திப் பாகவதருக்கு பிள்ளையவர்கள் இந்த வித்தையைத் கற்றுக் கொடுக்கத் தொடங்கும்போது அவருக்குத் துணையாய் பேரறிஞரும் மறவர் குலத்தினருமான சேத்தூர் அரசர் சேவுக பாண்டியத்தேவருக்கும் சேர்த்துக் கற்றுக்கொடுத்தார். கஞ்சிரா வாத்திய இசையில் தச்சிணாமூர்த்தி அவர்களும் சேவுகபாண்டியத் தேவர் அவர்களும் பாரதத்தில் இணையற்று விளங்கினர். பிற்காலத்தில் இவ்வாத்தியம் கச்சேரிகளில் காண்பது அரிதாகவுள்ளது.

தமிழ்நாட்டில் இதுகாலை கஞ்சிராவாத்திய வல்லமையுள்ளவர் இராஜபாளையம் கந்தசாமித்தேவராகும் இவர்கள் சேத்தூர் ஜமீன்தார் அவர்களின் உடன் இருந்து பல்லாண்டு பயின்றவராகும்.

சங்கீதப் புலமைமிக்குடையவராய் விளங்கிய சங்கரதாஸ் சாமிகளைக்கொண்டு மகாவித்துவான் மாமுண்டியாபிள்ளை நாடகக் கலையை விருத்தி செய்ய முன்வந்தார்: தமிழ்நாட்டில் முதன் முதல் கூத்து முறையை மாற்றி நாடக வடிவில் கொட்டகை திரையுடன் விளக்குகள் வைத்துக் கோயில், அரண்மனை நகரம், காடு முதலான சீன்களுடன் நடிகர்கள் நேரில் வேடதாரிகளாக கதாநாயகன், நாயகி; கதையின் பாத்திரங்களாகச் சம்பாசிக்கும் நடிப்பு ஏற்பட்டது.

நாடகம் எழுதுதல், வசனம், சங்கீதம், நடிப்பு வேடம் தயாரிப்பு ஆகிய கலைவண்ணங்கள் பலவும் தெளிவாய்த் தெரிந்து விளங்கினார் சங்கரதாஸ் சாமி அவர்கள் அவர் ஓர் ஒப்பற்ற நடிகருங்கூட. இரணியன்; இராவணன், எமதருமன் வேடங்களில் இவருக்கு இணையாக நடித்தவர்கள் இது வரை நம்நாட்டில் தோன்றவில்லை என்று சொல்லலாம்.

தமிழ்நாட்டில் நாடகம் சரியானபடி உருவாகி வளர ஆதிக் காரணகர்த்தர் சங்கரதாஸ் சாமி அவர்களாகும். அவர் திருநெல்வேலிச் சீமையில் செம்பியன் நாட்டு மறவர் குடியில் பிறந்தவர் வத்திராயிருப்பு மகாவித்துவான் பிடில் கருப்பணத்தேவரின் நண்பராக விளங்கியவர்.

RangaRakes tamilnavarasam.com

எனவே நாடகக்கலை நம் நாட்டில் தமிழ் மன்னர்வழித் தேவமார்களாகிய மகாவித்துவான் மாமுண்டியாபிள்ளை சங்கரதாஸ் சாமி ஆகியவர்களைச் சேர்ந்ததாகும். தமிழ் நாட்டிற்கும். தமிழ்க் கலைக்கும் வாரிசாய் அவதரித்தவர் சாமிகள் என்பதை அவர்கள் வரலாறு விளக்கிக்காட்டுகிறது தமிழ்நாட்டில் இன்று சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் நாடக மன்னர்கள் பலரும் கலை அபிமானிகளும், கலை இயல் இசை, ரசிகர்களும், சங்கரதாஸ்சாமி அவர்களைத் தெய்வ மாக வழிபாடுகள் செய்து வருகின்றனர். என்பதைக்காண எவர்தான் மகிழாமலிருப்பர். தெய்வத் தமிழ்நாட்டின் தலை நகரான மாநகர் மதுரை மத்தியில் முத்தமிழ் வித்தகர்கள் கூடி, ஸ்வாமி அவர்களுக்கு வெங்கலச் சிலை எழுப்பியிருப்ப தானது; தமிழ் மக்கள்—முக்கியமாக மதுரை மக்களின் ஆழ்ந்த அறிவுச் சிறப்பைக்காட்டுகிறது. என்று ஏன் சொல் லக்கூடாது? மதுரையில் சுவாமி அவர்களின் பெயரால் நிறுவப்பட்டிருக்கும் கலையரங்கானது ஜீவஜோதியாய் விளங் கிக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

தமிழ்நாட்டின் தீர்க்கதரிசிகளாய் விளங்கும் கம்பன், கண்ணகி, ஔவை திருவள்ளுவர் நக்கீரத்தேவர் இராஜ ராஜசோழதேவன் பாண்டித்துரைத் தேவர், பாஸ்கரசேது பதி ஆகியவர்களின் வரிசையில் கலைத் தெய்வம் சங்கரதாஸ் சாமி காட்சியளிக்கிறது.

1901ல் சங்கரதாஸ் சாமியவர்கள் மதுரையில் பாலம்ன ரஞ்சினி சபையை அமைத்தார்கள் அச்சபையின் நடிப் பாசிரியராகவும் விளங்கினார். இவருடன் சீடராகவும் நடிக ராகவும் விளங்கியவரே ''வரகவிசங்கிலியாபிள்ளையவர்கள்' சங்கியாபிள்ளை அவர்கள் மதுரை நகரில் அகமுடை யர் வகுப்பில் தோன்றியவர் தமிழ் நாடெங்கும் நாடக மேடை சிறப்பாய் விளங்கினமைக்குச் சங்கரதாஸ்சாமி அவர்கள் பால் பயிற்றுவிக்கப்பட்ட நடிகர்கள் தான் காரண மாகும். சாமியவர்கள் தனது சீடர்களுக்கு நாடகக் கலையை யும் தெய்வீகப் போதனையையும் சேர்த்து ஊட்டினார்.



சங்கிலியாபிள்ளை அவர்களின் நாடக சபையில் சங்கர தாஸ்சாமி அவர்களை நடிப்பாசிரியராகக் கொண்டு நடிப்புக் கற்றுக்கொண்டவர்கள் நூற்றுக் கணக்கில் நடெங்கினும் விளங்கினர், அவர்களில் முக்கியமானவர்கள் 1. ஆஞ்சனே யர் சின்னச்சாமித்தேவர் வலையபட்டி 2. விகடகவி நல்லுத் தேவன்பட்டி கோமாளி அய்யர் தேவர். 3. ஆறுமுகம் சேர்வை மதுரை. 4. கூழ்பிள்ளை மதுரை. 5. முத்துத் தேவர் இராமநாதபுரம். சாமியவர்களின் சீடர்கள் தோற்று வித்த நாடக சபைகள் 1. நவாப்பு ராஜமாணிக்கம் கம் பெனி 2. T.K.S. பிரதர்ஸ் நாடகசபை ஆகியவைகளாகும் இப்படியாகத் தேவர் சமூக மக்களால் தங்களுக்கே உரிய கலைப்பற்றால் நடிப்புக்கலை சிறந்து விளங்கிற்று.

1920-ஆம் ஆண்டு திரைப்படம் தோன்றியது திரை யுலகு அபிவிருத்திப் பாதையில் நடைபோடவே நாடகக்கலை யும் நலிவுறலாயிற்றது. நவீன அடிப்படையில் தோன்றிய திரைப்படக்கலை வளர்ச்சியில் தேவர்குல மக்கள் முன் வரிசையில் நின்று சிறப்பு நடைபோடத் தவறவில்லை. நடிப்புக்கலை தேவர் சமூகத்திற்குப் பரம்பரைச் சொத்தாகு மல்லவா? அம்பிகை பிரகதாம்பாள் ஆசியுடன், புதுக் கோட்டையில் மாகவித்துவான் மாமுண்டியாபிள்ளையின் வம்சத்தில் தோன்றி நாடக உலகின் பொற்கிரீடமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னப்பாத்தேவர் முதல் முதலாக சினிமா உலகிற்கு அடியெடுத்து வைத்தார்கள். கனம் சின்னப்பாத் தேவர் அவர்களே பிற்காலத்தில் P. U. சின்னப்பாபாகவதர் என அழைக்கலானார். P.U.சின்னப்பா அவர்கள் நாடகத் தொழிலில் இருக்கும்போதே, 'தமிழ் நாட்டின் தவநாடகபூபதி' என்னும் பட்டம் பெற்றார். சாயுத்தியம் சங்கீதம், ரசனை, ஜீவு, சுக்கியானம் முதலிய தேன்சுவை லகிப்புகளுடன்; ரசிகர்களின் மனதைக் கவரும் படியாகப் பாட்டுப்பாடும் வித்துவம் படைத்தவர். நடிப்பு, மல்யுத்தம், குத்துச்சண்டை, சிலம்பு விளையாட்டு, குஸ்தி, வாள்வீச்சு முதலிய கலைகளில் தன் நிகர் அற்ற நடிகராகும். சினிமாவில் சின்னப்பா அவர்கள் அடைந்த வெற்றியானது

RangaRakes
tamilnavarasam.com

தமிழ் இளைஞர்கள் பலரைத் திரையுலகிற்கு அழைத்தது அப்படியாகக் கலையை அலங்கரித்து முன்னேறிப் பாய்ந்து வரும் மார்க்கத்தில் அகால மரணமடைந்தார்.

1. **ஸ்டண்டு சோமுத்தேவர்:** அகில இந்திய பிரக்கியாதி பெற்ற ஸ்டண்ட் நடிகர்.

2. O. A. K. **தேவர்:** மதுரை ஜில்லா உசிலம்பட்டி தாலூகா, ஒத்தப்பட்டி அய்யர்தேவர்மகன் கருப்பத் தேவர். சிறந்த குணச்சித்திர நடிகர். பிரமலைக்கள்ளர்.

3. **சிவாஜிகணேசன்:** தஞ்சை மாவட்டம் சூரக் கோட்டை சின்னையாபிள்ளை மகன் கணேசன். அகில உலகப் புகழ் பெற்றவர். தற்போது டில்லி பாரளுமன்ற உறுப்பினர். கள்ளர்குலம். பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

4. S. S. **ராஜேந்திரன்:** மதுரைமாவட்டம் சேடபட்டி சூரிய நாராயணத்தேவர் மகன். முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர். தற்போது சட்டமன்ற உறுப்பின ராகவும், சிறுசேமிப்புத்திட்ட துணைத்தலைவராகவும் இருக்கிறார். தலைசிறந்த நடிகர். மறவர் குலம்.

5. M. M. A. **சின்னப்பாத்தேவர்:** கோவைமாவட்டம். பிரபல ஸ்டண்ட் நடிகர். திரைப்பட தயாரிப்பாளர். கலையுலகில் அனைவராலும் மதிக்கக் கூடியவராக விளங்கினார்.

6. **மனோரமா:** கள்ளர்குல வீரமங்கை. நகைச்சுவை நடிகை மன்னார்குடி.

7. **முத்துராமன்:** காரைக்குடி சொந்த ஊர். கள்ளர் குலத்தவர். சிறந்த குணச்சித்திர நடிகராக விளங்கினார்.

8. **உடையப்பா:** கள்ளர்குலம். நாடக உலகிலிருந்து திரைப்படத் துறையில் பிரவேசித்து புகழ்பெற்று வருகிறார்.



9. **பெரியகருப்பத்தேவர்:** மதுரை மாவட்டம் உசிலம் பட்டி தாலூகா கருமாத்தூர் பிரமலைக்கள்ளர். நாடக உலகில் தலைசிறந்த நடிகர். திரையுலகில் பிரவேசித் திருக்கிறார்.

10. **பாரதிராஜா:** மதுரைமாவட்டம் தேனி அல்லிநக ரம், பெரியமாயத்தேவர் மகன் சின்னச்சாமி பிரமலைக் கள்ளர். தலைசிறந்த திரைப்பட இயக்குனர்.

11. **சந்திரசேகர்:** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலூகா கருமாத்தூர் சிவங்காளைத் தேவர் மகன். பிரமலைக்கள்ளர். தற்பொழுது கலையுலகில் முன்னணி நடிகர்

12. **சங்கிலிமுருகன்:** மதுரைமாவட்டம் பொதும்பு கிராமம், அகமுடையர்குலம். சிறந்த குணச்சித்திர நடிகர்.

13. **பாலமுருகன்:** திரைப்பட வசனகர்த்தாவாக விளங்கினார்.

14. **மகேந்திரன்:** முன்னணி திரைப்பட இயக்குனர்

15. R. C. **சக்தி:** திரைப்பட இயக்குனர்.

16. **ராஜேஷ்:** சிறந்த நடிகர்.

17. **வடிவுக்கரசி:** குணச்சித்திர நடிகை

18. **ராஜாபகதூர்:** P.U. சின்னப்பா மகன் நடிகர்.

19. A. S. **பிரகாசம்:** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலூகா முதலைக்குளம். பிரமலைக்கள்ளர். திரைப் படத்தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும் விளங்கி

RangaRakes tamilnavarasam.com

வரும் இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் துறை பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

20. **மணிவண்ணன்:** கோவை மாவட்டம், திரைப்பட கதை, வசனகர்த்தா. கள்ளர்குலம்.

21. **வைரமுத்து:** மதுரை மாவட்டம், பெரியகுளம். பிரமலைக்கள்ளர், தலைசிறந்த கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர்.

22. **முத்தப்பா:**— மதுரை மாவட்டம் ஒத்தப்பட்டி பிரமலைக்கள்ளர் தலைசிறந்த நாடக நடிகர்

# தமிழ்நாடு அரசியலில் முக்கிய தேவர் சமூகத்தினர்கள்

## திரு. முத்துராமலிங்கத் தேவர் வரலாறு

விடுதலைத் தாகமுடைய வீரத்தமிழர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து காந்திமகான் போதனையைப் பின்பற்றி நாட்டு விடுதலைத் தொண்டாற்றினர். அதுகாலை முன்னணியில் நின்று சுதந்திரக் கர்ச்சனை செய்த பல்லாயிரக் கணக்கான தேவர் சமூக இளைஞர்களில் 1927 ஆம் ஆண்டு தன் வாழ்க்கையைப் பாரத விடுதலைக்காக அர்ப்பணித்தவர் பசும்பொன் உக்கிரபாண்டியத் தேவர் குமாரன் முத்துராமலிங்கத் தேவராகும். இந்தச் சற்புத்திரனே தாய் நாட்டிற்குச் செய்ய வேண்டிய தொண்டினைத் தெய்வீகத் திருப்பணியாகப் புரிந்து தூய அரசியல் வாழ்வு வாழ்ந்தவர். தேச மக்களால் அரசியல் ஞானி என்று போற்றவும் புகழவும் பட்டு வருகிறார்.

இவர் சிறு பிராயத்திலேயே பெரும்புகழ் பெற்றதற்குக் காரணம் இவருடைய விசாலமான அறிவுத்திறனும். மக்கள் பால் ஈவு இரக்கம் காட்டியமை அதர்மத்தை எதிர்த்துப் போராடுவதில் அஞ்சாமை அதன் அடிப்படையில் அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தார்.

குற்ற பரம்பரைச் சட்டம் மனிதவர்க்கத்திற்கே கூடாது என்று எண்ணினார். இந்தச் சட்டம் தன்னுடைய நாட்டில் பிறப்பிக்கப்பட்டுத் தான் பிறந்துள்ள சமூகத்தினர்பாலும்

RangaRakes
tamilnavarasam.com

அமுலாக்கப்பட்டமை கண்டு மனவேதனைப்பட்டு அச்சட்டத்தைப் பிரயோகித்துக் கொண்டிருந்த அரசைக் கண்டித்துப் பிரச்சாரம் செய்து வந்தார்.

நாடெங்கிலும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தினர்கள் பால் இரக்கம் கொண்டார். அவர்கள் படும் துயர் துடைக்கப் பொறுப்பேற்றார். போராட்டங்களில் தீவிரமாக இறங்கினார். திறமையாகச் செயல்பட்டு வெற்றி தேடித் தந்தார் போராட்டக் காலங்களில் அரசால் ஏவிவிடப்பட்ட போலீஸ் அடக்குமுறைக்கும், கொடுமைகளுக்கும் அஞ்சாமல் முன்னேறினார். நாட்டு மக்களுக்குத் தேசாபிமானத்தை ஊட்டினார். நாட்டு மக்கள் கோடிக்கணக்கில் முத்துராமலிங்கத் தேவரைப் பின்பற்றினர்.

காந்தி மகானின் திட்டங்களாகிய, கதர்த்திட்டம், மதுவிலக்குத் திட்டம், தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம் முதலிய முக்கிய வேலைகள் நிறைவேறுவதற்கு முத்துராமலிங்கத் தேவரே காரணமாகயிருந்தாரென்றால் மிகையாகாது முத்துராமலிங்கத் தேவரின் தனிப்பட்ட செல்வாக்கு தென் தமிழ்நாட்டில் போலீஸ் அடக்குமுறையை ஒடுக்குவதற்கும் காங்கிரஸ் கட்சியை வளர்ப்பதற்கும் உபயோகமாகவிருந்தது. தீண்டப்படாத சாதியார்களுக்கு நல்லபடியாகப் பணியாற்றி அவர்கள் நாட்டில் சமத்துவமாக வாழவேண்டும் என்றும் அதற்கு ஏனைய எல்லாச் சாதியினர்களும் மனப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் போதனை செய்து; அங்கயற்கண்ணி அன்னை மீனும்பிகையின் ஆலயத்திற்குள், ஆயுத பலம் கொண்டு எதிர்த்து நின்ற சனதனிகளின் தடுப்பை உடைத்துக் கொண்டு தானே அரிஜனங்களை உடனழைத்துக் கொண்டு கோவிலின் உட்பிரகாரச் சன்னதியில் வைத்துத் தரிசனம் செய்து வைத்த விதம் யாவரும் தெரிந்ததே.

1937-ஆம் ஆண்டு அகில இந்தியக் காங்கிரஸ் பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கூடி சட்டசபைப் பிரவேசம் செய்யவேண்டும். காங்கிரஸ் மந்திரி சபைகள்



அமைக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அதன்படி சென்னைச் சட்டச்சபையைக் கைப்பற்றத் தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தலில் இறங்கியது.

அது காலை முத்துராமலிங்கத்தேவர் காங்கிரஸ் வெற்றிக்குத் தீவிரப் பங்கெடுத்து பிரச்சார வேலையில் இறங்கினார். தனது சமூக மக்களில் தலைசிறந்த தேசபக்தர்களாகிய; பூண்டிவாண்டையார், P. R. தேவர், நாடிமுத்துப்பிள்ளை, இராஜாராமபாண்டியன், செல்லச்சாமிப் பாண்டியன், S. O. S.P உடையப்பா, R. V. சாமிநாதன் முத்துச்சாமி வல்லத்தரசு தினகர சாமித்தேவர், பாரத முத்துத்தேவர், சிதம்பரபாரதி, இவர்கள் போன்ற இன்னும் எத்தனையே ஆயிரக்கணக்கானோர்களை எல்லாம் தட்டி எழுப்பி தேச விடுதலைப்போரில், உத்வேகத்தை மூட்டி விட்டார். அஞ்சாமை, வீரம், தேசபக்தி, ஆகிய தத்துவங்கள் பொருந்திய தேவர் அவர்களின் சொல்திறன் வாய்ந்த பிரசங்கங்களின் பயனாய் தமிழ்நாடு பூராவிலும் காங்கிரஸ் பற்று வளர்ந்தது. ஆங்கிலேயர்களின் மேல் எதிர்ப்பு உணர்ச்சியும் மக்கள் மனதில் மேலோங்கியது. தேவர் அவர்களை மேலும் பேசவிட்டால் சீக்கிரம் அரசு கவிழ்ந்துவிடும் என்று பயந்து தேவர் அவர்களுக்கு வெள்ளையர் சர்க்கார் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டுப் பேசவிடாமல் செய்து விட்டது. அத்துடன் தேவர் நின்று விடவில்லை. வாய் பேசாமலே நாடு சுற்றி நாட்டின் அரசியல் தலைவர்கள் யாவர்களுடனும் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் தேவர் அவர்களின் பிரசாரத்தின் வன்மையையும் தேவர் சமூகத் தலைவர்கள் ஒத்துழைப்பையும் பெரிதும் வியந்தனர். காங்சிரஸ் ஆட்சியமைத்தால் குற்ற பரம்பரைச் சட்டம் ரத்துச் செய்யப்படும் என்பதாகக் கூட முன்னதாகவே தமிழ்நாடு காங்கிரஸ் வாக்குறுதி கொடுத்திருந்தது :

எலக்ஷன் முடிந்தது. காங்கிரஸ் கட்சி வாகை சூடியது 125 ஸ்தானங்களை காங்கிரஸார் கைப்பற்றினர். மந்திரி சபை அமைக்கும் வாய்ப்பையும் காங்கிரஸ் கட்சி அடைந்

RangaRakes
tamilnavarasam.com

தது. தேவர் சமூகப் பிரமுகர்களாகிய; முத்துராமலிங்கத் தேவர் P. R. தேவர் நாடிமுத்துப்பிள்ளை ஆகியவர்களும் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றியடைந்தனர். அத்துடன் பாரதத்தில் வெற்றி கண்ட மாகாணங்கள் மொத்தம் ஏழு இடங்களில் மந்திரி சபைகள் அமைத்தன வெள்ளைக்காரர் ஏகாதிபத்தியத்தைக் கதிகலங்கச் செய்ய லாயிற்று. சென்னையில் மந்திரி சபை அமைத்த பிறகு, மதுரையில் நடந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் பேசிய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காங்கிரஸ் அடைந்த வெற்றியானது தேவர் திருமகன் தேர்தலில் செய்த வீரதீரச் செயல்களின் பலன்தான் என்றும்; அவர் கள் அடக்குமுறைச் சட்டத்திற்கும், வாய்பூட்டுப் சட்டத் திற்கும் அஞ்சாமல் உயிர், பொருள் ஆவி அத்தனையும் வெறுத்து நாடெங்கும் சூறுவளிப் பிரயாணம் செய்து வாக் காளர்களையும்; தேசத்தலைவர்களையும் தொண்டர்களையும் உசார்ப்படுத்தி வெற்றியைத் தேடித்தந்தார் எனப் பாராட் டிப் பேசி இந்த மகத்தான வெற்றி முத்துராமலிங்கத் தேவரின் வெற்றி எனப் புகழ்ந்தார் என்பதை யாவரு மறிவர்.

19௦8 திரிபுரா காங்கிரஸ் தலைமைக்கு சுபாஷ்சந்திர போசும் பட்டாபி சீத்தாராமையாவும் போட்டியிட்டனர். பட்டாபி சீத்தாராமையாவைக் காந்திஜி ஆதரித்தார். சுபாஷ் சந்திரபோசை S. சீனிவாச அய்யங்காரும் தேவரும் ஆதரித்தனர். சுபாஷ் வெற்றி பெற்றார். காந்திஜி பட்டாபி யின் தோல்வி தன் தோல்வி என அறிவித்தார். இந்தத் தேர்தல் அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்ததொன்று கும். இந்திய விடுதலைப் போராட்டத்திலும் ஆட்சிமுறையி லும் காந்தி மகானுக்கும் போசுக்கும் ஆழ்ந்த கருத்து வேறு பாடு ஏற்பட்டது. வீர இளைஞர்கள் போஸின் பின் அணி வகுத்து நின்றனர்.

காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்தில் காந்தி மகான் தலைமையில் ஊர்ந்து செல்லும் போக்கைக் கண்டு நெஞ்சம் பொறுமல் துடித்து எழுந்து தோழர்கள் பலரைச் சேர்த்து



முற்போக்குக் காங்கிரஸ் அணி ஒன்றை வங்க வீரர் சுபாஷ் அமைத்தார். அவர் சிறப்பு நோக்கம் ஆங்கிலேயரிடம் இந் திய விடுதலை கேட்டு வாங்கக் கூடியதொன்றில்லை. அவர்களி டம் எந்தவித உறவுமில்லாமல் அவர்களுடன் போரிட்டு அடித்துப் பிடுங்கியே சுதந்திரமடைய வேண்டுமென்பதா கும். போர் முறையைக் கையாள வேண்டும்: ரத்தம் சிந்த வேண்டும். அப்படி அல்லாமல் அடையும் சுதந்திரம் மக்கள் வாழ்வுக்குப் பயன்தராதென்றார் போஸின் தீவிரப்போக்கை பெரிதும் முத்துராமலிங்கத்தேவர் ஆதரித்தார் சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த காங்கிரஸ் முற்போக்குச் செயற்குழு கமிட்டியில்; முத்துராமலிங்கத்தேவரும் சீனிவாச அய்யங் காரும் இடம் பெற்றனர்.

இக்கமிட்டி 1939ல் அமைக்கப்பட்டது. அக்கமிட்டியில் தேவர் உபதலைவராகும்.

சென்னையில் ராஜகோபாலாச்சாரி மந்திரி சபையில் நிர்வாகப்போக்கில் தேவர் அதிருப்தி கொண்டார். சி.டி. ஆக்ட் ரத்து செய்யக் காங்கிரஸ் மந்திரி சபை தவறி விட் டது. தொழிலாளர் போராட்டங்களில் தேவருக்குத் தடை போட்டது தண்டிக்கவும் செய்தது. காங்கிரஸ் ஆக்கல் வேலைகளில் தேவர் ஒத்துழைக்கத் தவறவில்லை.

திருப்பரங்குன்றம் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் ராஜாஜி மந்திரி சபையை மாற்றியமைக்கும் பொறுப்பில் திரு.தேவர் தனது செல்வாக்கை பிரயோகித்தார். ராஜாஜி வீழ்த்தப்பட்டார். கு. காமராஜ் காங்கிரஸ் தலைவரானார்.

1939ல் யுத்தம் மூளவே பாதுகாப்புக் கைதியாக்கப் பட்டு; திருச்சி. வேலூர் அலிபுரம், ராஜமந்திரி முதலிய சிறைகளுக்கு கொண்டு போனார்கள். யுத்தம் கடுமையாகி பிரிட்டிஷாருக்கு தோல்வியேற்படுமோ என்ற கட்டத்தை யடையவே: இன்னும் இவர் போன்ற பயங்கரவாதிகள் என்று வெள்ளையரால் கருதப்பட்டோர்களையும் ராணுவ முகாம் சிறையான ''டாமோ''விக்குள் கொண்டு போய்

RangaRakes
tamilnavarasam.com

விட்டார்கள் இவருடன் என்.ஜி. ரங்காவும் மற்றுமிருவருமிருந்தனர். ஆறு வருஷங்கள் கொடிய சிறை வாயிலிருந்து 8—8—1945—ல் விடுதலையாகி வந்தார்.

1941—ல் சுபாஷ் பாபு அஞ்ஞான வாசம் செய்ய வேண்டியதேற்பட்ட காலை; அகில இந்தியப் பார்வர்டு பிளாக்கின் உபதலைவராக விருந்து வந்த முத்துராமலிங்கத்தேவர் நேத்தாஜியின் தலைமைப் பதவியை ஏற்கவேண்டிய தேற்பட்டது 1946 பொதுத் தேர்தலின் போது: தேவரவர்கள் தொகுதியில் சட்ட மன்றத்திற்கு யாரும் போட்டியிட முன்வரவில்லையாகையால் தேவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1948—ல் காங்கிரசிலிருந்து பிரிந்து பார்வர்டு பிளாக் தனித்து இயங்கலாயிற்று.

## போசுடன் முத்துராமலிங்கத்தேவரின் தியாகப்போர்

இரண்டாவது உலகமகாயுத்தத்தில், ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கேளாமல் அதைப்போரில் இழுத்துத்தொண்டர்கள் இதன் காரணமாக ஒன்பது மாகாணங்களில் ஆட்சி பொறுப்பிலிருந்த மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டார்கள் எனவே வெள்ளையர் ஆதிக்கம் இந்தியாவின் மாகாணங்கள் ஒன்பதிலும், யதேச்சாதிகாரத்தை பிரயோகித்துக் கவர்னர்கள் மூலம் ராஜ்ஜியமாளத் தொடங்கினர்.

உலகப் போரின் திருப்பம் இங்கிலாந்திற்கு ஆபத்து விளைவிக்கும் திசையில் திரும்பியது; காணப்பட்டது—மலேயாத் தீவுகள், பர்மா, இவைகள் ஆங்கிலேயரிடமிருந்து பறிக்கப்பட்டன; இந்தியாவில் அநேகர் ஜப்பானியருக்கு உதவியாக ஐந்தாம் படை வேலை செய்வார்களோ? என்ற சந்தேகம் வெள்ளையர் உள்ளத்தைக் கலக்கியது. அது சமயம் ''சர்—ஸ்டிராப்போர்ட்—கிரிப்ஸ்'' மூலம் வெள்ளையர் இந்தியாவோடு சமாதானம் கொள்ள முயன்றனர். இந்தப்



பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ராணுவ நடவடிக்கை எடுத்து ஆங்கிலேயரோடு இந்தியா போர் தொடுக்கப் படை திரட்ட, சுபாஷ் சந்திரபோஸ், தானே முயன்றார். அதன் காரண்மாக 1939 ஆகஸ்ட்மாதம் காங்கிரஸ் மகாசபையினின்றும் விலக்கப்பட்டார். உடனே ஆங்கில சர்க்கார் சுபாஷ் சந்திரபோசைக் கைது செய்தனர். சிறையில் சுபாஷ் பாபுவின் உடல்நிலை குன்றவே அரசியலார் அவரை விடுதலை செய்தார்கள். 1941ம் ஆண்டு ஜனவரி முதல் நாட்டிலேயேக் காணப்படவில்லை. வெகு தீவிரமாக எவராலும் கடந்து செல்ல முடியாத வடமேற்கு எல்லை வழியாக தனது ஆன்மீக சக்தியால் வெளியேறி ஜெர்மனி தேசத்தில் ஹிட்லரிடம் போய்ச் சேர்ந்தார். அங்கிருந்து ஜப்பானையடைந்தார். அதன் மேல் பர்மாவுக்கும், மலேயாவுக்கும், சென்று அங்கு சிறைப்பட்டிருந்த இந்தியச் சிப்பாய்களைக் கண்டு பேசினார். செயல் வீரர் தனது முயற்சியில் இந்திய தேசிய விடுதலைப் படையமைக்கும் மாபெரும் நோக்கத்தில் வெற்றி கண்டார். இது சமயம் உலக மகாயுத்தம் டிசம்பர் 1941—ல் கிழக்கு ஆசியாவுக்குப் பரவியது.

1942—ல் ஆகஸ்ட் 7, 8 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ், பம்பாயில் வைத்து வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன் காரணமாக ஆகஸ்ட் 9-ந்தேதி மகாத்மா கைது செய்யப்பட்டார். அத்துடன் மாபெரும் தலைவர் எல்லோரையும், ஏகாதிபத்தியம் ஜெயிலிலடைத்தது. மக்கள் பதறி எழுந்தனர். எங்கும் புரட்சி உண்டாகியது. ரயில் வண்டிகள் கவிழ்க்கப்பட்டன. வெள்ளையர் விடுதலை வீரர்களுக்குக் கொடுத்த தொல்லைகள் சொல்ல முடியாது. இருப்புப் பாதைகள் பிடுங்கப்பட்டன. தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. அரசியலார் காரியாலயங்கள் தீக்கிரையாயின. அரசியலாரின் அடக்கு முறையைக் கண்டித்து மகாத்துமா 1943ல் சிறையினுள் இருந்தபடி உண்ணாவிரதம் தொடங்கினார். அதே சமயம் 1944ல் மகாத்துமாவின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி சிறையிலிருந்தபடி இறந்து போனார். நாட்டின் நிலைமை மிக மோசமாகியது.

RangaRakes tamilnavarasam.com

இந்திய மக்கள் வெள்ளையர்களை ஏகோபித்து வெறுத்து எதிர்த்தனர். இந்தக்காலம் வெள்ளைக்காரர்கள் மக்கள் முகத்தில் விழிக்க முடியாதபடி வெட்கப்பட வேண்டிய நிலையிலிருந்தது. அரசாங்க நடவடிக்கைகள் தடைபட்டுப் போன நிலை என்றே சொல்ல வேண்டும்.

சுபாஷ்பாபு பர்மாவில் சுதந்திர இந்திய சர்க்காரை அமைத்து ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து அச்சு நாடுகளின் உதவி கொண்டு இந்தியாவை ஆங்கிலப் பிடிப்பிலிருந்து விடுவிக்கத் திட்டமிட்டார். சிங்கப்பூரில் வைத்து பிரிட்டிஷ் அமெரிக்க நாடுகளுக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்தார். இந்திய விடுதலைப் படைக்குத் தலைமை தாங்கி, கிழக்கு எல்லை வழியாக அஸ்ஸாமில் நுழைந்து டில்லியை நோக்கி ஜெய்ஹிந்து கோசமிட்டு ஆரவாரத்துடன் புறப்பாடு செய்தார்.

கடுமையான அரசியல் நெருக்கடியைக் கண்ட வெள்ளையர்களுக்குக் கொலை நடுக்கம் கண்டது. அப்போது ராஜப் பிரதிநிதியாக இருந்த "வேவல் துரை" உடனே லண்டன் சென்று இந்தியாவின் கொந்தளிப்பை விவரமாக எடுத்துக் காட்டினான். இந்திய மக்கள் அனைவரும் சுதந்திரம் தவிர வேறு எந்த விலை கொடுத்தாலும், தாகம் தணியாத அளவுக்கு விடுதலை உணர்ச்சி மேலீட்டிலிருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தினான். இந்திய ராணுவம் எந்த நேரத்திலும் ஒவ்வொருவரும் சுபாஷாக மாறுந்தருவாயில் இருக்கிறார்கள் விடுதலைக்காக இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் தங்கள் உயிர்களை எந்த நிமிஷத்திலும் காணிக்கையாகத் தந்திடத் தீர்மானித்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் காங்கிரசுடன் சமாதானம் செய்து கொள்ளாவிட்டல் பேராபத்து வந்தே தீருமென்று தெள்ள தெளிவாகக் கூறிவிட்டான். அது கண்ட லண்டன் பார்லிமெண்ட், இந்தியாவுக்குப் பொறுப்பான பார்லிமெண்ட்ப் பிரதிநிதிகளை அனுப்பியது. பிரதிநிதிகளின் ஆலோசனைப்படி பல்வேறு இடர்பாடுகளுடன் கூடிய சுதந்திரம் 15-8-1947ல் இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கியது.



இந்த நிலையில் திடீரென்று உலக மாகயுத்தத்தின் திருப்பம் திசை திரும்பியது. அச்சு நாடுகள் சரணடைந்தன. யுத்தத்தில் ஜெர்மனியும் ஜப்பானும் தோல்வியடையவே இந்திய சுதந்திரச் சேனை செயலற்றுப் போய்விட்டது. அனேகர் கைதியாயினர் சுபாஷ்சந்திரபோஸ் கிழக்காசியாவிற்குச் சென்றுவிட்டார்.

உலக வரலாற்றில் கண்டறியாத அளவுக்குத் தீரத்துடன் செயலாற்றித் தாய்த்திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு அகில உலகத்தார்க்கும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டு பண்ணிய நேத்தாஜி சுதந்திர பாரதத்தைத் தான் நினைத்தபடி அமைத்துக் கண்டு மகிழக் கொடுத்து வைக்க வில்லை.

சுபாஷ்பாபுவின் முயற்சி அன்று பலன் அளிக்கா விட்டாலும், இந்தியத் துருப்புகளினிடையே ஒரு சுதந்திர உணர்ச்சியை மூட்டி விட்டது என்பது யாவரும் கண்டதாகும். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கும் ராணுவ நிபுணர்களுக்கும் மரண அடிகொடுத்த மாவீரன் நேத்தாஜி என்றால் மிகையாகாது.

15-8-1947-ல் பாரதம் பெற்ற சுதந்திரம் பாரதத்தின் தேசிய விடுதலைக்காகப் பாடுபட்ட இந்திய தேசியக் காங்கிரஸுக்கு மாத்திரம் விடுதலை என்று சொல்ல முடியாது 1911-ம் வருஷத்திய அடக்குமுறை C. T. Actனல் சித்திரவதைக்குள்ளாகி வந்த; மதராஸ், மகாராஷ்டிரம் மத்தியப் பிரதேசம், பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களிலுள்ள குற்ற பரம்பரை வகுப்பாருக்கும் இரட்டை விடுதலை என்று சொல்லவேண்டும்.

1952 பொதுத் தேர்தல் வந்தது. இந்தத் தேர்தல் ஓர் அபூர்வமானது. தேவர் பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும், போட்டியிட்டார். தனது இராமநாதபுரம் தொகுதியில் இந்த மாதிரி ஏற்பாடு ஒரு சம்பிரதாயமான



RangaRakes

tamilnavarasam.com

தாகும். அத்துடன் மதுரையில் பெரியகுளம் தொகுதிக்குத் தனது கட்சியின் பிரதான தொண்டன் மூக்கையாத் தேவரை நிறுத்தினார். ஆளும் காங்கிரஸ் ஆட்சியின் போக்கைக் கண்டித்துப் பிரச்சாரம் செய்தார்.

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸின் அரசியல் தத்துவம் ஒரு நாட்டின் மக்களுக்காக அரசு அமையவேண்டும்; அவர்களது நலன்களும் நல்வாழ்வும் பாதுகாக்கப்பட வேண்டும். அரசின் நலன்களுக்காக மக்களை உபயோகிக்க கூடாது என்ற அடிப்படையில் சோஷலிஸ சமுதாயம் பாரதத்திற்குத் தேவை. அப்படியிருக்க இன்றைய ஆட்சி பீடம் தங்களுக்காக மக்கள் வாழ்வைச் சீர்குலைக்கிறது என்று பிரச்சாரம் செய்தார்.

தன்னைப் பெற்ற பொன் நாட்டைத் தாயாகக் கண்டார், நாட்டு மக்களின் அனைவரின் உள்ளத்திலும் தெய்வம் தேவருக்குக் காட்சி கொடுத்தது. ஆளும் அரசு நல்ல அமைப்பில் தொழில்படவில்லை எனக் கண்டித்தார்.

நாட்டில் கள்ளமார்க்கட்டும் கலப்படமும், பதுக்கல் முறையும், அத்துடன் அரசின் அடக்கு முறையும் தாண்டவமாடி நாடு படுபாதாளத்தில் வீழ்ந்து விடும் போக்கைக் கண்ட தேவர் உள்ளம் வெம்பினார். அதோடு லஞ்சம் தாண்டவமாடியது. கள்ளநோட்டும் வெளியேறத் தொடங்கியது. நாட்டையும், நாட்டு மக்களையும் விடுவிக்க வேண்டிய பிறவித் தேசியவாதி என்ற பொறுப்பில் அநியாயத்தைக் கண்டித்து அறநெறியை நிலைநாட்டக் காங்கிரசை எதிர்த்துப் போர்க் கொடியை உயர்த்திப் பிரச்சாரம் செய்யப் பேராற்றலுடன் முற்படலானார். தேச மக்கள் அனைவரும் தேவரின் வழியில் நின்று அவர் போதனைக்குள் கட்டுப்பட்டு அவர் கொடியின் கீழ் அணிவகுத்து நின்றனர். அதுகாலை தேவர் இன மக்கள் பெரும் பான்மையாக ஆதரவு கொடுத்தனர். என்பதற்கு இவர்களின் தேசிய பரம்பரைப் பற்றே காரணமாகும். இதற்கு முக்கிய காரணங்கள் யாதெனில், முக்குலமக்கள் C. T. Act அடக்குமுறைச்



சட்டத்தால் கட்டுண்டு; மானமிழந்து, மதிகெட்டு, வாடி வதங்கி அல்லலுற்றகாலை அந்நிலைகண்டு அவர்களது துயரத்தில் ஈரறக்கலந்து நெஞ்சம் வெம்பி இவர்கள் விடுதலை அடையும்வரை தானும் இன்பவாழ்வு அடையேன் என்று பிரதிக்ஞை எடுத்துப் பிரம்மச்சரிய விரதம் பூண்டு விடுதலைக்குப் பாடுபடத் தொடங்கியதேயாகும். தேர்தல் முடிவு அமோக வெற்றியடைந்தது.

## முக்குலச் சமுதாயம் தேவர் அரசியலைத் திசை திருப்பியது

காங்கிரஸ் அரசு தமிழ்நாட்டில் கொடுங்கோன்மை ஆட்சி புரிகிறது என்ற உண்மையைப் வெளிப்படுத்துவான் வேண்டி 1957 தேர்தலில் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகப் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் நின்று 12 லட்சம் வாக்காளர் கொண்ட தொகுதியில் வெற்றி முரசு கொட்டினார். அதேபோல உசிலையிலும் திரு P.K. மூக்கையாத் தேவர் அவர்களைச் சட்டமன்றத்திற்கு நிறுத்தி வெற்றி கண்டார். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட சத்தியவான்கள் ஆட்சியில் அப்போது இருந்திருப்பார்களேயானால் நாட்டு மக்கள் காட்டிய தீர்ப்பிற்கு என்ன செய்திருப்பார்களோ!

துரதிருஷ்டவசமாக ஆட்சிப்பீடம் அழிவுப் பாதையில் இறங்கியது. தேவரின் ஜனநாயச் செல்வாக்கை அழிக்கச் சதிசெய்து அவர் தொகுதியில் கலவரத்தை உண்டு பண்ணி, ஆந்திராவில் இருந்து, மலபாரிலிருந்தும் போலீஸ்படையை இறக்குமதி செய்தும் துப்பாக்கிப் பிரயோகம்செய்து 17 வீர மறவர்களைச் சுட்டுத் தள்ளியது. அதில் கீழத்தூவலில் 5 தளகர்த்தர்களைக் கட்டிவைத்துச் சுட்டுக்கொன்ற சம்பவம் சந்திர சூரியர் உள்ள கால மட்டும் மனிதவர்க்கம் மறவாது. காங்கிரஸ் வரலாற்றில் படிந்த ரத்தக்கறை, இனத்துரோகம் எல்லை காட்டி நிற்கும். 1000 பேர்கள் காயமடைந்தனர். 5000பேர்கள் சிறையிலடைபட்டனர். 836 பொய்க்கேசுகள்

RangaRakes
tamilnavarasam.com

போடப்பட்டன. இத்தனைக்கும் மேலாகத் தேவர் திருமகன் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைத்தனர். இத்தனை அக்கிரமங்களும் பொய்யாக: ஆளும் காங்கிரஸ் அரசு செய்தது அடாத செயலென, உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியதை நாடு கண்டது.

புதுக்கோட்டை ஜெயிலிலிருந்து வெளியேறிய தேவர் குற்றமில்லா உத்தமன் என நாம் கண்டோமேயானாலும் அவர் உடலைப் பிறரறியா வண்ணம் மரணத்திற்கு பக்குவப்படுத்தியே வெளியேற்றினர் என்பது பின்னால் தெரிய வந்ததல்லவா? வெளியேறிய தேவர், கொலைகாரர்களை ஆட்சிப் பீடத்தில் இருந்து விரட்டியடிக்க வேண்டுமென்று சுத்தத்தேசிய பரம்பரைக்கு வேண்டுகோள் விடுத்தார். நோயால் சிறையில் நொந்து போன நிலையில் நடந்த தேர்தலில் பாராளுமன்றத்திற்கு நின்று தொகுதியில் போய் பிரச்சாரம் செய்யாமலேயே வெற்றியடைந்து எதிரிகளால் விரிக்கப்பட்ட மரணப் படுக்கையில் சாய்ந்து 1963ம் ஆண்டு ஆவி துறந்தார்.

## தேவர் அவர்களின் மனம் வெதும்பிய வாக்குமூலம்

முதுகுளத்தூர் கலவரம் நடந்துகொண்டிருக்கும் நேரம் ஜனநாயகக் காங்கிரஸ் மாநாடு 1957ம் ஆண்டு மதுரை தமுக்கம் மைதானத்தில் நடக்கிறது: அவர்கள் பேச்சில்:

''அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆணவத்தின் காரணமாகத் தேசியவாதியாக வாழ்கின்ற என்னை ஒரு ஜாதியவாதியாக்கி என்னை நேரடியாகத் தாக்குவதற்குப் பதிலாக, என் முதுகுளத்தூர்த் தொகுதி மக்களைப் பழி வாங்குகின்றார்கள். ஐந்து பேரைக் கீழத்தூவலில் கண்களையும் கைகளையும் கட்டிவைத்துச் சுட்டிருக்கிறார்கள். அடியேனை நேரடியாகத் தாக்க முடியாத அரசாங்கம் மறைமுகமாக மக்களைப் பழிவாங்குகிறது. கலவரத்தை



தூண்டி விட்டிருக்கிறார்கள். தூண்டுதலுக்கு இரையாகி அரிசன சகோதரர்களைத் திருப்பித் தாக்குகின்றவர்கள் என் இதயத்தை தாக்குகின்றவர்களாவார்கள். என் இதயத்தைப் பிளந்து அதிலிருந்து வருகின்ற இரத்தத்தைக் குடித்த பாவத்திற்கு ஆளாவார்கள்'' என்று கூறிதேவர்குல மக்களைத் தனது மந்திரச் சொல்லால் கட்டுப்படுத்தினார்.

''ஆண்டவன் கேட்கட்டும்!

உலகத்திற்குப் பஞ்சசீலத்தைப் போதிக்கும் அகிம்சாவாதிகள் ஒருவன் ஒரே தொகுதியில் அரசை எதிர்த்து வெற்றி பெற்று வருவதைப் பொறுக்காமல் கொலைக் குற்றம் சாட்டி அவனை உள்ளே (சிறையிலே) தள்ளுகிறார்கள் இவர்களை ஆண்டவன்' கேட்க வேண்டும்.' பசும்பொன் தேவர்.

''மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்
கங்கையே சூதகமானால் எங்கு போய் மூழ்குவது?
அதிகாரி தவறு செய்தால் அரசாங்கத்திடம் சொல்லலாம்
அரசாங்கமே தவறு செய்தால் ஆண்டவனிடம்தான்
முறையிட வேண்டும்'' தேவர் பெருமகன்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு தண்டனை வாங்கித்தர, அவரை எதிர்த்து அரசு சார்பில் வழக்காடிய வழக்குரைஞர் என். கிருஷ்ணசாமி ரெட்டியார் இன்று உயர் நீதிமன்ற நீதிபதி தனது கட்டுரையில் குறிப்பிடும் சில பகுதி:—

''முத்துராமலிங்கத்தேவரைப் போல நீதிமன்றத்திற்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தவரை இன்று வரை நான் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. வழக்கு நடந்த பதினெட்டு மாதங்களும் நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கும் போது அவர் தண்ணீர் கூட பருகமாட்டார். ஒருவார்த்தையும் வாய்திறந்து பேசவுமில்லை. நீதிமன்றத்தில் அவரைப் பற்றி எப்படி எப்படி வாதங்கள் நடந்தாலும் முகத்தில் எவ்வித உணர்ச்சியுமின்றி எதைப்பற்றியும் கவலைப்படாமல்

RangaRakes tamilnavarasam.com

ஞானி போல அமர்ந்திருப்பார். எதற்கும் அஞ்சாத சிங்கமவர். எண்ணியதை முடிக்கும் தீரரவர். தெய்வீகம்என்பது மனிதனுடைய அகங்காரத்தைஆணவத்தை, அதிகாரத்தை ஒடுக்கி அடக்கத்தோடு வாழ வைக்கும் சக்தி, ஆணவம் கொண்டவன். தன்னையும் மீறிய ஒரு சக்தியைக் காணும் போது தலைவணங்கி அடக்கம் கொள்கிறான். நம்மினும் உயர்ந்தோரை நாம் காணும் போது வணங்குதல் போல, அந்தச் சக்திதான் தெய்வீகம். அந்த தெய்வத்தைத் த ன் மனிதன் இயற்கை, ஈசன், ஏசு, அல்லா, புத்தன் என்று வணங்குகிறான். அந்தச் சக்திதான் மனிதனை மனச்சாட்சி உடையவனாக ஆக்குகிறது. சுவாமிவிவேகானந்தரை தெய்வீகத் தலைவராகவும் நேத்தாஜி அவர்களை தேசத்தலைவராகவும் தேவர் ஏற்றுக்கொண்டார். வங்கச்சிங்கம் நேத்தாஜியின் உற்ற நண்பர் தேவர். நேத்தாஜி அவர்களின் மறைவை ஏற்றுக் கொள்ளாதவர்.

நான் முத்துராமலிங்கத்தேவரை நினைக்கும்போதெல்லாம் முருகக் கடவுளின் ஞாபகம்தான் வருகிறது. அவர் ஒரு முறை ''முருகா'' என்று அழைக்கும்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்களில் நீர்மல்க ''முருகா'' என்று அழைக்கும் காட்சியை நேரில் கண்டு வியந்தவன் நான்''

தேவர் திருமகன் மீது தொடுக்கப்பட்ட வழக்கைப் புதுக்கோட்டையில் விசாரணை செய்து விடுதலை செய்த நீதிபதி திரு எம். அனந்தநாராயணன்.

"I have the imperssion from all that I have heard that Mr Muthuramalinga thevar was a person of indeed remarkable Qualities, including the quality of leadership.

He achieved a great deal for the poor and the under previleged particularly of his region.

My only personal contact with him was as trial judge, When I had to try him upon a very grave charge. I acqu



itted him on the Merits and the government (state) did not prefer any appeal from the acquittal.

His statement in court of the trial made me feel tha he was a remarkable orator in Tamil."

அதே போல 1962ல் பொதுத் தேர்தலில் இராமநாதபுரத்தில் தேவர் அவர்களும் உசிலம்பட்டியில் மூக்கையா தேவரும் அபேட்சகர்களாக வாக்காளர்கள் காட்டிய ஆரவாரமும் அவர்கள் காட்டிய தேசிய உணர்ச்சியும் ஒரு தத்துவ அடிப்படையில் நோக்கினால்; ஜனநாயகத்தின் ஜீவ நாடி அரசியல் உடலில் இயங்கும் விதம் காணமுடியும். காட்டுமிராண்டித் தனத்துக்குச் சாவு மணி அடித்து ஜனநாயகத்திற்குச் சிங்கப் பெட்டியை நிரப்பி விட்டது தேசியப் பரம்பரை.

## திரு. மூக்கையாத்தேவர் திரு. முத்துராமலிங்கத் தேவரின் வாரிசானார்.

1963-ல் தேவர் அவர்களின் மரணத்திற்குப் பிறகு திரு. மூக்கையாதேவர் கட்சித் தலைவர் பொறுப்பையுமேற்று அரசியல் நடத்தவேண்டிய தேற்பட்டது. சாகாவரம் பெற்ற தேவரின் லட்சியங்களைப் பூர்த்தி செய்யத் தேசியப் பரம்பரை துடி துடித்துக் கொண்டிருந்தது. (தேவர்கட்சி) பார்வர்டுபிளாக் தலைவர்கள் உறுமீன் வருமளவும் வாடியிருந்தனர். 1967ல் பொதுத் தேர்தல் வந்தது. பார்வர்டு பிளாக் தலைவர்கள் கூடிச் சிந்தனை செய்து செயலில் இறங்கினார்கள். தேசியப் பரம்பரையை ஜனநாயகத்திருக் கூட்டத்தை; வஞ்சனையாகக் கொன்று குவித்த பாவிகளை ஆட்சி பீடத்திலிருந்து வீழ்த்த வேண்டும் என்பதை, அந்தப் புண்ணிய காரியத்தை வாக்காளர்கள் செய்து முடித்து தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள அவர்கள் உற்ற வழி காட்டவேண்டுமென்று முடிவெடுத்தார்கள். தேவர் மகனின் தொண்டனாய் அரசியல் நடத்தி வந்த மூக்கையாத் தேவர் தளபதியாகப் பொறுப்பேற்றுப் போர் தொடங்கினார்.

RangaRakes

tamilnavarasam.com

தலைவர் திரு. மூக்கையாத்தேவர் அவர்கள் தனது கட்சியின் சார்பில் நாட்டு மக்களுக்கு விடுத்த அறிக்கையில் வழக்கம் போல் தனது கட்சியின் ஆதரவாளர்கள் தங்கள் கட்சிக்கும்; தங்கள் நேசக் கட்சிகளுக்கும் வாக்களிக்க வேண்டும் அரசு ஆக்ஞையைத் துஷ் பிரயோகம் செய்தவர்களை நிர்வாகத்திலிருந்து இறக்கியாக வேண்டுமென்று கூறினார்.

சரித்திரம் கண்டறியாத அளவில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து, தேர்தல் முடிவுகள் கண்டோர் மனதைச் சிந்தனையில் கவர்ந்தது, எல்லா மந்திரிகளும் முக்கியமாக கு. காமராஜ் நாடார், பக்தவச்சலம் சி. சுப்பிரணியம், கக்கன் ஆகியவர்கள் தோல்விகள் படுதோல்வியானது. கு. காமராஜ் நாடார் ஒரு காலேஜ் மாணவனை எதிர்த்து நின்று மிகவும் குறைந்த ஓட்டு வாங்கித் தோல்வியுற்ற நிலை தேசிய வீர பரம்பரை வாக்காளர்களின் ஜனநாயகப் பாணப் பிரயோகத்தின் ஒழுங்குமுறைக்கு இலக்கணம் கண்டது.

இப்படியாக எல்லா எதிரிகளும் தோல்வியடைந்து போகவே உள்நாட்டுப் போரில் ''முதுளத்தூர்க் களத்தில்'' மாண்ட 17 பேர்களின் வாரிசுகள் நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பு செய்தார்கள் என்ற விவரம் கண்ட நிலையில் பார்வர்டு பிளாக்கின் தோழமைக் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அடுத்தபடியாக 1971ல் நடந்த தேர்தலில் பார்வர்டுபிளாக்கும் தோழமைக் கட்சியும் தங்கள் வெற்றியை நிலைக்கச் செய்தனர். இது சமயம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதென்னவென்றால் முத்துராமலிங்கத் தேவர் எப்படிப் பலதடவைகளில் இரட்டைத்தொகுதிகளில் நின்று வாகை சூடினாரோ அதே போல பி. கே. மூக்கையாத்தேவர் இரட்டைத் தொகுதி களிலும் நின்று சட்ட மன்றத்திற்கு 22, 383 அதிக வாக்குகளும், பாராளு மன்றத்திற்கு, 1,63,125 அதிக வாக்குகளும் பெற்று வாகை சூடினார். அதன் மேல் சட்டமன்ற பதவியை ராஜிநாமா செய்து, அந்தத்தொகுதிக்கு ஏற்பட்ட மறு தேர்தலில் தனது சக தொண்டரான அட்வகேட் கந்தசாமித்தேவரை நிறுத்தி அதிலும் வெற்றி கண்டார். இதன்



மூலம் வாக்காளர்களின் தீர்ப்பின் அடிப்படையில் நாட்டுத் தலைமைக்கும் வாரிசு மூக்கையாத் தேவரானார். பன்நெடு நாட்களுக்கு முன்னதாகவே தனக்குப் பின்னால் வரக்கூடியது யார் என்று தெரிந்து எடுத்துப் பயிற்சி கொடுக்கப்பட்ட மூக்கையா இன்று அகில இந்தியப் பார்வர்டுபிளாக் தலைவர் மூக்கையாத்தேவராவார் என்று தெரிந்திருக்கிறார் அல்லவா! என்னே! முத்துராமலிங்கத் தேவரின் தூர திருஷ்டி!

இந்திய தேசிய விடுதலை வரலாற்றை ஒட்டி ஒரு சமூக வரலாறும் அதனுடன் சேர்க்கையாய் ஓர் அரசியல் கட்சியின் ஈடுபாட்டையும் பின்னி விமர்சனம் செய்யப்பட்டிருப்பது கொஞ்சம் சிந்திக்க வேண்டியதாகும். தேசியப் பரம்பரை தோன்றும். தேசீயப் பரம்பரைக்கு இடர் ஏற்பட்டால் அதைச் சமூகம் சந்திக்கும். தேசியவாதிகளோ, சமூகத்தார்களோ தொழிலில் ஈடுபடும்போது தேவைக்கும் செயலுக்கும் ஏற்றவாறு அணிவகுத்து நிற்பர். கால, தேச, வர்த்தமானத்தை ஒட்டி வெற்றி தோல்வி நடைபோடும். இது தத்துவம். இவைகளை வளர்ச்சியுறச் செய்வதுதான் அரசியல் அல்லது சரித்திரம். அரசியல் என்பது இன்றைய நிலையில் நமக்கு கண் கூடாய்த் தோன்றுவது இரண்டு வகை. ஒன்று தலைவர்கள் மக்களை அணுகித் தன்னைத் தலைவனாக ஏற்றுக்கொள்ளச் செய்வது. மற்றது மக்கள் தலைவர்களைத் தேடிப்பிடித்து அவர்களைப் பின்பற்றி தங்களுக்கு வழி காட்டும் படியாகத் தலைவனாகச் செய்வது.

ஒரு நாட்டில் தேசியப் பற்று எல்லோருக்கும் ஏற்படாது ஒரு சிலருக்குத்தான் அப்படிப் பற்று ஏற்படுவதற்குக் காரணமுண்டு. அவர்களுக்கு எப்போதும் சுயநலமே இராது. தேசத்திற்கும் தேச மக்களுக்கும் நன்மை செய்யும் கட்டத்தில் தங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் தாங்கள் அடைந்த லாபம் எனக் கருதும் இயல்பை வெளிப்படையாக அவர்கள்பால் காணலாம்.

RangaRakes
tamilnavarasam.com

மக்களால் தேடிப் பிடித்து அவர்கள் தூய வழியைப் பின்பற்றி சமூக அமைப்பையும் அரசியலையும் தொழில்படச் செய்யும் நிலையில் காணப்படும் தலைவனுக்குப் பதவி மோகம் பணப்பற்று, போகபோக்கிய அனுபவிப்பு ஆகியவைகள் காணக் கிடைக்காது. அவனைப் பின்பற்றும் ஆதரவாளரிடம் விடாப் பிடியான விஸ்வாசம், வீரவணக்கம் தியாகம் ஆகியவைகள் தென்படும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு நேத்தாஜியின் அரசியலை நம் நாட்டு மக்கள் அவரின் வாரிசுகள் வழியில் பின்பற்றி வருவதானது தலைவர்கள் செயல்களாலும்; அவர்களைப் பின்பற்றி வந்துகொண்டிருக்கிற வாக்காளப் பெருமக்கள் பதிவுசெய்து வந்திருக்கிற வோட்டுகளின் அமோக எண்ணிக்கையாலும்; தெரியவருகிறது. பலதிறப்பட்ட அரசியல்கள் எத்தனை கட்டங்களில் எவ்வளவு சேவைகள் செய்து நாட்டையும் நாட்டு மக்களையும் இன்பவாழ்க்கைக்கு இட்டு சென்றாலும்; தமிழ் நாட்டில், மிகப் பெரும்பான்மையான முக்குல மக்கள் தங்களுக்கென ஒரு தனிப்பட்ட அரசியலைத் தங்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தூய தலைவனின் வழியில் செயல்படுத்தி அதைக் கட்டிக்காத்து வருகிறார்கள் என்ற காரணத்தால்; இந்த விவேகத்தத்துவத்தை வரலாற்றுடன் இணைத்துக் காட்டாமல் இருக்கமுடியவில்லை. அப்படி எடுத்துக்காட்டாவிட்டால் வரலாற்றின் ஒரு முக்கிய அம்சம் விடுபட்டுப்போய் விட்டதென்ற குறையைப் பிற்காலம் எடுத்துக்காட்டுமோ என்றுதான் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது.

## செல்லப்பாண்டியன் முன் நாள் சபாநாயகர்

செல்லப்பாண்டியன் பாண்டிய மார்களுக்குள்ளே பட்டப் படிப்பு அபூர்வமாக இருந்த காலத்தில் 1937-ல் வழக்கறிஞர் பட்டதாரியாகத் திருநெல்வேலியில் தொழில் தொடங்கினார். வரலாற்று சிறப்புடைய குடும்பத்தினர் ஆன படியால் வக்கில் தொழில் பிரசித்த மடைந்தது. எழில் மிகு தோற்றமும் துடுக்காகப் பேசும் திறமை உடைய பாண்டியன் திருநெல்வேலி மாவட்ட மறவர் சங்கத்தில் நிருவாகப் பொறுப்பேற்று, சங்கம் தலைவர் சின்னத் தம்பித் தேவர் அவர்கள் B. A. B. L. தலைமையில் பல தடவைகளில் சமூக மகாநாடுகள் நடத்தி முக்குலத்தோர் சமூகப்பெருந் தலைவர்களுடன் பழகினார்: மறவர் நாட்டில் செல்வாக்கு பெருகியது.



1947-ல் செல்லப்பாண்டியன் திருநெல்வேலி மாவட்ட மறவர் சங்கத்தலைவரானார். சமூகப்பணி தீவிரமடைந்தது. செய்த வேலைகள் பலவற்றில் குற்றபரம்பரைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டிய பணியை நிறைவேற்றத்தனது செல்வாக்கு தமிழகமெங்கும் பரப்பலானார்.

இளமையிலிருந்தே காந்தி மகானின் போதனை ஏற்றுத் தேசிய ஈடுபாடுகளில் கலந்து வாழ்ந்தவர் ஆனபடியால், விடுதலை வேட்கைதாகத்தால் அரசியல் வாழ்விற்குப் பொறுப்பு ஏற்கலானார்.

ஆரம்பத்தில் 1953—1957 வரை ஜில்லாக் கமிட்டித் தலைவராகவும் 1959—62 வரை காரியதரிசியாகவும் பணியாற்றினார். பாண்டியனவர்கள் அரசியல், தமிழகக் காங்கிரஸ் வரலாற்றில் சிறப்பு இடம் பெற்ற தொன்றாகும். ஜில்லா கமிட்டி நிர்வாகத்தைத் திறம்பட நடத்தியதோடு 1952லும் 1962லும் சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு ஜெயித்தார் :

1952ஆம் ஆண்டுத் தேர்தல் செல்லப்பாண்டியனை வான் முட்டிப்புகழ் அடையச் செய்தது: இவரை எதிர்த்து நின்றவர் பெரும் பணக்காரரர்: அத்துடன் அவரின் ஆதரவாளர்கள் எல்லோரும் பாண்டியனை எதிர்த்தனர். கோடிக் கணக்கில் பணம் விளையாடியது. எதிரியின் ஆதரவாளர்களாகிய உயர்மட்ட அதிகாரிகள் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆட்களை கொண்டு போய் வேலை செய்தனர். வண்டி வாகனங்கள்

RangaRakes
tamilnavarasam.com

பொங்கி எழுந்தன. இந்த எதிர்புக்களை துணிச்சலோடும், வீரபராக்கிரமத்தோடும், அல்லும் பகலும் ஆலாய்ப் பறந்து சூறுவளிப் பிரயாணம் செய்து தனது பிரசாரவன்மையால் முறியடித்தார் என்றால் என்ன ஆச்சரியம்! மாபெரும்ஜோடியோடு மோதி வெற்றி வீரர் பாண்டியனை எல்லோரும் போற்றினர்.

1962ல் எலெக்ஷன் பொறுப்பை தனது மாவட்டத்தின் பொறுப்பைப் பாண்டியன் ஏற்றார். அது சமயம் ஜில்லா காரியதரிசியாகயிருந்தார். 17 தொகுதிகளிலும் தனது கட்சி அபேச்சகர்களை நிறுத்தி 17 பேர்களும் வெற்றியடைந்தனர். வெற்றி பெற்றவர்களில் பாண்டியனும் ஒன்று. இந்த மகத்தான வெற்றிக்குப் பெரிதும் பொறுப்பேற்ற பாண்டியனவர்களைப் பாராட்டி காங்கிரஸ் மந்திரிசபையில் அவருக்கு சபா நாயகர் பதவிகொடுத்து கௌரவப்படுத்தியது.

தான் பெற்ற சபா நாயகர் பொறுப்பை உயரிய முறையில் கட்டிக்காத்து, எதிர்க் கட்சிக்காரர்களும் போற்றும் படியாக நிர்வாகம் செய்தார் என்று சொன்னால் மிகையாகாது.

## முத்துச்சாமி வல்லத்தரசு : புரட்சிவீரர்

பிரிட்டிஷ் அரசு அடக்குமுறை ஆட்சி நடத்திக் கொண்டிருந்தபோது புதுக்கோட்டை சமஸ்தானம் கோர்ட் ஆப் வார்ட்ஸ் மூலம் ஒரு திவானின் ஆட்சியில் இருந்து வந்தது. அப்போது நாட்டில் பெரும்பஞ்சம். அநியாய அதிக வரி கெடுபிடி வசூல், போலீஸ் அடக்குமுறை ஜப்தி ஏல நடவடிக்கைகள் இருந்தபடியால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. மக்கள் கிளர்ச்சி செய்தனர். பல்லாயிரக்கணக்கான மக்களை திவான் அரசு சிறையிலடைத்தது. நாடு துக்கத்தில் மூழ்கியது.

சமாதானத்தை யுண்டு பண்ணும் பொருட்டு நாட்டு மக்கள் வல்லத்தரசுவின் தலைமையில் தூது கோஷ்டி ஒன்று போய் திவானைப் பேட்டி கண்டது. திவான் தலைவர்களை



மதிக்காமலும் அவர் வேண்டுகோளை ஏற்காமலும் திமிராகப் பேசிவிட்டான். பட்டரையார்கள் காசியார் உள்பட எல்லோரும் அந்தரங்கமாகக் கூடிப்பேசியதின் பின் வல்லத்தரசு தலைமையில் சமஸ்தானப் புரட்சி நடந்தது.

நள்ளிரவில் நாட்டு மக்களின் புரட்சிப்படை புதுக்கோட்டை நகரைச் சூழ்ந்து கொண்டது. போக்குவரத்து, தந்தி டெலிபோன் சாதனங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. சிறையை உடைத்து அடைபட்டிருந்த மக்களை விடுவித்தனர் ஆபீஸ் காரியாலங்கள் உடைத்தெறியப்பட்டன திவானும் அதிகாரிகளும் ஓடி மறைந்தனர்.

ஆயுதப்படை போலீஸ் வந்து அமைதியை உண்டு பண்ணித் தலைவர்களை கைதி பண்ணி தலைவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. வல்லத்தரசு நாடு கடத்தப்பட்டு அதன் பின் தேவகோட்டையில் இருந்து தொழில் நடத்த வேண்டியதேற்பட்டது.

1942ல் ஒத்துழையாமை இயக்கம் நடந்து கொண்டிருந்தபோது தேவகோட்டையில் ஒடுக்கு முறையும் எதிர் நடவடிக்கைகளும் கடுமையாகயிருந்தது. அது காலை அரும் பெருந்தலைவர்களை தேவகோட்டை ஜெயிலில் வைத்து போலீஸ் சித்திரவதை செய்த நேரம். துப்பாக்கிகளும் போலீஸாரும் தேவகோட்டையைக் கதிகலக்கியது. ஒரே நாளில் வல்லத்தரசும் நாட்டுப்புற வீரர்களும் தேவகோட்டையைத் தாக்கி அரசு காரியாலயங்களை நெருப்பிட்டுக் கொளுத்தி சிறைக் கைதிகளையும் மீட்டனர்.

பின் எடுத்த நடவடிக்கையில் இந்தப் புரட்சிக்குக் காரணமானவர்கள் தண்டனைக்குள்ளாயினர். வல்லத்தரசு இரண்டரையாண்டு சிறைப்பட்டார். விடுதலையாகி வந்த பிறகு காங்கிரஸில் ஈடுபட்டு அகில இந்தியக் காங்கிரஸ் மெம்பராகி அதன் பின் டில்லிபார்லிமெண்டு மெம்பரானார்; அப்போது காங்கிரஸ் மகாசபையில் செல்வாக்கு மிகுதியாகியது.

RangaRakes tamilnavarasam.com

1952 தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் இருந்த நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து கட்சியை விட்டு விலகி காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து நின்று பெருவாரியான ஓட்டுகளைப் பெற்று ஜெயித்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தார்: அப்போது ஏற்பட்ட அரியலூர் ரயில்விபத்தைக் கண்டித்து நேரு மந்திரி சபையில் வல்லத்தரசு நிகழ்த்திய பேச்சு உலகின் கவனத்தைக் கவர்ந்தது. அது காரணமாகவே லால்பகதூர் சாஸ்திரி ரயில் மந்திரி பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டிய தேற்பட்டது.

தேவர் திரு மகன் ராஜாஜியைப் பதவியில் இருந்து வெளியேற்ற வல்லத்தரசு உறுதுணையாகயிருந்தார். குற்ற பரம்பரைச் சட்டத்தை வேரோடு களையப் பாடுபட்டு வந்தார்.

## R. V. சுவாமிநாதன் டில்லி பார்லிமெண்டு விவசாய மந்திரி

தேவர் இன மக்களில் இவர் ஒரு மாபெரும் அரசியல் என்று சொல்லலாம் மேதை எமக்குத் தெரிய 1930 ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் அரசியலில் முன்னணி வீரராகவே விளங்கி வருகிறார். காந்திமகான் வாழ்கைப் பாதையில் நம் பிக்கைக்கொண்டவர் நிர்மாணப் பணிகளிலும் கட்சியின் கட்டுக்கோப்பு நடவடிக்கைகளிலும் உறுதியான கொள்கை உடைய கடமை வீரர்.

கட்சித் தொண்டர்களின் தொண்டன். சாதிக்கட்டுப்பாடு நாட்டு நிர்வாக வலுவுடைய பாகனேரியில் பிறந்து மாநகர் மதுரையில் தங்கியவர். மதுரை நகர் C. T. Act-ன் கொடுமை எடைபோட்டு நிறை கண்ட இடம். பாதிக்கப் பட்ட மக்களின் உடன் இருந்து நிலைமையை தெரிந்தவர்.

குற்றப்பரம்பரைச் சட்டம் ரத்தாக வேண்டிய விவாதம் சட்ட மன்றத்தில் வந்தபோது அம்மன்றத்தில் எதிர்ப்பு வரக் கண்ட சுவாமிநாதன் அவர்கள் துள்ளி எழுந்து வீராவேசத்துடன் நிகழ்த்திய திரப்பேச்சையும் சீர்தூக்கிச்



சட்டம் செய்த முறையையும் அடுத்து வரும் C.T.Act ரத்து என்னும் அத்தியாத்தில் படித்தறியவும்.

அரசியல் பற்று எவ்வளவு ஆழ்ந்தது. எத்துணை காலம் அப்பற்றுதல் நீண்டது. அதன் பயனால் இன்று டில்லியில் பாராளுமன்றத்தில் மந்திரியாக இருந்து வருகிறார். அத்துடன் சமூகப்பாசமும் அன்பும் குறைவில்லாத வீரன்.

நாகரிக வளர்ச்சி மேலோங்கி வருவதும் கல்வி அபி விருத்தி வளர்ந்து வருவதும் ஆன இக்காலத்தில் மக்கள் தங்கள் சனநாயக ஆட்சிமுறையில் அரசியலில் எப்படியான மாறுபாடுகளை அடைந்து வருகிறார்கள் என்ற கருத்து ஒரு நாட்டின் வரலாற்றில் எடை போட வேண்டிய தொன்றாகும். எனவே இந்த நிலையில் முக்குலத்தோரின் அரசியல் சமூக அடிப்படைகளை கவனிப்போம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலங்களில் வைஸ்ராயின் எக்சிக் கூட்டிவ் கவுன்ஸிலிலோ, கவர்னரின் கவுன்ஸிலிலோ இருந்து தேச ஆளுகை நிர்வாகத்தில் சட்டம் செய்து வந்த சனப் பிரதிநிதிகள் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று சொல்ல முடியாது. அரசுத்துறை நிர்வாகத்திற்கு தேர்ந் தெடுக்கப்படும் பிரதிநிதிகளை வெள்ளைக்காரர்கள் யார் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் தான் தேர்வு முறையில் வர முடியும். சட்டதிட்ட நிர்வாகம் அப்படி யிருந்தது.

அந்தக் காலத்தில் முக்குலத் தேவர்கள் சமூகத்தில் அரசாங்க சட்ட நிருபனர்களாகச் சட்டச்சபையில் இடம் பெற்றிருந்தவர்கள்:

1. ஆற்காடு இராமசாமி முதலியார்.
2. ஆற்காடு லஷ்மணசாமி முதலியார்
3. இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதி
4. உக்கடை வள்ளல் அப்பாசாமித்தேவர்

RangaRakes
tamilnavarasam.com

1937-ல் இந்திய தேசியக் காங்கிரஸ் அரசியல் பிரவேசத்தை மேற்கொண்டு சட்டமன்றத் தேர்வுகள் நடந்த போது நேரடியாக மக்கள் ஓட்டுப் போட்டு நடந்த தேர்தலில் சென்னைச் சட்டச்சபைக்கு; தஞ்சையில் இருந்து நாடிமுத்துப்பிள்ளை, திருச்சியில் இருந்து ரத்தினவேலுத் தேவர் இராமநாதபுரத்திலிருந்து முத்துராமலிங்கத்தேவர் ஆக மூன்று பெயர்களும் தேவர்கள் இனத்திலிருந்து வந்தவர்களாகும்:

அதேபோல்; 1947 ல் 8 பேர்கள்

52 ல் 14 ,,
57 ல் 15 ,,
62 ல் 19 ,,
69 ல் 20 ,,
71 ல் 24 ,,
77 ல் 29 ,,
80 ல் 30 ,,

## இதுவரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள்

திரு. முத்துராமலிங்கத்தேவர்—இராமநாதபுரம்
திரு. காசிநாததுரை சேதுபதி அரசகுமாரர்
திரு. வைரவன் சேர்வை பட்டுக்கோட்டை
திரு. சுப்பையா அம்பலம் புதுக்கோட்டை
திரு. மூக்கையாத்தேவர்—இராமநாதபுரம்
திரு. மலேச்சாமித்தேவர்—சின்னமனூர்
திரு. M. A. சாமி—பாளையங்கோட்டை
திரு. S. S. ராசேந்திரன் சேடப்பட்டி
திரு. இராஜாங்கம்—பெரியகுளம்
திரு. R. V. சாமிநாதன்—மதுரை நகர்
திரு. தா. கிருஷ்ணன் கோவை
திரு. K. மாயத்தேவர்—திண்டுக்கல்
திரு. சிங்காரவடிவேலன்—தஞ்சாவூர்



திரு. V. N. சாமிநாதன்—பட்டுக்கோட்டை
திரு. சத்தியேந்திரன்—ராமநாதபுரம்
திரு. S. D. சோமசுந்தரம்—தஞ்சை
திரு. முத்துச்சாமி வல்லத்தரசு—புதுக்கோட்டை
திரு. அன்பழகன்—சிவகங்கை

## மந்திரி சபையில் பதவி வகித்தவர்களும் வகித்து வருபவர்களும்.

திரு. R. V. சாமிநாதன்
மத்திய துணை விவசாயஅமைச்சர்
திரு. செல்லப்பாண்டியன்
— முன்னாள்சபா நாயகர்—திருநெல்வேலி
திரு. ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி
திரு. இராமையா—புதுக்கோட்டை
திரு. அன்பில் தர்மலிங்கம்—லால்குடி
திரு. கே. வி. சுப்பையா—தஞ்சை
திரு. மன்னை நாராயணசாமி—மன்னார்குடி
திரு. N. V. நடராஜன்—சென்னை
திரு. S. D. சோமசுந்தரம் - தஞ்சை
திரு. K. காளிமுத்து—திருப்பரங்குன்றம்
திரு. திருநாவுக்கரசு— அறந்தாங்கி
திரு. இராஜாராம் தமிழக சட்டமன்றத்தலைவர்
திரு. புலமைப்பித்தன் த. மே. சபை உபதலைவர்

## 1980-ல் தமிழக சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்துவருபவர்கள்

திரு. S. D. சோமசுந்தரம்—பட்டுக்கோட்டை
திரு. கா. காளிமுத்து—திருப்பரங்குன்றம்
திரு. S. திருநாவுக்கரசு—அறந்தாங்கி
திரு. க. இராஜாராம்—பனைமரத்துப்பட்டி



RangaRakes
tamilnavarasam.com

திரு. அண்ணுதாசன்—திருவெறும்பூர்
திரு. சுந்தரராஜன்—திருமயம்
திரு. T. வீராசாமி—ஒரத்தநாடு
திரு. சுப்பிரமணியம்—திருவையாறு
திரு. M. S. மாணிக்கம்—வேதாரண்யம்
திரு. கருப்பசாமிப்பாண்டியன்—பாளையங்கோட்டை
திரு. சத்தியமூர்த்தி—கடலாடி
திரு. சுப்பிரமணியம்—சிவகங்கை
திரு. பிச்சை—அருப்புக்கோட்டை
திரு. S. S. இராஜேந்திரன்—ஆண்டிபட்டி
திரு. முத்தையா—சேடபட்டி
திரு. அன்பில் தர்மலிங்கம்—லால்குடி
திரு. இராஜமாணிக்கம்—குத்தாலம்
திரு. நல்லதம்பி—தாம்பரம்
திரு. N. S. V. சித்தன்—திருமங்கலம்
திரு. இராஜசேகரன்—ராதாகிருஷ்ணநகர் சென்னை
திரு. சிவஞானம்—திருவோணம்
திரு. அம்பிகாபதி—மன்னார்குடி
திரு. விஜயரகுநாததொண்டைமான் புதுக்கோட்டை
திரு. சந்திரசேகரன்—சோழவந்தான்
திரு. சிவசாமி—இளையாங்குடி
திரு. ஆண்டித்தேவர்—உசிலம்பட்டி
திரு. தனுஷ்கோடித்தேவர்—முதுகுளத்தூர்

## 1911-ஆம் ஆண்டு மத்திய சர்க்காரின் குற்றப் பரம்பரைச் சட்டம் மாகாணங்களுக்குப் பிரயோகித்தல்

அரசினர் பாரதத்தின் யுத்தப் பரம்பரையானகேந்திரங்கள், தேசிய மக்கள், சுதந்திர பூமிகள், எங்கெல்லாமுள்ளனவோ அங்கெல்லாம் கலெக்டர்கள் மூலம் மக்கள் மனப் போக்கையும் தேசிய இயக்க ஆணிவேர்களையும் கண்காணித்துக் கொண்டிருந்தனர். இது வகையில் அப்போதைய மதுரை ஜில்லா கலெக்டர் J.F. Hall என்னும் வெள்ளையன்



மதுரைக் கள்ளர்களையும், பத்துநாட்டுத் தன்னரசுத்தலைவர்களையும் சரியானபடி தனது பிடிப்பில் வைத்திருந்தமை தெரிய வருகிறது. எனவே தென்னாட்டில் அடக்குமுறை ஏவப்பட்ட போது மதுரை ஜில்லாவில் குற்றப் பரம்பரைச் சட்டம் பிரயோகிக்கப் பட்டது, பிரமலை நாட்டிற்கு ஒரு பேரிடியாய் முடிந்ததென்பதைப் பின்னால் அறிவோம்.

1920-ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே, உலக அரசியல் அரங்கில் ஆங்கிலேய அரசுக்கு அச்சம் ஏற்படும் நிலை ஏற்பட்டது. உலக மகாயுத்தம் அவர்கள் நிலையை மேலும் அச்சுறுத்தும் வகையில் இருந்தது. அது காலை இந்தியதேசிய காங்கிரஸ் வளர்ந்து வரும் நிலையையும் கண்டனர். ஆகவே அவர்கள் தங்களுக்கே உரிய அரசியல் தந்திரோபாயங்கள் அத்தனையும் கையாண்டு நாட்டை அடக்கியாளத் தலைப்பட்டனர். அவைகளில் 1911ம் வருஷத்திய குற்ற பரம்பரை சட்டத்தை மாகாணங்களுக்கும் பிரயோகிக்கச் செய்தது.

நாட்டுப் பற்றுடன் அரசாங்கத்தை எதிரியாக நினைத்து சட்டங்களையும் அதிகாரிகளையும் வெறுத்து வரும் தன்னரசு பற்றுதல் கொண்ட பழங்குடிக் கூட்டங்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் சட்ட பூர்வமாக ஒடுக்கி வைத்திருக்க முற்பட்டனர்.

உயர்ந்த கல்வி அறிவும் தேசாபிமானமும் படைத்த காங்கிரஸ் தலைவர்கள் அன்னிய அரசின் பிடிப்பிலிருந்துவிடுபட பிரயத்தனங்கள் செய்து வரும்போது அவர்களுடன் பழங்குடிமக்கள் கலந்துவிட்டார்களானால் காங்கிரசை அடக்குவது முடியாத காரியமாகி விடும். காங்கிரஸ் இயக்கமும் வலுவாகி விடும் என்பதே அரசின் அன்றைய நோக்கம் எனவே காங்கிரஸ் பாசறைக்குள் பழங்குடி மக்கள் புகாவண்ணம் குற்றபரம்பரைச் சட்டமாக வேலி போட்டனர் எனலாம்.

மதராஸ் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் 1914-ல் ஜில்லா அதிகாரிகளின் மூலம், ஜில்லாக்களில் குற்றத்

தொழில் புரிவோர் சங்கியைத் தயாரித்து அனுப்பக் கோரினர். அதன்படியே அதிகாரிகள் தங்கள் ஜில்லாக்களில் வழிப்பறி, மாடு கடத்தல், கொள்ளை, கன்னக்களவு, கொலை முதலான பெருங்குற்றங்களுக்கு விபரமும் அதன் தன்மையும் விளக்கத்துடன்சேகரித்து அனுப்பினர். தஞ்சை மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக் களிலிருந்து குற்றத் தொழில் செய்தல் அதிகமாக இருப்பதாகப் புள்ளி விவரங்கள் புலப்படுத்தின. குற்றத் தொழில் செய்து வந்தவர்கள் மிகையாகக் கள்ளர், மறவர் ஆகிய வகுப்பார்கள் என்பதும் தெரியவந்தது. இந்த ஜில் லாக்களில் அதிகமாக ஜனத்தொகையாகவுள்ளவர்களும் இந்த இனத்தவர்களே என்பதைக் கண்டறிந்தால் இது ஒரு சாதாரணம் என்று கூடப் புலனாகும். அதிகாரிகள் எடுத்துக் காட்டியுள்ள குற்றப் பிரிவுப் புள்ளி விபரங்கள் ரேகைச் சட்டம் அமுல் நடத்து சட்டம் பிரசுரம் செய்யப்பட்டது.

நாடெங்கிலும் தேவர் குலமக்கள் குற்ற பரம்பரைச் சட்டப் பிரயோகத்தை எதிர்த்து நடவடிக்கைகள் எடுத் தார்கள். தஞ்சையில் அதுகாலை கள்ளர் குலமக்கள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தமையால் அங்கு அவர்கள் மேல் குற்றம் சாட்ட முடியவில்லை. புதுக்கோட்டை அரசர் தன் னுடைய நாட்டிலுள்ள பன்னிரெண்டு ஜெமீன்தார்களின் உற்றநண்பர்- பெரும்பாலும் உறவினர்கள். ஜில்லா பூரா விலும் உள்ளனர். கள்ளர் குலமக்கள் அரசர் குடும்பத்தி லும் ஜெமீன்களின் குடும்பங்களிலும் சம்பந்த உறவு கொண்டவர்கள். ஜெமீன்தார்களில் மிகவும் செல்வாக்குப் படைத்தவர் இராவ்பகதூர் ஆர். சாமிநாதவிஜயதேவர் பாப்பா நாடு ஜமீன்தார்) ஒவ்வொரு ஜெமீன்தாரின் (ஆளுகையிலும் வளமானதும்நிலப்பரப்பு அதிகமானதுமான கிராமங்களிருந்தன.

உக்கடைத்தேவர், பூண்டிவாண்டையார் குடும்பங்கள் குறுநில மன்னர்கள் போலும் தகுதிவாய்ந்த பண்ணைகளை யுடையன. உக்கடைஇராவ்பகதூர் எ. அண்ணுசாமித்தேவர்



அதுகாலை பண்ணையில் அதிபராக இருந்து வந்தார். பூண்டி வி. அப்பாசாமி வாண்டையார் எம். எல். சி. பண்ணையில் அதுகாலை அதிபராக இருந்து வந்தார். இன்னும் 1000 ஏக் கர் நிலங்களுக்கும் அதிகமான பிரபுக்கள் அனேகர்கள் இருந்து நாட்டில் தான தர்மங்கள் செய்து அரசபரிபாலனத் திற்குப் பெரிதும் உதவியாக இருந்து வந்தார்கள்.

தமிழ்நாட்டின் பெரும் புலவர்கள் பலராலும் பாராட் டப்பட்ட தமிழறிஞரும் கொடைவள்ளலுமாகிய அரித் துவாரமங்கலம் கோபாலசாமி ரகுநாத இராசாளியார் அவர்களும் பாப்பா நாடு ஜமீன்தார் இராசப்பா அவர்களும் இந்திர குலாதிபர் சங்கம் நிறுவி சமூகத்தொண்டாற்றிக் கொண்டிருந்தனர்.

பெருமக்கள் யாவரும் ஒன்றுபட்டு குரல் எழுப்பினர் இந்தப் பாமரச்சட்டம் அமுல் நடத்தக் கூடாது என அரசுக்கு எச்சரித்தனர். தஞ்சையில் வைத்து இராவ்பகதூர் வீரையா-வாண்டையார் அவர்கள் முயற்சியில் கள்ளர் மகா சன சங்கம் ஒன்று நிறுவித் தேவர் சமுதாயக் குழந்தைகள் கல்விகற்று முன்னேற உணவு விடுதியும் கல்விச்சாலையும் அமைத்தனர்.

சமூகப் பெருமக்கள் தாங்களே முன்வந்து சமூகமக் களின் நன்நடத்தைக்கும் முன்னேற்றத்திற்கும் பொறுப்புக் காட்டியதையும் அரசு தள்ளுபடி செய்து முடியவில்லை. முன் வந்து மக்களுக்கு ஆதரவு காட்டும் தலைவர்கள் உயர்ந்த இராஜவிசுவாசிகளாக இருந்தபடியால் அவர்களைப் புறக் கணித்துவிட்டு நாட்டில் குற்ற பரம்பரைச் சட்டத்தை பிர யோகிக்க தயங்கியது. தஞ்சை ஜில்லாவில் ஒரத்தநாடுப் பகுதியில் பெயரளவில் ரேகைப் பதிவுகள் செய்து அதன் மேல் நடவடிக்கையையும் நாளாவட்டத்தில் அரசு நிறுத்திக் கொண்டது.

கள்ளர் நாட்டில் சமூக மறுமலர்ச்சி ஏற்பட்டது. சுயம் பிரகாசம் B.A.B.L. தலைமையில் தஞ்சை மாவட்டக் கள்ளர்

இளைஞர் சங்கம் தோன்றியது. அதன் காரியதரிசியாக திரு. பொன் அருணாசலம் பொறுப்பேற்றார். தமிழாசிரியர் திரு. கோதண்டபாணி மூவறையர், திரு. அன்பில் தர்மலிங்கம் திரு. ந.ப. மாணிக்கம் திரு. சந்திரகாசன் ஆகியவர்களும் கல்விகற்ற இளைஞர்களும் வசதிபடைந்த சமூகப் பெரியோர்களும் சங்கத்தை ஆதரித்து நின்றனர்.

சங்கத்தின் முக்கியநோக்கம் குற்றபரம்பரைச் சட்டம் நாட்டில் செயலாற்றுவதை தடுக்கவும், மக்கள் கல்விகற்று முன்னேறுவதுமாகும்.

மகாநாடுகள் கூட்டினர் : பிறமாவட்டங்களுடனும் மாநிலத்துடனும் சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு சமூகப்பணி செய்தனர். இச்சங்கம் ஆற்றிய பணிகளில் மாணவர்களுக்கு உணவு விடுதி ஏற்படுத்தியது. சிறப்பான பலனடைந்தது. குற்றப் பரம்பரைச் சட்டம் செயலற்றது.

இளைஞர் சங்கத்தலைவர், காரியதரிசி, செயல்கமிட்டி அங்கத்தினர்கள் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டனர்.

இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் பூலம், ஆப்பநாடு, முதுகுளத்தூர் முதலிய இடங்களில் ரேகைச் சட்ட அமுல் பிரகடனம் செய்யப்பட்டது. சேதுபதி அரசர் முத்துராமலிங்க சேதுபதியும் ஏனைய தென்திசை ஜமீன்தார்களும் சென்னைக் கவர்னருக்கு ரேகைச் சட்டம் தங்கள் நாட்டில் அமுல் நடத்துவதை ரத்து செய்ய வேண்டுமென்று எழுதவும் நேரில் கண்டு சொல்லவும் செய்தார்கள். அது காலை பசும் பொன்முத்துராமலிங்கம் (பசுமலைப்பள்ளி மாணவன்) நாட்டில் கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு எடுத்துச் சொல்லி ரேகைச் சட்டஅமுல் மனிதவர்க்கம் யாருக்கும் பிரயோகிக்கக் கூடாது என விளக்கிச் சட்டத்தின் பயங்கரமான தத்துவத்தையும் அது அமுல் செய்யப்படும் தவறான முறையையும் கண்டித்துப் போதனை செய்தார். பரவலாக தென்தமிழ் நாட்டில் பதிவு வேலைகளை மட்டும் துவங்கியது.



மதுரை ஜில்லா சம்பந்தப்பட்ட இடங்கள் மட்டும் மேலூர் தாலுகா அம்பலகாரர்கள் நாடு, திருமங்கலம் தாலுகா பிரான்மலை நாடு தேவமார்கள் நாடு ஆகிய இடங்கள் சட்டப்பிரயோகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள். மேலூர் நாட்டில் பதிவு வேலைகள் ஆரம்பமாகும் போதே பெரியாற்று நீர்ப்பாசனமும் தொடங்கியது. கால்வாய்த் தண்ணீர் வந்து மேலூர் நாட்டில் பாயவே ஓரிரண்டு ஆண்டுகளில் பூமி எல்லாம் செழிப்பாகி மக்கள் சிறந்த விவசாயம் செய்யலானார்கள். அம்பலக்காரர்களில் பூமிசொந்தமாகயில்லாதவர் யாருமில்லை. எல்லோருக்கும் நிலமிருந்தபடியால் நல்லபடியாக நெல் விளையச்செய்து முன்னேறினார்கள்.

நாட்டில் சாதிக் கட்டுப்பாட்டை அமுல்நடத்தி எருக்குழை, குப்பை உரம் ஆகியவற்றை சேதம் செய்யாமல் சேமித்து நிலத்தை வளப்படுத்தவும், விளைச்சலை அதிகரிக்கவும் செய்தார்கள். நாட்டில் மதுவருந்தும் பழக்கத்தையும் ஒழித்துக் கட்டினார்கள். அம்பலகாரர்கள் தூய செம்மல்களாக தர்மநெறியில் விளைபொருள் ஈட்டி, ஏனைய சமூகத்தினர்களுக்கும், வழிகாட்டியாக வாழ்ந்து வரவே அவர்கள் மேல் குற்ற பரம்பரைச்சட்டம் பதிவாகியிருந்தாலும் கூட அதை அமுல் நடத்துவதை கடைப்பிடிக்காமலே விட்டு விட்டார்கள். ஆனால் மேலூர் கிராம முனிசீப்பு வையாபுரி அம்பலகாரருக்கு அரச மரியாதையாக இராவ்சாகிப் பட்டம் கொடுத்து அவருடைய கட்டுப்பாட்டில் நாட்டு மக்கள் இருந்துவரும் வகையாக கலெக்டர் அமைத்துக் கொண்டாரென்பதும் தெரிய வருகிறது.

1911 ஆம் வருஷத்திய மத்திய அரசின் குற்றபரம்பரை சட்டம் 1914ம் ஆண்டு மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தலானார்கள். அதன் மேல் 1915ம் ஆண்டு முதல் மதுரை ஜில்லா பிரான்மலை நாட்டிலும் இந்தச் சட்டம் நடவடிக்கைகள் கவனம் செலுத்தலாயிற்று. மேல்நாட்டில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அவர்கள்

RangaRakes
tamilnavarasam.com

ஸ்பெஷல் போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வந்தார்கள். ஆரம்பத்தில் குற்றவாளிகளை தெரிந்து புள்ளி விவரம் சேகரிக்க நியமிக்கப்பட்ட போலீஸ்காரன் பெயர் ரெங்காச்சாரி. இந்த ஜில்லா மட்டத்தில் அவனை எல்லோருக்கும் அவன் நிர் 101 என்றுதான் தெரியும். அவனை விட்டுப் பிரியாத நாயும், குதிரையும் உடன் வைத்திருப்பான். கிராம மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் பூசல்கள், மனவருத்தங்களை உண்டுபண்ணி நாட்டில் கேடிகளின் பட்டியல் அதிகமாகும் படியாக நடந்து கொண்டவன்.

நிர் 101ன் காலத்திற்கு முந்திய பிரபலக் கேடி சந்நணத் தேவனும். இவன் காலம் 1900. கேடிகள் பட்டியல் தயாரிக்க 101 நியமிக்கப்பட்ட பிறகு கேடிகள் 100 பேர் இருந்ததாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கேடிகளில் வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டவர்கள் 12 பேர்களாகும். பிரபலகேடி சந்ணதத்தேவன் ஒரு திருடனோ அல்லது குற்றவாளியோ அல்ல. சமுதாயத்தால் கேடி ஆக்கப்பட்டவன். கொலைகளும் செய்யும்படியாக ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அவனைப் பற்றிய நாட்டுப்பாடல்கள் துதி பண்ணுகிறது. சினிமாவில் கூட அவன் கதை பிரசித்தமாகிறது.

101 (ரெங்காச்சாரியை) பகைத்து அவன் மீது நடவடிக்கை எடுத்து குற்றங்கள் செய்து கேடிகள் 1) நந்தக் கண்ணு மாயாண்டி 2) அம்மாவாசை 3) மொட்டை வாயன் 4) காயாம்பு 5) மொட்டத்தவசி ஆகியவர்கள். இவர்கள் பேரில் வாரண்டுகளும், கேஸ்களும் இருந்தன. "கள்ளர் நாட்டில் குற்றத்தொழில் செய்த கிரிமினல் வாரண்டியர்கள் இருக்கிறார்கள். "ஸ்காட்லாந்து தேசமாகிய என்னுடைய நாட்டிலும் சோசலிசசமுதாய அமைப்பை விரும்பும் மலைநாட்டினர் இருந்தார்கள்" என்று போலீஸ் அதிகாரி லவ்லக் தனது அறிக்கையில் குறிப்பிடுவது இந்த —மேலே காட்டிய நபர்களை வைத்துத்தானோ என எண்ண வேண்டியிருக்கிறது. இந்த அதிகாரி இந்நாட்டில் பணிபுரிந்த காலமும் இவர்கள் வாழ்ந்த காலமும் அறிக்கை தயாரித்த விதமும் கவனித்தால் கருத்து ஒத்து வருகிறது.



இவ்வாறு பட்டியல் தயாரிப்பது, சில சமயம் ஆஜர் பார்த்துக் கண்காணிப்பது நடமாட்டம் அறிந்து விசாரணை செய்வது இப்படியாக 1918ம்வருஷம் வரை கவனம்செலுத்தப்பட்டது.

## குற்றப் பரம்பரைச் சட்டம் யார் யார் மீது பிரயோகிக்கப்பட்டது.

திருட்டுத் தொழில் செய்வதையே பிழைப்புக்கான தொழில் எனக் கொண்டநபர். திரும்பத் திரும்ப குற்றத் தொழில் செய்து தண்டனைக்குள்ளாகும் நபர். குற்றம் செய்து போலீசாருக்கு அகப்படாமல் தலைமறைவாய் வாழும் நபர். ஓர் இடத்தில் குடியிருந்து வாழ்க்கை நடத்தாது, நாடோடியாய் காடு பரதேசம் சுற்றி அலையும் சுபாவமுடைய திருட்டுக்கூட்டம், வீடுவாசல், நிலம், தொழில் இல்லாமல்; திட்டங்களுக்கடங்காத பிறைப்பற்றவர்கள்; தாங்களும் சரியாக வாழாமல், சமூகத்திற்கும், அரசுக்கும், தொல்லையாய் இருப்பவர்கள் மேல், பிரயோகித்துப் போலீஸ் கண்காணிப்பில் வைத்து அவர்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி அவர்களால் பிறருக்குக் கேடு விளையாதபடி பார்த்துக் கொள்வதும்; மற்றபடி அவர்களைத் திருத்தி நல்ல பிரஜைகளாக்குவதுமாகும். இப்படிப்பட்ட நபர்கள் நாட்டில் இருந்தது மிகக் குறைவு அவர்களை கண்காணிக்க ஆதியில் இந்தச் சட்டம் ஏற்பட்டது.

நாளடைவில் இச்சட்டம் துர்விநியோகம் செய்யப்பட்டமையும் தெரிய வருகிறது. வடஇந்தியாவில் மலைப் பிரதேசங்களில் ஆதி மன்னர் வழியினர் காடுகளில் இருந்து கொண்டு அன்னியர் ஆட்சிக்குத் தொல்லைகள் கொடுத்து வந்த காலை வெள்ளையர் அரசு; அரசியல் காரணங்களுக்கு இச்சட்டத்தைப் பிரயோகிக்கத் தொடங்கியது. நாளடைவில் சர்க்கார் அதிகாரிகள் தங்கள் வேலைகளை சிரமமின்றி முடிப்பதற்கு இச்சட்டம் பிரயோகித்தமை தெரியவருகிறது பின்னால் அரசுக்கு எதிராய் தேசவிடுதலையியக்கம் வளர்ந்

RangaRakes
tamilnavarasam.com

தோங்கி வருங்காலத்தில் அடக்குமுறை ஆயுதமாகவும் உபயோகித்து வந்திருக்கிறார்கள்.

## குற்ற பரம்பரைச் சட்டம் அமுல்முறை

குற்ற பரம்பரைச் சட்டம் பிரயோகம் செய்யும் பொறுப்பு போலீஸ் இலாக்காவாகும். குற்றவாளிகள் வாழும் பிரதேசங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் குற்றவாளிகள் பதிவு ரிஜிஸ்தர்கள் இரண்டுண்டு. 1வது ரிஜிஸ்தர் 10-1-A எனப்படும். 2வது ரிஜிஸ்தர் 11-1-B எனப்படும்.

1வது ரிஜிஸ்தரில் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் வாழும் வயது வந்த எல்லாக் குற்ற பரம்பரையினர்களும் பதிவாகும். பெயர், தகப்பன் பெயர், வயது, ஊர், உடம்பில் உள்ள மச்சம், அங்க அடையாளங்கள், உயரம் முதலானவைகளும்; செய்தொழில், போக்குவரத்து நடமாடக் கூடிய இடங்கள், சொந்தக்காரர்கள், வேண்டியவர்கள், வாழுமிடங்கள் முதலானவைகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கும். இப்படியாக விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த நபரின் கைவிரல்ரேகைகளும் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த நபர் அனுமதிச் சீட்டில்லாமல் குடியிருக்குமிடம் விட்டு வெளியூரில் இரவு தங்கவோ பிரயாணம் செய்யவோ, கூடாது என்ற விபரம் தெரியப்படுத்தியிருப்பதற்குச் சான்றுமிருக்கும்.

இப்படியான நபர் பதிவு செய்யப்பட்ட குற்ற பரம்பரைச் சாதியைச் சேர்ந்தவர் எனவாகும். இந்தப் பதிவு ரிஜிஸ்டரின் பிரதிகள் சம்பந்தப்பட்ட கிராமப்பஞ்சாயத்து, காவல் நிலையம், தலைமைப் போலீஸ் ஆபீஸ் முதலியவிடங்களிலுமிருக்கும். போலீஸாருக்குத் தேவையானபோது இந்த ரிஜிஸ்தரில் உள்ள விபரங்களை, ஒரு நபருக்கோ, அல்லது பல நபர்களுக்கோ, அல்லது கிராமம் பூராவுக்குமோ, சோதனை செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும்.



பஞ்சாயத்து நிர்வாகம் கொடுக்கப்பட்டிருக்கும் கிராமம் சம்மந்தப்பட்ட மட்டில், போலீஸ் நடவடிக்கை பஞ்சாயத்துத் தலைவர் அல்லது பஞ்சாயத்தார் மூலமாகத்தான் பரிசோதனை செய்ய முடியும். இது பஞ்சாயத்தார்களுக்குக் கொடுக்கப்பட்ட கௌரவம் மாத்திரமல்ல ஓர் அளவில் அதிகாரமும் ஆகும். பதிவான நபர்கள் பஞ்சாயத்துத் தலைவரின் அனுமதிச்சீட்டு ''ராதாரிச் சீட்டுப்பெற்றுக் கொண்டுதான் நடமாடும் உரிமையுண்டு. இந்த நடைமுறையில் விவகாரம் எதுவும் ஏற்படாவிட்டால் போலீசார் எந்தவிதமாகவும் ஊடாட முடியாது. சாதாரணமாக நிர்வாகம் நடத்த வேண்டிய நடைமுறைதான் இந்தப் பதிவேட்டின்படி செயலாக வேண்டியது.

2வது ரிஜிஸ்தர் :- இந்த ரிஜிஸ்தரில் குற்ற பரம்பரையினர் எல்லோரையும் பதிவு செய்ய வேண்டியதில்லை. ஓர் ஊரில் இந்த ரிஜிஸ்தர் இல்லாமலேயுங்கூட இருக்கும். ஏனெனில் 2வது ரிஜிஸ்தரில் பதிவாகியவர், குற்றவாளியாக ருசுவானால் மாத்திரம் தான் 2வது ரிஜிஸ்தரில் அந்த நபர் பதிவாகும். ராதாரிச் சீட்டு வாங்கி அதன்படி சரியாக நடந்து கொள்ளாவிட்டாலும், ஆஜர் பார்க்கும்போது காணப்படாவிட்டாலும் எப்படியாகவாவது குற்றம் செய்து தண்டிக்கப்பட்டாலும் இந்த நபர் கேடியாகிறார். அந்தக் கேடிகள் நடமாடும்போது ராதாரிச்சீட்டின் மேல்தான் நடமாட வேண்டும்; ஆனால் இப்படிப்பட்ட கேடிகளைப் போலீசார் பஞ்சாயத்தார்கள் மூலம் அல்லாமலே கண்காணிப்பார்கள் அவர்கள் நடமாட்டத்தின்போது பின் தொடரவும் செய்யலாம்.

இதுதான் இந்தச் சட்டத்தின் முக்கியம். அப்படிப்பட்ட கேடிகளைப் போலீஸ் நிலையத்தில் வந்து ஆஜர் கொடுக்கும்படியாகவும் போலீசார் உத்திரவுகள் பிறப்பிக்கலாம். பிரமலை நாட்டில் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்ட முறை மிகவும் சண்டாளத்தனமானது. கேடிகள் ஓர் ஊரில் அதிகமானாலும்: பஞ்சாயத்தாராள் போலீசார்

RangaRakes tamilnavarasam.com

மனப்போக்கின்படி பணிவாய் நடக்கத் தவறினாலும்: பஞ்சாயத்து அதிகாரத்தை ரத்துச் செய்து கிராமவாசிகள் எல்லோரையும் 2-வது ரிஜிஸ்தரில் தாக்கல் செய்து கொடிய நடவடிக்கையும் எடுத்தமை தெரிய வருகிறது. அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்படுவதுதான் படுக்கை உத்திரவு என்று கூறப்படும் பயங்கர நடவடிக்கையாகும்.

குற்றப்பரம்பரைச் சட்டத்தை அமுல் செய்வதில் மதுரை ஜில்லாக் கலெக்டருக்கு நடைமுறைச் சிரமங்கள் இருந்தன. எனவே தனது சௌகரிய நிமித்தம் சர்க்காருக்கு நிர்வாக வசதிக்காக அனுமதி கோருகிறார். அப்போது மதுரையில் கலெக்டராக இருந்தவர் நேப்புதுரை. சென்னைச் சர்க்காரின் பிரதான காரியதரிசி எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவதாவது. ''கிராமங்களில் குற்றவாளிகளை மாத்திரம் பதிவு செய்து கண்காணிக்க வேண்டும். இப்படியாக செய்ய வேண்டிய ஊர்கள்; கீழக்குடி, சொரிக்கான்பட்டி, மேல உரப்பனூர், பூசலப்புரம், ஆகிய ஊர்களாகும். இவ்வூர்களில் குற்றத்தொழில் செய்யக் கூடியவர்களும் செய்தவர்களும் அதிகமாகவுள்ளனர்', என்று எடுத்துக்காட்டுகிறார்.

அதுகாலை குற்றபரம்பரைச் சட்டம் பிரயோகம் செய்யலாமா வேண்டாமா என்று இருந்த சமயம். கீழ் மட்டத்தில் கள்ளர்கள் நிலையை உள்ளபடியே எடுத்துக் காட்டவில்லை. கள்ளர் சாதியார் நிலமில்லாதவர்கள் என்று சர்க்கார் கருதியதும் திருட்டுத் தொழில்தான் பிழைப்புக்கு வழி என்று குறிப்பிடுவதும் உண்மையில்லை. கள்ளர் சமூக மட்டத்தில் சொல்வழக்கு ஒன்று உண்டு. அதாவது ''காணியில்லாதவன் கருமாத்தூர், பூமியில்லாதவன் புத்தூர்', என்பதாகும் அதன்படி கள்ளன் ஒருவன் காணியோ பூமியோ இல்லாதிருக்க முடியாது எனப் பொருள்படும்.

பிரமலை நாட்டில் குற்றப்பரம்பரை சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கு ஆதாரமான அடிப்படையில் புள்ளி விபரங்கள் தயாரிக்கப்பட்டமை தெரிய வருகிறது. பிரமலை நாட்டில் இருந்த ஒரு குறை என்னவென்றால் ஆரம்பத்திலேயே



சட்டப்பிரயோகத்தை விவரமாக அரசுக்கு எடுத்துக்காட்டி நாட்டில் கல்வி தகுதி வாய்ந்தவர்கள் இல்லாதிருந்தார்கள் என்பதே. நாட்டில் ரேகைப் பதிவு வேலை நடக்கிறதென்ற விவரம் தெரிந்து அதுவகைக்கு நடவடிக்கை எடுத்தவர் ஒருவர்தான் தெரிய வருகிறது. மதுரையிலிருந்து ஒரு தந்தி சென்னை சர்க்கார் பிரதான காரியதரிசிக்குக் கள்ளர்கள் சார்பில் 6-7-1915ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தந்தியின் விபரம் ''மதுரை ஜில்லா திருமங்சலம் தாலுகா உரப்பனூர் தேவமார்கள் ரூ 3500 00 கிஸ்தி செலுத்தக் கூடிய பட்டாதார்கள். குற்றப்பரம்பரைச்சட்டம் இவர்கள்மேல் பிரயோகிக்குமுன் விசாரணைச் செய்யவும்'' ஒப்பம் வெள்ளையத்தேவர் மனுத் தொடர்கிறது. இந்தத் தந்திக்கு என்ன செய்தார்கள் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் தந்தியின் நகல் ஜில்லாப்போலீஸ் ஆபீஸ் பையிலில் உள்ளது தெரிய வருகிறது.

மதுரை கலெக்டருக்குச் சென்னை சர்க்கார் கிராமத்தார்கள் எல்லோரையும் ரேகைப் பதிவு செய்யும் வகைக்குச் சம்மதம் தெரிவித்து உத்தரவு பிறப்பிக்கவில்லை. வேண்டுகோளை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அதன் விவரமாவது :

C. T. Act. G. O. No. 1023, Judicial dated 4-5-1914. G. O. 2233. Judiciai dt. 16-9-1915 declarinu Keelakudi,.

Sorikkanpatti, Mela Urappanur and Poosalapuram Kallers. as Criminal tribes. Amendment to C. T. Act. Manual Proposal Negatived criminal tribes Act of 1911.

மதுரை ஜில்லா கலெக்டர் கேட்டுக் கொண்டதற்கிணங்க; கீழக்குடி, சொரிக்கான்பட்டி, மேல உரப்பனூர் பூசலப்புரம் ஆகிய ஊர்களில் வாழும் வயது வந்த பிரமலைக் கள்ளர்கள் எல்லோரையும் குற்றபரம்பரைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யச் சென்னைச் சர்க்கார் இணங்கவில்லை. அப்

RangaRakes tamilnavarasam.com

படிச் செய்வதை நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டது. இந்த கள்ளர்களை குற்ற பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கி விடலாம் என்ற நல்ல நோக்கத்திலில்லை. அப்படியாக ஒரு சாதியில் குற்றவாளிகளைத் தவிர குற்றம் செய்யாதவர்களையும் சேர்த்துப் பதிவு செய்வதற்கு 1911ம் வருஷத்திய மத்திய சர்க்கார்ச் சட்டத்திலும் கூட இடமில்லை. ஆகவே முதலில் குற்ற பரம்பரைச் சட்டத்தின் ''மான்யல்'' திருத்தப்பட வேண்டியதிலிருந்து இந்த இடைவெளியில்தான் மதுரைக் கலெக்டருக்கு ஆரம்பத்தில் உத்திரவு மறுக்கப்பட்டது. என்ன அநியாயம். சட்ட மான்யலில் கூடக் குற்றம் செய்யாதவர்களைப் பதிவு செய்து கண்காணிப்பிற்கு இடமில்லாத போது, அடிப்படைச் சட்டத்தை மாற்றி அநியாயமாக நிரபராதிகளையும் தண்டிக்கும் காட்டுமிராண்டித் தனம் கையாளப்பட்டது.

எனவே மேற்கொண்டு பதிவு வேலையை துவங்குவதற்கு உத்தரவு கோரி கலெக்டரின் மறு பரிசீலனைக்கு சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. இதற்குள் மான்யல் தக்கபடி திருத்தம் செய்யப்பட்டது. அப்போதாவது கலெக்டர் நாட்டு மக்களின் உண்மையான நிலையை உணர்ந்து நேர்முக ஆதாரங்களை எடுத்துக் காட்டவில்லை. கள்ளர்கள் திருட்டுத் தொழில் செய்யும் பழக்கமுடையவர்கள், மாடு கடத்தும் தொழில் செய்து துப்புக்கூலி வாங்குகிறார்கள். குடிக்காவல் செய்து வருகிறார்கள். ஜல்லிக்கட்டு என்னும் முரட்டுத் தனதனமான மாட்டு விளையாட்டை நாட்டில் வைத்துக் கொண்டு அதன் மூலம் சண்டைச் சச்சரவுகளை உண்டு பண்ணுபவர்கள். நிலமில்லாதவர்கள், நிலமிருந்தாலும் உழைத்துப் பிழைக்கும் ஊக்கமில்லாதவர்கள் என்றெல்லாம் காரணம் காட்டி: மேலே கண்ட குற்றச்சாட்டுகளுக்கு மதுரை ஜில்லா கெஜட்டியர், தர்ஸ்டன் நூல் முதலியவைகளிலிருந்து ஆதாரம் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இந்த மாதிரி பிரயத்தனப்பட்ட அதிகாரிகள் அதுகாலை கள்ளர்களுக்கு உதவியாக அனுமதித்திருந்த தக்காவிச் சட்



டத்தைப் பிரயோகித்திருப்பாரானால் பிற்போக்கு நிலையில் இருந்தவர்கள் வெகு விரைவில் பொருளாதார விடுதலையடைந்திருக்க முடியுமென்பது உறுதி. அப்படியில்லாமல் எப்படியும் கள்ளர் சாதியினர் மீது சட்டத்தைப் புகுத்த வேண்டுமென்ற அடிப்படை எண்ணம் அரசுக்கு இருந்த படியால் அதை நிறைவேற்றும் கேந்திரத்தில் இருந்த மதுரை ஜில்லா கலெக்டர் 'நேப்புத்துரை' சர்க்காருக்கு எழுதும்போது, முன்மாதிரியாக மேலே கண்ட ஊர்களில் பதிவு செய்து பார்க்க வேண்டிக் கொண்டது தெரிய வருகிறது.

பிரமலைக் கள்ளர் சாதியார்களுக்கு அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட விசேஷப் போலீசின் உதவியுடன் ஸ்பெசல் மாஜிஸ்ட்ரேட் தனது துவக்க வேலைகளை 1914-ல் ஆரம்பித்தார். அத்துடன் தக்காவிக் கடன் சலுகை செய்வதற்கும் தர்க்காஸ்து நிலங்கள் வழங்குவதற்கும், ஒரு தாசில்தார் நியமனமாகியது. குற்றத் தொழில் செய்து தண்டிக்கப்பட்டிருந்தவர்கள், கேடிகள் ஆகியவர்களைப் பதிவு செய்தும் கண்காணித்தும் வந்தனர். இந்த வேலைகள் 1916ல் துரிதமாகியது.

கிராமத்தார்கள் எல்லோரையும் பதிவு செய்து கண்காணிக்க வேண்டுமென்று மதுரைக் கலெக்டர் வேண்டிக் கொண்டதற்கிணங்க சென்னை அரசு, முதலில் அந்த வேலையைக் கீழக்குடிக் கிராமத்தில் வயது வந்த ஆண்கள் யாவரும் கேடிகள் என்னும் பட்டியலில் பதிவு செய்யப்பட்டனர். அதன் மேல்G O No. 2233 Judicial 16th Sept 1915 இந்தச் சட்டம் மேலஉரப்பனூர், பூசலப்புரம், சொரிக்கான் பட்டி ஆகிய ஊர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுப்பதிவுசெய்யப்படலாயின. இப்படியாகப் பதிவு செய்துகொண்டு ஸ்பெசல் மாஜிஸ்திரேட்டையும், போலீஸ் படையையும் வைத்துக் கொண்டு ஜில்லா பூராவிலும் உள்ள கள்ளர்களில் ஒரு பகுதியினரை விட்டு வைத்து, ஒரு பகுதியினரை மட்டும் குற்றம் புரியும் வகுப்பார் எனப் பிரித்து அடக்கு முறையைப் பிரயோகித்து நிர்வாகம் செய்வதுஅதிகாரிகளுக்குச் சிரமமாக

RangaRakes
tamilnavarasam.com

யிருக்கிறதெனத் தெரிய வருகிறது. ஒருஊரில் உள்ளவர்கள் குற்றவாளிகள் எனக் கண்காணிக்கப்படுவதும் அடுத்த ஊரில் உள்ளவர்கள் அப்படி கண்காணிக்கப்படுவதில்லை என்பதும் இரண்டுபட்டு இருந்தமையை அதிகாரிகள் சகிக்கவோ காரணம் சொல்லவோ முடியவில்லை. பதிவு செய்யப்பட்ட ஊர்வாசிகள் ரேகைப்பதிவு அதிகாரிகளை கேவலமாகவும் ஏளனமாகவும் நடத்தினர். பாரபட்சமாக நடத்தப்படுவதற்கு முகாந்திரம் சொல்லவும் அதிகாரிகளுக்கு முடியவில்லை இரேகைச் சட்டத்தின் கீழ் பதிவான கள்ளன் தன் சுதந்திரத்தை இழக்கிறான் என்பது கள்ளர்கள் மனதில் பதியலாயிற்று. நாளடைவில் படிக்காத நபர்களும் விபரம்தெரியாத கிராம வாசிகளும் குற்ற பரம்பரைச் சட்டத்தைப் பற்றி விபரங்கள் தெரிந்து கொள்ளலாயினர். விபரம் தெரிந்தவர்கள், படித்தவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தெரிந்த தேசபக்தர்களை (காங்கிரஸ் தலைவர்களை) நாடி இந்தச் சட்டத்தை உடைத்தெறிய வகைகாண வழி தேடினார்கள்.

பிரமலை நாட்டிடம், போதிய கல்வி அறிவு இல்லாத நிலையில் பிரமலைத் தேவமார்கள் இருந்தார்களே அல்லாமல் சுதந்திர உணர்வும் வீரமும், விபரமும், விவேகமும் இல்லாதிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. சாதியார்கள் எல்லோரும் பட்டாதார்கள். உழைப்பாளிகள். நாட்டின் பூர்வீகக் குடிகள் அதாவது நிலங்கள் அன்னியர் ஆட்சியில் சர்வே செய்து செட்டில்மெண்டு ஏற்படுத்துவதற்கு முன்னாலேயே பூர்வீகமாகக் காடுகட்டி நாடாண்டவர்கள். இப்படிப்பட்டவர்களை நாடோடிகளின் வரிசையில் கைரேகைப்பதிவு செய்வதென்று அரசு கட்டளை பிறப்பிக்குமானால் சும்மாயிருப்பார்களா? மானத்தைக் காக்க உயிரைத் திரணமாக மதித்து ரேகைப்பதிவு செய்து கொள்ள மறுத்தனர். நாட்டில் நடமாடும் ரேகைப்பதிவு அதிகாரிகளையும் அரசையும் துரும்பாய் மதித்துப் பேசத் தயங்கவில்லை.

பகுத்தறிவு படைத்த கலெக்டரும், அரசுஊழியர்களும் நியாயமில்லாத சட்டத்தை நிறைவேற்றவும் முடியவில்லை



சும்மாவிருக்கவும் முடியவில்லை. இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்று திண்டாடிக் கொண்டிருந்த சமயம். திட்டமிட்டபடி குற்ற பரம்பரைச் சட்டம் நிறைவேற்ற முடியாமல் தோல்வியடைந்து போகவே எப்படிடிம் பிரமலை நாட்டில் இந்தச் சட்டத்தைத் திணித்துக் கட்டியாக வேண்டுமென்று அதற்கான ஆதரவுகள் சட்ட பூர்வமாகத் தேடித் தீர்த்து விடுவதென்று முடிவு கட்டினர்.

1919 ஆம் ஆண்டு மதுரை ஜில்லாவில் போலீஸ் சூப்பிரண்டெண்டாக 'லவ்லக்' என்னும் வெள்ளைக்காரன் பதவியில் இருந்தபோது மதுரை ஜில்லாவில் வாழும் பிரான்மலை கள்ளர் வகுப்பினர்களின் வாழ்க்கையில் குற்ற பரம்பரைச் சட்டம் பிரயோகிப்பதற்கும், அமல் நடத்துவதற்கும் ஆவசாத்திய முறைகளை வகுத்துக் கொடுக்கும்படியாகச் சென்னை அரசு உத்திர விட்டது. 'லவ்லக்' ஒரு மனவியல் சாத்திர நிபுணர். சென்னை மாகாணத்தில், இதற்கு முன் இயங்கிய, குற்றத் தொழில் செய்வோர் செட்டில்மெண்டுகளில், பற்பல விடங்களில் வேலை பார்த்து அனுபவம் பெற்றவராகும். குற்றத் தொழில் வர்க்கத்தினர்களுக்குப் புனர் வாழ்வளித்துப் பல திட்டங்களை நிறைவேற்றியவர். மக்கள் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதில் மனமகிழ்ச்சி கொள்ளும் ஒரு சீர்திருத்தவாதி. கடும் உழைப்பாளி. இப்படிப்பட்ட அதிகாரி அது காலை மதுரையில் பணிபுரிந்து வந்தமையால் அரசு அவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்தது எனத் தெரிய வருகிறது. நீண்ட அனுபவமுடைய போலீஸ் அதிகாரி அரசாங்கத்தின் அடிப்படை நோக்கங்களையும் 1916ல் இருந்து போலீஸ் குற்றப்பிரிவு இலாகாவை கையாண்டு வந்த வேலை முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு பூர்வாங்கமான ரிப்போர்ட் தயாரித்தார்.

இந்த ரிப்போர்ட்டிற்கு 'லவ்லக்' ரிப்போர்ட் என்று பெயர் வந்தது. லவ்லக் ரிப்போர்ட்டை அடிப்படையாக வைத்துத்தான் பிரான்மலைக் கள்ளர் வகுப்பாரின் மீது



RangaRakes
tamilnavarasam.com

குற்ற பரம்பரைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டதும் பிரான் மலைக் கள்ளர் சமூக சீர்திருத்தம் அமலாக்கப்பட்டதுமாகும். லவ்லக் ரிப்போர்ட்டிலிருந்து சில பாகங்களைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

‘பிரான்மலைக் கள்ளர்களுக்குப் புராதனமாக விளங்கும் வாசஸ்தானம்; திருமங்கலம் தாலூகாவில் மலைப்பாங்கான பிரதேசங்கள் அதாவது கிழக்கில் மதுரை நகர்; சிக்கந்தர் மலை, நாகமலை; வடக்கில் நாகமலை, மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்; இதற்குள்ளிட்ட பிரதேசம் இங்கிருந்து இராமநாதபுரம் ஸ்ரீவில்லிபுத்தூர் பிரதேசத்திலுள்ள மலைப் பிரதேசங்களுக்கும்: அதே போல் திண்டுக்கல் பழனித் தாலுக்காக்களில் உள்ள மலைப்பிரதேசங்களுக்கும் குடியேறியிருக்கிறார்கள். இப்பரம்பரை மக்களின் இளம் வாலிபர்கள், பரம்பரைச் சுபாவத்தினாலும், அளவு கடந்த முரட்டுப் போக்கின் சுபாவத்தினாலும், குற்றங்களைச் செய்து வருகிறார்கள். இந்தப் பழக்கம் சிறுமலைக்கும், மற்ற மதுரை சில்லாவிலுள்ள குன்றுகட்கும் அருகில் குடியேறியிருக்கும் குடும்பத்தினரிடம் அதிகமாய் காணப்படுகிறது ஒரு கவனிக்கத்தக்க விஷயம் இவர்களின் நிலங்களின் சாகுபடிக்கே குறைவுபட்டு அவற்றின் சொந்தக்காரர்கட்கு ஜீவனத்திற்குப் போதுமான வருவாய் இல்லாததால் இவர்கள் கால்நடைகளைத் திருடுதல் முதலிய குற்றங்களில் இறங்குகிறார்கள். சிவ நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்காட்லாந்தில் உள்ள மலைப்பிரதேசங்களில் வாழ்ந்த வெள்ளைக்காரர் வர்க்கத்தினர்களும் இப்படியாக வாழ்க்கை நடத்தினார் என்பதும் கவனிக்கத் தக்கது. அதுவும் தவிர கள்ளர்கள் மத நம்பிக்கையைக் கவனித்தால் இவர்கள் உலகில் அதிகமாகச் செல்வம் குவித்து வைத்திருப்பதைப்பிரித்து இல்லாதவர்க்கு வினியோகம் செய்யப் படைக்கப் பட்டவர்கள் என்று கருதுகிறார்களேயானால்; கீழ்நாட்டு சோஷலிஸ்டுகள் போலவும் ஏகபோக உரிமையோடு சண்டை போடுவதில் தீவிர விருப்பங்கொடுக்கும் சமதர்மவாதிகள் வழியில் செல்லுகிறார்கள் என்று கருதப்பட வேண்டியதிருக்கிறது. இப்



பரம்பரையைச் சேர்ந்த ஒருவர், பணம் படைத்த ஒருவர், சொத்தைப் பங்கிடும் பொருட்டு எடுத்த நடவடிக்கைகயில் குற்றவாளியாக்கித் தண்டிக்கப் பட்டால், அவர் விடுதலையாகி வெளிவரும் போது; அரசியல் கைதிகள் போற்றப்படுவது போல, இவர்களும் வரவேற்கப் படுகிறார்கள் எது எப்படியிருந்தாலும் கள்ளர்கள் செய்யும் குற்றத்தொழில் தடுக்கப் படவேண்டும் என்பதை நான் அடிப்படையாகக் கருதுகிறேன்.

இப்போது எடுத்து வரும் குற்றத்தொழில் தடுப்பு முறையும், இவ்வினத்தவரைப் பதிவு செய்து கண்காணித்து வருவதும் சரி என்று நான் கருதுவதற்கில்லை. இதனால் நல்ல பலன் கிடைக்காது. பரவலாக நாடு பூராவிலும் சில கிராமங்களிலுமாக 11-1-20 வரை பதிவாகியுள்ளவர்களின் எண்ணிக்கை 1772 ஆகும். இவர்களைக் கண்காணிப்பதற்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் சிப்பந்திகளால் சரியான சட்டத்தை நிறைவேற்றப் பட்டாலும் கண்காணிப்பு உறுதி கொண்டிருக்கா விட்டாலும், செய்த வேலைகள் எல்லாம் தோல்வியடைந்து விடும். ஒரே பிரதேசத்தில், பதிவான குற்றவாளிகளும், பதிவாகாத இதரரும் இருக்கும் போது, பாகுபாடு செய்து அடக்குவது சிரமம்.

இந்தச் சட்டம் சரியாக வேலை செய்யப்பட வேண்டுமானால் திருமங்கலம் தாலுகாவில் வாழ்ந்து வரும் பிரான்மலைக் கள்ளர்களை மாத்திரமல்லாமல் இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் எவரானாலும் இந்தச் சில்லாவிலும், இராமநாதபுரம் சில்லாவிலும் வாழ்ந்து வரும் யாவரையும் குற்றத்தொழில் செய்தவரானாலும், செய்யாதவரானாலும் வயது வந்த அத்தனை பேர்களையும் பதிவு செய்து விட வேண்டும். அப்படியாக 5-6-1918ல் இருந்து எல்லாக் கள்ளர்களையும் பதிவு செய்ய முற்படும் போது 10,000 பேர்கள் பதிவாவார்கள். ஆகவே சட்டம் அமுல் 17000 பேர்களுக்கு மேல் பிரயோகிக்க வேண்டியது வரும். சட்டப்பிரயோகம் செய்து அடக்கு முறையை மாத்திரம் கையாண்டால், அது பெரும்

RangaRakes tamilnavarasam.com

ஆபத்தில் போய் முடியும், அடக்கு முறைச் சட்டம் கையாளப்படும்போதே பிரான்மலைக்கள்ளர் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளும் அமல் நடத்தத் தவறக் கூடாது. சீர்திருத்த முறை வரப்போகும் இவ்வின இளம் சந்ததியார்களின் வருங்காலம் பிரகாசமாக இருக்க வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று கருத வேண்டும்.

குற்றப்பரம்பரை அமுலில் இருக்கும்போது. அடக்கு முறையில் இருக்து வாழ்ந்து வரும் மக்களின் குழந்தைகளுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி புகுத்தப்பட வேண்டும். அத்தோடு விட்டுவிடாமல், உயர்தரக் கல்வி வகைக்கும் படிப்படியாகத் தகுதி வாய்ந்தவர்கள் மேல்படிப்புக்கும் உயர்தரக் கல்விக்கும் உதவிகள், உபகாரங்கள் அடைய வழி செய்ய வேண்டும்.

பதிவு செய்யப்பட்டவர்கள், சட்டப்பிரயோகப் பிடிப்பிலிருந்து தப்பாமல் கடுமையான போலீஸ் கண்காணிப்பும், போலீஸ்படையின் அளவும் திறமும் அதிகாரிகளின் தீவிர மேல்பார்வையும் உறுதியாக்க வேண்டும். அடக்குமுறையில் வளைத்துக்கொள்ளப்பட்ட, பதிவு செய்யப்பட்டவர்களின் ஜிவனத்திற்குத் தொழில் கொடுத்து அவர்களின் வாழ்வுக்கு வேலை வாய்ப்பில் ஈடுபடுத்தி வழிகாட்ட வேண்டும். தொழிலும் வருமானமும் இல்லாதபோதுதானே மனிதனுக்கு திருட்டு மனம் உண்டாகும். பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு, கைத்தொழில் சாலைகள் மூலம்கைத்தொழில் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். தக்க வருமானம் கிடைக்கும்படியாக அவர் கற்கும் தொழில் இருக்க வேண்டும். பெரும்பாண்மையினர் விவசாயிகளாக இருப்பதால் விவசாயம் இவர்களுக்கு அனுகூலமாகும்படி செய்வதற்கு, நிலமில்லாதவர்களுக்கு நிலம் கிடைக்கத் தற்காஸ்த்து விதிமுறைகளைக் கள்ளர்களுக்குச் சாதகமாக மாற்றி அமையக் வேண்டும். கூட்டுறவுத்துறையில் இவர்கள் வாழ்க்கை துறை மையங்கொண்டு அமைய வேண்டும். இவர்கள்



தொழிலில் விருத்தியாகிவரும்போதே நல்லறிவு போதிக்க வேண்டும்.

படித்துவரும், இளம் சந்ததியினர் மேற்படிப்புக்குப் போனவர்கள் போக மற்றையோருக்குத் தொழில் கல்விக்கு வழி செய்ய வேண்டும். உயர்தரப் படிப்பிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உத்தியோக வாய்ப்பளிக்க வேண்டும். கற்றறிந்தவர்கள் தொழிற்கல்வியடையாமலோ உத்தியோகம் பெறுமலோ இருந்தார்களானால் அவர்கள் தங்கள் குடும்பங்களில் போய் விவசாயம் செய்யும்படி எதிர்பார்க்க முடியாது. இவர்கள் சம்மந்தப்பட்டமட்டில் ஜாக்கிரதையாகக் கவனம் செலுத்த வேண்டும். நவீன அறிவு படைத்த இக்கூட்டம் தங்கள் மூதாதையர்கள் போல தப்பான வழியிலோ அரசியலிலோ இறங்கி விட்டார்களானால் பேராபத்தில் போய் முடியும். அரசுக்கு இத்தகைய பணியில் அதிகச் சிரமும் ஏற்பட்டாலும். இதுகாலை சட்டப்பிரயோகத்தினால் கஷ்டம் அடையும் சமூகத்தினரின் சந்ததியினர்கூட்டு நல்வாழ்வு கிட்டும். எனவே ஒரு சமூகத்தில் கிடைக்கப்போகும் நலல பிரஜைகளின் நலனைக் கருதி என் திட்டம் அங்கீகாரம் ஆக்கப்படவேண்டும்.

பிரமலைக் கள்ளர்களைப் பிறவியில் திருடர்கள் என்று சொல்லமுடியாது. இவர்கள் இருக்குமிடம் செய்தொழில் அடையும் வருமானம் ஆகியவைகளைக் கொண்டு திருட்டில் ஈடுபட்டிருக்க வேண்டும். இவர்கள் நல்ல பிரஜைகளாவதற்கான சூழ்நிலைகளை உண்டு பண்ணினால் நல்ல பிரஜைகளாவார்கள்.

குறுப்பு: 1919ல் லவ்லக் அறிக்கையில் கொடுத்துள்ள கருத்துக்களை அரசு ஏற்று அமல் நடத்தியது. 1946ல் குற்றபரம்பரைச் சட்டம் பிரயோகம் வாபஸாகியது. ஊடேயுள்ள கால நிகழ்ச்சிகள் சிந்திக்கவேண்டியது. பிரான்மலைக் கள்வர் சமூக சீர் அமைப்புத் திட்டம் இன்றும் நடைமுறையிலிருந்து வருகிறது. லவ்லக்கின் சிந்தனைப்படி பொருளாதாரமும், இளய, சமுதாயமும் தலை தூக்கியது காணக்

கிடைக்கிறது. மற்ற சமுதாயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது விகிதாசாரத்தில் மிகவும் குறைவுதான். சமுதாய அமைப்பில் அரசியல் வாழ்வில் பிரான்மலை நாடு தலை தூக்கியுள்ளது என்று சொன்னால் மிகையாகாது. இதுவகைக்குச் சுய முயற்சியே காரணமாகும். உத்தியோக நியமனம் வகையில் ஒடுக்கப்பட்ட மக்கள்; அன்னியன் ஆட்சியில் அடைந்த உரிமையுங்கூட நமது அரசினால் பிடுங்கப்பட்டது.

பெரியாற்று நீர்பாசனத்திட்டம் பெருங்காமநல்லூர் படுகொலைக்குப் பிராயசித்தமாகச் செய்ய துவக்க வேலைகள் செய்தது. அதையே ''லல்லக்கும்'' பெரிதும் ஆதரித்துள்ளார். இத்திட்டம் நம்மரசால் நடவடிக்கை எடுக்கும் போது அரசியல்வாதிகள் ஊடுருவல் காரணமாகப் பெருங்காமநல்லூர் பிராயச்சித்தம் நிறைவேறுமல் நீர்பாசனம் ஏமாற்றத்திற்குள்ளாகி கள்ளர் நாடு நல்ல பயன் அடையாமல் போய் விட்டது. இனி மேலாகினும் வரப்போகும் விஸ்தரிப்பில் பிரமலை நாடு பூராவாகவும் பலன் அடையும் திட்டம் நிறைவேற்ற அரசு தவறுமலிருக்குமாக.

மதுரை ஜில்லாக் கலெக்டரின் லெட்டரையும் வல்வக் துரையின் ரிப்போர்ட்டையும் மாகாணப் போலீஸ் இன்ஸ்பெக்டரின் பரிந்துரையும் சீர்தூக்கிப் பார்த்து சென்னைச் சர்க்கார் உத்திரவுகள் பிறப்பிக்கலாயிற்று.

அந்த உத்தரவு :—

O. G. 1331 Judicial dated 5 th June CT. Act 1911—Appylng to the Piramalai Madurai Dt. Letter from G. F. Paddison Esq M. A. I. C. S. District Magistrate Madurai to the secretary to Government Home (Judicial) department through the I. G. of Police Madras dated 27-4-1918 Roc. 15. B. & G I kgl orders Passed as requested.

இதன்படி பிரமலை நாட்டில் வயது வந்த எல்லாப் பிரமலை நாட்டுக் கள்ளர்களையும் குற்றத் தொழில் செய்யும்



நபர்கள் பதிவு செய்யப்பட வேண்டிய 10-1.A. ரிஜிஸ்தரில் பதிவு செய்து கண்காணிக்கச் சட்டமாகியது.

பிரமலைக் கள்ளர்கள் எல்லோரையும் பதிவு செய்யப்பட வேண்டும் என அரசு பிறப்பித்த ஆணை மதுரைக் கலெக்டருக்கு 1918ம் வருஷக் கடைசியில் கிடைக்கவே அதன் மேல் சட்டப்பிரயோகம் செய்வதற்குத் தனி அலுவலகம் உண்டாகியது.

1. ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் (கைரேகைக் கலெக்டர்]
2. ஸ்பெஷல் போலீஸ் இன்ஸ்பெக்டர்
3. ஸ்பெசல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள்.
4. ஏட்டுகள்
5. கான்ஸ்டேபிள்கள்

அத்துடன், உசிலம்பட்டி டிவிஷனில் உள்ள; திருமங்கலம் உசிலம்பட்டி, ஆகியவிடங்களில் சர்க்கார் காரியாலயங்களில் பணியாற்றிவரும் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு அதிகாரங்களையுடைய மாஜீஸ்ட்ரேட்கள், சப்மாஜீஸ்ட்ரேட்கள், சி.டி. ஆக்ட் சம்மந்தமான, சட்டப்பிரயோக அமுல் முறையில் எதிர்நோக்கும் அலுவல்களைத் தங்கள் விசேஷ பொறுப்பில் அமுல் செய்யவேண்டும் அதேபோல இந்த டிவிஷனில் உள்ள போலீஸ் நிலையங்கள் யாவும் சி.டி. ஆக்ட் நிர்வாகப் பொறுப்பை தங்கள் விசேஷ பொறுப்பாகக் கொண்டு அமுல் நடத்தவேண்டும். அவர்கள் சி.டி.ஆக்ட் பிரயோகத்திற்கென நியமனம் செய்யப்பட்டுள்ள ஸ்பெஷல் போலீஸ் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். விசேஷ ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும். அதே போல தற்காஸ்த்துகடன், தஸ்காத்து வேலைகள் செய்து வந்த தாசில்தார், உதவித் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தனி அங்கமாக விளங்கினர்கள்.

இந்த மாதிரிச் சட்டம் நிறைவேறும் வகைக்கு ஆபீஸ் அமைப்புகளும் அதிகாரிகள் நியமனமும் கொண்டு 1919ம்

RangaRakes
tamilnavarasam.com

ஆண்டில் பதிவு வேலைகள் ஆரம்பிக்கும் சமயம் ஒரு சங்கடமான நிலை தென்பட்டது உலக மகாயுத்தம் அரசையும் நாட்டு மக்களையும் கதி கலங்கச்செய்து கொண்டிருந்த காலமானபடியாலும், பஞ்சங்கள் பலவாலும் நாட்டு மக்கள் வாடிய காலமாகவுமிருந்தது. உள்நாட்டில் சாதிப்பூசல் ஏற்பட்டுப் பண்டுக் கலகத்தில் நாடு நிலைகுலைந்திருந்தது அதுகாலை புதிதாகப் புகுத்தப்பட்ட ரேகைச்சட்டம் தன் வேலையைத் தொடங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட மக்கள் மனம் சும்மாவாயிருக்கும்.

புதுவிதச் சட்டம் ஒன்று வந்திருக்கிறது. மக்களை ஆடு மாடுகள் போல் கட்டி வைத்து ஆட்டும் நிலைக்குப் பதிவெடுக்கிறார்களாம் என்பதே நாடெங்கிலும் பேச்சாகவிருந்தது சட்டத்தின் விதிமுறைகளையும், அவைகள் அதுகாலை நடைமுறையில் செயல்பட்டு வருவதையும் கண்டவர்கள் திகில் அடைந்தார்கள்.

ஆரம்பத்தில் ரேகைச் சட்டம் நாட்டில் பிரவேசித்து வருவதன் கொடிய விளைவுகளை பூர்ணமாக உணர்ந்தவர்கள் அதுகாலை கொஞ்சம் கல்வி அறிவு பெற்றிருந்த கிராம அதிகாரிகளே அவர்களில் உசிலம்பட்டி கஸ்பா நாட்டாண்மை, கல்லூத்து நாட்டாண்மை, பண்ணியான் நாட்டாண்மை கருமாத்தூர் வடக்கம்பட்டி நாட்டாண்மை, காளப்பன் பட்டி நாட்டாண்மை, விக்கிரமங்கலம் நாட்டாண்மை ஆகியவர்களும்; உரப்பனூர் வெள்ளையத்தேவர், சாத்தங்குடி ரூசை வாத்தியார் ஆகியவர்களாகும்.

நாட்டுக் கூட்டங்கள் கூட்டும்படியாகவும் கூட்டங்களில் மக்கள் யாவரும் கைரேகைப் பதிவு செய்ய இணங்காமல் மறுக்கச் செய்யவும் போதனைகள் செய்ய முடிவெடுக்கப் பட்டது.

மதுரையில் காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடைய ஆதரவை பிரமலை நாட்டுக் கள்ளர்களுக்குக்கிடைக்கும்படி செய்யவும் ஏற்பாடுகள் செய்ய நாட்டுத் தலைவர்களை தூது அனுப்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதாகும்.

# குற்றப் பரம்பரைச் சட்டம் பிரமலை நாட்டில் பிரயோகம்

எல்லாப் பிரமலைக் கள்ளர்களையும் கைரேகைச் சட்டப்படி பதிவு செய்யும்படியான வேலைகள் திருமங்கலம் தாலுகாவில் செய்யப்பட்டன. காளப்பன்பட்டி, போத்தம்பட்டி பெருங்காமநல்லூர், தும்மக்குண்டு, குமரன்பட்டி, ஆகிய ஊர்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டன. இது கிராம மக்களுக்குத் தெரியும். என்ன நடக்குமோவென்று திகிலடைந்திருந்தனர். எனவே 1920ம் வருஷம் மார்ச் மாதம் 2ந்தேதி ரேகைப்பதிவு அதிகாரிகள், ஒரு சிறுபோலீஸ் படையுடன் சிந்துப்பட்டியில் முகாமிட்டனர். கிராமங்களுக்குப் போய் ரேகைப்பதிவு செய்யப் புறப்படுவதற்குமுன் கிராமத்துப் பெரியதனக்காரர்கள் அதிகாரிகளிடம் போய் ரேகைப் பதிவுச் சட்டம் பிரயோகிப்பது பெரிய அநியாயமாகத் தெரிகிறது. கள்ளர்கள் சிறந்த விவசாய வர்க்கத்தினர் சட்டத்தில் கண்டுள்ள காட்டு மிராண்டிகள் அல்ல என்று கூறினர்.

நியாயம் அப்படியிருக்க நீங்கள் எங்கள் ஊர்களுக்கு வந்து ரேகை பதிவதை ஏற்கமாட்டோம். ஆகவே, நீங்கள் எங்கள் ஊருக்கு வரவேண்டாம். நாங்கள் உடனே மதுரை சென்று, கலெக்டரைப் பேட்டிக்கண்டு, சட்டத்தைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்போகிறோமென்று தெரிவித்தனர். அந்தப்படிக்கு இவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு அதிகாரிகள் நடவடிக்கையை ஒத்தி போட்டனர்.

RangaRakes tamilnavarasam.com

அன்று அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியவர்கள்' 1. தேவசகாயத்தேவர் 2. காளப்பன்பட்டி மாஜிV.M: பட்டியான் கருப்பத்தேவர். 3) பெருங்காமநல்லூர் உடையார் தேவர், 4) சிந்துப்பட்டிமுத்திருளாண்டித் தேவர் ஆகியவர்களாகும். அத்துடன் கலெக்டரைக்கண்டு மகசர் ஒன்று கொடுக்கவும் செய்தனர்.

24—3—20ல் சிந்துபட்டிப்போலீஸ் சரகம்; கள்ளபட்டி கட்டத்தேவன்பட்டி, உட்படப் பக்கத்து ஊர்கள் பன்னிரெண்டின் கள்ளர்கள், தும்மக்குண்டு சந்தைமைதானத்தில் பொதுக்கூட்டம் கூட்டினர். தங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் ரேகைச் சட்டம்பற்றிய விபரங்களை பற்றிக்கலந்து பேசினார்கள். சட்டம் பயங்கரமானது அநியாயமாகச் சர்க்கார் நம்மீது சுமத்துகிறார்கள். நாட்டு மக்கள் யாவர்களுடைய கவனத்திற்கும் இதைப் பற்றிக் கொண்டுவர வேண்டும். தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுப்பதற்குக்கமிட்டி ஒன்று அமைக்க வேண்டும். நாட்டில் உள்ள பெரிய வீட்டுக்காரர்கள் எல்லோருக்கும் நாட்டோலை அனுப்பி அவர்களின் ஒத்துழைப்பை அடையவேண்டும் என்று தீர்மானித்தனர். கூடி முடிவெடுத்தவர்கள் எல்லோரும் முக்கியமானவர்கள் கிராம பிரதிநிதிகள். அன்று ஆஜரானவர்கள் 200 பேர்கள்.
அமைக்கப்பட்ட ரேகை எதிர்ப்புக் கமிட்டியார்கள்:—

1. தேவசகாயத்தேவர்
2. உபாத்தியாயர் மரிய சூசைத்தேவர் அவர்கள் சாத்தங்குடி
3. விருமாண்டித்தேவர்.
4. பட்டியான் கருப்பத்தேவர் அவர்கள் காளப்பன்பட்டி
5. கொடையன்பூசாரித்தேவர்
6. முத்துமாயத்தேவர்
7. உடையார்தேவர் அவர்கள் பெருங்காமநல்லூர்



8. முத்துக்கருப்பத்தேவர் அவர்கள் காளப்பன்பட்டி மேலே கண்ட கமிட்டியார்கள் நாட்டின் பிரதான தளகர்த்தர்கள் அதாவது பெரிய வீட்டுக்காரர்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தை தக் கூட்டி நடவடிக்கையில் இறங்கினார்கள்.

28—3—1920ல் சிந்துபட்டிப் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் பெருங்காமநல்லூருக்கு ஒரு போலீஸ்படையுடன் வந்து கிராமத்தில் வசிக்கும் நாயக்கமார்களைக் கூப்பிட்டு நீங்கள் கள்ளர்களுக்குக் காவல் கூலி கொடுத்து வருகிறீர்களா? அப்படியானால் அது வகைக்கு ஸ்டேட்மெண்டு கொடுங்கள் அவர்களை கேஸ் போட்டுத் தண்டிக்கப் போகிறேன் என்று கேட்டதற்கு நாயக்கர்கள் கள்ளர்களுக்கு ஆதரவாகவே சாட்சியம் கொடுத்தது கள்ளர்களைப் போலீஸ் பிடிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவல்ல. உள்ள நியாயத்தையும் பரம்பரையாக நடந்து வந்த சம்பிரதாயத்தையுமே விளக்கினார்கள்; கள்ளர் நாட்டில் வாழ்ந்து வரும் நாயக்கர்கள் ரெட்டிமார்கள், பிள்ளைமார்கள்முதலியார்கள் போன்ற இதர சகோதர சமூகத்தினர்கள் பெரும்பாலும் விவசாயிகள்.

அவர்களுடைய; விவசாயப்பொருள்கள், கன்றுகாலிகள் மற்றுமுள்ள உடைமைகள் ஏனையோர்களால் திருடப்படுவது சகஜமே. அவைகள் தடுக்கப்படுவதன் பொருட்டு நம்பிக்கையும் நாணயமும்: தம் பரம்பரைச் சொத்து என்று நடைமுறையில் காட்டி வாழ்வு நடத்தி வந்த வலுவுள்ள கள்ளர் மக்களிடம், குடிகளும் கிராமத்தார்களும் வழக்கமாகக் காவல் முறை ஒப்படைத்து வந்திருக்கிறார்கள்; காவல் காரர்கள் தங்களுக்கு ஒப்படை செய்து வந்த காவல் திட்டத்தில் ஏதேனும் திருட்டுப் போய் விட்டால்; திருட்டைத் துலக்கித் தரவேண்டும் இல்லாவிட்டால் திருட்டுப்போன சொத்துக்கு ஈடுகொடுக்க வேண்டும்; இப்படியாக ஆதிகாலம் தொட்டு நடந்து வந்த பழக்கத்தில் காவல் ஒப்படை செய்து வந்தவர்கள் பெரிதும் பயன் அடைந்து வந்தமை தெரிகிறது.

RangaRakes
tamilnavarasam.com

தேவமார்கள் மாபெரும் தேசிய இனம், தங்கள் அடைக்கலப் பொருளைக் காத்துக்கொடுப்பது தங்கள் உயரிய கௌரவத்தையும் செல்வாக்கையும் நிருபணம் செய்து மகிழும் திருக்கூட்டத்தில் வந்த இனம். காவல் தொழில் செய்து வந்தவர்கள், நல்ல வரவு செலவு உள்ளவர்களாகவும் பொருள் பூமியுடையவர்களாகவுமே இருந்து வந்தமை தெரிய வருகிறது. தங்கள் நிர்வாகத்தில் சகோதர இனம் பாதுகாப்பாக வாழ்கிறது என்பதையும் அவர்கள் செலுத்தும் ஊதியத்தையும், காட்டும் மரியாதையையும் கண்டு சந்தோசப்படுவர்- இவர்களின் தனிக்குணம். தங்கள் கட்டுக்காவலில் யாரேனும் அழிம்புகள் செய்வார்களேயானால் அவர்களைத் தண்டிக்கவும் ஒடுக்கவும் கொஞ்சங்கூடத் தயங்குவதுமில்லை.

அக்காலத்தில் போலீஸ் பாதுகாப்பு நாணயமாகவுமில்லை. காவல் ஆதிக்கமுள்ளவிடங்களில் மக்கள் அணுகி நியாயம் அடைவதற்கு ஏற்றபடியுமில்லை. காவல் ஆதிக்கமுள்ளவிடங்களில் மக்கள் போலீசை அணுகுவதுமில்லை. அவர்களைக் காட்டிலும் கிராமக் காவல்காரர்கள் ஓர் குடும்பப் பாசத்துடன் விளங்கி வந்தார்கள். இதை எல்லாம் விளக்கும்படியாகவிருக்கிறது. கூள்நாயக்கன் பட்டி நாயக்கமார்கள் சாட்சியம்: சாட்சியம் பிரதிகூலமாகவிருந்தபடியால் விசாரணை செய்த சப்இன்ஸ்பெக்டர் அப்படியானால் கள்ளர் காவல்காரர்கள் தானுவரி வசூல் செய்யும் சர்க்கார் என்று கடைசியாக மிரட்டினார்.

நாட்டுப் பெரியதனக்காரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ரேகை எதிர்ப்புக் கமிட்டியார்களுக்கு ஆதரவு கொடுக்க ஒப்புக் கொண்டார்கள். கமிட்டியார்களுக்கு வழிகாட்டியாக மதுரை நகர் வழக்கறிஞர் ஜார்ஜ்சோசப் அவர்களை தங்களுக்கு வக்கீலாக அமைத்துக் கொண்டனர். ஜார்ஜ்சோசப் அவர்கள் பிரதான க்காங்கிரஸ் பிரமுகராவார். அவர்கள் தனது செல்வாக்கை உபயோகித்துக் காங்கிரஸ் பிரமுகர்கள் கள்ளர்களுக்கு உதவவும் செய்தார்கள்.



கள்ளர் நாடெங்கிலும் பொதுக் கூட்டங்கள் போட்டு அந்நிய அரசு அநியாயமாகக் கள்ளர்களின் மேல் குற்றப் பரம்பரைச் சட்டத்தைப் பிரயோகித்திருப்பதைக் கண்டனம் செய்யப்பட்டது. கைரேகைப் பதிவு செய்ய ஒருவரும் ஒப்புக் கொள்ளக் கூடாது என மக்களுக்குப் போதனை செய்யப்பட்டது. கள்ளர்கள் எங்கு பார்த்தாலும் ரேகைச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்ற பேச்சாகயிருந்தனர்.

அதுகாலை மார்ச்சுமாதக் கடைசியில் பெருங்காமநல்லூர் கிராமக் கள்ளர்கள் எல்லோருக்கும் சம்மன்சார்பு செய்யப்பட்டது. அதன்படி 3-4-1920ல் பிரமலைக் கள்ளர்கள் வயது வந்த எல்லோரும் கிராமத்தின் மந்தையில் வந்து ஆஜராகிப் போலீஸ் அதிகாரிகளின் மத்தியில் கைரேகைப் பதிவு அதிகாரியிடம் தங்களை குற்றப்பரம்பரையினர் பதிவுப் பட்டியலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதுவரை ஊரை விட்டு யாவரும் வெளியில் போகக் கூடாது. இது அரசு ஆணை மீறினால் தண்டனைக்குள்ளாக வேண்டும் என்று சம்மனில் கண்டிருந்தது.

பெருங்காமநல்லூர் மக்கள் ஒன்றுகூடிச் சிந்தனை செய்தார்கள், ஆடுமாடுகளைப் போல் ''போலீஸில் கட்டுண்டு அடிமையாக்கப் பார்க்கிறது அரசாங்கம் இன்று நாம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு பதிவு செய்வோமானால் மேற்கொண்டு நம் இனத்தார்கள் எல்லோரையும் பதிவு செய்துவிடுவார்கள் முதலில் பணிந்து மற்றயோர்களும் பணிய வேண்டியதற்கு நாம் முன்மாதிரியாகக் கூடாது. நாட்டு மக்கள் எல்லோரும் கூடிய கூட்டத்தில் ரேகைப் பதிவை, ஒப்புக் கொள்ளக் கூடாது என்று தீர்மானமும் செய்திருக்கிறார்கள். 3—4—1920-ந்தேதி ஒரு சோதனை நாளாக வந்திருக்கிறது. வந்தது வரட்டும் எல்லோரும் ஒன்றாய் நின்று ரேகைப்பதிவு உத்திரவை மீறுவோம்'' என்று முடிவுகள் செய்து கொண்டார்கள்.

சட்ட மீறுதல் செய்யும் போது, அதிகாரிகளோ போலீஸோ அடக்கு முறையைக் கையாண்டாலும், கைது

RangaRakes tamilnavarasam.com

செய்தாலும், தமது சுயபலம் கொண்டு தாக்கவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வழிவகைகள் செய்து கொள்ளத் தவறவில்லை. அந்த நிலைக்குத் தயார் நிலைசெய்து கொள்வதற்குக் காரணம் கள்ளர் தலைவர்களுக்கு கள்ளர் சமூகக் கிராம அதிகாரிகள் மூலம், பெருங்காமநல்லூருக்கு ஆயுதப் போலீஸ்படை ஒன்று 3ந்தேதி வரப்போகிறதுஎன்ற துப்புக் கிடைத்திருந்தது.

முன்னெச்சரிக்கையாக தயார் நிலை செய்து கொண்ட விபரங்கள்:—அதிகாரிகள் வந்தவுடன் எல்லோரும் மந்தையில் வந்து கூட வேண்டும். ஒவ்வொருவருக்கும் தக்க படியாகக் கிடைக்கக் கூடிய ஆயுதங்கள் வீட்டில் தயாராக வைத்திருக்க வேண்டும். வீட்டில் ஆடுமாடுகள் யாவற்றையும் பத்திரப் படுத்தி விட்டுப் பெண்டு பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்து விட வேண்டும்: கூடுமானவரை வெளியூர்களுக்குக் கூட அனுப்பி விடவேண்டும். பலாத்காரம் ஏற்பட்டால் நிமிசநேரத்தில் ஆயுதம் தாங்க வேண்டும் என்பதாகும்.

ஒருவேளை போலீஸ் தாக்குதல் மீறிய அளவில் இருக்குமானல் அடுத்த ஊர் உதவியை அழைக்க வேண்டும் அடுத்த ஊர்களாகிய காளப்பன்பட்டி, குமரம்பட்டி, போத்தம்பட்டிஆகிய ஊர்களுக்கும் முன் ஏற்பாடுகள்செய்து உடன்பாடுகள் ஏற்பட்டது. அதன்படி அவர்கள் தங்கள், தங்கள் ஊர்களில்எல்லோரும் ஆயுதபாணிகளாக இருக்கவேண்டும். பெருங்காமநல்லூரில் என்ன நடக்கிறது என்ற விவரத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும் பெருங்காமநல்லூர் மக்களுக்கு ஆபத்தான நிலை ஏற்படுமானல் படாங்குவேட்டு சப்தம் கிளப்பப்படும். அதுபோது எல்லோரும் பெருங்காமநல்லூருக்கு விரைந்து வந்து ஆபத்திற்கு உதவ வேண்டும் என்பதாகும்.

இப்படியாக வரும் போது சம்பவத்தின் முன் இரவு கள்ளர்கள் சர்க்காரின் முடிவான திட்டம் தெரிந்து கொண்டார்கள் அதன்படி திருமங்கலத்தில் இருந்து போலீஸ்படை



ஆயுதங்களுடன் வருவதாகவும் பெருங்காமநல்லூர் கள்ளர்களைக் கட்டி வைத்து ரேகைப்பதிவு செய்யப் போவதாகவும் அந்தப் படையானது திருமங்கலத்தில் இருந்து நடையாக வந்து நள்ளிரவில் தும்மகுண்டில் தங்கி சூரிய உதயத்திற்கு முன்பு பெருங்காமநல்லூரை வந்து வளைத்துக் கொள்ளும் என்றும்? உசிலம்பட்டியில் இருந்து டிப்டிக்கலெக்டரும் மாசிஸ்ட்ரேட்டும் கன்னியம்பட்டி வழியாக வந்து விடியு முன்பு பெருங்காமநல்லூர் போலீஸ்படையுடன் தொடர்பு கொள்ளும் என்றும் தெரிந்து கொண்டார்கள்.

இதை எல்லாம் கேள்விப்பட்ட கிராமக்கள் துடி துடித்துப் பொங்கி எழுந்தனர். வீரஇளைஞர்கள் சினங்கொண்டு ஆரவாரித்தனர். விட்டி பெருமாள்த்தேவர் சிலம்பக் கலைஞர்களை ஒன்று திரட்டி படையுடன் மோதும் வகைக்கு தயார் செய்தார். போலீஸ் பயல்கள் நம்மைத் தாக்குவான் களேயானல், மண்டித் தாக்கிப்பிடித்துக் கொண்டுபோய் அவன்களைக் காத்தாண்டம்மனுக்குப் பலி கொடுத்து விட வேண்டும் என்று வீரச் சபதம் கூறினர்.

பொதுவாக எல்லா மக்களும் எடுத்தமுடிவு ரேகைப் பதிவை ஒப்புக்கொள்ளக் கூடாது. மீறிப் பலவந்தப்படுத்திஞல் உயிருள்ள மட்டும் போரிட்டு மடிந்தாலும் மடிவோம். மானம் இழந்து உயிர் வாழக் கூடாது. என்பதாகும். என்னே! இந்தச் சுதந்திர வீரமக்களின் மாசற்ற தன்மான உணர்ச்சி.

2-4-1920ந் தேதி இரவோடு இரவாகப் பிரயாணக் செய்து அதிகாலை 4-30மணி அளவில் போலீஸ்படை ஆயுதபாணிகளாய் பெருங்காமநல்லூரைச் சுற்றி வளைத்தும் கொண்டு யாரும் ஊரைவிட்டு வெளியேருவண்ணம் பந்தோபஸ்து மேற்கொண்டது. விடிந்த பிறகு உசிலம்பட்டியிலிருந்து வந்த ரெவின்யூ அதிகாரிகள் மந்தையில் அமர்ந்தனர். காலை 6-மணிக்குத் தண்டோரா மூலம் ஜனங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. வயது வந்த ஆண்கள் யாவரும் ஊர் ந்மதையில் அதிகாரிகளிடம் கைரேகைப் பதிவு செய்து

கொள்ளவேண்டும் அதுவரை யாரும் ஊரைவிட்டு வெளியே போகக்கூடாது. தவறினால் கைது பண்ணி ஜெயிலில் கொண்டுபோய் அடைத்து நடவடிக்கை எடுக்கப்படும். இது சர்க்கார் உத்தரவு என்பதாகப் பறைசாட்டப்பட்டதைக் கேட்டவுடன் எங்கும் பரபரப்பு ஏற்பட்டது.

கிராமத்தார்கள் ஆண் பெண் அடங்கலாக எல்லோரும் ஊர் மந்தையை நோக்கி விரைந்துவந்து கூடி கடுங்கோபம் கொண்டவர்களாய், அதிகாரிகள் கூட்டத்தை நோக்கிக் கூக்குரலிட்டனர். என்ன நடக்குமோவென்ற பயங்கரத் தோற்றம் கூட்டத்தில் காணப்பட்டது. கூட்டத்திலிருந்த பெரிய மனிதர்கள் ஜனங்களை அமைதியாக இருக்கும்படி கட்டுப்படுத்தினார்கள். முக்கியமான பெரிய மனிதர்களும் அதிகாரிகளும் நேருக்கு நேர் நின்று அமைதியாகப் பேசத் துவங்கினார்கள். சர்க்கார் தரப்பிலிருந்து அதிகாரிகளின் சார்பில் அரசு ஆணையைப் பற்றிய விவரத்தை எடுத்து அதிகாரி ஒருவர் விளக்கினார், கைரேகைச் சட்டம் நிறைவேற்ற வந்திருக்கும் அதிகாரிகள். தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறாது. எல்லோரும் சர்க்கார் உத்திரவுக்குக் கீழ்ப் படிந்து பதிவு செய்து கொள்ளுங்கள் என்றார்.

சர்க்கார் சட்டத்திற்குப் பணிய வேண்டியது குடிகள் கடமை. காட்டு மிராண்டி சர்க்கார் கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கும் மூளையில்லாத அடக்குமுறைச் சட்டத்தை எதிர்க்க வேண்டியதும் குடிகளின் உரிமையோடு கூடிய கடமை என்று குடிகளின் சார்பில் பேசிய தலைவர் பதில் உரைத்தார். மேலும் அதிகாரிகளையும் கண்டித்துப் பேசினார் அடக்கு முறையில் சட்டம் பிறப்பித்து எங்கள் வகுப்பாரை அடிமைப்படுத்தப் பார்க்கிறது அரசு; நீங்களும் உங்கள் ஏகாதிபத்திய வெறிபிடித்த வெள்ளையர் அரசும், அழியுங் காலம் தூரத்தில் இல்லை என்றும் பெருமிதமாகப் பேசினார். நாங்கள் நிரபராதிகள், பட்டாதார்கள், களவுத்தொழில் செய்யாதவர்கள் இந்தப் பிராந்தியத்தில் வாழும் சகோதர சமூகத்தினர்களுக்குப் பாதுகாவலர்கள்; தோழர்கள்,



உங்கள் அரசு பிறப்பித்திருக்கும் சட்டம் கண் மூடித்தனமானது. எங்கள் நாட்டின்பால் பற்றுதல் கொண்ட தேசிய உணர்ச்சியை ஒடுக்குவதற்கு முற்படுகிறது வெள்ளையர் சர்க்கார். எது எப்படியாயினும் மக்கள் சார்பில் சொல்லுகிறேன்; எங்கள் உயிர் உள்ள மட்டும் ரேகைப்பதிவு செய்து கை எழுத்துப்போட ஒப்புக்கொள்ள மாட்டோம். எங்கள் ஊரைவிட்டு வெளியேறுங்கள் என்று கூறித் தனது அங்க வஸ்திரத்தை எடுத்து வெள்ளைவீச்சு வீசினார்.

இப்படியாகப் பேசிக் கொண்டிருந்த சமயம், கிராமத்தைச் சுற்றிலும் வளைத்து முற்றுகை போட்டுக் கொண்டிருந்த ஆயுதப்போலீஸ் படை கிராமத்தின் மந்தையை நோக்கி ''மார்ச் பண்ணி'' மக்கள் கூட்டத்தை வந்து வளைத்தது. உடனே பெருங்கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. பேரிரைச்சல் வானைப் பிளந்தது. இளைஞர்கள் வீடுகளுக்குப் போய் ஆயுதம் தாங்கினர். குழந்தை குட்டிகள் எல்லாம் கூக்குரலிட்டனர். பயங்கரநிலை ஏற்பட்டது.

அதிகாரிகள் பெரிய மனிதர்கள் பலரை தங்களுடன் வைத்துக் கொண்டு, அமைதியை உண்டு பண்ணும்வண்ணம் ஓர் இருவர்களையாவது பதிவு செய்யவும் முயன்றனர். தலைவர்களிடம் நயவஞ்சகமாகப் பேசி சமாதானப்படுத்த எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை. இதற்குள் கூட்டத்தில் அரிவாள், வேல், கம்பு, கடப்பாறை முதலிய ஆயுதங்கள் தென்பட்டன. எந்த நிலைமையையும் சமாளிக்கக் கிராமத்தார்கள் நடவடிக்கை எடுப்பதைக்கண்ட போலீஸ் அதிகாரி; சர்க்கார் அதிகாரிகளைக் கிராமத்தின் வெளிப்புறம் கிழக்குத் திசைக்கு அழைத்துக் கொண்டு சென்றான். அப்போது மணி ஏழு இருக்கும். முக்கியஸ்தர்கள் மாத்திரம் அதிகாரிகளின் கும்பலைத் தொடர்ந்தனர். அங்கும் பேச்சு வார்த்தை தொடர்ந்தது.

ரேகைப் பதிவு மரணத்தைக் காட்டிலும் மோசமானது. மாண்புமிக்க எங்கள் குலத்தின் மானத்தைப் பாதிக்கக்



RangaRakes
tamilnavarasam.com

கூடியது. பலாத்காரம் செய்து கைது பண்ணுவீர்களேயானால் மானத்தைக்காக்கும் தன் மானப்போர் நடக்கும் என்று மக்கள் சொல்லிவிட்டார்கள். சிறிது நேரத்திற்குள் அதிகாரிகளும் பெரிய மனிதர்களும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்குக் கூட்டம் வந்து வளைத்து நின்றது. அப்போது மணி எட்டு இருக்கும். மக்கள் யாவரும் ஆயுதங்கள்வைத்திருந்தார்கள் கூட்டத்தைப் பின்வாங்கிப்போகும்படிபோலீசார் எச்சரித்தனர். ஆரவாரம் செய்து கோசமிட்டது!

போலீசார் அதிகாரிகளை மேலும் கொஞ்சதூரம் ஊருக்கு வெளியில் பின்காட்டச் செய்து அங்கு அதிகாரிகளைப் ப து காக்கும் டுபாருட்டு அரைச்சந்திர வட்டத்தில் யோலீஸ் வியூகம் அமைத்து அதற்குள் நிறுத்தினர். ஒரு பகுதி போலீஸ்படை, பின் தொடர்ந்து வரும் கூட்டம் அதிகாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு வராவண்ணம் தடுத்தனர். அது சமயம் சிறு மோதுதல் ஏற்பட்டது. அதுசமயம் மணிஎட்டரையிருக்கும். மோதல் ஏற்படவே மந்தையிலிருந்து படாங்கு வேட்டு கிளப்பப்பட்டது. வெடிச்சத்தம் கேட்டவுடன், முன்னேற்பாட்டின்படி தயார் நிலையிலிருந்த பக்கத்துக் கிராமங்களின் ஜனங்கள் ஆயுதபாணிகளாய்ப் பாய்ந்தோடி வந்து, பெருங்காமநல்லூரில் கிராம மக்களும் அதிகாரிகளும் மோதிக் கொண்டிருக்கும் களத்தையடைந்தனர்.

இந்த இடம் ஊருக்குக் கிழக்கில் 250 கஜ தூரத்தில் இருந்தது. ஆரம்பத்தில் சுமார் 750 பேர்கள் அடங்கிய கூட்டம் இப்போது 3000க்கும் மேலாக உயர்ந்தது. கட்டுக்கடங்காத நிலை ஏற்படவே அதிகாரிகள் கலக்கம் அடைந்தனர். கூட்டத்தினர்கள், கல் கவண், வில், வாள், வேல், கத்தி, ஈட்டி, கம்பு, வளைதடி, முதலிய ஆயுதங்கள் வைத்திருந்தனர்.

விட்டி பெருமாத்தேவனும், மல்லர்கள் பலரும் அதிகாரிகள் நிற்கும் இடத்தை அணுகினர். விட்டிபெருமாள் போலீஸ் தலைவனைப் பார்த்து, "அடாத காரியம் செய்து



மக்களை அடிமைப்படுத்த வந்த பயல்களே, ஊரைவிட்டுப் போங்கடா இல்லையேல் உங்களை வெட்டிக் காத்தாண்டம்மனுக்குப் பலி கொடுத்து விடுவோம்" என்று துச்சமாகப் பேசினான்.

கட்டுக் கடங்காத கூட்டம், திரண்டு, திரண்டு, நாலா பக்கமும் ஓடவும், ஆடவும், சிலம்பம் சுற்றவும், சீட்டி அடிக்கவும் ஆக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தது. அப்போது மணி ஒன்பதிருக்கும் காலை வெயில் கொழுத்தியது. செந்தூசி எங்கும் கிளம்பியது. இது சமயம் போலீசார்கள் மக்கள்மேல் பாய்ந்து தாக்குவதற்கு ஆன ரிக்கார்டுகளைத் தயார் செய்து கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்குத் துணிந்து கொண்டிந்த சமயம்.

போலீஸ் அணி கூட்டத்தில் கிராம அதிகாரிகள் கிராமத்து மக்களை அடையாளம் காட்டும்படி சொல்லிக் கொண்டு மக்கள் சிலரை விலங்கிடுவதற்குப்பிடித்தனர். அது தான் சமயம் அடே அப்பா—மக்கள் பதறிப் போலீஸார் மேல் பாய்ந்து ஆட்களைப் பிடித்த திசையில் கூக்குரலிட்டுக் கொண்டு பிடிக்காதே, பிடிக்காதே என்று திரண்டனர் இது சமயம் மணி ஒன்பதரையிருக்கும் போலீஸார் சுட்டது இடி முழக்கம் போல் சப்தம் கேட்டது. யாரும் அடிபடவில்லை. குண்டுகள் ஆகாயத்தை நோக்கியது : சுட்ட போலீசைச் சும்மாவிடவில்லை இளைஞர்கள் ; ஆயுதங்களுடன் போலீஸ் வரிசையில் நுழைந்து முன்னும் பின்னும் நல்லபடியாகத் தாக்கினர். கணநேரம் விட்டிருந்தால் காக்கித் தொப்பிகள் கதி என்ன ஆகியிருக்குமோ போலீஸ் பாதுகாப்பு அணிக்குள் நின்று கொண்டிருந்த உசிலம்பட்டி டிபுட்டித் தாசில்தார் ஜான் அன்பு நாடார் இரண்டு ரவுண்டுகள் கூட்டத்தை நோக்கிச் சுடும்படி ஆணை பிறப்பித்தார்.

களத்தில் அதிகமானவர்கள் குண்டுக்கிரையாகி விழவில்லை என்பதைக் குறித்துக் கோபங்கொண்டு; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜுப்பிள்ளை; போலீஸ் படைத் தலைமையைத் தானே ஜார்ஜண்டு, கீட்ஸ், ஜமேதார் சீதாராம்தாஸ் அவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டு; போலீஸார்களை

RangaRakes
tamilnavarasam.com

நோக்கி, ஓடும் கூட்டத்தினர்களைப் பின் தொடர்ந்து தாக்கும்படி ''கமாண்டு செய்தான்'' அத்துடன் ராஜூப்பிள்ளையும், சப் இன்ஸ்பெக்டர் சீனிவாச நாயுடுவும் தாங்கள் முன் கோபங்கொண்டிருந்தவர்களை குறிபார்த்துச் சுட்டுத் தள்ளிய, சர்வசண்டாளத்தனத்தையும் செய்தனர். போலீஸ் படையையும்; போலீஸ் படையின் அதிகாரிகளையும் ராஜூப் பிள்ளை கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினன். சரியானபடி சூட்டிங் நிறைவேற்றவில்லை என்று கண்டித்தான்.

இதிலிருந்து ராஜூப்பிள்ளையின் ஈனத்தனம் எவ்வளவு துரோகத்தனம் வாய்ந்தது என்பது தெரியலாகிறதல்லவா? ஆயுதப் படையில் ஈவு இரக்கமும் தேசாபிமானமும் உடையவர்கள் இருந்திருந்தமையும் வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது. மக்கள் மீது குண்டுத் தாக்குதல் செய்தவர்கள் 60 பேர்கள். இவர்களை இரண்டு ரவுண்டுகள் சுடும்படி ஆணையிடப்பட்டது. அப்படியே அவர்கள் குண்டுகளையும் காலி செய்திருக்கிறூர்கள். ஆனல் குண்டுகள் யாவும் ஆகாயத்தில் சென்றிருக்கின்றன. எல்லாக் குண்டுகளும் ஜனக் கூட்டத்தில் திருப்பப் பட்டிருக்குமாஞல் ஆயிரத்திற்கும் மேலாக மக்கள் மாண்டிருப்பார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் பெரும் புகைமண்டலம் உண்டாகியது. கூட்டம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடியது. மாமன்னர்கள் வழித்தோன்றிய மாவீரர்கள் அன்னியர் ஆட்சியை எதிர்த்து அடிமைச் சட்டத்தை மீறி உயிரைத் துரும்பாய் மதித்து களத்தில் வீழ்ந்து வீர சொர்க்கம் அடைந்தனர்.

களத்தில் சூட்டிங்குக்குப் பிறகு நடக்க வேண்டிய சடங்குகள், சட்டதிட்டப்படி ரிக்கார்டு செய்யும் வேலைகள் பிரேதங்கள் சேகரித்தல் முதலிய வேலைகள் நடந்தன.

அதன்படி மாண்ட மாவீரர்கள், வீராங்கனையின் விபரம்

1. சிவனண்டித் தேவர் மகன் மாயாண்டித் தேவர் பட்டப்பெயர் நொத்தினி மாயாண்டித்தேவர் வயது 35 வலது மார்பிலும் வயிற்றிலும் குண்டுகள் பாய்ந்து ஊடுருவிய காயங்கள் ,ஈரலும் குடல்களும் வெளியில் தென்பட்டன.



2. சின்னத்தேவன் மகன் குள்ளன் பெரியகருப்பன்.

3. சடையத்தேவன் மகன் விருமாண்டித்தேவர்.

4. காட்டுப் பெரியகருப்பத்தேவர் மகன் சிவன் காளைத் தேவர்.

5. ஆங்கன் சின்னன்டித் தேவர் மகன் பெரியாண்டித் தேவர்.

6. பூசாரி சடையத்தேவர் மகன் ஓவாயன் என்ற முத்து கருப்பன் வயது 42 நெஞ்சிலும் வயிற்றிலும் பல குண்டுக் காயங்கள் கருமாத்தூர் ஆண்டரசன் கூட்டத்தைச் சேர்ந்த ஐந்து பங்காளிகள் வகையைச் சேர்ந்தவர்.

7. பெருமாத்தேவர் மகன் மோளைச் சின்னத்தேவர் வயது 50 சூட்டிங் முடிந்த பிறகு; ஏட்டு காளிமுத்து சேர்வை துரத்திச் சென்று, சுட்டுத் தள்ளி வீழ்த்திப் பயனட்டு ஈட்டியில் பல தடவை குத்தினன். மோளைச் சின்னத் தேவர் ரேகைப் பதிவு சட்டம் செய்வதை எதிர்த்துப் பிரசாரம் செய்தவர். சிந்துபட்டியில் வைத்துகாளிமுத்து சேர்வையான ஏட்டுவோடு வாதாடி வாய்ச் சண்டை போட்டவர் ஏட்டு சேர்வை தனிப்பட்ட முறையில் மோளையத் தேவரிடம் முன் விரோதங்கொண்டவன் இது சமயம் வஞ்சம் தீர்த்துக் கொண்டான்.

8. கொள்ளிச்சூரியன் மாயத்தேவர் மகன் மாயாண்டி தேவர் விலாவில் குண்டுக்காயம், தும்மக்குண்டு நாடு பண்ணியான் பங்காளி கூட்டம்.

9. சுப்பத்தேவர் மகன் முனியாண்டி என்ற மாயாண்டி தேவர் வயது 50 வயிறு, நொப்புள், நெஞ்சு ஆகிய இடங்களில் குண்டுக்காயங்கள் மகாதாட்டியமுடையவர் தேகதிடம் படைத்த ஆசானுபாகு ராஜதோற்றமுடையவர் சி.டி. ஆக்ட் எதிர்ப்பில் ஈடுபட்டவர் அரசாங்கஅதிகாரிகளை

RangaRakes
tamilnavarasam.com

துச்சமாக மதித்துப் பேசி, போங்கடா பயல்களா பிழைக்க வழியில்லாவிட்டால், ஆடு மாடுகள் வளர்த்துப் பிழைங் கடா, நீங்கள் வயிறு வளர்க்க எங்களை ஏண்டா ரேகைபதிய சொல்லுகிறீர்கள் என்று திடம் பேசிச் சட்டத்தை எதிர்த்த வர், ராஜுப்பிள்ளை குறி பார்த்துச் சுட்டுத் தள்ளி பிரேதத் தின் மீது ஏறி நின்று மிதித்தான்.

10. கெண்டியன் என்ற பெருமாள் மகன் உடையார் தேவர் வயது 35 மண்டை நொறுங்கிவிட்டது. கண்விழிகள் இரண்டும் வெளியில் எகிறிப் போய் விட்டது. வெகு நேரம் உயிர் போகவில்லை காளிமுத்து சேர்வை ஏட்டு பைனட்டால் பல தடவைகள் குத்திப் பக்கத்துக் கிணற்றுத் தண்ணீருக் குள் தள்ளி விட்டான். மானூத்துச் சித்தராயன் கூட்டத் சேர்ந்தவர்.

11. உடையார்தேவர் மகன் சின்னமாயத்தேவர் வயது 3̄ நெஞ்சில் குண்டுகாயம்.

12. தெய்வயானை மாயாண்டித்தேவர் மகன் பெரிய கருப்பத்தேவர் நெஞ்சிலும் வலது துடையிலும் குண்டுச் காயங்கள்.

13. தோல் நல்லுத்தேவர் மகன் வீரணத்தேவர் நெஞ் சில் குண்டுச்காயம் வயிற்றில் குத்துக்காயம்.

14. நடயநேரி பெரியமாயத்தேவர் மகள் மாயக்காள் வயது 45 காளப்பன்பட்டி. அடிவயிற்றிலும் மார்பிலும் குண்டுக்காயம் உடம்பின் பலபாகங்களிலும் மர்மஸ்தானத் திலும் குத்துக்காயங்கள், கலகம் நடந்து கொண்டிருந்த போது கூடையில் கற்களைக் கொண்டு வந்து கவண் வீசுபவர் களுக்குக் கொடுத்த பணியில் ஈடுபட்டாள் குடிதண்ணீர்க் குடம் யுத்தகளத்திற்குள் கொண்டுவந்து காயம் அடைந்த வர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தபோது சண்டை முடிந்த பிறகுதான் வீராச்சாமி நாயுடு சுட்டுத் தள்ளினன். இரண்டு போலீஸ்காரன்கள் குத்தித்தள்ளித் தூக்கி எறிந்த னர்.



15. பஞ்சாண்டி உடையார்த்தேவர் மகன் முத்தையாத் தேவர் வயது 45. தொண்டை குண்டடிபட்டுச் சிதறியது.

16. கெண்டியான் பெரிய கருப்பத்தேவர் மகன் வீரத் தேவர்.

17. மாயழகுத்தேவர் மகன் மாயாண்டித்தேவர் நெஞ் சில் துப்பாக்கி குண்டு பாய்ந்து காயம். இவர் கருமாத்தூர் சின்னங்கி உடையாத்தேவர்வகையரா. தும்மக்குண்டு நாடு.

பிரிட்டிஷ் ஆட்சியில் சிந்துபட்டி போலீஸ் சப் இன்ஸ் பெக்டர் மீது லஞ்சக்கேஸ் தொடுத்து அவர் டிஸ்மிஸ் ஆகும் படி கோர்ட்டில் கேஸ் போட்டு ஜெயிததவர். பாதிக்கப் பட்ட சப் இன்ஸ்பெக்டர் மோதிச் சுட்டுந் தள்ளினன். பெரிய நிலச்சுவான்தாராகும்'

இந்த நபர், இன்று 80-82 சட்டமன்றத்தில் பார்வர்டு பிளாக் கட்சியின் உறுப்பினராக இருந்து வரும் ஆண்டித் தேவர் எம்.எல்.ஏ. அவர்களின் தகப்பனர் வழி தாத்தா என்பது குறிப்பிடத்தக்கது.

அதே இடத்தில் கைது செய்து விலங்கிடப்பட்டிருந்த 28 பேர்களையும் ஜெயிலில் அடைத்துக் கொண்டு இன்னும் இதரர்களையும் சேர்த்து 65 பேர்கள் மீது சர்க்கார வழக்குத் தொடர்ந்தது. வழக்கில் சிந்துபட்டி, திருமங்கலம் ஆகிய சரகத்துப் போலீஸ் அதிகாரிக்கு வேண்டாதவர்கள். குற்ற பரம்பரைச் சட்டத்தை எதிர்த்தவர்கள் தேசிய காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவை நாடிய கள்ளர் தலைவர்கள் சேர்க்க பட்டனர். இறுதியில் 30 நபர்கள் தண்டிக்கப்பட்டனர்.

சூட்டிங் ஆன தினம் மத்தியானத்திற்கு மேல் போலீஸ் படையினரில் சிலர் கள்ளர்களின் வீடுகளில்புகுந்து கொள்ளை யிட்டனர். இந்தக் கொள்ளை சிந்துபட்டி போலீஸ்காரர்கள் செய்தவர்கள். போலீஸ் படை ஒரு வாரம் கிராமத்தில் தங் கியிருந்த போது மக்கள் சொத்துக்கும் சுதந்திரத்திற்கும் பங்கம் ஏற்பட்டது.

கைரேகை எதிர்ப்புக் கமிட்டியில் 5வது லக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் கொடையன் பூசாரித்தேவர். நாட்டில் ஒரு பெரிய தர்மவான் அது காரணமாகவே இவர் குடும்பத்தார்களுக்கு கொடையன் என்பது பட்டம்.

சூட்டிங் கேசில் கொடையன் பூசாரித்தேவரை அரசின் முதல் எதிரியாகப் போட்டு போலீஸ் கேஸ் தொடுத்தது இதனால் இவர் குடும்பத்திற்குப் பெருத்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டது.

சுடுபட்டு மாண்டவர்களின் ஜாபிதாவில் 6வது லக்கத்தில் கண்டிருப்பது. பூசாரி சடையத்தேவர் மகன் ஒவாயன் என்ற முத்துக்கருப்பத்தேவர்.

இந்த இரண்டு பேர்களும் ரேகைப்பதிவு நடவடிக்கைகள் ஆரம்ப காலமுதல் சூட்டிங் நாள் வரை கள்ளர் சாதியின் மீது புகுத்தப்படும் கைரேகைச் சட்டம் செல்லாது: கள்ளர் சாதியார் நல்ல நிலச்சுவான்தார்கள் என்று வாதிட்டு வந்தனர். அதன் பலனாய் ஒருவர் இறந்தார். மற்றவர் பாதிக்கப்பட்டார். இந்த இரண்டு பேரும் ஒரேகுடும்ப சகோதரர்கள்.

இவர்களின் மகன் வழிப்பேரன் திரு. K.R நடராஜன் B.A: BL, இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகப் பதவி வகித்துவருகிறார்.

பெருங்காமநல்லூர் சூட்டிங்கில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இன்று 100க்கும் மேலான பட்டப்படிப்புடைய இளம் தலைமுறையினர் தோன்றியுள்ளனர். இவர்களில், பலர் பெரும் அரசுப் பொறுப்புப் பதவிகள் வகித்து வருவது கண்டு மனமகிழ்வேற்படுகிறது.

80—81ஆம் ஆண்டு வைகை நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் பெருங்காம நெல்லூர் நோக்கிப் பிளான் எடுத்துக் கொண்டிருக்கும் விவரம் தெரிந்து மகிழ்ச்சி ஏற்படுகிறது.



நீர்ப்பாசன அபிவிருத்தியின் அவசியம் அதி முதல் அரசின் கவனத்தில் இருந்தும் பூர்த்தி செய்யாத நிலையை இந் நூலின் முதல் பதிப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பெருங்காமநல்லூர் துப்பாக்கிக் கலகம் நடந்து, ஆயுத போலீசார் 17 பேர்களைக் கொன்று குவித்த காலம் அரசில் வேலை பார்த்து வந்து, கொலைக்குப் பாத்தியப் பட்டவர்கள் என்று மக்களால் தீர்ப்புக் கூறப்பட்ட அதிகார வர்க்கம் :—

1. ஜில்லாக் கலெக்டர் H.C.T. Reilly (ரீலி)
2. முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட், (ரேகை கலெக்டர் K.S· ஸ்ரீனிவாச ஆச்சார்யார்,
3. உசிலம்பட்டி டிவிஷன் டிப்டிக் கலெக்டர்: நாராயண சாமி நாயுடு
4. உசிலம்பட்டி சப் மாஜிஸ்ட்ரேட், ஜான் அன்பு நாடார்
5. திருமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜுப் பிள்ளை
6. சிந்துபட்டி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வீராசாமி நாயுடு
7. திருமங்கலம் கள்ளர் ரிக்கிள மேஷன் ஸ்பெசல் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீனிவாசநாயுடு.
6. சிந்துபட்டி ஹெட்கான்ஸ்டேபிள் காளிமுத்து சேர்வை.
9. ஆயுதப் போலீஸ்படை சீதாராம ராஜ்ஜெமேதார்
10. ஆயுதப் போலீஸ் சார் ஜண்டு கீட்ஸ்
11· ஆயுதப் படைவீரர்கள் 60 பேர்கள்.

பெருங்காமநல்லூர் படுகொலைக்குப் பிறகு நாட்டில் ஒரு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. ஆணவம் பிடித்த போலீஸ்காரர்கள் நாட்டு மக்களை பயமுறுத்தினர். யாரும்

RangaRakes tamilnavarasam.com

ரேகைப் பதிவு செய்து கொடுக்க மறுத்தால் சுட்டுத் தள்ளுவோம் என்று [பயமுறுத்தவே மக்கள் பயந்தனர். இந்தப் பாவிப்பயல் சர்க்காரில் நியாயம் கேட்கலாமா. இவர்கள் சத்தியத்திற்கும் பாவத்திற்கும் பயந்தவர்களா? காந்தி மகானையும் இன்னும் அவர் போன்ற பெரிய தலைவர்களையும் ஜெயிலில் அடைத்துத் தண்டிக்கும் வெறிப்பயல்கள் நம்மை சும்மாவா விடுவார்கள் என்று கண்டு கொண்டனர். அநியாயமாக அழிந்து போகாமல் உயிரைக் காப்பாற்றி வாழ்ந்து இந்தக் கொள்ளைக் கூட்டத்தையும் அரசையும் அழிக்க வேண்டும் என்று உறுதி பூண்டனர். அடக்கு முறை கொலை செய்யும் அளவுக்கு வளரவே வீரர்களும் கோழைகளாக வேண்டியதேற்பட்டது. மரண வாயிலில் மண்டியிடுவதைக் காட்டிலும் உயிர் வாழும் நிலையைப் பெரிதாகப் பாமரமக்கள் எண்ண வேண்டியதேற்பட்டது. ஆயுத பலத்திற்கு முன்னால், ஆள்பலம் அடிமைப்பட்டது. இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, ரேகைக் கலெக்டர் கைரேகைப் பதிவு வேலையைத் துரிதமாக நிறைவேற்றவே 19.11.1920க்குள் 20896 பேர்களைப் பதிவு செய்து சர்க்காருக்குத் தெரியப் படுத்த முடிந்தது.

மதுரை ஜில்லாவில் மக்களுக்கும் போலீஸ் படைக்கும் உள்நாட்டுப் போர் என்ற தலைப்பில் அரசின் கொடிய செயல்களைக் கண்டித்துக் காங்கிரஸ் தலைவர்களும் தேவமார் சமூகப் பிரமுகர்களும் கண்டனக்குரல் எழுப்பினர். தேச பக்தர் ஜார்ஜ்ஜோசப் நாடெங்கிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அரசின் அடாத செயலைக் கண்டித்துக் கூட்டங்களில் பேசினார். காங்கிரஸ் தொண்டர்கள் கள்ளர் நாட்டில் பிரவேசித்துக் குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கொடிய நிபந்தனைகளையும் அவைகள் பிற்காலச் சந்ததியினர்களுக்கும் நாட்டிற்கும் எவ்வளவு ஆபத்து என்பதையும் விளக்கினார்கள். மக்கள்; அரசை எதிர்க்கவேண்டும் என்றும் சட்டத்தை வாபஸ் செய்யப் பாடுபடவேண்டும் என்றும் எடுத்துக்காட்டி விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணினார்கள்.



''ஆயிரம் உண்டிங்கு சாதி—எனில்
அன்னியர் வந்துபுகல் என்ன நீதி'' எனவும்
''செப்புமொழி பதினெட்டுடையாள்—எனினும்

சிந்தனை ஒன்றுடையாள்'' எனவும் பாரதி பாடிய பாடல்கள் மூலமும்

''காட்டை அழிக்க முடியும்—அலை
கடலைத் தூர்க்கவும் முடியும்
மேட்டை அகழ்த்த முடியும்—விரி
விண்ணை அளக்கவும் முடியும்—உரிமை
எண்ணத்தை ஒடுக்குதல் எவ்வாறு முடியும்''

எனும் பாரதிதாசன் பாட்டின் பொருளையும் பாமர மக்கள் நெஞ்சில் விதைத்தனர், காங்கிரசாரும் பிரமலைக் கள்ளர் வகுப்பில் பிறந்து வந்த பீடுடைய மறவர்களும் அவ்வுணர்ச்சித் தீயில் ஆங்கில அரசு வசமாகச் சிக்கிக் கொண்டது.

எனினும் அடக்குமுறைச் சட்டத்தின் பிரயோகத்திற்கும், துப்பாக்கிச் சூட்டிற்கும் பணிந்தனரே தவிர, விடுதலையடையவேண்டும் என்ற விவேகத்தை உள்ளத்தில் பதின் மடங்கு அதிகமாக வைத்திருந்தனர்.

சென்னை அரசும் பெருங்காமநல்லூர் கொலைக்குப் பிராயச்சித்தம் செய்யாவிட்டால், அரசு நடவடிக்கைகள் நாட்டில் பயங்கர விளைவுகளை உண்டு பண்ணக்கூடும் என்று எண்ணினர், அரசியல் கட்சிக்காரர்களின் வழியில் கள்ளர்கள் இறங்கி விடாமல் தடுப்பதற்கும் அதுகாலை ஒரு உபாயம் செய்ய வேண்டியது அரசின் உடனடித் தேவையாய் இருந்தது.

எனவே மதுரை கலெக்டர் போலீஸ் சூப்பிரெண்டென்டின் சமூக சீர்திருத்தத திட்டத்தின் மீது செய்திருந்த 24—2—1920 தேதிய சிபாரிசை அங்கீகாரம் செய்து பிரமலை நாட்டில் பிரமலைக் கள்ளர்கள் சமூக சீர்திருத்தம் அமுல் நடத்த சமூக சீர்திருத்தத் திட்டம் அமுலாகியுள்ள நிலையைப் பற்றிக் கவனிப்போம்.

RangaRakes
tamilnavarasam.com

## கள்ளர் சமூக சீர்திருத்தத் திட்டம்

பிரமலைக் கள்ளர் சமூக அபிவிருத்தி அதிகாரியாக 6-11-20-இல் A. K. ராஜாஐயர் அவர்களை அரசு நியமனம் செய்தது. அவர் சமூக அபிவிருத்திப் பணியுடன், குற்றப் பரம்பரைச் சட்டப் பிரயோகப் பணியையும் சேர்த்து அமுல் நடத்த வேணடும். காரியாலயம் மதுரையில் இருந்தது. குற்றபரம்பரைச் சட்டப் பிரயோகத்திற்குப் போலீஸ் சிப்பந்திகளும், சமூக அபிவிருத்திப் பணிக்கு வெவ்வேறு சிப்பந்திகளும் பொறுப்பேற்க வேண்டியதிருந்தாலும், இருதிறத்தார்களுக்கும் அலுவலகம் ஒன்று ஆகவே ராஜாஐயர் போலீஸ வேலையையும் சீர்திருத்த வேலையையும் சேர்த்து நிர்வாகம் செய்ய வேண்டியதாயிற்று. ராஜா அய்யர் அவர்கள் ஜில்லாப் போலீஸ் அதிகாரியின் அந்தஸ்துடையவர் ஆகவேதான் அரசு ஒரு போலீஸ் அதிகாரியைச் சமூக சீர்திருத்தப் பொறுப்பிற்கு நியமித்தது.

ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட், ஒரு டெபுடித் தாசில்தார், ஒரு தாசில்தார், இரண்டு ரிவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஆகிய ரிவின்யூ அதிகாரிகளும்; ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள், பதினொன்று ஏட்டுகள். 63 கான்ஸ்டேபிள்கள் ஆகிய போலீஸ் அதிகாரிகளும்; இன்னும் சில இதர அதிகாரிகளும் இருந்து வேலை செய்ய அரசு தீர்மானம் செய்தது. அதன் படியாகத் தனது காரியாலயத்தை மதுரையில் வைத்துத் துவங்கினார்.

புதிதாக உதயமாகியிருக்கும் பிரமலைக்கள்ளர் சமூக சீர்திருத்த இலாகாவிற்குப் பெரிதும் ஆதரவாகயிருக்க வேண்டும் என்று தனது நிர்வாகத்தில் உள்ள எல்லா இலாகாக்களின் தலைமை அதிகாரிகளுக்கும் மதுரை ஜில்லாக் கலெக்டர் உத்திரவு பிறப்பித்தார். தானும் மிகவும் அக்கரையோடு சீர்திருத்த வேலைகளைக் கவனித்து வந்தார். ராஜா அய்யர் அவர்களையும் அவர்களின் அலுவல்கலையும் பற்றி அறிமுகம் செய்து, ஜில்லா பூராவுக்கும், முக்கியமாகப் பிரமலைக்கள்ளர்கள் வாழ்ந்து வரும் சீமைகளுக்கும் விபரமாக விளம்பரம் செய்யப்பட்டது. முதன் முதலில் ராஜா அய்யர் கள்ளர் நாடு பூராவிற்கும் சுற்றுப் பிரயாணம்



செய்து கள்ளர் மக்கள் யாவரையும் நேரில் சந்தித்தார். அது காலை சர்க்கார் அதிகாரிகள் ராஜா அய்யர் அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்து கள்ளர்கள் ஆபிஸரைச் சந்திக்கும்படியான கூட்டங்கள் கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். இப்படியாகக் கூடிய கூட்டங்களில் கள்ளர் நாட்டுப்பெரிய வீட்டுக்காரர்கள் ஆபீஸரை நேரில் சந்தித்து அவர்களுடன் மனம்விட்டுப் பேசிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

வறண்ட பிரதேசத்தில் பொருளாதாரக்குறைவுள்ள எளியமக்கள் வாழ்வதும் அவர்களில் வசதி படைத்த பெரிய வீட்டுக்காரர்களும் அதிகமான வசதியுடன் விவசாயம் செய்து வருவதும் தெரிய வந்தது. கள்ளர்கள் தெய்வ பக்தியுடையவர்கள் தங்கள் குலதெய்வ வழிபாட்டில் சத்தியம் தவற மாட்டார்கள். சாதிக்கட்டுப்பாட்டை மீறவே மாட்டார்கள் என்பதை எல்லாம் கண்டு வியந்த ராஜா அய்யர் மனதை கள்ளர்களின் நாட்டுப் பஞ்சாயத்து முறை மிகவும் கவர்ந்தது.

கள்ளர் நாட்டின் உத்தேச ஜனகணிதம், வேலைத் திட்ட கேந்திரங்கள், தயார் செய்து கொண்டு அதிகாரிகள் பெரும்பாலும் கிராமங்களில் தங்கியிருந்து பணி புரியத்திட்டமிடப் பட்டது. எனவே டிபார்ட்மெண்டார்கள் மேற்கொள்ள வேண்டிய திட்டம் வகுத்து நிறைவேற்றப்பட்டது அதன் படி:—

(1) கல்வி: (Mass Education) இலவச ஆரம்பக்கல்வி கட்டாயம்: கட்டாய ஆரம்பக் கல்வியின் அமுல்திட்டப் பிரகாரம் 5 வயது முதல் 12 வயது வரையான ஆண் பெண் குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பப் படாவிட்டால் பெற்றோர்கள் தண்டிக்கப்படுவர். தேவைக்கேற்ப எல்லா இடங்களிலும் பள்ளிகள் திறப்பது. முக்கிய கேந்திரங்களில் அன்ன சாலைகள் திறந்து உணவு, உடை உறைவிடம் இனமாக வழங்குதல்: அன்னசாலைகளில்: தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் பிள்ளைகளுக்கு விசேஷச் சலுகையும் முதலில்

RangaRakes
tamilnavarasam.com

இடம் வழங்குவது. ஆரம்பப் பள்ளிகளில் படித்துத் தேறி வரும் பிள்ளைகளுக்குப் படிப்படியாக உயர்தரக் கல்வி வசதியும் உணவு உறைவிடம் முதல் எல்லா இலவசப் படிப்பு வசதிகளும்: தேவைக்கேற்ப வயது வந்த முதியோர்களுக்கு இரவுப் பள்ளிகள் மூலம் எழுத்தறிவித்தல். சாரணப் பயிற்சிக்குப் பள்ளிகளில் விசேஷ வசதி ஏற்படுத்துதல்.

(2) கைத்தொழில்: குடிசைத்தொழில்கள், மத்திய கிராமங்களில் ஆரம்பித்து அங்கு தொழில் கற்றுக்கொள்ளும் காலங்களில் சம்பளம் கிடைக்கும்படியாகச் செய்து தொழில் கல்வி புகட்டுதல். இதன்மூலம் வேலையற்ற இளைஞர்களுக்கும்; மேல்படிப்புக்குப் போக முடியாத வாலிபர்களுக்கும் புகலிடமளித்தல்.

(3) விவசாயம்: விவசாயத்தொழில் செய்துகொண்டிருக்கும் மக்களுக்கு அரசு உதவி கிடைக்கும்படிக்கு இணைப்பு வேலைகள் செய்தல்: தக்காவித்திட்டம், மக்களுக்கு, கிடைக்கும்படிக்குச் செய்யவும் தற்காஸ்து விதிகள் திருத்தம் செய்தல்: நவீன விவசாய முறை பயிற்றுவித்தல்.

4. போக்குவரத்து வசதிகள் :— முன்னேற்றப் பாதையில் மக்கள் அபிவிருத்தியானது இவர்களின் தொடர்பு ஏனைய பிரதேசங்களுக்கு ரஸ்த்தா மார்க்கங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய இணைப்புப் பாதைகள் அமைத்தல்.

5. பிரவிருத்தியின் காரணமாக மக்கள் வாழ்வுக்குப் பெரிதும் அனுகூலமாகத் தோன்றும் இடங்களுக்குக் குடியேற்றுவித்தல்.

6. கிராமப் பஞ்சாயத்து முறை :— திட்டம் நிறைவேற்றும் வகைக்குத் திருத்தியமைத்து அமுல் நடத்துவது.

7. வேலைத்திட்டம் :— செயல்முறைப் பிரசித்தம்—விளம்பரம்



8. பட்ஜெட் :— நிர்வாக அமைப்புச் செயல் வகைச் செலவு நிதி—அரசை அணுகிப் பெறல்.

உடனடியாக முதல் ஆண்டில் ஆரம்பப் பாடசாலைகள் ஆண் பிள்ளைகளுக்கு 148 பெண் பிள்ளைகளுக்கு 16 ஆக 164 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களின் மேற்பார்வையை தாலுகா போர்டும் கிறிஸ்துவமிஷன் ஸ்தாபனங்களும் முறையே ஏற்றன. சாரணப்படைப் பயிற்சி எல்லாப்பள்ளிகளிலும் இடம் பெற்றன. உசிலம்பட்டியிலும் கீழ்க்குடியிலும் சாரணப்பயிற்சி முகாம்கள் தோற்றுவிக்கப்பட்டு தக்கபடி பயிற்சியளிக்கப்பட்டது. அதுகாலை சென்னைக்கு விஜயம் செய்த வேல்ஸ் இளவரசருக்கு மரியாதை செய்விக்க நடைபெற்ற சாரணப் பெருந்திருவிழாவுக்கு மதுரை ஜில்லாவிலிருந்து கள்ளர் சாரணர்க்குழு சென்று பங்கெடுத்துக்கொண்டது.

சமுதாய அபிவிருத்திப் பணிகள் துவங்கிக் கொண்டிருந்த ராஜா அய்யர் கள்ளர் நாட்டின் கிராமங்களில் முகாம் செய்துகொண்டு தேவமார்கள் தலைவர்களையும் பெரிய வீட்டுக்காரர்களையும் உதவிக்கு வைத்துக் கொண்டு; குற்றப் பரம்பரைச் சட்டப் பிரயோகம்; சமுதாய அபிவிருத்தித் திட்ட அமுல் ஆகிய வேலைகளைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார். அரசியல் கொந்தளிப்பு நாட்டில் ஏற்பட்டு வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடுக்கம் கொண்டிருந்த காலம். காங்கிரஸ் பிரமுகர் ஜோசப் கள்ளர் நாட்டில் தேசியத் தொண்டர்களுடன் பிரவேசித்துக் குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். சாத்தங்குடி சூசை வாத்தியார் உட்பட தேவர் தலைவர்கள் பலர் ஜார்ஜ் ஜோசபைச் சேர்ந்து நின்று ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோசமிட்டனர். குற்றபரம்பரைச் சட்டப்பிரயோகம் செய்யாதே என்று குரல் எழுப்பினர்.

கள்ளர் நாட்டில் தேவமார்கள் தலைமையில் பொறுப்பு கட்டி துவக்கப்படும் வேலைகள் தவிர வேறு எதுவும் நிறை

RangaRakes tamilnavarasam.com

வேற்ற முடியாது என்ற விபரம் ராஜா அய்யருக்குத் தெரிய வந்தது. கள்ளர்கள் தங்கள் தலைவர்களுக்குக் கட்டுப்படும் இயல்புடையவர்கள்; தங்கள் குலதெய்வத்தின் சத்தியத்தை மீருதவர்கள் என்பதைத் தெளிவாகக் கண்டு கொண்டார். எனவே கள்ளர் நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் சாதிப் பஞ்சாயத்து முறைக்குப் புத்துயிர் கொடுத்துச் சர்க்கார்த் திட்டம் பஞ்சாயத்து மூலம் செயலாற்ற முடிவு செய்தார். 1920 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் ஏற்பட்ட செலவினங்கள் ரூ 17567—14—6 எனத் தெரிகிறது.

1921—ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகள் துவங்கின கள்ளர் சமூக அபிவிருத்தி அதிகாரிக்கு அரசு விசேஷ அதிகாரங்கள் கொடுத்திருந்தது. ஜில்லா மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் கள்ளர் சமூக அபிவிருத்திக்கான வேலைகளை நிறைவேற்றும் பொது அதிகாரிகள் யாவரும் பெரிதும் ஒத்துழைக்குமாறு சுற்றறிக்கை விட்டிருந்தது.

## கள்ளர் பஞ்சாயத்து:

கள்ளர் சமூக அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து நிர்வாகம் அமைக்கப்பட்டது. ஒரு பஞ்சாயத்தில் ஐந்து பேர்கள் மெம்பர்கள். ஒருவர் தலைவர். சம்பந்தப்பட்ட கிராமத்தில் முக்கியமானவர்கள் படித்தவர்கள் பஞ்சாயத்தில் இடம் பெற்றனர். சமுதாய அபிவிருத்தி; குற்ற பரம்பரைச் சட்டபிரயோகம், ஆகியவைகளில் அமுல் நடத்தும் பொறுப்பில் கள்ளர் பஞ்சாயத்தார்களுக்கு கைரேகைச் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. பஞ்சாயத்தார்கள் போலீஸ் அதிகாரிகளுக்கும், இதர சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஆலோசகர்களாக விளங்கினர். பஞ்சாயத்து நிர்வாக வகைக்குச் சட்டதிட்டங்கள் வகுத்து அவைகள் அரசு அங்கீகாரம் பெற்றிருந்தன. ரிக்கார்டுகள் ரிஜிஸ்தர்கள் அரசின் ஆணைப்படி ஏற்படுத்தப்பட்டன பஞ்சாயத்து நிர்வாகச் சட்டங்கள் அரசு தன்னிஷ்டம் போல் செய்து விடவில்லை.



அதுகாலை கள்ளர் நாட்டில் பெரும் தளகர்த்தர்களாக விளங்கிய (1) கீழூர் சீனிப்பெருமாள்தேவர், காராமணி கலியாணித்தேவர், செல்லம்பட்டி பூசாரி தவசித்தேவர், கம்பம் ராமசாமித்தேவர், வலையப்பட்டி சின்னசாமித்தேவர், ஒத்தப்பட்டி ஒச்சாத்தேவர் ஆகியவர்களின் ஆலோசனைப்படி சட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பட செய்தனர்.

சற்றேறக் குறைய 1000 கிராமங்களில் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக 5000 பேர்கள் இடம் பெற்றனர். பஞ்சாயத்து நிர்வாகத்தில் இடம் பெற்றவர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றவும் மக்களுக்குச் சேவை செய்யவும் சந்தர்ப்பம்கிடைக்கவே இவர்கள் அரசு அதிகாரிகளுக்கு பெரிதும் ஒத்துழைத்தனர். ஆரம்பத்தில் இருந்த விரோத மனப்பான்மை மாறியது.

கிராமப் பஞ்சாயத்தார்கள் நல்லபடியாகப் பொது மக்களுக்கு அறிமுகம் ஆகும்படிக்கு தனது நிர்வாகத் திறமையால் ராஜா அய்யர் நடவடிக்கை எடுக்கவும் பிரசித்தம் செய்யவும் முற்பட்டார். அரசு அதிகாரத்தில் இடம்பெற்று அதிகாரிகளுடன் மரியாதையுடன் பஞ்சாயத்தார்கள் பழகி வந்தபடியால் மக்கள் பஞ்சாயத்தார்களிடம் நம்பிக்கையாக நடந்தனர். பிரமலைநாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகள், சமூகப் பிணக்குகள், கொடுக்கல் வாங்கலில் ஏற்படும் தகராறுகள் முதலான விவகாரங்கள் கள்ளர் பஞ்சாயத்தாரால் பைசல் செய்யபபட்டதனூல், அதற்கு அரசு அங்கீகாரம் கொடுத்தது. கள்ளர் பஞ்சாயத்தார்கள் சாதிக் கட்டுப்பாட்டின்படி விவகாரங்கள் தீர்ப்பு செய்வதில் வல்லவர்கள். இவர்கள் நீதி நிர்வாகத்திறன் நீதிமன்றங்களால் கூடம் பெரிதும் பாராட்டுப் பெற்றிருக்கின்றன.

அபிவிருத்திப் பணிபுரியும் அதிகாரிகள்: சர்க்கார் மக்களுக்குச் செய்யும் சகாயம், தர்காஸ்து வழங்குதல், தக்காவிடன் கொடுத்தல், தொழில் கொடுத்தல், கல்வி வசதி



RangaRakes
tamilnavarasam.com

செய்தல் போன்ற காரியங்களைப் பஞ்சாயத்தார்களின் சிபாரிசின் பேரிலேயே செய்தனர். குற்ற பரம்பரைச்சட்டம் பிரயோகிப்பதிலும் கைரேகைப்பதிவு செய்வதிலும் போலீசார் பஞ்சாயத்து ஆலோசனையின்றி எதுவும் ஆரம்பத்தில் செய்ததில்லை. கள்ளர் நாட்டில் போலீஸ் ஒற்றர்கள் கூட நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய தகவல்கள் பஞ்சாயத்தார்கள் மூலம் பெற்று வந்தனர். போலீஸ் பட்டா புஸ்தகமும் பஞ்சாயத்துத் தலைவரின் பொறுப்பில் இருந்து வந்தது.

போலீசார்களின் உத்திரவுக்குக் கீழ்படியாமலும் அவர்கள் மனம்போல் நடக்காவிட்டாலும் பஞ்சாயத்து அதிகாரம் கிராமத்தில் இருந்து வாபஸ் பெறப்பட்டு பஞ்சாயத்தார்களையும் மக்களையும் போலீசார் இம்சிக்கவும் பஞ்சாயத்துச் சட்டத்தில் இடமிருந்தது. இந்தச் சரத்து மிகவும் மோசமாகச் சில சமயங்களில் கையாளப்பட்டு மக்களுக்கு இம்சை கொடுத்த விதம் பிறிதோர் இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

## ஐந்தாண்டுகளில் அபிவிருத்திப் பணிகளின் சாதனைகள்:

பிரமலைக்கள்ளர் சமூக சீர்திருத்த அபிவிருத்திப் பணியின் விஷேச அதிகாரியாக 1920 ஆம் வருஷம் பொறுப்பேற்ற ராவ்பகதூர் ராஜாஅய்யர் அவர்கள்; பதவி உயர்வு பெற்று 1925ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் வெளிப் போந்த நிமித்தம், அந்தப் பதவிக்கு திரு K.P. ஜெனார்தன ராவ் அவர்கள் நியமனமானார்கள். இவரும் ஜில்லாப் போலீஸ் அதிகாரி அந்தஸ்துடையவரே.

கள்ளர் சமூகசீர்திருத்தப் பணிகள் 1920 ஆம் ஆண்டில் துவக்கப் பட்டதென்றாலும் சரிவர வேலைகள் ஆரம்பிக்கப் பட்டது 1922-ஆம் ஆண்டு என்றுதான் சொல்ல வேண்டும். ராஜா அய்யர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அபிவிருத்திப் பணிகளும் கைரேகைச் சட்ட அமுலும் திறம்பட வேலைகள்



செய்த காலமாகும். எனவே இந்த ஐந்தாண்டுக் காலங்களில் நிகழ்ந்த வேலைகளின் விவரங்களைக் கவனிப்போம்.

கைரேகைப் பதிவு/-போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கள்ளர் நாட்டில் 1916 ஆம் ஆண்டிலிருந்து ரேகைப் பதிவு வேலை செய்து வந்தார்கள். அதன்படி 19-11-1920 முடிய ரேகைச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டவர்கள் 20896 பேர்கள். குற்றப்பரம்பரைச் சட்டத்துடன் சமூகசீர்திருத்த திட்டமும் சேர்த்து அமுல் நடத்தும் வேலைகள் துவங்கியது 1921ல். வயது வந்தவர்களைப் பதிவு செய்யும் வேலை மிகவும் சிரமமானதொன்றாகவேயிருந்து வந்தது. இந்த வேலைகளைச் செய்யும் அதிகாரம் கிராமப் பஞ்சாயத்தார்களின் மேற்பார்வையில் வந்த பிறகு பஞ்சாயத்தார்கள் பதிவு செய்வதற்கு உதவி செய்தார்கள்.

மக்கள் பஞ்சாயத்தார்களின் மேல் இருந்த அபிமானத்தால் அவர்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தார்கள். நாளடைவில் ரேகைப்பதிவு வேலைகள் சுலபமாக இருந்தன. பஞ்சாயத்தார்களின் உதவியுடன் 1922 ஆம் வருஷம் முடிய ரேகைப்பதிவு செய்யப்பட்டவர்கள் 5014. 1923ல் ரேகைப் பதிவு வேலை மிகவும் சுலபமாக நடந்தது. இதற்குக் காரணம் போலீஸ் அதிகாரம் குறைந்து பஞ்சாயத்தார்கள் ஒத்துழைப்பு ஏற்பட்டதுதான் காரணம் என்று சொல்லலாம் எனவே 1925 ஆம் ஆண்டு முடியப் பதிவானவர்கள் 6720 பேர்கள் ஆரம்பத்திலிருந்து மொத்தம் பதிவானவர்கள் 27166.

பதிவானவர்களின் நடமாட்டம்: நடமாட்டப் பதிவு ஓலை வழங்கும் அதிகாரம் பஞ்சாயத்தைப் பொறுத்ததாகும். முக்கியமாகப் பஞ்சாயத்துத் தலைவர் நடமாட்ட ஓலையில் கையொப்பமிட வேண்டும். இவ்வோலைக்கு ராதாரி சீட்டு என்று பெயர். வழங்கப்பட்ட சீட்டின் அடிக்கட்டை பஞ்சாயத்திலிருக்கும்.

ராதாரிச்சீட்டுப் பெற்றுக்கொண்ட நபர் செல்லுமிடம் தாமதிக்கும் இடங்கள், திரும்பி சொந்த இருப்பிடம் வந்து

RangaRakes tamilnavarasam.com

சேரும் தேதி முதலியவைகள் அச்சீட்டில் பதிவாகியிருக்கும்-பதிவானபடி நடக்காவிட்டாலோ போனவிடங்களில் குற்றம் செய்ததாக ஏற்பட்டாலோ பஞ்சாயத்தார்களோ போலீசாரோ நடவடிக்கை எடுப்பார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டால் 10-1B ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்டு சதாவும் போலீஸ் கண்காணிக்கும்படியாக ஏற்படும். ராதாரிச் சீட்டு வழங்குவது மாத்திரமல்லாமல் கிராமத்து மக்களின் கார்டியனுகப் பஞ்சாயத்தார்கள் இருந்து வந்தார்கள். குற்றவாளிகளைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் தவறவில்லை.

1925 ஆம் வருஷம் முடிய அமைக்கப்பட்ட சர்க்கார் நிர்வாகப் பஞ்சாயத்துக்கள் மதுரை ஜில்லாவில் 970; இராமநாதபுரம் ஜில்லாவில் 64; ஆக 1034 பஞ்சாயத்துக்கள் நிர்வாகப் பொறுப்பேற்று வேலைகள் செய்து வந்தன. ராதாரிச் சீட்டுக்களின் மூலம் கண்காணிப்பு முறை வெகு திறமையாக நடைபெற்றன ஊதியமின்றி கௌரவத்தினிமித்தம் பணிபுரிந்த பஞ்சாயத்தார்களின் சேவை நாட்டில் நல்லபலன் கண்டது. ராதாரிச் சீட்டின் நடமாட்டக் கட்டுபாட்டை நிர்வகித்த வழியில் கீழ்கண்ட புள்ளி விவரங்கள் காண்க.

| வருஷங்கள்:— | 1923 | 1924 | 1925 |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட ராதாரிச் சீட்டுகளின் மீது ரிப்போர்ட்டானவை | 12925 | 13718 | 14809 |
| போலீஸ் பரிசீலனையில் பின் ரிஜிஸ்தரான கேஸ்கள் | 3049 | 4059 | 1635 |
| புலன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டவை | 120 | | |
| குற்றவாளிகள் எனக் கண்டறிந்து தண்டிக்கப்பட்டவை | 53 | 42 | 33 |

மேலே கண்ட புள்ளி விவரங்கள் 1926 ஆம் ஆண்டின் மதுரை ஜில்லா போலீஸ் டிபார்ட்மெண்டின் வருஷாந்திர



அறிக்கையில் இருந்து எடுத்ததாகும் 15000 பேர்களை போலீஸ் கண்காணித்து ஓர் ஆண்டில் குற்றவாளிகளாய் ருசுப்படுத்தப்பட்டவர் 33 பேர்களாகும்.

இதிலும் போலீஸ் அடிதண்டமாகப் போட்டு நிரூபிக்கபட்ட பொய் கேஸ்கள் எத்தனையோ? அதிலும் இவர்கள் செய்த குற்றங்கள் எத்தனை சிறியதோ? பகுத்தறிவு கொண்டு பார்ப்போமானுல் தேவர் பரம்பரைக்குக் குற்ற பரம்பரை பட்டம் சூட்டியது வடிகட்டின முட்டாள்தனம் என்பது பட்டவர்த்தனம். இதற்கு, மேலே காட்டியுள்ள போலீஸ் இலாகாவின் அறிக்கையே சாட்சியாக விளங்குகிறது.

கல்வி:— 1915 ஆம் ஆண்டின் முடிவில் மதுரை ஜில்லாவில் 313இராமநாதபுரம் ஜில்லாவில் 8 ஆக 321 கள்ளர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளில் பெண் பிள்ளைகளுக்கென 4 பள்ளிகள் அன்னசாலைகள் பல ஏற்படுத்தி, 328 மாணவர்களுக்கும் 115 மாணவிகளுக்கும் இலவச உறைவிட உணவு வசதிகள் செய்யப்பட்டன, பள்ளி மாணவர்களுக்கு சாரண பயிற்சி அளிப்பதற்கு 32 சாரண அணிகள் நிறுவலாகியது. சமூக சீர்திருத்தப்பணிகள் ஆரம்பமாவதற்கு முன் பிரமலை நாட்டில் 100 பேர்கள் வரை 5 வகுப்பு வரை படித்த இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களை ஒன்று சேர்த்து ஓய்வு நேரப் பயிற்சிப் படிப்புக் கொடுத்து தக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அவர்கள்எல்லோரும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களாகவும் போலீஸ் சவான்களாகவும் வேலையில் அமர்த்த முடிந்தது. இந்த வகைக்கான செலவுக்காக மதுரைகலெக்டர் அவர்களால் ரூபாய் 5208--3—0 சீர்திருத்த இலாகாவிற்கு மான்யமாகக் கொடுக்கப்பட்டது.

விளம்பரம்:— நாட்டில் அபிவிருத்திப் பணிகளைப் பிரசித்தம் செய்வதை முக்கியமாகக் கொண்டு ''பிரமலைச் சீர்திருத்தன்'' என்ற பத்திரிகை ஒன்று 1923ல் தோற்றுவிக்கபட்டது. அமெரிக்கன் பாதிரியான திருமங்கலம், L.L. வார்பீர் அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வந்தார்.

RangaRakes
tamilnavarasam.com

17—1—1925ல் உசிலம்பட்டியிலும் 14.10.1925ல் திருமங்கலத்திலுமாக இரண்டு கிராமாந்திரப் போட்டி பந்தயங்கள் நடத்தப்பட்டன. நாட்டில் எல்லோரும் வந்து திரண்டனர். ஆயிரக்கணக்கானோர் போட்டியில் கலந்து கொண்டனர். உசிலம்பட்டியில் நடந்த பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்குச் சன்மானங்கள் வழங்கியது Hon. K. சீனிவாச அய்யங்கார் அவர்களாகும். அவர் அது சமயம் சென்னை கவர்னரின் நிர்வாகக் கவுன்சில் அங்கத்தினராகவிருந்தார். அது சமயம் அவர் ஆற்றிய உரையில் ''எனக்குக் கள்ளர் சமூக மக்களைப் பற்றி நன்கு தெரியும். மானமரியாதை உடையவர்கள்; முன்னாள் அரசபரம்பரையினர். இச்சமூகத்தில் பாப்பர் விண்ணப்பம்கொடுத்தவர்களை நான் கண்டறிந்ததில்லை. இவர்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டிற்குப் போகாமல் வசூலித்து வருவது தெரிய வருகிறது'' எனக்குறிப்பிட்டார்.

திருமங்கலம் தா லுகா போர்டார்களும் பல்வேறுகிறிஸ்தவ ஸ்தாபனங்களும்கள்ளர்சமூக அபிவிருத்தியில் அக்கறை காட்டிப் பள்ளிக்கூடங்களின் மேற்பார்வையை கவனித்து வந்தன.

## தொழிற்பயிற்சி

திருமங்கலம், சாத்தங்குடி, சிந்துபட்டி, பூசலப்புரம், உசிலம்பட்டி, கீழக்குடி, செக்கான் ஊரணி, புளியங்குளம், கம்பம் ஆகிய இடங்களில் கிராமக் கைத்தொழில் கேந்திரங்கள் அமைக்கப்பட்டன. கள்ளர் இளைஞர்கள் கிராமக் கைத்தொழில் கற்றுக் கொள்வதையே முக்கிய நோக்கமாகவும் வேலை வாய்ப்புக் கொடுக்கவுமாகவே இந்தக் கேந்திரங்கள் விளங்கின. நெசவு, தச்சுவேலை, தையல்வேலை, பாய்முடைதல், பித்தளைபாத்திரங்கள் செய்தல் கயிறு திரித்தல் கூடைமுடைதல் போன்ற தொழில்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன. தொழில் படித்து வரும் காலத்தில் ஊதியமும் வழங்கப்பட்டன.



தொழில்களுக்கு மூலப்பொருள்கள் வாங்குவதற்கு மான்யமாகச் சர்க்கார் ரூபாய் 12146—0—1 வழங்கியது. ஆசிரியர்களுக்குச் சம்பளமாக ரூபாய் 2667—10—9 ஆகக் கிடைத்த தொகையை வைத்து பயிற்சிகள் நடைபெற்றன.

விவசாயம்:— இரண்டு ஜில்லாக்களிலுமாக 3013 ஏக்கரா நிலம் ஏழைகளுக்கு தர்காஸ்தாகக் கொடுத்து பட்டா வழங்கப்பட்டது. அத்துடன் தக்காவிக் கடன்கள் மாடுகள் வாங்கவும் கிணறுகள் வெட்டவும் கடன்கள் கொடுக்கப்பட்டன.

கூட்டுறவு:— கூட்டுறவுகளின் வசதியைப் பிரமலைநாட்டில் சுலபமாக்குவதன் நிமித்தம் கள்ளர் சமூக அபிவிருத்தி ஆபீசருக்குக் கூட்டுறவு சங்கங்களின் உதவிப் பதிவாளர் அந்தஸ்தை அரசு வழங்கியது. ஆய்வாளர்கள் ஏழு பேர்கள் சங்கங்களின் வேலைகளை மேற்பார்வை செய்து வந்தனர். 215 கூட்டுறவு சங்கங்கள் லேவாதேவி செய்து வந்தன. அத்துடன் கீழக்குடி, உசிலம்பட்டி, உத்தமபுரம் ஆகிய இடங்களில் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் வேலை செய்து வந்தன. இந்த வகையில் இதுவரை 50,000 ரூபாய் செலவிடப்பட்டன.

கள்ளர் காமன் பண்டு — பிரமலைத் தேவமார் சமூகத்தின் பொதுவான நிதி ஒன்று தேவை என்பதைச் சமூகப் பிரமுகர்கள் உணர்ந்தனர். இந்த நிதியானது தேவமார்களின் சுயாதீன உரிமை பெற்றிருக்க வேண்டுமென்பதும் அவர்கள் நோக்கம். ஆகவே 1922ல் ''கள்ளர் பொதுநிதி'' திரட்டப்பட்டது. ஆரம்பத்தில் தலைக்கட்டு வரியாக வீட்டுக்கு ஒரு ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டது. அதன் படியாக கூடுதல் ரூபாய் 13786—120 கிடைத்தது. 1924ல் கள்ளர் காமன்பண்டு நிதிக்கமிட்டி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு அதன் காப்பாளர்களாகப் பன்னிரெண்டு பேர்கள் நிர்வாகஸ்தர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.

பிற்பட்ட மக்கள் புனர்வாழ்விற்கென இயங்கிவந்த

RangaRakes tamilnavarasam.com

லேபர் கமிஷன் ஸ்தாபனம், பிரமலைக்கள்ளர் சமூக அபிவிருத்திப் பணிசெய்யும் இலாகாவின் வேலைகளை அங்கீகாரம் செய்தது. எனவே எல்லாச் செலவினங்களையும் ஏற்று பட்ஜெட்டும் ஒதுக்கப்பட்டது. அதன்படி 1921ம்வருஷம் டிசம்பர் மாதம் முடிவு காலத்திற்கு லேபர் கமிஷனர் கிராண்ட்டு ரூ 2644-6-9 பிரமலைக்கள்ளர் சமூக அபிவிருத்தி இலாகாவிற்கு வழங்கினார்.

பிரமலைக் கள்ளர் சமூக அபிவிருத்தி அதிகாரி, ராவ்பகதூர் A K ராஜா ஐயர் அவர்கள் 1920 ஆம் ஆண்டிற்கான தனது இலாகாவின் ஆண்டு அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பிக்கும்போது தனது அபிப்பிராயங்களையும் எழுதியுள்ளார். அவைகளிலிருந்து சிலவற்றைக் காண்போம்.

''பிரமலைக்கள்ளர் சாதியார்கள் யாவரும் குற்ற பரம்பரையினர் என்று அரசு பிரகடனப்படுத்தியிருப்பதைக் கண்டு வெஞ்சினம் கொள்கிறார்கள். அரசை வெறுக்கிறார்கள். ஒரு நாட்டின் அரசு இப்படியாக பெரியதொரு அநீதியை மக்கள் மீது சுமத்தலாமா? என்றுகொதிப்படைகிறார்கள். மனத்துணிவுடன் எதிர்க்கவும் அஞ்சவில்லை. எந்த அளவுக்கு என்று பார்த்தால் ரேகைப்பதிவு சாதியார் யாவர்க்கும் என்று பிரகடனப்படுத்தி வேலை துவங்கிய முதல் நாளிலேயே பெருங்காமநல்லூரில் எதிர்க்குரல் எழுப்பினர். படுகொலை செய்து 16 பேர்களைக் கொன்று குவித்து ஆயிரக்கணக்கானவர்களைக் காயப்படுத்தி அரசும் மக்களும் கோர்ட்டில் வாதியும் பிரதிவாதியுமாக நிற்க வேண்டியதேற்பட்டது.

சட்டப்பிரயோகம் செய்த அரசையும், அரசு அதிகாரிகளையும் தங்களின் எதிரிகளாகப் பாவித்தனர் என்று சொன்னால் மிகையாகாது. இதற்கு என்ன உதாரணம் என்றால் இவர்கள் சாதியில் மிகவும் செல்வாக்குள்ளவரான கீழச் சீனிப்பெருமாள்த் தேவர் என்பவரைப் போலீஸ் இலாகாவிற்கு உதவினார் என்ற காரணத்திற்காகக் கொலை செய்துவிட்டார்கள். இதை எல்லாம் பார்க்கும் போது கள்ளர்கள்



தங்கள் சாதியின் மேல் நன் மதிப்புக் கொண்டவர்கள். தன்மான உணர்வு மிக்கவர்கள். வீரர்கள், தங்களைத் திருடர் என்று சொல்வதை கேட்ட மாத்திரத்தில் எத்தனை தியாகம் செய்தும், ஏன்? உயிரைத் துரும்பாய் மதித்து எதிர்க்கின்றனர். இந்த நிலையில் ராஜதந்திர முறைகளைக் கையாண்டு பிரச்சார பலத்தால் மனதை மாற்றி நம்பிக்கையூட்டி அரசுப் போக்கை அனுசரிக்கும்படி செய்ய வேண்டியதேற்பட்டது.

1920ல் துவங்கி 1921ல் அஸ்திவாரமிடப்பட்ட கள்ளர் சமூக அபிவிருத்திப் பணிகளை மதுரை ஜில்லா கலெக்டர் நேரில் கண்டறிய முடிந்தது. பிரமலை நாட்டில் நடந்த ஜல்லிக்கட்டுகள் போட்டிப் பந்தயங்களைப் பார்வையிடும் சந்தர்ப்பமும் கலெக்டருக்கு ஏற்பட்டது. எனவே அய்யர் அவர்களின் வருஷாந்திர அறிக்கையை அரசுக்கு அனுப்பும் போது எடுத்துக்காட்டி விளக்கிய விஷயங்கள் பல. அதில் அய்யர் அவர்களின் வேலையைப் பற்றி எழுதும் ஓர் இடத்தில் கலெக்டர் சொல்கிறார். Mr. லவ்லக் தயாரித்த திட்டம் ராஜா அய்யர் அவர்களால் நிறைவேற்றப்படுகிறது என்றாலும் அய்யர் நிறைவேற்றிய அளவுக்கு அவர் கௌரவிக்கப்படவேண்டும்'' என்றார்.

1921 ஆம் ஆண்டு அரசின் கவனம் கள்ளர் சீர்திருத்த வேலைகளின் மேல் சிரத்தை காட்டத்தொடங்கியது. 1921 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் சென்னை மாகாண லேபர் கமிஷனர் Mr. மூயர் பிரமலை நாட்டை பார்வையிட்டதின் பலனாய் அபிவிருத்திப் பணிகளுக்கு 1622—23 பட்ஜட்டாக 1155/Misc Law (general) dt 5-3-22 ரூ.1,06 லட்சம் வழங்கினார். அதுபோலவே மதுரை ஜில்லாக் கலெக்டர் ரூபாய் 50,000 தனது யுக்தானுசார நிதியிலிருந்து ஒதுக்கினார். திட்டப்படி வேலைகள் எல்லா முனைகளிலும் செயல்பட்டன. நல்லதொரு திருப்பமேற்பட்டது. லேபர் கமிஷனரின் அபிவிருத்திப் பொறுப்பு நிரந்தமாக்கப்பட்டது, எனவே 1923 ஆம் ஆண்டு நிரந்தர வேலைகளுக்கு

RangaRakes
tamilnavarasam.com

ரூ. 1,23,000யும்; கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடனுதவி செய்ய 50,000 ஒதுக்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டுக்கு பட்ஜெட்டாக ரூ 1,76,000மும் கூட்டுறவுக்கு ரூ 1,60,000 ஒதுக்கப்பட்டது. வெகுவாக வேலைகள் விரிவடைந்து வரும் தன்மையை அனுசரித்து லேபர் கமிஷனர் பட்ஜெட்டுக்கு ரூ 1,00, 500 ஆகவும் கூட்டுறவுத் தொகை ரூ. 1,50000 யும் விஸ்தரிக்கச் செய்தார். நாட்டில் எதிர்நோக்கியுள்ள வேலைகளுக்கு நிதித்தடங்கல் இல்லாமல் தேவைக்கேற்ற வாறு சர்க்கார் அனுமதி கிடைத்து வந்தமையால் வருஷா வருஷம் அபிவிருத்திப் பணிகள் பெருகின.

போக்குவரத்து ரோடு வசதிகள்;— பிரமலை நாட்டில் ஊடுருவிச் செல்லும் ஒற்றையடிப் பாதைகள் யாவும் பக்கத்து முக்கிய ரஸ்தாக்களில் தொடர்பு கொள்ளும் வண்டிப் பாதைகளாக அமைக்கப்பட்டன. உசிலம்பட்டி அணைப்பட்டி மார்க்கமாய் நிலக்கோட்டை ரோடு உத்தப்பநாயக்கனூர் சோழவந்தான் ரோடு, கருமாத்தூர் பண்ணிக் குண்டு ரோடு ஆகியவைகள் உடனடியாக விருத்தி செய்யப்பட்டன நாளடைவில் போக்குவரத்து மார்க்கங்கள் வெகுவாக விருத்தியாயின.

வெளியிடங்களுக்கு மக்களை பிறவிருத்தியின் காரணமாகக் குடியேற்றம் செய்தல் எனச் சர்க்கார் திட்டமிட்டிருப்பதும், அதிகக் கவனம் செலுத்த வேண்டியதேற்படவில்லை. அரசு நினைத்தபடி மக்கள் நாடோடிகள் அல்ல என்பதும் தெரிய வந்தது. முன்காலங்களில் பஞ்சம் காரணமாக புகலிடம் தேடி வெளிப்போந்தனர் என்பது வரலாறு. ஆனால் அப்போது மக்கள் தங்கள் காடு பூமிகளை விட்டு வெளியிடங்கள் செல்லத் தயாரில்லை எனத் தெரிந்தது. மக்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என அபிவிருத்தி ஆபிசர் மிகவும் பிரயத்தனம் எடுத்தது தெரிய வருகிறது. இதுகாலை கனம் ராஜா அய்யர் அவர்களுக்குப் புலப்படாத விவரம் ஒன்றும் தெரிய வந்தது. அதாவது தான் காரியாலயம் அமைத்திருக்கும் மதுரைமாநாரில் கள்ளர்கள்



எந்த தெருவில் வாழ்ந்து வருகிறார்கள் எனவிசாரித்தபோது கள்ளர்கள் யாரும் மதுரையில் இல்லை என்பதை உணர்ந்தார்.

அதிகமான கள்ளர் மக்கள் மதுரை ஜில்லாவின் பூர்வீக குடிகளுமாயிருந்தும் ஜில்லாத் தலைநகரில் கள்ளர் வீடு ஒன்று கூட இல்லை என்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டதுண்டு அதற்குக் காரணமும் அவருக்குத் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம். 1921 ஆம் ஆண்டில் ஜன கணிதப்படி பார்த்தாலும் முனிசிபல் நகரில் யாருமிருந்ததாகத் தெரியவில்லை. இது விவரம் நேர்முகப் பெரியவர்களிடம் விசாரித்ததிலும் கள்ளர்கள் யாரும் நகரில் குடியிருக்கவில்லை என்பது செவி வழிச் செய்தி வாயிலாகத் தெரிய வருகிறது

கனம் ராஜா அய்யர்அவர்கள் பிரமலைக் கள்ளர்களை வெளியிடங்களுக்குக் குடியேற செய்யவில்லையாயினும், மதுரை முனிசிபல் நகரில் கள்ளர்மக்கள் குடியேறும்படியாக செய்தார்கள். மதுரை பஞ்சாலை ரயில்வே, அரசு காரியாலயங்கள் ஆகியவைகளில் நியமனமாகும்படியாகத் தனது செல்வாக்கை உபயோகித்தார்கள். அதிலிருந்து நாளடைவில் பெருவாரியாக குடியேறி நல்லபடியாக வாழ்ந்து வருகிறார்கள். அதிலும் பலர் உயரிய உத்யோகஸ்தர்களாகவும் நவீன வசதியுள்ள இன்று செந்தமிழ்த் தலைநகராம் மதுரையில் செல்வச் செழிப்புடனும், சீர்மலிந்த வனமனைகளை வாழ்க்கையில் உடையவராய் வாழ்ந்து வருகிறார்கள் ஆயிரத்திற்கு மேற்பட்ட பேராற்றல் மிக்க பிரமலைக் கள்ளர்கள்

மதுரை நகரில் கள்ளர்கள் யாரும் 1921ம் ஆண்டுக்கு முன் குடியிருக்கவில்லை. ஆனால் தமிழ்மன்னர்கள் காலத்தில் மதுரையைக் கட்டிக் காத்ததும் கள்ளர்களே. தமிழ் மன்னர்கள் காலத்திற்குப் பின் தமிழ் நாட்டில் நாட்டங்கொண்ட வேற்றரசுகள் எல்லாருமே மதுரையில்தான் மையங்கொண்டனர். மகமதியர், மைசூரார், மராட்டியர், நாயக்கர் வெள்ளையர் ஆகியவர்களைத் தமிழ்நாட்டின் களத்தில் கண்ட துண்டமாக்கி மாண்டு மடிந்தவர்கள் தேசியத்தேவர்

RangaRakes

tamilnavarasam.com

னெம் முக்கியமாக நாயக்கர் தளபதி மதுரை வீரனும், கும்பினித் தளபதி கம்மந்தான் என்ற கான்சாகிப்பும் கங்கணங்கட்டிக் கள்ளர்களைக் கருவறுத்தனர். அது காரணமாகவே கள்ளர்கள் மதுரை நகரில் அழிந்து போயினர் அல்லது மதுரையை விட்டகன்றனர் என்பது நமது ஆராய்ச்சியில் பல இடங்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

## அஞ்சுபேர் பஞ்சாயத்தில் அரசின் வஞ்சம்

கள்ளர் பஞ்சாயத்து நிர்வாகச் சட்டத்தில் வஞ்சக விதிகள் பல மக்களை மாக்களாக்கும் வகைக்குத் தங்களுக்கே உரிய நயவஞ்சக பாவனையில் போலீஸ் அரசு புகுத்தியிருந்து நாட்டில் சொல்லொணாத் துன்பங்கள் உண்டு பண்ணியது. அவ்விதிகளில் ஒன்று; போலீஸ் அதிகாரிகளின் ஆக்கினைக்குப் பஞ்சாயத்தார்களும் கிராம மக்களும் கட்டுப்படாவிட்டால் பஞ்சாயத்து ஆட்சி முறையை ரத்து செய்து அப்படி ரத்து செய்யப்பட்ட கிராமத்தின் கண்காணிப்பை போலீஸ் நேரில் எடுத்துக் கொண்டு நடமாட்டத்தைக் கண்காணிக்கும் என்பதாகும்.

இந்தச் சரத்து பிற்காலங்களில் போலீஸ் தனது இஷ்டபடி எல்லாம் மக்களை ஆட்டிவைத்துக் கொடிய துன்பங்களுக்கு உண்டாக்கியது அன்னிய அரசின் அக்கிரமங்கள் எப்வளவு என்பதை மக்கள் அறியும்படி செய்தது. மக்களை போலீஸ்காரர்கள் ஆயுதமாக உபயோகித்தனர். ஜில்லாவில் ஏற்படும் குற்றங்கள் எதுவானாலும் அவைகளைத் துலக்கித்தரக் கள்ளர்களை ஏவினர். கேடிகளைக் கொண்டு வந்து ஆஜர்ப்படுத்தும்படி நிர்ப்பந்தம் செய்தனர். செலவினங்களுக்கும் தீனிக்கும் தேவர்களைப் பயன்படுத்திப் பிடுங்கித் தின்றனர். இவ்வாறான அக்கிரமங்களுக்கு இசையாத அல்லது ஒத்துழைக்காத கிராமப் பஞ்சாயத்துக்கள் ரத்துச் செய்யப்பட்டுப் போலீஸ் நேரடிக் கண்காணிப்புக்கு கொண்டு வந்தனர்.

என்ன அக்கிரமம் பாருங்கள். கிராமத்தில் பொய் ரிஜிஸ் தர் பேர்வழிகளைக் கண்காணிக்க வேண்டிய போலீஸ் சிப்பந்திகள் அவ்வாறு செய்யாமல் மேலும் சட்டத்தில்



திருத்தம் செய்து மக்கள் யாவரும் கிராமத்தை விட்டுப் போலீஸ் காவல் நிலையத்தில் வந்து ஆஜர் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தனர். இதை எல்லாம் கண்டு தான் மகாகவி பாரதியார் ரத்தவெறி பிடித்த கொக்கு என்று ஆங்கில அரசைச் சித்தரிக்கிறார் போலும். இந்தப் போலீஸ் திருத்தச் சட்டத்திற்குப் "படுக்கை உத்தரவுச் சட்டம்" என்று பெயர்! இந்த உத்தரவை நிறைவேற்றிய முறை பயங்கரமானது படுக்கை உத்திரவுபிறப்பிக்கப்பட்ட பதிவான கிராம மக்கள் இரவு 9.30 மணிக்குப் போலீஸ் நிலையத்தில் வந்து ஆஜராக வேண்டும். காலை 5.30 மணி வரை போலீஸ் கண்காணிப்பிலிருக்க வேண்டும்.

நடுவில் இரண்டு மூன்று தடவைகள் ஆஜர் பார்க்கும் போது பதில் கொடுக்க வேண்டும். இரவு பூராவும் தூக்கம் பாதிக்கும். போலீஸ் காவல் நிலையத்தில் தங்கும் வசதியேது? ஆயிரக்கணக்கான மக்கள், வீடு வாசல், பிள்ளை குட்டிகள், சொத்துச் சுதந்திரங்கள் ஆகிய பொறுப்புக்களை விட்டு, ஸ்டேசனில் வந்து திறந்தவெளியில் ரஸ்தாவிலும், கண்மாய்க்கரையிலும் தங்கியிருந்து ஆஜர் கொடுத்த கொடுமையைச் சொல்லி முடியாது. அதிலும் மழை, பனி காலங்களில் மக்கள் பட்டபாடு என்னவென்று சொல்லுவது இக்கொடிய சட்டத்தை நிறைவேற்றியது கீழ்த்தரமான போலீஸ் சேவகர்கள். இந்த அற்பக்கூட்டம் தங்கள் கையில் சட்டபூர்வமாக அகப்பட்ட மக்களை என்ன பாடுகள் படுத்தியிருப்பார்கள்?

படுக்கை உத்திரவால் மக்கள் மானமும் மரியாதையும் போனது! சொத்து சுகம் குறைந்தது. தொழில் வாட்டமுற்றது. இன்னும் என்னவெல்லாம் சொல்லுவது இதையெல்லாம் வைத்துத்தான் குற்றபரம்பரை சட்டம் மக்களை ம க்களாக்கியது என்றுவர்ணிக் கலாயிற்று. நாட்டுமக்கள் இந்தக்கொடிய சட்டத்திற்குப் பல தடவைகளில் ஆளாயினர்.

அதிலும் அக்கிரமமாக அநியாயக் காரணங்கள் காட்டி அற்பத்தனமான போலீஸ் சிப்பந்திகள் இவ்வுத்திரவுகளை,

RangaRakes
tamilnavarasam.com

நிறைவேற்றினர் என்பதை முன்னாள் போலீஸ் மந்திரி Dr. சுப்பராயனும் திரு இராஜாராம் நாயுடு இன்னும் பலர் சட்டமன்றத்தில் ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்ற விவரம் பிறிதோரிடத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றதென வாசகர்களுக்கு ஞாபகமூட்டப்படுகிறது.

அநியாயமாகப் படுக்கை உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு அவதிக்குள்ளான கிராமங்களின் கதைகளை எடுத்துச் சொல்லவதென்றால் ஏடுகொள்ளாது. இச்சட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு மக்கள் பட்ட கஷ்டங்களை நேரில் கண்டு நான் சிறுவனாக இருந்தபோது வெம்பிய நெஞ்சத்துடன் கண்ணீர் வடித்த காலம் இன்னும் எமது நெஞ்சை விட்டகலவில்லை.

பஞ்சாயத்து நிர்வாகச் சட்டம் அமுல் செய்யுங்கால் போலீசுக்கு மக்கள் முன்வந்து உதவுவதற்குச் சர்க்கார் வழியமைத்து அதன்படி ரிக்கார்டு வழங்கி வந்தனர் 1952 ஆம் வருஷம் முடிய அரசு வழங்கிய சன்மானம் மதிப்பு ரூபாய் 5031—0—0.

சொரிக்காண்பட்டி திருடர்கள் தாண்டிக்குடியில் செய்த கொள்ளையைத் துப்புத்துலக்குவதற்கு பஞ்சாயத்தார்கள் உதவினர். திருச்சிராப்பள்ளி ஜெயிலிலிருந்து தப்பி ஓடிய குற்றவாளியைப் பிடிப்பதிலும் கூட இரண்டு தேவர்கள் உதவி செய்தனர். அதற்கு அரசுவழங்கியசன்மானம் ரூபாய் 494—4—9. போலீசாரால் தேடப்பட்டுவந்த பாப்பாபட்டி வீணி மாயாண்டியைப் பஞ்சாயத்தார்கள் பிடித்து ஒப்படைந்தனர். No 3/25 Dhuti sration crime எண் உள்ள கோயம்புத்தூர் ஜில்லாக்குற்றம் துலக்க பழனித்தாலூகா திருவிஞ்ஞபுரம் பஞ்சாயத்தார்கள் உதவி புரிந்து சன்மானம் பெற்றனர். வத்தலகுண்டு No 3/125 Section 3921 P.C. குற்றம் துலக்க ராமிநாயக்கன்பட்டிப் பஞ்சாயத்தார்களும் உதவி செய்தார்கள்.

நடயனேறிச் சின்னத்தேவன் என்ற தேடப்பட்ட குற்றவாளியைப் பிடித்து பஞ்சாயத்தார்கள் ஒப்படைத்தனர்.



இப்படி இதுவரை 112 குற்றங்களில் பஞ்சாயத்தார்கள் உதவினர் என்பது போலீஸ் அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது.

1925 ஆம் ஆண்டில் ஜில்லாவில் மொத்தம் பதிவான குற்றங்கள் 1904 ஆகும். இதில் கள்ளர்கள் சம்பந்தப்பட்டவை 475 குற்றங்கள். நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கப்பட்டவை 153 கேஸ்களாகும். இதிலும் பதிவு செய்யப்படாத நமது மேலூர் நாட்டு சகோதரர்கள் எண்ணிக்கையும் தள்ளுபடி செய்து பார்த்தால் பிரமலையார்கள் சம்மந்தப்பட்ட குற்றங்கள் சற்றேறக்குறைய 75க்குள் தானிருக்க முடியும். கள்ளர்கள் சான்றோர்கள் நல்லவர்கள் என்பதற்கு போலீஸ் அறிக்கையே தக்க சாட்சியல்லவா?

மதுரை ஜில்லா கலெக்டர், ஜில்லாப்போலீஸ் அதிகாரி ஜில்லாப்போர்டு பிரசிடெண்ட். தாலுகா போர்டு பிரசிடெண்டுகள் அரசுப் பட்டதாரிகள் ஆகியவர்கள் கலெக்டரின் தலைமையில் வயப்பட்டுக் கள்ளர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் இறங்கிவிடாமல் கண்காணித்து வந்தனர். தனது வேலைகளில் மிக முக்கியமாகக் கள்ளர் சமூக அபிவிருத்தி ஆபீசர் கவனித்தவைகளில், பிரமலைக்கள்ளர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் பிரவேசிக்கவிடாமல் தடுப்பது ஒன்றாக இருந்து வந்ததமை தெரிய வருகிறது. அதிலும் இந்த மகத்தான சாதனைக்காகவே கனம் அய்யர் அவர்களுக்கு இராவ்பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டது எனத் துணிந்து சொல்லலாம். எடுத்த எடுப்பிலேயே கனம் அய்யர் அவர்கள் 1921 ஆம் ஆண்டில் 5000 பிரமலைக்கள்ளர்களுக்குக் கௌரவ சர்க்கார் பஞ்சாயத்தார்கள் பட்டத்தையும் சிறிது அதிகாரத்தையும் கொடுத்துத் தனது பக்கம் இழுத்துக் கொண்டார். இந்த வகையில் அய்யர் அவர்கள் ஓர் அளவில் வெற்றியடைந்தார் என்றாலும் தேசிய இயக்கம் பிரமலை நாட்டில் வளர்ந்து படராமலில்லை. கள்ளர் சமூக அபிவிருத்தி இலாகாவின் வேலைகளைப் பார்வையிட அரசின் மேலாதிக்கம் கண்டபடியான நடவடிக்கைகள்—கள்ளர் நாடுபார் வையிட்டவர்கள்.

RangaRakes

tamilnavarasam.com

1. G.F·, Paddision Esq MA; CSI; ICS; Chief Secretary to govt.
2. R.H. Ellis Esq I.C.S Commision of Labou rMadras
3. F. Noyce Esq; C.B.E; I.C.S; Commision of Labour Madras
4. Deputy Inspscrer general South Range T N Black stone.
5. Hon. Sir. C.P. Ramasamy Iyer C.I.F. Law Member

சர்க்கார் அதிகாரம் கள்ளர் பஞ்சாயத்தார்களுக்கு கொடுக்கப்பட்டதன் காரணமாக போலீஸ் அதிகாரிகள் கைரேகைச் சட்டப்பிரயோகம் வெகு சுலபமாக நடக்க முடிந்தது. முதல் ஐந்து ஆண்டுகள் நன்மைகளும் தீமைகளும் கலந்து விளங்கியது. குற்றவாளிகளைப் பிடித்துத் தராத காரணங்களுக்கும், போலீஸ் அதிகாரிகளின் கைக்கூலியாக பஞ்சாயத்தார்கள் கீழ்ப்படியாமைக்குமாக மக்களை போலீஸ் நிலையத்தில் வந்து ஆஜர் கொடுக்கும்படியாகிய படுக்கை உத்தரவு போட்டு வருடம் பூராவிலும் எத்தனையோ கிராமங்கள் சொல்லொணாத் துன்பத்திற்குள்ளான தென்பது முன்னதாகவே தெரிந்தோம்.

அதுபோல கிராமத்தார்கள் மீது பஞ்சகாலங்களில் கடினமான நடவடிக்கை எடுத்துக் கடன் வசூலை போலீசார் கையாண்டமுறை காட்டுமிராண்டித்தனமானது. கூட்டாக மக்களை கடன்தீரும் வரை போலீசார் வெயிலில் நிறுத்தியும் கட்டிவைத்து அடித்தும் துன்புறுத்திய நிகழ்ச்சிகள் பல நடந்தன. இன்னும் இதுபோல சில அநியாயங்கள் கிராமத்தில் நடந்தமைக்குக் காரணம், அதிகாரம் போலீசுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததென்பதாகும்.

உயர்மட்டத்தில் ஜில்லாநிர்வாகம் நடத்தி வந்த கனம் இராவ்பகதூர் ராஜா அய்யர் அவர்கள் செய்த சில தனிப் பட்ட நன்மைகளை நாட்டினர் என்றும்மறக்க மாட்டார்கள்



1920ஆம் ஆண்டிற்கு முந்திய போலிஸ நடவடிக்கையில் சர்க்கார் அதிகாரிகளாலும்: போலிசாராலும் கேடிகள் ஆக்கப்பட்ட கள்ளர், தேடப்பட்ட வாரண்டியர்களாக இருந்தனர். அய்யர் அவர்கள் இதன் உண்மைகளை எல்லாம் விவரமாகத் தெரிந்து நல்ல நடவடிக்கை எடுத்தார். சர்க்காருக்கு எழுதி விசேஷ அனுமதிகள் பெற்று கேடிகளை ஆஜர் ஆகும்படி செய்து அவர்கள் பேரில் இருந்த பொய்க்கேசுகள் பலவற்றைத் தள்ளுபடி செய்தார்.

அப்படிப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் பணிகளும் செய்தார். ஒரு சில உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்கவும் தயங்கவில்லை. அய்யர் அவர்களின் தார்மிக நடவடிக்கையை நாட்டு மக்களும் அரசும் வெகுவாகப் புகழ்ந்தன. சமூகசீர்திருத்த ஆபீசர் என்று சொல்லத்தக்கபடியாகச் சத்திய வழியில் நடந்து காட்டினார். எனவே கள்ளர் நாட்டுப் பெரியதனக்காரர்கள் பலரும் அய்யர் சொல்லுக்கு அதிக மரியாதை கொடுத்து அவர் பக்கம் சூழ்ந்து நின்று அரசுப் பணிக்கு உதவியது நாட்டிற்கேநன்மையாகியதென்றால் மிகையாகாது. அவர் காலத்து அடிப்படைக் கொள்கையை வைத்துத்தான் பிற்காலம் சமூக சீர்திருத்த வேலைகள் செயல்படலாகியது.

## 1923 கலெக்டர் கண்ணோட்டம்:-

1923ம் வருஷம் கள்ளர் சீர்திருத்த டிபார்ட்மெண்ட் பிரமலைத் தேவமார்களின் பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைத் திட்டங்கள் பல வகுத்தனர். இத்தனைக்கும் மேலாகக் கள்ளர்கள் சுயாதினப்படி எடுத்து காட்டுவதற்குத் தங்கள் சொந்த நிதியொன்று தங்கள் கைவசம் வைத்துக் கொள்ளவேண்டும் என்று சென்ற ஆண்டு துவக்கிய வேலையை சிறப்புறச் செய்யத் திட்டமிட்டது பெரியதொரு நிதி கைவசமிருக்க வேண்டுமென்பதை மக்கள் மனதில் பதிய வைத்ததுடன் சர்க்காருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.



RangaRakes
tamilnavarasam.com

சுயாதீனமாகக் கள்ளர் பொதுநிதி வேண்டியகாலத்தில் எடுத்து உபயோகித்துப் பலனடைய வல்லதாக இருக்க வேண்டும் என்று எண்ணியது. இது சமயம் தான் பிற்பட்ட மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட லேபர் கமிஷனர், தனது வசமாகக் கள்ளர் சீர்திருத்த வேலைகளை சர்க்கார் இலாகாவின் பட்டியலில் எடுத்துக் கொண்டு நிரந்தரமாக ஒவ்வொரு வருஷமும் பணம் ஒதுக்க முன் வந்தார். அது காரணமாகக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கள்ளர் நாட்டில் கொடுக்கல் வாங்கல் செய்யவும் வாய்ப்பு அதிகரிக்கப்பட்டது.

கூட்டுறவுக்கடன் வசதியும் கள்ளர் பொதுநிதி உதவியும் கள்ளர் பொதுநல அபிவிருத்தியின் அடிப்படைகளுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதை வருடாந்திர அறிக்கை மூலம் கண்ட மதுரை ஜில்லாக் கலெக்டர் தனது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளார்.

''இனிமேல் நாட்டில் மக்களுக்குக் கடன் குறைந்த வட்டி வசதியில் கிடைக்கும். கூட்டுறவு சங்கங்களும் கள்ளர் பொதுநிதியும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்கும் போது உசிலம்பட்டி முதலான இடங்களில் லேவாதேவி செய்து வரும் சமூகத்தினர்களும் வர்த்தகம் செய்து வரும் கூட்டத்தினர்களும் தங்கள் தொழிலின் மூலம் கள்ளர்கள் சம்பாத்தியத்தை அதிகவட்டி மூலமும் அதிகலாபம் மூலமும் கவர முடியாது'' அப்படியாக அன்று கலெக்டர் சொன்னதற்கிணங்க இன்று கள்ளர் நாட்டில் பெருத்த அளவில் லேவாதேவி செய்யும் நிலைக்கும் சிறந்த மாளிகைகள் கட்டி வாழும் அளவுக்கும் தேவமார்கள் பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறதென்றால் ,அத்தனைக்கும் ஓர் அளவு சீர்திருத்த டிபார்ட்மெண்டு நீண்டகாலமாகத் தொடர்ந்துபல வேறு துறைகளில் செயலாற்றி வரும் தத்துவங்கள் முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. கள்ளர் மக்கள் பிரமலை நாட்டில் விழிப்படைந்திருக்கிறார்கள் என்பது பு ல னா கி ற து.



1925—ம் வருஷம் ஜுன் மாதம் உசிலம்பட்டி கள்ளர் பள்ளி மாணவர்களின் உணவு விடுதி ஒன்றை Hon Sir, C.P ராமசாமிஅய்யர் அவர்கள் K. C. I. E Law member திறந்து வைத்தார்கள். அந்த விழாவுக்குச்சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கள்ளர் நாட்டு மக்கள் ஏராளமாகக் கூடுவதற்கு முன் அறிவிப்புச் செய்யப்பட்டது. மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் பிரதான அதிகாரிகள் எல்லோரும் வந்திருந்தனர். சேதுபதி அரசர், சிங்கம்பட்டி ஜமீன்தார் தொண்டைமான் புதுக்கோட்டை மன்னர், சேத்தூர் ஜமீன்தார் இன்னும் ஏனைய பாளையப்பட்டுத் தலைவர்கள் வந்திருந்தனர். ஏராளமான ராஜ விசுவாசப் பட்டம் பெற்றவர்களும் வந்திருந்தனர். கள்ளர் நாட்டின் மக்கள் 20,000 பேர்கள் கூட்டத்தைச் சிறப்பித்தனர். கீழப் புதூரிலிருந்து போர்டு ஹைஸ்கூல் வரை ஒரு மைல் நீளம் வரவேற்பு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

ஆடல் பாடல்களுடன் வரவேற்கப்பட்ட அய்யர் அவர்கள் சாரணப் படையினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுகொண்ட பிறகு திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

செல்லம்பட்டி பூசாரி தவசித்தேவர், கீழ் உரப்பனூர் காராமணி கலியாணித்தேவர், கம்பம் ராமசாமித்தேவர் உசிலம்பட்டி ராவ்பகதூர் வேதநாயக தேவர் இன்னும் முக்கிய தேவமார்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். கள்ளர் நாட்டின் சார்பில் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. கள்ளர்கள் பேரில் பரம்பரைக் குற்றம் சாட்டப்பட்டிருப்பதைத் தகாத காரியம் என்று எடுத்துக் காட்டப்பட்டது. நல்லவர்கள் ரேகைச் சட்டத்தில் இருந்து விலக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளப்பட்டது.

''பெரியாற்றுத் தண்ணீரைத் திருமங்கலம் தாலுகாவிற்குக் கால்வாய் வெட்டிக் கொணர்ந்து பாசன வசதி செய்து தரவேண்டும் என்ற ஏற்பாட்டைச் சர்க்கார் கவனித்துக் கொண்டு வரும் மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டது.

RangaRakes
tamilnavarasam.com

''பிரமலைத் தேவர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இந்தச்சட்டம் இப்போது உள்ள பெரியவர்கள் காலத்தில் சிறிது சிரமம் கொடுத்தாலும் ஏராளமாகப் படித்துக் கொண்டிருக்கும் வருங்காலச் சந்ததிகள் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவார்கள் என்றார். அதற்கு அறிகுறியாக இன்று மாணவர்கள் செய்து காட்டிய சிறப்பான விளையாட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. என்றார்.'' பெரியாற்று நீர்ப்பாசன அபிவிருத்தி பிரமலை நாட்டிற்கு முன்னதாகவே மேலூர் கீழநாட்டுக்குச் செய்த சமயம் செய்திருக்க வேண்டும் யாது காரணம் பற்றியோ தவறிவிட்டது என்றாலும் இது விஷயமாக அரசுக்கு எடுத்துக் கூறுகிறேன்'' என்றார்.

## நிர்வாகமும் நிதியும் :

1925 பதவி விலகிய ரவ்பகதூர் A.K. ராஜா அய்யருக்குப் பிறகு கள்ளர் அபிவிருத்திப் பணிக்கு விஷேச அதிகாரியாகிய K. P. ஜெனார்தனராவ் பதவி ஏற்றார். இவரும் ஜில்லாப் போலிஸ் அதிகாரியின் அந்தஸ்துடையவரே 1949ஆம் ஆண்டு வரை, கள்ளர் அபிவிருத்திப் பணிகள் போலிஸ் இலாகாவின் பொறுப்பிலேயே இருந்து வந்தன. அதன் பிறகு மதுரை ஜில்லாக் கலெக்டரின் நேர்முகப் பார்வையில் ஒரு கள்ளர் ஸ்பெசல் டெபுடிக் கலெக்டரின் மூலம் திட்டம் செயல்படலானது. அதுகாலை இவ்வலுவல்கள் ஹரிஜன நலத்துறையில் இணைக்கப்பட்டிருந்தது. 1969ல் நிர்வாக சவுகரியத்தைப் பொறுத்துப் பிற்பட்ட நலத்துறை டைரக்டரின் ஆதிக்கத்திற்கு மாற்றப்பட்டது. ஆனாலும் டைரக்டர் கலெக்டர் மூலமாகத் தனது நிர்வாகம் நடத்தினார்.

1921-ஆம் ஆண்டு ஆரம்பமான சமூக சீர்திருத்தப் பணிகளுக்கு முதல் ஆண்டுச் செலவு 1922ல் ரூபாய் 31655 தான் செலவானது. பிற்பட்ட வருஷங்களில், வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 150000 விதம் பட்ஜெட் ஒதுக்கப்பட்டது. அபிவிருத்திப் பணிகளும், குற்றப்பரம்பரைச் சட்டப் பிரயோகமும் சேர்ந்தார்ப்போல் செயல்பட்டு வந்தமையால்



செலவுகள் அதிகரிக்கவே 1925ல் வருஷ பட்ஜெட் ரூபாய் 200000 எனவாகியது, அதன் பிறகு 1940ல் ரூ. 250000 ஆகவும் 1944ல் ரூ. 400000 ஆகவும், 1947ல் ரூ. 50000 1949ல் ரூ 600000 ரூபாய் ஆகவுமாக உயர்ந்து 1950ல் ரூ. 650000 ஆகியது, ஆகவே 1921—1950 முடியவான காலத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 10000000 (ஒருகோடி) எனத் தெரிய வருகிறது.

## கைரேகைப் பதிவுமுறை:

1926 ஆம் ஆண்டில் ரேகைப்பதிவு சட்டத்தால் நல்லதொரு திருப்பமேற்பட்டது. அதன்படி 5 வகுப்பு வரையில் படித்தவர்களைப் போலிஸார் உசிதம்போல் ரேகைப்பதிவு செய்யாமல் விட்டு விடலாம் என்பதாகும். சென்ற ஆண்டுகளில் வயது வந்தவர்கள் எல்லோரும் பதிவு ஆகிவிட்டபடியால் 1926ல் இருந்து பதிவு வேலைகள் குறைந்து விட்டது. வயது அடைந்து வரும் இளம் சந்ததியார்கள் படித்தவர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் விளங்கினர். பதிய வேண்டியதேற்பட்ட சிறிய தொகையினருக்கும் வயது வந்தடன் தாங்களாகவோ அல்லது பஞ்சாயத்தார் மூலமாகவோ நேரில் வந்து பதிவு செய்து கொள்ளும் நிலைமை உண்டாகியது. 1937ல் இரண்டு ஜில்லாக்களிலும் புதிதாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் தொகை 93 எனவே 1927 முதல் 1937 ஆம் ஆண்டு வரையான பதினோரு ஆண்டுகளில் பதிவானவர்கள் 5902. ஆகமொத்தம் ஆரம்பத்திலிருந்து 19..7 முடிய பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 138083.

தொழிற்சாலைகளில் பணி புரிகின்றவர்கள். அண்டை அடுத்த ஊர்களில் வியாபாரம் செய்கிறவர்கள், வெளியூர்களில் உறவு வைத்திருப்பவர்கள், உத்தியோகம் பார்ப்பவர்கள் இந்தச் சட்டத்தினால் தாங்களும் தங்கள் குடும்பத்தினர்களும் எப்படிப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டி நிவர்த்தி கோரியிருந்தனர். அத்துடன் போலிஸ் வருஷாந்திர அறிக்கையும் கள்ளர்கள் குற்றம் செய்கிறவர்கள் என்று சொல்ல முடியாத அளவில் இருந்தது. பதிவு

RangaRakes
tamilnavarasam.com

செய்யப்பட்ட ஒரு நபர் ஆரம்பத்தில் இருந்து பத்து வருஷங்களுக்கு மேல் நடமாட்டச் சீட்டு வாங்காதவர்களாகவும் குற்றம் செய்யாதவர்களாகவும் இருந்த விவரம் தெரிய வந்தது. குற்றத்தொழில் கிராமத்தில் யாரும் செய்யாத கிராமம் கூட இருந்தமை தெரியவந்தது. இப்படிப்பட்ட நிலையில் இவர்களைப் பதிவு ரிஜிஸ்தரில் வைத்திருப்பது சாஸ்திரியமாகத் தவறு அல்லவா?

ஆகவே 1933ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டவர்கள் நீண்டகாலம் நன்நடத்தையுடையவர்களாகயிருப்பின் அவர்களை ரேகைச்சட்ட அமுலில் இருந்து விடுவிக்கலாமென கலெக்டருக்கு அரசு ஆணை பிறபித்தது. அதன்படி நன்நடத்தையுடைய கள்ளர்களை நடமாட்டச் சட்டத்திலிருந்து தளர்த்திப் பதிவை ''அபயன்சில்'' வைத்துக் கொண்டு ''G'' பாஸ் இல்லாமல் நடமாடும் உத்திரவு பிறப்பிக்கக் கலெக்டர் 1937ல் அருகதையுடையவராஞர் இந்தச்சட்டம் வந்தபோதுதான் முதல் முறையாக மதுரை ஜில்லா வெள்ளையர் அரசில் ஓர் இந்தியன் கலெக்டராகக் கண்டது. அதுவும் அந்தக் கலெக்டராகிய திரு. இராமவர்மராஜா அவர்கள் தமிழ்மன்னர் மரபினன். ஏன் முக்குலத்தவர் என்று வரலாறு விளக்குகிறதும் தெரிய வருகிறது.

அபயன்ஸ்முறைப்படி நடவடிக்கை தாராளமாக எடுக்கபடவில்லை என்றே சொல்லலாம். ஏனெனில் இப்படியாக நடவடிக்கை எடுத்து ரத்துச் செய்ய வேண்டிய ஜாபிதாத் தயாரிக்க அவகாசம் தேவைப்பட்டது என்ருலும் முன்னதாக விதிவிலக்களித்து உத்திரவுகள் பிறப்பித்திருக்கிற விவரமும் தெரிய வருகிறது. உசிலம்பட்டி போலிஸ் சரகம் K. போத்தம்பட்டி: C.T.R. No. 26019. பெரிய கருப்பத்தேவர் C,T.R 31736 தவசித்தேவர் C.T.R. 33006 முத்துக்கலுவத்தேவர் ஆகிய முவர்களும் சாமியார் பெரிய கருப்பத்தேவர் மக்கள், இவர்களுக்கு ''G Pass'' இல்லாமல் நடமாடும் உத்திரவு கிடைத்திருப்பது மதுரை ஜில்லாக் கலெக்டரின் L. Dis 1667—37 dt 14—4 1937லும்; தென்மதுரை



ஜில்லாப் போலிஸ் அதிகாரியின் C. No 104 C.T 137 லும் கண்டிருக்கிறது.

பதிவு செய்யப்பட்டவர்களின் ஜாபிதாப் பரிசீலனை செய்து எடுக்கும் வேலை 1938ல் துவங்கி 1941ல் முடிவடைந்தது. மொத்தம் பதிவு செய்யப்பட்டிருந்த 38083 பேர்களில், 10759 பேர்கள் காலமாகி விட்டனர். எனத் தெரிய வந்தது. நன்நடத்தையின் காரணமாக; 'அபயன்ஸ்' உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டியவர்கள் எனக் கண்டறியப்பட்டவர்கள் 17752 : போகப் பாக்கியிருந்த பதிவு செய்யப்பட்டவர்கள் மதுரை தென் பகுதியில் 7111, மதுரை வடபகுதியில் 2461 ஆக மொத்தம் 9572 பேர்கள். இந்த நிலையில் 1943ல் Habitual offender's Act. அதாவது வழக்கமாக குற்றம் புரியும் நபர்கள் போலிஸாரால் கண்காணிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது.

நடைமுறையில் குற்றப்பரம்பரைச் சட்டம் சென்னையில் அமுலில் இருந்து வந்ததல்லவா? அதே சமயத்தில் ஹாப்பிச்சுவல் அவண்டர்ஸ் ஆக்ட் அமுல் செய்வது நிர்வாகச் சங்கடம் எனத் தெரியவரவே. இந்த இரண்டு சட்டங்களில் எதை எப்படிச்செயல்படுத்துவது என்று முடிவு கட்டுவதற்கு அவகாசம் தேவைப்பட்டது. ஆனபடியால் குற்றப்பரம்பரையினர் பதிவு செய்யும் வேலையை உடனே நிறுத்தி வைக்கும் படியாக கலெக்டருக்கு G. O. No. 2981/Home/dt 21-9-46 உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே பதிவு வேலை உடனே நின்றது. பிறகு இரண்டு ஆக்டுகளில்; ஒன்ருகிய ; குற்றப்பரம்பரைச் சட்டம் வாபஸ் வாங்கப்பட்டு Habitual offenders Act செயல்படுத்தப்பட்ட விவரம் கவனிப்போம்.

இந்திய அரசியல் நிர்ணயசபை 26-11-49ல் அங்கீகரிக்கப்பட்டு 26-11-1950ல் அமுல் நடத்தப்பட்டது அல்லவா? அம்பேத்கார் கோபாலசாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யங்கார் ஆகிய ஆன்ருேர்கள் பலரைக் கொண்டு 1945 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே ஜவஹர்லால்நேரு

RangaRakes
tamilnavarasam.com

அரசியல் நிர்ணய சபையை அமைத்துச் சட்டங்களை உருவாக்கினர். அப்படியாக உருவாக்கிய சட்டங்கள் மத்திய அரசால் உருவாக்கவும் தொடங்கியது. இந்திய அரசியல் நிர்ணயசபைச் சட்டத்தை உருவாக்கிய நன்னுளில் ஆரம்ப எழுத்தை முதன்முதலில் அடியெடுத்து எழுதிக் கொடுத்துத் துவக்கி வைத்த ஜவர்கர்லால்நேரு:. இந்திய மக்கள் ஜாதி மத உயர்வு தாழ்வின்றி எல்லோரும் சமமாக நல்வாழ்வு எய்துவர் என்று தொடங்கினர்.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உயிர்நாடி போன்றதொரு அம்சம் மக்கள் சமூக அமைப்பில் உயர்வு தாழ்வு இல்லாமல் எல்லோரும் சம உரிமைபெற வேண்டும் என்ற அடிப்படையில் எந்தப் பரம்பரையினரும் குற்றப் பரம்பரையினர் என்று பிரகடனப்படுத்தக் கூடாது என்பதேற்பட்டது. ஆனபடியால் குற்ற பரம்பரைச் சட்டம் ரத்தானதற்கு மூலகாரணம் அரசியல் சட்டம் தான் என்பது வரலாறு கண்ட சம்பிரதாயமாகிறது. சட்டம் ரத்தாவதற்கு முயற்சித்த நன்மக்கள், ஸ்தாபனங்கள் பல-பல.

## குற்றப் பரம்பரைச் சட்டம் ரத்தானது:-

Ref Madras Assembly obstracts 1947 : Vol V I-14page 557 criminal tribes Act. Madras repeal Bill 1947.

சென்னைச் சட்டமன்றத்தில் குற்ற பரம்பரைச் சட்டம்; மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் வாழும் பிரமலை கள்ளர் மேல் பிரயோகிக்கப்பட்டிருப்பதை அரசு வாபஸ் வாங்கவேண்டும் என்ற தீர்மானத்தைப் போலிஸ் மந்திரி Dr. P. சுப்பராயன் கொண்டு வந்தார். தீர்மானத்தின் மீது 10 அங்கத்தினர்களுக்கு மேல் பேசினர். 'பேகம் சுல்தான் மெயர் அமிருடீன்; இச்சட்டம் தக்கபடி பரிசீலனை செய்து மக்கள் கருத்தறிந்துதான் ரத்துச் செய்யவேண்டும். அது வரை அவகாசம் வேண்டுமென்று தீர்மானத்தை எதிர்த்தார். அங்கத்தினர் R. V. ஸ்வாமிநாதன் வீராவேசத்துடன் எழுந்து காரசாரமாகப் பேசி அம்மையின் கோரிக்கையை



மடக்கியடித்தார். அவர் பேச்சுசபையோர்களின் கவனத்தைக் கவர்ந்தது.

தான் ஒரு குற்ற பரம்பரை வகுப்பினன் என்று கூறினர். என் ஜாதியார்கள்; இன்றும் என்றும், குற்றத் தொழில் செய்தவர்கள் என்று சொல்ல முடியாது. நாங்கள் குற்றத் தொழில் செய்த காரணத்திற்காக எங்கள் இனத்தவர்களுக்கு இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படவில்லை ஆங்கிலேயர்களை இந்தியாவில் இறங்கவிடாமல் எதிர்த்துப்போராடிய வீரத்தேசிய இனமக்கள் எனது ஜாதியார்கள். என் சமூகத்தினர் போர்த்திறனை ஒடுக்கி அடக்குவதற்கு வெள்ளையன் பிறப்பித்தது இந்த அடக்குமுறைச் சட்டம் என்று ஆவேசத்தோடு கர்ச்சனைக் குரல் எழுப்பினர். அவர் பேச்சைச் சபையோர்கள் உன்னிப்பாக கவனித்தனர்.

மேலும் சாமிநாதன் அவர்கள் பேசுகையில் மந்திரியைப் பார்த்து, பேகம் அவர்களின் பிரேரணையை ஏற்றுக் கொள்ளக் கூடாது. தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என வேண்டினர். குற்ற பரம்பரைச் சட்டம் பிரயோகம் வாபஸ் பெறப்பட வேண்டும். ஆனல் சமூக அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தனது சமூக மக்கள் போலிஸ் அதிகாரிகளின் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதையும் அதனுல் அவர்கள் முன்னேற்றம் தடைபட்ட தெனப்பட்டவர்த் தனமாக எடுத்துக் காட்டினர். சமூக அபிவிருத்திப் பணிகள் போலிஸ் இலாகாவிலிருந்து மாற்றம் ஆக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். போலிஸ் அடக்குமுறை மக்களை நீண்டகாலம் வாட்டியதற்கு நிவாரணமாக அரசு எத்துணை கருணை காட்டினுலும் செல்லுமென்றர். அதன் பிறகு ராஜாராம் நாயுடு அவர்கள் R. V. ஸ்வாமிநாதன் அவர்கள் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசினர்.

போலிஸார்கள் பிரமலை நாட்டில் தேவமார் சமூக வளர்ச்சியைத் தடைப்படுத்தினர்கள் என்று சொன்னல்,

RangaRakes tamilnavarasam.com

மிகையாகாது. அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடக்க வேண்டும். போலிஸ் பிடிப்பில் இருக்கக் கூடாது என்று தெளிவுபடுத்தினார். ஏனையவர்கள் பேச்சுகள் சுவாமி நாதன் அவர்களை ஆதரித்ததாகவே விளங்கின.

பிரமலைக் கள்ளர்கள் போலிஸ் பிடிப்பில் அகப்பட்டுக் கொண்டு பட்ட அவஸ்தைகள் எனக்குப் பெரிதும் தெரியும். கள்ளர்களுக்குக் கருணை காட்டவேண்டியதவசியம் என்றும் ஸ்சுவாமிநாதன் அவர்கள் கோரிக்கைகளை நினைவில் வைத்து ஆவன செய்வதாகக் கூறினார் டாக்டர் சுப்பராயன். இறுதியில் Dr. சுப்பராயன் கொண்டு வந்த பில் சபையில் அங்கீகரிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னைச்சட்ட நிருபண சபையாரின் அடியிற்சண்ட சட்டமானது 1947ம் வருஷம் மே மீ 30 ஆம் தேதியன்று மேன்மைதங்கிய கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்க்ட்டு, யாவருக்கும் தெரியும் பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது.

1947ஆம் வருஷத்திய 10வது சட்டம் குற்றத்தொழில் ஜாதியாரைக் குறித்த 1924ஆம் வருஷத்திய சட்டத்தின் பிரயேகத்தினின்றும் சென்னை மாகாணத்தை, விலக்குவதற்கான சட்டம். இச்சட்டத்தின் மேல் மதுரை ஜில்லா; பிரமலைக்கள்ளர் ஜாதியாரின் மேல் பிரயோகிக்கப்பட்டிருந்த குற்றப்பரம்பரைச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

மதுரை ஜில்லாக் கலெக்டர் கள்ளர் பஞ்சாயத்து நிர்வாகத்தையும் கலைத்து, ரதாரிச்சீட்டு முறைப்படி கள்ளர்களின் மேல் இருந்த நட மாட்டக் கட்டுப்பாட்டையும் ரத்துச் செய்தார். சென்ற 27 வருஷங்களாகத் தேவமார் மக்களைக் கொடுமைக்குள்ளாக்கி வந்த குற்றப் பரம்பரைச் சட்டம் நமது அரசுரிமையின் முதல் எடுப்பிலேயே ரத்துச் செய்யப்பட்டது. ஆனால் கள்ளர் சமூக சீர்திருத்த வேலைகள் தொடர்ந்து நடந்தன.



வெள்ளையர் ஆட்சி ஒழிந்தது. வெள்ளையர்களாய் அதிகாரத்திலிருந்து வந்த வெள்ளைக்காரர்களும் வெளியேற்றப் பட்டனர். வெள்ளையர்களின் கீழ் அரசுப் பணிகள் புரிந்து வந்த அதிகாரிகளும் மனமாறுதல் ஏற்பட்டு நாட்டுணர்ச்சியுடன் நடந்து கொண்டனர். ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திர ஆட்சியில் நாட்டு மக்களுடன் சேர்ந்து எல்லா நன்மைகளையுமடைந்தனர்.

1947க்கு மேல் நாட்டில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புனர் வாழ்வு வேலைகள் நடந்தன. தேச முன்னேற்றத்திற்குச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவைகளில் ஐந்தாண்டுத் திட்டம் 1951-52ல் தொடங்குகிறது. அதாவது 1951-52 முதல் 1955-56 முடிவான காலம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம் 1956-57 முதல் 1963-61 முடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம் 1961-62 முதல் 1965-66 முடிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலம் 1966-67முதல் 1970-71 முடிய இப்படியாக வகுக்கப்பட்ட திட்டங்கள் அரசியல் நிர்ணய சட்டங்களின் அடிப்படையில் மக்களாட்சி நாட்டில் மகிழ்வுண்டாக்கி வருவதை நாம் காண்கின்றோம்.

இந்த நிலையில் முன்னாளில் ஒடுக்கப்பட்ட மக்கள் நம்மால் எப்படிக் கவனிக்கப்படுகிறார்கள் என்பதை மதுரை ஜில்லாப் பிரமலைக் கள்ளர்கள் சமூக அபிவிருத்தி இலாகாவின் வேலைகளின் மூலம் தெரியலாவோம். எம்மால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் சமூகப்பணி வேலைகளின் புள்ளி விவரங்கள் சர்க்கார் இலாகாவின் வருஷாந்திர ரிப்போர்ட்டுகளின் ஆதாரங்களின் பேரில் கொடுக்கப் பட்டிருக்கிறதெனக் கண்டு கொள்ளவும்.

**விவசாயம்:-**

பிரமலைகள்ளர் சமூக அபிவிருத்தி வேலைகளில் விவசாயம் பிரமலை நாட்டில் வளர்ந்தோங்கச் செய்யவேண்டும் என்பது அரசின் முக்கிய திட்டமாகும். 1916-ல் இருந்து தக்காவிக்

RangaRakes tamilnavarasam.com

கடன் கொடுத்து கள்ளர்களுக்கு உதவி செய்வதற்கு ஸ்பெசல் ரெவின்யூ அதிகாரிகள் வேலை செய்து வந்தமை தெரிய வருகிறது 1921-ல் விசேஷ அபிவிருத்தி இலாகா தோற்றுவிக்கப்படவே அதிகமான சிரத்தை எடுத்து நாட்டில் அபிவிருத்தி வேலைகள் செய்தனர். ஆடு, மாடுகள் வாங்குவதற்கும் கிணறுகள் வெட்டுவதற்கும் கடன் வசதி செய்து வந்தாலும் கூட; நிலமில்லாத ஏழைக் கட்ளர் விவசாயத் தொழிலாளர்களுக்கு, சர்க்கார் தரிசு நிலங்களை ஜாரி செய்து பட்டாப்போட்டுக் கொடுக்கும் வேலையைச் சிரத்தையுடன் செய்தனர். அப்படியாகத் தர்காஸ்து நிலங்கள் கொடுக்கப்பட்ட விவரம்:-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1921 | — | — | 8. | 1928 | 135 | 339 | 15. | 1935 | 53 | 143 |
| 2. | 1922 | 274 | 1151 | 9. | 1929 | 149 | 578 | 16. | 1936 | 76 | 227 |
| 3. | 1923 | 67 | 166 | 10. | 1930 | 140 | 396 | 17. | 1937 | 62 | 132 |
| 4. | 1924 | 41 | 115 | 11. | 1931 | 128 | 77 | 18. | 1938 | 61 | 34 |
| 5. | 1925 | 452 | 1550 | 12. | 1932 | 182 | 154 | 19. | 1939 | 19 | 34 |
| 6. | 1926 | 464 | 1379 | 13. | 1933 | 56 | 190 | 20. | 1940 | 36 | 87 |
| 7. | 1927 | 226 | 679 | 14. | 1934 | 40 | 95 | 21. | 1041 | 81 | 267 |

ஆக 20 வருஷங்களில் 2760 நபர்களுக்கு 8109 ஏக்கர் நிலங்கட் ஜாரி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு விசேஷ டிபுட்டித் தாசில்தாரும் இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுமிருந்து செயலாற்றினர் இவர்கட் முயற்சியில் நாடெங்கினும் இறவைக் கிணறுகட் வெட்டப்பட்டன. G. O. No. 707 Home dt. அரசு 22-3—1946-ல் இரண்டு விசேஷ ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நியமித்தது. 1948-ல் பெரியாற்று நீர் பாசனம் திருமங்கலம் தாலுகாவிற்கு வாய்க்கால் மூலம் பாசன வசதியடையப் போகிறது கட்ளர்கட் தங்கட் நிலங்களைப் பெந்தக பராதீனம் செய்யலாகாது என அவர்கட் பட்டாதாரர்களை நேரில் சந்தித்து விபரம் தெரிய வந்ததும் தங்கட் நிலங்களை அடமானத்திலிருந்தால் அவைகளை மீட்டுவதற்கும் உதவினர்.

பிரமலை நாட்டு விவசாயப் பெருமக்கட் விழிப்புடனிருந்து நல்ல பலனடைந்தனர். பிறகு பெரியாற்றுப் பாசனம்



அணைப்பட்டிக் கால்வாய் மூலம் திருமங்கலம் தாலுகாவில் பிரவேசித்தது என்றாலும்; பெருங்காம நல்லூர் யுத்த களத்திற்குப் போய் எட்டவில்லை.

1921-ல் நமது பிதாக்கட் அரசுப் பொறுப்பில் பஞ்சாயத்து நிர்வாகம் ஏற்று சமூக சீர்திருத்தப் பணிகள் மேற்கொண்ட காலத்தில் வீர சபதம் மேற்கொண்டனர். அதன்படி எப்போதாயினும் நாட்டிற்குப் பெரியாற்று நீர்ப்பாசனம் கொண்டு வந்தே தீருவோம். அத்தண்ணீர் பெருங்காமநல்லூர் யுத்த களத்தில் நம் சுதந்திர வீரர்கள் ரேகைச் சட்டத்தை எதிர்த்துச் சிந்திய ரத்தக்கரையைக் கழுவுவோம் என்று குரல் எழுப்பியிருந்தனர். அதுகாலம் வரும்.

கூட்டுறவு:-

கள்ளர் ரிக்கிளமேஷன் ஆபீசருக்கு கூட்டுறவு சங்கங்களின் உதவிப் பதிவாளர் அதிகாரமும் அரசாங்கம் கொடுத்திருந்தபடியால், கள்ளர் கூட்டுறவு சங்கங்கள் தனியாக, கள்ளர் ரிக்கிளமேஷன் இலாகாவில் இயங்க ஆரம்பித்தன. ரிக்கிளமேஷன் ஆபீஸருக்கு உதவியாக அலுவல்களை மேற்கொள்வதற்கு, 1 கூட்டுறவு சங்கங்களின் சப்ரிஜிஸ்திரார் 4 சீனியர் இன்ஸ்பெக்டர்கள் 11 ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் வேலை பார்த்து வந்தனர். அடியில் கண்ட சங்கங்கள் வேலை செய்தன.

| | | |
|---|---|---|
| 1. | மதுரை ஜில்லா கூட்டுறவு சேல்ஸ் சொசைட்டி | 1 |
| | லேபர் சொசைட்டி | 1 |
| | இண்டஸ்ட்ரியல் சொசைட்டி | 1 |
| | முட்டை உற்பத்தி சொசைட்டி | 1 |
| | பால் சொசைட்டி | 5 |
| | எம்பிளாயீஸ் சொசைட்டி | 2 |
| | மேற்பார்வைக் கழகங்கள் | 2 |
| | கிராமக்கடன் சொசைட்டிகள் | 334 |

ஆக 347 கள்ளர் கோவாபரேடிவ் ஸ்தாபனங்கள் வேலை செய்து வந்தன. இவைகள் யாவும் பிரமலைக் கள்ளர்களுக்

RangaRakes tamilnavarasam.com

கென்றே தோற்றுவிக்கப்பட்டனவாகும். கள்ளர் கூட்டுறவு ஸ்தாபனங்களின் டிரஸ்ட் பண்டும் சர்க்கார் நிதியுமே வைத்துச் சங்கங்கள் வேலை செய்து வந்தன. 1960ஆம் ஆண்டிற்கு மேல் நாட்டில் நாணய செலாவணி விரிவடைந்தது. அபிவிருத்திப் பணிகள் விஸ்தரிக்கப்பட்டன. திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதின் காரணமாக கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி பன்மடங்கு கொடுக்க வேண்டியது ஏற்பட்டது.

இவைகளை எல்லாம் கவனத்தில் வைத்து கள்ளர் அபிவிருத்தித்துறையிலிருந்து கிராமக்கடன் சங்கங்களை மதுரை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கியில் இணைத்துவிட முயற்சிக்கப்பட்டது. அதன்மேல் அரசு Ms. No. 1346 (HW) I. L. and C. dt 14.5.60 and Ms. No. (H.W.) dt 12.22.60 உத்திரவுகளின்படி சங்கங்கள் பாங்கியில் இணைய ஆணையிட்டது. அதன்படி மத்தியபாங்கு 255 கூட்டுறவு சொசைட்டிகளைத் தங்கள் பாங்கியில் இணைத்துக் கொண்டது. இதர சொசைட்டிகள் சரியானபடி நிர்வாகம் செய்யும் வரை இணைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இண்டஸ்ட்ரியல் சொசைட்டி கிராமக் கதர் கைத்தொழில் அபிவிருத்தி ஆபீஸின் நிர்வாகத்தில் விடப்பட்டது.

## கள்ளர் காமன்பண்டு:-

1966 ஆம் ஆண்டின் கடைசியில் கள்ளர்காமன் பண்டு ஸ்தாபனம் தேடி வைத்திருந்த ஸ்தாவர சொத்துக்களின் மதிப்பும் விபரமும்:- (1) உசிலம்பட்டி விவசாய மாதிரிப் பண்ணை 1933ல் கள்ளர்காமன் பண்டிற்கு வாங்கியது ஏக்கர் 9, செண்டு 16 : அங்குள்ள பெரிய கிணறு. பாசன இறவை வசதியுடன் கூடியது. கிட்டங்கிக் கட்டிடம் ஆபீஸ் வசதியுடன் கூடியது; மின்சார வசதி மோட்டார் பிட்டிங்கி உடையது தற்கால மதிப்பு ரூபாய் மூன்று லட்சம் 300000/-

2. செக்கான் ஊரணிக்கிளை :- கொக்குளம் கிராமத்தில் நிலம் ஏக்கர் 1. செண்டு 11. கிட்டங்கி வசதியுடன்



கூடிய கட்டிடம். அரசு பரிபாலனத்தில் நடத்தப்பட்டு வரும் பெண் பிள்ளைகள் அன்னசாலைக்கும் சர்க்கார் உயர் நிலைப்பள்ளி கட்டுவதற்கும் கொடுத்தது போக பாக்கியுள்ள காலியிடம் கிணறு கட்டிடம் வகையார தற்கால மதிப்பு ரூபாய் ஒரு லட்சம்.

3. அல்லி நகரம் கிராமத்தில் தேனிக்கிளை : நிலம் 1. ஏக்கர் 62 செண்டு கிட்டங்கிக்கட்டிடங்கள் இரண்டு; கிணறு ஒன்று. காம்பவுண்டு சுற்றுச் சுவர்கட்கு பேஸ் மட்டம் கட்டியது. தற்கால மதிப்பு ரூபாய் ஐந்து லட்சம்.

4. மதுரை நகர் கிளை :- மதுரை கரிமேட்டில் 45.5 செண்டு காலிமனைகட்டு; மேலப்பொன்னகரத்தில் உள்ளது. சுற்றுச் சுவர் தற்கால மதிப்பு ஒரு லட்சம்.

5. வத்தலக்குண்டு கிளை :- கட்டிடமும் காலியிடமும் தற்கால மதிப்பு ஐம்பது ஆயிரம். அத்துடன் ரொக்க இருப்பு ரூ 50000/- ஆக கள்ளர்காமன் பண்டின் சொத்து மதிப்பு ரூபாய் பதினொன்று லட்சம்.

இந்த நிதிநிலையுடன் இருந்து வந்த கள்ளர்காமன் பண்டு ஸ்தாபனத்தை கலைத்து விட்டு 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ந் தேதி உசிலம்பட்டியில் கூடிய மதுரை மாவட்ட கள்ளர்காமன்பண்டுப் பேரவைக் கூட்டம் தனது ஆஸ்தியாவையும் உசிலம்பட்டியில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் கள்ளர் கல்விக் கழகத்திற்குச் சேர்த்து விடுவதென்று தீர்மானித்து விட்டது. மதுரை மாவட்ட கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களின் பொது நிதி அசல் ரூ 396117-67ம் வட்டி ரூ. 45,406,60ம், மதுரை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கியில் இருந்து வந்தது.

அந்தத் தொகை G. G. Ms. 520 S. W. dept. dt 2-8-69 கள்ளர் கல்விக் கழகத்திற்குக் கிடைத்தது. ஆரம்பக்கட்டமாகக் கிடைத்த பெருந்தொகைகள் கல்விக் கழகத்திற்கு, கள்ளர் காமன்பண்டும், கூட்டுறவு சங்கங்களின் பொது நிதியுமே, இம்மாதிரியாக நிதிகளைச் சேர்த்துக் கள்ளர்

RangaRakes tamilnavarasam.com

கல்விக் கழகம் அமைப்பதற்கு காரணமாக விளங்கியவர்கள் காலஞ்சென்ற V. K. C. நடராஜன் I.A.S, அவர்களும், P. K. மூக்கையாத்தேவர் M. P. அவர்களுமாகும். கள்ளர் கல்விக் கழகத்திற்கு P. K. மூக்கையாத் தேவர் அவர்களைத் தலைவராக்கிக் கொண்ட 14 பேர்கள் அடங்கிய மனேஜிங் கமிட்டி ஒன்றுள்ளது.

தங்களது தலையாய கடமையாய் கள்ளர் கல்விக் கழகத்தார்கள் உசிலம்பட்டியில்; பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை நிறுவித் திறம்பட நடத்தி வருகிறார்கள். கல்லூரியை நிர்வாகக் கமிட்டி ஒன்றும். மானேஸ்மெண்டு மகாசபையும் ஆளுகை செய்து வருகின்றன.

கள்ளர் கல்விக் கழகத்தலைவர் திரு. P. K. மூக்கையாத் தேவர் அவர்களே முத்துராமலிங்கத்தேவர் கல்லூரியின் நிர்வாகக் கமிட்டிக்குத் தலைவராக இருந்து வருகிறார்கள் காலஞ்சென்ற V. K. C. நடராஜன் I.A.S. அவர்களின் மனைவியார் ராஜேஸ்வரி நடராஜன் அவர்கள் கல்லூரியின் கரஸ்பாண்டெண்டாக இருந்து வருகிறார்கள்; அங்கத்தினர் சந்தா, நன்கொடை, கள்ளர் பொதுநிதி, கள்ளர் கூட்டுறவு சங்கங்களின் பொதுநிதி, அரசு மான்யம், கிராண்டு ஆகியவைகள் மூலம் நல்ல நிலையுடன் சுமார் 30 லட்சம் ஆஸ்தியுடன் கல்லூரி செயல்பட்டு வருவது கண்டு மகிழ்வேற்படுகிறது.

1951க்கு மேல் நாட்டின் நலன்கருதி நிறுவப்பட்ட திட்டப்பணிகள் துவங்கப்பட்டதின் நிமித்தம் அரசு அபிவிருத்திப் பணிக்கு வருஷம்தோறும் விகிதாச்சாரப்படி பட்ஜெட் ஒதுக்கவே கள்ளர் சீரமைப்புத்துறையும் தனது பங்கை அடையலாயிற்று. எனவே 1951ம் ஆண்டிற்கு மேல் வருஷந்தோறும் ஒதுக்கப்பட்ட பட்ஜெட் விவரமாவது:—

| | | | |
|---|---|---|---|
| 1952—53 | 756890 | 1965—66 | 3421750 |
| 1953—54 | 893330 | 1966—67 | 3476100 |
| 1954—55 | 736718 | 1967—68 | 3406100 |
| 1055—56 | 758550 | 1968—69 | 4028043 |



| | | | |
|---|---|---|---|
| 1956—57 | 740375 | 1969—70 | 4871250 |
| 1957—58 | 815200 | 1970—71 | 5031890 |
| 1958—59 | 875600 | 1971—72 | 4469400 |
| 1959—60 | 951350 | 1972—73 | 5322467 |
| 1960—61 | 1078980 | 1973—74 | 5400000 |
| 1961—62 | 2437546 | 1974—75 | |
| 1962—63 | 2751593 | 1975—76 | |
| 1963—64 | 3053750 | | |
| 1964—65 | 2992200 | | |

**அபிவிருத்திப் பணிகளுக்கு ஏற்படும் செலவினங்கள் உதாரணமாக : 1970 வருஷப் பட்ஜெட் :-**

The expenditure incurred under each detailed head both under State and Central duriug 1969—70 is given below.

| DETAILED HEAD ACCOUNT | Actual expenditure from 1—4—69— to 31—3—70 as reconciled with Treasury figure. |
|---|---|
| 1. Pay of Officers | 5,989-20 |
| 2. Pay of Establishment | 11,49,569-05 |
| 3. D. A. of Establishment | 10,77,812-79 |
| 4. T. A. of Establishment | 20.731-45 |
| 5. O. C. A. of Establishment | 14,766-5ς |
| 6. Construction and repairs to school buildings | 69,100-00 |
| 7. Scholarships | 4.115,94-70 |
| 8. Equipment for schools | 9,676-80 |
| 9. Maintenance of Boarding Homes | 3.79,966-96 |
| 10. Supply of Midday meals | 6,48,225-80 |
| 11. Construction & repair of wells | 36,600-00 |



RangaRakes
tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| 12. | Books and clothings | 12,312-70 |
| 13. | Scout charges | 32,699-80 |
| 14. | Office expenditure | 6,000-00 |
| 15. | Cost of contingent staff | 11,358-35 |
| 16. | Boarding Grants | 20,870-00 |
| 17. | Other charges | 16,454-18 |
| 18. | Maintenance of Jeeps | 6,126-19 |
| 19. | Building grants to private colleges | 2,00,000-00 |
| | Expenditure Non Plan Schemes Total | 41,25,854-43 |

PLAN HEAD :—

| | | |
|---|---|---|
| 1. | Scholarships | 9,92,100-00 |
| 2. | Supply of Midday meals | 1,54,600-00 |
| 3. | OPening and maintenance of hostels | 5,652-00 |
| 4. | Agriculture—Bulls & Wells | 14,900-00 |
| 5. | Construction of houses for teachers | 23,200-00 |
| 6. | Supply of Books and slates | 13,999-60 |
| 7. | Supply clothings | 1,51,146-09 |
| 8. | Constuction of school buildings | 1,28,300-00 |
| 9. | Equipment for schools | 35,296-79 |
| 10. | Appointment of part time tutors | 334-40 |
| 11. | Appointment of addl. teachers | 14,986-60 |
| 12. | Excursion | 12,100-00 |
| | Expenditure Plan Scheme Total | 7,46,615-48 |
| | Non Plan schemes Total | 41,25,854-43 |
| | Grand Total | 48,72,469-91 |



**கல்வி:-**

பிரமலை நாட்டின் கல்வி அபிவிருத்தியானது; அரசு சமூக அபிவிருத்தித் துறையில் நிறைவேற்றியுள்ள மிகப் பெரிய சாதனையாகும் என்று சொன்னால் மிகையாகாது. மக்களாட்சியின் மாண்பை இங்கு காணலாம். மத்திய அரசு வகுத்துக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்டம், பொருளாதாரம் சீரான நிலையில் நாட்டு மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வழிகள் வகுத்துள்ளன என்றாலும் மாகாண அரசு நிறைவேற்றும் பணிகளைப் பொறுத்து இருக்கிறது.

மக்கள் ஆட்சிப் பலனடையும் அளவு 1962க்கு மேல் கள்ளர் சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ள அளவு தெளிவாகத் தெரிகிறது. அதற்கேற்பப் பணிகளும் வெகுவாக வளர்ச்சியாகக் காண்கிறோம். சுதந்திரம் அடைந்த காலத்திற்குப் பிறகு பிரமலைத்தேவமார்களின் அபிவிருத்திப் பணிகளில் கூட்டுறவுத் துறையும் கல்வித் துறையுமே வெகுவாகக் கவனம் செலுத்தலாகியது. அதிலும் 1960க்கு மேல் கூட்டுறவு மேற்பார்வை மத்திய பாங்கிற்கு விடப்பட்ட பிறகு வெகுவாகக் கவனித்து வருவதானது கல்வித்துறையேயாகும். இன்றைக்கு ஒரு சென்செஸ் எடுத்துப் பார்ப்போமானால் பிரமலை நாட்டில் தேவமார்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 10 சதத்திற்கும் குறைவாகவே இருக்குமென்பதற்கு ஐயமில்லை.

1920ல் இருந்து கட்டாய ஆரம்ப இலவசக் கல்வி அமுலில் இருந்து வந்தது. 1947க்கு மேல் கைரேகைச் சட்டம் ரத்தான பிறகும் கல்விச் சலுகை தொடர்ந்து நடந்து வருகிறது. ஆரம்பக் கல்வி மாத்திரமல்ல; உயர்தரக் கல்வி பட்டப் படிப்பு தொழில் கல்வி, சட்டப் படிப்பு இன்னும் ஆதாரமான எல்லாக் கல்விச் சலுகைகளும் அரசு வழங்கி வருகிறது. ஆகவே 55 ஆண்டுகள் அரசு செலுத்திய விசேஷ கவனத்தின் பலன் கண்கூடாக விளங்குகிறது.

RangaRakes tamilnavarasam.com

கள்ளர் சீரமைப்பு விசேஷ டெபுடிக் கலெக்டர் 51-52ல் கடந்த கால 30 ஆண்டுகளின் சாதனை என்று இதன் அடியில் கண்ட புள்ளி விவரங்களைப் பிரசுரித்திருக்கிறார் அதன்படி:—

| | |
|---|---|
| 4வது பாரம் வரை படித்தவர்கள் | 25873 |
| S. S. L. C. வரை படித்தவர்கள் | 791 |
| இண்டர் மீடியட் வரை படித்தவர்கள் | 110 |
| B. A. பட்டமும் அதற்கு மேலும் படித்தவர்கள் | 54 |
| வேலையில் இருப்பவர்கள் : ஆசிரியர்கள் | 853 |
| போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலை பார்ப்பவர்கள் | 188 |
| குமாஸ்தாக்கள் | 130 |
| இதர உத்தியோகஸ்தர்கள் | 332 |

இந்த அறிக்கை பிரசுரிக்கும்போது மேலே கண்ட புள்ளி விவரங்கள் கவர்ச்சிகரமாக எல்லோருக்கும், அது காலை தோன்றியது. அதற்குப் பிறகு 25 ஆண்டுகள் கழித்துக் கல்வி அபிவிருத்தியைக் கவனிப்போம்.

கள்ளர் சீரமைப்புத் துறையில் அரசு நடத்தி வரும் கல்வி ஸ்தாபனங்களின் விபரம். ஆரம்பப் பள்ளிகள் 204. உயர்தர ஆரம்பப் பள்ளிகள் 30. ஹைஸ்கூல்கள் 9. இந்த 243 பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்கள் 950 பேர்கள். மாணவர்களின் எண்ணிக்கை 20,000. கள்ளர் சீரமைப்புத் துறையின் கலெக்டரின் நேர்பார்வையின் கீழ், பள்ளிகளின் மேற்பார்வை அதிகாரிகள் 6 பேர்கள் பள்ளிக்கூடங்களின் வேலைகளைக் கண்காணித்து வருகின்றனர். எல்லா ஹைஸ்கூல்களுக்கும் இலவச உணவு விடுதிகள் இருந்து வருகின்றன மற்ற பள்ளிகளில் பயின்று வருபவர்களுக்கு இலவச மதிய உணவு கொடுக்கப்பட்டு வருகிறது.

கள்ளர் நாட்டின் பல்வேறு கேந்திரங்களில் இலவச உணவு விடுதிகள் தக்கபடியான மேல்பார்வையுடன் நிறுவப் பட்டிருக்கின்றன. அந்த விடுதிகளின் பக்கத்து ஊர் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகள் அங்கு தங்கியிருந்து வசதி



யடைந்து வருகின்றனர். உணவு விடுதிகளாவன (1) உசிலம்பட்டி, வத்தலகுண்டு, கோசகுளம், செக்கான் ஊரணி, ஞானஒளிபுரம், திண்டுக்கல், திருமங்கலம், நாட்டாமங்கலம், உத்தமபாளையம், கடமலைக்குண்டு, பாப்பாபட்டி, உசிலம்பட்டி மாணவிகள் இல்லம், திருமங்கலம் மாணவிகள் இல்லம், சின்னமனூர் மாணவிகள் இல்லம், கம்பம் மாணவிகள் இல்லம்: இந்தப்பதினைந்து இடங்களிலுமிருந்து படிப்பவர்கள் 2500 பிள்ளைகளாகும். இதைத் தவிர தனியார் ஸ்தாபனங்கள் பத்து பிரமலைத்தேவர்களுக்கு உணவளித்து வரும் வகைக்கு அரசுக் கிராண்டு பெற்று வருகின்றனர். அந்தப் பத்து இடங்களிலும் படிப்பவர்கள் 150 பேர்கள். கள்ளர் சீரமைப்புத்துறையின் நிர்வாக எல்லைக்கப்பால் உள்ள உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், தொழில் துறைகள் ஆகியவிடங்களில் படிப்பவர்களுக்கு உணவுச் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது.

எனவே சகல வசதிகளுடனும் பல்வேறு துறைகளிலுமிருந்து பயின்று வருபவர்களின் எண்ணிக்கை 25000 எனத் தெரிய வருகிறது. இவர்கள் கல்வி கற்று வருங்காலத்தில்; மிகவும் பலனுள்ளதாகிய சாரணப் பயிற்சியும் பெற்று வருகிறார்கள். இப்பயிற்சி 1921ம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு முக்கிய கல்வி அம்சமாகவும் கருதப்பட்டு வருகிறது. ஆண்களுக்கெனவும் பெண்களுக்கெனவும் தனித்தனியாக சாரணப்படை அமைப்பும் நிர்வாகமும் செயல்பட்டு வருகிறது.

ஆண்கள் பகுதியில் குருளையர் படையினர், சாரணர் படையினர், ரோவர் படையினர் ஆகிய பிரிவுகளுண்டு. இவைகளில் மொத்தம் 200 படைகள் அமைக்கப்பட்டு அப் படைகள்; மாஸ்டர்கள், லீடர்கள் ஆகியவர்களின் கீழ் பயின்று வருகின்றனர். இவ்வியக்கத்தை அபிவிருத்தி செய்ய பிரத்தியேக அதிகாரிகள் இருவர் இருந்து வருகின்றனர். ஆண்கள் பிரிவில் இருந்து வரும் சாரணர்கள் 2700 பேர்கள் அதேபோல பெண்கள் பகுதியில்; புல் புல் படையினர். கன்னியர் சாரணப்படையினர் ஆகிய பிரிவுகளுண்டு.

RangaRakes tamilnavarasam.com

இவைகளில் மொத்தம் 110 படைகள் அமைக்கப்பட்டு அப்படைகள் தக்கதோர் பெண்கள் தலைமையில் பயின்று வருகின்றனர். பெண் சாரண அதிகாரி (அமைப்பாளர்) தனியே இந்த வேலைகளை கவனித்து வருகிறார்.

சாரணப் பயிற்சிக்கு ஏற்படும் செலவினங்கள் சீருடைகள் யாவும் அரசு கொடுத்து வருகிறது. தேவமார் பிள்ளைகள் தேகப் பயிற்சியிலும்; போட்டிப் பந்தயங்களிலும் எப்படி வல்லவர்களோ அதே போல சாரணப் பயிற்சியில் கைதேர்ந்தவர்களாய் விளங்கி வருகிறார்கள். ஒழுக்கம், கட்டுப்பாடு சேவா மனப்பான்மை ஆகியவைகளைப் பெரிதும் வளர்த்து நாட்டிற்கும் கள்ளர் சீரமைப்புத் துறைக்கும் பெரும்புகழும் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதைக் காணும்போது யார்தான் மகிழாமலிருப்பார்?

இப்படியாகச் சென்ற 55 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வரும் கள்ளர் சீரமைப்புத் துறையில் கல்வி கற்று வெளிப்போந்தவர்கள் எந்த நிலையிலுள்ளனர் என்பதைப் பற்றிக் கவனிப்போம். 1920ம் வருடம் கட்டாயக்கல்வி ஆரம்பிக்கப்பட்ட பிறகு கள்ளர் சீரமைப்புத்துறையின் சலுகையுடன் கல்வி பயின்று முன்னேறிய பிரமலைத் தேவமார்கள் புள்ளி விவரம். இதில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் விபரம் துல்லியமாக கணக்கெடுக்கப்பட்டவை. மற்றவை கூடிய மட்டிலும் உத்தேசமாக கொடுக்கப்பட்டுள்ளன

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் வரிசையில் I.A.S மட்டத்தில் வருபவர்கள் இருவர். ஒருவர் V.K.C. நடராஜன் மற்றவர் V.K.C. நடராஜனின் புதல்வர் என். பாலபாஸ்கரன்

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்

| | | |
|---|---|---|
| 1 | பொறியியல் துறை | 30 |
| 2 | வழக்கறிஞர்கள் | 20 |
| 3 | வருவாய்த்துறை | 15 |
| 4 | கல்வி இலாகா | 14 |
| 5 | காவல்துறை | 12 |
| 6 | மருத்துவர்கள் | 8 |



| | | |
|---|---|---|
| 7 | விவசாய இலாகா | 5 |
| 8 | நீதித்துறை | 5 |
| 9 | காதி | 5 |
| 10 | அறநிலைய பாதுகாப்பு | 4 |
| 11 | பாதுகாப்புத்துறை | 3 |
| 12 | மத்திய சுங்க இலாகா | 7 |
| 13 | மத்தியசிறை | 1 |
| 14 | போக்குவரத்து | 1 |
| 15 | வனத்துறை | 1 |
| | | 127 |

| | |
|---|---|
| அரசிதழ் பதிவு பெறாத அரசு அலுவலர்கள் | 5000 |
| தனியார் துறை அலுவலர்கள் | 3000 |
| வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் | 500 |
| வேலையில்லாத் தொழில் நுணுக்கர்கள் | 1000 |
| வேலையில்லாப் பட்டதாரி அல்லாதவர்கள் | 4000 |
| தங்கள் சொந்த நிலத்தில் விவசாயம் செய்கிறவர்கள் பட்டதாரிகள் உள்பட | 15000 |

## பிரமலை நாட்டில் ரேகைச்சட்ட அமுல் காலத்து காங்கிரஸ் இயக்கம் :

கைரேகைச் சட்டம் அடக்குமுறைப் பிரயோகக் காலத்தில் பிரமலைத் தேவமார்கள் காங்கிரஸ் இயக்கத்தில் சேர விடாமல் தடுத்து ஒடுக்குவதை முக்கியமாகக் கருதியது வெள்ளையர் அரசு. அக்கொடிய சட்டத்தையும் மீறி இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கத்தில் பிரமலைத் தேவமார்கள் அங்கத்தினர்களாக விருந்து தொண்டாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெருங்காமநல்லூர்ப் படுகொலைக்குப் பிறகு காந்திமகான் மதுரை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது ஜார்ஜிஜோசப் தலைமையில் காங்கிரஸ் தலைவர்கள் கள்ளர் தலைவர்களை அறிமுகப்படுத்திப் பிரமலை நாட்டில் மக்கள் அரசின் சட்டப் பிரயோகத்

RangaRakes
tamilnavarasam.com

தால் நசுக்கப்படுவதை எடுத்துரைத்தனர். அது சமயம் தான் கைரேகைப் பதிவுசெய்ய மறுத்த 150 கள்ளர்களைக் கைது செய்து வழக்காடிக் கொண்டிருந்த சமயம்.

செக்கான் ஊரணியில் வைத்துக் காந்திமகான் தரிசனம் பெற்ற கள்ளர்கள் பலர் மகாத்துமாவின் அரசியல் கொள்கையில் பற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றலாயினர். அவர்களில் சில பெயர்கள்

1. சூசை வாத்தியார் சாத்தங்குடி
2. முத்துப்பேயத்தேவர் உச்சப்பட்டி
3. சின்னச்சாமித்தேவர் உத்தமபாளையம்
4. சோலைமலை வாத்தியார் கீழக்கூடலூர்
5. கணபதித்தேவர் கிண்ணிமங்கலம்
6. பெரிய பேயாண்டித்தேவர் மூணாண்டிபட்டி
7. பேயாண்டித்தேவர் தேங்கல்பட்டி
8. சிக்கம்பட்டிப் பேயத்தேவர்
9. கொன்னவாய் ராஜ் கழுதைப்பாரைபட்டி
10. வெள்ளைச்சாமித்தேவர் செக்கானூரணி
11. சி. அய்யர்த்தேவர் தேங்கல்பட்டி

இவர்கள் காந்திய அகிம்சைக் கொள்கை, காந்தியின் பொருளாதாரம் ஆகியவைகளில் நம்பிக்கை வைத்துக் கதர் கைத்தொழில் செய்துகொண்டு இருந்த இடம் தெரியாமல், போலீஸ் கண்ணுக்குப்படாமல் வாழ்ந்த சாந்தமூர்த்திகள். ஆனால் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் தலைவர்கள் பாலும் தொடர்பு கொண்டிருந்து அரசியல் செய்து வந்தனர் 1920ம் 1921ம் ஆண்டில் அரசியல்வாதிகளும், அரசாங்கத் தார்களும் ஒத்துழையாமை இயக்கத்தில் மண்டி மோதிக் கொண்டிருந்தபடியால் கள்ளர் நாட்டில் காந்தி பக்தர்கள் கதர் கட்டும் அளவில் வளர்வதைக் கண்டு அதிர்ச்சியுராமல் விட்டு விட்டனர்.

1928ல் சைமன் கமிஷன் பகிஷ்காரம் வந்தபோது காங்கிரஸ் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்க காலங்களில்



அடைந்த அநுபவங்களுடன் ஜில்லாவெங்கும் உத்வேகத்துடன் எழுந்து எதிர்க்கோசமிட்ட போது பிரமலைநாடு பெருமிதத்தோடு வெள்ளையனை வெருட்ட வரிந்துகட்டத் தவறவில்லை. அது காலை பிரச்சார வன்மையுடைய இளைஞர்கள் மேலும் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தனர் அவர்களில் சிலர் பெயர்கள்.

1. சொக்கத்தேவன் பட்டி முத்துக்காளைத்தேவர்
2. வாகைக்குளம் சுப்பையாத்தேவர்
3. வலையபட்டி தியாகி வீரணத்தேவர்
4. கொக்குளம் கஸ்தூரி மாயாண்டித்தேவர்
5. மூக்கத்தேவர் புளியங்குளம்
6. கணபதித்தேவர் கிண்ணிமங்கலம்
7. முத்துத்தேவர் ஒத்தப்பட்டி
8. நல்ல பெருமாத்தேவர் ஆரியபட்டி
9. தினகரசாமித்தேவர் கீழூர்
10. பாலர்பட்டி முத்தையாத்தேவர்
11. சின்னக் கருப்பத்தேவர் கரிமேடு

1940-ஆம் ஆண்டுக்கு மேல்நாட்டில் கற்றறிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அரசியல் விழிப்பு உயர்ந்தது. ஆனால் அடக்குமுறை ராக்ஷச சுபாவம் அடைந்தது. வெள்ளை அரசுக்கு வெறி பிடித்த காலம். தேச மக்கள் உயிரை வெறுத்த நேரம்.

பிரமலைத் தேவமார்களை எத்தனை அடக்குமுறைச் சட்டத்தில் கட்டிவைத்திருந்தாலும் 1942ல் தேசியத்தேவர் சமூக மக்கள் காந்தி மகான் ஆணைக்கு இணங்கி தனி நபர் சத்தியாக்கிரகத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் குதித்துச் சிறை சென்றனர். அவர்களில் சிலர் :

1. உத்தமபாளையம் சின்னச்சாமித்தேவர்
2. சொக்கதேவன்பட்டி முத்துக்காளைத் தேவர்
3. வலயப்பட்டித் தியாகி வீரணத்தேவர்
4. ஆரியபட்டி நல்லபெருமாள் தேவர்

RangaRakes tamilnavarasam.com

5. தினகரசாமித்தேவர் கீழூர்
6. முத்துத்தேவர் ஒத்தப்பட்டி

இவர்களில் பலர் பயங்கரக் கைதிகளாய் அலிபுரம் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டனர். அத்துடன் 1942 கலவரத்தின் போது பள்ளிகளில் பயின்று கொண்டிருந்த பாலர்கள் துள்ளிக்குதித்துப் பெரியோர்கள் வழியில் அணி வகுத்து நின்றனர். அப்படிப்பட்ட நூற்றுக்கும் அதிகமானவர்களில் சிலரின் பெயர்கள் : 1. அயோத்திபட்டிக் காமணன் 2. பாப்பாபட்டி மூக்கையா, 3. விளாம்பட்டிச் சின்னன், 4. உச்சப்பட்டிக் கந்தசாமி 5. உச்சப்பட்டி மாயன் 6. கூடலூர் ராஜாங்கம். இவர்களே தேவர்கள் என்னும் பட்டத்துடன் அரசியல் வாழ்வில் இன்று முக்கிய இடம் பெற்றுள்ளனர்.

# பட்டங்கள் பதவிகள் பெற்ற முக்கிய சமூகப் பெருமக்கள்

## கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும்

(1) டென்னிஸ் ராஜா:

ராஜா சாகிப் ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி அவர்கள் மற்றும் அவரது பார்ட்னர் திரு சிவசாமி அவர்கள் இருவருமாகவும், ராஜாசாகிப் தனிப்பட்டும் பாரதமெங்கும் விளையாடினர். நம்நாட்டு டென்னிஸ் வீரர்கள் சுதேச மன்னர்கள், வெளிநாட்டினர் யாவருடனும் விளையாடிப் பெரும் புகழ் பெற்றனர். ராஜா சாகிப்பிற்கு ஸ்டைலில் பிளேயர் என்று பெயர். டென்னிஸ் ராஜா என்ற பட்டம் நாட்டு மக்களால் வழங்கப்பட்டது. அதன் பிறகு இவர்கள் தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையில் விளையாட்டு மந்திரி பதவி கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

(2) பத்மஸ்ரீ:

திரு சிவாஜிகணேசன் எம்.பி. அவர்களுக்கு பாரத அரசு, நடிப்புக் கலையில் சிறந்து விளங்கியமைக்குப் பாராட்டி பத்மஸ்ரீ என்னும் தேசிய விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

(3) சிரமவீரன்:

Shram Vir National Award (S) 1976 திருச்சிராப்பள்ளி அரசு துப்பாக்கித் தொழிற்சாலையில் பணியாற்றும் திரு.

RangaRakes

tamilnavarasam.com

டி. மகாலிங்கம் அவர்கள் சிரமங்களைப் பொருட்படுத்தாமல் விடா முயற்சியால் உயர்தர இரும்புப் பக்குவத்தில் இலாபகரமான புதிய கண்டுபிடிப்புச் செய்து தேசத்திற்குப் பயன்படுத்தினர். இந்த அபூர்வக் கண்டுபிடிப்பைப் பாராட்டி மத்திய மாநில அரசுகளின் சிரமவீரன் பட்டத்தையும் ரொக்கப் பணத்தையும் அடைந்துள்ளார்கள். இவர் மதுரை மாவட்டம் செக்கான் ஊரணி என்னும் சிற்றூர் பிரான் மலை நாட்டார்.

(4) திரு சந்திரன் ஜெயபால் Ex M.L.A. பிரபல ஹாக்கி விளையாட்டு வீரர். தனது திறமையால் தமிழக ஹாக்கி அணியின் செயலாளராகஇருந்து அணியுடன் வெளிநாடுகள் பல சென்று விருதுகள் பெற்றவர்.

(5) திரு. பி. பால்சாமித்தேவர் அகில இந்திய ரயில்வே பொறியாளர். பளு தூக்கும் போட்டியில் சென்னை நகரில் 1954ல் மிடில் வெய்ட் சாம்பியன். அகில இந்தியப் போட்டியிலும் 1934ல் பரிசு பெற்றவர். மதுரை மாவட்டப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். U.S.S.R. பயிற்சிக் கழகத்தால் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டவர். மோட்டார் சைக்கிளில் இந்தியாவைச் சுற்றித் தன்னந்தனியாகப் பிரயாணம் வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கிறார்—மதுரை மாவட்டதில் நாட்டா மங்கலம் என்னும் சிற்றூரில் உள்ள பிரான் மலை நாட்டவர்.

மாஜி சுபேதார்:

முத்துச்சாமித்தேவர்: மதுரை மாவட்டம் அய்யோத்திபட்டி என்னும் சிற்றூர் மதுரை ஜில்லாப் பள்ளிகளின் வருஷாந்திரப் போட்டி விளையாட்டில் கிரிக் மெடல் பெற்றவர். ராணுவத்தில் சேர்ந்த பிறகு 1947ல் இருந்து 1950 வரை ஓட்டப் பந்தயத்தில் அதிகமான மெடல்கள் பெற்றவர். மாநில மட்டங்களில் பல வெற்றிகள் பெற்று விளங்கினர். இந்திய தேசியப் பிரதிநிதியாக ஏசியன் நாடுகளில் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்.



(7) குழந்தை செல்வி ஜெபா நியூமென்:

கோவை நகர் 1979ல் தமிழகத்தில் சிறந்த ஸ்போர்ட்ஸ் வுமென் (பெண்கள்) ஆக பிரசித்தம் பெற்றவர். 1976—81 வரை தொடர்ந்து 6ஆண்டுகள் உயரந்தாண்டுதலில் 1.48மீ ரெக்கார்டு (பாலி கேரளா) Puneவில் நடந்த ஏசியன் விளையாட்டில் 1.61 மீ புதிய ரெக்கார்டு ஏற்படுத்தியுள்ளார்.

[8] பி. ஜெயராஜ் போலீஸ் இன்ஸ்பெக்டர் சொந்த ஊர் மதுரை மாவட்டம் கருமாத்தூர். பிரான் மலைநாடு 1957ல் சென்னை பல்கலைக்கழகப் போட்டியில் 162.8 அடி தூரம் ஈட்டி எறிந்து பரிசு பெற்றவர். 1959ல் அகில இந்திய போட்டியில் ரிக்கார்டு 189.6 அடி. 1964ல் தமிழ்நாடு போலீஸ் போட்டியில் ரிக்கார்டு 184.3 அடி. 1966ல் இந்திய தேசியப் போட்டியில் 4வது ஸ்தானம். ஒவ்வொரு போட்டியிலும் மெடல்கள் பெற்றது போக அதிகமான ஜெயங்களும் பரிசுகளும் பெற்றுள்ளார்.

(9) ஒரத்தநாடு ராஜகோபாலன் சிறந்த நெட்டு ஓட்டக்காரர் 1929 முதல் 1932 வரை தமிழகம் பாரதப் போட்டிகளில் 5 மைல் போட்டியில் வெற்றி பெற்றவர்.

(10) திரு பெருமாள்தேவர் M.A.B.L. தமிழக சிறைத்துறை அதிகாரி பளு தூக்குவதில் ஒப்பற்ற வீரர். தமிழகம் மாநிலங்கள், பாரதப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

## எம். லிட்; எம். பில், பி. எச்டி முதலிய ஆய்வுப்பட்டம் பெற்ற அறிஞர்கள்

1. டாக்டர் சி. இலக்குவனர் (தமிழ்)
2. டாக்டர் கதிர்வேலு (வரலாறு)
3. டாக்டர் இரா. சேது (தமிழ்)
4. டாக்டர் ந. செயராமன் (தமிழ்)
5. டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம் (தமிழ்)
6. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (தமிழ்)

RangaRakes tamilnavarasam.com

7. டாக்டர் அரங்கவடிவேலம் (தமிழ்)
8. டாக்டர் தட்சிணுமூர்த்தி (தமிழ்)
9. டாக்டர் M. S. பழனிசாமி (பொறியியல்)
10. டாக்டர் சண்முக சுந்தரம் (தமிழ்)
11. டாக்டர் புஸ்பாமதன் (நாட்டுப்பண்)
12. டாக்டர் ப. சுப்பிரமணியம்
13. டாக்டர் திருமதி. சிவகாமசுந்தரி
14. இராஜ் பவுன்துரை M.A; P.G.D.T; D.G.T; Phd. ஆராய்ச்சியாளர் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
15. டாக்டர் காந்தி (தமிழ்)
16. டாக்டர் பா. வீரப்பன் (தமிழ்)
17. டாக்டர் T. C. மோகன் (பொருளாதாரம்)
18. டாக்டர் மா. இராமலிங்கம் (தமிழ்)
19. டாக்டர் வேதையன் (வேதியல்)
20. திரு D. செல்லப்பா MA. (Eco)MA (Pol) M.Lit.

## வெளிநாடுகளில் பணிபுரிவோர்

1. T. M. பாலசந்திரன் M. A; M.B.A. இவர் தமிழக அரசின் தலைமைப் பொறியாளர் (நீர்பாசனத்துறை) திரு. மணவாளன் அவர்களின் புதல்வர். அமெரிக்காவில் மிட்லாண்ட் டெக்ஸாஸ் என்னுமிடத்தில் உள்ள First Nation Bank ல் அதிகாரியாகப் பணிபுரிகிறுர்.

4. ஸ்ரீவில்லிபுத்தூர் திருமலை தேவர் அவர்களின் மகன் டாக்டர் T. நாகராஜன் M. D. அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்ஸியில் பணிபுரிகிறுர்.

5. திரு. V. ரவீந்திரன் B.A; B.E (Hons) சிவில் என்ஜினீயர் ஈராக்கில் கன்ஸ்ரக்ஷன் மானேஜராக இருக்கிறுர். திருநெல்வேலி மாவட்டம் வண்ணமுத்து அவர்களின் புதல்வர்.



6. டாக்டர். P. வெங்கடாசலம். M.B.B.S; A.B Pet (USA) குழந்தை வைத்திய நிபுணராக அமெரிக்காவில் பணி புரிந்தார். தஞ்சை மாவட்டம் திரு. பத்தநாபப் பொன்னுப் பூண்டார் அவர்களின் புதல்வர்.

7. இராஜபாளையம் பெரிய சுரைக்காய் பட்டி இராமர் B. E. கனடாவில் பணியாற்றுகிறுர்.

2. டாக்டர் K. சிவராமன் M. B. B. S; இவர் திருச்சி மாவட்டம் பிச்சாண்டார் கோவில் கிருஷ்ணசாமி நாட்டார் அவர்களின் புதல்வர். லண்டனில் இவர் பயிற்சிக் காலத்தில் இருந்தபோது மெய்யப்பச் செட்டியார் போன்ற தமிழர்களின் உதவியால் அங்கு முருகன் கோவில் கட்டி அதன் கும்பாபிஷேகத்தையும், தமிழ்ச்சங்கம் ஒன்றும் ஏற்படுத்திய பெருமையும் இவரைச் சேரும்.

3. முன்னுள் சபாநாயகர் செல்லப் பாண்டியன் அவர்களின் புதல்வர் டாக்டர் ஜெயராம் M. D. அவர்கள் அமெரிக்காவில் மருத்துவராகப் பணிபுரிகிறுர். இவர் ஒரு காந்தியவாதி காங்கிரஸ் கட்சித் தலைவர் வரதராஜ நாயுடுவின் புதல்வியை கலப்புத் திருமணம் செய்துள்ளார்.

8. இராஜபாளையம் சொக்கர் கோவில் தெரு சக்தி B. E. அமெரிக்காவில் பணியாற்றுகிறுர்.

## இராணுவ உயர் அதிகாரிகள் :

மேஜர் ஜெனரல் S. P. மகாதேவன். B.A. (Hons) PSC; NDC; FBIM (UK). இராஜபாளையம் அருகில் உள்ள சேத்தூர் சொந்த ஊர். சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் 1946ல் இராணுவத்தில் சேர்ந்தார். 1947ல் காஷ்மீர் நடவடிக்கையில் சிறப்பான சேவை புரிந்தார். 1957ல் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்று தனது திறமையினுல் படிப்படியாகப் பல பதவிகளைப் பெற்று முன்னேறினுர்.

1961ல் நடந்த கோவா நடவடிக்கையில் சிறப்பாகப் பணியாற்றினுர், 1962ல் ஐ.நா. சபையின் அமைதிகாக்கும்

RangaRakes
tamilnavarasam.com

படைப் பிரிவில் காங்கோவில் சேவை புரிந்தார். 1967ல் பிரிகேடியர் அந்தஸ்து பெற்றார். 1971ல் நடந்த பாரத பங்களாதேஷ் போரில் அவரது ஒப்பற்ற சேவையைப் பாராட்டி இந்திய அரசு AVSM மெடல் கொடுத்து அவரை கௌரவித்தது.

1972ல் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்ற இவர் காஷ்மீரில் உள்ள லடாக்-திபேத்தியன் எல்லைப் பகுதிக்குப் பொறுப்பேற்றார். 1977ல் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடக ஆகிய பிராந்தியங்களின் இராணுவ தளபதியாகப் பொறுப்பு ஏற்று இந்திய ராணுவத்திற்கு சிறப்பான சேவை புரிந்தார்.

தனது ஓய்வுகாலத்தில், தமிழக அரசு அளித்த தேர்வாணைக் குழுவின் தலைவர் பதவியை ஏற்று சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்.

1. மேஜர் P. கருப்பையா H. Servan இவர் சின்னமனூர் அருகில் உள்ள அத்திபட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர். மேஜர் பதவியை ஏற்று பலதரப்பட்ட வீரச்செயல்கள் புரிந்தவர்.

2. A. சதானந்தத் தேவர் I.A.F. முகவை மாவட்டம் வத்திராயிருப்பைச் சேர்ந்த அய்யணத் தேவரின் மகன். விமானப்படைத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்று ஐ.நா சபையின் அமைதி காக்கும் படையில் காங்கோவில் பணியாற்றினார்.

3. M. சீனிவாசன் Most Warrant Officer I.A.F. மதுரை மாவட்டம் T. கல்லுப்பட்டியின் பக்கம் உள்ள கரையான் பட்டியைச் சேந்தவர்.

4. ராஜசேகரன் L.T.C. கமாண்டர். மதுரை மாவட்டம் மதிப்பனூர் கிராமம். இந்தியக் கடற்படையில் உயர்தர அதிகாரி. பிரமலைக் கள்ளர்.



திரு. P. சின்னத்தேவர் அவர்கள் விளாம்பட்டி மதுரை மாவட்டம். இந்திய கடற்படையில் அரும்பெரும் சேவை ஆக செய்த வீரத்தளபதி.

I.F.S. சர்வீஸ்

1. Captain திரு சதானந்தம்
2. ,, பாஸ்கரதாஸ். வனத்துறை கோவை கல்லூரி
3. ,, S.V. நாச்சிமுத்து, வனத்துறை, மாவட்ட அதிகாரி கோவை.
4. K R நல்லதம்பி, வனத்துறை, மாவட்ட அதிகாரி

I.P.S. Service

1. திரு. பொன் பரமகுரு
2. ,, தங்கையன்
3. ,, நாராயணசாமி
4. ,, பழனிவேல்
5. ,, R.N. அண்ணாசாமி
6. ,, E.P. மாரியப்பன்
7. ,, இராஜ மாணிக்கம்
8. ,, ஜெகநாதன்
9. ,, பஞ்சாபகேசன்

I.A.S. சர்விஸ்

1. திரு. S. தாயப்பத்தேவர்
2. ,, R.S. மலையப்பன்
3. ,, T. M. பாஸ்கரத்தொண்டைமான்
4. ,, V.K.C. நடராஜன்
5. ,, V.K.C.N. பாலபாஸ்கரன்
6. ,, U.S. நடராஜன்
7. ,, N. சிவநேசன்
8. ,, M.M, சந்திரஹாசன்

...30

RangaRakes
tamilnavarasam.com

9. ,, U. சுப்பிரமணியம்
10. ,, S. சிவசுப்பிரமணியம்
11. ,, SR. கருப்பணன்
12. ,, TS. செல்வராஜ்
13. ,, M. பெரியசாமி
14. ,, R. மலைச்சாமி
15. ,, AN. தயனேஸ்வரன்
16. ,, V. பழனிச்சாமி
17. ,, M. கருப்பையா
18, " R. கற்பூரசுந்தரபாண்டியன்
19. ,, S. ராமசுந்தரம்
20. ,, N. சுந்தரமூர்த்தி

## மாநில உயர்மட்ட அதிகாரிகள்

1. திரு. ராமசுப்பிரமணியம். Ex. தலைவர். T.N.P.S.C
2. ,, ரத்தினவேல் பாண்டியன். நீதிபதி, சென்னை உயர் நீதி மன்றம்
3 ,, மணவாளன் தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை.
4 ,, சுந்தரராஜன் நூலகர். கன்னிமரா நூலகம் சென்னை.
5 ,, V. முத்துப்பெருமாள். இணைஇயக்குனர் விவசாயத் துறை
6 ,, K. பெருமாள்த்தேவர். இணை இயக்குனர், பதிவுத் துறை
7 ,, பாலசுப்பிரமணியம் பொறியாளர்
8 ,, K T குருசாமித்தேவர் பொறியாளர்
9 ,, ராமன்பிள்ளை. இணை செயலாளர், கல்வித்துறை.
10 ,, செல்வராஜ் இணை இயக்குனர் கிராமக் கைத் தொழில்
11 ,, ஆதிநாராயணன், இணை இயக்குனர், கிராமக் கைத்தொழில்



12 ,, V. மொக்கசாமித்தேவர் இணை இயக்குனர், கூட்டுறவு துறை
13 ,, K. R. நடராஜன் அரசு வழக்கறிஞர், உயர் நீதி மன்றம் சென்னை
14 ,, மருதுசாமி துணைச்செயலாளர் தலைமைச்செயலகம்
15 ,, C. P. ராஜு உதவிச் செயலாளர், நிதித்துறை
17 ,, சேவுக பாண்டியன். கமிஷனர், முனிசிபாலிடி
18 ,, வெள்ளிமலைப் பாண்டியன் தமிழக சயலகம்
19 ,, சுப்பிரமணியத்தேவர், இணை இயக்குனர், கல்வித் துறை
20 ,, பெருமாள்த்தேவர், தமிழக சிறைத்துறை
21 ,, S. ருத்ராபதி தென்கொண்டார் முன்னாள் பேராசிரியர், தமிழ்த்துறை. மைசூர் பல்கலைக் கழகம்
22 ,, ஜான் ஐசக் முத்தையா, முன்னாள் கமிஷனர் அகில இந்திய சாரணர் பயிற்சித்துறை
22 ,, திவான் பகதூர் பவானந்தம் பிள்ளை, முன்னாள் பிரதம போலீஸ் அதிகாரி சென்னை மாகாணம்
23. பழனி அரங்கசாமி, MA., BOL. பேராசிரியர், மதுரைக் காமராஜ் பல்கலைக் கழகம்

## மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் உதயம்

வாடிப்பட்டியில் நடந்த முக்குலத்தோர் மாணவர் மகா நாட்டில் கலந்துகொண்ட மதுரைநகர்ப் பிரதிநிதிகளினி டையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி காரணமாக, மதுரைநக ரில் சமூகசங்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற முடிவு ஏற் பட்டது. 1 திரு. P. பூமாலை 2 திரு. M. R. பொக்கிஷம் 3. திரு. சின்னச்சாமி B E 4. திரு. K. V. M. தவமணி 5 திரு சோமுத்தேவன் ஆகியவர்களின் முயற்சியால் 1969 ஆண்டு பிப்ரவரி மாதம் மதுரை, திருநகரில் வைத்து திரு கலியாணசுந்தரம், B.E.,A.E., அவர்கள் தலைமையில் ஓர் சிறப்புக்கூட்டம் நடத்தலாகியது. மாவட்டம் முழுவதிலு மிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூடியவர்கள் எல்லோருமே படித்தவர்கள், பட்டதாரிகள். சமூக ஒற்றுமை மக்களின் கல்வி பொருளாதார அபிவிருத்தி ஆகியவைகள் மேன்மேலும் வளர்ச்சியடைய, சமூக மக்களிடையே சுயமுயற்சியும், பரஸ்பர உதவியும் வளர்வதற்கு சமூகச்சங்கம் அமைக்கவேண்டும். அதில் மிகையாகப் படித்தவர்கள் பொறுப்பேற்றுப் பாடுபடவேண்டும். என்று முடிவெடுத்தனர். அதன்படி, மதுரை மாவட்டம் மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் அமைந்தது. நிர்வாகக் கமிட்டி ஆறுபேர்கள் கொண்டது. தலைவர் திரு முத்தையா அவர்கள் M. B. B. S. M. Sc.

அரசியல் சார்பற்ற சமூக அடிப்படையில் மிகவும் பொறுப்பான கல்விமான்களிடையே தோற்றுவிக்கப்பட்ட கழகம் எல்லோர்களுடைய ஆதரவையும் பெற்றது. நாட்டு மக்கள் பெரிதும் ஆதரவு காட்டினர். அங்கத்தினர்கள் பட்டியல் பெருகியது. தக்கபடி சட்ட திட்டங்கள் வகுக்கலாகி, மூக்குலப் பெருமக்களின் ஆசிபெற்று; சங்கம் பதிவு சட்டப்படி 58/69 எண்ணின்படியாக மதுரை மாவட்டம் மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. தினை, தினை, நளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆக்க வேலைகள் செய்து வரும் கழகம் தமிழகமெங்கும் பிரசித்தமடைந்தது. கிளை ஸ்தாபனங்கள் நாடெங்கிலும் அமையத் தலைமைச் சங்கம் வேண்டுகோள் விடவே கிளைச் சங்கங்கள் தோன்றலாயின. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் திரு செல்லப்பா அவர்களும் மேலூரில் திரு சின்ன அடைக்கன் அவர்களும் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களால் கிளைச்சங்கங்கள் தோன்றின. நிர்வாகக் கமிட்டியார்கள் சங்க விதிமுறைகளின்படி செயலாற்றி வருவது தெரியவருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் Dr. அருணாசலம் B.V.S.C திரு. செந்தூர்பாண்டியன் B.A.; ஆகியவர்கள் மக்கள் மனதில் அபிவிருத்திப் பணியைப் பரப்பவே மேல்மட்டத்தில் மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் அமைந்து. சிறப்பாக முன்



னேற்றமடைந்து வருவது; அங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 18 கிளைக்கழகங்களின் எண்ணிக்கையிலிருந்து தெரியவருகிறது. நிர்வாகக் கமிட்டிகளில் ஆர்வமிக்க இளைஞர்கள் பங்குகொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு வழிகாட்டியாய் விளங்கி வருவதுகண்டு மகிழ்ச்சியாக இருக்கிறது.

முகவை மாவட்டத்தில், திரு. இராஜமாணிக்கம் B. A. B. L., பகீரத நாச்சியப்பன் ஆகியவர்களின் முயற்சியால் இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இரண்டு இடங்களில் தலைமைக் கழகங்களும், 36 கிளைக் கழகங்களும் தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது. சென்னை எண்ணூரிலும், சென்னை மாநகரிலும் ஆரம்பமாகிய சங்கங்கள் வெகுவாகச் சமூகத்தொண்டு புரிந்து பொதுவாக அபிவிருத்திப் பணிகளும் ஆக்கல் வேலைகளும் செய்து வருகிறார்கள். அங்கத்தினர்கள் தொகை வெகுவாகப் பெருகி வருகிறது. கிளைச் சங்கங்கள் தோற்றுவிக்கும் பணியில் எண்ணூர் திரு. பெரிய கருப்பன் அவர்களும்; சென்னை விவேகானந்தாக் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திரு ராமன் அவர்களும் பிரயாசத்தனங்கள் செய்து வருகின்றனர். அத்துடன் திருச்சியில் Dr. சிவகண்ணு, N. P. மாணிக்கம், பரமசிவம் ஆகியவர்கள் கழகங்களை அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் சமூக மக்களுக்குத் தொண்டு செய்ய அடிப்படைப் பொறுப்புள்ள நிதியும் நிர்வாகமும் தேவை என உணரப்படுகிறபடியால் அதை மேற்கொள்ளுவதற்கு மாநில மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் மதுரையில் அமைக்கப்பட்டு இருக்கிறது. அக்கழகத்தின் தலைவர் திரு P. முத்துமாயத்தேவர் அவர்கள். நிர்வாகக் கமிட்டியில் 22 நபர்கள் இருந்து வருகிறார்கள். இக்கழகத்தில் அமைப்பாளராகப் பணியாற்றி வருபவர் ஸ்ரீ ஆண்டியப்பன் அவர்களின் பொறுப்பான பிரச்சாரமாகும். மதுரைமாநகர் நிர்வாகத்தை மாத்திரம் கவனித்துக் கொள்வதற்கு மதுரைநகர் மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கழகத்தின் தலைவர் திரு நடராஜத்

RangaRakes
tamilnavarasam.com

தேவர் அவர்கள் B. A. மாநகர் நிர்வாகக் கமிட்டியில் 19 அங்கத்தினர்கள் இருந்து வருகிறார்கள்.

## 1975க்குப் பிறகு மூ. ப. க. களின் அபிவிருத்திகள் :

மதுரையில் கல்யாண மண்டபவேலை திருப்பரங்குன்றத்தில் வைத்து நடந்து வருகிறது. 1975க்குப் பிறகு எடுத்த முயற்சியால் கட்டிட வேலை துரிதமடைந்து வருகிறது. மதுரை நகர்கிளை, மதுரை மாவட்டக்கிளை தமிழக மாநிலம் ஆகியவைகளின் கூட்டு முயற்சியால் மண்டபம் கட்டும் பொறுப்பு இருந்து வருகிறது.

மதுரை மாவட்ட மேலூர்கிளைக்கழகம் மேலூர் நகரில் பத்து லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் ஒரு மாபெரும் கல்யாண மண்டபம் கட்டி முடித்திருக்கிறது இதர மூவேந்தர் பண்பாட்டுக்கழகங்களுக்கு மேலூர் கழகம் ஒரு முன் மாதிரியாக நடந்து காட்டுகிறது. இவர்களின் ஒற்றுமையும் அயராத உழைப்பும் கண்டு மக்கள் மகிழ்கின்றார்கள்.

கடலூர் மாவட்டக்கிளை நெய்வேலியில் சிறப்பாக சேவைகள் செய்து வருகிறது. கழகத்தில் 800க்கும் மேல் பட்ட அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, முகவை மாவட்டங்களில் கிளைச் சங்கங்கள் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில்; திண்டுக்கல், பழனி, தேனி, போடி உசிலம்பட்டி ஆகிய இடங்களில் கிளை கழகங்களில் அங்கத்தினர் அதிகரித்திருக்கிறார்கள் பழனியில் தேவர் நினைவுச் சின்னம் எழுப்பும் வேலை நடைமுறையில் இருந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் நல்ல படியாகத் தொண்டாற்றி வருகிறது. முகவை மாட்டம் சிவகங்கை மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் ஆசிரியர்கள் கூட்டு முயற்சியால் சமூக மாணவர்களுக்கு கல்வி புகட்டும்அமைப்புகள் ஸ்தாபித்து கழகம் மேல் பார்வை செய்து வருகிறது.

## அரசியல் வாழ்வில் பிரமலை நாட்டவர்கள்: [ரேகைசட்ட நாடு] வாக்காளப் பெருமக்களால் ஸ்தானங்களை அடைந்து விளங்கினர் என்பதற்கு:-

டில்லி பாராளுமன்ற அங்கத்தினர்களாக:—

திரு P.K. மூக்கையாத்தேவர் அவர்கள் பாப்பாபட்டி
திரு M. இராஜாங்கம் அவர்கள் கூடலூர்
திரு K. மாயத்தேவர் அவர்கள் உச்சப்பட்டி சென்னை

சட்டமன்ற அங்கத்தினர்களாக

திரு K. கந்தசாமித்தேவர் அவர்கள் உச்சப்பட்டி
திரு V. தவமணித்தேவர் அவர்கள் M. கல்லுப்பட்டி
திரு S. பரமசிவத்தேவர் அவர்கள் திருமங்கலம்
திரு S. தினகரசாமித்தேவர் அவர்கள் கீழூர்

பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்களாக;

திரு A M நல்லதம்பித்தேவர் அவர்கள் உசிலம்பட்டி
திரு L சந்தானம் அவர்கள் ஐயனார்குளம்
திரு A மொக்கமாயத்தேவர் அவர்கள் முன்னாள் தலைவர் செல்லம்பட்டி
திரு E. சொக்கலிங்கத்தேவர் அவர்கள் முன்னாள் தலைவர் செல்லம்பட்டி
திரு V கார்த்திகேயன் அவர்கள் சேடபட்டி
திரு K செவத்திவீரத்தேவர் அவர்கள்
திரு G ராமசாமித்தேவர் அவர்கள் நகராட்சித் தலைவர் கம்பம்

ஜில்லா போர்டு அங்கத்தினர்கள்

திரு பூசாரி தவசித்தேவர் அவர்கள் செல்லம்பட்டி
திரு E முத்துக்காளைத்தேவர் அவர்கள் சொக்கத் தேவன்பட்டி

RangaRakes tamilnavarasam.com

திரு E சொக்கலிங்கத்தேவர் அவர்கள் சொக்கத் தேவன்பட்டி
திரு சின்னமுத்துத்தேவர் அவர்கள் ஒத்தப்பட்டி
திரு K வீரணத்தேவர் அவர்கள் வலையபட்டி
திரு K பேயாண்டித்தேவர் அவர்கள் தேங்கல்பட்டி
திரு முத்துசாமித்தேவர் அவர்கள் வாகைக்குளம்
திரு சுப்பிரமணியத்தேவர் அவர்கள் கீரிபட்டி

மாநகர் கார்ப்பரேஷன் கவுன்சிலராக:—

திரு சின்னகருப்பத்தேவர் அவர்கள் மதுரை
திரு முத்துமாயத்தேவர் அவர்கள் மதுரை
திருமதி மெர்சிகிரேஸ் அம்மையார் மதுரை
திரு சின்னுத்தேவர் அவர்கள் மதுரை
திரு சந்தணத்தேவர் அவர்கள் மதுரை
இன்னும் பஞ்சாயத்து தலைவர்களாக 100 பேர்கள் முன்னைய C T Act அரசு நிர்வாகப் பஞ்சாயத்துத் தலை வர்கள் 1000 அங்கத்தினர்கள் 5000

## பசும்பொன் பைன் ஆர்ட்ஸ்

அமரர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் ஞாப கார்த்தமாகச் சென்னையில் வைத்து அவரது பக்தர்கள் 15-8-1971ல் பசும்பொன் பைன் ஆர்ட்ஸ் என்னும் ஸ்தாப னத்தை உண்டு பண்ணினார்கள். சமூக உறவின் முறை அடிப் படையில் அடிக்கடி ஒன்று கூடி பழகும் வாய்ப்புக் கிடைத் தது: கலை, பண்பாடு, மன மகிழ்வு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்து வரவே ஸ்தாபனத்தில் அங்கத்தினர்கள் பெருவாரி யாகச் சேர்ந்தனர். ஸ்தாபனத்தின் பரிபாலன எல்லை மாநகர் சென்னை மாத்திரமின்றி தமிழகம் முழுவதுமாகக் கொண்டு சொசைட்டிகளின் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்படி எண் 379173 ல் பதிவு பெற்றுள்ளது.

நல்லவர்களும் வல்லவர்களுமாகக் கூடி நற்பணிகள் செய்து வந்தமையோடு தங்கள் ஸ்தாபனத்தில் நல்லதொரு நிதியையும் சேர்த்தனர். சங்கத்தின் நடைமுறை, முறை யான "பைலாவின்" படி; தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி கள் கொண்ட செயல் கமிட்டியால் ஆளுகை செய்யப்பட்டு வருகிறது.

விரிவான ஆக்கல் பணிகள் செய்ய வேண்டியதின் அவசி யத்தை அடிப்படையாக 2.-10-78ல் பசும்பொன் பைன் ஆர்ட்ஸ்; பசும்பொன் அறக்கட்டளை என்னும் தனித்த தோர் ஸ்தாபனத்தையும் உண்டு பண்ணிஅதற்குஆரம்பநிதி யையும் ஒதுக்கிக் கொடுத்தது.

அறக்கட்டளையை பரிபாலிப்பதற்கு தனியாகச் சட்ட திட்டங்களும் நிர்வாக சபையும் உண்டு. ஆரம்பத்தில் அபி மானிகள் நன்கொடை வழங்கத் தவரவில்லை.

தியாகராஜநகர் ஹபிபுல்லா ரோடில் 100வது எண் கட்டிடத்தில்; பசும்பொன் பைன் ஆர்ட்ஸும் பசும்பொன் அறக்கட்டளையும் இயங்கி வருகின்றன. சுமார் 10 லட்சம் மதிப்புள்ள இந்தக் கட்டிடம் இவர்களுக்குச் சொந்தமான தாகும் இதில், பசும்பொன்தேவர் மண்டபமும் இருந்து

RangaRakes tamilnavarasam.com

வருகிறது. இப்போது கலியாண மண்டபமாக நடந்து வருகிறது: நல்ல படியாக வாடகை வருமானமும் கிடைக்கிறது.

அறக்கட்டளையும் பைன் ஆர்ட்ஸும் தங்கள் மாதாந்திர நிர்வாகக் கூட்டங்களையும் இதர அலுவல்களையும் இங்கு தான் நடத்தி வருகிறது.

பசும்பொன் தேவர்மண்டபத்தை ஒரு மாபெரும் மாளிகையாக அமைப்பதற்குவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பசும்பொன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தில் மொத்தம் 1500க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்து வருகின்றனர் பெரும்பாலும் ஆயுள் மெம்பர்கள்: நிர்வாகக் கமிட்டியில்; உயர்மட்ட அரசு அலுவல்களில் அனுபவ முடையவர்கள், பட்டதாரிகள் தொழில் அதிபர்கள் இருந்து வருகின்றனர்.

ஆக்கல் பணிகள் நடத்துவதற்கு தனித்தனிக் குழுக்கள் இருந்து வருகின்றன ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனியே நிர்வாக சட்டதிட்டங்கள் வகுத்து செயல்பட்டு வருகின்றன தேவர் குலமக்களுக்கு நல்லதோர் வழி காட்டியாய் விளங்கி வருகிறது.

தமிழ்நாடு தேவர் பேரவை பதிவு எண் 140

இச்சங்கத்தின் செயலகம் 50 தெற்கு கூவம்சாலை சென்னை-600002ல் உள்ளது இதன் ஆளுகை எல்லை தமிழகமெங்குமாகும் அட்ஹாக் ரூல்ஸ் அடிப்படையில் பைலாக்கள் அமைத்து ரிஜிஸ்தர் செய்யப்பட்டுள்ளது மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் தேர்ந்தெடுத்த நபர்கள் மூலம் அமைக்கப்பட்ட மத்தியக் கமிட்டி நிர்வாகம் நடத்தும்.

சமூக முன்னேற்றம் சிறப்பாக ஒருமைப்பாட்டை சமூக மக்களுக்கு உண்டு பண்ணுவதாகும்.

## தேவர் குலமக்கள் சிந்தனைக்கும் செயலுக்கும்:

நமது சமூக மக்கள் தங்களை முன்னாள் அரசாண்ட பரம்பரையினர் என்று வரலாறு கூறுவதை கண்டு பெருமைப்படு



கிறார்கள். அவர்கள் கீர்த்தியோடு என்றும் அழியாப்புகழ் சம்பாதித்திருப்பதைமாத்திரம் கண்டு என்னபலன் நமக்குக் கிடைக்கப்போகிறது. முன்னாள் முடிமன்னர்கள் தங்கள் சிந்தனாசக்தியையும் (மூளையையும்) மனவலிமையையும் உபயோகித்து, தெய்வச் சாக்ஷியாக அரசாண்ட காலத்தில் அழியாப்புகழ் அடைந்தனர் என்பதை வரலாறு விளக்குகிறது.

ஆனால் பிற்காலங்களில் நுண்ணறிவும் மனவலிமையும் குறைந்து, தோள் வலிமையை முற்றிலுமாக நம்பி போட்டி பொறாமை இனத்துரோகம் ஆகிய அழிவுப் பாதைக்கு இடந்தந்து ஒற்றுமைக் குறைவாலும் பொறுமையின்மையினாலும் எத்திப் பிழைக்க முற்பட்டதாலுமல்லவா? நாட்டையும் இழந்து, தாங்களும் நலிந்து போனார்கள் என்பதை வரலாறு விளக்குகிறதே! அதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அப்படியானால் நமது வாழ்நாளில் திசைதிருப்ப வேண்டிய கொள்கைகள் நமக்குப் புலப்படுகிறதல்லவா? முன்னோர்கள் கண்ட நல்ல பலன்களை நாம் கடைப்பிடித்து அவர்கள் கையாண்ட வேண்டாக்கொள்கைகளை விலக்கி சிறந்த வாழ்நாளை நாம் அமைத்துக் கொள்வதே வரலாற்றை அறிந்ததால் கிடைக்கும் பலன் அல்லவா? தற்காலம் நாம் வாழ்ந்து காட்டும் வழி முறைகள் நம்முடைய பிற்காலச் சந்ததியார்களுக்கு வழிகாட்டியாய் அமைவதற்கு நாம் வரலாறு படைக்கவேண்டிய பொறுப்பில் இருக்கிறோம் என்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும்.

சென்ற கால ஆட்சிகள் எத்தனையோ மாற்றங்களை அடைந்து இன்று மிகவும் உன்னதமான ஜனநாயக காலத்தில் வாழ்ந்து வருகிறோம். உலக நாகரிகம் மிகவும் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. சமூகத்தைச் சரியான நிலையில் இடம் பெறச் செய்ய எல்லோரும் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும்.

நமக்குள் இருக்கும் சமூகப் பிரிவினைகளை விலக்கி முக்குல மக்களும் அவர்களைச் சேர்ந்த எண்ணற்ற இதர பிரிவினர்

RangaRakes tamilnavarasam.com

களும் யாவரும் தேவர் இனமக்கள் என ஒன்றுபட்டு அதன் மேல் தமிழர்கள் யாவரும் பல்வேறு சமூக அடிப்படைகள் நீங்கித் தமிழர் சமுதாயம் ஒன்றுபடும் காலத்தையும் பாரத சமுதாய ஒருமைப் பாட்டையும் நமது தேசம் எதிர்நோக்கி நிற்கும் இத்தருவாயில் நமது தலையாய கடமை நமக்குள் ளாகவேனும் ஒன்றுபட வேண்டும்!

தேவர் இனமக்கள் ஒன்றுபட்டு அமையவும் தமக்குத் தாமே அபிவிருத்திக்கு உதவவும் முன் வரவேண்டும். தற் பெருமை பேசுவது கூடாது. பிறர் வாழ்வதைக் கண்டு இடர் செய்வது கூடாது. அன்னியர் விவகாரத்தில் தலை யிடலாகாது. தன்னின மக்களைக் காட்டிலும் பிற சமூக மக் களிடம் நாம் சம்பாதிக்கும் அபிமானமே நமக்கு மேலான சொத்து என்பதையும் வரலாற்றில் அறிந்து வருகிறோம். ஆகவே வாழ்வில் நலம்பெற ஒன்றுபட்டு வாழவேண்டும்.

நாம் தேசிய பரம்பரையினர் என்பது வரலாறு கண்ட உண்மை. தமிழகத்தில் நாம் மூத்தகுடி மாத்திரமல்ல ஏனை யோர்களைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையாகவுள்ள வர்களுமாவோம். மொத்தச் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்குள்ளவர்களாகவுமிருந்து வருகிறோம். சலிப்பில்லா மல் உழைத்து மதிப்பில்லாமல் வாழும் விவசாயிகளாகவு மிருந்து வருகிறோம் என்றால் மிகையாகாது. பொருளாதார நிலையில் நாம் மிகவும் பின் தங்கியிருக்கிறோம் என்பதைக் காணும் போது மன வேதனையாகவுள்ளதல்லவா?

இது சாலை நமது நாட்டிற்கோர் பொற்காலம். இந்த சந்தர்ப்பத்தில் நமது சமூக மக்கள் விழிப்படைந்து கொண்டு பொருளாதர விடுதலையடைய வேண்டும். நமது பாரத அரசு இது காலை அன்னை இந்திராகாந்தி அவர்களின் வீரமிகு தலைமையில் தீரமிக்க நற்பணிகள் புரிந்து கொண்டிருக் கிறது.

முடிசூடா மன்னன் பண்டிதசவகர்லால் நேருவின் புதல்வி! பார்புகழ் செல்வி இந்திராகாந்தி அவர்கள்; கரந்தி மகான் கண்ட இராம ராஜ்யக்கனவை நினைவாக்கவும் ஜவ



ஹர்லால் கண்ட பஞ்சசீலத்தை மேலும் வளர்க்கவும் மக் களின் பொருளாதர ஏற்றத்தாழ்வை நீக்கவும் நடவடிக்கை கள் எடுத்து விட்டார்கள்.

பாட்டால் உணர்ச்சி யூட்டிய பாவலன் பாரதி பாடிய பாடலுக்கேற்ப:-

"செப்பு மொழிகள் பதினெட்டுடையாள் — எனினும்
சிந்தனை ஒன்றுடையாள் — எனவும்

"முப்பது கோடி சனங்களின் — சங்க முழுமைக்கும்
பொதுவுடமை
ஒப்பில்லாத சமுதாயம் அமைப்போம் — இஃது
உலகத்துக்கொரு புதுமை"

எனவும் பாடிய பாடலுக்கேற்ப நாட்டுநலப் பணிகோரி முர சடித்து விட்டார்கள்.

நமது பொன் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத் துக் கொண்டிருந்த, தீயசக்திகளாகிய; கள்ள மார்க்கட், கலப்படம் பதுக்கல், வரி ஏய்ப்பு, லஞ்சம், கள்ளக்கடத்தல் ஆகியவைகளைக் கண்டுபிடித்துத் தடுக்கவும்; ஒடுக்கவும், அரசு ஆணை பிறப்பித்து விட்டார்கள். மூலை முடுக்குகளி லெல்லாம் சட்டம் ஒழுங்கு சுடர் விட்டு எரியத் தொடங்கி விட்டது. தீயசக்திகள் செம்மையாகச் சீர்படவும் ஒடுங்கித் திருந்தவும் ஆரம்பித்து விட்டன. மேலும் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன.

அத்துடன் 20 அம்சத்திட்டத்தின் அடிப்படையில் விவ சாயிகள் முக்கியமாகக் கிராம வாழ்மக்கள், பிற்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஏழைகள், சிறு தொழில்கள், அபிவிருத் தியடைய, ஆதரவுகள் தரக்கூடிய சட்ட பூர்வச் சகாயங் களையும் பிறப்பித்து விட்டார்கள். இந்தத் திட்டம் நமது நாட்டுக்கும் நமது சமூகத்திற்கும் ஒருவரப் பிரசாதமாக விளங்குகிறது. திட்டத்தின் பலன் அடைவதற்கு அரசு வகுக்கும் வழிவகைகளில் பாமர மக்கள் வெகு விரைவில் பலன் அடைய; விவரம் தெரிந்த கற்றோர்களும், சமூகச் சங் கங்களும் விசேஷ முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

RangaRakes
tamilnavarasam.com

இத்தகைய தற்காலத்தை நமது சமூக வரலாற்றுச் சிறப்பு மிக்க தேசியத் தலைவர்கள் எதிர்நோக்கியிருந்தனர் என்பது சென்ற காலப் பின் அணியாக விளங்கினமை ஞாபகத்தில் இருந்து வருகிறதல்லவா?

அரசு தக்கபடியாக நடவடிக்கைகள் எடுத்து நிய சக்திகளை ஒடுக்கும் திட்டத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரும் காலத்தில் நமது சமூகம் அரசின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும். அப்படியாக அரசின் ஆக்கல்பணிகளில் ஒத்துழைப்பது தேசிய சமூகத்தின் தலையாய கடமையாகும்.

நமது சமூக மக்களின் பிற்போக்கு நிலைமைக்கு முக்கிய காரணம், நாம் எல்லோருமே மிகையாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பது ஒரு காரணமாகும். பொருளாதாரம் நம்மை எப்போதுமே அடிமைப்படுத்தியே வந்திருக்கிறது என்பது கண்கூடு. எனவே நமது பொருளாதார விடுதலைக்கு ஒரு அடிப்படையான தேசியநோக்கு கொண்ட திட்டத்தில் நமது வாழ்க்கைப்பாதையை அமைக்க வேண்டும்.

நமது மக்கள் வாழும் ஊர்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் தேவையின் அடிப்படையில் தோற்றுவிக்க வேண்டும். வயது வந்த ஆண்கள் பெண்கள் யாவரும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டு அந்த ஸ்தாபனம் மூலம் கிடைக்கும் சகாயம், சலுகைகளை அடையவேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் வீட்டுக்கொருவர் வீதம் பட்டாளத்தில் சேவையை மேற்கொள்ளவேண்டும். அப்படியாகப் பட்டாளத்தில் பணிபுரிய முன் வருபவர்களில் படித்தவர்களும் பட்டதாரிகளும் மிகையாக இருக்கவேண்டும். அப்போது வறுமையும் நீங்கும், வலிமையும் பொங்கும், அறிவும் பெருகும். ஆற்றல் மிக்க தேவர் இனமக்களால் நாடும் நலம் பெறும்.

# துணை கொண்ட நூல்கள்


கள்ளர் சரித்திரம் மு. வேங்கடசாமி நாட்டார்
மறவர் சரித்திரம் U.S. குழந்தைவேலுச்சாமி, A.V.
ஆசீர்வாத உடையாத்தேவர்.
மூவேந்தர் குல சரிதை K..சிவஞண்டி சேர்வை
மூவரசர் குல விளக்கம் G.M. தொண்டைநாடன்
சேரர் வரலாறு அ. சிதம்பரனார்
வீரத்தலைவர் பூலித்தேவர் ந. சஞ்சீவி, எம்.ஏ.
புலித்தேவனா? பூலித்தேவனா? புலியூர்க்கேசிகன்
தில்லைச் சிற்றம்பலம்கோயில் சிதம்பரம் ஜே.எம்.சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.
மதுரை வீரன் கதை புகழேந்திப்புலவர்.
0 பாண்டியர் வரலாறு சதாசிவப் பண்டாரத்தார்
1 மதுரைநாயக்கர் வரலாறு அ.கி. பரந்தமனார், எம்.ஏ.
2 கான்சாகிப் கம்மந்தரன் எஸ்.கே. ஸ்வாமி.
3 மாநகர் மதுரை பண்டித வித்துவான் ச. சாம்பசிவன்.
4 இளையபாரதம் நா. எத்திராஜ்.
5 சேது நாடுந்தமிழும் வித்துவான் ரா. இராகவையங்கார்
6 பாஞ்சாலங்குரிச்சி வீரச்சரித்திரம்
ஜெக வீரபாண்டியனார்.
17 அபிதான சிந்தாமணி
18 கலைக்களஞ்சியம்
19 Police office reports Administration reports of the Madura of Police from 19:0 Kallar Reclamation
20 Gazetteers Madurai Tanjore Tirunelvely
21 Madras Census reports Government Publication
22 Madurai Manual-Nelson
23 Criminal Classes of Madras Presidency Mr. F. S. Mullary.
24 The Madras Encylopedia Government Publication
25 Madras Lagislative Assembly Manual 1947 Government Publication.
26 The Day book 1975 Government Publication
27 Castes & Tribes of South India Thurston
28 Madura country Voll & II J.H. Nelson
29 Robert Orme History of the Military Transactions of the British nation in Industan
30 Yusufkhan the Rebel Commandant H.C. Hill.


RangaRakes tamilnavarasam.com